# பூநகரி
# -தொல்பொருளாய்வு









ப.புஷ்பரட்ணம்

K. RUNARASA
DIVISIONAL SECRETARY ADDL. [illegible]
DIVISIONAL SECRETARIAT
JAFFNA.

109

# பூநகரி
# -தொல்பொருளாய்வு

K. KUNARASA
DIVISIONAL SECRETARY/ADDL. G.A.
DIVISIONAL SECRETARIAT
JAFFNA.

**பரமு புஷ்பரட்ணம் M. A.**
சிரேஷ்ட விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு
திருநெல்வேலி

**1993**

பூநகரி – தொல்பொருளாய்வு
பரமு புஷ்பரட்ணம்

முதற் பதிப்பு: 1993

[C] யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

ISPN 955 - 9194 - 04 - 6.

அச்சீடு: தாசன் அச்சகம், மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

விலை ரூபா:

PUNAKARY - AN ARCHAEOLOGICAL SURVEY
Paramu Pushparatnam

First Edition: 1993

[C] University of Jaffna Publication
Thirunelvely, Sri Lanka.

ISBN 955 - 9194 - 04 - 6.

Press: Thasan Printers
Mahendra Veethy, Jaffna.

PRICE:

# அறிமுகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூல் வெளியீட்டு வரிசையில் இப்பொழுது வெளிவரும் 'பூநகரி – தொல்பொருளாய்வு' என்னும் இந் நூலை வரலாற்றுத் துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ப. புஷ்ப ரட்ணம் இயற்றியுள்ளார். இவர் இப்பல்கலைக்கழகத்திலே தொல்லி யலை ஒரு பாடமாகப் பயின்றவர். அத்துடன், 1980 – 1984 இல் பெனின்சில்வேனிய பல்கலைக்கழகத்தினர் மாந்தையில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்விலும் பங்குபற்றியவர்.

தொல்லியல் சார்ந்த தமிழ் நூல்கள், தமிழ் நாட்டிலுஞ் சரி இலங்கையிலுஞ்சரி, மிகவும் குறைவாகவே வெளிவருகின்றன. அந்த வகையில் நமது பல்கலைக்கழகம் வெளியிடும் இந்நூல் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். இந்நூல் முழுக்க முழுக்க பூநகரிப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வின் பேறாகக் கிடைத்த சான் றுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அத்தகைய ஓர் ஆய்வினைச் செய்வதற்கு வேண்டிய ஆதரவையும் இப்பல் கலைக்கழகம் வழங்கிற்று.

அதன் பெறுபேறாக எழுந்த இந்த நூல் ஆதிகாலந்தொட்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரையுள்ள பூநகரியின் நீண்டகால வர லாற்றைத் தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் விளக்க முற் பட்டுள்ளது. அந்தத் தொல்லியற் சான்றுகள் சார்ந்த நிழற்படங் கள் பல நூலில் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன. பொதுவாக, இந் நூல் தமிழர் பிராந்தியத்தின் குறிப்பிட்ட ஒரு வட்டத்ினுள் வாழ்ந்த சமூகத்தின் பண்பாட்டு வரலாற்றைக் கூறுவதாக இருந்தாலும், அவ் வரலாற்றைத் தெளிவுபடுத்த இலங்கையின் ஏனைய பிராந்தியங்களின் வரலாற்றுச் செய்திகளையும் சுட்டிச் செல்வதாய் அமைகிறது.

வரலாற்றிலும் சமூக மேம்பாட்டிலும் ஆர்வமுள்ள மாணவர் களும் அறிஞர்களும் பிறரும் இந்நூலை வரவேற்றுப் பயன்கொள் வார்களாக.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி,
1993–09–23

பேராசிரியர் அ. துரைராசா
துணைவேந்தர்

## சமர்ப்பணம்

இலங்கைப் பல்கலைக்கழக
யாழ். வளாக மனிதப் பண்பியல்பீட முதற் பீடாதிபதியும்,
வரலாற்றுத்துறை முதல் பேராசிரியரும்,
தலைசிறந்த வரலாற்றறிஞர்களில் ஒருவருமாகிய
எமது வரலாற்றாசான்

**கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலாவுக்கு**

இந்நூல் சமர்ப்பணம்.

## பொருளடக்கம்


அறிமுகம்

அணிந்துரை

முன்னுரை

| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 01 - 10 |
| 2. | ஆதிக்குடியிருப்புகள் | 11 - 46 |
| 3. | வெளிநாட்டு உறவுகள் | 47 - 58 |
| 4. | சோழர் ஆட்சிக் காலமும் பூநகரியும் | 59 - 82 |
| 5. | பூநகரியும் சோழர்காலப் பண்பாடும் | 83 - 110 |
| 6. | பூநகரியிலுள்ள புராதன கட்டிட அழிபாடுகளும், அவற்றின் வரலாற்று முக்கியத்துவமும் | 111 - 156 |
| 7. | சோழர் ஆட்சிக்குப் பிற்பட்ட காலத் தொல்லியல் சின்னங்கள் | 157 - 193 |
| | உசாத்துணை | 194 - 198 |
| | விளக்கப்படங்களின் அட்டவணை | 199 - 202 |
| | அகர வரிசை | 203 - 214 |

# அணிந்துரை

இலங்கைத் தமிழருக்கு நீண்டகால வரலாறு இருப்பதுபோல் தமிழர் வாழும் பிராந்தியங்களுக்கும் தொன்மையான, தொடர்ச்சி குன்றாத பாரம்பரிய வரலாறு உண்டு. ஆயினும் இலங்கை வரலாறு தொடர்பான நூல்களில் தமிழர்களின் வாலாறு புறக்கணிக்கப்பட் டிருப்பதுபோல் தொல்லியல் ஆய்வில் தமிழர் பிராந்தியங்கள் புறக் கணிக்கப்பட்டமை நீண்டகாலக் குறைபாடாகும். இக்குறைபாட்டை நீக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை கணிசமான முயற்சிகளை அண்மைக்காலமாக மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. அம்முயற்சிகளில் ஒன்றாக இந்நூல் விளங்குகிறது. இந்நூல் பூநகரிப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வின் பெறுபேறாகக் கிடைத்த அரிய சான்றுகளை அடிப்படை மூலாதாரமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஏற்கனவே இரு வரலாற்று நூல்களை வெளியிட்டிருந்த போதிலும் தமிழர் பிராந்தியம் தொடர்பான தொல்லியல் சார்ந்த முதல் நூல் என்ற வகையில் இதற்குத் தனிச்சிறப்புண்டு.

இந்நூலை ஆக்கிய திரு. பரமு புஷ்பரட்ணம் வரலாற்றுத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர். பல்கலைக்கழக சிறப்புக் கல்வியில் தொல்லியல் சார்ந்த பாடங்களைக் கற்பதில் அதிக ஆர்வம் காட்டிய இவர், ஆனைக்கோட்டை, மாந்தை ஆகிய இடங் களில் மேற்கொண்ட தொல்லியல் அகழ்வாய்விலும் பங்கெடுத்த அனுபவமுடையவர். அந்த அனுபவத்தின் ஊடாக 1989 – 92 காலப்பகுதியில் பூநகரிப் பிராந்தியத்தில் ஆய்வினை மேற்கொண்டு பெறுமதிமிக்க பல வரலாற்றுச் சின்னங்களைக் கண்டுபிடித்துள்ளார். ஏற்கனவே அவர் பூநகரி தொடர்பான ஒரு நூலை எழுதியதோடு பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதிப் பல்கலைக்கழக கலைப்பீட ஆய்வரங்கிலும், ஈவ்விலின் இரட்ணம் பல்லின பண்பாட்டு நிறுவ னத்திலும், தஞ்சையில் நடந்த தொல்லியற் கருத்தரங்கிலும் சமர்ப் பித்து அறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளார். இதனால் இந்நூலும் தரமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இந்நூலில் இலங்கைத் தமிழர் தொடர்பாக புதிய சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் ஒன்று தமிழரசின் தோற்றம் தொடர்பானது. இதுவரை வெளிவந்த பல்கலைக்கழக ஆய்வுகள் முதலாவது தமிழரசு 13ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலை நகராகக் கொண்டு தோன்றியதென எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் இந்நூலில் யாழ்ப்பாணத்திற்கு வெளியே வன்னியில் சோழர் ஆட்சியோடு முதலாவது அரசு தோன்றியதென்பதற்கு பொருத்தமான தொல்லியற் சான்றுகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளமை பாராட்டத் தக்கதொன்றாகும்.

பல்கலைக்கழகம் இந்நூலை வெளியிடுவதில் பெருமையடைகின்றது. இந்நூலுக்கு தமிழ் மக்களிடையே நல்லாதரவும், வரவேற்பும் இருக்கும் என நம்புகிறோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
27-09-1993

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
கலைப்பீடாதிபதி

# முன்னுரை

**1989** ஆம் ஆண்டு பல்கலைக்கழக மாணவர்களுடன் பூநகரி மண்ணித்தலைக் கிராமத்திற்கு சுற்றுலா சென்ற எனக்கு அங்கிருந்த மணல்மேட்டில் மறைந்திருந்த வரலாற்றுப் பழைமை வாய்ந்த ஆலயத்தைத் தரிசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. முதலில் அவ்வாலயம் பற்றி ஆராய முற்பட்ட எனக்கு ஆலயச் சுற்றாடலில் கிடைத்த தொல்லியற் சின்னங்கள் பூநகரிப் பிராந்தியம்பற்றி முழுமையாக ஆராயவேண்டுமெனத் தூண்டியது. அந்த ஆய்வின் பெறுபேறாக இதுவரை கிடைத்த தொல்லியற் சான்றுகளை அடிப்படை மூலாதாரமாகக் கொண்டு எழுதப்பட்டதே இந்நூலாகும்.

இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள தொல்லியற் சின்னங்கள் பூநகரிப் பிராந்தியத்தின் வரலாற்றை மட்டுமன்றி அதனுடன் இணைந்த தமிழர் பிராந்தியத்தையும் அறிவதற்கு அரிய சான்றுகளாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் பூநகரியில் எம்மால் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியற் சின்னங்கள் அனைத்தும் பூரணமாக இந்நூலில் ஆராயப்பட்டதாகக் கூறுவதற்கில்லை. அவ்வாறு ஆராய்வதற்குரிய வாய்ப்புக்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருப்பதாகவும் கூற முடியாது. தொல்லியற் சின்னங்களை விஞ்ஞான பூர்வமாக ஆராய்வதற்குரிய வாய்ப்புக்களையும், வசதிகளையும் இப்பல்கலைக்கழகம் எதிர்காலத்தில் ஏற்படுத்திக் கொடுக்கும்போது பூநகரியிற் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியற் சின்னங்களை மேலும் ஆராய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுமென நம்புகின்றேன். ஆயினும் என்னால் இயன்றளவு தொல்லியலில் ஈடுபாடுடைய உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்களின் ஆலோசனைகளயும், கருத்துக்களையும் கேட்டறிந்து இந்நூலை ஆக்கியுள்ளேன்.

இந்நூலில் ஆதிகாலம் தொடக்கம் ஐரோப்பியர் ஆட்சிக் காலம் வரையிலான தொல்லியற் சின்னங்கள் பெருமளவிற்கு விரிவாகவும், ஐரோப்பியர் ஆட்சி தொடர்பான தொல்லியற் சின்னங்கள் ஓரளவிற்கு

சுருக்கமாகவும் ஆராயப்பட்டுள்ளது. அவற்றுள் தமிழரசின் தோற்றம் தொடர்பான ஆய்விற்கு கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூலில் மிகச் சில இடங்களில் 'கூறியது கூறல்' இடம் பெறுவது நூலின் குறைபாடாக அறிஞர்களுக்குத் தோன்றலாம். ஆனால் 'கூறியது கூறல்' அவ்வவ்விடத்து பொருள் விளக்கத்திற்கு உதவும் என கருதியதால் அதை நான் நீக்க விரும்பவில்லை. ஆயினும் எனக்கு புலப்படாத குறைபாடுகள் பல இந்நூலில் இருக்கலாம். அவற்றை அறிஞர்கள் எனக்கு அறிவிப்பாராயின் அவர்கட்கு நன்றியுடையவனாக இருப்பேன். இந்நூல் இரண்டாவது பதிப்பாக வெளியிடக் கூடிய நிலை தோன்றுமாயின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அவர்கள் கூறும் திருத்தங்களில் பொருத்தமானவற்றை ஏற்று நூலைத் திருத்தி வெளியிடுவேன்.

இந்நூல் பல்கலைக்கழக வெளியீடாக வருவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அதற்குக் காரணமாக இருந்த பல்கலைக்கழகத்திற்கும், அதன் முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கு காரணகர்த்தாவாக இருந்து இந்நூலுக்கு அறிமுக உரையை நல்கிய எமது பெருமதிப்புக்குரிய துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கும் என் நன்றிகள் பல.

பூநகரி பற்றிய ஆய்வினை வரலாற்றுத்துறையுடன் இணைந்து மேற்கொள்ள முற்பட்டபோது வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் அவர்கள் என்னையே அவ்வாய்வினை மேற்கொள்ளுமாறு வேண்டியதுடன் அதற்கு வேண்டிய ஆதரவையும், உதவிகளையும் நல்கினார். அத்துடன் பல்கலைக்கழக ஆய்வுக்குழு எனது நூலை மதிப்பீடு செய்யும் ஓர் உறுப்பினராக நியமித்த போது அதை மகிழ்வுடன் ஏற்று எனது நூலில் பல திருத்தங்களையும் புதிய கருத்துக்களையும் இணைக்கச் செய்து இந்நூல் முழுமைபெற உதவியுள்ளார். இன்று இந் நிலைக்கு வந்து இந்நூலை எழுதக் காரண கர்த்தாவான எனது தொல்லியல் ஆசான் கலாநிதி சி.க சிற்றம்பலம் அவர்களை நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

வரலாற்றுக் கல்வியை ஏடு தொடக்கி வைத்தவர்களில் ஒருவராகிய பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பூநகரிப் பிராந்தியத்திற்கு எம்முடன் வருகை தந்ததுடன்

அங்கு கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்களையும், சாசனங்களையும் வாசிப்பதற்கு பெரும் துணையாக இருந்துள்ளார். இந்த ஆய்வு ஒரு நூலாக முழுமை பெறுவதற்கு பல நிலைகளிலும் அவர் ஆற்றிய பங்களிப்பு நன்றியுடன் என்றும் நினைவுகூரத்தக்கது. பூநகரி பற்றிய ஆய்வு எனது சொந்த நிதியில் மேற்கொள்ளப்படுவதை அறிந்த முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன் அவர்கள் ஆய்வுக்கு வேண்டிய நிதியை பல்கலைக் கழகத்திலிருந்து பெறுவதற்கான வழிவகைகளை முதலில் ஏற்படுத்திக் கொடுத்தார். பேராசிரியர் அவர்கட்கும் இவ்விடத்தில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

பூநகரியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்விற்கு பூநகரிப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க நிர்வாகிகள் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. அந்நிறுவனத்தின் தலைவர் ரி. ராஜநாயகம் அவர்களும், முகாமையாளர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் அவர்களும் ஆய்வுப்பகுதிக்குச் செல்வதற்குரிய வாகனங்களை இலவசமாகத் தந்துதவியதோடு ஆய்விற்கு வேண்டிய தொழிலாளர்களையும், தங்குமிட வசதிகளையும், உணவுவசதிகளையும் ஒழுங்குபடுத்தி தந்தனர். அத்துடன் அந்நிறுவனத்தின் கல்விசார் உத்தியோகத்தர் திரு. க. கிருஷ்ணபவன் அவர்கள் எமது ஆய்வில் முழுமையாகப் பங்கெடுத்தார். இவருக்கும் என்னுடன் ஆய்வில் தொடர்ச்சியாக பங்கெடுத்த புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர் திரு. கு. மேகநாதன் அவர்களுக்கும், வரலாற்றுத்துறை பொதுக்கலை, சிறப்புக் கலை மாணவர்களுக்கும், பூநகரிப் பிரதேச மக்களுக்கும் என் நன்றிகள்.

பூநகரி பற்றிய ஆய்வினை ஒரு நூலாக வெளியிட வேண்டும் என்ற எண்ணக்கருவை முதலில் என்னுள் விதைத்தவர் மொழியியற் பேராசிரியர் சு. சுசீந்திரராசா அவர்கள் ஆவார். அக்கரு முளைவிட்டு முழுநிலை பெறுவதற்கு பல்கலைக்கழக ஆய்வுக்குழு மதிப்பீட்டாளர்களில் ஒருவராக இருந்து அவர் ஆற்றிய பங்களிப்பு மிகப்

பெரியது. பல்கலைக்கழக இளம் ஆசிரியர்கள் கற்பித்தலில் மட்டு மன்றி ஆராய்ச்சியிலும் அதிக கவனம் எடுக்கவேண்டுமென்பதை பல்கலைக்கழகத்தில் அடிக்கடி வலியுறுத்திவரும் பேராசிரியர் அவர் கள் எனது பூநகரி தொடர்பான கண்டுபிடிப்புக்கள் முதலில் கட் டுரைகளாக பல்கலைக்கழக ஆய்வரங்கில் வாசிக்கப்பட வேண்டு மெனக் கேட்டுக்கொண்டார். அக்கட்டுரைகளில் ஒன்றை மேற் பார்வை செய்ததுடன் அதற்குரிய கருத்தரங்கினையும் தலைமை யேற்று நடத்தி வைத்தார். அவரால் ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கையும், மனத்துணிவுமே இந்நூல் எழுதக் காரணம் என்பதை நன்றியுணர் வோடு கூறவிழைகின்றேன்.

இந்நூலிற்கு அணிந்துரை வழங்கிய கலைப்பீடாதிபதி பேரா சிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் புவியியல் துறைத் தலைவராக இருந்த காலத்திலேயே ஆய்வுக்கு வேண்டிய விளக்கப் படங்களைத் தயாரிப்பதற்கு தனது துறையில் ஏற்பாடு செய்து தந்த துடன் பூநகரி இடப்பெயர்கள் தமிழ்நாட்டு இடப்பெயர்களுடன் தொடர்புபடுத்தி ஆராயப்பட வேண்டுமென்பதற்கு பயனுள்ள பல தகவல்களைத் தந்துதவினார். அவருக்கும் என் நன்றிகள்.

ஏட்டுப்பிரதியாக இருந்த இந்நூலை சரிபார்த்தவர் என் அன் பிற்கும் மதிப்பிற்குமுரிய சிரேஷ்ட உதவிப்பதிவாளர் திரு. இ. முருகை யன் அவர்கள். நூலிற்கான விளக்கப்படங்களை தெரிவுசெய்வதற்கு உதவியாக இருந்தவர் எமது துறைசார்ந்த என் ஆசிரியர்களில் ஒரு வரான திரு. செ. கிருஷ்ணராஜா அவர்கள். நூலிற்கு வேண்டிய விளக் கப்படங்களை வரைந்து உதவியவர் புவியியற்றுறை விரிவுரையாளர் திரு. க. இராஜேந்திரம் அவர்கள். இவர்கள் அனைவருக்கும் என் நன்றிகள்.


இடர்மிகுந்த இக்காலத்தில், நூலிற்கான புளொக்கை குறுகிய காலத்தில் தயாரித்துத் தந்த அழகன் புளொக் நிறுவன உத்தியோகத் தர்களுக்கும், பல சிரமங்கள் மத்தியிலும் செம்மையாக நூல் அமைய

வேண்டுமெனப் பாடுபட்டுழைத்த தாசன் அச்சக உத்தியோகத்தர் களுக்கும், அதன் முகாமையாளர் திரு. க. பாலசுப்பிரமணியம் அவர் களுக்கும் என் நன்றிகள். எனது தட்டச்சுப்பிரதியை சீராக அடித்து உதவிய செல்வி சுமித்திரா குமார் அவர்களுக்கும், திருத்தத்திற்கான அச்சுப்படியை அவ்வப்போது படித்து வேண்டிய திருத்தங்களைச் செய்துதவிய மனைவி நளினிக்கும், தமிழ்த்துறையைச் சேர்ந்த திரு. பொ. செங்கதிர்ச்செல்வன் அவர்களுக்கும், வரலாற்றுத்துறையைச் சேர்ந்த செல்வி உமாசங்கரி முத்துக்குமார் அவர்களுக்கும் என் நன்றிகள். இந்நூல் வெளிவரும் நிலையில் எனக்கு வரலாற்று தொல் லியல் பாடங்களைக் கற்பித்த ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

ப. புஷ்பரட்ணம்

வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
06 - 10 - 1993

# ஆய்வுப் பிரதேசம்


கல்முனை
மண்ணித்தலை
வெட்டுக்காடு
மட்டுவில் நாடு
பூநகரி
பள்ளிக்குடா
நல்லூர்
வீரபாண்டியன்
முனை
பல்லவராயன்கட்டு
உருத்திரபுரம்
தென்னியங்குளம்
வெள்ளாங்குளம்

# 1. அறிமுகம்

கடந்தகாலச் சமூகத்திற்கும் நிகழ்காலச் சமூகத்திற்கும் இடையே நிலவும் நெருங்கிய உறவாடலே வரலாறாகும். இவ்வரலாற்று ஆராய்ச்சி உலகின் பல்வேறு நாடுகளில் வளர்ச்சியடையாத காலகட்டத்தில் அந்நாடுகள் தொடர்பாக மக்களிடையே நிலவிய கட்டுக் கதைகளும், ஐதீகங்களும் பெரும்பாலும் அந் நாடுகளின் கடந்தகாலச் சமூகத்தின் உண்மை வரலாறாகக் கருதப்படுவதுண்டு. ஆனால் வர லாற்று ஆராய்ச்சி பிற்காலத்தில் தனியொரு பிரிவாக பல்வேறு துறைகளுடன் இணைந்து வளர்ச்சியடைந்தபோது கடந்த காலங்களில் ஒரு நாட்டின் வரலாறாகக் கருதப்பட்ட கட்டுக் கதைகளும், ஐதீகங்களும் அவற்றின் முக்கியத் துவத்தைப் படிப்படியாக இழக்கநேரிட்டது. இது இலங்கைக்கும் பொருந்தும் என்பதை அண்மைக்காலமாக இலங்கையில் வளர்ச்சி யடைந்துவரும் தொல்லியல் (Archaeology) மானிடவியல் (Anthropology) சமூகவியல் (Sociology)ஆய்வுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

இலங்கையின் ஆதிகால வரலாறு தொடர்பாக கடந்த இரு தசாப்தங்களுக்கு முன்னர் நிலவிய கருத்துக்களுக்கும், சமகாலத்தில் நிலவுகின்ற கருத்துகளுக்குமிடையே அடிப்படைவேறுபாடுகள் இருப்பதனை அவதானிக்கலாம். இலங்கையில் தொல்லியல், மானிடவியல் முதலான விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள் வளர்ச்சியடையாத காலகட்டத்தில் தீபவம்சம்[1] மகாவம்சம்[2] முதலான பாளி நூல்களில் இடம்பெற்றுள்ள கட்டுக்கதைகளும், ஐதீகங்களும் இலங்கையின் உண்மையான வரலாறு என நம்பப்பட்டன. இப்பாளி இலக்கியங்கள் இலங்கையின் வரலாறு கி. மு. 6-ஆம் நூற்றாண்டில் வடஇந்தியாவிலிருந்துவந்து குடியேறிய விஜயன் கூட்டத்தாரோடு ஆரம்பமாகின்றதெனவும் இக்காலத்திற்கு முன்னர் இலங்கையில் நாகரிகமுடைய மனிதப்பிறவிகள் வாழவில்லையெனவும் கூறுகின்றன. இவ்வாறு குடியேறிய விஜயன் வழிவந்தோரே சிங்களமக்கள் எனவும் தமிழர்கள் இலங்கைக்கு அக்கரையிலிருந்து (தென்னிந்தியா) அவ்வப்போது படையெடுப்பாளராக, ஆக்கிரமிப்பாளராக வந்து குடியேறிய சிறுபிரிவினர் எனவும் கூறுகின்றன. இக்கட்டுக்கதைகளை உண்மை வரலாறு என ஏற்றுக்கொண்ட பரணவிதானா போன்ற அறிஞர்கள் விஜயன் வருகை பற்றிய கதை வடஇந்தியாவிலிருந்து ஏற்பட்ட ஆரியர் குடியேற்றமெனவும், இவர்களே இலங்கையில் நாகரிகத்தை அறிமுகப்படுத்தினர் எனவும் விளக்கமளித்தனர்.[3] இதற்குச் சார்பாக பரணவிதான தமது தொல்லியல், மொழியியல் ஆய்வுகளைப் பயன்படுத்தினார்.[4]

ஆனால் கடந்த இரு தசாப்தங்களாக இலங்கையில் வளர்ச்சியடைந்துள்ள தொல்லியல் ஆய்வுகள் இலங்கையின் ஆதிகால வரலாறு தொடர்பாக நம்பகத் தன்மை வாய்ந்த புதிய முடிவுகளை முன்வைத்துள்ளன.

(1) இலங்கையின் வரலாறு விஜயன் வருகையோடு ஆரம்பிக்கவில்லை. மாறாக இற்றைக்கு 28, 000 வருடங்களுக்கு முற்பட்ட இடைக்கற்காலப் பண்பாட்டுடன் தொடங்குகிறது.[5] இப்பண்பாட்டிற்கும் தமிழ்நாடு திருநெல்வேலிப் பண்பாட்டிற்குமிடையே பல்வேறு அம்சங்களில் ஒற்றுமைத்தன்மை காணப்படுகிறது.[6] இதனால் இலங்கைக்கு இப்பண்பாட்டு மக்கள் தமிழ்நாட்டிலிருந்தே புலம் பெயர்ந்திருக்க வேண்டும்.[7]

(2) மகாவம்சம் கூறும் விஜயன் வருகை பற்றிய கதை வெறும் கட்டுக்கதை.[8] அவ்வாறான குடியேற்றம் இலங்கையில் நடந்ததற்கு எதுவித தொல்லியற் சான்றுகளும் காணப்படவில்லை.[9]

(3) இலங்கையில் நாகரிகத்தை வடஇந்தியா விலிருந்து குடியேறிய விஜயன் (கூட்டத்தார்) அறிமுகப்படுத்தவில்லை. மாறாக தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறிய பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய திராவிட மக்களே அறிமுகப்படுத்தினர்.[10]

(4) சிங்கள மக்களின் மூதாதையர் வடஇந்தியா விலிருந்து குடியேறிய ஆரியர்களின் (விஜயனின்) வழித்தோன்றல்கள் அல்லர். இவர்களும் தமிழ் மக்களைப் போல் தென்னிந்தியாவிலிருந்து குடியேறிய இடைக்கற்காலப், பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் வழிவந்தவர்களாவர். தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாட்டின் பின்னணியில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்ற மொழிவழிப் பண்பாடுகள் தோன்றியது போல் இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டின் பின்னணியில் தமிழ், சிங்கள மொழிப்பண்பாடுகள் தோன்றின.[11]

மேற்கூறப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் முடிவுகள் சிங்கள மக்களின் வரலாறு தொடர்பாக வரலாற்று நூல்களில் இடம்பெற்றுள்ள பாரம்பரியக் கருத்துக்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்என்பதைச்சுட்டிக்காட்டும்அதேவேளை தமிழர் தொடர்பாக வரலாற்று நூல்களில் மறைக்கப்பட்ட உண்மை வரலாறு தொல்லியற் சான்றுகளின் பின்னணியிற் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதையும் கோடிட்டுக்காட்டுகின்றன.

பாளி இலக்கியங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டு எழுந்த பிற்கால வரலாற்று நூல்களில் தமிழர் வரலாறு புறக்கணிக்கப் பட்டதைப் போல் அரச ஆதரவில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்விற்கூடத் தமிழர் பிராந்தியங்கள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டே காணப்படுகின்றன. 1917இல் கந்தரோடையில் ஆய்வினை மேற்கொண்ட பீரிஸ் தொல்லியல் ஆய்வில் தமிழர் பிராந்தியங்கள் புறக்கணிக்கப்படக் கூடாதெனச் சுட்டிக்காட்டினர்.[12] ஆயினும் இதுவரையிற் கந்தரோடையில் மட்டும்தான் ஒரு முழுமையான அகழ்வாய்வு 1970இல் நடத்தப்பட்டது.[13] இந்த ஆய்வின் மூலம் குடாநாட்டின் தொடக்ககால நாகரிக வரலாறு தென்னிந்தியாவை ஒத்த பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஆரம்பமாகின்றதென்பது வெளிப்படுத்தப்பட்டது.[14] 1980-இல் ஆனைக்கோட்டையிலும் அதைத்தொடர்ந்து களபூமி (காரைநகர்) வேலணை ஆகிய இடங்களிலும் நடாத்தப்பட்ட தொல்லியல் ஆய்வின் மூலம் செறிவான பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய திராவிடர் குடியேற்றம் குடாநாட்டில் இருந்துள்ளதென்பது தெரியவந்துள்ளது.[15] இப்பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய சான்றுகள் தமிழரின் பூர்வீக வரலாறு தமிழ்ப் பிராந்தியங்களில் இருந்து வெளிக்கிளம்ப வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றன. இக்கருத்தைப் பூநகரியிற் கிடைத்துள்ள சான்றுகள் மேலும் வலுவடையச் செய்துவிட்டன.

## வரலாற்று ஆய்வில் பூநகரி

இலங்கையின் ஆதிகால, இடைக்கால வரலாறு தலைநகரங்களையும், அரசவம்சங்களையும் மையமாக வைத்து ஆராயப்பட்டுள்ளது. இதனால் அரச தலைநகரங்கள் காலத்திற்குக் காலம் இடம்மாறும் பொழுது அத்தலைநகரங்கள் அமைந்த பிராந்தியங்களின் வரலாறு அக்காலகட்ட வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது. இதனாற் பிற்காலத்தில் அரசதலைநகர்கள் தோன்றிய பிராந்தியங்களுக்கெல்லாம் தொன்மையான பாரம்பரிய வரலாறு இருந்ததெனக் கூறமுடியாது. இதேவேளை ஆதிகால வரலாற்றில் தலைநகரங்களாக இருந்த பிராந்தியங்களுக்கு அதே வரலாற்றுப் பெருமை பிற்காலத்தில் இருந்ததெனவும் எடுத்துக்கொள்ள முடியாது. 13ஆம் நூற்றாண்டிலிருந்து 17ஆம் நூற்றாண்டு வரை நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசொன்று யாழ்ப்பாணத்தில் இருந்துள்ளது. அக்காலத்தில் நல்லூருக்கு மிக அருகில் அமைந்த பூநகரிப் பிராந்தியத்தின் பெரும் பகுதி யாழ்ப்பாண மன்னர்களின் நேரடி ஆதிக்கத்திற்கும், சில பகுதிகள் யாழ்ப்பாண மன்னர்களுக்குத் திறை செலுத்தும் வன்னிச் சிற்றரசர்

களின் ஆதிக்கத்தினுள்ளும் இருந்ததாகத் தெரிகின்றது, யாழ்ப்பாண அரசு தொடர்பாக எழுந்த இலக்கியங்களில் இப்பூநகரியும், பூநகரிப் பிராந்தியத்தினுள் இருந்த பொன்னாவெளி, பல்லவராயன்கட்டு ஆகிய இடங்களும் யாழ்ப்பாண அரசிற்கு வெளியேயுள்ள நாடுகளாகக் குறிக்கப்பட்டுள்ளன.16 15ஆம் நூற்றாண்டில் எழுந்த கோகில சந்தேஸய என்ற சிங்களக் குயில்விடு தூதுப் பிரபந்தத்தில் 1450இல் கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் படையெடுத்த செம்பகப்பெருமாளின் (சப்புமால்குமாரய) படைகள் வந்த பாதை வழியாகக் குயில் பறந்து சென்று யாழ்ப்பாணத்தை அடைந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு பறந்து வந்த பாதைகளில் பூநகரியிலுள்ள கல்முனையும் அதையடுத்துள்ள யாழ்ப்பாணமும் கூறப்பட்டுள்ளன.17 மேலும் இந்நூலில் அக்காலத்தில் யாழ்ப்பாண அரசைப் பாதுகாத்துக்கொண்டிருந்த உப்புலவன் (விஷ்ணு) ஆலயத்தை இக்குயில் தரிசித்துச் சென்றதாகவும் கூறப்பட்டுள்ளது.18 இவ்வாலயம் பூநகரியின் தென்னெல்லையில் உள்ள வெள்ளாங்குளத்தில் அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இவ்வாறு தமிழ் சிங்கள இலக்கியங்களில் யாழ்ப்பாண அரசோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ள பூநகரிப் பிராந்தியத்துக்குத் தொன்மையான வரலாற்றுப் பாரம்பரியம் இருந்ததென்பதை அண்மைக்காலமாக அங்கு கிடைத்துவரும் தொல்பொருட் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

இலங்கை வரலாறு தொடர்பாக எழுந்த முதல் பாளி இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சம் அனுராதபுரத்திற்கு வடக்கிலமைந்த பிரதேசத்தை நாகதீபம் (நாகதீப) எனவும்19 தமிழ் இலக்கியங்களில் ஒன்றான மணிமேகலை நாகநாடு எனவும் கூறுகிறது.20 யாழ்ப்பாணத்தில் வல்லிபுரத்தில் கிடைத்த கி. பி. 2ஆம் நூற்றாண்டிற்குரிய பொற்சாசனமொன்றில் நாகதீபம்பற்றிய குறிப்பு வருகிறது.21 இதை ஆதாரமாக வைத்து மகாவம்சத்திற் கூறப்பட்டுள்ள நாகதீபம் தற்போதைய யாழ்ப்பாணத்தைக் குறித்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. ஆனால் பூநகரியிலுள்ள வரலாற்றுப் பழைமைவாய்ந்த நாகமுனை (தற்போது பாடநூல்களில் பேய்முனை எனப்படும் இடம்) நாகமுனை ஆறு, நாகபடுவான், நாகதேவன் துறை முதலான இடப்பெயர்களை நோக்கும்போது மகாவம்சம் கூறும் நாகதீபம் யாழ்ப்பாணம், பூநகரியுள்ளிட்ட பரந்த பிரதேசத்தைக் குறித்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கின்றது. இராசநாயகம் முதலியார் கி.பி. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க நாட்டவரான தொலமி தன் நூலிலே குறிப்பிட்டுள்ள புதுக்கி என்ற இடம் பூநகரியையும், தலைக்கோரி என்ற இடம் பூநகரியிலுள்ள கல்முனையையும் குறித்ததென்றார்.22 ஆனால் வரலாற்றாசிரியர்கள் பலரும் இவர் கருத்தை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. 16ஆம் நூற்றாண்டிலே போர்த்துக்கேயரது வரலாற்றுடன் தொடர்புபடுத்தி இப் பூநகரி பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.23 தமிழ் நாட்டிலும் பூநகரி என்னும் இடப்பெயர் இருப்பதனாலே24 16ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே தமிழ் நாட்டுத் தொடர்பால் இப்பெயர் இங்கு ஏற்பட்டதெனக் கூறலாம். இலங்கையின் புராதன வரலாற்று இலக்கியங்களான மகாவம்சத்திலும் சூளவம்சத்திலும் வட இலங்கையிலுள்ள முக்கிய இடங்களாக ஐம்புகொலப்பட்டினம், ஊர்காவற்றுறை, மாந்தை, தம்பண்ணி போன்ற இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பெயர்கள் இலங்கைக்கு அருகே அமைந்துள்ள தமிழ் நாட்டின் முக்கிய இடப் பெயர்களாக இருந்துள்ளன. அங்கிருந்தே ஆதியில் ஏற்பட்ட மக்கள் குடிப்பெயர்வினாலும் வர்த்தகத் தொடர்பினாலும், இவ்விடங்களுக்கு இப்பெயர்கள் ஏற்பட்டன. அதுபோலவே பூநகரி என்னும் இடப்பெயரும் இங்கு ஆதியில் ஏற்பட்ட பெயராக அமைந்தது எனலாம்.

பாளி சிங்கள இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்பட்ட இலங்கையிலுள்ள சில இடங்கள் பிற்காலத்திலே தொல்லியலாய்வுக்கு உட்படுத்தப்பட்டபோது அங்கு கிடைத்த சான்றுகளும், அவ்விடங்கள் தொடர்பாக மக்களிடையே நிலவிய ஐதிகம், வரலாற்றுக் கதைகள் என்பனவும் பிற்காலத்தில் பிரதேசரீதியான வரலாற்று நூல்கள் எழுதப்படக் காரணமாயின இதற்கு யாழ்ப்பாணம், 25மட்டக்களப்பு, 26திருகோணமலை27 போன்ற இடங்கள் தொடர்பாக எழுதப்பட்ட சில நூல்களைக் கூறலாம். பூநகரியைப் பொறுத்தவரை அப்பிராந்தியம் தொடர்பாக ஒரு நூல் எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாறு எழுதும் அளவிற்கு அப்பிர

தேசத்தின் வரலாற்று முக்கியத்துவம் உணரப்பட்டதாகவும் கூறமுடியாது. இருப்பினும் இலங்கை தொடர்பாகவும், குறிப்பிட்ட சில பிரதேசங்கள் தொடர்பாகவும் எழுந்த சில வரலாற்று நூல்களில் பூநகரிப் பிராந்தியம் பற்றிச் சுட்டிக் காட்டியுள்ளமை அவதானிக்கத்தக்கது. இவை பற்றி இவ்விடத்தில் நோக்குவது அவசியமாகும்.

இலங்கை தொடர்பாகப் பிற்காலத்தில் எழுதப்பட்ட வரலாற்றுநூல்களிலே 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே பொறியியலாளராக இருந்த பாக்கர் என்பவர் எழுதிய புராதன இலங்கை (Ancient Ceylon)என்னும் நூல் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.28 இந்நூலுக்கு முன்னோடியாக இவர் எழுதிய கட்டுரை ஒன்றில் மகாவம்சத்திலே குறிப்பிடப்படும் கி. மு. 2ஆம் நூற்றாண்டுக்குரிய பெலிவாவியைப் பூநகரியின் தென்னெல்லையில் அமைந்த பாலியாறு எனக்கூறி இங்கிருக்கும் வவுனிக்குளமே மகாவம்சத்திலே குறிப்பிடப்பட்டுள்ள பெலிவாவி என அடையாளம் காட்டினார்.29 மேலும் திராவிட மக்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பதற்குக் கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகளை ஆதாரம் காட்டி அனுராதபுரத்தில் 44 ஆண்டுகள் ஆட்சிசெய்த தமிழ் மன்னன் எல்லாளன்பற்றி வரலாற்று மூலங்களிற் பெருமளவு மறைக்கப்பட்டாலும் அவன் சாதனைகளில் ஒன்றாகப் பெலிவாவி இருக்கலாம் எனவும் கூறியுள்ளார்.30 இவரின் சமகாலத்தவரான லூயிஸ் இக்கருத்தை ஏற்றதுடன் தனது வன்னி பற்றிய நூலில் 15 ஆம் இயலில் இப்பிராந்தியங்களிலே கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள், நாணயங்கள், கட்டிட அழிபாடுகள், இந்து விக்கிரகங்கள் என்பன பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.31 மேலும் இவர் இங்குள்ள இடப்பெயர்களை ஆராய்ந்து இலங்கையின் ஏனைய இடங்களைவிடத் தூய தமிழில் உள்ள இடப்பெயர்கள் பல இங்கிருப்பதாகவும் சுட்டிக் காட்டினார். 1924 - இல் கொட்றிங்ரன் என்பவரால் வெளியிடப்பட்ட இலங்கையின் ஆதிகால நாணயங்கள் பற்றிய நூலிலே பூநகரியிலே கிடைத்த உரோமர்கால நாணயங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.32 இக்காலப் பகுதியிலே புராதன யாழ்ப்பாணம் (Ancient Jaffna) என்னும் நூலை எழுதிய இராசநாயகம் முதலியார் தமிழ்ப்பிராந்தியங்களில் புராதன நகரங்களின் அழிபாடுகள் காணப்படும் இடங்களில் ஒன்றாகப் பூநகரியிலுள்ள அரசபுரத்தைக் குறிப்பிட்டுள்ளார். கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ்நாட்டிற்கும் அநுராதபுரத்திற்கும் இடையிலான வர்த்தக பண்பாட்டுத் தொடர்புகள் யாழ்ப்பாணம், பூநகரி ஊடாக நடந்ததென்பது இவர் கருத்தாகும்.33 1956இல் கணபதிப் பிள்ளையால் எழுதி வெளியிடப்பட்ட இலங்கைவாழ் தமிழர் வரலாறு என்னும் நூலிலே பூநகரியிலுள்ள வீரபாண்டியன் முனை என்ற இடப்பெயர் இரண்டாம் பாண்டியப் பேரரசுடன் தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளது.34 1970-ஆம் ஆண்டளவில் பூநகரி உதவி அரசாங்க அதிபராக இருந்த கிருஷ்ணமூர்த்தி இப்பிராந்தியத்திலிருந்து சில தொல்பொருட் சின்னங்களைச் சேகரித்ததுடன் அவை பற்றிய செய்திகளையும் பூர்வகலா என்ற சஞ்சிகையில் வெளியிட்டார்.34 இன்று யாழ்ப்பாண அரும்பொருளகத்தில் உள்ள தொல் பொருட் சின்னங்கள் சில அவராலே பூநகரியில் சேகரிக்கப்பட்டனவாகும். 1980-ஆம் ஆண்டளவில் சிற்றம்பலம் இங்குள்ள வெட்டுக்காடு, விநாசியோடை, கௌதாரிமுனை போன்ற இடங்களிலே தொல்லியல் மேலாய்வினை மேற்கொண்டு ஆதிகால, மத்தியகால நாணயங்கள் சிலவற்றைக் கண்டுபிடித்தார்.36 1981-இல் இரகுபதி மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய இடங்களில் ஆய்வினை மேற்கொண்டு ஆதிக்குடியிருப்புகளுக்குரிய சில மட்பாண்ட ஓடுகளையும் ஒரு சில நாணயங்களையும் கண்டு பிடித்து அவை பற்றித் தமது நூலிலும் குறிப்பிட்டுள்ளார்.37

இவ்வாறு கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக வெளிவந்த வரலாற்று நூல்கள் சிலவற்றிலே பூநகரியின் பழமை பற்றி அவ்வப்போது சுட்டிக் காட்டப்பட்டிருப்பதாலும், இவை பூநகரியின் வரலாற்று முக்கியத்துவத்தையோ அல்லது இலங்கையின் வரலாற்றுப்போக்கில் இப்பிராந்தியம் ஏற்படுத்திய தாக்கத்தையோ ஓரளவு தானும் நிறைவு செய்ததாகக் கொள்ள முடியாதிருக்கிறது. கடந்த காலங்களில் யாழ்ப்பாண அரசு,38 யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்,39 தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலே பூநகரி கவனத்திலே கொள்ளப்

படாத பிரதேசமாகவே இருந்துள்ளது. இந் நிலைலல் 1989 - 91 காலப்பகுதியில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வின் விளைவாக அரிய பல சான்றுகள் கண்டு பிடிக் கப்பட்டுள்ளன. தமிழ்ப் பிராந்தியங்களிலே கந்த ரோடைக்குப் பின்னர் ஈழத்தமிழர் வரலாற் றுக்கு வெளிச்சம் ஊட்டும் பல சான்றுகள் பூந கரியிலுள்ள பல இடங்களிலிருந்து கிடைத்துள் ளன. இச்சான்றுகள் கற்காலந் தொட்டுத் தற் காலம் வரையான இப்பிராந்திய வரலாற்றை அறிய உதவுகின்றன.40

## தொல்லியல் ஆய்வின் முக்கியத்துவம்

பூநகரியும் அண்மைக்காலத் தொல்பொருள் ஆய்வும் என்ற இந்நூல் பூநகரிப் பிராந்தியத் தொல்லியல் மேலாய்வின்போது எம்மாற் கண்டு பிடிக்கப்பட்ட தொல்பொருட் சின்னங்களை (Archaeological remains) அடிப்படை வரலாற் றாதாரமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். அத்தொல்பொருட் சின்னங்கள் தொடர்பான புகைப்படங்கள் பல இந்நூலிற் பிரசுரிக்கப்பட் டுள்ளன. அத்தொல்பொருட் சின்னங்கள் இலங் கையில் தமிழ் மக்களுக்கு, தொன்மையான, தொடர்ச்சி குன்றாத பாரம்பரிய வரலாறு உண்டு என்பதை வெளிப்படுத்தி நிற்பதோடு, இலங்கை வரலாற்றில் பூநகரிப் பிராந்தியம் பெற்றிருந்த முக்கியத்துவத்தையும் புலப்படுத்தி நிற்கின்றன. பூநகரியிற் கண்டுபிடிக்கப்பட்டதை யொத்த பல தொல்பொருட் சின்னங்கள் அண் மைக் காலங்களில், தமிழ்ப் பிராந்தியத்தில், சிறப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் கண்டு பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 41 ஆயி னும் பூநகரியிற் கிடைத்த சில தொல்பொருட் சின்னங்கள் யாழ்ப்பாணத்திற் கிடைத்த தொல் பொருட் சின்னங்களைக் காட்டிலும் சில வகை யில் முக்கியத்துவம் வாய்ந்தவையென நாம் கருதுகிறோம்.

யாழ்ப்பாணத்தில் மனித நடமாட்டத்தின் தொடக்க காலம் பெருங்கற்காலப் பண்பாட்டு டன் (கி. மு. 1000இற்குப் பின்னர்) ஏற்பட்ட தற்கு இதுவரை சான்றுகள் கிடைத்துள்ளன.42 ஆனால், பூநகரியில் பெருங்கற்காலப் பண்பாட் டிற்கு முன்னரே இடைக்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. தென்னிலங்கையிலும் மனித நட மாட்டத்திற்கான உறுதியான ஆதாரங்கள் இடைக் கற்காலப் பண்பாட்டுடன் தொடங்கு வதை கோடிட்டுக் காட்டுவதனால் பூநகரி அப் பிராந்தியத்துடன் சமாந்தரமான வளர்ச்சி கொண்டிருந்ததெனஎடுத்துக் கொள்ள இட முண்டு. யாழ்ப்பாணத்தின் தொடக்க கால நாகரிகம் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண் பாடாக இருப்பினும் அப்பண்பாட்டு வழிவந்த ஆதிகால மக்கள் பேசிய மொழியை அறிந்து கொள்வதற்கு அம்மக்கள் பயன்படுத்திய வரி வடிவ களோ சாசனங்களோ குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவிற்குக் கிடைக்கவில்லை. ஆனால் பூநகரியில் பெருங்கற் காலப்பண்பாட்டு வழிவந்த மக்கள் பயன்படுத்திய பல வரிவடி வங்களும், உடைந்த நிலையில் உள்ள சில சாச னங்களும் கிடைத்துள்ளன. இவ்வரிவடிவங்கள் சமகாலத்தில் தமிழ்நாட்டில் வழங்கிய வரிவடி வங்கள் என மயங்கும் அளவிற்கு அதிக ஒற் றுமை கொண்டிருப்பதோடு, இரு சாசனங்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளன என்பதை யும் உறுதிப்படுத்த முடிகிறது. 43 இதன் மூலம் கி. மு. 3ஆம் நூற்றாண்டில் இருந்தாவது தமிழ் மொழி பேசிய மக்கள் பூநகரியில் வாழ்ந்து வரு கின்றனர் எனக் கூறலாம். மேலும் பூநகரிப் பிராந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங் களில் இருந்து கிடைக்கப் பெற்ற மட்பாண்ட வடிவங்களும், மட்பாண்டங்களில் உள்ள சித்தி ரங்களும், ஓவியங்களும் அப்பிராந்தியத்தின் தனித்துவத்தை விரிவாக ஆராய வேண்டுமெனச் சுட்டி நிற்கின்றன.

கி. மு 5ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப் பட்ட நாணயங்கள் தொடக்கம் ஐரோப்பியர் காலம் வரையிலான பல்வேறு காலத்திற்குரிய பலதரப்பட்ட நாணயங்களும், பிறதொல்பொருட் சான்றுகளும் பூநகரிப் பிராந்தியத்தில் கிடைத் திருப்பது அப்பிராந்தியத்தின் நாகரிகத் தோற்ற காலத்தையும், நாகரிகச் சிறப்பையும் நிச்சயப் படுத்திக் கூற உதவுகின்றன. அத்துடன் அத் தொல்பொருட் சின்னங்கள் ஊடாக வரலாற் றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து பூநகரிப் பிராந் தியம் தென்னிந்தியா, கிரேக்கம், அரேபியா, சீனா ஆகிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு களையும், அதன் மூலம் கலாசாரப் பரிவர்த் தனையையும் ஏற்படுத்திக்கொள்ளும் அளவிற்கு முதன்மை பெற்றிருந்தது என்பதையும் உறுதிப்

படுத்த முடிகிறது. இவ்வாறான தொடர்ச்சியான தொல்பொருட் சின்னங்கள் தமிழ்ப் பிராந்தியங்களில் கந்தரோடையைத் தவிர ஏனைய இடங்களிற் கிடைத்ததாகத் தெரியவில்லை.

சோழர் ஆட்சியிலேதான் முதன்முறையாக முழு இலங்கையும் ஒரு மைய அரசின் கீழ்ச் சில ஆண்டுகளாவது ஆளப்பட்டதற்கு உறுதியான ஆதாரங்கள் உள்ளன. சோழர் ஆட்சியோடுதான் இலங்கையில் இனம், மதம், மொழி பண்பாடு என்பனவற்றால் சிங்கள மக்களில் இருந்து வேறுபட்டு வாழ்ந்த தமிழ்மக்கள் மேலும் பலம் பெற்றதாக வரலாற்று அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். ஆயினும் சோழர் ஆட்சி தொடர்பான தொல்பொருட் சின்னங்கள் தமிழ்ப் பிராந்தியங்களில் திருகோணமலையிற் கிடைத்ததைப் போல் ஏனைய இடங்களிற் கிடைத்ததாகத் தெரியவில்லை. 13ஆம் நூற்றாண்டில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட சுதந்திரத் தமிழரசு ஒன்று யாழ்ப்பாணத்தில் உதயமாகியது. ஆயினும் அவ்வரசின் தோற்றத்திற்குப் பின்னணியாக இருந்த சோழர் ஆட்சிக்காலம் பற்றிய தொல்பொருட் சான்றுகள் இதுவரை அங்கு அதிகம் கிடைத்ததாகக் கூறமுடியாது. ஆனால் பூநகரிப் பிராந்தியத்தில் சோழக் குடியேற்றம், சோழர் ஆட்சி, சோழ நிர்வாகம், சோழர்காலப் பண்பாடு தொடர்பான பல தொல்பொருட் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.44 அச் சான்றுகளை ஆராய்வதாகவே இந்நூலின் 4ஆம், 5ஆம், அத்தியாயங்கள் விளங்குகின்றன.

ஆறாம் அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ள விடயங்கள் பூநகரியின் எல்லைப்பகுதியில் உள்ள புராதன கட்டிட அழிபாட்டுச் சின்னங்களை ஆராய்வனவாக அமைந்தாலும், அதனோடு தமிழரசின் தோற்றமும் தொடர்புபடுத்தி ஆராயப்பட்டுள்ளது. இன்றைய வரலாற்று அறிஞர்கள் மத்தியில் தமிழரசின் தோற்றத்தை விஞ்ஞானபூர்வமாக ஆராயமுற்பட்டவர்களுள் எனது வரலாற்று ஆசான் இந்திரபாலா சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்.45 அவர் பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களை மட்டுமன்றி, தமிழ் அரசு பற்றி ஆய்வுசெய்த காலகட்டத்திற் கிடைத்த பல தொல்பொருட் சான்றுகளையும் தமது ஆய்வுக்கு முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டார். ஆனால், பிற்காலத்தில் புதிதாகத் தொல்பொருட் சான்றுகள் கிடைக்கப் பெற்றபோது அவர் தமது முன்னைய கருத்துக்களில் மாற்றங்கள் தேவையென்பதையும் சூசகமாகத் தெரிவிக்கத் தவறவில்லை.46 ஆனால் எமது ஆய்வின் முடிவுகள் தமிழரசு தொடர்பாக அவர் முன்வைத்த அடிப்படைக் கருத்துக்களுடன் பெருமளவுக்கு உடன்பாடாக அமையவில்லை. அவர் தமிழரசின் தோற்றத்திற்குக் கலிங்க வம்சத் தொடர்பே காரணம் எனச் சுட்டிக் காட்டினார் 47 இதற்கு ஆதாரமாக, தமிழரசின் தலைநகர் சிங்கை என்று பெயர் பெறவும், அவ்வரசுக் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் நந்தி இடம் பெற்றமைக்கும், தமிழ் மன்னர்கள் கங்கை ஆரியர், கங்கைநாடார் என்ற விருதுப் பெயர்களைச் சூடியமைக்கும் கலிங்க வம்சத்தொடர்பே காரணம் எனக் கூறியுள்ளார். இக்கருத்தையே பிற்கால வரலாற்று ஆசிரியர்கள் பலரும் ஏற்றுக் கொண்டனர்.48 ஆனால் இம்மூன்று அம்சங்களையும் கலிங்க வம்சத்தோடு தொடர்புபடுத்துவதை விட சோழர் ஆட்சியோடு தொடர்புபடுத்துவது பெருமளவு பொருத்தம் என்ற கருத்தை நாம் முன்வைத்துள்ளோம்.49 இக்கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்பதையும் விரிவாக ஆராயக் கூடியன என்பதையும் அண்மையில் வெளிவந்த யாழ்ப்பாண இராச்சியம் எனும் நூல் சுட்டி நிற்கிறது.50

ஏழாம் அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ள தொல்பொருட் சான்றுகள் பற்றிய விளக்கங்கள் 13ஆம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பியர் ஆட்சிக் காலம்வரை பூநகரிப் பிராந்தியம் அதன் முக்கியத்துவத்தையும், தனித்துவத்தையும் தொடர்ந்தும் பாதுகாத்துக் கொண்டுள்ளதென்பதை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

பொதுப்பட இந்நூலில் இடம்பெற்றுள்ள தொல்பொருட் சின்னங்கள் பற்றிய ஆய்வு தமிழர் பிராந்தியத்தில், குறிப்பிட்ட ஒரு வட்டத்திற்குள் (பூநகரி) வாழ்ந்த சமூகத்தின் தொடர்ச்சியான பண்பாட்டு வரலாற்று அசைவியக்கம் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளது. அச்சமூகம் பற்றிய தொடர்ச்சியான தொல்லியற் சின்னங்கள் அச் சமூகம் சார்ந்த தமிழர் பிராந்தியத்தில், குறிப்பாக யாழ்ப்பாணச் சமூகத்தில் நிரப்பப்படாதுள்ள பண்பாட்டுத் தொடர்ச்சியை நிரப்புவதற்கும் உதவுகின்றன எனவும் எடுத்துக்கொள்ள இடமுண்டு.

# அடிக்குறிப்புகள்

01. Law, B. C. — (Tr) Dipavamsa, The Ceylon Historical Journal, Vol. VII (1959)

02. Geiger, W. — (Tr) Mahavamsa, (Colombo, 1960)

03. Nicholas, C. W. and paranavitana, S. — A Concise History of Ceylon, (Colombo, 1961), பக். 17 — 33

04. மேற்படி

05 Ragupathy, P. — Early Settlements in Jaffna An Archaeological survey, (Madras, 1987), ப. 179

06. Zeuner, F. G. and Allchin, B. — "The Microlithic sites of Tinnavely District" Ancient India, No. 12, பக். 4 — 20

07. இந்திரபாலா, கா. — 'ஈழத்தின் தொல்குடிகள் தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்கள்' வீரகேசரி வாரவெளியீடு, (கொழும்பு, 31 . 01 . 1960)

08. Mendis, G. C. — "The Vijaya Legend" in Jeyawickrama, M. A. (ed), Paranavitane Felicitation Volume, (Colombo, 1965), பக். 263 — 279

09. Senaratne, S. P. E. — Pre - historic Archaeology of Ceylon, (Colombo, 1969). ப. 31

10. Goonetilleke, S. — "Sinhalisation — The origins" Lanka Guardian, Vol. 3, No. 1, (1980), பக். 22 — 29

11. Sitrampalam, S. K. — The Megalithic culture of Sri Lanka, unpublished Ph. D. Thesis. University of Poona, (Poona, 1980), பக். 384

12. Pieris, P. E. — "Nagadipa and Buddhist remains in Jaffna, Part-I" Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society, Vol. XXVIII. No. 72, பக். 40 — 67

13. Begley, V. — "Proto-historical Material from Sri Lanka (Ceylon) and Indian Countacts", in Kennedy, K. A. R. & Possehl, C. L. (ed), Ecological backgrounds of South Asian Prehistory, (New orleans, 1973), பக். 191 — 196

14. மேற்படி;

15. Ragupathy, P. மு: கூ. நூ ;

16. முத்துதம்பிப்பிள்ளை, ஆ. — யாழ்ப்பாணச் சரித்திரம், (யாழ்ப்பாணம், 1912), ப. 20

17. Gunawardhena, W. A. (ed) Kokilasandesaya, (Colombo, 1924), *செய். 242*

18. *மேற்படி; செய். 205*

19. மஹாவங்ஸ; *அத். 1, செய். 44 — 70*

20. மணிமேகலை; *காதை. 8, பக். 43 — 63*

21. EZ., Vol. IV, No. 29, *ப.* 237

22. Rasanayagam, C. Ancient Jaffna, (Madras, 1926), *ப. 115*

23. Friar Paulo da Trinidade, O. F. M. Chapters on the Introduction of Christianity to Ceylon, (Chilaw, 1972), *பக். 240*

24. 18-02-91 இல் தமிழ்நாடு சென்னை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வீடும் வயலும் நிகழ்ச்சியில் தமிழ் நாட்டிலுள்ள பூநகரிக் கிராமம் பற்றி ஒலிபரப்பப்பட்டது.

25. இராசநாயகம், செ. யாழ்ப்பாணச் சரித்திரம், (*யாழ்ப்பாணம், 1933*)

26. *நடராசா*, F. X. C. மட்டக்களப்பு மான்மியம் (*கொழும்பு, 1973*)

27. குணசிங்கம், செ. கோணேஸ்வரம், (*பேராதனை, 1973*)

28. Parker, H. Ancient Ceylon, (London, 1909), *பக். 365 —366*

29. மேற்படி;

30. மேற்படி;

31. Lewis, J. P. A manual of the vanni Districts Ceylon, (Colombo, 1985), *பக். 265 — 316*

32. Codrington, H. W. Ceylon Coins and Currency, (Colombo, 1924), *ப.33*

33. Rasanayagam, C. மு. கூ. நூ; *பக். 83 — 84*

34. *கணபதிப்பிள்ளை, க.* இலங்கைவாழ் தமிழர் வரலாறு. (*பேராதனை 1956*) *பக். 12*

35. *சிவசாமி, வி.* சிவநேசச்செல்வன், ஆ. (*ப.ஆ*) பூர்வகலா, (வட்டுக்கோட்டை, *1973*) *ப. 5*

36. சிற்றம்பலம், *இ. க.* "*யாழ்ப்பாண மாவட்டத்தின் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வும் ஆதிக்குடிகளும்*", செந்தமிழ்; (*யாழ்ப்பாணம், 1982*)

37. Ragupathy, P. மு. கூ. நூ.

38. Pathmanathan, S. The Kingdom of Jaffna, (Colombo, 1978)

39. இந்திரபாலா, கா. யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் (கண்டி, 1972)

40. புஷ்பரட்ணம், ப. 'பூநகரிப் பிராந்தியத் தொல்லியல் மேலாய்வில் கிடைத்த தொல்பொருட் சின்னங்கள் - ஒரு வரலாற்று ஆய்வு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட ஆய்வரங்குக் கட்டுரை. (திருநெல்வேலி, 1990)

41. Ragupathy, P. மு. கூ. நூ.

42. மேற்படி.

43. தினமணி (சென்னை. 1- 7- 90)

44. புஷ்பரட்ணம், ப. சோழர் காலக் குடியேற்றங்களால் தோன்றிய பூநகரி இடப் பெயர்கள்' யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலைப்பீட ஆய்வரங்குக் கட்டுரை (திருநெல்வேலி, 1992)

45. இந்திரபாலா, கா. மு. கூ. நூ. 1972

46. ......................... 'யாழ்ப்பாணத்தில் பெருங்கற்காலப் பண்பாடு' வீரகேசரி வாரவெளியீடு, (கொழும்பு, 7. 12. 1980)

47. ......................... மு. கூ. நூ. 1972

48. Pathmanathan, S. மு. கூ. நூ.,


49, புஷ்பரட்ணம், ப. 'யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகர் - புதிய நோக்கு' முத்தமிழ்விழா மலர், (யாழ்ப்பாணம், 1991)

50. சிற்றம்பலம், சி. க. 'வரலாற்று அறிமுகம்' யாழ்ப்பாண இராச்சியம், (ப. ஆ) சிற்றம்பலம் சி. க. (திருநெல்வேலி, 1992) பக். XXXIX — XLV

# 2. ஆதிக்குடியிருப்புகள்

## அமைவிடம்

ஒரு நாட்டின் வரலாற்றுப் போக்கைத் தீர்மானிப்பதிலே அதன் அமைவிடமும் முக்கிய காரணமாக அமைகின்றதெனக் கூறலாம். இலங்கை பௌதிக அடிப்படையிலே தனிப்பட்ட நிலப்பரப்பைக் கொண்டிருந்தாலும் அது பண்பாட்டாற் பாரதத்துடன் பெருமளவு ஒற்றுமை கொண்டு வளர்வதற்கு இருநாடுகளும் இந்து சமுத்திரத்தின் மத்தியில் அருகருகே அமைந்திருப்பது முக்கிய காரணமாகின்றது. அதிலும் தென்னிந்தியாவின் தென்பகுதியுடன் மருவி இலங்கை அமைந்திருப்பது அப்பிராந்தியப்பண்பாடு இங்கே கூடுதலாகச் செல்வாக்குச் செலுத்தக் காரணமானது. இதனாலே இலங்கையின் எல்லாப் பிராந்தியங்களும் சமாந்தரமான பண்பாட்டு வளர்ச்சியை அடைந்தனவெனக் கூறமுடியாது.




படம் - 1. அமைவிடம்

பூநகரியைப் பொறுத்தவரை மூன்று பக்கமும் கடலாலே சூழப்பட்டுள்ள அமைவிடம். தமிழ் நாட்டிற்கு நேர்எதிரே மிகக் கிட்டிய தூரத்தில் அமைந்துள்ளது (படம் 1). இதனாலே தென்னிந்தியாவின் ஏனைய பிராந்தியங்களை விடத் தமிழ் நாட்டிலே காலத்திற்குக்காலம் தோன்றி வளர்ந்த பண்பாட்டலைகள் சமகாலத்தில் இப்பிராந்தியத்திலும் செல்வாக்குச் செலுத்தின. பூநகரியில் உள்ள கல்முனை தொட்டு மாந்தை வரையிலான மேற்குப்பிராந்தியம் கடல் வழித் தொடர்பின் மையமாக அமைந்திருப்பதனாலே தென்னிந்தியாவின் கிழக்குப்பிராந்தியங்களில் இருந்து ஏற்பட்ட மக்கள்புலப்பெயர்ச்சி, வர்த்தகம், அரசியற் படையெடுப்புக்கள், பண்பாடு என்பன இப்பிராந்தியங்கள் ஊடாகவே இலங்கையின் பெருநிலப்பகுதியிலே செல்வாக்குச் செலுத்தியிருக்க வேண்டும். இதிலே பூநகரி இலங்கையின் பெருநிலப்பகுதியையும் யாழ்ப்பாணத் தீபகற்பத்தையும் இணைக்கும் தொடக்க வாயிலாக அமைந்திருப்பதனால் இருபிராந்தியங்களிலும் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, பண்பாட்டுமாற்றங்கள் ஒரு பிராந்தியத்திலிருந்து இன்னொரு பிராந்தியத்திற்குப் பரவியபொழுது அம்மாற்றங்களை முதலில் உள்வாங்கிக்கொண்ட இடமாகவும் பூநகரி விளங்கிற்று.


தற்காலத்திலே பூநகரி என்னும் இடப்பெயர் கல்முனையிலிருந்து ஆலடி வரையிலான ஒடுங்கிய நிலப்பரப்பையும், அதன் தொடர்ச்சியாக மாந்தையின் வடமேல் எல்லைவரை அமைந்த மணல் நீட்சிப் பிரதேசத்தையும் குறிப்பதற்குப் பயன்படுகிறது. ஆனால் போர்த்துக்கேயர் காலத்தில் இப்பெயர் (போர்த்துக்கேய மொழியிலே புநெறிம்) தற்போதைய எல்லைக்குக் கிழக்கிலும், தெற்கிலும் உள்ள இடங்களையும் குறிக்கப்பயன்பட்டுள்ளதை இன்றும் அவதானிக்கலாம். இதனால் இப்பெயர் அக்காலத்தில் தற்காலத்தை விடச் சற்றுப்பரந்த பிரதேசத்தைக் குறிக்கப் பயன்பட்டிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு.

## வரலாற்றுக்கு முற்பட்டகாலம்

பண்டைய மக்கள் விட்டுச்சென்ற சான்றுகளின் அடிப்படையில் அக்கால மக்களது வாழ்க்கை முறைபற்றியும் அம்மக்களது நாகரிகத்தைப்பற்றியும் எடுத்தியம்பும் இயல் தொல்லியலாகும் (archaeology). இச்சான்றுகளை அடிப்படையாகக் கொண்டே அம்மக்களது நாகரிக காலத்தை வரலாற்றுக்கு முற்பட்டகாலம் (pre-history), வரலாற்றுதய காலம்(proto history) வரலாற்றுக் காலம் (historical period) என மூன்றாகத் தொல்லியலாளர் பிரித்துள்ளனர். இவற்றுள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது எழுத்தாதாரங்கள் பயன்படுத்தப்படாத காலகட்டத்தைக் குறிப்பதாகும். இதனால் இக்காலகட்ட வரலாறு பெருமளவுக்குத் தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் ஆராயப்பட வேண்டியுள்ளது. இதற்கு அக்கால மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள், மட்பாண்டங்கள், மண்படைகள், சிற்பங்கள், ஓவியங்கள் நாளாந்தம் பயன்படுத்திய பாவனைப்பொருட்கள் போன்றன பெரிதும் உதவுகின்றன. உலக நாடுகள் பலவற்றினதும் வரலாற்றுக்கு முற்பட்டகால நாகரிக வரலாறு இவற்றின் துணை கொண்டே கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றிய ஆய்வுகள் அதிகம் வளர்ச்சியடையவில்லை என்றே கூறலாம். இதற்குக் காரணம் ஆட்சிப்பீடத்திற்கு வந்த அரசியற் சக்திகள் யாவும் தாம் விரும்பும் தேசிய வாதம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்காகத் தொல்லியலைப் பலம் வாய்ந்த ஆயுதமாகப் பயன்படுத்தியமையே ஆகும். இங்கு சாதாரணமாக வரவேற்கப்படும் ஆய்வு முயற்சிகள் பெரும்பாலும் பௌத்தத்தின் வருகையைத் தொடர்ந்து ஏற்பட்ட வரலாற்றுக் காலத்திற்குரிய சமயம், மொழி, கலை பண்பாட்டு வளர்ச்சிகளை நோக்கியே நெறிப்படுத்தப்பட்டன. இப்போது இயங்கி வரும் கலாசார முக்கோணத் திட்டம் கூட இவ்வடிப்படையிலேயே உருவாகியுள்ளது. விஜயனுக்கு முன்னர் இலங்கையிலே மனிதப்பிறவிகள் இருக்கவில்லை என்ற மகாவம்சத்தின் கதையின் தாக்கத்தினாற் போலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் குறித்து அதிக அக்கறை காட்டப்படவில்லை. இந்நிலையிலும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சில மகாவம்சத்தின் கட்டுக்கதைகளை நிராகரிப்பதுடன், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் புதிய வெளிச்சம் ஊட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

அண்மைக் காலங்களில் வரலாற்றிற்கு முற்பட்ட காலத் தொல்லியல் மையங்கள் (archaeological sites) பல வட மேற்கிலங்கையிற் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன (படம்-2). ஆயினும் வட இலங்கையில் இதுவரை அறியப்பட்டுள்ள மிகத் தொன்மையான வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தொல்லியற் சான்றுகள் குறுணிக்கற் காலப் பண்பாட்டிற்குரியனவாகும். இப்பண் பாட்டு மக்கள் காட்டுப் புற்களாகத் தோன்றிய இப்பண்பாடு நிலவியதென்ற கருத்து நீண்ட காலமாகக் கூறப்பட்டு வந்தது. அண்மைக்கால ஆய்வுகளால் இலங்கையில் இதன் தோற்றக் காலம் கி. மு. 28000 ஆண்டுகள் எனவும், தமிழ் நாடு திருநெல்வேலி மாவட்டத்தில் கி.மு.30000 ஆண்டுகள் எனவும் கணிப்பிடப்பட்டது[1] இக் குறுணிக்கற்காலப் பண்பாடு யாழ்ப்பாணக் குடா நாடு தவிர இலங்கைத் தீவடங்கிலும் நிலவிய தாகத் தெரியவருகிறது. இதனை பலாங்




படம் - 2. வடமேற்கு கிழக்கிலங்கையின் முக்கிய தொல்லியல் மையங்கள்.

பயிர்களில் இருந்து தானியங்களை அறுக்கவும், வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தவும் சிறிய பிளேட் போன்ற கல் அலகுகளைப் பயன்படுத் தியதால் இக்காலத்தினைக் குறுணிக் கற்காலம் அல்லது இடைக்கற்காலம் (mesolithic culture) எனத் தொல்லியலாளர் அழைப்பர். ஏறத் தாழப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கொடை, இரத்தினபுரி, கித்துள்கொட, குறு விற்றாவ, அநுராதபுரம், வவுனியா, முல்லைத் தீவு, மன்னார், பூநகரி ஆகிய இடங்களிலே கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன[2], இருப்பினும் இப்பண்பாட்டு மக்களது நாகரிகம் தொடர்பான பல சான்றுகள் பலாங் கொடையை மையமாகக் கொண்ட பகுதியி

லேயே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால் இப்பண்பாடு பலாங்கொடைக் கலாசாரம் எனவும் கூறப்படும். இக்கலாசாரத்திற்கும் தமிழ்நாடு திருநெல்வேலி தேரி (மணல் குன்று) கலாசாரத்திற்கும் இடையேயுள்ள நெருங்கிய ஒற்றுமை பற்றிப் பல சந்தர்ப்பங்களிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இரு கலாசார மக்களும் பயன்படுத்திய கல்லாயுதங்களை ஆராய்ந்த அல்ஜின் இந்தியாவிலே தமிழ் நாட்டில் மட்டும் பயன்படுத்தப்பட்ட இவை போன்ற இருபக்க அலகுடைய கல்லாயுதம் சமகாலத்தில் இலங்கையிலும் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.[3] பொதுவாக இப்பண்பாட்டில் இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள நெருங்கிய ஒற்றுமையைக் கொண்டு இப்பண்பாட்டு மக்கள் ஏதோ ஒரு காலகட்டத்திலே தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்குப் புலம் பெயர்ந்திருக்கலாமெனத் தொல்லியலாளர் பலரும் கருதுகின்றனர். தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் இப்பண்பாட்டைப் பின்பற்றிய மக்கள் ஆதி ஒஸ்ரலோயிட் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாவர் 4 இவர்களின் மொழியும் பண்பாடும் பிற்பட்ட திராவிட நாகரிகத்துடன் இணைந்தே இலங்கை நாகரிகம் தோற்றம் பெற்றது.

பூநகரிப் பிராந்தியத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட காலக்குடியேற்றமும் குறுணிக்கற் காலப் பண்பாட்டுடன் தோற்றம் பெற்றதற்கான சில ஆதாரங்கள் கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு போன்ற இடங்களில் மேற்கொள்ளப் பட்ட தொல்லியல் மேலாய்வின் போது கிடைத்துள்ளன. இவ்விடங்களில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய சிறிய குவாட்ஸ் (quartz) கல்லாயுதங்கள் சிலவும், குவாட்ஸ் கற்களைக் கொண்டு கல்லாயுதங்கள் ஆக்கும் போது ஏற்படும் செதில்கள் (flakes) பலவும் கிடைத்துள்ளன. வெட்டுக்காட்டில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய இன்னொரு வகையான சேட் (chert) கற்கள் சில கிடைத்துள்ளன. இவற்றில் ஒன்று செயற்கை வடிவத்தைப் பெறறு அரை குறை நிலையிலேயே காணப்படுகின்றது. இவ்விடத்திலிருந்து குவாட்ஸ் கல்லாயுதத்துடன் உலோகத்தாலான மீன் பிடிப்பதற்குரிய ஊசியும் (metal fish hook) பிளேட் போன்ற ஆயுதமும் கிடைத்துள்ளன. இருப்பினும் இவ்விடத்தில் பிற்பட்ட திராவிடப் பெருங்கற்காலப் பண்பாட்டுரிய சான்றுகளும் காணப்படுவதால் இவை இரு கலாசார மக்களிடையேயும் ஏற்பட்ட கலாசாரப் பரிவர்த்தனையின் எச்சங்களாக இருக்கலாம்.

இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் இப்பண்பாட்டுக்குரிய சான்றுகள் பெரும்பாலும் நீரோடைகளிலும், மணல் மேடுகளிலும், குகைகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மூன்று பக்கமும் நீரினாலே சூழப்பட்டுள்ள பூநகரிப் பிராந்தியம் தென்னிந்தியப் பகுதியிலிருந்து காலத்துக் காலம் ஏற்பட்ட நீரோட்டத்தின் தாக்கத்திற்கு உட்பட்டதினாலே இப்பகுதியில் இச்சான்றுகள் காணப்படுவது பொதுவான அம்சமாகும்.

பொதுவாக வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றிய தொல்லியற் சான்றுகளை முழுமையான அகழ்வு மூலம் அடையாளம் காணப்படும் மண் படிவுகளின் வேறுபாட்டைக் கொண்டே திட்டவட்டமாகக் கூறமுடியும். பூநகரியில் இச்சான்றுகள் காணப்பட்ட கல்முனை, மண்ணித்தலை' வெட்டுக்காடு போன்ற மணற்பாங்கான இடங்கள் பருவகால மாற்றத்திற்கும், நீரோட்டத்தின் தாக்கத்திற்கும் அடிக்கடி உட்படுவதனால் வரலாற்றுக்கு முற்பட்ட காலக் கலாசாரப் படைகள் குழம்பிய நிலையிலே பிற்காலப் பண்பாட்டுச் சான்றுகளுடன் கலந்து காணப்படுகின்றன. இதனால் இங்கு கிடைத்த கல்லாயுதங்களைக் கொண்டு குறுணிக்கற்காலப் பண்பாடு நிலவியதெனக் கூறலாமே தவிர அக்கால மக்களது வாழ்க்கை முறையினையும், நாகரிகத்தையும் இலங்கையின் பிற இடங்களிற் கிடைத்த சான்றுகளின் அடிப்படையிலேதான் அனுமானிக்க முடியும். எனவே இங்கு பருவகால மாற்றத்திற்கு உட்படாத இடங்கள் தொல்லியல் அகழ்வுக்குட்படுத்தப்படுமெனின் இப்பண்பாட்டு மக்களின் நாகரிகத்தோடு தொடர்பான பல சான்றுகள் கிடைக்கலாம்.

தொல்லியலாளர்கள் இலங்கைக்கு இப்பண்பாடு தமிழ் நாட்டிலிருந்தே பரவியதெனக் கூறியுள்ளனர்.[5] வடமேற்கு இலங்கையிலே தமிழ் நாட்டிற்கு நேர் எதிரே அமைந்த பூநகரியிலும் மாந்தையிலும் இப்பண்பாட்டுச்சான்றுகள் கண்டு

பிடிக்கப்பட்டிருப்பதனால் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு இப்பிராந்தியங்கள் ஊடாகவே இப் பண்பாடு பரவியதெனக் கூறலாம்.

## வரலாற்று உதயகாலம்

வரலாற்று உதயகாலம் என்பது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தைக் குறிப்பதாகும்.[6] இதன்காலம் நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படுகின்றது. இலங்கையில் வரலாற்று உதயகாலம் கி.மு 1000 இற்கும், கி.மு 300இற்கும் இடையில் நிலவியதாகக் கூறப்படுகின்றது. இதன் தோற்றத்திற்குத் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டின் வருகையே காரணமாக அமைந்ததென்பதைத் தொல்லியலாளர் பலரும் ஏற்றுள்ளனர்.

இப்பண்பாடு பெருங்கற்காலப் பண்பாடு எனவும், இரும்புக்காலம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. காரணம் இப்பண்பாட்டு மக்கள் இறந்தோரை அடக்கம்செய்ய ஈமச் சின்னங்களுக்குப் பெரிய கற்களைப்பயன்படுத்தியமையும்,இரும்பின் உபயோகத்தைத் தமது அன்றாட வாழ்க்கையிற் பெருமளவு பயன்படுத்தியமையுமாகும். இலங்கையில் இப்பண்பாடு பற்றிய சமீபகால ஆய்வுகள் சிங்கள மக்களின் மூதாதையர் வட இந்தியாவில் இருந்துவந்த ஆரியர்களின் வழித்தோன்றல்கள் என்ற பாரம்பரியக்கருத்தை முற்றாக நிராகரித்துள்ளன.[7] விஜயன் வருகையோடு இலங்கை நாகரிகம் தோன்றியதெனவும் இவனின் வழி வந்தவர்களே நீர்ப்பாசன விவசாயம், இரும்பின் உபயோகம், அரச தோற்றம் ஆகியன ஏற்படுத்தக் காரணம் என்பதும் மகாவம்சத்தின் கூற்றாகும். இதையே இலங்கை நாகரிகதோற்றகால வரலாறு என ஏற்றுக்கொண்ட பிற்கால வரலாற்று ஆசிரியர்கள் பலரும் இதற்குச் சார்பான வரலாற்றைக் கட்டியெழுப்பினர்.[8] ஆனால் விஜயன் இலங்கையிலே குடியேறியதற்கோ, அவன் வழியில் வந்தவர்களால் நாகரிகம் அறிமுகப் படுத்தப்பட்டதற்கோ எதுவித தொல்லியற் சான்றுகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. மாறாகத் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டின் வருகையோடு இலங்கை நாகரிகம் தோற்றம் பெற்றதற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.[9] தென்னிந்தியாவிலே கி.மு 1000 ஆண்டளவிலே தோன்றிய இப்பண்பாடு எவ்வாறு தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு எனப் பல்வேறு பண்பாடுகளைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்ததோ, அதேபோல இலங்கையிலும் தமிழ், சிங்களப் பண்பாடு தோன்றுவதற்கு இப் பண்பாடே காரணமாக இருந்தது என்ற கருத்தைச் சிற்றம்பலம் முன்வைத்தார்.[10] மானிடவியல் ரீதியாக இப்பண்பாட்டு மக்களும் தென்னிந்திய திராவிட பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களும் ஒரே இன வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பது மானிடவியலாளரின் கருத்தாகும்.[11]

பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய சான்றுகள் தென்னாசியாவிலே பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் அது திராவிடமொழி பேசும் பிராந்தியமான தென்னிந்தியாவிலேதான் செறிந்து காணப்படுவதோடு சில தனித்துவமான அம்சங்களையும் கொண்டு விளங்குகிறது. இப்பண்பாட்டுக்குரிய ஈமச்சின்னங்களின் வகையான முதுமக்கள் தாழிகள் (urnburial), கல்லறைகள் (cist-burial) கற்கிடைகள் (rock cut burial), போன்றன விளங்குகின்றன. தென்தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் புதைகுழியும், தாழி அடக்க முறையுமே பெருமளவு பின்பற்றப்பட்டதாகத் தெரிகிறது. இத்தகைய ஒரு பண்பாட்டு முறையையே பண்டைய தமிழ் இலக்கியத்தில் வரும்

''சுடுவோர் இடுவோர்
தொடுகுழிப் படுவோர்
தாழ் வயினடைப்போர்
தாழியிற் கவிப்போர்.''

போன்ற சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன.[12] ஈமச்சின்னங்களைக் கொண்டே இப்பண்பாடு இப்பெயரைப் பெற்றிருந்தாலும் அச்சின்னங்களை விட முக்கியத்துவம் வாய்ந்த பல பண்பாட்டு அம்சங்களையும் இப்பண்பாடு குறித்து நிற்கிறது. தென்னிந்தியாவில் இரும்பின் அறிமுகம், நீர்பாசனத்துடன் கூடிய பயிர்ச்செய்கை, கறுப்புச்சிவப்பு மட்பாண்ட உபயோகம், கட்டமைப்புடைய சமூகத்தோற்றம், அரசஅமைப்பு என்பன இப்பண்பாட்டுடன் தோற்றம் பெறுகின்றன. சங்ககாலத்திலே சிறப்புற்றிருந்த சேர, சோழ, பாண்டிய அரசுகள் இப்பண்பாட்டின் பின்னணியிலே தோன்றியவையாகும். இப்பெருங்கற்

காலப் பண்பாட்டின் முதிர்ச்சிநிலையே தமிழ் மொழி சங்கஇலக்கியங்கள் படைக்கப்படும் அளவிற்கு வளர்ச்சியடைய வழிவகுத்தது.


இத்தகைய ஒரு பண்பாடே கிறிஸ்துவிற்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் இலங்கையிலும் பரவி நீர்ப்பாசன நாகரிகத்தை மையமாகக் கொண்ட நகரங்களும், அரசுகளும் தோற்றம் பெறக் காரணம் என்பதை நாட்டின் முக்கிய பண்பாட்டு மையங்களிற் கண்டு பிடிக்கப்பட்ட இப்பண்பாட்டுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இலங்கையின் பெருநிலப்பகுதியில் இப் பண்பாடு நிலவியதற்கான சான்றுகள் அநுராதபுரம், கதிரவெளி, பொம்பரிப்பு, வவுனியா, திசமகாறகம மாந்தை, கேகாலை போன்ற இடங்களிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[13] இப்பண்பாட்டின் பல்வேறு அம்சங்கள் தென்னிந்தியாவுடன் ஒத்துக் காணப்பட்டாலும் சிறப்பாகத் தமிழ் நாட்டுடன் அதிக ஒன்றுமை கொண்டு காணப்படுகின்றது.[14] இதனாற் பூநகரிப் பிராந்தியப் பண்பாட்டை இப்பின்னணியில் நோக்குவது பொருத்தமாகத் தெரிகிறது.

## பெருங்கற்கால கலாசாரத் தடயங்கள்


அரச மட்டத்தில் அதிக தொல்லியல் ஆய்வுக்கு உட்படுத்தப்படாத தமிழ்ப் பிராந்தியங்களில் ஒன்றான யாழ்ப்பாணத்திலே திராவிட பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய சான்றுகள் காணப்படுவதை முதன் முதலாக வெளிப்படுத்தியவர்கள் பென்சில்வேனியப் பல்கலைக்கழக அரும் பொருளக ஆய்வாளர்கள். இவர்கள் 1967 இலே கந்தரோடையில் ஆய்வினை மேற்கொண்டு குடியிருப்பின் ஆரம்பக் கட்டத்திலே பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய மட்கலன்கள் பலவற்றைக் கண்டு பிடித்தனர்.[15] இவர்களைத் தொடர்ந்து வேறு சில தொல்லியலாளர்களும் இங்கு ஆய்வுகளை நடத்தியுள்ளனர். இவற்றிலே கிடைத்த சில சான்றுகள் கி.மு 1000 இற்கு உரியவை எனக் கணிப்பிடப்பட்டாலும் பெரும்பாலானவை கி.மு.500 இற்கும் 100 இற்கும் இடைப்பட்டவையாகக் காணப்படுகின்றன.[16] அண்மைக்காலங்களில் யாழ்ப்பாணத் தொல்லியற் கழகமும், பல்கலைக்கழக விரிவுரையாளர் சிலரும் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வாலும், சில தொல்லியல் அகழ்வாய்வாலும் ஆனைக்கோட்டை, காரைநகர், வேலணை, போன்ற இடங்களிலும் இப்பண்பாட்டுச் சின்னங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.[17] சமீபத்திலே பூநகரிப் பிராந்தியத்திலே நாம் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வாலே கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு, பள்ளிக்குடா, தியாகம், பல்லவராயன், ஈழவூர் போன்ற இடங்களில் இருந்தும் இப்பண்பாட்டுக்குரிய பல சான்றுகளைக் கண்டு பிடிக்க முடிந்தது. இவற்றுள் மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய இடங்களில் மட்டும் இப் பண்பாட்டிற்குரிய கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்களை அடையாளம் காண முடிந்தது. இவ்விடங்களில் இருந்தே குறுணிக் கற்காலப் பண்பாட்டிற்குரிய சான்றுகளும் கிடைக்கப் பெற்றதனால் அப்பண்பாட்டின் தொடர்ச்சியாகப் பெருங்கற்காலப் பண்பாடு நிலவியதெனக் கூறலாம். இந்த அம்சமே இலங்கையின் புராதன தலைநகர் அமைந்திருந்த அநுராதபுரத்திலும் காணப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.[18]

இப்பண்பாட்டில் ஈமச்சின்னங்களை அமைக்கப் பெருங்கற்கள் பயன்படுத்தப்பட்டாலும் நாட்டின் பௌதிகச் சூழலுக்கு ஏற்ப, தாழிகளும் குழிகளும் பயன்படுத்தப்பட்டதற்கும் ஆதாரங்கள் உள. இதற்கு ஆதிச்ச நல்லூர், பொம்பரிப்பு, மாந்தை, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சான்றாகும்.[18] இத்தகைய ஓர் ஈமச்சின்ன அமைப்பு முறையே பூநகரியிலும் பின்பற்றப்பட்டதாகத் தெரிகிறது. பெருமளவு மணற்பாங்கான இப்பிராந்தியத்திலே பெருங்கற்கள் காணப்படாததனால் அவ்விடங்களிலே தாழிகளும், குழிகளும் பயன் படுத்தப்பட்டுள்ளன. தென்னிந்தியாவில் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்த இடங்களில் வதிவிடம், இடுகாடு, குளம், வயற்பரப்பு ஆகிய நான்கும் முக்கிய அம்சங்களாக விளங்கின. இத்தகைய இடங்களை அண்டியே அதிகமாக இப்பண்பாட்டுச் சான்றுகள் காணப்படுகின்றன. பூநகரியிலே பல வருடங்களுக்கு முன்னர் காடுகளாக இருந்து தற்போது பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள தியாகம், குதிரை கட்டின தீவு,

பல்லவராயன் போன்ற இடங்களிலும் இந்த அம்சங்களை ஓரளவுக்கு அவதானிக்க முடிகின்றது. இங்கு கைவிடப்பட்டுள்ள சிறு சிறு குளங்களை அடுத்துள்ள மேட்டுப்பாங்கான நிலங்களிலும், வயற்காணிப் பரப்புக்களிலும் பெருந்தாழிகளின் உடைந்தபாகங்களும்,(படம்-3)சிறிய மட்பாண்ட ஓடுகளும், சுடுமண் உருவங்களும் (படம்-4), மணிகள், கைவளையல்கள் முதலியவையும் மேலாய்வின்போது கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்விடங்களிலே புதிதாகப் பயிர்ச்செய்கைக்கு வயல்கள் திருத்தப்படும்போது பரந்து காணப்படும் தாழிகளின் உடைந்த பாகங்களைப் பொறுக்கி எடுப்பதற்காகவே தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதுண்டு. அவ்வாறு பொறுக்கி எடுக்கப்பட்டவை வயல் ஓரங்களிலே குவிக்கப்பட்டதை இன்றும் அவதானிக்கலாம். இக்குவியல்களில் இருந்தும் சில சுடுமண்ணால் அமைந்த மண் உருவங்களைப் பெறமுடிந்தது (படம்-5). இவற்றை நோக்கும் போது ஆதிச்சநல்லூர்,




படம் - 3. பெருங்கற்காலத் தாழிகளின் உடைந்த பாகங்கள்.



படம் - 4. சுடுமண் உருவங்கள்

பொம்பரிப்பு போன்ற இடங்களைப் போல இங்கும் பரந்த அளவிலான பெருங்கற்காலத் தாழிக்காடு இருந்திருக்கலாமோ என எண்ணத் தூண்டுகிறது. இவ்விடங்கள் முழுமையான அகழ் வாய்வுக்கு (excavation) உட்படுத்தப்படு மானால் பல புதிய வரலாற்று உண்மைகள் வெளிவர இடமுண்டு.




படம் - 5. சுடுமண் சிலை

பள்ளிக்குடா, ஈழவூர் போன்ற இடங்களிலே புதியனவாகக் கிணறுகள் வெட்டியபோது சில சந்தர்ப்பங்களில் மனித எலும்புகளுடன் கூடிய முழுமையான தாழிகளும், நீளப் புதைக்கப்பட்டிருந்த மனித எலும்புக் கூட்டைச் சுற்றிப்பல மட்பாண்டங்களும் வெளிவந்ததாக அவ்வூர் மக்கள் சிலர் நமக்கு கூறியுள்ளனர். அக்கிணறுகள் பின்னர் இடையிலே கைவிடப்பட்டதாகவும் தெரிகிறது. இக்கூற்றிலே பெருமளவு உண்மை யுண்டு என்பதை அங்கு கைவிடப்பட்டிருந்த கிணற்றின் மேற்பாகங்களில் இருந்து கிடைத்த மட்பாண்ட ஓடுகள், மணிகள், கை வளையல் கள், இரும்பாணிகள், முழுமையான மட்பாண்டம் என்பன உறுதிப்படுத்துகின்றன. சமீபத்தில் ஈழவூரிலே கிணறொன்று வெட்டியபோது நாலடி ஆழத்திலே பல மட்பாண்ட ஓடுகள், சங்கு, சிப்பி, மணிகள் முதலிய பொருட்கள் வெளிவந்ததை நேரில் அவதானிக்க முடிந்தது (படம்-6).

இவற்றை ஆதாரமாகக்கொண்டு இவை பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரியவை எனத் திட்டவட்டமாக்க் கூறமுடியாவிட்டாலும் மிகத் தொன்மையான குடியிருப்புக்களுக்குரிய சான்றுகள் எனத் திடமாகக் கூற முடியும்.

வெட்டுக்காடு, மண்ணித்தலை போன்ற இடங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கிய தொல்லியல் மையங்கள் எனக்கூறலாம். இவ்விரு இடங்களிலும் இருந்துதான் இப்பண்பாட்டிற்கே சிறப்பாய் உரிய கறுப்பு சிவப்பு நிற



படம் - 6 ஈழவூரில் கிணறு வெட்டும்போது நான்கு அடி ஆழத்தில் வெளிவந்த பெருங் கற்காலத் தடயங்கள்.

மட்பாண்டங்களை (black and red ware) பெற முடிந்தது 19 (படம்-7). இச்சான்றுகள் காணப்பட்ட இடங்களில் இருந்து மேலும் தனிக் கறுப்பு (all black ware), சிவப்பு (red ware), நரை (grey ware) நிறமட்பாண்ட ஓடுகள், சிவப்பு நிறம் கொண்ட முழுமையான இரண்டு பானைகள், மண் விளக்குகள், சுடுமண் பாவைகள்(terracotta figure) என்பன கிடைத்துள்ளன (படம்-8).





படம் - 7. கறுப்பு சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள்.

இம்மட்கலங்கள் கந்தரோடை, அரிக்கமேடு ஆகிய இடங்களிற் கிடைத்த மட்கலன்களோடு ஒப்பிட்டு ஆராயப்பட வேண்டியன. இப்பண்பாட்டு மக்கள் ஓரளவுக்கு விவசாயத்தையும்,




படம் - 8. வெட்டுக்காட்டிற் கிடைத்த சிவப்பு நிற மண்பானை.





படம் - 9. பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய இரும்பாயுதங்கள்.

பெருமளவிற்கு மீன்பிடித்தொழிலையும் மேற்கொண்டிருந்தனர் போலத் தெரிகின்றது. இதை இச்சின்னங்கள் காணப்பட்ட இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட இரும்பினாலான கொழு (plough share), கத்தி முதலியனவும் (படம்-9), பரவலாகக்கிடைத்த மீன்பிடி ஊசிகளும் (Fish hooks) உறுதிப்படுத்துகின்றன (படம் - 10). இவற்றுடன் பல வடிவங்களிலே செய்யப்பட்ட மணிகள் (beads) (படம்-11), கைவளையல்கள் (bangles) (படம்-12), எலும்பினால் செய்யப்பட்ட கழுத்து மாலைகள் (necklace), அலங்காரப் பொருட்கள், கல்வளையல்கள், உலோகத்தாலே செய்யப்பட்ட காற்சலங்கைகள் ஆகியவையும் இவ்விடங்களிலே கிடைத்துள்ளன (படம் - 13). இச்சான்றுகள் அனைத்தும் செறிவான திராவிடர் குடியிருப்புக்கள் இங்கிருந்ததை உறுதிப்படுத்துகின்றன.



படம் - 10. பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய மீன்பிடி ஊசிகள், ஆணி வகைகள்.


## மட்பாண்டங்களும் பிற தொல்லியற் சின்னங்களும்

தென்னாசியாவின் ஆதிகால நாகரிக மக்களின் அன்றாடப் பாவனைப்பொருட்களில் ஒன்றாக மட்பாண்டங்கள் பயன்படுத்தப்பட்டன. இம்மட்பாண்டங்களில் பானைகள், சட்டிகள், கூசாக்கள், வட்டில்கள், தட்டுக்கள், மணவிளக்குகள் என்பன குறிப்பிடத்தக்கன. இவை ஆதி



படம் - 11. பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய மணிவகைகள்.

கால உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகப் பொருள்களின் கொள்கலன்களுக்காகவும், உணவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் பாத்திரங்களுக்காவும், அன்றாடப் பிற தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பெற்றன. பெருங்கற்காலப் பண்பாட்டில் இம்மட்பாண்டங்கள் இறந்தவர்களை அடக்கம் செய்யவும், இறந்தவர்களது உடலைச் சுற்றிப் படையற் பொருட்களை வைப்பதற்கும் பயன்படுத்தப்பெற்றன. இதனால் இப்பண்பாடு நிலவிய பிராந்தியங்களில் எல்லாம் குடியிருப்புக்களையும், இடுகாடுகளையும் அண்டிச் செறிவான மட்பாண்ட ஓடுகள் காணப்படும். இதற்கு இலங்கையில் பொம்பரிப்பு (புத்தளம்) என்ற இடத்திற் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலப்பண்பாடு சிறந்த உதாரணமாகும். மேலும் பெருங்கற்கால நாகரிக மக்களின் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத்தில் மட்பாண்டங்கள் முக்கிய ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகப் பொருட்களாக இருந்துள்




படம் - 12. பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய கைவளையல்கள்.

என. ஆதிகால மக்களின் கலை உணர்வும், தொழில்நுட்ப அறிவும் மட்பாண்டங்களைச் செய்வதிலே பெரும்பாலும் வெளிப்படுத்தப் பட்டன. இதனால் பிற்காலத்திற் பயன்பாட்டில் இருந்த மட்பாண்டங்களை விட இவை அதிக அலங்காரத் தன்மையும், தொழில் நுட்ப வேலைப்பாடுகளும் கொண்டு விளங்கின. இன்று தொல்லியல் சார்ந்த அறிவு வளர்ச்சியில் மட்பாண்டங்கள் பற்றிய ஆய்வு தனியொரு துறையாக வளர்ச்சியடைந்துள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு நாகரிகத்தின் தொன்மையும், சிறப்பும் அறியப்படுகின்றன.


இலங்கையைப் பொறுத்தவரை இந்தியாவைப் போன்ற தொன்மையான நாகரிகம் இருந்ததற்கான உறுதியான சான்றுகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் இலங்கையில் மட்பாண்ட உபயோகத்தின் தொடக்க காலமாக இடைக்கற்காலத்தை, சிறப்பாகப் பெருங்கற்காலப்பண்பாட்டை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இப்பண்பாட்டிற் பயன்படுத்தப்பட்ட சிலவகை மட்பாண்டங்கள் பிற்காலத்திலும் ஓரளவு பயன்படுத்தப்பட்டன. இதனால் மட்பாண்டங்களின் தோற்ற காலத்தை மட்பாண்டங்களுடன் இணைந்து காணப்பட்ட பிற தொல்லியற் சான்றுகளைக் (associatdc artifacts) கொண்டு அல்லது விஞ்ஞான ஆய்வுக்கு உட்படுத்தியே கூற முடியும்.

பூநகரிப்பிராந்தியத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுச்சின்னங்கள் காணப்பட்ட மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய இடங்களிலும், அவ்விடங்களுக்கு அருகில் உள்ள கல்முனை, கௌதாரிமுனை, பரமன்கிராய், பள்ளிக்குடா, பல்லவராயன், ஈழவூர், வீரபாண்டியன்முனை, பாலாவி ஆகிய இடங்களிலும் இருந்து பல்வேறு வகையான மட்பாண்ட ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன (படம் - 14). இம்மட்பாண்ட ஓடுகளை அவற்றின் வடிவமைப்பு, விளிம்புகளின் தடிப்பு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு பதினாறு வகையாகவும் மட்பாண்டங்களின் உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் கோடுகளால் வரையப்பட்ட சித்திரங்களைக் கொண்டு பதினான்கு வகையாகவும் பிரித்துள்ளோம் (படம் - 15). எதிர்காலத்தில் இம்மட்பாண்ட ஓடுகள் விஞ்ஞான ஆய்வுக்கு உட்படுத்தப்படும்போது இவை தோன்றிய காலம் தெரிய வரலாம். இருப்பினும் சில மட்பாண்டங்களின் முக்கியத்துவம் இங்கு ஆராயத்தக்கது.



படம் . 13. பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய காற் சலங்கைகள். கல் மோதிரங்கள்.


பள்ளிக்குடா என்ற இடத்தில் புதிதாக வெட்டப்பட்ட கிணறொன்று இன்று கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் கிணறு வெட்டியபோது மண்ணின் கீழ்ப்



படம் - 14. பல வடிவங்களில் அமைந்த மட்பாண்ட விளிம்புகள்.

படையிலிருந்து பல மட்கலன்களும், மனித எலும்புகளும் வெளிவந்தமையாகும். அக் கிணற்றை நாம் ஆய்வு செய்தபோது கிணற்றின் ஓரத்திலிருந்து அலங்காரத்தன்மை கொண்ட முழுமையான கட்டியொன்றையும், உடைந்த நிலையில் சிறிய வட்டில்களையும் கண்டெடுக்க முடிந்தது (படம் — 16) மேலும் கிணற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட மண்ணிலிருந்து பெருங் கற்காலப் பண்பாட்டில் பயன்படுத்தப்பெற்ற பல வடிவிலமைந்த மணிகளையும், கைவளையல் களின் உடைந்த பாகங்களையும் அவதானிக்க முடிந்தது. இவற்றை ஆதாரமாகக்கொண்டு இங்கு கிடைத்த மட்பாண்டங்களைப் பெருங்கற் காலப் பண்பாட்டோடு தொடர்புபடுத்தி ஆராய இடமுண்டு.


பூநகரியில், கல்முனையிலிருந்து ஆலடிவரை யிலான கடற்கரையை அண்டிய பிராந்தியம் மணற்பாங்கான பகுதியாகும். கடுங்காற்று வீசும் காலங்களில் மேற்படையிலுள்ள மணல் அள் ளுண்டு போவதால், கீழ்ப்படையிலிருந்த தொல் பொருட்சின்னங்கள் தெளிவாகத் தெரிகின்றன (படம் — 17). அவ்வாறான ஒரு காலப்பகுதியில் அங்கு நாம் ஆய்வு செய்தபோது நூற்றுக்கணக் கான பானையின் கெண்டிகளையும், மண்விளக்கு களையும் (படம் — 18), வெட்டுக்காடு, கௌதாரிமுனை ஆகிய இடங்களில் சிவப்பு நிறம் கொண்ட இரு பானைகளையும் அவதானிக்க முடிந்தது (படம் — 19) இவ்விடங்களில் ஆதி கால, இடைக்காலத் தொல்பொருட் சான்று




படம் - 15. பல வடிவங்களிலுள்ள மட்பாண்டச் சித்திரங்கள்.

களும் கிடைத்திருப்பதால் இம்மட்பாண்டங்களின் காலத்தைத்தற்போது திடமாகக் கூற முடியாதிருக்கிறது.

வெட்டுக்காட்டில் கெண்டியுடன் கூடிய முழுமையான பானை ஒன்று(spouted pot)கிடைத்துள்ளது (படம்—20.). இது எக்காலத்துக்குரியது என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாதிருக்கிறது. தென்னிந்தியாவிலே கர்நாடக மாநிலத்திலே புதிய கற்கால (neolithic period), செம்புக்கால (chalcolithic period) பண்பாட்டில் இதே வடிவிலுள்ளபானைகள் பயன்படுத்தப்பட்டதற்கு ஆதாரங்கள் உள்ளன.20 பிற்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டில் இவை அரிதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழகத்திலே பாண்டி நாட்டிலுள்ள ஆதிச்சநல்லூரிலும், கொற்கையிலும் இப்பண்பு சாடிகளிலே காணப்படுகின்றது.21 இதனாலே பூநகரியிலே கிடைத்த கெண்டியுடன் கூடிய பானையின் பயன்பாடு மிகத் தொன்மையானதா என்ற கேள்வி எழுகின்றது. வெட்டுக்காட்டுக்கு அருகில் உள்ள பரமன்கிராய் என்ற இடத்திலே நிலத்திலிருந்து இரண்டடி ஆழத்திலே குவியலாக இருந்த மட்பாண்ட ஓடுகளை வெளியே எடுத்தபோது அவற்றிடையே வர்ணம் தீட்டப்பட்ட சில மட்பாண்ட ஓடுகளை அவதானிக்கமுடிந்தது (படம் — 21). மட்பாண்டங்களுக்கு வர்ணம் தீட்டும் முறை தென்னிந்தியாவிலே புதிய கற்கால, செம்புக்காலப் பண்



படம் - 16. பள்ளிக்குடாவில் கிடைத்த சட்டி, வட்டில்கள்.




படம் - 18. மண்விளக்குகள். கெண்டிகள்

பாட்டிலே பின்பற்றப்பட்டுத் தமிழ் நாட்டிலும் ஆந்திராவிலும் பெருங்கற்காலப் பண்பாட்டில் அரிதாகப் பயன்படுத்தப்பட்டது.[22] தென்னிந்தியப் பெருங்கற்கால மட்பாண்ட வகைகள் பற்றி ஆராய்ந்த குருமூர்த்தி இப்பண்பாட்டில் மட்பாண்டங்களுக்கு வர்ணம் தீட்டுவது அரிதாகவும், காலத்தால் முந்தியதாகவும் இருந்ததெனக் குறிப்பிட்டுள்ளார்.[23] இதனாலே பூநகரியிலே கிடைத்த வர்ணம் தீட்டப்பட்ட மட்பாண்டங்களை இப் பின்னணியிலேதான் நோக்கவேண்டியுள்ளது.


மண்ணித்தலையில் ஒரே தொல்லியல் மையத்தில் இருந்து சித்திர வேலைப்பாடுடைய மட்பாண்டங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தென்னாசியாவிலே பெருங்கற்காலப் பண்பாட்டிலும் பிறபண்பாட்டிலும் உள்ள மட்பாண்டங்களிலே பல சித்திரங்கள், அலங்கார வடிவங்கள் கோடுகளாக வரையப்பட்டுள்ளதைக் காணலாம்.[24] இந்த அம்சத்தைப் பூநகரிப் பிராந்தியத்திற் கிடைத்த மட்பாண்டங்களிலும் காணமுடிகிறது. ஆனால் மண்ணித்தலையிலுள்ள மட்பாண்டங்களில் இதற்கு மாறாகப் பல்வேறு உருவங்கள் அச்சினாலே பதியப்பட்டுக் காணப்படுகின்றன. இங்கு கிடைத்த கறுப்பு. சிவப்பு, நரை நிறம் கொண்ட மட்பாண்டங்களில் அச்சினாலே பதியப்பட்ட ஒரே அமைப்புடைய பல நட்சத்திரங்கள், மலர்கள், சூலவடிவில் அமைந்த உருவங்கள் அடையாளம் காணமுடியாதுள்ள சித்திரங்கள் முதலியன காணப்படுகின்றன(படம்22). இவை எக்காலத்திற்குரியன என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாவிட்டாலும் அதிமுக்கியத்துவம் வாய்ந்தன என்பதிலே சந்தேகமில்லை. எதிர்காலத்தில் இவை தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் இவற்றின் சிறப்பை வெளிப்படுத்த உதவலாம்.




படம் - 17. மண்ணின் மேற்படையிற் காணப்படும் தொல்லியற் சின்னங்கள்.



படம் - 19 கௌதாரிமுனையிற் கிடைத்த மண்பானை.



படம் - 20. வெட்டுக்காட்டிற் கிடைத்த கெண்டியுடன் கூடிய பானை.




படம் - 21. பரமன்கிராயிற் கிடைத்த வர்ணம் தீட்டப்பட்ட மட்பாண்ட ஓடுகள்.


ஆதிகால மக்கள் தரைக்கீழ் நீரைப்பெறுவதற்காகச் சுட்டமண்ணைக்கொண்டு கட்டிய கிணறுகளைப் பயன்படுத்தியமை புராதன தொல்லியல் மையங்களில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதைத் தொல்லியலாளர் மண்வளையற் கிணறு (ring well) என அழைப்பர். இவை களிமண் பிரதேசங்களை விட மணற்பாங்கான பகுதிகளிலேயே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. இதற்கு வல்லிபுரம், மன்னார், முல்லைத்தீவு முதலிய பகுதிகளிலே கண்டு பிடிக்கப்பட்ட கிணறுகள் சிறந்த உதாரணங்களாகின்றன.[25] இவ்வாறான கிணறுகள் பூநகரிப் பிராந்தியத்திலும் பயன்படுத்தப் பெற்றதற்கு ஈழவூரில் உள்ள கிராஞ்சிப் பகுதியிலுள்ள கிணற்றை ஆதாரமாகக்காட்டலாம் (படம்-23). தற்போது நிலத்திலிருந்து 7 1/2அடி ஆழத்தில் உள்ள கிணற்றைச் சுற்றிப் புதிய கிணறொன்று கட்டப்பட்டுள்ளது. இம் மண்வளையற் கிணற்றில் மேற்பாகம் நட்சத்திர வடிவில் 2 1/2 அடி விட்டத்தை உடையது. 3 ஆடி ஆழமுடைய இதன் கீழ்ப் பாகம் ஐந்து மண் வளையங்களை ஒன்றாகப் பொருத்தி வட்ட வடிவிலே கட்டப்பட்டுள்ளது. இந்த அம்சத்தை முல்லைத்தீவு, மன்னார், வல்லிபுரம் ஆகிய இடங்களிற் கண்டு பிடித்த மண்வளையற் கிணற்றிற் காணமுடியாது. இக்கிணறு காணப்படும் சுற்றாடலிலே புராதன குடியிருப்புக்களுக்குரிய சான்றுகள் பல கண்டு பிடிக்கப்பட்டதில் இருந்து இக்கிணறு கிறிஸ்துசகாப்த காலத்திற்குரியதெனக் கருதலாம்.

இப்பிராந்தியத்திலே மேற்கொள்ளப்பட்ட மேலாய்விலே கிடைத்த ஆதிக்குடியிருப்புக்களுக்குரிய சான்றுகளுள் சமயம் சார்ந்த சின்னங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அண்மைக்கால ஆய்வுகள் பல இந்துப் பண்பாட்டின் தொன்மை பற்றிய சான்றுகள் பெருங்கற்காலப் பண்பாட்டில் இருப்பதை எடுத்துக்காட்டியுள்ளன. இவற்றின் ஈமச் சின்னங்களும், அவற்றுடன் தொடர்புள்ள பெருங்கற்களும் இந்து ஆலயங்களின் தோற்றத்தைக் கோடிட்டுக் காட்டுவதாக அறிஞர் கொள்வர்.[26] இதன் ஈமச்சின்னங்களுக்கும் குளத்திற்கும் இடையிலான தொடர்பு பிற்கால இந்து ஆலயத்திற்கும் கேணிக்கும் இடையிலான தொடர்புடன் ஒப்பிடத்தக்கது. தென்னிந்தியாவில் இப்பண்பாட்டில் காணப்பட்ட சுடுமண் சிற்பங்கள், உலோகச்சிலைகள் அக்காலத் தெய்வச்சிலைகளாகக் கருதப்படுகின்றன. இக் காலச் சமய நம்பிக்கைகளையே சங்க இலக்கியங்களும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இலங்கையிலும் இப்பண்பாட்டிலே காணப்பட்ட சிற்பங்கள் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் சிலர் சிந்து வெளியைப் போல இலங்கையிலும் தாய்த்தெய்வ வழிபாடு தொன்மையானதென்பதற்கு இவை சான்று என்றனர்.[27] இச்சிலைகளுக்கும் தமிழ்நாடு நீலகிரி மாவட்டத்திலே கண்டு பிடிக்கப்பட்ட சிலைகளுக்கும் இடையே அதிக ஒற்றுமை இருப்பதாகத் தோன்றுகிறது.


பூநகரியைப் பொறுத்தவரை அப்பிராந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டிலே கிடைத்த கலைச்சின்னங்கள் சில இந்த நோக்கில் ஆராயத்தக்கவை. மண்ணித்தலை, வெட்டுக்காடு, பல்லவராயன் போன்ற இடங்களிலே சுடுமண் உருவங்களின் உடைந்த பாகங்கள், இலிங்கவடிவில் அமைந்த மண் உருவங்கள் என்பன கிடைத்துள்ளன. இவ்வாறான கலைச்சின்னங்கள் பல அனுராதபுரம், பொம்பரிப்பு, இரணைமடு, மாமடுவ, உருத்திரபுரம், சிகிரியா, அம்பாறை போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன.[28] தமிழ்




படம் - 22. மண்ணித்தலையில் கிடைத்த மட்பாண்டங்களில் காணப்படும் அச்சினால் பதிக்கப்பட்ட சித்திரங்கள்.




படம் - 23. ஈழ ஊரிற் காணப்படும் புராதன மண்வளையற் கிணறு.




படம் - 24. மண்ணித்தலையிற் கிடைத்த இரும்பினாலான வேல்ச் சின்னம்.

நாட்டில் ஆதிச்ச நல்லூரிலே கிடைத்த வேலும் சேவற் சின்னமும் முருக வழிபாட்டின் தொன்மையான சான்று எனத் தொல்லியலாளர் கருதுவர்.[29] கந்தரோடை, ஆனைக்கோட்டை. காரைநகர் போன்ற இடங்களிலே திரிசூலக்குறியீடுகள் மட்பாண்டங்களிலே பெறப்பட்டன [30] ஆதிச்ச நல்லூரில் உள்ளவைபோன்ற இரும்பாலான வேல் சின்னங்கள் மூன்று பூநகரியில் மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய தொல்லியல் மையங்களில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளன (படம்-24). மேலும் இம்மையங்களிலிருந்து மண்ணினாற் செய்யப்பட்ட இரு வேறுபட்ட வடிவங்களில் அமைந்த மூன்று அகல் விளக்குகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை இப்பிராந்தியத்தில் நிலவிய தொன்மையான வழிபாட்டுச் சின்னங்களென்று கருத இடமுண்டு (படம்-25).



படம் - 25. மண்ணினாற் செய்யப்பட்ட அகல் விளக்குகள்.

எனவே மேற்கூறப்பட்ட தொல்லியல் மையங்களிலிருந்து கிடைத்த பெருங்கற்காலச் சான்றுகளையும், ஏனைய தொல்லியற் சின்னங்களையும் கொண்டு ஆதியிலே திராவிடர் குடியிருப்புக்கள் பூநகரியில் இருந்தனவெனக் கூறலாம். இதறகு இப்பிராந்தியத்தின் இயற்கையமைப்பு, வரண்ட காலநிலை, மழைக் காலத்திற் பெருகிவரும் வெள்ளவாய்க்கால்கள், இரும்பாயுதங்களினால்இலகுவாக அழிக்கக் கூடிய பற்றைக் காடுகள். மந்தை மேய்ப்பதற்குரிய தரவைகள், கடலுணவை ஆபத்தின்றிப் பெறக்கூடிய பரவைக் கடல், சிறு குளங்களை இலகுவாக அமைக்கக் கூடிய நிலங்கள் ஆகியவை காரணமாக அமைந்தன எனக் கூறலாம்.





படம் - 26. பூநகரிப் பிராந்திய பெருங்கற்கால மட்பாண்டங்களிற் காணப்படும் குறியீடுகள்.

இலங்கைத் தமிழரின் பாரம்பரிய பண்பாட்டு வரலாறு பெருங்கற் காலத்திலிருந்து தனித்துவமான முறையில் தோன்றி வளர்ந்த கிளைவழக்கு எனக்கூறலாம். இன்று தமிழ் மக்களிடையேயுள்ள சமூகப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், கிரியை முறைகள் என்பனவற்றின் வரலாற்றைப் பின் நோக்கிப் பார்த்தால் அவற்றின் தொடக்கமாகப் பெரும்பாலும் பெருங்கற்காலப் பண்பாடே விளங்குகின்றது.

பெருங்கற்காலச் சமூகத்தின் தொடர்புச் சாதன ஊடகமாக பலவித குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை இலங்கை - தென்னிந்திய பெருங்கற்கால மட்பாண்டங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள குறியீடுகள் சான்று பகர்கின்றன. இக்குறியீடுகள் சிந்துவெளி நாகரிக காலத்தில் இருந்து பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. தென்னிந்தியப் பெருங்கற்கால மட்பாண்டக் குறியீடுகள் பற்றி ஆய்வுசெய்த லால் என்ற அறிஞர் அப் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட 85வீதமான குறியீடுகள் சிந்துவெளி நாகரிகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளவை என உறுதிபடக் கூறியுள்ளார். இந்த ஒற்றுமை சிந்துவெளி நாகரிகம் வீழ்ச்சி அடைந்தாலும் அந்நாகரிகத்தில் பின்பற்றப்பட்ட பண்பாட்டு அம்சங்கள் மறையவில்லை என்பதைச் சுட்டிநிற்கின்றன. பூநகரியில் பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கிய மையங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள மண்ணித்தலை, வெட்டுக்காடு, ஈழஊர் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களில் 72 வகையான குறியீடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன (படம்26). இக்குறியீடுகளில் பெரும்பாலானவை தென்னிந்தியப் பெருங்கற்கால மட்பாண்டக் குறியீடுகளை ஒத்தவையாக உள்ளன.

பொதுவாக பெருங்கற்கால மட்பாண்டங்களில் வரும் குறியீடுகளை ஆராய்ந்த அறிஞர்கள் அக்குறியீடுகள் சமயச் சின்னங்களாக, குலச்சின்னங்களாக, வணிகச் சின்னங்களாக, எழுத்துக்களாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். ஆயினும்




படம் - 26-1. சலவைத் தொழிலாளர் பயன்படுக்தும் குறியீடுகள்.

குறிப்பிட்ட ஒரு குறியீடு குறிப்பிட்ட ஒன்றையே குறிப்பிட்டு நின்றதென நிச்சயப்படுத்திக்கூற முடியவில்லை. ஆனால் இக் குறியீடுகளில் சில வரிவடிவங்கள் தோன்றிய காலகட்டங்களில் எழுத்துக்களாகப் பயன்படுத்தப்பட்டதற்குப்


போதிய ஆதாரங்கள் உண்டு. இதனால் பெருங் கற்கால மட்பாண்டக் குறியீடுகள் சிலவற்றை ஒலிப்பெறுமானம் உள்ள எழுத்துக்களாகக் கருத இடமுண்டு.

தென்னாசியாவில் ஏறத்தாழ கி. மு. 3ஆம் நூற்றாண்டில் எழுத்துக்கள் தோன்றியதன் பின்னர் குறியீடுகளின் பயன்பாடு படிப்படியாகக் குறைவடைந்து செல்வதனைக் காணலாம். இதன்மூலம் எழுத்துக்கள் தோன்றமுன்னர் இக்குறியீடுகள் ஒருவிதசெய்தியை மக்களுக்கு எடுத்துக்கூறுபவையாக பெருங்கற்கால மக்கள் பயன்படுத்தினர் எனக்கூறமுடியும். ஆயினும் பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய குறியீடுகள் அனைத்தும் காலப்போக்கில் முற்றாக மறைந்துவிட்டன எனக்கருத முடியாது. இலங்கையைப் பொறுத்தவரை அதிலும் சிறப்பாக இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை பெருங் கற்காலப் பண்பாட்டில் வழக்கத்தில் இருந்த சில குறியீடுகள் இன்றும் புழக்கத்தில் இருப்பது இதற்கொரு சான்றாகும்.

பெருங்கற்காலப் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்டதைப் போன்ற குறியீடுகள் தற்காலத்தில் சலவைத்தொழிலை மேற்கொள்ளும் சமூகத்தினரால் ஆடைகளில் பயன்படுத்தப்படுவ



படம் - 26·2: மாடுகளுக்கு இடப்படும் பிரதேச வேறுபாட்டைக் காட்டும் குறியீடுகள்.



படம் - 26·3. மாடுகளுக்கு இடப்படும் சமூக வேறுபாட்டைக் காட்டும் குறியீடுகள்

தனை அவதானிக்கலாம். யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டை, மந்திகை, புத்தூர் ஆகிய இடங்களில் இது தொடர்பான ஆய்வினை மேற்கொண்டபோது அவ்விடங்களில் சலவைத் தொழிலை மேற்கொள்ளும் சமூகத்தினர் பெருங் கற்கால மட்பாண்டங்களில் காணப்படுவது போன்ற ஏறத்தாழ முப்பது வகையான குறியீடுகளைப் பயன்படுத்தி வருவதினை அவதானிக்க முடிந்தது (படம்-26-1). இம்முப்பது குறியீடுகளும் சலவைத்தொழிலாளர் பயன்படுத்தும் பொதுப்பட்ட குறியீடுகளாக இருந்தபோதிலும் சலவைத்தொழிலைச் செய்யும் குடும்பங்களிற் கிடையே அக்குறியீடுகளில் சில தனித்துவமான அம்சங்கள் காணப்படுகின்றன. அத்தனித்துவம் பொதுப்பட்ட முப்பது குறியீடுகளிலும் இடப்பட்டுள்ள சிறு கோடுகளாலும், புள்ளிகளாலும் அடையாளம் காணப்படுகிறது. இதிலிருந்து இக்குறியீடுகளின் பயன்பாடு இரண்டு வகையான நோக்கத்தை கொண்டுள்ளதென்பது தெரியவருகிறது. ஒன்று சலவைத் தொழிலாளர் பிறருக்குரிய ஆடைகளை இலகுவாக அடையாளம் காண்பதற்கு அவ்வாடைக்குரிய குடும்பத்திற்கென தாம் தெரிவு செய்த குறியீடுகளைப் பயன்படுத்துவது. இரண்டாவது சலவைத்தொழிலாளர் தமது குடும்பத்திற்குரிய தனித்துவமான குறி

யீடுகளைப் பயன்படுத்துவதன் மூலம் பொது இடத்தில் ஆடைகளைத் துவைக்கும் பொழுது அல்லது உலரவிடும் பொழுது தமக்குரிய ஆடைகளை இலகுவாக அடையாளம் காண்பது என்பனவாகும். மேலெழுந்தவாரியாக நோக்கும் போது தற்காலத்தில் இக்குறியீடுகள் இரண்டு முக்கிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டாலும், குறியீடுகளிடையே காணப்படும் பொதுப்பட்ட ஒற்றுமை இவற்றைப் பழைய பயன் பாட்டின் எச்சங்கள் எனக் கருத இடமளிக்கிறது. அவ்வாறு கருதுவதற்கு வரலாற்று ரீதியாக பல்வேறு வடிவங்களில் அமைந்த பல குறியீடுகள் பயன்பாட்டிலிருந்தும் சலவைத் தொழிலாளர் அனைவரும் குறிப்பிட்ட சில வடிவங்களில் அமைந்த குறியீடுகளை மட்டும் தமது பயன்பாட்டிற்குரிய குறியீடுகளாக கருதுவது சலவைத் தொழிலாளர் சமூகத்திடையே மரபு ரீதியான பண்பாட்டு உறவுநிலை இருந்ததைக் காட்டுகிறது. தற்காலத்தில் சலவைத்தொழிலை மேற்கொள்ளும் சமூகத்தினர் சிலர் பிறருக்குரிய ஆடைகளை இலகுவாக இனங்காண அவர்களுக்குரிய முதல் எழுத்துக்களை தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எழுதிவிட்டு அதன் அருகே குறியீடுகளைப் பயன்படுத்தும் முறை காணப்படுகிறது. இதற்கான காரணத்தை ஆராய்ந்த போது ஒரு சலவைத் தொழிலாளர் குடும்பம் பரம்பரை பரம்பரையாக இன்னொரு குடும்பத்தின் ஆடைகளைச் சலவை செய்து வரும் போது அக்குடும்பத்திற்குரிய ஆடைகளுக்கு தமது மூதாதையினர் என்ன குறியீடுகளைப் பயன்படுத்தினரோ அக் குறியீடுகளை ஆங்கிலம் அல்லது தமிழ் எழுத்துக்களுடன் பயன்படுத்துவது தமது மூதாதையினரையும், அவர்களிடம் சலவை செய்த குடும்பத்தினரையும் நினைவுபடுத்துவதாகக் கருதுகின்றனர். இதன்மூலம் குறியீடுகளின் பயன்பாடு ஆடைகளின் உரிமையாளரை இனங்காண்பதற்கு அப்பால் அக் குறியீடுகளை குறிப்பிட்ட ஒரு குடும்பத்தின் அடையாளச்சின்னமாக கருதும் நிலை தென்படுகிறது எனலாம். ஆயினும் அத்தகைய குறியீடுகளில் சமூக, பிரதேச வேறுபாடுகள் காட்டப்பட்டதாகத் தெரியவில்லை.


தமிழ் மக்களின் புனிதச் சின்னமாகக் கருதப்படும் மாடுகளில் பல்வேறு வடிவங்களில் அமைந்த பல குறியீடுகள் இடப்படுவதினைக் காணலாம். அக்குறியீடுகள் மாடுகளின் வயிற்றுப்பகுதியிலும், பின்பக்க காற் பகுதியிலுமே பெரும்பாலும் காணப்படுகின்றன. இவை யாழ்ப்பாணத்தைக் காட்டிலும் வன்னியிலும், மட்டக்களப்பிலும் உள்ள மாடுகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. எமது ஆய்வில் வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் பயன்பாட்டிலுள்ள இருபத்திநான்கு குறியீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இக்குறியீடுகள் மூன்று நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது. ஒன்று பிரதேச ரீதியாக மாடுகளை இனங்காண்பது. இரண்டு மாட்டின் உரிமையாளரை அவருக்குரிய சமூகக் குறியீடுகளால் இனங்காண்பது. மூன்றாவது மாட்டின் தனிப்பட்ட உரிமையாளரை அவரது குடும்பக் குறியீடுகளைக்கொண்டு இனங்காண்பது. பிரதேச ரீதியாக இனங்காண்பதில் நானாட்டான் *(படம். 26.2 இல. 1-4)*, வன்னி *(படம். 26.2, இல. 5-7)*, வங்காலை *(படம். 26.2, இல. 8)*, முருங்கன் *(படம் 26.2, இல.9)*, எருக்கலம்பிட்டி *(படம் 26.2, இல. 10)*, பலாலி *(படம் 26.2, இல. 11)*, வாதரத்தை *(படம். 26. 2, இல. 12)* ஆகிய இடங்களுக்குரிய மாடுகளின் குறியீடுகள் வடிவ அமைப்பில்வேறுபட்டுக்காணப்படுகின்றன. இக்குறியீடுகளைக் கொண்டே இம்மாடுகள் எப்பிரதேசத்திற்குரியதென்பது அடையாளம் காணப்படுகின்றன. சமூகரீதியாக சலவைத்தொழிலாளர் *(படம் 26. 3. இல. 1)*, பள்ளர் *(படம் 26.3. இல. 3)*, வேளாளர் *(படம் 26.3, இல.3)*, கோவியர் *(படம் 26.3, இல. 4)*, அம்பட்டர் *(படம் 26.3, இல. 5)*, கொல்லர் *(படம் 26. 3, இல. 6*, நளவர் *(படம் 26 3, இல.7)* ஆகியோருக்குரிய மாடுகள் அச்சமூகத்திற்குரிய குறியீடுகளால் இனங்காணப்படுகின்றன. அக்குறியீடுகள் பெரும்பாலும் அச்சமூகம் சார்ந்த தொழிலை நினைவுபடுத்தும் சின்னங்களாகவே இருக்கின்றன. சில குறியீடுகள் மதம் சார்ந்தவையாக உள்ளன. உதாரணமாக மன்னாரில் உள்ள முஸ்லீம்களது மாடுகளில் முஸ்லீம்கள் அணியும் தொப்பி போன்ற குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன *(படம் 26. 3, இல. 11)*. அத்துடன் பிறை *(படம் 26.3, இல.8)*, குத்துவிளக்கு*(படம் 26.3, இல.9)*, சுவஸ்திகா *(படம் 26.3, இல.12)*போன்ற குறியீடுகள் மாடு வளர்ப்போரின் மத நம்பிக்கைகளைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. ஆனால் மூன்று கோடுகளாக உள்ள குறியீடுகள் *(படம் 26.3. இல. 10)* பெரும்பாலும் பிரதேச, சமூக வேறு

பாடின்றி எல்லா மாடுகளிலும் காணப்படுகின் றன. குடும்ப ரீதியாலான குறியீடுகள் மாடுகளுக்கு இடப்படும் முறை தற்காலத்தில் குறைவடைந்து காணப்படுகிறது. இதற்குக் காரணம் குறியீடு களுக்குப் பதிலாக ஒரு குடும்பத்தின் முதல் எழுத்தை தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எழுது வதேயாகும். ஆயினும் இவ்வெழுத்துக்களோடு பிரதேச, சமூகக் குறியீடுகள் இடப்படுகின்றன. ஆனால் வன்னியில் சில இடங்களில் இன்றும் குடும்பக் குறியீடு பயன்படுத்தும் முறை காணப் படுகிறது.

சலவைத்தொழிலாளர்கள் ஆடைகளில் பயன்படுத்தும் குறியீடுகளையும், மாடுகளில் இடப்படும் குறியீடுகளையும் நோக்கும்போது இவற்றுள் பெரும்பாலானவை பெருங்கற்கால மக்கள் மட்பாண்டங்களில் பயன்படுத்திய குறியீடு கள் நினைவுக்கு வருகின்றன. இதனால் பெருங் கற்காலத்தில் வழக்கத்திலிருந்த குறியீடுகள் எது வித மாற்றமின்றி தொடர்ச்சியாக பிற்காலத்தில் புழக்கத்திற்கு வந்ததெனக் கூறிவிடமுடியாது. அதேவேளை தற்காலத்தில் பயன்படுத்தப்படும் குறியீடுகள் எதுவித வரலாற்றுப் பின்னணியு மின்றிப் பிற்காலத்தில் தற்செயலாகத் தோன் றியதென வாதிடவும் முடியாது. தற்காலத்தில் இலகுவாக எழுதக்கூடிய ஆங்கில, தமிழ் எழுத் துக்கள் இருந்தும் அவ்வெழுத்துக்களோடு குறியீடு களையும் பயன்படுத்துவது பழைய பண்பாட்டின் எச்சங்கள் இன்னும் மறையவில்லையென்பதையே எமக்கு நினைவுபடுத்துகின்றன. ஆயினும் குறி யீடுகளால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் காலஓட்டத்தில் மாற்றமடைந்திருக்குமெனக் கருத இடமுண்டு.


பெருங்கற்கால மக்களின் சமய வாழ்வுச் சின்னங்களாக சுவஸ்திகா, இருதலை, முத்தலைச் சூலங்கள், வேல் என்பன விளங்குகின்றன. இவை உருவங்களாக வைத்து வழிபடப்பட்டதை விட குறியீடுகளாக வைத்து வழிபடப்பட்டதற்கே அதிகசான்றுகள் தமிழ்நாட்டில் ஆதிச்ச நல்லூரி லும், இலங்கையில் பொம்பரிப்பு, கந்தரோடை, ஆனைக்கோட்டை, பூநகரி ஆகிய இடங்களி லும கிடைத்துள்ளன. சங்ககாலத்தில் தெய்வங்கள் குறியீடுகளாகச் சித்தரிக்கப்பட்ட தற்கு பழந்தமிழ் இலக்கியத்தில் ஆதாரங்கள் உண்டு. தற்காலத்தில் கூட வேல், இருதலை முத்தலைச் சூலங்கள் உருவங்களாக மட்டுமன்றி ஓவியமாகவும், குறியீடுகளாகவும் வைத்து வழி படும்மரபு காணப்படுகிறது.

பெருங்கற்காலப் பண்பாட்டில் இறந்த ஒரு வரது உடலைப் பானையில் (தாழி) போட்டு அடக்கம் செய்யும்முறை காணப்பட்டது. இம் முறையே தென்தமிழ் நாட்டிலும், இலங்கையில் பொம்பரிப்பு, ஆனைக்கோட்டை, பூநகரி, மாதோட்டம்ஆகியஇடங்களிலும்பின்பற்றப்பட்ட தாகத் தெரிகிறது. தற்காலத்தில் பூநகரியிலும் நெடுந்தீவிலும் இறந்த ஒருவரை அல்லது இறக் கும் வயது அடைந்த ஒருவரை பானையில் தூங்குகிறார், உறியில் தொங்குகிறார் எனக் கூறும் மரபு காணப்படுகிறது. இம்மரபு பெருங் கற்காலப் பண்பாட்டை நினைவுபடுத்துவதாக உள்ளது. பெருங்கற்கால மக்கள் இறந்த ஒருவ ரது உடலின் தசைகள் நீங்கிய பின்னர் அவரது எலும்புகளை பானையில் போட்டு அடக்கம் செய்யும் முறையைக் கைக்கொண்டனர்.



படம் - 27. மட்பாண்ட உள்விளிம்பில் காணப்படும் 2000 ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமி எழுத்துக்கள்.

தற்காலத்தில்கூட இறந்த ஒருவரிற்கு ஈமக் கிரியை நடந்து 3 ஆம் நாள் தீயிலே எரிந்து எஞ்சிய அவரது எலும்புகளையும், சாம்பலையும் பானையில் போட்டு மூடி வைக்கும் மரபு காணப்படுகிறது. மேலும் அவரது அந்திமக் கிரியையன்றி இறந்தவரை நினைவுபடுத்தும் உருவம் ஒன்றை அமைத்து அவ் உருவத்தை சட்டியிலே வைத்து கிரியை செய்தபின்னர் அவர் உருவத்தையும், அவரது எலும்புக்கூடுகளையும், சாம்பலையும கடலிலே போடும் வழக்கம் நிலவுகிறது. இக்கிரியை முறை பெருங்கற்காலப் பண்பாட்டு மரபில் பின்பற்றப்பட்ட ஈமச்சின்ன முறையோடு தொடர்புபடுத்தி ஆராயத்தக்கன. பெருங்கற்கால பண்பாட்டில் அம் மக்களது குடியிருப்பிற்கு அப்பால் அவர்கட்குரிய ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன. அத்தகைய ஈமச்சின்னங்கள் காணப்படும் இடங்களில் இருந்தே புராதன நாணயங்கள் பல இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஈமச்சின்னங்கள் உள்ள இடங்களில் நாணயங்களின் பயன்பாடு காணப்பட்டமைக்குத் தற்காலத்தில் சுடுகாட்டில் வைத்து வாய்க்கரிசியாக நாணயங்களைப் போடுவது போல் பெருங்கற்காலத்திலும் அம்முறை இருந்திருக்கலாம் என எண்ணத் தூண்டுகிறது.




படம் - 28. மட்பாண்ட வெளி விளிம்பில் காணப்படும் சித்திரங்கள்.

பெருங்கற்கால மக்களின் கலையுணர்வையும், தொழில்நுட்ப அறிவையும் வெளிப்படுத்தி நிற்கும் சான்றுகளாக அவர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள் விளங்குகின்றன. அதையொத்த மட்பாண்டங்கள் அப்படியே பிற்காலத்திலும் பின்பற்றப்பட்டதாக நிச்சயப்படுத்திக் கூறமுடியாது ஆனால் அம்மரபு முறிவடையாது சில சில மாற்றங்களோடு இன்றுவரை பயன்படுத்தப்படுவதனைக் காணலாம். இதற்கு உதாரணமாக மண்ணித்தலையில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டமொன்றை இங்கு எடுத்துக்காட்ட முடியும். இம் மட்பாண்டத்தின் விளிம்பின் உட்பகுதியில் சில பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவ் எழுத்துக்கள் கி.மு.3ஆம்,2ஆம் நூற்றாண்டுக்குரியவை என்பதை எழுத்தமைதியில் இருந்து நிச்சயப்படுத்த முடிகிறது (படம் 27). இம் மட்பாண்டத்தின் வெளிப்பாகத்தில் விளிம்பிற்குக் கீழே பானையைச் சுற்றி மூன்று கோடுகளும், அதற்குக் கீழே 'V' போன்ற வடிவில் அமைந்த சித்திரமும் காணப்படுகிறது(படம் 28). இக்கோடுகளையும், சித்திரங்களையும் பார்க்கும் ஒருவர் இம்மட்பாண்டம் தற்காலத்திற்குரியதெனக் கூறமுற்படலாம். ஆனால் மட்பாண்டத்தின் உட்பாகத்தில் பிராமி எழுத்துக்கள் காணப்படுவதால் இதன் தோற்றகாலம் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென நிச்சயப்படுத்த முடிகிறது. ஆயினும் மட்பாண்டத்தில் வெளிப்புறத்தில் உள்ள மூன்று கோடுகளும், 'V' போன்ற வடிவில் அமைந்த சித்திரங்களும் அதிக மாற்றமின்றி தற்கால மட்பாண்டங்களிலும் பயன்படுத்தப்படுவதனைக் காணலாம். உதாரணமாக கோப்பாய் வடக்கில் வசிக்கும் சின்னத்துரை என்பவர் தற்காலத்தில் பயன்படுத்திய மட்குடம் ஒன்றில் மேற்குறிப்பிட்ட கோடுகளும், சித்திரங்களும் அப்படியே பின்பற்றப்பட்டிருப்பதனை அவதானிக்க முடிந்தது (படம் 29).

மேற்கூறப்பட்ட சான்றுகள் பெருங்கற்கால நாகரிகத்திற்கும் பிற்காலத் தமிழர் பண்பாட்டிற்கும் இடையிலான தொடர்பு ஆராயப்பட

வேண்டும் என்பதைச் சுட்டிநிற்கின்றன. இத்தகைய ஆய்வில் வரலாற்று மொழியியல், நாட்டார் வழக்கியல் போன்ற துறைகளினூடாகப் பெறக்கூடிய அறிவினைத் தொல்லியற் சான்றுகளுடன் இணைத்து நோக்கும்பொழுது தமிழர் வரலாற்றின் புதிய பரிமாணங்கள் பல தெளிவாகலாம்.

அக்குறியீடுகளை ஆராய்ந்த லால் என்ற அறிஞர் அவற்றிற் சிலவற்றைச் சிந்துவெளி நாகரிகக் காலக் குறியீடுகள்வரை தொடர்புபடுத்திக் காட்டியுள்ளார்.[31] அக்குறியீடுகளில் இருந்தே பிற்காலப் பிராமி எழுத்துக்கள் தோன்றின வென்பது யஸ்தாணியின் கருத்தாகும்.[32] இக்கருத்து அண்மைக்காலங்களில் மீண்டும் வலிமை



படம்-29. தற்காலம் மட்குடம் ஒன்றில் காணப்படும் சித்திரங்கள்

பெற்றுள்ளது.[33] ஆனால் அக்குறியீடுகள் பிராமி எழுத்துக்கள் தோன்றியதின் பின்னர் அரிதாகவே பயன்படுத்தப்பெற்றதற்கு ஆதாரங்கள் உள்ளன. இதனாலே பூநகரியிலே கிடைத்த குறியீடுகளைத் தொன்மையானவை எனக்கூறலாம். மேலும் இங்கு கிடைத்த மட்பாண்டங்களிலே பல பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இத்தகைய மட்பாண்டங்கள் மண்ணித்தலை, வெட்டுக்காடு போன்ற இடங்களில் மட்டுமன்றி இவற்றிற்கு அப்பாலுள்ள பரமன்கிராயிலும் கிடைத்துள்ளன. இவ்வெழுத்துக்கள் சிலவற்றின் எழுத்தமைதி கொண்டு அவை கி.மு.3ஆம், 2ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதிக்குரியவை எனக்கணிப்பிடமுடிகிறது.[34] இக்காலக் கணிப்பை எமது ஆய்விலே கிடைத்த சாசனம் பற்றி ஆராய்ந்த ஐராவதம் மகாதேவனும் ஏற்றுள்ளார்.[35] பொதுவாக மட்பாண்டப் பிராமி வரிவடிவங்கள் பெருங்கற்காலப்பண்பாட்

## தோற்றக்காலம்

பூநகரியில் இதுவரை கிடைத்த பெருங்கற்காலச் சின்னங்கள் விஞ்ஞான பூர்வமான காலக் கணிப்பிற்கு உட்படுத்தப்பெறாத நிலையில் இப்பிராந்தியத்தில் ஏற்பட்ட திராவிட பண்பாட்டின் தோற்றக்காலத்தைத் திட்டவட்டமாகக் கூற முடியாதிருக்கின்றது. ஆயினும் காலம் தொடர்பான சான்றுகள் சில இங்கு கிடைத்திருப்பதனால் அவற்றின் துணைகொண்டு இப்பண்பாடு நிலவிய காலத்தையாவது ஓரளவிற்குக் கணிப்பிடக்கூடியதாக இருக்கிறது. இங்கு கிடைத்த மட்பாண்டங்களிலே பல குறியீடுகள் காணப்படுகின்றன. இவை கிராபிடிக் குறியீடுகள் (graffiti marks) என அழைக்கப்படும். இவற்றையொத்த குறியீடுகள் தென்னிந்தியப் பெருங்கற்கால மட்பாண்டங்களிலும் காணப்படுகின்றன.


டின் முதிர்ச்சிநிலையிலேயே ஏற்பட்டனஎன அறிஞர் கொள்வர். அப்படியாயின் இப்பிராமி வரிவடிவங்கள் தோற்றம் பெறுவதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பாவது இப்பண்பாடு இங்கு நிலவியதெனக் கூறலாம். இதன் மூலம் பூநகரிப் பிராந்தியப் பண்பாட்டின் மூலவேரான திராவிடப் பெருங்கற்காலப்பண்பாடு இற்றைக்கு 2300 வருடங்களுக்கு முன் நிலவியதென்பதை நிச்சயப் படுத்திக் கூறமுடியும். தமிழ்நாட்டின் தொடக்க வாயிலில் ஒன்றாகப் பூநகரியின் அமைவிடம் இருப்பதால் அங்கிருந்து ஏற்பட்ட பெருங் கற்காலப் பண்பாட்டின் முதல்அலைகளில் ஒன்று இப்பிராந்தியத்திலும் ஏற்பட்டதெனக் கூறமுடியும். இதனால் இலங்கையின் ஏனைய பிராந்தியங்களிற்குக் கூட இப்பிராந்தியத்திலிருந்தும் இப்பண்பாடு பரவியதெனக் கூறலாம்.

## வரலாற்றுக் காலம்

வரலாற்றுக் காலம் என்பது எழுத்தாதாரங்கள் பயன்படுத்தப்பட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகும். இந்தியாவைப்போல இலங்கையிலும் பயன்படுத்தப் பட்ட காலத்தால் முந்திய பிராமி வரிவடிவங்கள் கி. மு. 3ஆம் நூற்றாண்டுக்குரியனவாகும். இதனால் இக்காலமே இலங்கையின் வரலாற்றுக் காலமாகக்கொள்ளப்படுகின்றது. பூநகரியில் இவ்வரிவடிவங்கள் பெருங்கற்கால மட்பாண்டங்களிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை வரலாற்று உதயகாலத்தின் தொடர்ச்சியாக இக்காலம் தோன்றியதற்குச் சான்று பகர்கின்றன. இவ்வரிவடிவங்களின் முக்கியத்துவம்பற்றி ஆராய்வதற்குமுன் இலங்கையில் இவற்றின் அறிமுகம், பயன்பாடு பற்றிச் சிறிது நோக்குவது அவசியம் ஆகும்.

இந்தியாவில் இப்பிராமி வரிவடிவங்கள் தோற்றிய காலத்தையிட்டுச் சாசனவியலாளரிடையே பலதரப்பட்ட கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. ஆயினும் அங்கும் கி. மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்தே அசோகன் ஆட்சியுடன் இப்பிராமி வரிவடிவங்கள் பரவலாகப் பயன் படுத்தப்பெற்றதற்கு ஆதாரங்கள் உள்ளன. அசோகன் ஆட்சியிலே தமிழ்நாடு தவிர்ந்த இந்தியாவின் பிறபாகங்களிலே பிராகிருத மொழியிலே சாசனங்கள் எழுதுவதற்கு இவ்வரிவடிவங்களே பயன்படுத்தப்பெற்றன. இதனால் இவை அசோக பிராமி எனவும், வட பிராமி எனவும் சிறப்புப் பெயர் பெற்றன. சமகாலத்தில் இவற்றையொத்த பிராமிவரிவடிவங்கள் தமிழ் நாட்டிலே பயன்படுத்தப் பெற்றாலும் அங்கு தமிழ்மொழிக்கே சிறப்பான 'இ', 'ம', 'ற', 'ன', 'ள' 'ழ' போன்ற எழுத்துக்கள் (இவை அசோக பிராமியில் இல்லை) பயன்படுத்தப்பட்டதோடு சாசனங்கள் தமிழ் மொழியில் எழுதப்பட்டன. இதனால் இவை திராவிடி, தமிழி அல்லது தமிழ்ப் பிராமி எனப்பட்டன.[36]

இலங்கை பாரம்பரியமாக இந்தியப் பண்பாட்டின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்ததினால் அங்கு ஏற்பட்ட எழுத்துக்களின் தோற்றம் சம காலத்தில் இங்கும் பரவியது எனலாம். இலங்கையில் இப்பிராமி எழுத்துக்கள் கி. மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 3ஆம் நூற்றாண்டுவரை பயன்படுத்தப்பட்டதற்கு ஆதாரங்கள் உள்ளன.[37] இலங்கையில் இதுவரை 1500க்கு மேலான பிராமிச்சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுட் பெரும்பாலானவை புராதன இராசதானி அமைந்த அனுராதபுரத்திலும் அதைச்சுற்றியுள்ள ஏனைய இடங்களிலும் கிடைத்துள்ளன. தமிழ்ப் பிராந்தியங்களில் ஒன்றான யாழ்ப்பாணத்திலே கந்தரோடை (மட்பாண்டச் சாசனம்) வல்லிபுரம் (பொற்சாசனம்), ஆனைக்கோட்டை (செப்புச் சாசன முத்திரை)




படம்-30. உடைந்த மட்பாண்ட ஓடுகளில் காணப்படும் பிராமி எழுத்துக்கள்.

ஆகிய இடங்களிலிருந்து மூன்று சாசனங்கள் மட்டுமே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[38]

பொதுவாக இலங்கையிலே கிடைத்த பெரும்பாலான சாசனங்கள் பிராகிருத மொழியிலே பௌத்தமதம் சார்ந்த செய்திகளைக் கூறுபவையாக உள்ளன. இதனால் இச் சாசனங்கள் வட இந்தியத் தொடர்பாலே பரவியவை எனவும், சிங்களமக்களின் மூதாதையர் அங்கிருந்து வந்ததற்கு இவை சான்று எனவும், பரணவிதான போன்றோர் குறிப்பிட்டனர்.[39] ஆனால் இச் சாசனங்களிலே பல தமிழ்ப் பெயர்களும் தமிழ் நாட்டுப் பிராமிவரிவடிவங்களின் செல்வாக்கும் இடம்பெற்றிருப்பதை இலங்கை, தமிழ் நாட்டு சாசனவியலாளர் பலரும் பல சந்தர்ப்பங்களிலே சுட்டிக் காட்டியுள்ளனர். அண்மையில் மிகிந்தலை, வெசகிரி போன்ற இடங்களிலே கிடைத்த பிராமிச்சாசனங்கள்பற்றி ஆராய்ந்த ஆரிய அபயசிங்க அவ்விடங்களிலுள்ள வரிவடிவங்கள் பௌத்த மதத்துடன் வட பிராமி எழுத்துக்கள் இங்கு பரவுமுன் தமிழ்நாட்டிலிருந்து ஏற்பட்ட சமணசமயச் செல்வாக்காலே தோன்றிய திராவிட எழுத்துக்கள் எனக்குறிப்பிட்டார்.[40] கருணாரத்னா[41], பெர்னாண்டோ[42] போன்றோர் தமிழ் நாடு, இலங்கை ஆகிய பிராந்தியங்களுக்கிடையே பிராமிஎழுத்துக்களில் உள்ள பொது ஒற்றுமையைச் சுட்டிக்காட்டினர். இதில் இருந்து இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகாலம், வரலாற்று உதயகாலம் போல் வரலாற்றுக்காலமும் தென்னிந்தியத் தொடர்பாலே சிறப்பாகத் தமிழ் நாட்டுத் தொடர்பாலே தோன்றியதென்பது தெளிவாகின்றது.

பௌத்தமதத்துடன் பரவிய பாளி, பிராகிருதச் சொற்கள் இங்கிருந்த திராவிடமொழியுடன் கலந்தமை பிற்காலத்திலே சிங்கள மொழி தோற்றம் பெறக்காரணமானது.[43] இதன் ஆரம்ப நிலையினை எடுத்துக்காட்டுவனவாகவே கி. பி. 3ஆம் நூற்றாண்டுவரையான பிராமிச் சாசனங்கள் அமைகின்றன. இவற்றிலேகூட பண்பாட்டால் வேறுபட்டு வாழ்ந்த தமிழ் மக்களின் மொழியும் வரிவடிவமும் செல்வாக்குச்செலுத்தியதற்கு ஆதாரங்கள் உள்ளன. சிங்கள வரிவடிவத்தின் வளர்ச்சிபற்றி ஆராய்ந்தபெர்னாண்டோ ஆரம்பகாலப் பௌத்தக்குகை அமைப்புக்களும், குகையிலுள்ள ஓரிரு வரி கொண்ட சாசன அமைப்புக்களும் பாண்டிநாட்டுச் சாசனங்கள் என மயங்கும் அளவிற்கு அதிக ஒற்றுமை உடையன எனக் குறிப்பிட்டார்.[44] அத்துடன் இச்சாசனங்களில்வரும் 'அ', 'இ', 'ம', 'ய', 'ப', 'த', 'க', 'உ', 'எ' ஆகிய ஒலிப்பெறுமான எழுத்துக்கள் அசோகப் பிராமியிலே காணப்பட்டாலும் வடிவ அமைப்பிலே தமிழ்நாட்டுப் பிராமி எழுத்துக்களையே ஒத்துள்ளன என்பது இவர் கருத்தாகும். இவ்வொற்றுமை தமிழ்ப் பிராமிக்கேயுரிய 'ஈ', 'ம', 'ள' போன்ற எழுத்துக்கள் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களிலே பரவலாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதன் மூலம் மேலும் தெளிவாகிறது.[45]

இத்தகைய ஒரு பின்னணியிலேதான் பூநகரியில் உள்ள மண்ணித்தலை, வெட்டுக்காடு, பரமன்கிராய் போன்ற இடங்களிலே கிடைத்த மட்பாண்டப் பிராமி வரிவடிவங்களின் முக்கியத்துவத்தினை ஆராயவேண்டியுள்ளது. இச்சாசனங்கள் உடைந்தநிலையில் ஓரிரு வரிவடிவங்களை மட்டும் கொண்டிருந்தாலும் தமிழ் மொழியினதும் தமிழ் வரிவடித்தினதும் தொன்மைபற்றி ஆராய்வதில் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கொள்ளத்தக்கன. இவை தமிழ்நாடு அரிக்கன் மேட்டு மட்பாண்டச் சாசனக் கண்டுபிடிப்




படம் - 31. மட்பாண்டத்தில் காணப்படும் 'ழ' என்ற தமிழ்ப் பிராமி எழுத்து

புக்களை நினைவு படுத்துபவையாக உள்ளன.[46] இவ்வரிவடிவங்கள் மட்பாண்டத்தின் வெளிப் புறங்களிலும், விளிம்புகளிலும், உட்புறங்களிலும் எழுதப்பட்டுள்ளன (படம்-30) இங்கு கிடைத்த பிராமி எழுத்துக்கள் பல வடிவ அமைப்பிலே தமிழ்நாட்டுப் பிராமி எழுத்துக்களை ஒத்திருப்ப துடன் இலங்கையிலே இதுவரை கண்டுபிடிக்கப் படாத, தமிழ்நாட்டுக்கு மட்டும் உரிய சில எழுத்துக்களையும்கொண்டுள்ளன. இலங்கையிலே தமிழ்நாட்டிற்குரிய 'ஈ', 'ம', 'ள' போன்ற எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் ஏனைய தமிழ் எழுத்துக்களான 'ற', 'ன', 'ம' போன்றவை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிய வில்லை. கருணாரத்தின பெரிய புளியங்குளக் கல்வெட்டிலே தமிழ்ப் பிராமிக்குரிய 'ழ' இருப்ப தாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.[47] இந்த வரி வடி வத்தை 'ழ' வாகக் கொள்வதிலும் பார்க்க 'ட' வரிவடிவமாகக் கொள்வதே பொருத்தமாகும். 'ழ'வாகக்கொண்டாலும் இந்த வடிவத்திலேதமிழ் நாட்டுப் பிராமிக் கல்வெட்டில் 'ழ' காணப்பட வில்லை. ஆனால் மண்ணித்தலையிலே கிடைத்த 'ழ' அப்படியே தமிழ்ப்பிராமி வரிவடிவத்தை ஒத்துக்காணப்படுகின்றது (படம்-31). இங்கு கிடைத்த 'ன' என்ற வரிவடிம் இலங்கைப் பிரா மிக் கல்வெட்டுக்களில் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை. இவற்றைத் தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்களிலே செறிவாகக் காணலாம். பூந கரியில் மக்களின் சாதாரண பாவனைப் பொருட் களான மட்பாண்டங்களில் இவ்வரிவடிவங்கள் காணப்படுவது இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன் எழுத்து வாசனையுடைய தமிழ் மக்கள் வாழ்ந்ததையே எடுத்துக்காட்டுகின்றது. இவ் வரி வடிவங்கள் சங்ககாலத்தைப்போலத் திராவிடப் பெருங்கற்காலப் பண்பாட்டின் வழிவந்த மக் களே தமிழ்மொழியைப் பேசினர் என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்த பூநகரியில் கிடைத்த மட் பாண்டச் சாசனங்களை எடுத்து ஆராயலாம்.

## தமிழ்ச் சாசனங்கள்

பூநகரிப் பிராந்தியத்திலே கிடைத்த பல சாசனங்கள் உடைந்த நிலையிலே காணப்பட் டாலும், அவற்றுட் சில வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்தவையாகக் கொள்ளத்தக்கன. பர மன்கிராயிலே கிடைத்த முதலாவது சாசனம் உடைந்த நிலையில் இரண்டு எழுத்துக்களை மட்டும் கொண்டுள்ளது (படம்-32). இதன் வலப் பக்கத்தில் வேறு சில எழுத்துக்கள் இருந்திருக் கக் கூடிய ஆதாரங்கள் இருப்பதனால் இதை யொரு முழுச்சாசனமாகக் கொண்டு அதன் மொழியையோ, பொருளையோ உணர முடிய



படம்-32. லோமா என்ற வாசகம் கொண்ட மட்பாண்ட பிராமிச் சாசனம்


வில்லை. இதன் முதல் எழுத்திற்கு 'லோ' என்ற ஒலிப்பெறுமானமும், இரண்டாவது எழுத்திற்கு 'மா' என்ற ஒலிப்பெறுமானமும் கொடுத்துத் தற்போது 'லோமா' என வாசிக்க முடியும். இச் சாசனம் இலங்கையில் இதுவரை கிடைத்த வற் றுள் ஒரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்த தாகக் கருத இடமுண்டு. பொதுவாக மட்பாண் டங்களில் எழுதப்பட்ட வரிவடிங்கள் மட்பாண்ட மேறபரப்பை விடச்சற்றுப் பள்ளமாக உள்ளன. ஆனால் பரமன்கிராயில் கிடைத்த சாசனம் இதற்கு மாறாக மட்பாண்ட மேற்பரப்பை விட எழுத்துக்கள் சற்று மேலே தெரியுமாறு அமைந் துள்ளது. இவ்வாறு எழுதும் பண்பு பிற்காலச் சாசனங்களிலே காணப்பட்டாலும் மட்பாண்ட பிராமிச்சாசனங்களில் எழுதப்பட்டதற்கு ஏனைய இடங்களில் ஆதாரம் காணப்பட

வில்லை. இதனால் கி. மு. 3ஆம் நூற்றாண்டுக்குரிய இச்சாசனம் தனித்துவமான முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கொள்ளத்தக்கது

## ஈழம்

மண்ணித்தலையிலே கிடைத்த இரண்டு மட்பாண்டச் சாசனங்கள் இப்பிராந்திய வரலாற்றாய்வில் மட்டுமன்றி ஈழத்தமிழர் வரலாறு பற்றிய ஆய்விலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தெரிகிறது. இவ்விருசாசனங்களும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திற்குரியவை என்பதை இவற்றின் எழுத்தமைதி கொண்டு கணிப்பிட முடிகிறது. இவற்றுள் இரண்டு எழுத்துக்களை உடைய முதலாவது சாசனம் உடைந்த நிலையிலே காணப்பட்டாலும் இரு எழுத்துக்களுக்கும் இடையிலான இடைவெளியை நோக்கும் போது வேறு எழுத்துக்கள் இம்மட்பாண்டத்தில் இருந்திருக்கலாம் போலத் தெரியவில்லை. இதனால் இதையொரு முழுச்சானமாகக் கொள்ள முடிகிறது (படம்-33). இதன் முதலாவது எழுத்திற்கு 'ஈ' என்ற ஒலிப்பெறுமானமும் இரண்டாவது எழுத்திற்கு 'ல' என்ற ஒலிப்பெறுமானமும் கொடுத்து 'ஈல' அல்லது 'ஈலெ' என வாசிக்கலாம்.48

இங்கு கிடைத்த இரண்டாவது சாசனத்தில் மூன்று எழுத்துக்கள் காணப்படுகின்றன. இதன் முதல் எழுத்திற்கு 'ஈ' என்ற ஒலிப்பெறுமானமும் என்ற இரண்டாவது எழுத்திற்கு 'ழ', ஒலிப்பெறுமானமும் கொடுத்து ஈழ என வாசிக்கலாம்போல் தெரிகின்றது. மூன்றாவது எழுத்து சிறு கோடு ஒன்றை மட்டும் கொண்டிருப்பதால் அவ்வெழுத்து என்ன என்பதைக் கூறமுடியாதிருக்கிறது, இவ்விரு சாசனங்களில் வரும் பெயர்களை நோக்கும்போது இவை இலங்கையின் புராதன பெயரான ஈழத்தையே குறிப்பதாகக் கொள்ளலாம். அக்கால உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத்திலே பொருட்களின் கொள்கலன்களாக மட்பாண்டங்கள் பயன்படுத்தப்பெற்றதால் அப்பொருட்களுக்குரிய நாடுகளின் பெயரைக் குறிக்கக் கொள்கலன்களில் நாடுகளின் பெயர் எழுதப்பட்டிருக்க வேண்டும்,



படம்-33. ஈலா என்ற வாசகம் கொண்ட மட்பாண்ட பிராமிச் சாசனம்:

இதையே இங்கு கிடைத்த இரு சாசனங்களும் உறுதிப்படுத்துவதாகத் தெரிகிறது.

ஆதிகாலத்தில் இலங்கை ஈழம் என அழைகப்பட்டதற்கான சான்றுகள் தமிழ்நாடு திருப்பெருங்குன்றம் பிராமிக் கல்வெட்டிலும்,49 சங்க இலக்கியத்திலும் 50 காணப்படுகின்றன. இந்த ஈழம் சில இடங்களில் முழு இலங்கையையும் பல சந்தர்ப்பங்களில் இலங்கையின் ஒரு பாகத்தையும் குறித்து நின்றது. ஒன்பதாம் நூற்றாண்டுக்குரிய உதயணன் பெருங்கதையிலும், பிற்பட்ட நன்னூல் மயிலைநாதர் உரையிலும் இந்நாடு ஈழம், சிங்களம், இலங்கை என வேறுபடுத்திக் கூறப்பட்டுள்ளது.51 அதாவது ஒரே வரலாற்று மூலத்தில் ஓரினத்தின் பெயராலே சிங்களநாடு கூறப்பட்டு அதே வரலாற்று மூலத்தில் ஈழம் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. பிற்பட்ட பாண்டிய கல்வெட்டில் இந்த ஈழம் வட இலங்கையையும்.52 விஜயநகரக் கல்வெட்டில் யாழ்ப்பாணத்தையும் குறிக்கப் பயன்படுத்தப் பெற்றுள்ளது.53 ஆனால் தமிழ்நாட்டு வரலாற்று மூலங்களில் மட்டும் வரும் இந்த ஈழம் பற்றிய குறிப்பு பிற இலங்கை வரலாற்று மூலங்கள் எவற்றிலுமே காணப்படவில்லை. இலங்கையைக் குறிக்க வெளிநாட்டு இலக்கியங்களில் வரும்

மறுபெயர்களான லங்கா, தக்பன்னி இரத்தின தீபம் போன்ற பெயர்களை உறுதிப்படுத்தும் பாளி, சிங்கள இலக்கியங்கள் தமிழ்நாட்டு வர



படம்-34. வேள் என்றவாசகம் கொண்ட மட்பாண்ட பிராமிச் சாசனம்

லாற்று மூலங்களில் வரும் ஈழம் பற்றிக் கூறாதிருப்பது வியப்பாக உள்ளது. இது பண்பாட்டால் வேறு பிராந்தியமாக இருந்ததா என எண்ணத் தோன்றுகிறது. வரலாற்று அறிஞர்கள் ஈழம் என்ற சொல்லுக்கு 'கள்' என்ற பொருள் இருப்பதனால் இது பனைவளம் நிரம்பிய வட இலங்கையை ஆதியிலே குறித்திருக்கலாமெனக் கருதுகின்றனர். இந்நிலையிலே பூநகரியில் இது தொடர்பான சாசனங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இவ்வீழம் தொடர்பான சான்றுகள் பூநகரிப் பிராந்தியத்திலே பிற்காலத்திலே தொடர்ந்தும் இருப்பதற்கு மேலும் சில ஆதாரங்கள் உள்ளன. இன்று வேரவில் என அழைக்கப்படும் கிராமம் முன்பு ஈழவூர் எனவும், இதற்கு அருகிலே உள்ள கடற்கரைத்துறைமுகம் ஈழவன் குடா எனவும் அழைக்கப்பட்டு வந்ததை ஒலைச்சுவடிகளில் இருந்து அறிய முடிகின்றது. 16 ஆம் நூற்றாண்டிலே போர்த்துக்கேயர் இந்த ஈழவூரில் ஒரு கத்தோலிக்க தேவாலயம் கட்டியதாக போலோரினிடாரோ தமது நூலிலே குறிப்பிட்டுள்ளார்.[54] இவ்விடங்களை அண்டியே சோழரோடு தொடர்புடைய பல்வராயன்கட்டு, பாண்டியரோடு தொடர்புடைய வீரபாண்டியன்முனை ஆகிய இடங்கள் உள்ளன. இந்த ஈழவூர் பாரம்பரியமான வரலாறு கொண்ட கிராமம் என்பதை முன்பு குறிப்பிட்ட ஆதிக் குடியிருப்புக்களுக்குரிய சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இச்சான்றுகளை நோக்கும் போது தமிழ்நாட்டு வரலாற்று மூலங்களிலே வரும் ஈழம் பற்றிய நாட்டுப்பெயர் அதற்கு எதிரே உள்ள பூநகரியிலே பெருமளவு புழக்கத்திலே இருந்ததெனக் கூறலாம். தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்களில் ஈழத்தைச் சேர்ந்த வணிகர் சிலர் அங்குள்ள சமண, பௌத்தத் துறவிகளுக்குத் தானம் அளித்தது பற்றிக் கூறப்படுகின்றது.[55] அங்குள்ள கருங்காலக்குடி பிராமிச் சாசனம் ஒன்று ஏழையூரைச்சேர்ந்த அரிதன் பற்றிக் கூறுகிறது.[56] இந்த ஏழையூரை ஈழையூராகவும் சிலர் கொள்வர். ஆனால் தமிழ்நாட்டில் ஏழையூர் அல்லது ஈழையூர் என்ற பெயரில் ஓரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இதனால் இவ்வூரைப் பூநகரி ஈழவூருடனும் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு: சங்க காலப் புலவர்களில் ஒருவரான ஈழத்துப் பூதந்தேவனார் இலங்கையைச் சேர்ந்தவர் என்பது வரலாற்று அறிஞர்கள் பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். ஆனால் இவர் இலங்கையில் எவ்விடத்தைச் சேர்ந்தவர் என்பதை நிச்சயமாகக் கூறமுடியவில்லை. அண்மையில் வேலுப்பிள்ளை இவரின் சொந்த இடம் பண்டுவஸ்நுவரையாக (தென்னிலங்கை) இருக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.[57] ஆனால் பூநகரியிலே கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ்மொழி உபயோகம் இருந்ததற்கான சான்றுகளும், ஈழம் பற்றிய ஆதாரங்களும் இருப்பதனால் இவரின் சொந்த இடமாகப் பூநகரியைச் கருதஇடமுண்டு. இக்கூற்றை எதிர்கால ஆய்வுகள் மேலும் வலுப்படுத்தலாம்.

## சங்ககால வேளிர்

பரமன்கிராயிலே கிடைத்த நான்காவது சாசனம் பூநகரிப்பிராந்திய வரலாற்றாய்வில் மேலும் முக்கியத்துவம் வாய்ந்த ஆதாரமாகக் கொள்ளத்தக்கது. இச்சாசனம் கி. மு. 3 ஆம் 2 ஆம் நூற்றாண்டுக்குரியதென்பதை இதன்

எழுத்தமைதியிலிருந்து கணிப்பிட முடிகிறது (படம்-34). இதில் மூன்று எழுத்துக்கள் காணப் பட்டாலும் முதல் இரு எழுத்துக்களுக்கும் வேள் அல்லது வேளா என்ற ஒலிப்பெறுமானம் கொடுத்துத் தெளிவாக வாசிக்க முடிகிறது. இதன் மூன்றாவது எழுத்தை 'தா' அல்லது 'து' என வாசிக்கலாம் போலத் தெரிகிறது. அண் மையில் இச்சாசனம் தொடர்பாக வெளிவந்த கட்டுரையின் சாசனப்பிரதியை ஆதாரமாகக் கொண்டு வாசித்த ஐராவதம் மகாதேவன் இதி லுள்ள மூன்றாவது எழுத்துத் தலைகீழாக இருப் பதாகக் கூறி இதை தமிழுக்குரிய 'ன' வாகக் கொண்டு வேளான் என வாசித்துள்ளார். 58 இச்சாசனத்திலுள்ள இரண்டாவது எழுத்து தமிழ்ப் பிராமிக்கேயுரிய சிறப்பெழுத்தாகும். இதை அசோகப் பிராமியிலே காணமுடியாது. இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் வவு னியாவிலே கண்டு பிடிக்கப்பட்ட பிராமிக் கல் வெட்டில் இவ்வெழுத்தை அவதானித்த பாக்கர் இது திராவிடர் இங்கு வாழ்ந்ததற்கு ஒரு சான்று என்றார்.59 பிற்காலத்தில் இதை ஏற் காத பரணவிதானா இவ்வெழுத்தை அசோகப் பிராமிக்குரிய 'ல' வாகக் கொண்டு சாசனங்களில் வரும்பெயர்களை வேல அல்லது வேலு என வாசித்தார்.60 ஆனால் அண்மைக்காலங்களிலே சாசனவியலாளர்கள் பலர் பரணவிதானாவின் பிழையான வாசிப்பைச் சுட்டிக்காட்டி அத னைத் தமிழ் மொழிக்குரிய 'ள' வாக வாசித் துள்ளனர்.

தமிழ் நாட்டுப் பிராமிச் சாசனங்களில் வேள் என வரும் பெயர்களை வாசித்த அறிஞர் பலரும் அப்பெயர்கள் சங்ககாலத்திலே சிறப்புற் றிருந்த வேள் வேளிர் எனப்பட்ட குறுநில மன்னர் களையே குறிப்பனவென்பர்,61 இந்த வேள் பன் மையில் வேளிர் எனப்பட்டது. இவர்கள் சங்க இலக்கியத்திலே தென்முடிவேளிர், முதுகுடி வேளிர், வேந்தரும் வேளிர் எனப் பலவாறு விப ரிக்கப்பட்டுள்ளனர். தமிழ் நாட்டிலே பிற்காலத் திலே தோன்றிய வேள் நாடு கூட இவர்களது வழியாலே தோன்றிய ஒன்றாகும்.62 இலங்கையி லும் வேள் அல்லது வேள என்ற பெயர் கொண்ட பிராமிச் சாசனங்களை ஆராய்ந்த சிலர் சங்ககாலத்தைப் போல் இங்கும் வேளிர் என்ற சிற்றரசுகள் இருந்திருக்கலாம் எனக் கூறி யுள்ளனர்.63 இந்நிலையிலே பூநகரியில் இப் பெயர் கொண்ட சாசனம் மட்பாண்டத்திலே கிடைத்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைகிறது. இதன் முக்கியத் துவம் பற்றி தமிழ் நாட்டுச் சாசனவியலாள ரான ஐராவதம் மகாதேவன் தினமணியில் வெளியிட்ட கருத்து நோக்கத்தக்கது.

''தமிழ் மொழியிலும் தமிழ்ப் பிராமி எழுத் துக்களிலும் ஆன இச்சாசனம் கி. மு. 3 அல்லது 2 நூற்றாண்டுகளைச்சேர்ந்ததென்று எழுத்தமைதியில் இருந்து கூறமுடியும். வேளான் என்ற பெயர் சங்ககால வேள், வேளிர் ஆகிய குறுநில மன்னர்களையும் பிற் காலச் சோழர் காலத்தைய (மூவேந்தர்) வேளன் என்ற பெயர்களையும் ஒத்திருப்ப தால் இலங்கை யாழ்ப்பாணப் பகுதியில் சங்க காலத்திலேயேதமிழ்வேளிர் அல்லது வேளார் குடியேறியிருந்தனர் என்றுகொள்ளலாம்.''64

இக்கூற்றானது சங்ககாலத்தைப்போல இங் கும் பெருங்கற்காலப்பண்பாட்டின் பின்னணி யிலே சிற்றரசு தோன்றிவிட்டதென்பதைக் கோடிட்டுக்காட்டுவதாக உள்ளது.

இலங்கையின் முதலாவது வரலாற்று இலக் கியமான மகாவம்சம் ஆரம்பகால ஆட்சிப்பீட மையமாக அனுராதபுரத்தைச் சிறப்பித்துக் கூறி னாலும் இதற்குத் தெற்கிலும் வடக்கிலும் பல சிற்றரசுகள் இருந்ததாகவும் கூறுகிறது. அநுராத புரத்தில்.44 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த எல்லாளன் என்ற மன்னனைத் துட்டகாமினி வெற்றி கொள்ளப் பல மாதங்கள் பிடித்ததாக மகாவம் சம் கூறுகிறது.65 இதே காலகட்டத்திற்குரிய பல பிராமிக்கல்வெட்டுக்கள் சில சிற்றரசுகளும், பல நிலக்குழுத்தலைவர்களும் ஆட்சி புரிந்ததை உறு திப்படுத்துகின்றன.66 இத்தலைவர்கள் வேள, அய, பருமக போன்ற பட்டங்களைச் சூடியவர் களாகக்காணப்பட்டனர். இப்பெயர்கள் சங்க இலக்கியத்தில் வரும் வேள், ஆய், பெருமகன் போன்ற பெயாகளின் மூலம் என அறிஞர் கருது கின்றனர்.67

இக்காலத்தில் அநுராதபுரம் ஏனைய சிற்றரசுகளை விட ஓரளவு பலம்பெற்றிருந் தாலும் இதற்கு எதிராகத் தெற்கில் இருந்தும் வடக்கில் இருந்தும் பல படையெடுப்புக்கள் ஏற்

பட்டதாக மகாவம்சம் கூறுகிறது. தெற்கில் இருந்து படையெடுத்தவர்களை இந்நாட்டவர் எனக் கூறும் மகாவம்சம் அநுராதபுரத்திற்கு வடக்கிலிருந்து படையெடுப்புக்களை மேற்கொண் டோரை அன்னியர் என்றபொருளில் அக்கரையில் இருந்து வந்தவர்கள் சோழநாட்டவர், தமிழர் எனக்கூறுகிறது 68 இவ்வாறு படைஎடுத்துவந்த பத்துத் தமிழ் மன்னர்களே கிறிஸ்துவுக்கு முன் 80 ஆண்டுகளுக்குமேல் ஆட்சிபுரிந்ததாகத் தெரி கின்றது. ஆனால் இலங்கையுடன் கொண்ட வர்த்தகப், பண்பாட்டுத் தொடர்புகளைக் கூறும் சங்க இலக்கியத்தில் அரசியற்றொடர்பு பற்றியோ, இலங்கை மீதான படையெடுப்புப் பற்றியோ எதுவித குறிப்பும் காணப்படவில்லை. அத்துடன் சங்க இலக்கியத்தில் வரும் தமிழ் மன்னர்களது பெயருக்கும் அநுராதபுரத்தை யாண்ட தமிழ் மன்னர்களது பெயருக்கும் இடையே அதிக ஒற்றுமை இருப்பதாகவும் தெரியவில்லை. இதனால் அநுராதபுரத்தை வெற்றிகொண்ட தமிழ் மன்னர்கள் அனைவரும் தமிழ் நாட்டில் இருந்து படையெடுத்து வந்தவர் களா அல்லது இலங்கையின் இன்னொரு பாகத் தில் இருந்து படையெடுத்து வந்தவர்களா என் பது ஆய்வு செய்யப்படவேண்டிய ஒன்று. தென் னிந்தியாவைப்போன்று இலங்கையிலும் பெருங் கற்காலப் பண்பாட்டின் பின்னணியிலேதான் நிலக்குழு அல்லது சிற்றரசு ஆட்சி தோன்றி யதாக அறிஞர் கொள்வர். ஆதிப்பிராமிக் கல் வெட்டில் வரும் குறுநிலமன்னர்கள் இதன் பின் னணியில் வந்தவர்களாவர். இப்பெருங்கற்காலப் பண்பாடு தென்னிலங்கையைப்போல வட இலங் கையிலும் நிலவியதற்கான சான்றுகள் பல இடங் களிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால் இங் கும் குறுநில மன்னர்களது ஆட்சி தோன்றியிருக் கும் என்றுகருத இடமுண்டு. இந்தவகையில் பூநகரியிற் கிடைத்த வேள் பற்றிய சாசனமும் ஆனைக்கோட்டையிற் கிடைத்த கோவேந்தன் பற்றிய சாசனமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக் கன. பூநகரியிலே தமிழ்மொழி உபயோகத்தில் இருந்ததற்கான சான்றுகள் காணப்படுவதுடன் சங்ககாலத்தைப்போல வேளிர் என்ற குறுநில மன்னர் ஆட்சியும் இருந்துள்ளதைச் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. பழந்தமிழ் அல்லது திரா விட மொழியில் அமைந்த ஆனைக்கோட்டைச் சாசனம் 69 குறுநில மன்னன் அல்லது செல்வாக் குப்பெற்ற தலைவனைக் குறிப்பதாகும். இவை யிரண்டும் ஒருவகையிலே சங்ககாலத்தவர் களையொத்த குறுநில மன்னர்களின் தோற்றத் தைக் கோடிட்டுக்காட்டுவனவாக உள்ளன. இத னால் அநுராதபுரத்தின்மீது மேற்கொள்ளப் பட்ட தமிழர் படையெடுப்புக்களைத் தமிழ் நாட்டுடன் மட்டும் தொடர்புபடுத்தாது இப் பிராந்தியங்களுடனும் தொடர்புபடுத்திப் பார்ப் பது பொருத்தமாகும்.

o o o

# அடிக்குறிப்புகள்

1. Ragupathy, P. Early Settlement in Jaffna,: An archaeological Survey, (Madras, 1987), ப, 179

2. மேற்படி.

3. Allchin, B. "The Microlithic Sites of Tinnavelly District" Ancient India, No. 12. பக். 4-20

4. Allchin, B. The Birth of Indian Civilization, (Harmondsworth, 1968), ப. 320

5. மேற்படி.

6. Susantha Goonetillake. "The Formation of Sri Lankan Gulture" Ancient, Ceylon, No. 4. 1981

7. மேற்படி.

8. Ellewala, H. Social History of Early Ceylon, (Colombo, 1969), Ch. v

9. Susantha Goonatillake. மு. கூ. க.

10, Sitrampalam, S. K. The Megalithic Culture of Sri Lanka, Unpublished Ph. D Thesis, University of Poona. (Poona, 1980), ப. 384

11. Chanmugam, P. K. and Jeyawardena F. L. W. "Skeletal remains from Thirukkethiswaram", Ceylon Journal of Science, Vol. V, Pt. 2 (Colombo, 1954), பக். 65-68

12. மணிமேகலை. ,6. 11, 66-67

13. Sitrampalam, S. k. மு. கூ. நூ. பக். 112 - 155

14 மேற்படி.

15. Begley, V. "Proto- historical Material From Sri Lanka (Ceylon) and Indian Contacts" in Kennedy, K. A. R and Possehl, G. L (ed.) Ecological Backgrounds of South Asian Pre-history, (New orleans, 1973), பக். 191-196

16. Ragupathy, P. மு. கூ. நூ. ப. 181

17. மேற்படி. ,

18. Sittampalam, S. K. மு. கூ. நூ, ப. 160

19. *1990 இல் அநுராதபுர அகழ்வாய்வில் ஈடுபட்டிருந்த சிறான் தெரணியகலாவிடம் பூநகரியில் கிடைத்த கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்களையும். பிற சின்னங்களையும் காட்டிய போது இவை பெருங்கற் காலப் பண்பாட்டிற்குரிய தனித்துவமான சான்றுகள் எனத் தெரிவித்தார்.*

20. Gurumurthy, S. Ceramic Traditions in South India (Madras,) 1981, ப, 113

21. மேற்படி. , ப. 123

22. மேற்படி, , பக். 127

23. மேற்படி.

24. Lal, B. B. "From the Megalithic to the Harappan Tracing back the Craffti on the Pottery" Ancient India, No. 16. பக். 4-24

25. வல்லிபுரத்தில் கிடைத்த மண்வளையல் கிணறு தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை நூதனசாலையில் உள்ளது.

26 காசிநாதன், நடன, "கட்டிடக்கலை" தமிழக நுண்கலை (சென்னை, 1978) ப. 83

27. Deraniyagala, P. E.P. "Ferro - Lithic an Early historic Terracota Stotnary and a Cist from Ceylon", Spolil Zeyaanica Vol. 27, pt. 1 (Colombo, 1953), பக் 133-138

28. மேற்படி.

29. Nilakanda Sastri, K. A. A History of South India (London, 1958,) ப. 55

30. Ragupathy, P. மு. கூ. நூ.

31. Lal, B. B. மு. கூ. க., பக். 4 - 24

32. The Hindu, (Madras, 24. 4. 81)

33. மேற்படி.

34. புஸ்பரட்னம், ப. "பூநகரிப் பிராந்திய தொல்லியல் மேலாய்வில் கிடைத்த தொல்பொருட் சின்னங்கள் - ஒரு வரலாற்று ஆய்வு" யாழ். பல்கலைக்கழக கல்விசார் கருத்தரங்கில் வாசிக்கப் பட்ட ஆய்வுக் கட்டுரை (யாழ்ப்பாணம், 1-3-90), பக். 1-21

35. தினமணி, (சென்னை, 1. 7. 1990)

36. Mahadevan, I. Corpus of the Tamil-Brahmi Inscriptions, (Madras, 1966), ப. 1

37. Sivasamy, V. Some aspects of Early South Asian Epigraphy, (Thirunelvely. 1985), பக். 11-20

38. Ragupathy, P. மு. கூ. நூ.,

39. Paranavitane, S. Brahmi Inscriptions of Ceylon, (Colombo, 1970)

40. Ariyasinghe, A. Sinhalesc Palaeography, (London, 1965), ப. 29

41. Karunaratne, S. "New Clue to an Ancient Script", Sunday Observer, (Colombo, 26.7.62)

42. பெர்ணான்டோ, ஈ. பி "சிங்கள நெடுங்கணக்கின் தொடக்க நிலை" இலங்கையிற் கல்வி நூற் றாண்டு மலர் பகுதி 1, (கொழும்பு, 1969), பக். 12

43. சிற்றம்பலம், சி. க. "பிராமிக் கல்வெட்டுக்களும் தமிழும்" சிந்தனை, தொ. 1 இதழ். 1 (யாழ்ப்பாணம், 1985), பக். 24 - 25

44. பெர்ணான்டோ, ஈ. பி, மு. கூ. க, ப. 12

45. மேற்படி.

46. Wheeler, R. E. M. "Arikamedu, An Indo-Roman Trading Station on East coast of India" Ancient India, No. 2. பக். 17-124

47. Karunaratne, S. மு. கூ. க.,

48. புஸ்பரட்ணம், ப. "சங்ககால ஈழம் தமிழர் பிராந்தியங்களில் ஒன்றா" வெளிச்சம், (யாழ்ப்பாணம், 1992)

49. Mahadevan, I. மு. கூ. நூ: , இல. 227

50. பட்டினப் பாலை, வரி. 190-192.

51. வேலுப்பிள்ளை, ஆ. தொடக்க கால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும், (யாழ்ப்பாணம், 1986), ப. 10

52. ARE, for 1917, No. 588 of 1916

53. SII, No. 778

54. Friar Paula da Trinidade, O. F. M. Chapter on the Introduction of Christianity to Ceylon, (Chilaw, 1972), ப. 240

55. Mahadevan, I. மு. கூ. நூ, இல. 51

56, மேற்படி. இல. 28

57. வேலுப்பிள்ளை, ஆ. மு. கூ. நூ., ப. 16

58. தினமணி, (சென்னை, 1-7-90)

59. Parkar, H. Ancient Ceylon (London, 1909), ப. 436

60. Paranavitane, S. மு. கூ. நூ., பக். 22 - 23

61. Mahadevan, I. மு. கூ. நூ.,

62. துறையரங்கசாமி, ஆ. சங்ககாலச் சிறப்பு பெயர்கள், (சென்னை, 1960)

63. Sitrampalam, S. K. மு. கூ. நூ., பக். 360 – 377

64. தினமணி, (சென்னை, 1-7-90)

65. மகாவம்ஸ., அத். 25, செய். 47

66. Gunawardana, R. H. L. A. "Pre-lude to the state an early phase in the evalutions of Political Institutions in Ancient Sri Lanka' The Sri Lanka Journal of the Humanities, Vol. VII, Nos. 1 & 2. பக். 1-39

67. Sitrampalam, S. K. மு. கூ. நூ., பக். 360–377

68. மகாவம்ஸ.. அத். 25

69. Ragupathy, P. மு. கூ. நூ., பக். 200–204

48. புஷ்பரட்ணம், ப. "மன்னார் சமூக அமைப்பு ஓர் வரலாற்று ஆய்வு" சிந்தனை, (யாழ்ப்பாணம், 1992)

49. Mahadevan, I. மு. கூ. நூ., இல. 327

50. மட்டக்களப்பு மான்மியம், பக். 190-192.

51. சோமசுந்தரம், ஆ. "இலங்கை வரலாற்றில் இஸ்லாமும் தமிழ் முஸ்லிம்களும்", (யாழ்ப்பாணம், 1986), ப. 16

52. ARE, for 1917, No. 588 of 1916

53. SII, No. 778

54. Friar Paulo da Trinidade, O F. M. Chapter on the Introduction of Christianity to Ceylon, (Chilaw, 1972), ப. 240

55. Mahadevan, I. மு. கூ. நூ., இல. 513

56. மேற்படி, இல. 26

57. சோமசுந்தரம், ஆ. மு. கூ. நூ., ப. 16

58. ஈழமுரசு, (பிரசுரம், 1-7-90)

59. Parker, H. Ancient Ceylon (London. 1909), ப. 436

60. Paranavitane, S. மு. கூ. நூ., பக். 22 - 23

61. Mahadevan, I. மு. கூ. நூ.,

62. குணசேகரம், ஆ. யாழ்ப்பாண சரித்திரம், (பிரசுரம், 1960)

63. Sitrampalam, S. K. மு. கூ. நூ., பக். 360 - 377

64. ஈழமுரசு, (பிரசுரம், 1-7-90)

65. மேற்படி, அத். 25, செய். 47

66. Gunawardana, R. H. L. A. "Pre-lude to the state an early phase in the evalutions of Political Institutions in Ancient Sri Lanka" The Sri Lanka Journal of the Humanities, Vol. VII, Nos. 1 & 2. பக். 1-39

67. Sitrampalam, S. K. மு. கூ. நூ., பக். 360-377

68. மேற்படி, அத். 23


69. Ragupathy, P. மு. கூ. நூ., பக். 200-204

# 3. வெளிநாட்டு உறவுகள் (10 ஆம் நூற்றாண்டு வரை)

இலங்கையின் நிலையமும் இங்கு இயற்கையாகப் பெறக்கூடியதாக இருந்த வணிகப் பொருட்களின் சிறப்புமே தென்னிந்தியா உட்பட இலங்கைக்குத் தொலைவில் உள்ள நாடுகளில் இருந்து வணிகரை நெடுங்காலம் வரச் செய்தன. இத்தொடர்பினால் இலங்கையின் பொருளியல் நிலை சிறப்படைந்ததுடன் பிற நாடுகளின் பண்பாடும் இலங்கையிலே பரவ வழியுற்றது. இவ்வர்த்தகத்தில் இலங்கையிலுள்ள மாந்தை, யம்புக்கோல, திருகோணமலை போன்ற துறைமுகங்கள் முக்கிய பங்கு வகித்ததை இலக்கியங்களும், இங்கு கிடைத்த தொல்பொருட் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. இவற்றுள் மாந்தைத் துறைமுகம் ஊடாக வர்த்தகமும், மக்கள் புலப்பெயர்ச்சியும், பண்பாடும், அரசியற் படையெடுப்புக்களும் நடந்ததற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. இதனால் இதற்கு வடக்கே அமைந்த பூநகரியும் இச்செல்வாக்கிற்கு உட்பட்டிருக்கும் எனக் கருத இடமுண்டு. இதனை இங்கு கிடைத்த இந்திய, கிரேக்க, உரோம, அராபிய, சீன நாடுகளுக்குரிய தொல்பொருட் சான்றுகள் உறுதி செய்கின்றன. இச்சான்றுகள் இங்கு நிலவிய நாகரிகத்தின் கால அளவை வரையறை செய்ய உதவுவதுடன் பெருங்கற்காலப் பண்பாட்டின் பின்னணியிலேயே தோன்றிய நகரமயமாக்கத்தில் இவ் வெளிநாட்டு வர்த்தகம் ஏற்படுத்திய செல்வாக்கையும் அறிய உதவுகின்றன.

## தென்னிந்திய வர்த்தகம்

பூநகரியின் வெளிநாட்டு வர்த்தகம் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றியதெனக் கூறலாம். இதிலே சில வகை மட்கலன்கள், மண் வகைகள், கல்வகைகள், உலோகம் போன்ற பொருட்கள் முக்கிய வர்த்தகப் பொருட்களாக விளங்கியிருக்க வேண்டும். இவ்வர்த்தகத்திலே தென்னிந்தியா சிறப்பாகத் தமிழ்நாடு முக்கிய பங்கு கொண்டிருக்க வேண்டும். தென்னிந்தியாவிலே பெருங்கற்காலப்பண்பாடு நிலவிய காலத்திலே புழக்கத்திலிருந்த புராணஸ் (அச்சுக் குத்தப்பட்ட நாணயம்) என்னும் நாணய வகை பூநகரியிலே சில இடங்களிற் கிடைத்துள்ளன. இந்தியாவிலும், இலங்கையிலும் பயன்படுத்தப் பெற்ற காலத்தால் முந்திய நாணயங்கள் இவையாகும்.




படம் - 35. புராணாஸ் நாணயங்கள்

இந்தியாவில் இதன் தோற்றக்காலம் கி. மு. 1000 எனக் கணிப்பிடப்பட்டாலும் இலங்கையில் இது கி.மு.500 க்கும், கி.மு.100 க்கும் இடைப்பட்ட காலத்திலே பயன்படுத்தப்பெற்றதற்கு ஆதாரங்கள் உள.1 தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் ஏறத்தாழ ஒரே காலகட்டத்திற் பயன்படுத்தப்பெற்று ஒரே காலத்தில் மங்கிப்போவதால் இரு நாட்டு வர்த்தக உறவில் இவை முக்

கிய பங்கு வகித்தன எனக்கருத இடமுண்டு. பூநகரியிலே கிடைத்த நாணயங்கள் சில வெள்ளியிலும், செம்பிலும், வேறு சில வெள்ளி மூலாம் பூசப்பட்ட செப்பிலும் செய்யப்பட்ட நாணயங்களாக உள்ளன. இவை வட்டவடிவிலும், முட்டை வடிவிலும் உள்ளன. இவற்றின் முன் பக்கத்தில் நட்சத்திர வடிவில் அமைந்த உருவங்களும், பின்புறத்திலே தெளிவற்ற சில கோடுகளும் உள்ளன (படம்-35). இந் நாணயங்களிலே சில மண்ணித்தலை, வெட்டுக் காடு போன்ற இடங்களிலே பெருங்கற்காலச் சின்னங்களுடன் கண்டு பிடிக்கப்பட்டதால் இவற்றின் பயன்பாடு மிகத் தொன்மையான தெனக்கருதலாம்.

இந்நாணயங்களைத் தொடர்ந்து இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் பயன்படுத்தப் பட்ட இலக்குமி நாணயங்கள் சில மண்ணித் தலை, வெட்டுக்காடு ஆகிய இடங்களிலே கிடைத்துள்ளன. இலங்கையில் இந்நாணயங்கள் கி. மு. 2 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி. பி. 4 ஆம் நூற்றாண்டு வரை பயன்படுத்தப்பெற்ற தால் அதையொத்த காலத்தில் இங்கும் இவை பயன்படுத்தப்பெற்றதாகக் கூறமுடியும். எமது ஆய்வின் பயனாக இரு வேறு அளவுடைய நான்கு நாணயங்கள் கிடைத்துள்ளன. இந் நாணயங்கள் நீள்சதுர வடிவிலே செப்பினாலே செய்யப்பட்டுக் காணப்படுகின்றன. இவற்றின் முன் பக்கத்திலே தாமரை ஆசனத்தில் நிற்கும் நிலையில் இலக்குமி விளங்குகிறாள். இரு மருங்கிலும் கமலங்கள் திகழ்கின்றன. இதன் பின்புறத்தில் வேதிகையில் உள்ள ஸ்தம்பத்தின் மீது ஸ்வஸ்திகா முழு நீளத்திற்கும் காணப்படுகின்றது (படம்-36). இந் நாணயங்கள் உள்நாட்டு, வெளி நாட்டு வர்த்தகத்திலே பயன்படுத்தப்பெற் றவை எனக் கூறலாம்.

சங்ககாலத்தில் இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்குமிடையே நெருக்கமான வர்த்தகத் தொடர்புகள் இருந்ததை ஆதிப்பிராமிக்கல் வெட்டுக்களும், இலக்கியங்களும் உறுதிப்படுத்து கின்றன. இவற்றுட் சங்ககால இலக்கியங்களில் ஒன்றான பட்டினப்பாலை ஈழத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு உணவு ஏற்றுமதி செய்யப்பட்ட தாகக்கூறும் தகவலையிட்டு வரலாற்று ஆசிரியர்களிடையே கருத்து முரண்பாடுகள் உள்ளன. இக்கால வர்த்தகம் பற்றிக் கூறும் மகாவம்சத்தில் இலங்கையில் இருந்து தமிழ் நாட்டுக்கு உணவு ஏற்றுமதி செய்யப்பட்டதற்கான சான்றுகள் எவையும் காணப்படவில்லை. மாறாக துட்டகாமினி (கி. மு. 161-136) குஞ்சநாக(கி.பி. 191 - 194) ஸ்ரீ சங்கபோதி (கி. பி. 252 - 253) போன்றோரது ஆட்சியிலே பஞ்சம் ஏற்பட்ட போது அநுராதபுரத்தில் வசித்த பிக்குகள் தமிழ் நாட்டு உதவியை நாடியதாகத் தெரிகிறது. 2 கி.பி முதலாம், இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தொலமி, பிளினி போன்ற மேற்கு நாட்டாரது குறிப்புக்களிலும் தமிழ் நாட்டிலிருந்தே இலங்கைக்கு உணவு ஏற்றுமதி செய்யப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளது 3 இதனாலே பட்டினப்பாலையில் வரும் ஈழத்து உணவு பற்றிய குறிப்பு ஆய்வுக்குரியதாகும். அநுராதபுரஅரசை மையமாகக் கொண்டெழுந்த மகாவம்சம் இலங்கையிலிருந்த ஏனைய அரசுகள் பற்றிக் கூறினாலும் அநுராதபுரத்தை ஆட்சி செய்த மன்னர்களது அரசியல், பொருளாதார, வர்த்தக பண்பாட்டு



படம் - 36. இலக்குமி நாணயங்கள்

வரலாற்றையே சிறப்பித்துக் கூறுகின்றது. இதனாலே பட்டினப் பாலையில் வரும் ஈழம் அநுராதபுர ஆதிக்கத்துக்கு உட்படாதிருந்ததொரு பிராந்தியத்தைத் குறித்திருக்குமா என்பது ஆராயப்பட வேண்டியது. இந்நிலையிலே பூநகரியில் ஈழம் தொடர்பான சான்றுகள் வர்த்தகப் பொருட்களின் கொள்கலன்களான மட்கலன்களில் கிடைத்திருப்பதனாலே பட்டினப்பாலையில் வரும் ஈழத்தை அப்பிராந்தியத்துடன் தொடர்பு படுத்திப் பார்க்கவும் இடமுண்டு.

## உரோம வர்த்தகம்

சங்ககால இலங்கை தமிழ் நாட்டு வர்த்தகம் உரோம வணிகரது கீழைத்தேய வருகையுடன் மேலும் அதிகரித்தது எனக்கூறலாம். ஆரம்ப காலத்தில் இலங்கை வர்த்தகம் உரோமருடன் நேரடியாக ஏற்படாது தென்னிந்திய வணிகரூடாக நடைபெற்றது. கிறிஸ்தவ சகாப்தத்தில் உரோமப்பேரரசில் ஏற்பட்ட அமைதியும் உறிப்பலஸ் பருவக் காற்றின் உதவியைக் கண்டு பிடித்தமையும் உரோம - தென்னிந்திய வர்த்தகம் சிறப்படையக் காரணமாகின. உரோம அரசின் செல்வமும், அரசியல் அமைதியம் கீழைத்தேய வாசனைப்பொருட்களுக்கு மேற்குநாடுகளில் மதிப்பை ஏற்படுத்தியது. இதனால் உரோம வர்த்தகர்களின் வருகை தமிழ்நாடு, ஆந்திரம் முதலான பிரதேசங்களில் அதிகரித்தது. உரோமரோடு தமிழ்நாடு கொண்ட வர்த்தக உறவைப் பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும் சிறப்பித்துக் கூறுகின்றன. இதை அரிக்கமேடு, உறையூர், கரூர், காவிரிப் பூம்பட்டினம், காஞ்சிபுரம் முதலான இடங்களிற்கிடைத்த தொல்பொருட்சின்னங்களும் உறுதி செய்கின்றன.[4] தொலமி, பிளினி ஆகிய மேற்கு நாட்டவரது குறிப்புக்களிலும் இவ்வர்த்தகம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்காலத்தில் மூவேந்தர் ஆட்சிக்குட்பட்ட தமிழ்நாட்டவர் சிறந்த கடல் ஓட்டி களாகவும், வர்த்தகர்களாகவும் விளங்கியதால் இலங்கை போன்ற நாடுகளில் இருந்து பொருட்களைப் பெற்றுத் தென்னிந்தியத்துறைமுகங்கள் ஊடாக உரோமுக்கும், ஏனைய நாடுகளுக்கும் அனுப்பிவைத்தனர். கி. பி. 1 ஆம் நூற்றாண்டுக்குரிய பெரிபுலஸ் என்ற கிரேக்க நூலில் உரோம வணிகர்கள் இலங்கைக்கு வராமலே தென்னிந்தியத் துறைமுகங்களில் இலங்கைப்பொருட்களைப் பெற்றுத் திருப்திஅடைந்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[5] இவ்வாறு இலங்கைக்குத் தேவையான குதிரை, சில உணவுப் பொருட்கள், பலதரப்பட்ட மட்பாண்டங்கள், உலோகப் பொருட்கள், மதுவகைகள் என்பன தென்னிந்திய துறைமுகங்களுக்கு அனுப்பப்பட்டு பின்னர் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டன. இந்நிலை கி. பி. 1ஆம் நூற்றாண்டளவில் மாற்றமடைந்தது. உரோம வர்த்தகரே நேரடியாக கி. பி. 5 ஆம் நூற்றாண்டு வரையிலான வர்த்தகத்தில் ஈடுபட்டனர். இதை அநுராதபுரம், பொம்பரிப்பு, மாந்தை கந்தரோடை, பொலநறுவை, திருகோணமலை போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட உரோம நாடுகட்குரிய நாணயங்கள், மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள் என்பன உறுதிப்படுத்துகின்றன. சமகாலத்தில் இவ்வர்த்தகத் தொடர்பு பூநகரிப் பிராந்தியத்திலும் ஏற்பட்டிருந்ததை எமது தொல்லியல் மேலாய்விலே கிடைத்த பல சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

## பூநகரியிலே உரோம வர்த்தகச் சான்றுகள்

பூநகரியில் உரோம வர்த்தகத் தொடர்புகள் இருந்ததை உறுதிப்படுத்தும் வகையில் மிகச்செறிவான உரோம மட்கலங்கள் இப்பிராந்தியத்தில் சில இடங்களிலே கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் சில பெருங்



படம் - 37, உரோம மட்கலன்கள்

கற்காலச் சான்றுகள் காணப்பட்ட மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய இடங்களிலே பெருங்கற்கால மட்பாண்டங்களுடன் மங்கிக் காணப்படுகின்றன. இது தமிழ் நாட்டிலே மோட்டிமர் வீலர் அகழ்ந்தாராய்ந்த அரிக்கமேடு [6] என்ற இந்திய உரோமத் துறைமுக நகருக்கும் பூநகரிப் பிராந்தியத்திற்குமிடையே இருந்த நெருங்கிய உறவை எடுத்துக்காட்டுகின்றது எனலாம். தமிழ் நாட்டில் ஏற்பட்ட உரோம வணிக செல்வாக்கால் அந்நாட்டுக்குரிய மட்பாண்டங்கள் பல அதேவடிவத்திலே தமிழ் நாட்டிலும் செய்யப்பட்டன. இத்தகைய மட்கலன்கள் சில பூநகரியிலும் கிடைத்துள்ளன. அதே வேளை உரோமருடன் நேரடி வர்த்தகத் தொடர்பு இருந்ததை உறுதிப்படுத்தும் ரௌலட்டட் மட்பாண்டங்கள் (rouletted ware), அரிட்டைன் மட்கலன்கள் (arretine ware) (படம்-37), ஆம்போரா சாடி (ampherae jar) என்பனவும் கிடைத்துள்ளன.

''ரௌலட்டட்'' மட்கலன்கள் மிகவும் மிருதுவான களிமண்ணால் நேர்த்தியாக வனையப்பட்டவையாகும்.[7] இந்தியாவிலும், இலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இத்தகைய மட்கலன்கள் உரோமானிய வணிகர்களால் அங்கிருந்து ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்டாலும் காலப்போக்கில் இப்பிராந்தியத்திலே வடித்தெடுக்கப்பட்டதற்கு அண்மையில் சான்றுகள் கிடைத்துள்ளன. பூநகரி மண்ணித்தலையில் இத்தகைய மட்கலன்களின் உடைந்த பாகங்கள் சில கிடைத்துள்ளன. கறுப்பு நிறமான இம்மட்கலத்தின் வெட்டுத் தோற்றம் மெல்லியதாகவும், மிருதுவான களிமண் உடையதாகவும் காணப்படுகின்றது. இதன் உட்பகுதியிலே புள்ளிகளாலான ஓப்பனைகள் வட்டமாகவும், முக்கோணமாகவும் காணப்படுகின்றன. தமிழகத்தில் இம்மட்கலன்கள் உறையூர், காஞ்சிபுரம், கொற்கை, வசவசமுத்திரம், செங்கமேடு, நந்தமேடு, கரூர் முதலிய இடங்களில் கிடைத்துள்ளன.[8]

மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய இடங்களிலே கிடைத்த மற்றொரு வகையான மட்கலன்கள் அரிட்டைன் வகையைச் சேர்ந்தது. இது இத்தாலிய நாட்டில் அரிட்டியம் என அழைக்கப்பட்டஇடத்தில் முதன்முதலாக வனையப்பட்டதால் இப்பெயரைப் பெற்றது. பூநகரியிலே கிடைத்த இம்மட்கலத்துண்டுகள் மென்மையாகவும், நுண்மையாகவும் வனையப்பட்டு இளம் மஞ்சள், பச்சைநிற மெருகுடன் காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் அரிக்க மேட்டில் மட்டும் இவை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.[9] இத்தாலியிலே கி. பி 50ஆம் ஆண்டுக்கு முன்னர் இம்மட்கலன்கள் செய்யப்பட்டதால் சமகாலத்தில் இவை தமிழ் நாட்டுக்கும், பூநகரிக்கும் கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனக்கருதஇடமுண்டு.

உரோம வர்த்தகத்தில் மதுபானம், எண்ணெய் போன்ற திரவப்பொருளைப் பாதுகாக்க ஒரு வகைச்சாடி பயன்படுத்தப்பட்டது. இவை 'ஆம்போராச்' சாடிகள் என அழைக்கப்பட்டன. இவை மிருதுவான களிமண்ணால் வனையப்பட்டு பழுப்புநிறத்தினை உடையனவாக இருக்கும். இவற்றின் அடிப்பகுதி கூராகவும் வாய்பகுதி




படம் - 38. பள்ளிக்குடாவில் கிடைத்த உரோம மதுச்சாடி

முடியதாகவும், கழுத்துப்பகுதியில் இருபுறமும் கைப்பிடிகள் உடையதாகவும் காணப்படும். இதிலே கைப்பிடிகள் இருப்பதால் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்லவும், கூர்மையான அடிப்பகுதி இருப்பதால் நிலத்தில் ஊன்றி வைப்பதற்கும் வசதியாக இருந்தது. இவை தமிழ் நாட்டில் அரிக்கமேடு, வசவசமுத்திரம், கரூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன.[10] பிற்காலத்தில் இச்சாடிகளைப் பார்த்து இதே வடிவத்திலே தமிழ்நாட்டு மக்களும் செய்துள்ளனர். ஆனால் இச்சாடிகளிலே கைப்பிடி இல்லாது கூர்மையான அடிப்பாகம் காணப்பட்டது. காஞ்சிபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது இச்சாடிகள் பல முழுவடிவத்துடன் மண்ணுட் புதைத்து வைக்கப்பட்ட நிலையிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[11] எமது தொல்லியல் ஆய்வின்போது பூநகரியில் உள்ள பள்ளிக்குடா என்ற இடத்தில் முழுமையான ஆம்போராச் சாடியைக் கண்டுபிடிக்கமுடிந்தது. ஒன்றரையடி உயரமான இச்சாடியின் அடிப்பாகம் கூராகக் காணப்படுகின்றது. கழுத்துப்பகுதியில் கைப்பிடி இருந்ததற்கான அடையாளம் காணப்படுகின்றது (படம்- 38). இது உரோமானிய வணிகரால் இங்கு கொண்டுவரப்பட்டதெனக் கூறலாம். இதில் உரோமர்கால அம்போராச் சாடிகளிலே காணப்படும் மிருதுவானதன்மை குறைவடைந்து காணப்படுகின்றது. இச்சாடி கண்டெடுக்கப்பட்ட பள்ளிக்குடா உப்புநீர் பாய்ந்தோடும் இடமாக இருப்பதனால் அவற்றின் பாதிப்பினால் இதன் மிருதுவான தன்மை குறைவடைந்திருக்க வேண்டும்.

## உரோம நாணயங்கள்


மேற்பட்ட உரோம மட்கலன்கள் காணப்பட்ட இடங்களிலும், இப்பிராந்தியத்தின் ஏனைய சில இடங்களிலும் கிடைத்த உரோமர்கால நாணயங்கள் சில இங்கு சிறப்பாக நோக்கத்தக்கவை. எமது தொல்லியல் மேலாய்வுக்கு முன்னரே இங்கு வாழ்ந்த மக்களாலும், ஆய்வாளர் சிலராலும் உரோம நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆயினும் அவைபற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. இலங்கையில் இவ்வகை நாணயங்கள் கி. பி. முதலாம் நூற்றாண்டுக்கும் ஆறாம் நூற்றாண்டுக்கும் இடையிலே பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இந்நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதுடன் புதுச்சேரியில் இந்நாணயங்களை வெளியிடும் தொழிற்சாலை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.[12] இதனால் இலங்கையிலே கிடைத்த உரோம நாணயங்கள் உரோமில்இருந்து கொண்டுவரப்பட்டதைப்போல தமிழ் நாட்டிலிருந்தும் கொண்டுவரப்பட்டதெனக் கூறலாம். பூநகரியில் கிடைத்தவை செம்பினாலே செய்யப்பட்ட வட்ட நாணயங்கள் ஆகும். இந்நாணயங்கள் சிலவற்றின் முன்பக்கத்தில் உரோமப்பேரரசின் கிரீடம் தரித்த தலையும், சுற்றிவரப்புள்ளிகளும், பின் பக்கத்தில் இரண்டு போர்வீரர்களின் உருவமும், சிலுவை முதலிய உருவங்களும் உள்ளன (படம்-39) சில நாணயங்களிலே கிரீடம் தரித்த தலை தெளிவாகவும், மறுபுறத்தில் தெளிவற்றதாகவும் காணப்படுகின்றது. சில நாணயங்களில் உருவங்கள் அழிந்துகாணப்படுவதால் நாணயங்களின் அளவை அடிப்படையாகக்கொண்டே உரோம நாணயங்கள் என அடையாளம்காண வேண்டியுள்ளது. ஒரு நாணயத்தில் அரசனின் கிரீடம் தரித்த தலையும், அதன் அருகே பெயரும் காணப்படுகிறது. இதை ஆதாரமாகக் கொண்டு கி. பி. முதலாம் நூற்றாண்டிலே உரோமபுரியை ஆட்சிபுரிந்த ஒகஸ்தஸ் சீசர் காலத்திற்குரிய நாணயம் இது என அடையாளம் காணமுடிகிறது. இதையொத்த நாணயம் கந்தரோடையிலும் கிடைத்துள்ளது.[13]



படம் - 39. உரோமர் கால நாணயங்கள்


## அரேபிய சீன வர்த்தகம்

இலங்கை தென்னிந்திய வர்த்தகத்தில் உரோமரது செல்வாக்கு கி.பி.5 ஆம் நூற்றாண்டிலிருந்து படிப்படியாக மங்கிப்போவதைத் தொல்லியற் சான்றுகள் உறுதி செய்கின்றன. இக்கால கட்டத்தில் மேற்காசியாவிலும், கிழக்காசியாவிலும் ஏற்பட்ட அராபிய, சீன வர்த்தக எழுச்சி இப்பிராந்தியத்தில் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. பூநகரியிலே கல்முனை,



படம் - 40: அரேபிய மட்பாண்டங்கள்

வெட்டுக்காடு ஆகிய இடங்களில் அராபிய (படம்-40). சீன மட்பாண்ட ஓடுகள் சில கிடைத்துள்ளன(படம்-41). இதையொத்த மட்கலன்கள் மாந்தை, அல்லைப்பிட்டி, கந்தரோடை, தமிழ் நாட்டில் அரிக்கமேடு போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. அராபியரது வர்த்தக எழுச்சியைத் தொடர்ந்து வட இலங்கையில் மாதோட்டம் முக்கிய துறைமுகமாக மாறியதனால் மாந்தைக்கு வடக்கிலமைந்த பூநகரியும் முக்கியத்துவம் பெற்றிருக்கும் எனக்கருத இடமுண்டு இவற்றை நோக்கும் போது உரோமரது வணிகத்தைத் தொடர்ந்து அராபிய சீன வர்த்தகத் தொடர்புகள் இப்பிராந்தியங்களில் ஏற்பட்டன வெனக்கூறலாம்.



படம் - 41. சீன மட்பாண்டங்கள்

## பல்லவ பாண்டியத் தொடர்புகள்

கி. பி. 6 ஆம் நூற்றாண்டிலிருந்து ஏற்பட்ட பல்லவ, பாண்டிய வம்சங்களின் ஆட்சி இலங்கை தமிழ் நாட்டு உறவிலே புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியது. இக்காலத்தில் இருந்துதான் தமிழ் நாட்டு வம்சங்கள் அரசியல் ரீதியாக இலங்கையிலே தலையிடுவது பற்றிய சான்றுகள் தமிழ் நாட்டு வரலாற்று மூலங்களில் இடம் பெறத் தொடங்கின. சமகாலத்தில் இலங்கையில் ஆட்சியில் இருந்த மன்னர்களும், ஏனையோரும் இதுவரை தமிழ் நாட்டிலிருந்து தனிப்பட்டவர்களிடம் பெறப்பட்ட படையுதவிக்குப் பதிலாக அரசவம்சத்தின் உதவியை நாடினர். இதனால் இலங்கை மன்னனைத் தெரிவு செய்வதிலே தமிழ் நாட்டு வம்சங்கள் நேரடியாகத் தலையிடும் நிலை தோன்றியது. இத்தகைய அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்த வேளையில் பல்லவர் ஆட்சியுடன் ஏற்பட்ட பக்தி இயக்கமும், வணிக கணங்களின் எழுச்சியும் தமிழ்நாட்டு அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் துறைகளிலே பல மாறுதல்களை ஏற்படுத்தின. இந்த மாற்றங்கள் சமகாலத்திலே தமிழ் நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்த இலங்கையிலும் ஏற்

பட்டது. இவற்றினை இலக்கியங்கள் மட்டுமன்றி அநுராதபுரம், திரியாய், குச்சவெளி போன்ற இடங்களிலும் கிடைத்த பல்லவ கல்வெட்டுக்கள் நாட்டின் ஏனைய இடங்களிலே கிடைத்த நாணயங்கள், கட்டிட அழிபாடுகள் என்பனவும் உறுதிப்படுத்துகின்றன. தமிழ் நாட்டில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தினால் இதுவரை செல்வாக்குப் பெற்றிருந்த தமிழ்ப் பௌத்தம் அங்கு வீழ்ச்சியடைந்தது. இதனால் இந்து மதத்தை ஏற்காத பல தமிழ்ப் பௌத்தர் இலங்கையிலே குடியேறினர். அதேவேளை பக்தி இயக்கத்தின் செல்வாக்கால் இலங்கையில் இருந்த பலர் தீவிர இந்துக்களாக மாறினர். இந்து மதம் சிங்கள மன்னர்கள் சிலரின் ஆதரவையும் பெற்றது.


இதன் காரணமாகத் தமிழ் நாட்டைப் போல இலங்கையிலும் அழியாப் பொருட்களைக் கொண்டு ஆலயம் அமைக்கும் மரபு தோன்றியது. இதற்கு அநுராதபுரம், தேவிநுவரை, நாளந்தா, திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற இடங்களிற் கிடைத்த இந்து ஆலய கட்டிட, சிற்ப அழிபாடுகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.14 இக்காலத்திலே தமிழ் நாட்டில் பக்தி இயக்கத்தை தலைமையேற்று நடத்திய நாயன்மார்கள் இலங்கையிலுள்ள திருக்கேதீஸ்வரத்தையும், திருக்கோணேஸ்வரத்தையும் போற்றிப்பாடும் அளவிற்கு இலங்கையின் சைவப் பாரம்பரியம் தமிழ் நாட்டோடு தொடர்பு கொண்டு வளர்ந்தது.15 வரலாற்று ஆய்வாளர்கள் சிலர் பல்லவர் காலச் செல்வாக்கே இலங்கையில் இன, மத ரீதியான வேறுபாடு வளரவும், சிங்களம் என்ற நாட்டுப் பெயர் (சிங்கள மக்களை குறிக்கவும்) தோற்றம் பெறவும் காரணம் எனக் கருதுகின்றனர்.16 இது பற்றி சில்வா கூறிய கருத்து நோக்கத்தக்கது.

> ''கிறிஸ்துவுக்கு பின்னுள்ள 5ஆம் 6ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிலே பல்லவ, பாண்டிய, சோழ என்னும் மூன்று இந்து அரசுகள் எழுச்சி பெற்றன. இதன்விளைவாக இவர்களுக்கும் சிங்கள இராச்சியங்களுக்குமிடையே இருந்த உறவுகளை இனத்துவ முரண்பாடுகள் ஊறுசெய்தன. இத்திராவிடர் அரசுகளின் சமய நோக்கு போர்த்தன்மை கொண்டு விளங்கியதோடு தென்னிந்தியாவில் பௌத்த செல்வாக்கினை அடியோடு களைந்தெறிவதை நோக்காகக் கொண்டு செயல்பட்டது. காலப்போக்கில் தென்னிந்தியாவில் பௌத்த மதம் முற்றாக அழிக்கப்பட்டது. இதன் விளைவாக தென்னிந்திய, சிங்கள இராச்சியங்களுக்கிடையே இருந்த முக்கிய பண்பாட்டு உறவுகள் துண்டிக்கப்பட்டன. அத்துடன் இலங்கை மீது தென்னிந்திய அரசுகள் கொண்டிருந்த வெறுப்பு கொள்ளையடிக்கும் வேட்கையை அதிகரிக்கச் செய்தது. இப்போது இலங்கை முதல்தடவையாக சமய ஆர்வத்தினாலும், இனத்தின் பெருமை உணர்வாலும் முனைப்புப் பெற்றது. இதிலிருந்து எழுந்த முக்கிய விளைவு என்னவென்றால் ஈழத்திலிருந்த தமிழர் தமது இனத்துவம் பற்றிக் கூடுதலாக பிரக்ஞை செலுத்தத் தொடங்கினர். இந்த இனத்துவ உணர்வினைப் பண்பாட்டு ரீதியாகவும், சமய ரீதியாகவும் நிலைநாட்ட முனைந்தனர். இது தான் திராவிட தமிழ், இந்து என்ற வழக்காகும். அத்துடன் ஈழத்திலிருந்த தமிழ்க் குடியேற்றங்கள் தென்னிந்தியப் படையெடுப்பாளர்களுக்கு ஆதரவு வழங்கும் தளங்களாகவும் விளங்கின.''17

பல்லவ பாண்டியத் தொடர்புகள் இலங்கையில் ஏற்பட முன்னரே பூநகரியுள்ளிட்ட வடமேற்கு இலங்கையில் தென்னிந்தியச் செல்வாக்கு இருந்ததற்கு தொல்லியல் சான்றுகள் பல கிடைத்துள்ளன, இதனால் பல்லவர் ஆட்சியில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களும், பண்பாட்டு விழிப்புணர்ச்சிகளும் சமகாலத்தில் இலங்கையின் ஏனைய பாகங்களைவிட இப்பிராந்தியத்தில் முதலில் ஏற்பட்டிருக்குமெனக் கருதுவதில் தவறில்லை. சில்வா கருதுவது போல் இலங்கையில் தமிழர் வாழ்ந்த பிராந்தியங்கள் தமிழ்நாட்டிலிருந்து ஏற்பட்ட படையெடுப்புக்களுக்கு ஆதரவு வழங்கும் தளங்களாக விளங்கின என்பதை சூளவம்சத்தின் கூற்றிலிருந்து உறுதிப்படுத்த முடிகிறது. அப்பிராந்தியங்களில் வடமேற்கிலங்கை முக்கிய பங்கு வகித்ததைச் சூளவம்சமே கூறுகிறது. ஆனால் இவ்விடங்களில் பல்லவர், பாண்டியர் தொடர்பாகக் கிடைத்த தொல்பொருட் சான்றுகள் அரசியல் தொடர்புக்கு முன்னோடியாக அவர்களது வர்த்தக, பண்பாட்டுச் செல்வாக்கு ஏற்பட்டிருந்ததை உறுதிப்படுத்துகின்றன.

பல்லவர் ஆட்சியோடு தோன்றிய வணிக கணங்களின் வர்த்தக நடவடிக்கைகள் சோழரின் கடல் சார்ந்த வர்த்தகத்திற்கு முன்னோடியாக அமைந்தது. தென்கிழக்காசியாவில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டொன்று பல்லவர் கால வணிகக்கலமொன்று அங்கு தங்கியிருந்து வர்த்தகத்திலீடுபட்டது பற்றிக் கூறுகிறது. இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தால் முந்திய 9 ஆம் 10 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ்க் கல்வெட்டுக்கள் பல்லவர் கால நான்கு நாட்டார், குமாரகணம் என்றும் வணிக கணங்கள் அநுராதபுரத்தில் தங்கியிருந்தது பற்றிக் கூறுகிறது. வடமேற்கிலங்கையில் பூநகரிக்கு தெற்கே மாதோட்டத்திற்கு கிட்டேயுள்ள ஒரு இடம் நானாட்டான் என இன்று அழைக்கப் படுகிறது. ஆனால் முன்பு இவ்விடம் நான்கு நாட்டார் என அழைக்கப்பட்டு காலப்போக்கில் அப்பெயர் நானாட்டான் என மாறியதாகக் கூறப்படுகிறது. பல்லவர் ஆட்சியில் மாதோட்டம் அவர்களின் முக்கிய வர்த்தகத் துறைமுகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதென்பதை அங்கு கிடைத்த பல்லவ நாணயங்களும் பல்லவர் காலத்திற்குரிய இந்து விக்கிரகங்களும் உறுதிப் படுத்துகின்றன. பல்லவர் ஆட்சியில் பாடல் பெற்ற தலமாகத் திருக்கேதீஸ்வரமும், முக்கிய துறைமுகமாக மாதோட்டமும் நாயன்மார் பாடல்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. இதனால் மாதோட்டத்திற்கு கிட்டேயுள்ள நானாட்டான் என்ற இடத்தினை பல்லவர் கால நான்கு நாட்டார் என்ற வணிக கணங்களின் குடியேற்றத்தோடு தொடர்புபடுத்தி ஆராய இடமுண்டு.

பூநகரி உதவி அரசாங்க அதிபராக இருந்த கிருஷ்ணமூர்த்தி பல்லவர் காலத்திற்குரிய சிங்க இலச்சினை உடைய நாணயங்கள் சிலவற்றைப் பூநகரிப் பிராந்தியத்திலிருந்து கண்டெடுத்ததாகத் தெரிகிறது. ஆனால் அந்நாணயங்களை நேரில்பார்க்கும் சந்தர்ப்பம் எமக்குக்கிடைக்காததினால் அக்கூற்றை நிச்சயப்படுத்த முடியவில்லை. ஆயினும் பூநகரியில் பல்லவர்கால நாணயங்கள் புழக்கத்தில் இருந்துள்ளதென்பதை எமது ஆய்வின்போது கிடைத்த நாணயமொன்று உறுதிப்படுத்துகிறது. இந்நாணயம் மண்ணித்தலை என்ற இடத்திலுள்ள புராதன சிவாலயத்திற்





படம் - 42. பல்லவர் கால நாணயம்
(அ) பின் பக்கம் (ஆ) முன் பக்கம்

கருகே கண்டெடுக்கப்பட்டதாகும். இது சதுர வடிவில் வெள்ளி முலாம் பூசப்பட்ட செப்பு நாணயமாகும். இதன் முன்பக்கத்தில் குதிரை வடிவிலமைந்த மிருகமொன்றும் (ஆனால் நாணயவியளாளர் இவ்வுருவத்தை சிங்கமெனக் கூறுகின்றனர்) பின்பக்கத்தில் வட்டமும், அதன் நடுவில் நான்கு புள்ளிகளும் உள்ளன (படம் 42 அ, ஆ) இதேவடிவில் அமைந்த நாணயங்கள் பல கந்தரோடை, மாதோட்டம், அநுராதபுரம் ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன. அநுராதபுரத்தில் இந்நாணயம் அதிகமாகக் காணப்பட்டதால் இவற்றைக் கி. பி 2 ஆம், 3 ஆம் நூற்றாண்டுக்குரிய இலங்கை நாணயம் என கொட்றிங்ரன் குறிப்பிட்டார்.[18] இதற்கு இலங்கையின் தேசிய சின்னமான சிங்கம் இந்நாணயத்தில் முன்பக்கத்தை அலங்கரித்துள்ளமையும் ஒரு காரணமாகும். ஆனால் பல்லவர் ஆட்சியில் சிங்கம் ஒரு முக்கிய சின்னமாக அவர்களது நாணயத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் நாணயத்தில் பின்பக்கத்தில்வரும் வட்டமும், அதன் நடுவிலுள்ள புள்ளிகளும் பல்லவர்கால நாணயங்களில் பயன்படுத்தப்பட்டஒன்றாகும். பூநகரி, மண்ணித்தலையில் கிடைத்த நாணயம், பல்லவர் காலத்திற்குரியதென அடையாளம் காணப்பட்ட நாணயத்தை அப்படியே ஒத்திருப்பதால் இதைப் பல்லவர் காலத்திற்குரியதென நிச்சயப்படுத்திக் கூறலாம். மாதோட்டம் பல்லவர் காலவர்த்தகத்தின் முக்கிய துறைமுகமாக விளக்கியதனால்

அதற்கு வடக்கேயுள்ள பூநகரியிலும்இவ்வர்த்தகம் செல்வாக்குச் செலுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதன் காரணமாக பல்லவர்கால நாணயம் இங்கு புழக்கத்திலிருந்திருக்கிறது. இக் கருத்தை இங்கு கிடைத்த இரண்டு சிற்பங்கள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

இவற்றில் ஒன்று உலோகக் கலப்பினாலே செய்யப்பட்ட இந்து விக்கிரகத்தின் உடைந்த பாகங்களாக உள்ளன. இப்பாகங்கள் வெட்டுக்காட்டிலே கைவிரல் அடையாளத்தில் அமைந்த புராதன ஓடுகளுக்களுக்கு இடையிலே கிடைத்தவையாகும் *(படம் -43)*. இவைகளை ஆதாரமாகவைத்து இவ்விக்கிரத்தின் காலத்தையோ, விக்கிரத்தின் அமைப்பையோ கூறமுடியாதுள்ளது. ஆனால் சில துண்டுகளிலே கிரந்த எழுத்துக்கள் காணப்படுகின்றன. தெய்வ உரு



படம் - 43 வெட்டுக்காட்டில் கிடைத்த சிலையின் உடைந்த பாகங்கள்.

வங்களிலே சாசனங்கள் அமைக்கும் மரபு பல்லவர், சோழர் ஆட்சியில் இடம்பெற்றதுண்டு. அதிலும் கிரந்த வரி வடிவங்கள் பல்லவர் காலத்திலே பெருமளவு பின்பற்றப்பட்டதுண்டு. இச் சிலையிலுள்ள கிரந்த எழுத்துக்களை ஆராய்ந்த சிவசாமி அவற்றின் எழுத்தமைதிகொண்டு அவை பிற்பட்ட பல்லவர் காலத்திற்குரிய எழுத்துக்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.[19] இச்சிலை காணப்பட்ட இடத்தில் ஆய்வுகள் செய்யப்பட்டால் மேலும் சான்றுகள் கிடைக்கலாம்.

மற்றையது அரசபுரத்திற்கு அண்மையிலுள்ள ஆலடிச்சோலைக் காட்டுப்பகுதியிலே கண்டுபிடிக்கப்பட்ட விநாயகர் சிற்பமாகும். இது வேட்டையில் ஈடுபட்டோராலே கண்டுபிடிக்கப்பட்டு தற்போது விளாத்திக் காட்டிலுள்ள ஆலயம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது. இது பொன் முலாம் பூசப்பட்ட கருங்கல்லிலே புடைப்புச் சிற்பமாகச் செய்யப்பட்டுள்ளது. இது ஒன்றரையடி உயரமும், முக்காலடி அகலமும் உடையது. சிறிய பீடத்திலே கால்கள் மறைக்கப்பட்டு வளர்ச்சியடையாத நிலையிலே செதுக்கப்பட்டுள்ளது (படம் - 44). இச்சிலையை ஆக்குவதற்குப் பின்பற்றப்பட்ட தொழில்நுட்பமும், கலை நுணுக்கமும் பல்லவ கலைமரபை அப்படியே பிரதிபலிக்கின்றன. இது அநுராதபுர கண்டக சேதத்திய விநாயகர் சிலைகளைவிட வளர்ச்சியடைந்ததாகவும், திருக்கேதீஸ்வரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட பல்லவர்கால விநாயகர் சிலையைவிட வளர்ச்சி குன்றியதாகவும் உள்ளது. இச்சிலை கண்டெடுக்கப்பட்ட ஆலடிச்சோலைக்கு அண்மையிலுள்ள அரசபுரம் வரலாற்றுப் பழைமைவாய்ந்த இடமாகும். இவ்விடம் தற்போது பூநகரி, மன்னார் பிரதான வீதிக்குக் கிழக்கே நான்கு மைல் தொலைவிலே காட்டுப்பிரதேசமாக உள்ளது. இராசநாயகம் முதலியார் தமிழ்ப் பிராந்தியங்களிலே புராதன நகரத்தின் அழிபாடுகள் உள்ள இடங்களில் ஒன்றாக இந்த அரசபுரத்தைக்குறிப்பிட்டுள்ளார்.[20] தற்போது இவ்விடத்தில் ஒரு புராதன கட்டிடம் இருந்ததற்கான கட்டிட அத்திவாரங்களும், சிதறுண்ட நிலையிலே செறிவான செங்கட்டிடங்களும் உள்ளன. இதற்குக் கிழக்கே பாழடைந்த சிறிய குளமும், அயலில் நீர் பாய்ந்தோடுவதற்காக அமைக்கப்பட்ட கால்வாய்க்குரிய கட்டிட அழிபாடுகளும் காணப்படுகின்றன. பல வருடங்களுக்கு முன்னர் இங்கிருந்த கட்டிடங்களை இடித்து அதன் கற்களையும், செங்கட்டிகளையும்கொண்டு மாந்தையிலுள்ள சில ஆலயங்களும், பூநகரி கறுக்காய்த்தீவிலுள்ள கண்ணகி அம்மன் ஆலயமும், யாழ்ப்பாணத்தில் அரியாலை சித்திவிநாயகர் ஆலயமும் கட்டப்பட்டதாகத்தெரிகிறது.[21] இதிலிருந்து இங்கு மிகப் பெரிய கட்டிடம் இருந்ததெனக்கூறலாம். பூநகரியில் வாழும் மக்கள் இங்கிருந்த கட்டிடத்தை அல்லிராணி வாழ்ந்த கோட்டைஎனக் கூறிக் கொள்வதும் இதன் பெருமைக்கொரு சான்றாகும். பூநகரியிலே கடமையாற்றிய சில அரச



படம் - 44. அரசபுரத்தில் கிடைத்த விநாயகர் சிலை.


அதிகாரிகள் இக்கட்டிடப்பகுதியில் இருந்து வேட்டையில் ஈடுபட்டோர் உலோகப் பாத்திரங்கள், வாள் முதலிய சின்னங்களை எடுத்தபோதும் தாம் நேரிலே பார்த்ததாகவும் கூறுகின்றனர்.22 இவ்விடத்துக்கருகிலே பாலாவி என்ற இடம் உள்ளது. இப்பெயர் இங்கு ஏற்பட ஆதிகால மக்கள் திருக்கேதீஸ்வரத்துடன் கொண்ட தொடர்பே காரணம் என்ற கர்ண பரம்பரைக் கதையும் இங்கு நிலவுகின்றது. இவையனைத்தையும் அரசபுரத்திலுள்ள கட்டிட அழிபாடுகள் மிகப்பழைமையானவை என்பதற்குரிய சான்றாதாரங்களாகக்கொள்ளலாம். இந்நிலையில் ஆலடிச்சோலையிலே கிடைத்த விநாயகர் சிற்பத்தை இக்கட்டிடத் தொகுதியுடன் தொடர்புபடுத்தி ஆராயவும் இடமுண்டு.

## பல்லவர் கால இடப்பெயர்கள்

காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்த பல்லவவம்ச ஆட்சியிலே தமிழ் நாட்டிலுள்ள சில இடங்கள் வம்சப்பெயராலும் தலைநகர்ப்பெயராலும் அழைக்கப்பட்டன. பூநகரியிலுள்ள காஞ்சிப்புலவு, காஞ்சி மீனாட்சி, பல்லாய்க்குளம் போன்ற இடப்பெயர்களை நோக்கும்போது இவை பல்லவ தொடர்பால் ஏற்பட்டனவெனக் கருதஇடமுண்டு.

## பாண்டியத் தொடர்பு

பல்லவரின் சமகாலத்தைச்சேர்ந்த முதலாம் பாண்டியவம்சம் தமிழ்நாட்டில் 9ஆம், 10ஆம் நூற்றாண்டுகளில் எழுச்சியடைந்தபோது அவர்களின் அரசியல், வர்த்தகச் செல்வாக்கு இலங்கையிலும் ஏற்பட்டது. பாண்டிய மன்னர்களில் ஒருவனாகிய ஸ்ரீ மாற ஸ்ரீவல்லபன் (கி. பி. 815-862) இலங்கைமீது படையெடுத்து



படம் - 45 பாண்டியர் கால நாணயங்கள்

முதலாம் சேனமன்னனை வெற்றிகொண்டதன் மூலம் இலங்கை மன்னர்கள் பாண்டியர்களின் மேலாதிக்கத்தை ஏற்று ஆட்சிநடத்த நேரிட்டது.23 இக்காலத்திலே பூநகரியிலும் இவர்களது செல்வாக்கு ஏற்பட்டதற்குச் சில நாணயங்கள் சான்றாகும். இவை கல்முனை,வெட்டுக்காடு, ஈழவூர் ஆகிய இடங்களிலே கிடைத்தவையாகும் இவற்றுள் மூன்று நாணயங்கள் ''பழனி'' என்ற வாசகத்தைக் கொண்டுள்ளன (படம் – 45). நான்காவது நாணயம் மேற்கூறப்பட்ட மூன்று நாண

யங்களைவிட அளவிற் சிறிதாகவும் அதிலுள்ள எழுத்துக்கள் தெளிவற்றனவாகவும் உள்ளன. இவ்வகையான நாணயங்கள் இலங்கையின் ஏனைய பாகங்களில் கிடைத்ததாகத் தெரியவில்லை. இப் பாண்டிய நாட்டு நாணயங்களின் பயன்பாடு 10ஆம் நூற்றாண்டுடன் மறைந்து போவதால் இவ்வகை நாணயங்கள் முதலாம் பாண்டியமன்னர் காலத்தில் ஏற்பட்ட தொடர்பால் பூநகரிப் பிராந்தியத்திற்கு வந்ததெனக் கூறலாம்.

தமிழ் நாட்டிலே பல்லவ, பாண்டிய வம்சங்கள் ஆட்சிசெய்த காலத்தில் இலங்கையின் அரசியல் வரலாற்றினை நோக்கும்போது 7ஆம் நூற்றாண்டில் இருந்து அநுராதபுரத்தில் ஆட்சி செய்த சிங்கள மன்னர்களுடைய ஆட்சிக்காலங்கள் மிகக்குறுகியனவாகவும், குழப்பங்கள் நிறைந்தனவாகவும் காணப்படுகின்றன. இதற்குப்பல காரணங்கள் அடிப்படையாக இருப்பினும் தமிழ் நாட்டிலிருந்து ஏற்பட்ட படையெடுப்புக்களும் அரசியல்ரீதியான தலையீடுகளும் காரணமாக அமைந்ததோடு, அநுராதபுரத்திற்கு வடக்கே யாழ்ப்பாணம் உள்ளிட்ட உத்தரதேசத்திலிருந்து (தற்போதைய தமிழ் மாவட்டங்கள்) ஏற்பட்ட படையெடுப்புக்களும், கிளர்ச்சிகளும் காரணங்களாய் அமைந்தன எனக்கூறலாம். 7ஆம் நூற்றாண்டிலே சிலமேக வண்ணன் அநுராதபுரத்தில் ஆட்சிசெய்த காலத்தில் (கி. பி.614 - 623) ஸ்ரீநாகன் என்னும் தலைவன் தென்னிந்தியா சென்று தமிழர் படையுடன் வந்து உத்தர தேசத்தைக் கைப்பற்ற முயன்றான்[24] இந்த ஸ்ரீநாகன் ஒரு தமிழ்த்தலைவன் என்பது சுவாமி ஞானப்பிரகாசர் கருத்தாகும்.[25] இக்காலகட்டத்தில் அநுராதபுர மன்னனாக இருந்த ஹட்டதாத்தனுக்குப் பயந்த மானா என்னும் இளவரசன் பாதுகாப்புக்கருதி உத்தரப்பிரதேசத்தில் தங்கியிருந்து, பின்னர் பல்லவ மன்னனிடம் அடைக்கலம் பெற்றான் எனச் சூளவம்சம் கூறுகிறது.[26] அநுராதபுர வரலாற்றில் சிங்கள மன்னர்கள் தமது பாதுகாப்பு இடமாக உருகுணையையே கருதினர். ஆனால் மானா என்ற இளவரசன் உருகுணையை விட உத்தரப்பிரதேசம் பாதுகாப்பெனக் கருதியமை அநுராதபுர மன்னர்களின் நேரடிக் கட்டுப்பாடு தொடர்ந்தும் உத்தரப்பிரதேசத்தில் இருக்கவில்லை என எண்ணத்தூண்டுகிறது. இதைத்தொடர்ந்து 8ஆம் நூற்றாண்டில் இரண்டாம் மகிந்தன் அநுராதபுரத்தில் ஆட்சிசெய்த போது (கி.பி. 777 - 797) உத்தரப்பிரதேசத்தில் இருந்த மாவட்டத்தலைவர்கள் அநுராதபுர மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டதுடன் வரியிறுக்கவும் மறுத்தனர். இக்கலகத்தை மகிந்தன் படைகொண்டு அடக்கினாலும் அது தொடர்ந்தும் இடம்பெற்றதாகச் சூளவம்சம் கூறுகின்றது.[27] 9ஆம் நூற்றாண்டில் முதலாம் சேனன் ஆட்சிசெய்தபோது (கி. 833 - 853) வட இலங்கையிலே பாண்டியமன்னன் ஸ்ரீமாற ஸ்ரீபல்லவன் தலைமையில் ஒரு படையெடுப்பு நடந்தது. இப்படையெடுப்பில் மாதோட்டத்தில் வாழ்ந்த தமிழ்மக்களும் இணைந்துகொண்டதாலே பாண்டியபடையை எதிர்க்கச்சென்ற சிங்களப்படை தோல்வியடையநேரிட்டது.[28] இப்படையெடுப்பைத்தொடர்ந்து சிங்கள மன்னர் பாண்டியர் மேலாதிக்கத்தை ஏற்று அநுராதபுரத்தில் ஆட்சி செய்ய நேரிட்டது இச்சம்பவங்களையும், பல்லவ பாண்டிய வம்சங்கள் தொடர்பாகப் பூநகரி, மாந்தை ஆகிய இடங்களிலே கிடைத்த சான்றுகளையும் நோக்கும்போது சூளவம்சம் கூறும் உத்தரப்பிரதேசத்தில் இருந்து ஏற்பட்ட படையெடுப்புக்கள், கிளர்ச்சிகள் என்பனவற்றிற்கு இப்பிரதேசத்தில் ஏற்பட்ட பல்லவ, பாண்டிய செல்வாக்குகளும் ஒருவித காரணம் எனக் கூறலாம்.

# அடிக்குறிப்புகள்


1. Codrington, H. W. Ceylon Coins and Currency (Colombo, 1924)
2. Perera, B. J. "Ancient Ceylon and its Trade with India" The Ceylon Historical Journal, No. 3. (Colombo, 195-52), ப. 200
3. மேற்படி,
4. Amita Ray, Life and Art ot Early Andhradesa, (Delhi, 1983,) பக். 31-33
5. Warmington, E. H., The Commerce Between the Roman Empire and India, (Cambridge, 1928) ப. 63
6. Wheeler, R E M. "Arikamedu: an Indo - Roman Trading station on the East cost of India" Ancieut India. No. 2, பக். 17-124
7. ஏகாம்பரநாதன் எ. தொல்லியல் அகழ்வாய்வு நெறிமுறைகள், (சென்னை, 1983), ப. 132
8. மேற்படி., ப. 133
9. மேற்படி., ப. 134
10. மேற்படி,. ப. 134
11. மேற்படி., ப. 135
12. சிவசாமி, வி. யாழ்ப்பாணக் காசுகள், (வட்டுக்கோட்டை, 1974), ப. 5
13. மேற்படி,
14. இந்திரபாலா, கா. இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, (கொழும்பு, 1970), பக். 7 - 9
15. கோபாலகிருஷ்ண ஐயர், ப. "சிவாகமங்களும் சிற்ப நூல்களும் சித்தரிக்கும் சிவவிக்கிரகவியல்" கலாநிதிப் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு, (யாழ்ப்பாணம், 1981), ப- 729
16. சிற்றம்பலம், சி. க. "ஈழத்தமிழர் வரலாறு" 1500 வரை, கருத்தரங்குக் கட்டுரை, (யாழ்ப்பாணம் - 1991)
17. Silva, K. M. D. A History of Sri Lanka, (Colombo, 1981,) பக். 20-21
18. Codrington, H. W. மு. கூ. நூ.
19. உரையாடலின்போது கூறப்பட்டது
20. Rasanayagam, C. Ancient Jaffna, (Madras, 1926), ப. 83
21. பல்லவராயன்கட்டு கிராமசேவகர் பிரிவில் 1970-75 காலப்பகுதியில் கிராமசேவகராகக் கடமையாற்றிய நவரட்ணம் உரையாடலின்போது கூறியது.
22. மேற்படி,
23. சூளவங்ஸ, அத்- 50, செய். 12–42
24. மேற்படி, அத். 44, செய், 70-73
25. ஞானப்பிரகாசர் சுவாமி, யாழ்ப்பாண வைபவ விமர்சனம், (அச்சுவேலி, 1928). பக். 47-50
26. சூளவங்ஸ, அத். 47, செய். 2-7
27. மேற்படி, அத். 48, செய். 83–84
28. மேற்படி, அத். 49, செய். 84–85

# 4. சோழர் ஆட்சிக் காலமும் பூநகரியும்

## சோழர் ஆட்சியில் தென்னிந்தியா

சங்ககாலத்தில் சிற்றரசர்களாக இருந்து ஆட்சிபுரிந்த சேர, சோழ, பாண்டியர்களின் வம்ச வரலாறு கி. பி. 3ஆம் நூற்றாண்டிற்கும் கி. பி. 6ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் தமிழ்நாட்டு வரலாற்றில் இருள்சூழ்ந்து காணப் படுகிறது. ஆனால் கி. பி. 6ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டிற் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவவம்சம் புதிதாக எழுச்சியடைந்த போது மீண்டும் சேர, சோழ, பாண்டிய வம் சங்களின் ஆட்சி தமிழ்நாட்டில் இடம்பெறத் தொடங்கியது. ஆரம்பத்திற் சிறிய நிலப்பகுதி களில் ஆட்சிபுரிந்த பல்லவ, பாண்டிய, சோழ வம்சங்கள் காலப்போக்கில் பரந்த நிலப்பரப்பில் ஆதிக்கம் செலுத்தத் தமக்குள்ளே பல போராட் டங்களை நடத்தின. இதன் விளைவால் 9ஆம் நூற்றாண்டில் சோழவம்சம் ஒரு வலிமைமிக்க அரசாக எழுச்சியடைந்தது. இதற்கு முதலாம் ஆதித்தசோழன் (கி. பி. 846 - 881) தஞ்சையில் அடைந்த வெற்றி அத்திவாரமமைத்துக் கொடுத் தது.[1] இவ்வெற்றியைத் தொடர்ந்து சோழருக் குப் போட்டியாக இருந்த பல்லவ, பாண்டியரின் வம்சங்கள் படிப்படியாக வீழ்ச்சியடைய, சோழர் தமது ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டில் நிலைநாட் டிக்கொண்டனர்.

கி. பி. 10ஆம் நூற்றாண்டளவில் தமிழ்நாட் டின் பரந்த நிலப்பரப்பைத் தமது ஆதிக்கத் தின் கீழ்க்கொண்டு வந்த சோழர் அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் இயற்கையெல்லை யைத்தாண்டித் தென்னிந்தியாவில் ஆதிக்கம் பெறமுற்பட்டனர். ஆனால், தமிழ்நாட்டிற்கு வடக்கிலிருந்து சோழருக்கு எதிராக ஏற்பட்ட படையெடுப்புக்களும், தமிழ்நாட்டிற்கு மேற் கிலிருந்து ஏற்பட்ட அராபியரது வர்த்தக எழுச்சி யும் சோழரின் வளர்ச்சிக்குச் சவாலாக அமைந் தன. இதனால் தஞ்சையில் மன்னனாக முடி சூடிக்கொண்ட சோழ அரசர்கள் தமிழ்நாட் டிற்கு வடக்கிலும், மேற்கிலும் அடிக்கடி படை யெடுக்கநேரிட்டது. இப்படையெடுப்பாற் சோழர் அடைந்த வெற்றிகள் சோழ அரசை அரசியல் ரீதியாக மட்டுமன்றிப் பொருளாதார ரீதியாக வும் பலப்படுத்தின. இதனால் பல்லவர் ஆட்சிக் காலத்தில் தோன்றிய நானா தேசிகர், மணிக் கிராமத்தார், வலஞ்சியர், திசையாயிரத்து ஐநூற்றுவர் முதலான வணிக கணங்கள் சோழர் ஆட்சியில் மிகத்தீவிரமாகச் செயற் பட்டன. இவ்வணிக கணங்கள் வர்த்தக நட வடிக்கைகளில் மட்டுமன்றி சோழ அரசுடன் இணைந்து புதிய வர்த்தக நகரங்களைத் தோற்று விக்கவும், தனிப்பட்ட படைப்பிரிவுகளை உரு வாக்கவும், இந்துப் பண்பாட்டை வளர்க்கவும் காரணமாயின.[2]

இவ்வாறு 10ஆம், 11ஆம் நூற்றாண்டில் சோழ அரசியலும், வர்த்தகமும் ஒன்றிணைந்து செயற்பட்டமைதான் தென்னிந்திய வரலாற்றில் சோழ அரசு கடல்சார்ந்த பேரரசாக மாறக் காரணமாகியது. இக்காலப்பகுதியிலேதான் சோழரது அரசியல் ஆதிக்கம் இலங்கையுட்பட தென்கிழக்காசிய நாடுகள்வரை பரவின.

## சோழராட்சியில் இலங்கை

தென்னிந்தியாவில் சோழ அரசு எழுச்சி யடைந்தபோது, அவ்வரசின் செல்வாக்கு இலங்கை வரலாற்றில் பல மாறுதல்கள் ஏற்பட வழிவகுத்தது. இம்மாற்றங்களை இலங்கையில் ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் பலரும் விரும் பாததினாற் சோழருக்கு எதிராகப் போரிட்ட தமிழ்நாட்டு வம்சங்களுக்குக் குறிப்பாகப் பாண் டிய வம்சத்திற்கு ஆதரவாகச் சிங்கள மன்னர் கள் படை உதவி அளித்தனர். இதனால், தமிழ் நாட்டில் பாண்டியவம்சத்தை வெற்றிகொண்ட சோழர் அவ்வெற்றியின் பின்னர் இலங்கைமீது

படையெடுக்க நேரிட்டது. முதலாம் பராந்தக சோழன் காலத்தில் (கி. பி. 907 - 953) ஆரம்பித்த இப்படையெடுப்புமூன்றாம் குலோத்துங்கன் காலத்திலேயே (கி. பி. 1178-1218) முடிவுற்றது.

முதலாம் பராந்தகசோழன் காலத்திற் சோழருக்கும் பாண்டியருக்கும் இடையே நடந்த ஆதிக்கப் போராட்டத்தில் சோழர் மதுரையைக் கைப்பற்றியபோது அநுராதபுர மன்னன் 5ஆம் கஸபன் (கி. பி. 939) பாண்டியருக்கு உதவியாகச் சக்க சேனாதிபதி தலைமையிற் படையனுப்பி வைத்தான்.[3] இப்போரில் பராந்தகசோழன் வெற்றியடைந்ததும் தோல்வியடைந்த பாண்டிய மன்னன் இராசசிம்மன் தன்முடியையும், செல்வத்தையும் இலங்கையில் அடைக்கலமாக வைத்துவிட்டு, தன் தாயினது நாடாகிய கேரளத்திற்குச் சென்றான். இம் முடியையும், செல்வத்தையும் பெறவிரும்பிய பாராந்தகசோழன் இலங்கை மன்னனிடம் தூதனுப்பினான். அப்போது அநுராதபுரத்தில் ஆட்சிசெய்து கொண்டிருந்த நான்காம் உதயமன்னன் இவற்றைக் கொடுக்க மறக்கவே முதலாம் பராந்தகசோழன் கி. பி. 949 அளவில் வடஇலங்கைமீது படையெடுத்து அநுராதபுரத்தைக் கைப்பற்றினான். இவ்வெற்றியைப் பராந்தகனின் 38ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ''மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வாமன்'' எனச் சிறப்பித்துக்கூறுகிறது.[4]

சுந்தரசோழன் ஆட்சிக்காலத்தில் (கி. பி. 957 - 973) நடைபெற்ற பாண்டிய சோழப் போராட்டத்தில் மீண்டும் சிங்கள மன்னர்கள் சோழருக்கு எதிராகச் செயல்படத் தொடங்கினர். அப்போது அநுராதபுர மன்னனாக இருந்த நான்காம் மகிந்தன் பாண்டிய மன்னர்களுக்குச் சார்பாகத் தனது சிங்களப்படை வீரர்களைத் தமிழ்நாட்டிற்கு அனுப்பிவைத்தான்.[5] ஆனால் இப்போராட்டத்தில் சோழப் படைத்தளபதி இறந்ததும் போர் சமாதானத்தில் முடிவுற்றது. சூளவம்சம் என்ற பாளிநூல் அநுராதபுரத்தில் நான்காம் மகிந்தன் ஆட்சிசெய்த காலத்தில் (கி. பி. 956-973) தென்னிந்திய மன்னன் வல்லப யாழ்ப்பாணத்தின் (நாகதீபம்) மீது படையெடுத்தான் எனக்கூறுகிறது.[6] வரலாற்றாசிரியர்கள் சிலர் இப் வல்லப மன்னனைச் சுந்தரசோழன் எனக் கூறுகின்றனர்.[7]

சுந்தரசோழனை அடுத்து ஆட்சிக்கு வந்த முதலாம் இராஜராஜசோழன் ஆட்சிக்காலத்தில் (கி. பி. 985-1014) இலங்கைமீது சோழர் மேற்கொண்ட படையெடுப்பு இலங்கை வரலாற்றில் பலவகையிலும் முக்கியத்துவம்வாய்ந்த ஒன்றாகும். முதலாம் இராஜராஜசோழன் பாண்டிய, சேரமன்னர்களுக்கு எதிராகப் படையெடுத்தபோது அநுராதபுரத்தில் ஆட்சிசெய்துகொண்டிருந்த ஐந்தாம் மகிந்த மன்னன் (கி.பி 982) பாண்டிய மன்னர்களுக்குச் சார்பாக நடந்துகொண்டான்.[8] இதனால் பாண்டியர்களை வெற்றிகொண்ட முதலாம் இராஜராஜசோழன் தன்மகன் முதலாம்இராஜேந்திரசோழன் தலைமையில் சோழப்படையொன்றை இலங்கைக்கு அனுப்பிவைத்தான். இப்படை இலங்கையை வந்தடைந்தபோது அதை எதிர்க்க வலிமையற்ற ஐந்தாம் மகிந்தன் உருகுணைக்குத் தப்பியோடினான். இதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய சோழப்படை கி. பி. 993 இல் தலைநகர் அநுராதபுரத்தைக் கைப்பற்றி வடஇலங்கையைத் தமது மேலாதிக்கத்தின் கீழ்க்கொண்டு வந்தது.[9] இவ்வெற்றியைத் தொடர்ந்து முதலாம் இராஜேந்திரசோழன் ஆட்சிக்காலத்தில் (கி. பி. 1012-1044) மேற்கொள்ளப்பட்ட இன்னொரு சோழப்படையெடுப்பால் 1017இல் முழு இலங்கையும் சோழர் ஆட்சியின் கீழ்க்கொண்டு வரப்பட்டது.[10]

முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலத்தில் (கி. பி 1070-1120) தென்னிந்தியாவில் ஏற்பட்ட மாறுதல்கள் இலங்கையிற் சோழரது ஆதிக்கத்தைப் பலவீனமடையச் செய்தது. இதைச் சாதகமாகப் பயன்படுத்திய முதலாம் விஜயபாகு சோழர் ஆட்சியில் இருந்த பொலநறுவையை 1070 இல் கைப்பற்றிக் கொண்டான்.[11] இதனாற் சிங்கள வம்சத்தின் ஆட்சி பொலநறுவையில் இடம்பெறத் தொடங்கியது. எனினும் சோழமன்னர்களது இலங்கை மீதான படையெடுப்புக்கள் உடனடியாக முற்றுப் பெற்றதாகக் கூறுவதற்கில்லை. பொலநறுவை மன்னர்களும் அநுராதபுர மன்னர்களைப் போலத் தென்னிந்தியாவில் ஏற்பட்ட வம்சப் போராட்டங்களிற் சோழருக்கு எதிராகச் செயற்பட்டதால் தென்னிந்தியாவில் மீண்டும் தமது ஆதிக்கத்தைப் பலப்படுத்திய சோழ மன்னர்கள்

அவ்வப்போது இலங்கைமீதும் படையெடுத்த னர். இதற்கு முதலாம் குலோத்துங்கன்.12 இரண்டாம் இராசாதி ராஜசோழன்.13 (கி. பி. 1163-1178) மூன்றாம் குலோத்துங்கன்.14 (கி. பி. 1178 - 1218) ஆகியோர் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இலங்கைமீதான படையெடுப்புக்கள் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்,

எனவே ஏறத்தாழ இலங்கையின் 250 ஆண்டுக்கால அரசியல் வரலாற்றைத் தென்னிந்தியாவில் ஆட்சிபுரிந்த சோழவம்சத்துடன் தொடர்புபடுத்தி ஆராய்வதே பொருத்தமெனலாம். இக்காலப் பகுதிக்குள் இலங்கையில் ஏற்பட்ட சோழரின் 77 ஆண்டுக்கால நேரடி ஆட்சி பௌத்த சிங்கள வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட வழிவகுத்தன. கி. பி 993 இல் முதலாம் இராஜராஜன் வடஇலங்கையை வெற்றி கொண்டதன் மூலம் 1300 ஆண்டுகள் இலங்கை மன்னர்களின் இராசதானியாக விளங்கிய அநுராதபுரம் கைவிடப்பட்டுப் புதிய தலைநகர் இராஜராஜனின் விருதுப் பெயரான ஜனநாதமங்கலம் என்ற பெயருடன் பொலநறுவைக்கு மாற்றப்பட்டது.15 இப்பொலநறுவையே பிற்காலத்தில் சிங்கள மன்னர்களின் தலைநகராக வடஇலங்கையிற் புதிய தமிழரசு தோன்றும் வரை இருந்தது. இம்மாற்றத்தைத் தொடர்ந்து இலங்கை மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயரில் சோழரின் 9 ஆவது மண்டலமாகச் சோழ நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டது.16 சோழராட்சியால் இதுவரை அரச ஆதரவில் வளர்ச்சியடைந்த பௌத்தமதமும், அம்மதம் சார்ந்த பண்பாடும் படிப்படியாக வீழ்ச்சியடைய இந்து மதமும், அம்மதம் சார்ந்த பண்பாடும் அரச ஆதரவில் வளர்ச்சியடைந்தன. இதன் வளர்ச்சி இலங்கைத் தமிழர் வரலாற்றில் நிரந்தரமாக இணைந்து கொண்டதுடன் பிற்காலத்தில் பௌத்த சிங்கள பண்பாட்டிலும் செல்வாக்குச் செலுத்தின. அநுராதபுர அரசில் நீண்டகாலம் பின்பற்றப்பட்ட நிர்வாக முறை பொலநறுவை அரசில் கைவிடப்பட்டுத் தமிழ்நாட்டிற் பின்பற்றப்பட்ட சோழநிர்வாக முறை அறிமுகம் செய்யப்பட்டது.17 இச்சோழநிர்வாக முறையை பின்னர் ஆட்சிக்கு வந்த சிங்கள மன்னர்கள் கைவிட்டபோதிலும் சிங்கள நிர்வாகத்தில் தமிழர்கள் பங்கெடுத்ததினால் அத்தமிழ் நிர்வாகிகள் தொடர்பான ஆவணங்களைச் சிங்கள மன்னர்கள் சிலர் தமிழிலேயே வெளியிட்டனர்.18 சோழப்படையெடுப்புக்களோடு இலங்கை வந்த வேளைக்காரர், வலங்கை, இடங்கை, சிறுதனம், பிள்ளைத்தனம், வடுகர் முதலான படைப் பிரிவுகள் பொலநறுவையில் சோழராட்சி 1070 இல் முடிவுற்றதன் பின்னர் இலங்கையில் நிரந்தரமாகத் தங்கிக்கொண்டன.19 இப்படைப் பிரிவுகளே முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு.20 ஜெயபாகு21 2ஆம் கஜபாகு22 ஆகிய சிங்களமன்னர் ஆட்சியில் அரசையும் பௌத்த மதத்தையும் பாதுகாத்தன. இப்படைப்பிரிவுகள் அரசனுக்கு விசுவாசமாகச் செயல்பட்டாலும் தம் நாட்டிற்கும் இனத்திற்கும் எதிராகச் சிங்கள மன்னர்கள் நடந்தபோதெல்லாம் அவர்களை எதிர்த்துப் பொலநறுவை அரசையே கைப்பற்றின.23 இப்படைப் பிரிவுகளின் செயற்பாடுகளே சிங்கள மன்னர்கள் பொலநறுவை அரசைக் கைவிடவும், வடஇலங்கையில் தமிழரசு ஒன்று தோன்றுவதற்கும் பின்னணியாக விளங்கின. இக்கூற்றைத் தமிழர் பிராந்தியங்களிற் சோழர் ஆட்சி தொடர்பாகக் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

## சோழராட்சியில் தமிழர் பிராந்தியங்கள்

இலங்கையில் சோழராட்சியில் தலைநகராகப் பொலநறுவை இருந்துள்ள போதிலும் சோழரது அரசியல், வர்த்தக பண்பாட்டு நடவடிக்கைகள் தமிழர் பிராந்தியங்களில் அதிகரித்திருந்தமைக்கே அதிக சான்றுகள் இதுவரை கிடைத்துள்ளன. இதற்கு சோழர் காலத் தொடர்புகள் இலங்கையில் ஏற்பட முன்னரே இப்பிராந்தியங்களில் தமிழர்கள் செறிவாக வாழ்ந்து வந்தமை சோழர்களும் தமது நடவடிக்கைகளை இப்பிராந்தியங்களில் மேற்கொண்டமைக்குக் காரணம் எனலாம். சோழராட்சியைத் தொடர்ந்து இலங்கையில் அரசியல், நிர்வாகம், வர்த்தகம், பண்பாடு தொடர்பான கல்வெட்டுகள் பல தமிழில் வெளியிடப்பட்டன. திருகோணமலை மாவட்டத்தில் இருந்து மட்டும் இதுவரை இருபத்தைந்து தமிழ்ச் சாசனங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.24 இக்கல்வெட்டுகள் சிலவற்றிலிருந்து சோழரது அரசியல், இராணுவ வர்த்தக

நடவடிக்கைகளின் முக்கிய கேந்திரமையமாக, திருகோணமலைப் பிராந்தியம் விளங்கியதென் பதை உணரமுடிகிறது.

சோழராட்சியில் கிழக்கிலங்கையில் திருகோணமலை முக்கியத்துவம் பெற்றதைப்போல் வடஇலங்கையில் வடமேற்கிலங்கை பெற்றிருந்த தெனக் கூறஇடமுண்டு. சோழமன்னர்கள் மேற்கொண்ட பெரும்பாலான படையெடுப்புக்கள் வர்த்தக நலன்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன இதனால் சோழ மன்னர்கள் தமது வர்த்தக வளர்ச்சிக்குச் சாதகமான இடங்களை அரசியல் ரீதியாக வெற்றி கொள்வதில் அதிக கவனம் செலுத்தினர். தமிழ்நாட்டிற்கு மேற்கேயுள்ள வர்த்தக மையங்களைச் சோழர் தமது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவந்ததன் மூலம் அராபியரது வர்த்தக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தினர்.

இது காரணமாக அராபியர் தமது வர்த்தகத்தை வங்காள விரிகுடா ஊடாக வளர்க்க முற்பட்டனர். இதனால் தமிழ்நாட்டிற்குத் தென் கிழக்கேயுள்ள இலங்கையைச் சோழர் தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவர நேரிட்டது. சோழரின் இந்த நோக்கத்திற்கு யாழ்ப்பாணந் தொட்டு மாதோட்டம் வரையிலான வடமேற்கிலங்கை வாய்ப்பாக அமைந்தது. இவ்விடத்தை முதலிற் சோழர் வெற்றி கொண்டமை அராபிய வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தவும் இங்கிருந்து சிங்கள அரசை வெற்றி கொள்ளவும் வாய்ப்பாகியது. எனவே சோழரின் அரசியல் ஆதிக்கம் பொலநறுவையில் ஏற்பட முன்னரே வடமேற்கிலங்கையில் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு இக்கருத்தை உறுதிப்படுத்துவதில் மாதோட்டத்தில் கிடைத்த சோழச் சாசனங்கள் ஓரளவு உதவுகின்றன.

இங்கு கிடைத்த நான்கு கல்வெட்டுக்களில் இருந்து சோழர் காலத்தில் மாதோட்டம் 'ராஜராஜபுரம்' என குறிக்கப்பட்டதையும் இங்கிருந்த வீதியொன்று இராஜராஜப் பெருந்தெரு என்ற பெயரில் வழங்கியது பற்றியும் அறியமுடிகிறது.[25] மேலும் சோழநாட்டுத் தலைவன் ராஜராஜசோழனின் பெயரில் 'இராசராசேச்வரம்' என்னும் சிவாலயம் ஒன்றை இங்கு அமைத்ததாகவும்.[26] சோழநிர்வாகத்தில் மாதோட்டம் 'அருண்மொழித்தேவ வளநாடு'[27] என்னும் பெயரைப் பெற்றிருந்ததாகவும் அறியமுடிகிறது. இச்சான்றுகளை நோக்கும்போது சோழர் காலத்தின் பல்வேறு சமூகப் பிரிவுகள் குடியேறியிருந்த ஒரு முக்கிய கேந்திர மையமாக மாதோட்டம் விளங்கியதெனக் கூறமுடிகிறது. இக்கூற்றை மேலும் உறுதிப்படுத்துவதில் முதலாம் இராஜேந்திர சோழனின் இலங்கை வெற்றி பற்றிக் கூறும் கல்வெட்டை இங்கு விரிவாக எடுத்து நோக்கலாம்.

இக்கல்வெட்டு ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடையிலுள்ள ஒல்லாந்தர் கடற்கோட்டையாகிய ஹமென் உறில் கோட்டையிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டது.[28] ஆயினும் இக்கல்வெட்டு மாதோட்டத்திலேயே பொறிக்கப்பட்டதென்பதைக் கல்வெட்டின் வாசகத்திலிருந்து நிச்சயப்படுத்த முடிகிறது அக்கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. ஈழமு(மு)
3. (ங்)துவ்கொ
4. ண்டு ஈழ
5. த்தரெச ரெ
6. யும் பெண்
7. டிர் பண்டார
8. மும்பிடிச்
9. சுக் கொடுபொ
10. ன அதிகார
11. த் தண்டநாச
22. கனார் ஐய
13. (ங்) கொண்டெ(சா)
14. (மு) மூ வெந் (த)
15. வெளார் மா
16. தொட்டமான
17. இராசராசபுர

இக்கல்வெட்டில் முதலாவது ராஜேந்திர சோழனது படைகள் இலங்கைமீது படையெடுத்து இலங்கை மன்னனையும், அவனது அரசியையும், செல்வங்களையும் கைப்பற்றிக் கொண்டுபோன செய்தி கூறப்பட்டுள்ளது. இதே செய்தி விரிவாகச் சூளவம்சத்திலும்[29] ராஜேந்திரனுடைய கரந்தைச் (தஞ்சாவூர்) செப்பேடுகளிலும்[30] கூறப்

பட்டுள்ளது. மேலும் இக்கல்வெட்டில் இலங்கை முழுவதும் சோழரால் வெற்றிகொள்ளப்பட்ட செய்தி கூறப்படுவதனால் இக்கல்வெட்டு1070இன் பின்னர் மாதோட்டத்தில் பொறிக்கப்பட்ட தென்பது தெரியவருகிறது. பொதுவாக, சோழர் இலங்கையில் அடைந்த வெற்றிபற்றிக் கூறும் கல்வெட்டுக்கள் தென்னிந்தியாவிலேயே கிடைக் கப் பெற்றுள்ளன. ஆனால் இராஜேந்திரசோழன் காலவெற்றி பற்றிக்கூறும் இக்கல்வெட்டு மாதோட்டத்திற் பொறிக்கப்பட்டதை நோக் கும்போது சோழர் சிங்கள அரசை வெற்றி கொள்ள வடமேற்கிலங்கையில் மாதோட்டத்தை ஒரு தளமாகப் பயன்படுத்தினர் என எண்ணத் தூண்டுகிறது. இவ்வெண்ணத்தைப் பூநகரியில் சோழர் தொடர்பாகக் கிடைத்துவரும் சான்று கள் மேலும் உறுதிசெய்கின்றன.

## சோழராட்சியில் பூநகரி

வடஇலங்கையில் சோழராட்சி தொடர்பான சான்றுகள் மாதோட்டத்திற் கிடைத்ததைப் போல் ஏனைய இடங்களிற் கிடைத்ததாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணக்கோட்டை,31 ஊர் காவற்றைக்கோட்டை,32 நாரந்தனை33 ஆகிய இடங்களில் ஓரிரு சோழச் சாசனங்களும், விக் கிரகமும், நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட் டாலும், அவைகளை அடிப்படையாகவைத்து அவ்விடங்களில் ஏற்பட்ட சோழர்கால ஆட்சியின் முக்கியத்துவத்தைப் பூரணமாக அறியமுடிய வில்லை. ஆனால் அண்மையில் பூநகரிப் பிராந் தியத்தில் சோழராட்சி தொடர்பாகக் கிடைத்த பல சான்றுகள் சோழத் தொடர்பால் சோழர் ஆட்சியால் பூநகரிப் பிராந்தியத்தில் ஏற்பட்ட வர்த்தகம், அரசியல், குடியேற்றம், பண்பாடு ஆகிய துறைகளின் முக்கியத்துவத்தை அறிய உதவுகின்றன.

கி. பி. 10ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இலங்கை-தென்னிந்தியத் தொடர்பிற்கு மாதோட்டம் முக்கிய துறைமுகமாகப் பயன்படுத் தப்பட்டதை இரு நாட்டு இலக்கியங்களும் எடுத்தியம்புகின்றன. ஆனாற் பத்தாம் நூற்றாண்டில் சோழர் அநுராதபுரத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அதன் முக்கியத் துவம் படிப்படியாக வீழ்ச்சியடைந்ததை இவ் விலக்கியங்கள் மட்டுமன்றித் தொல்பொருட் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன.34 சோழர் ஆட்சிக்காலத்தில் இருந்து மாதோட்டத்தோடு ஊர்காவற்றுறை முக்கிய துறைமுகமாகப் பயன் படுத்தப்பெற்றது. பத்தாம் நூற்றாண்டில் வட இலங்கைமீது (நாகதீபம்) படையெடுத்த தென் னிந்திய மன்னன் (இரண்டாம் பராந்தக சோழன்?) தனது படைகளை ஊர்காவற்றுறை யூடாகக் கொண்டுவந்தான் எனக் கூறப்படுகின் றது.35 11ஆம் நூற்றாண்டிற் பொலநறுவையில் ஆட்சிசெய்த முதலாம் விஜயபாகு (கி. பி. 1070-1110) இத் துறைமுகத்தினூடா கத் தென்னிந்தியாவுடனும், தென்கிழக்காசிய நாடுகளுடனும் வர்த்தகத்தில் ஈடுபட்டான் எனக் கருதப்படுகின்றது 35 12ஆம் நூற்றாண்டிற் பொல நறுவையில் ஆட்சிபுரிந்த முதலாம் பராக்கிரம பாகு (கி. பி. 1153-1186) பர்மாவுடன் மேற் கொண்ட யானை வர்த்தகம் இத்துறைமுகத்தி னூடாக நடந்ததை நயினாதீவிற் கண்டுபிடிக் கப்பட்ட தமிழ்ச் சாசனம் உறுதிப்படுத்துகிறது.36 இதே காலப்பகுதிக்குரிய தென்னிந்திய திருவா லங்காட்டுக்குச் சாசனம் ஒன்று(கி.பி.1163-1178) சோழர் வடமேற்கிலங்கையில் வெற்றிகொண்ட இடங்களாக ஊர்காவற்றுறையுடன் மட்டிவாழ், புலச்சேரி, மாதோட்டம் முதலிய இடங்களையும் கூறுகின்றது 37 இச்சான்றுகள் அனைத்தும் மாதோட்டத்தின் பின்னர் இலங்கை-தென்னிந் தியத் தொடர்பில் ஊர்காவற்றுறை பெற்ற முக் கியத்துவத்திற்கு ஆதாரமாக அமைகின்றன. ஆயினும் ஊர்காவற்றுறையுடன் கிழக்கே நேரெதிரேயுள்ள பூநகரியில் உள்ள சில இடங் களும் (மட்டிவாழ், புலச்சேரி) சோழ சாசனத் திற் கூறப்படுவதால் சோழராட்சியில் இரு நாடு களுக்கு இடையிலான வர்த்தகம், அரசியல், பண் பாடு முதலான தொடர்புகள் பெருமளவுக்கு ஊர்காவற்றுறை, பூநகரி ஊடாக நடந்தன வெனக் கருதஇடமுண்டு.

## பூநகரியில் சோழ வர்த்தகம்

தமிழ்நாட்டில் சோழப்பேரரசு எழுச்சி பெறு வதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பூந கரிப் பிராந்தியத்திற்கும் அயல் நாடுகளுக்கு மிடையே நெருங்கிய வர்த்தகத்தொடர்பு இருந்


ததற்கு உறுதியான சான்றுகள் பூநகரியிற் கிடைத்துள்ளன. இதனால், சோழர் காலத்திலும் சோழப்பேரரசுடனான வர்த்தகம் பூநகரியில் ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. தமிழ்நாடு திருவாலங்காட்டுச் சாசனமொன்று சோழர் வடமேற்கிலங்கையில் வெற்றிகொண்ட இடங்களாகக் கூறப்பட்டுள்ள மட்டிவாழ், புலச்சேரி, பூநகரிப்பிராந்தியத்தில் உள்ள மட்டுவில்நாடு, புலையர்குடா என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ்விரு இடங்களிலுமுள்ள இயற்கையான துறைமுகங்கள் தமிழ்நாட்டுடனான கடல்வழித் தொடர்புக்கு ஆதிகாலம் தொட்டுப் பயன்படுத்தப்பெற்றிருக்கலாம் என்பதை இன்னும் அத்துறைமுகப் பகுதிகளிற் காணப்படும் கட்டிடச் சிதைவுகளும் அங்குகிடைத்த சோழ, பாண்டிய மத்தியகால நாணயங்களும் உறுதிப்படுத்துகின்றன. இத்துறைமுகங்கள் சோழர்கால வர்த்தகத்திற்குப் பயன்படுத்தப்பட்டதோடு சோழ ஆதிக்கத்தின் கீழ் அவை நீண்டகாலம் இருந்திருக்கலாம் எனவும் கருத இடமுண்டு. திருவாலங்காட்டுச் சாசனம் மாதோட்டம் புலச்சேரியுள்ளிட்ட பகுதிகளை வெற்றிகொண்ட சோழர் படைகள் அங்கிருந்த யானைகளைச் சோழநாடு கொண்டு சென்றதாகக்கூறுகிறது.[38] பூநகரி புலையர்குடாத் துறைமுகம் பகுதியை அடுத்த கிராமம் யானைப்பூட்டு என அழைக்கப்படுகிறது. இதன்மூலம் இத்துறைமுகத்தினூடாகவும் சோழர் கால யானை வர்த்தகம் நடத்தியிருக்கலாம் எனக் கூற இடமுண்டு.

இலங்கையில் சோழர் மேற்கொண்ட வர்த்தக நடவடிக்கைகளை அறிவதற்கு இலக்கியங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள் என்பன உதவுகின்றன. இவற்றுள் சோழ மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. பூநகரியிலும் சோழர்கால வர்த்தக நடவடிக்கைகள் இருந்ததை அறிய நாணயங்களே முக்கிய சான்றாக விளங்குகின்றன. சோழர் ஆட்சிக்காலத்தில் பொன்னாலும், செப்பாலும் செய்யப்பெற்ற நாணயங்கள் வழங்கிவந்தன என்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது.[39] இவற்றுட் செப்பு நாணயங்களே தமிழகத்தில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. சோழக் கல்வெட்டில் இக்கால நாணயங்கள் காசு, கச்சாணம், அக்கம், திரமம், புசபாலஸ்படை, கண்டகோபாலன்படை என வேறு பெயர்களாலும் குறிக்கப்பட்டுள்ளன.[40] ஈழக்காசு என்ற பெயரில் ஒருவகை நாணயம் அக்காலத்தில் வழங்கி வந்துள்ளமை கல்வெட்டுக்களால் அறியப்பட்டுள்ளது.

அறிஞர்கள் சிலர் ஈழம் என்பது பொன் என்னும் பொருள்படுமாகலினால் அது சோழ மன்னர் வெளியிட்ட பொற்காசு எனவும் வேறுசிலர் ஈழநாடாகிய இலங்கை மன்னர் வெளியிட்ட நாணயம் எனவும் கூறுவர்.[41] தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ள காலத்தால் முந்திய நாணயம் உத்தமசோழன் காலத்தில் வெளியிடப்பட்ட பொன் நாணயமாகும்.[42] இதன் பின்னர் அங்கு கிடைத்தவை பெரும்பாலும் முதலாம் இராஜராஜன் இராசேந்திரன் காலத்துக்குரிய செப்பு நாணயங்களாகும். இந் நாணயங்கள் பெரும்பாலும் தேவநாகிரி எழுத்தில் மன்னனின் இயற்பெயர் அல்லது சிறப்புப்பெயர் கொண்டு காணப்படுகின்றன.[43] இக்காலச் சோழ மன்னர்களின் கல்வெட்டுக்கள் பெரும்பாலானவை தமிழில் எழுதும் வழக்கம் இருந்தும்கூட நாணயங்களில் தேவநாகிரி பயன்படுத்தப்பெற்றதற்குச் சர்வதேச வர்த்தக நோக்கமே காரணம் என்பது அறிஞர் கருத்து. இதனால் சோழர் ஆதிக்கத்திற்கு உட்படாத நாடுகளிலே கூட இவை வர்த்தகம், கலாசாரத் தொடர்புகளாற் பரவியுள்ளன.

இலங்கையில் இராஜராஜன், இராஜேந்திர சோழன் கால நாணயங்கள் பல அநுராதபுரம், பொலநறுவை, மாதோட்டம், யாழ்ப்பாணம் போன்ற இடங்களிற் கிடைத்துள்ளன. பூநகரியிலும் எமது ஆய்வின்போது மண்ணித்தலை, வெட்டுகாடு, ஈழஊர் ஆகிய இடங்களில் இருந்து இவ்வகை நாணயங்கள் கிடைத்துள்ளன (படம் 46, அ. ஆ). இவையனைத்தும் முதலாம் இராசராசன் காலத்தில் வெளியிடப்பட்ட செப்பு நாணயங்களாகும். இதன் முன்பக்கத்தில் மன்னர் நிற்கும் நிலையிலும் பின்பக்கத்தில் இருக்கும் நிலையிலும் காணப்பட்ட இடதுபுறத்தில் தேவநாகிரியில் ஸ்ரீ ராஜராஜ என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. சோழக் கல்வெட்டில் இவன் வெளியிட்ட நாணயங்கள் இராஜராஜன் மாடை எனவும், இராஜராஜன் காசு எனவும் கூறப்பட்டுள்ளது. நாணயவியலாளர் இவன்கால நாணயங்களிற் உள்ள சின்னங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை இரண்டு வகையாகப் பிரித்

ஆ அ



படம். - 47. பூநகரியில் கிடைத்த முதலாம் இராஜராஜசோழன் நாணயங்கள்.

(அ) முன்பக்கம் (ஆ) பின் பக்கம்.

துள்ளனர். முதலாவது வகை நாணயத்தில் புலி, வில், மீன் போன்ற இலச்சினைகளும், இரண்டாவது வகை நாணயத்தின் முன்பக்கத்தில் மன்னன் நிற்கும் நிலையிலும் காணப்படுகிறது. இவை இவன் ஆட்சியின் பிற்காலப்பகுதியில் வெளியிடப்பட்டதாகும்.44 பூநகரியிலும் இவ்வகை நாணயங்களே கிடைத்துள்ளன. இவன் ஆட்சியிலும், பிற்பட்ட இராசேந்திரசோழன் ஆட்சியிலும் இலங்கை சோழர் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததினால் இந்நாணயங்கள் அரசியல், வர்த்தக பண்பாட்டுத் தொடர்பு காரணமாக பூநகரியில் புழக்கத்தில் இருந்திருக்கலாம் எனக் கருதஇடமுண்டு.

## பூநகரியில் சோழப்படையெடுப்பு

தமிழ்நாட்டில் முதலாம் பராந்தக சோழன் தொடக்கம் மூன்றாம் குலோத்துங்க சோழன் வரை ஆட்சிபுரிந்த பல சோழ மன்னர்கள் இலங்கைமீது படையெடுத்தனர். இப்படையெடுப்பால் இலங்கையில் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களைச் சோழர் வெற்றி கொண்டதாக இருநாட்டு வரலாற்று மூலங்களும் எடுத்துக் கூறுகின்றன. ஆயினும் இவ்விடங்கள் அனைத்தும் பிற்காலத்தில் வரலாற்றாசிரியர்களால் அடையாளம் காணப்பட்டதாகத் தெரியவில்லை. சில பெயர்கள் வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையிலும், வேறு சில இடங்கள் பிற்காலத்திற் புழக்கத்திலிருக்கும் இடப்பெயர்களை வைத்தும் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆனால் வரலாற்றுச் சான்றுகள் அற்ற நிலையில் பிறகாலத்திற் புழக்கத்திலிருக்கும் இடப்பெயர்களை மட்டும் வைத்து சோழர் வெற்றி கொண்ட இடங்களாக அடையாளம் காணப்பட்ட இடங்கள் சில பொருத்தமற்றவை என்பதைப் பூநகரி ஆய்வுகள் கோடிட்டுக் காட்டுகின்றன. இதற்கு இரண்டாம் இராசாதிராஜசோழன் இலங்கைமீது மேற்கொண்ட படையெடுப்பு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

முதலாம் பராக்கிரமபாகு பொலநறுவையில் இருந்து ஆட்சி செய்த (கி. பி. *1158 - 1187*) காலத்தில் தமிழ்நாட்டில் மதுரையில் இருந்து ஆட்சி செய்த பராக்கிரம பாண்டியனுக்கும் அவன் தமையனாகிய குலசேகர பாண்டியனுக்கும் இடையே ஆட்சியுரிமை பற்றிய தகராறு தோன்றியது. இவர்களுட் பராக்கிரம பாண்டியன் சிங்கள வேந்தனாகிய பராக்கிரமபாகுவின் உதவியை நாடினான்.45 இதையேற்றுக் கொண்ட இவனும் இலங்காபுரி தண்டநாயக்கன் தலைமையில் படையொன்றைப் பாண்டிய நாட்டிற்கு அனுப்பி வைத்தான். இப்படை அங்கு சில வெற்றிகளைப் பெற்றதோடு தமக்குச் சார்பாக இருந்த பராக்கிரமபாண்டியனின் மகனாகிய வீர பாண்டியனை ஆட்சியில் அமர்த்தியது.46 இந்நிகழ்ச்சி குலசேகர பாண்டியனைச் சோழர் உதவியை நாடுமாறு செய்தது, அப்போது சோழ மன்னனாக இருந்த இரண்டாம் இராசாதிராஜ சோழன் *(1163-1178)* குலசேகரபாண்டியனுக்கு உதவி செய்யத் திருச்சிற்றம்பலமுடையான் பெருமானாம்பிப் பல்லவராயன் தலைமையில் பெரும் படையொன்றை பாண்டிநாட்டுக்கு அனுப்பி வைத்தான்,47 ஆரம்பத்தில் இரு பாண்டிய மன்னர்களுக்குமிடையில் இருந்த போராட்டம் இப்பொழுது சிங்கள-சோழப் போராட்டமாக மாறியதுடன் அப்போர் பாண்டி நாட்டில்

இருந்து இலங்கைக்கும் மாறியது. இப்போராட்டங்கள் பற்றிக் கூறும் சூளவம்சம் பாண்டிநாட்டிற் சிங்களப் படைகள் அடைந்த சில வெற்றிகளை மட்டும் பெருமையாகக் கூறி ஏனைய சம்பவங்களை மறைத்துள்ளது.

இதனால் ஆரம்பத்தில் வெற்றியடைந்த சிங்களப்படைகளுக்கு, பின்னர் என்ன நடந்த தென்பதைச் சோழக் கல்வெட்டுக்களில் இருந்தே அறிய வேண்டியுள்ளது. இவற்றுள் இரண்டாம் இராசாதிராஜன் காலத்திற் பொறிக்கப்பட்ட திருவாலங்காட்டுச் சாசனமும், பல்லவராயன் பேட்டைச் சாசனமும் இப்போராட்டம் பற்றி விரிவான தகவல்களைத் தருகின்றன.


ஆரம்பத்தில், சோழப்படைகள் பாண்டி நாட்டிலே சில தோல்விகளைப் பெற்றாலும் பின்பு சோழப்படைத் தளபதியான பல்லவராயன் இங்கிருந்த சிங்களப் படைகளை வென்று புறங்காட்டியோடும் படி செய்தமையோடு சிங்களப்படைத்தளபதி இருவரையும் கொன்று அவர்கள் தலைகளை யாவரும் காணுமாறு மதுரைக்கோட்டைவாயிலிலும் வைப்பித்தான் 48 இந் நிகழ்ச்சி இலங்கை மன்னன் பராக்கிரமபாகுவிற்குப் பெரும் அவமானத்தைக் கொடுத்ததினால் இராசாதிராஜ சோழனையும், அவனால் ஆதரிக்கப்பெற்ற குலசேகர பாண்டியனையும் மீண்டும் போரில் வெற்றி கொள்ள ஊராத்துறை (ஊர்காவற்துறை) புலைச்சேரி, மாதோட்டம், வல்லிகாமம் (வலிகாமம்), மட்டிவாழ் (மட்டுவில்) ஆகிய இடங்களில் தன்படைகளை நிறுத்தி வைத்திருந்தான்.49 இச்செய்தி சோழ நாட்டிற்கு எட்டவே அப்போது சோழப்படைத்தளபதியாக இருந்த அண்ணன் பல்லவராயன் இலங்கை மீது படையெடுத்து இவ்விடங்களை வெற்றி கொண்டதோடு சில சிங்களத் தலைவர்களை கொன்றும் ஏனையோரைப் பிடித்தும் சோழநாடு திரும்பினான்.50 சோழரால் வெற்றி கொள்ளப்பட்ட இவ்விடங்கள் அனைத்தும் யாழ்ப்பாணம் தொட்டு மாந்தை வரையுள்ள வடமேற்கு இலங்கையில் அமைந்துள்ளதென்பதை இலகுவாக அடையாளம் காணலாம். இவற்றுள் மாந்தையில் இருந்து முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு போன்ற சிங்கள மன்னர்களுக்கு எதிராக வேளைக்காரப்படையினரும், இங்கிருந்த மக்களும் கிளர்ச்சியில் ஈடுபட்டதாகச் சூளவம்சம் கூறுகிறது.51 இதனாலே சோழர் இவ்விடத்தை இலகுவாக வெற்றி கொள்ள இங்கிருந்த தமிழ்ப்படைகளும் காரணமாக இருந்திருக்கலாம். இந்நிலை ஏனைய இடங்களிலும் இருந்திருக்கும் எனக் கொள்ளுதல் பிழையாகாது.

சோழக்கல்வெட்டிலே கூறப்பட்டுள்ள இடங்களைப் பிற்கால வரலாற்று ஆசிரியர்கள் வெறும் பெயர் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு வடமேற்கு இலங்கையில் தற்போதுள்ள இடங்களுடன் அடையாளம் கண்டுள்ளனர். அவ்வாறு அடையாளம் காணப்பட்ட சில இடங்கள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பதைப் பூநகரி ஆய்வுகள் கோடிட்டுக் காட்டுகின்றன. இவற்றுள் மட்டிவாழ் என்ற இடம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவ்விடத்தை யாழ்ப்பாணத்திற்குக் கிழக்கே பத்துமைல் தொலைவில் சாவகச்சேரியில் உள்ள மட்டுவில் கிராமம் என நீலகண்ட சாஸ்திரியும், பரணவிதானாவும் அடையாளம் கண்டுள்ளனர் 52 இக்கருத்தையே பிற்கால வரலாற்று ஆசிரியர்களும் ஏற்றுள்ளனர். பூநகரிப் பிராந்தியத்தில் மாந்தைக்கு வடக்காகக் கடற்கரையை அண்டியுள்ள கிராமம் ஒன்று பாரம்பரியமாக 'மட்டுவில் நாடு' என அழைக்கப்பட்டு வருகிறது. ஒரு கிராமத்தை அல்லது குறிச்சியை நாடு என அழைக்கும் மரபு சோழர் காலத்திற் பெருமளவு பின்பற்றப்பட்ட அம்சம் ஆகும். இதை நோக்கும்போது சோழக் கல்வெட்டில் வரும் மட்டிவாழ் என்ற இடம் பூநகரி மட்டுவில் நாட்டையே குறித்ததெனக் கூறலாம். சோழர் கால அரசியல் வர்த்தக நடவடிக்கைகளை நோக்கும் போது அவை பெரும்பாலும் கடற்கரையை அண்டியுள்ள துறைமுகங்களிலும், நகரங்களிலும் இடம் பெற்றதினைக் காணலாம். இக்கல்வெட்டில் வரும் மாந்தை, ஊர்காவற்றுறை போன்ற இடங்களும் இதையே உறுதிப்படுத்துகின்றன. பூநகரியில் உள்ள மட்டுவில் நாட்டின் அமைவிடம் மாந்தையில் இருந்து வடக்கே மண்ணித்தலை வரை கடற்கரையை அண்டிய போக்குவரத்திற்கு வாய்ப்பாக இருந்ததோடு இவ்விடங்களில் இருந்து நேரடியாக ஊர்காவற்றுறைக்கும் அங்கிருந்து தமிழ் நாட்டிற்கும் கடற் போக்குவரத்துச் செய்யவும் சாதகமாக இருந்துள்ளது

இவை போன்றஒரு முக்கியத்துவத்தைச் சாவகச்சேரிக்கு அண்மையில் உள்ள மட்டுவிற் கிராமம் அக்காலத்திலே பெற்றிக்கும் எனக் கூறுவதற்குத் தகுந்த ஆதாரங்கள் எவையும் காணப்படவில்லை. அத்துடன் இவ்விடத்தைச் சோழப் படையோ அல்லது சிங்களப் படையோ கைப்பற்றி வைத்திருப்பதன் மூலம் கடல் மார்க்கமாக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பைத் தடுத்திருக்கலாம் எனவும் கூற முடியாது. இங்குள்ள கச்சாய்த்துறைமுகம் (கொடிகாமத்திற்குக் கிட்டவுள்ளது) இதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என வாதிட்டாலும் இரண்டிற்கும் இடைப்பட்ட தூரம் அதிகமாக இருப்பதனால் இதையும் ஏற்க முடியாது. பொதுவாக ஓர் இடத்திற்குரிய பெயர்களை பல்வேறு தொடர்புகள் காரணமாக ஏனைய இடங்களும் பெற்றுக் கொள்வதுண்டு. இன்று சாவகச்சேரியில் உள்ள தனங்கிளப்பு, மறவன் புலவு போன்ற இடப்பெயர்கள் சில எதிரே அமைந்த பூநகரியிலும் உண்டு. சாவகச்சேரியில் உள்ள சில சமூகங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் பூநகரியில் இருந்து குடியேறியதற்கு ஆதாரங்கள் உள. இதேபோல், சாவகச்சேரி மட்டுவிலில் உள்ள சிலரின் மூதாதையர் பூநகரி மட்டுவில் நாட்டில் இருந்து குடியேறியதற்கு ஆதாரங்கள் உள்ளன. அத்தொடர்பின் காரணமாகவே மட்டுவில் என்ற பெயர் இங்கு ஏற்பட்டிருக்க வேண்டும். இதனாலே சோழக்கல்வெட்டில் வரும் மட்டிவாழ் பூநகரி மட்டுவில் நாட்டையே குறித்ததென நிச்சயப்படுத்திக் கூறலாம்.

சோழக்கல்வெட்டிலே கூறப்பட்டுள்ள இன்னொரு இடமான புலைச்சேரி எவ்விடத்தில் இருந்ததென்பதை வரலாற்றாசிரியர்கள் இதுவரை அடையாளம் கண்டதாகத் தெரியவில்லை.53 பூநகரியில் உள்ள ஓர் இடம் புலையர் குடா என அழைக்கப்படுகிறது. இவ்விடமும் சோழக்கல்வெட்டில் வரும் புலைச்சேரியும் ஒன்று என அடையாளம் காணச் சில ஆதாரங்கள் உள்ளன. இவ்விடம் மட்டுவில் நாட்டிறகுத் தெற்காகவும், மாந்தைக்கு வடக்காகவும் கடற்கரையை அண்டிக் காணப்படுகிறது. இது ஒரு பரந்த பிரதேசத்திற்குரிய பெயர் என்பதை இவ்விடப் பெயருடன் இணைந்து வரும் பறையமோட்டை (புலையர்குளம், பறையகாடு (புலையர்காடு) போன்ற இடப்பெயர்கள் உறுதிப்படுத்துகின்றன. இன்று இரணதீவு, வலைப்பாடு போன்ற கிராமங்களில் வசிப்போரின் மூதாதையர் இப்புலையர் குடாப்பகுதியில் இருந்து குடியேறியதற்குச் சான்றுகள் உள்ளன. தற்போது இவ்விடத்தில் மக்கள் குடியிருப்புக்கள் காணப்படாவிட்டாலும் இங்குள்ள புளியன்துறைமுக அழிபாடுகள் பல நூற்றாண்டுகளுக்கு முன் செறிவான மக்கள் குடியேற்றங்கள் இருந்ததற்குச் சான்று பகர்கின்றன (படம் - 47). பொளிந்த முருகைக்கற்கள் கொண்டு கட்டப்பட்ட இறங்குதுறை மேடைகளின் அடிபாடுகளை இன்றும் அடையாளம் காணமுடியும். இதையண்டிக் காணப்படும் காட்டுப் பகுதியில் மிகப்பெரிய கட்டிடத்தின் அழிபாடுகள் மண்ணுக்குள் மூடுண்டு காணப்படுகின்றன. இத்துறைமுகத்தின் ஊடாக, தமிழ்நாட்டுடன் நடந்த வர்த்தகம் பற்றிய நாட்டுப் பாடல்கள் ஓலைச் சுவடிகளிற் காணப்படுகின்றன. சோழக் கல்வெட்டில் சோழப் படைகள் புலைச்சேரி, மாதோட்டம் உள்ளிட்ட ஊர்களில் இருந்து யானைகளைப் பிடித்துக் கொண்டு சோழநாடு சென்றதாகக் கூறப்படுகிறது.54 இக்கூற்றானது மாந்தைக்கு அடுத்ததாகப் புலைச்சேரி அமைந்திருந்தது என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் கொள்ள இடமுண்டு. அதேவேளை புலையர்குடாவுக்குக் கிழக்கே யானைப்பூட்டு என்ற கிராமம் உள்ளது. ஒரு துறைமுகத்தை அண்டி இவ்விடம் காணப்படுவதை நோக்கும்போது இத்துறைமுகத்தின் ஊடாக யானை வர்த்தகம் நடைபெற்றுள்ளது என்பதை உறுதிசெய்து கொள்ள இடமுண்டு. சோழக் கல்வெட்டில் இவ்விடத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு யானைகள் கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. புலைச்சேரியை வெற்றி கொண்ட சோழப்படைத் தளபதி பல்லவராயன்எனக் கூறப்பட்டுள்ளது.

இவன் பெயரில் சில ஊர்கள் சோழர் காலத்திலே தமிழ் நாட்டில் இருந்துள்ளன. இங்கே புலையர் குடாவிற்குக் கிழக்காக உள்ள இடம் பல்லவராயன்கட்டு எனப்படுகிறது. இப்பெயர் கூட இவனின் படையெடுப்புப் புலையர் குடாப் பகுதியில் நடந்ததை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இவ்விடங்களை அண்டியே வரலாற்றுப் பழைமை வாய்ந்த ஈழவூர், ஈழவன்குடா போன்ற



படம் - 47. பூநகரி புலையர்குடாக் காட்டுப் பகுதியிலுள்ள புராதன கட்டிட அழிபாடுகள்.

இடங்கள் உள்ளன. இவ்விடங்களில் இருந்து ஒரு சோழ நாணயம் உட்பட 70 இற்கு மேற்பட்ட மத்தியகால நாணயங்கள் (கி பி. 10-12) எமது ஆய்வின்போது கிடைத்துள்ளன. எனவே மேற் கூறப்பட்ட ஆதாரங்களையும், மாந்தைக்கு வடக்காக உள்ளபுலையர்குடாவின் அமைவிடத்தையும் நோக்கும்போது சோழக்கல்வெட்டில் வரும் புலைச்சேரி பூநகரியில் உள்ள புலையர் குடாவையே குறித்ததெனக் கூறலாம்.

இக்கல்வெட்டிலே கூறப்பட்டுள்ள இன்னொரு இடமாக வல்லிகாமத்தைத் தற்போது யாழ்ப்பாணத்தில் வழக்கில் உள்ள வலிகாமம் என அடையாளம் கண்டுள்ளனர்.55 ஆனால் சோழர் ஆட்சியில் இவ்விடத்தைத்தான் இப்பெயர் குறித்ததா என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாதிருக்கிறது. ஈழத்துத்தமிழ் வரலாற்று ஏடுகளை ஆராயுமிடத்து யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பழைய பெயர்களாக மணற்றி, மணற்றிடர், மணற்றிடல் ஆகிய பெயர்கள் கொடுக்கப் பட்டிருப்பதைக் காணலாம். இப்பெயரின் வேறு வடிவங்களாக மணலூர், மணவூர் ஆகிய பெயர்கள் அமைந்ததென அறிஞர் கொள்வர் 56 இவை காலப்போக்கில் வழக்கொழிந்த பெயர்களாயின. இப்பெயர்கள் சிங்கள மொழியில் வலிகம என மாறியிருக்கலாம் (வலி-மணல் கம-ஊர்) எனச் சிலர் கூறுவர். அப்பெயர்களிற் சில காலப்போக்கில் வழக்கொழிந்து போனாலும் தற்போது

யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் இடத்திற்குத் தொடர்ந்தும் காணப்படுகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் பொதுவாக இடப்பெயர்களை நூலிற் குறிப்பிடும்போது நூலின் மொழிக்கு ஏற்ற வாறு பெயரிடுவது வழக்கம். இதேபோல் இலங்கை யில்இருந்த தமிழ்ப்பெயர்கள் பாளியிலும், பின் சிங் களத்திலும் பெயர்க்கப்படும் பொழுது அவ்விலக் கிய மொழிக்கு ஏற்ப அவை மாறுதல் அடைந் துள்ளன. உதாரணமாகப் பாளியில் மாதோட்ட என்ற பெயர் சிங்களத்தில் மஹாதித்த எனவும்[57], ஊறாதொட்ட என்பது சூரதித்த எனவும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. சோழக்கல்வெட் டில் இவை தமிழ் வடிவங்களைப் பெற்றாலும் சில பெயர்கள் அப்படியே கூறப்பட்டுள்ளன. இதில் வலிகாமமும் ஒன்றாகும். யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் வரையான இடங்கள் சில சிங் களத்தில் வலிகம என்ற பெயரைப் பெறக்கூடிய மண்தீவு, மணல்காடு, மண்ணூர், மண்ணித்தலை போன்ற பெயர்களைப் பெற்றிருப்பதினைக் காணலாம். இப்பெயர்களிலே சில சோழர்காலத் தில் வலிகாமம் என்ற பெயரைப் பெற்றிருக்கலாம் எனக் கருதஇடமுண்டு. நீலகண்ட சாஸ்திரி சோழர்கல்வெட்டில்வரும் வலிகாமம் மன்னாருக்கு ஐந்து மைல் தொலைவில் உள்ள இடம் எனக் கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கது.[58] சோழக் கல்வெட்டிற் கூறப்பட்டுள்ள ஏனைய இரு இடங் களான மாதோட்டம், ஊர்காவற்றுறை ஆகியன தற்போது வடமேற்கு இலங்கையில் உள்ள இடங் களையே குறித்தன என்பதிற் சந்தேகம் இல்லை. பொதுவாக இக்கல்வெட்டிலே கூறப்பட்டுள்ள ஐந்து இடங்களும் இரண்டாம் இராசாதி ராஜசோழன் வெற்றிகொள்வதற்கு முன்னரே இவனுக்கு முற்பட்ட காலச் சோழ மன்னர்களுடன் தொடர்பு கொண்டிருந்தற்குச் சான்றுகள் உள் ளன. இச்சான்றுகள் சோழர் பொலநறுவையைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்த காலத்தில் இவ்விடங்கள் அவர்களின் ஆதிக்கத்திற்கு உட் பட்டிருந்ததைக்காட்டுகின்றன.

## சோழ நிர்வாகமும் பூநகரியும்

சோழராட்சியில் பொலநறுவை தலைநகராக விளங்கிய போதிலுங்கூட அவர்களது ஆட்சி தொடர்பான சான்றுகள் பல கிழக்கு மாகா ணத்தில் திருக்கோணமலையிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன. இதற்குச் சோழர்கால இராணுவ, அரசியல், வர்த்தக நடவடிக்கைகள் கூடிய அள விற்கு இப்பிராந்தியத்திலிருந்தது காரணமாகும். இதுபோன்ற ஒரு முக்கியத்துவத்தைப் பூநகரி யுள்ளிட்ட வடமேற்கிலங்கை பெற்றிருந்த தென் பதற்குச் சோழநிர்வாகம் தொடர்பான சான்று கள் பூநகரியிற் கிடைத்திருப்பது மேலும் ஒரு ஆதாரமாக அமைகிறது. சோழரின் எழுபத்தேழு ஆண்டுகால ஆட்சியில்(கி. பி. 993-1070) இலங்கை யில்இதுவரை பின்பற்றப்பட்டிருந்த நிர்வாகமுறை கைவிடப்பட்டு, தமிழ்நாட்டிற்கேயுரிய சோழ நிர் வாகமுறை புகுத்தப்பட்டது. இதனால் இலங்கை மும்முடிசோழ மண்டலம் என்றபெயரில் சோழ ரின் ஒன்பதாவது மண்டலமாகச் சோழ நிர் வாகத்துடன் இணைக்கப்பட்டது.[59] சோழ நிர் வாகத்தின் ஒரு மண்டலமாகக் கணிக்கப்பட்ட இலங்கை நிர்வாகவசதிக்காக வளநாடு, நாடு, கோட்டம் எனவும் பிரிக்கப்பட்டிருந்தது. இவற் றுள் பொலநறுவை நிகரிலிச்சோழ வளநாடு என வும், பதவியா உள்ளிட்ட திருக்கோணமலை வீர பரகேசரிவளநாடு, இராஜேந்திரசிங்கவளநாடு, அபயாஸ்ரய வளநாடு எனவும், வட இலங்கை யில் மாதோட்டம் அருண்மொழித் தேவவளநாடு எனவும் பிரிக்கப்பட்டிருப்பதை இங்குகிடைத்த சோழக்கல்வெட்டுக்கள் உறுதிசெய்கின்றன.[60]


கந்தளாயிற் கிடைத்த இரு சோழக்கல்வெட் டுக்கள் இலங்கையை ஆண்ட சோழப் பிரதிநிதி யான சோழ இலங்கேஸ்வரன் பற்றிக் கூறுகின் றன.[61] பதவியாவிற் கிடைத்த கல்வெட்டு சோழ நிர்வாகத்திற் பங்குகொண்ட பிரதானிகள் பற்றி யும், கொட்டியாரத்திற் கிடைத்த கல்வெட்டு இங்கிருந்துபெற்ற வரிகள் பற்றியும் கூறுகின்றன.[62] பூநகரியைப் பொறுத்தவரை, சோழ நிர்வாகம் தொடர்பான சாசன ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்க வில்லை. ஆயினும் இங்குள்ள வரலாற்றுப் பழைமைவாய்ந்தசோழ மண்டலம், மட்டுவில்நாடு முதலிய இடப்பெயர்களை நோக்கும்போது சோழரின் நிர்வாகப்பிரிவு இங்கும் இருந்துள் ளதென்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

## சோழரும் பூநகரி இடப்பெயர்களும்

வரலாற்று ஆராய்ச்சியில் இடப்பெயர் பற்றிய ஆய்வும் வரலாற்று ஆதாரங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது. இடப்பெயர்கள்ஒருபிரதேசத் தின் வரலாற்றையும், அதன் தனித்துவத்தையும் அடையாளம் காண்பதற்குச் சில சந்தர்ப்பங்களில்

முக்கிய சான்றாதாரங்களில் ஒரு வகையினவாக விளங்குவது உண்டு ஒரு நாட்டில் அல்லது ஒரு பிரதேசத்தில் உள்ள முக்கிய இடப்பெயர்கள் இன்னொரு நாட்டிலும் அல்லது பிரதேசத்திலும் பெயர்களாக இருப்பதற்குப் பெரும்பாலும் வர்த்தகம், குடியேற்றம், கலாசாரம் என்பனவற்றால் ஏற்படும் தொடர்புகள் காரணமாய் விளங்குகின்றன. சில வேளைகளில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடப்பெயர்கள் பிற்காலத்தில் நினைவு படுத்தப்பெறுவதற்காகப் புதிய இடங்களுக்குப் பெயரிடப்படுவதுமுண்டு. மறுபுறம் குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியிற் புழக்கத்தில் இருந்த இடப்பெயர்கள் காலவோட்டத்தில் ஏற்படும் அரசியல், பண்பாட்டு மாறுதல்களாலும், மொழி வழக்காலும் தம் தனித்துவத்தை இழந்து போவதுமுண்டு. இதனால் இடப்பெயர்களை வரலாற்றுச் சான்றாதாரமாகப் பயன்படுத்தும் போது அவ்விடங்கள் தொடர்பான வரலாறு. தொல் பொருட்சான்றுகள் என்பனவற்றையும் இணைத்துப் பார்ப்பது அவசியமாகும்.

வன்னிப் பிராந்திய இடப்பெயர்கள் பற்றி ஆராய்ந்த லூயிஸ் யாழ்ப்பாணத்தைக் காட்டிலும் தூய தமிழிலுள்ள இடப்பெயர்கள் பல அப் பிராந்தியத்தில் இருப்பதாகச் சுட்டிக் காட்டினார்.63 அவ்வாறு கூறியமைக்கு காரணம் அங்குள்ள இடப்பெயர்கள் பல தமிழ்நாட்டில் உள்ள இடப்பெயர்களை ஒத்திருப்பதேயாகும். ஆனால் தமிழ்நாட்டுப் பெயர்கள் எப்போது, ஏன், என்ன சூழ்நிலையில் வன்னிப் பிராந்தியத்தில் ஏற்பட்டன என்பதற்கு அவராலே சான்றாதாரங்கள் காட்டப்பட்டதாகத் தெரியவில்லை. பூநகரியைப் பொறுத்தவரை இதுவரை அங்கு அடையாளம் காணப்பட்டுள்ள பதி




படம் - 48. பூநகரிப் பிராந்தியத்தில் உள்ள சோழர் காலத்துடன் தொடர்புடைய இடப்பெயர்கள்.

னெட்டு இடப்பெயர்கள் தமிழ்நாட்டு இடப் பெயர்களை ஒத்துக்காணப்படுகின்றன(படம்-48). அப்பதினெட்டு இடங்களிற் பெரும்பாலானவை சோழர்கால வரலாற்றோடு தொடர்புடையனவாதலால் அப்பெயர்கள் சோழத்தொடர்பால், சோழர்காலக் குடியேற்றத்தால்தான் ஏற்பட்டன எனக் கருதுவதற்குத் தக்க சான்றுகள் உண்டு என்று காட்டுவதே இவ்வியலின் நோக்காகும்.

தமிழ்நாட்டிற் சோழர்காலத்தில் இருந்த இடப்பெயர்களை அறிவதற்குச் சோழர்கால இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் என்பன உதவுகின்றன. இவற்றில் வரும் இடப்பெயர்கள் பல சோழர் காலத்திற்கு முன்னர் புழக்கத்தில் இருந்தாலும் கூட அவற்றுட் சில சோழ மன்னர்களது விருதுப் பெயர்களையும், சிறப்புப் பெயர்களையும் கொண்டமைந்தன.

சோழரின் தலைநகராக விளங்கிய தஞ்சாவூரில் உள்ள மண்ணியாறும், குடமுருட்டியாறும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஆறுகளாகச் சோழக் கல்வெட்டுக்களிலும், இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன.64 சோழர்கால ஆலயங்கள், தலைநகரங்கள் பல இவ்வாறுகளை அண்டியே அமைக்கப்பட்டன. பெரியபுராணம் மண்ணியாற்று மணலில் விசாரசருமர் என்பவர் சிவலிங்கம் அமைத்து வழிபட்டதாகவும், பின்னர் அவ்விடத்தில் மதிலும், கோபுரமும் கொண்ட ஆலயம் கட்டப்பட்டதாகவும் கூறுகின்றது.65 சோழ மன்னர்களுள் முதலில் இலங்கைக்குப் படையெடுத்து வடஇலங்கையை வெற்றிகொண்ட முதலாம் பராந்தக சோழனின் மறுபெயரான குஞ்சரமல்லன் என்பது மண்ணியாற்றின் சிறப்புப் பெயராக இவன் காலக் கல்வெட்டுக்களிற் கூறப்படுகிறது. 66 இவன் கால ஆலயங்கள் சிலவும் இம்மண்ணியாற்றின் தென்னெல்லையில் அமைந்திருட்பது குறிப்பிடத்தக்கது. இங்கே பூநகரியில் மண்ணித்தலைக்குத் தென்கிழக்கே மண்ணியாறும், வடகிழக்கே குடமுருட்டியாறும் அமைந்துள்ளன. இவற்றினைச் சோழத் தொடர்பை நினைவுபடுத்தும் முக்கிய ஆதாரங்களில் ஒன்றாகக் கொள்ள இடமுண்டு. இதை மேலும் உறுதிப்படுத்துவதில் இவ்விரு ஆறுகளுக்கும் இடைப்பட்ட வேறு சில இடப்பெயர்களும் விளங்குகின்றன.

தமிழ்நாட்டில் நல்லூர் என்னும் இட பெயர் பல்லவர், பாண்டியர், சோழராட்சியிலே தலைநகரங்கள், முக்கிய ஆலயங்கள் அமைந்த இடங்களுக்குரிய பெயராக இருந்துள்ளது. முதலாம் பராந்தக சோழன் ஆட்சியில் மண்ணியாற்றின் தென் கரையிலுள்ள நல்லூர் சோழநாட்டின் முக்கிய தலைநகராக இருந்துள்ளது.67 இலங்கையில் நல்லூர் என்னும் இடப்பெயர் யாழ்ப்பாண அரசிற்குரிய தலைநகராக இருந்ததோடு பூநகரி, திருகோணமலை, களுத்துறை, குருநாகல் ஆகிய இடங்களிற் கிராமங்களுக்குரிய பெயராகவும் இருந்து வருகின்றது. பூநகரியில் குடமுருட்டியாற்றின் மேற்குக் கரையோரமாக நல்லூர் எனும் கிராமம் ஒன்று உள்ளது. இப்பெயர் மிகப் பழைமையானதென்பதை ஆங்கிலேயர்கால ஆலயப் பதிவேட்டிலிருந்தும் இங்கு கிடைத்த ஓலைச் சுவடிகளில் இருந்தும் அறிய முடிகின்றது.68 இங்கெல்லாம் 10 ஆம் 11 ஆம் நூற்றாண்டுகளிலே சோழராட்சி நிலவியதற்கு ஆதாரங்கள் உண்டு. யாழ்ப்பாணக் கோட்டையிலே கண்டுபிடிக்கப்பட்ட 11 ஆம் நூற்றாண்டுக்குரிய முதலாம் இராசேந்திர சோழன் காலக் கல்வெட்டு ஒன்று நல்லூரில் அமைந்த ஆலயமொன்றிற்குச் சோழ மன்னன் தானமளித்தது பற்றிக் கூறுகிறது.69 இதன் மூலம் யாழ்ப்பாண அரசிற்கு முன்னோடியாகச் சோழர் காலத்திலேயே நல்லூர் என்ற இடம் யாழ்ப்பாணத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்ததெனக் கூறமுடிகின்றது. இதனாற் பூநகரியிலுள்ள நல்லூரையும் சோழர் காலத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு.

பூநகரி நல்லூரின் தென்னெல்லையில் உள்ள கிராமம் ஒன்று தியாகம். தியாக குளம் என இன்று அழைக்கப்படுகிறது. இக்கிராமம் பற்றி ஒல்லாந்தர்கால ஆவணங்களிற் கூறப்பட்டுள்ளமை அக்காலத்திலே இக்கிராமம் பெற்றிருந்த முக்கியத்துவத்திற்குச் சான்றாகும். சோழ மன்னர்களில் ஒருவனாகிய விக்கிரம சோழனின் சிறப்புப் பெயர்களில் ஒன்று தியாகசமுத்திரம் எனக் கூறப்படுகிறது. இவன் தனது ஆட்சிக் காலத்திலே தமிழ் நாட்டிலுள்ள கிராமம் ஒன்றிற் ''தியாக சமுத்திர சதுர்வேதி மங்கலம்'' எனப் பெயரிட்டு அக்கிராமத்தினைத் திருவிடை மருதூர்க் கோயிலுக்கு நிவேதனமாக அளித்தான் என இவன்

ஆட்சிக்காலக் கல்வெட்டு ஒன்றுகூறுகிறது.70 இத் தியாக சமுத்திரம் என்ற பெயர் சில இடங் களிலே தியாககுளம், தியாக ஏரி எனவும் அழைக் கப்பட்டதாகத் தெரிகின்றது. இப் பெயர்கள் பூநகரியிலுள்ள தியாகம், தியாககுளம் என்ற இடப்பெயர்களை நினைவுபடுத்துகின்றன.

பூநகரி தியாககுளத்தின் தென்னெல்லையிற் பல்லவராயன் என்ற கிராமமும், இதற்குத் தெற்கே மண்ணியாற்றின் பிரதான ஆறு பல்லவ ராயன் ஆறு எனவும், இதன் அயற்கிராமம் பல் லவராயன் கட்டு எனவும் அழைக்கப்படுகின்றன. சோழராட்சியிற் பல்லவராயன் என்ற பெயரில் அமைச்சர்கள், அரச அதிகாரிகள், படைத்தளபதி கள் எனப் பலர் இருந்துள்ளனர். இவர்களுக்குச் சோழ மன்னர்களால் வழங்கப்பட்ட கிராமங் கள், ஊர்கள், நிலங்கள் இவர்களின் பெயர்களா லேயே பெரும்பாலும் குறிக்கப்பட்டன. இன்று தமிழ்நாட்டிலுள்ள பல்லவராயன்பேட்டை, பல் லவராயன்சாலை,பல்லவராயளந்தம், பல்லவராய நெந்தில், பல்லவராயர் போன்ற இடப்பெயர் கள் பல சோழர் காலத்துடன் தொடர்புடை யன.71 இப்பெயர் கொண்ட சோழ அதிகாரிகள், படைத்தளபதிகள் இலங்கையில் இருந்துள்ளனர் என்பதற்கு ஆதாரங்களுண்டு இரண்டாம் இரா சாதிராசசோழன் ஆட்சியில் வடமேற்கிலங்கை யிலுள்ள மாதோட்டம், மட்டிவாழ் (பூநகரி மட்டு வில்நாடு), புலச்சேரி(பூநகரி புலையர்குடா) ஆகிய இடங்களை வெற்றிகொண்ட சோழப்படைத்தள பதி பெயர் பல்லவராயன் எனப் பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டுக் கூறுகிறது.72 பொல நறுவை இரண்டாம் சிவதேவாலயத்திற் கிடைத்த கல்வெட்டு ஒன்று சோழர்கால நிர்வா கத்தில் உயர்பதவி வகித்த அதிகாரியாகப் பல் லவராயன் என்பவன் குறிப்பிடப்பட்டுள்ளான்.73 இவ்வொற்றுமைகளை நோக்கும்போது பூநகரியில் உள்ள பல்லவராயன், பல்லவராயன்கட்டு என்ற இடப்பெயர்கள் சோழ அதிகாரிகள், படைவீரர் கள் பெயரால் ஏற்பட்டன எனக்கருத இடமுண்டு. இவ்விரு இடங்களும் சோழர் வெற்றிகொண்ட மட்டிவாழ் (மட்டுவில்நாடு), புலச்சேரி (புலையர் குடா) ஆகிய இரு இடங்களுக்குக் கிழக்கெல்லை யில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

குடமுருட்டியாற்றிற்கு வடமேற்கேயுள்ள ஆலங்கேணி, செட்டிகுறிச்சி, மட்டுவில் நாடு ஆகிய இடங்களைச் சோழர்கால இடப்பெயர் களுடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாம். சோழர் காலக் கல்வெட்டுக்களிலே தமிழ்நாட்டிலுள்ள முக்கிய இடங்களாக ஆலங்கேணி ஆலங்கானம், ஆலக்குடி போன்ற பெயர்கள் குறிப்பிடப்பட் டுள்ளன. இலங்கையில் ஆலங்கேணி, செட்டி குறிச்சி என்ற பெயர்கள் பூநகரியில் மட்டுமன் றித் திருமலை, ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் உள்ளன. இதனாற் பூநகரியில் உள்ள இடப்பெயர்களைத் திட்டவட்டமாகச் சோழர்காலத்துடன் தொடர்பு டையன எனக் கூறமுடியாதிருக்கின்றது. ஆனால் இவ்விடங்களுக்கு அருகிலுள்ள நல்லூர்; குடமு ருட்டியாறு, தியாகம் போன்ற இடப்பெயர்கள் சோழர்காலத்துடன் தொடர்புடையனவாக இருப் பதனால் இப்பெயர்களையும் சோழர்காலத்துடன் தொடர்புபடுத்திக் கருதஇடமுண்டு. இவற்றுட் செட்டிக்குறிச்சி என்ற கிராமம் மிகப்பழைமை யானதுஎன்பதைஇங்குகிடைத்தஆதிகால,இடைக் கால நாணயங்கள்பலவும், போத்துக்கேயர், ஒல் லாந்தர் காலக்கட்டிட அழிபாடுகள் சிலவும் உறு திப்படுத்துகின்றன இலங்கையிலே சோழர்கால வர்த்தக நடவடிக்கைகளிற் செட்டிவணிகர்களும் பங்குகொண்டதைச் சோழக் கல்வெட்டுக்கள் கூறு கின்றன.அநுராதபுரத்திற் கிடைத்த இருகல்வெட் டுக்கள் சேக்கிழான்சங்கன், சேக்கிழான் சென்னி என்ற செட்டி வணிகர்கள் பற்றிக் கூறுகின்றன.74 பதவியாவிலும் சோழர்காலச் செட்டிவணிகர்கள் குடியிருந்ததற்கு ஆதாரங்கள் உண்டு. இவர்கள் குடியிருந்த இடங்கள் செட்டி என்னும் சொல்லை முதல் நிலையாகக்கொண்டு அழைக்கப்பட்டன என்பது பத்மநாதனின் கருத்தாகும். இதற்கு வடமத்திய, வடமேல் மாகாணங்களில் உள்ள இடப்பெயர்களைச் சான்றுகளுடன் எடுத்துக் காட்டியுள்ளார்.75 இதேபோல் பூநகரியில் உள்ள செட்டிக்குறிச்சி என்ற கிராமப்பெயரையும் சோழர்காலத் தொடர்பால் ஏற்பட்டதெனக் கருதஇடமுண்டு.

செட்டிக்குறிச்சி என்னும் இடத்திற்குத் தென்மேற்காக மட்டுவில்நாடு என்ற கிராமம் அமைந்துள்ளது. இது இயற்கையான துறை முகத்தைக் கொண்டிருப்பதனால் ஆதிகால

இலங்கை-தென்னிந்திய தொடர்புகள் இத்துறை முகத்தினூடாகவும் நடந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இதற்கு இக்கிராமத்தின் கடற்கரையை அண்டிய பகுதிகளிற் கிடைத்த நாணயங்கள் பல சான்றாக அமைகின்றன. இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் இக்கிராமத்திற்கு இருந்தமைதான் பிற்காலத்தில் இதன் கிழக்கெல்லையில் ஒல்லாந்தர் காலக்கோட்டை கட்டப்படக் காரணம் எனலாம். சோழசாசனத்தில் வரும் மட்டிவாழ் என்ற இடமும், சூளவம்சத்தில் வரும் மட்டிகாவட்ட தீர்த்தம் என்ற இடமும் இம்மட்டுவில் நாட்டையே குறித்தனவாகும். சோழராட்சியில் இக்கிராமம் சிறு நிர்வாகப் பிரிவாக இருந்திருக்கலாம் என்பதற்கு 'மட்டுவில் நாடு' என்ற பெயரையே ஒரு சான்றாகக் கொள்ளலாம்.76 இலங்கையில் நாடு என்பது முழுத்தேசத்தைக் குறிக்கப் பயன்படுத்தப் பெற்றதே தவிர ஒரு கிராமத்தை அல்லது குறிச்சியைக் குறிக்கப் பயன்படுத்தப்பெற்றதாகத் தெரியவில்லை. தமிழ்நாட்டிற் சிறிய நிலப்பிரிவுகள் நாடு என்னும் பெயரைப் பெற்றதோடு பல்லவர், சோழராட்சியிற் சிறிய நிர்வாகப்பிரிவைக் குறிக்கவும் அப்பெயர் பயன்படுத்தப்பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் ஜெயங்கொண்ட சோழமண்டலம் என்ற நிர்வாகப்பிரிவில் 'நடுவில் நாடு' என்ற சிறிய நிர்வாகப்பிரிவு இருந்துள்ளது.77 பொலநறுவையில் உள்ள அதிராஜேந்திரன் கல்வெட்டும் இலங்கையில் நாடு என்ற நிர்வாகப் பிரிவு சோழர்காலத்தில் இருந்ததுபற்றிக் கூறுகிறது.78 அதேபோலத் தமிழ்நாட்டிலுள்ள சோழக்கல்வெட்டும் இலங்கையில் நாடு என்ற நிர்வாகப்பிரிவு இருந்ததுபற்றிக் கூறுகிறது.79 தமிழ்நாட்டில் நாடு என்ற நிர்வாகப்பெயர் ஒரு கிராமம் அல்லது குறிச்சியின் பெயரோடு சேர்த்து அழைக்கப்பட்டது. இதற்கு அங்கிருந்த அம்பர் நாடு, மருகல்நாடு, நல்லூர்நாடு முதலிய நிர்வாகப் பிரிவுகளை எடுத்துக்கூறலாம் 80 இதேபோலப் பூநகரியிலும் இப்பெயர் மட்டுவில் என்ற கிராமத்திற்குரிய பெயரோடு இணைந்து மட்டுவில்நாடு என அழைக்கப்படுகிறது. இச்சான்றுகள் அனைத்தும் மட்டுவில்நாடு என்ற இடப்பெயர் இங்கு ஏற்பட சோழராட்சியில் இவ்விடம் நாடு என்ற நிர்வாகப்பிரிவுக்குரிய பகுதியாக இருந்ததே காரணம் எனக் கருத இடமளிக்கிறது.

குடமுருட்டியாற்றைப் போல மண்ணியாற்றை அடுத்துள்ள சில இடப்பெயர்களும் சோழத்தொடர்பை எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாற்றின் தென்கிழக்கு எல்லையில் உள்ள ஓரிடம் சோழியகுளம் என அழைக்கப்படுகின்றது. இது சோழர்குளத்தைக் குறிப்பதாகும். தமிழ்நாட்டில் உள்ள சில இடங்கள் சோழர் காலத்திற் சோழியகுளம், சோழியமாளிகை என அழைக்கப்பட்டமை இங்கு நினைவு கொள்ளத்தக்கது.81 இக்குளத்திற்கு வடக்கேயுள்ள ஓரிடம் அம்பலப்பெருமாள் என அழைக்கப்படுகிறது. அம்பலம் என்பது சோழர் காலத்தில் வணிகர்கள் தங்கிய இடத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்விடம் காலப்போக்கில் அம்பலவெளி அம்பலப்பெருமாள் என மாறி ஒரு கிராமத்திற்குரிய பெயராக அழைக்கப்பட்டதைத் தமிழ்நாட்டிற் காணமுடிகிறது.82 பூநகரியிலுள்ள இப்பெயர் சோழத் தொடர்பால் ஏற்பட்டதென்பதைப் பதவியாவிலே கிடைத்த சோழச் சாசனம் உறுதிப்படுத்துகிறது. இதுபற்றிக் கீழே விரிவாக ஆராயப்படுகின்றது.

அம்பலப்பெருமாள் என்ற இடத்திற்குச் சற்று வடமேற்கே நீராவி என்ற பெரிய கிராமம் அமைந்துள்ளது. இப்பெயரிற் பல இடங்கள் இலங்கையின் பல்வேறு பாகங்களிற் காணப்படுகின்றன. ஆயினும் பூநகரியில் இப்பெயர் மிகப் பழைமையானதென்பதற்கு இக்கிராமத்திற்கண்டு பிடிக்கப்பட்ட பழைமையான கட்டிட, சிற்ப அழிபாடுகள் சான்றாக உள்ளன. அத்துடன் சோழரின் பின்னர் இலங்கையில் மேலாதிக்கம் செலுத்தி 13 ஆம் நூற்றாண்டிலே தமிழரசு ஒன்றைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்த பாண்டியரை நினைவுபடுத்தும் செழியாவில், கோணமலை, தென்னியங்குளம், பாண்டியன்குளம், பாண்டியன் கல்லு போன்ற இடப்பெயர்களும் இக்கிராமத்தைச் சூழவர உள்ளன. தமிழ்நாட்டில் நீராவியென்ற பெயர் கொண்ட இடங்கள் சோழர் காலத்தில் இருந்தமைக்குக் கல்வெட்டுக்களும் இலக்கியங்களும் சான்றாக அமைகின்றன. பூநகரியில் இக்கிராமத்திற்கு அருகில் உள்ள இடப்பெயர்கள் சோழர் காலப் பெயர்களை ஒத்திருப்பதனால் நீராவியையும் சோழர்காலத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு.

மண்ணியாற்றிற்குத் தெற்காக உள்ள வெள்ளாங்குளம் தற்காலப் பூநகரியையும், மாந்தையையும் பிரித்து நிற்கும் எல்லைக் கிராமமாகும். இங்குள்ள ஓரிடம் சோழ மண்டலம் எனவும், தெற்கே மாதோட்டத்திற்கு வடக்காக உள்ள ஓரிடம் சோழ மண்டலக்குளம் எனவும் அழைக்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் வெள்ளாங்குளம் ஒரு கிராமத்திற்குரிய பெயராகவும், சோழமண்டலம் சங்க காலத்திலே தமிழ்நாட்டின் கிழக்குப் பிராந்தியத்தையும், சோழர் காலத்தில் ஒரு நிர்வாகப் பிரிவையும் குறிப்பனவாகவும் இருந்துள்ளன.[83] சங்க காலத்திலே தமிழ் நாட்டின் கிழக்குப் பிராந்தியத்திற்கும் வடமேற்கிலங்கையிலுள்ள பூநகரி, மாந்தை போன்ற இடங்களிக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்ததற்குப் பல சான்றுகள் உண்டு. இதனாற் பூநகரியில் இப்பெயர் சங்க காலத்திலேயே ஏற்பட்டதென வாதிட இடமுண்டு. ஆனால் பூநகரியிற் சோழ மண்டலத்திற்கு அருகிலுள்ள சோழியகுளம், அம்பலப்பெருமாள், நீராவி, பல்லவராயன்கட்டு, மண்ணியாறு, பல்லவராயன் ஆறு முதலிய இடங்களும், ஆற்றுப் பெயர்களும் சோழர் காலத்தில் பெரிதும் புழக்கத்தில் இருந்த பெயர்களாக இருப்பதாற் சோழமண்டலமும் சோழர் ஆட்சிக்காலத் தொடர்பால் ஏற்பட்டதெனக் கருதலாம். சோழமண்டலக் கிராமத்தில் உள்ள சாமத்திய மேடு என்ற இடத்தில் புராதனகாலக் கட்டிட அழிபாடுகள் பல காணப்படுகின்றன. இவ்வழிபாடுகளிடையே சில இந்து விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சோழர் காலத்திற்கே உரிய சதுரவடிவிலான ஆவுடையாரையும், லிங்கத்தையும் கொண்டுள்ளது. இச்சான்றுகள் சோழர்கால ஆலயமொன்று இங்கிருந்திருக்கலாம் என்பதைக்கோடிட்டு காட்டுகின்றன.

சோழராட்சியிலே தமிழ்நாடு எட்டு மண்டலங்களாகவும், அவை நிர்வாகத்தின் பொருட்டு பல வளநாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. இவற்றுட் சோழ மண்டலம் (தமிழ்நாட்டின் கிழக்குப் பகுதி) ஒன்பது வளநாடுகளாக முதலாம் இராஜராஜசோழன் ஆட்சியிற் பிரிக்கப்படடிருந்தது. இவற்றுள் ஒன்று "அருண்மொழித் தேவ வளநாடு" என்ற பெயரைப் பெற்றிருந்தது.[84] இலங்கையிற் சோழராட்சியின்போது இப் பெயர்கொண்ட நிர்வாகப்பிரிவு மாதோட்டத்தில் இருந்ததை அங்கு கிடைத்த சோழக் கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது.[85] இதனால் மாதோட்டத்திற்கு வடக்கே பூநகரியில் உள்ள சோழமண்டலத்தைச் சோழர்கால நிர்வாகப் பிரிவுக்குரிய பெயராகக் கருதலாம். இதற்கு வடக்கே மட்டுவில்நாடு என்ற இடம் இருப்பது இக்கருத்திற்கு மேலும் சான்றாகும்.

கி.பி 10 ஆம் நூற்றாண்டில் முதலாம் இராஜராஜசோழன் இலங்கை மீது படையெடுத்து அநுராதபுரத்தைக் கைப்பற்றி (கி. பி 993 இல்) மும்முடிச்சோழ மண்டலம் என்ற பெயரிற் சோழரின் ஒன்பதாவது மண்டலமாக ஆண்டதைச் சோழக் கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. இதன் பின்னர் இவன் மகன் முதலாம் இராஜேந்திர சோழன் கி. பி 1017 இல் முழு இலங்கையையும் வெற்றிகொண்டு சோழ ஆதிக்கத்தை மேலும் பலப்படுத்திக் கொண்டான். இதற்கு மாறாக இலங்கை வரலாற்றைக் கூறும் சூளவம்சம் 1017 ஆம் ஆண்டளவிலேதான் முதன்முறையாக இலங்கை சோழரால் வெற்றி கொள்ளப்பட்டது என்ற பொருள்படக் கூறுகின்றது.[86] ஆனால் பதவியாவிற் கண்டு பிடிக்கப்பட்ட முதலாம் இராஜராஜசோழன் காலக் கல்வெட்டு இவன் ஆட்சி இங்கிருந்ததை உறுதிப்படுத்துகிறது.[87] அதேபோல இவன் ஆட்சியில் இலங்கை மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயரைப் பெற்றிருந்ததென்பதைப் பூநகரியிலுள்ள சோழமண்டலம் உறுதிப்படுத்துகிறது எனலாம். அக்காலத்தில் இப்பெயர் பரந்த பிரதேசத்தைக் குறிந்திருக்கலாம் என்பதைப் பூநகரி சோழமண்டலத்திற்குத் தெற்கேயுள்ள சோழமண்டலக்குளம் என்ற இடப்பெயர் உறுதிப்படுத்துகின்றது.

மண்ணியாற்றிற்கு மேற்கே கடற்கரையை அண்டியுள்ள ஒரு பிரதேசம் ஈழஊர், ஈழவன் குடா என அழைக்கப்படுகிறது. சங்ககாலத்திலும் பிற்பட்ட சோழர், பாண்டியர் காலத்திலும் இலங்கை ஈழம், ஈழமண்டலம் எனவும் அழைக்கப்பட்டுள்ளது. சோழர்வெற்றிகொண்டபுலச்சேரி என்ற இடம் ஈழஊரில் உள்ள புலையர்குடா என்ற துறைமுகப் பகுதியைக் குறித்ததாகும். இவ்விடத்திலேதான் தம்பதேனி அரசுக்கெதிரான கலிங்கமாகனது தமிழ் கேரளப்படை நிலைகொண்டிருந்ததாகச் சூளவம்சம் கூறுகிறது. இவ்

விடத்திலிருந்து சோழர், பாண்டியர்கால நாண யங்கள் உட்படப் பல மத்தியகால நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1262ஆம் ஆண்டுக் குரிய பாண்டியக்கல்வெட்டு ஒன்று வடஇலங் கையை ஈழம் என அழைப்பதோடு, இங்கு ஆட்சி செய்த சாவக மன்னனை வீரபாண்டியன் வெற்றிகொண்டதாகவும் கூறுகின்றது.[88] இதே ஈழஊரின் தென்னெல்லையில் உள்ள துறைமுகப் பகுதி ஒன்று வீரபாண்டியன் கிராமம் எனக் கூறப்படுவதும் குறிப்பிடததக்கது. 16ஆம் நூற் றாண்டிற் போத்துக்கேயராற் பூநகரியிற் கட்டப் பட்ட கத்தோலிக்கத் தேவாலயங்களில் ஒன்று ஈழஊரில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.[89] இச் சான்றுகள் அனைத்தும் சோழர், பாண்டியர்கால ஆட்சியின்போதும், பிற்காலத்திலும் இப்பிராந் தியம் முக்கியத்துவம் பெற்றிருந்ததையே எடுத் துக் காட்டுகின்றன. இந்த ஈழஊரின் மத்தியி லுள்ள சிறு கிராமம் வெள்ளைப்பள்ளம் என அழைக்கப்படுகின்றது. ஆங்கிலேயர்கால (1882) ஆலயப்பதிவேட்டில்இங்குள்ளஆலயம்ஈழவூர்வெள் ளைப்பள்ளத்துப்பிள்ளையார் கோவில்எனக் கூறப் பட்டுள்ளது.[90] இப்பெயர் சோழரின் தலைநக ரான தஞ்சாவூரில் உள்ள வெள்ளைப்பள்ளம் என்ற ஊரின் இடப்பெயரை நினைவுபடுத்து கின்றது.

## பூநகரியும் திருமலையும்

சோழர் ஆட்சிக்காலத் தலைநகராகப் பொல நறுவை விளங்கியபோதிலும், அவர்களது அர சியல், இராணுவ, பண்பாட்டு நடவடிக்கைகள் திருக்கோணமலையிலே அதிகரித்திருந்ததற்கான சான்றுகள் பல அம்மாவட்டத்திலிருந்தே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுபோன்று ஒரு முக்கியத்துவத்தை வடமேற்கிலங்கை, சிறப் பாகப் பூநகரி பெற்றிருந்ததனால் இரு பிராந்தியங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்திருக்கலாம் எனக் கருதமுடி கிறது. இதை உறுதிப்படுத்துவதில் இரு பிராந் தியங்களுக்கும் பொதுவான சோழர்கால இடப் பெயர்கள் சிலவற்றை எடுத்துக்காட்டலாம்.

திருக்கோணமலையிலுள்ள ஓரிடம் இன்று பூநகர்என அழைக்கப்படுகின்றது. தற்போது இப் பெயர் சிறு கிராமத்தின் பெயராக இருந்தாலும் இது நகர் என்ற பெயரோடு முடிவதால் முன்பு இவ்விடம் சிறுநகராக இருந்ததையே காட்டுகின் றது. சோழர் காலத்திற் பதவியா, கந்தளாய், மாதோட்டம் முதலிய இடங்கள் சோழப்பெயர் கொண்ட தலைநகரங்களாக இருந்தும்கூடப் பிற் காலத்தில் அவற்றின் முக்கியத்துவம் மறைந்து போனமை இங்கு நினைவுகொள்ளத்தக்கது.[91] இது போன்றதொரு நிலை பூநகரிக்கும் ஏற்பட் டிருக்கலாம் எனக் கருதஇடமுண்டு. இப்பெய ருக்கும் பூநகரிக்குமிடையே மொழியாலே, கருத் தாலே நெருங்கிய ஒற்றுமைத்தன்மை காணப்படு கின்றது. இலங்கையிற் பூநகரி எனும் இடப் பெயர் பற்றிய உறுதியான சான்று 16ஆம் நூற் றாண்டுக்குரிய போர்த்துக்கேய ஆவணங்களிற் காணப்படுகிறது. இது போர்த்துக்கேய மொழி யிற் புநெறிம் எனப்பட்டது.[92] அக்காலத்தில் இப்பெயர் தற்காலப் பூநகரியின் எல்லையை விடச் சற்றுப் பரந்தபிரதேசத்தைக் குறித்த தெனக் கூறுவதற்குச் சான்றுகள் உண்டு. இவ் விடப்பெயரை மிகத்தொன்மையானதெனக் கரு தும் இராசநாயகம் முதலியார் கி. பி. 1 ஆம் நூற்றாண்டுக்குரிய தொலமியின் குறிப்பில் வரும் புதூக்கி என்ற இடத்தைப் பூநகரி என அடை யாளம் காட்டினார்.[93] ஆனால் இக்கருத்தை ஏற்பதற்குப்போதிய ஆதாரங்கள் காணப்பட வில்லை. வரலாற்று ஆசிரியர்கள் சிலர் தமிழ் நாட்டிலுள்ள பூம்புகார், காவிரிப்பூம்பட்டினம், பொன்னேரி முதலான இடப்பெயர்களின் மரு விய வடிவமே பூநகரி என அபிப்பிராயம் தெரி வித்துள்ளனர். ஆனால் தமிழ்நாட்டிலேயே பூந கரி என்ற பெயரில் ஒரு கிராமம் இன்றும் இருப் பதனைக் காணலாம்.[94] இதனாலே தமிழ்நாட் டுடனான தொடர்பே இப்பெயர் இங்கு ஏற்

படக் காரணம் எனலாம். சோழராட்சியிற் பூநகரியும், திருமலையும் அவர்களது அரசியல் வர்த்தக, பண்பாட்டு நடவடிக்கைகளின் முக்கிய மையங்களில் ஒன்றாக விளங்கியதனால் அவர்கள் காலத்திலேயே இப்பெயர் இரு பிராந்தியங்களிலும் ஏற்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. இதைப் பூநகரிக்கும் திருக்கோணமலைக்கும் பொதுவாக உள்ள நல்லூர், வெள்ளாங்குளம், ஆலங்கேணி முதலான சோழ இடப்பெயர்கள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

பதவியாவிலுள்ள சிவதேவாலய அழிபாடுகளிடையே கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாம் இராசாதிராசசோழன் காலத்திற்குரிய (கி. பி. 1163-1178) கல்வெட்டு ஒன்று இங்குள்ள இரவிகுலமாணிக்க ஈஸ்வரத்திற்கு ஞானதேசிக வணிக கணத்தைச்சேர்ந்த கோணவில் வெண்காடான் எறிமணியொன்றைத் தானம் அளித்ததாகக் கூறுகிறது.95 பூநகரியின் கிழக்கு எல்லையிற் கோணாவில் என்ற பழைய கிராமம் உள்ளது. இவற்றின்மூலம் இங்கிருந்த வணிகன் ஒருவனே பதவியா சிவதேவாலயத்திற்குத் தானமளித்தவனாகக் கருத இடமுண்டாகிறது. அவ்வாறு கருதுவதற்கு இன்னுமொரு சான்றை ஆதாரமாகக்காட்டலாம். பூநகரி, கோணாவிற் கிராமத்திற்குத் தெற்காக அம்பலப்பெருமாள் என்ற கிராமம் உள்ளது. அம்பலம் என்பது சோழர்காலத்தில் வணிகர்கள் தங்குமிடத்தைக் குறிப்பதாகும். பூநகரி அம்பலப் பெருமாள் சோழவணிகர்கள் தங்கிய இடமாக இருக்கலாம் என்பதற்கு இதற்கு அருகிலுள்ள இடம் சோழியன் குளம் (சோழகுளம்) என அழைக்கப்படுவது ஒரு சான்றாகும். பதவியாவிற் கிடைத்த கல்வெட்டும் சோழர்கால ஞானதேசிய வணிககணத்தைச் சேர்ந்த கோணவில் வெண்காடனே தானம் கொடுத்ததாகக் கூறுகிறது. மேற்கூறப்பட்ட சான்றுகள் சோழர்காலத்திற் பூநகரிக்கும் திருமலைக்குமிடையே இருந்த தொடர்புகளைக் காட்டுவதாகக்கொள்ளலாம்.

சோழராட்சிக்கு முன்னரே பல்லவர்காலத்திலே கிழக்கிலங்கையிலே திருக்கோணேஸ்வரமும், வடஇலங்கையிலே திருக்கேதீஸ்வரமும் நாயன்மார்களின் பாடல்களில் புகழ்பெற்ற தலங்களாக விளங்கியுள்ளன.96 இத்தலங்கள் சோழராட்சி இலங்கையில் இடம் பெற்றபோது மேலும் சிறப்படைந்திருக்கும் என்பதிற் சந்தேகமும் இல்லை. அந்நிலையிற் கலாசார ரீதியில் ஒன்றுபட்ட இரு பிராந்தியங்களுக்குமிடையே தொடர்பு இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இதையே பூநகரிக்கும் திருமலைக்கும் பொதுவான சோழ இடப்பெயர்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இதுகாறும் கூறிய கருத்துக்கள் அனைத்தையும் சேர்தூக்கிப் பார்க்கும் பொழுது பூநகரியிற் குறிப்பிட்ட சிறிய எல்லைப் பகுதிக்குள் 18க்கு மேற்பட்ட சோழ இடப்பெயர்கள் இருப்பது தற்செயலானது என்றோ, பிற்காலத்தில் ஏற்பட்டது என்றோ கருதுவது ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று. சோழர்கால வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்புகள் காரணமாக இவை ஏற்பட்டிருக்கலாம் என வாதிட்டாலும், அவ்வாறு வந்த பெயர்கள் நீடு நிலைத்தன எனக்கொள்ள முடியவில்லை. தொடர்புகள் வந்து செல்பவை, நிலையற்றவை, எனினும் அவை மட்டும் காரணமாக அமைதல் கடினம். நிலையான தொடர்பு நிலையான மக்களிடமிருந்தும் எழலாம். சோழரின் 200 ஆண்டுகால வரலாற்றில் இப்பிரதேசம் பெற்ற முக்கியத்துவத்தை நோக்கும் போது இவ்விடப் பெயர்கள் பல சோழர்காலக் குடியேற்றத்தால், குடியேற்றத்து மக்களினால் ஏற்பட்டன எனக்கூறுவதே பொருத்தமாகத் தெரிகின்றது. அவ்வாறான குடியேற்றங்கள் இங்கு ஏற்பட்டமைதான் 1070 இல் பொலநறுவையில் இருந்து சோழர் அகற்றப்பட்டதன் பின்னரும் பொலநறுவை அரசுக்கெதிரான சோழப்படையினரின் கிளர்ச்சிகள் சில பூநகரியிலிருந்து ஏற்படக் காரணம் எனலாம்.

இலங்கையில் சோழத் தொடர்பால், சோழக் குடியேற்றத்தால் சோழப் பெயரில் சில இடங்கள் தோன்றியதைப் பதவியா, கந்தளாய், திருகோணமலை, வாகல்கட, மாதோட்டம் ஆகிய இடங்களிற் கிடைத்த சோழக் கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. ஆனால் அவ்விடப் பெயர்கள் சோழராட்சியின் பின்னர் அவ்வப் பெயர்களால் வழங்கப்பட்டதற்கு ஆதாரங்கள் காணப்படவில்லை. பூநகரியைப் பொறுத்தவரை சோழராட்சியின் பின்னரும் இங்குள்ள சோழ இடப்பெயர்கள் பல தொடர்ந்தும் தமிழர் வரலாற்றோடு தொடர்புடைய முக்கிய இடப் பெயர்களாகப் பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களிலும், போர்த்துக்கேய, ஒல்லாந்தர் கால ஆவணங்களிலும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக 13ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண அரசு தோன்றுவதற்கு முன்னர் கலிங்க மாகன், சந்திரபானு, அவன் மைந்தன் ஆகிய மன்னர்களது அரசு ஒன்று வடஇலங்கையில் இருந்ததாகச் சூளவம்சமும், பாண்டிய மன்னர்களது குடுமியாமலைக் கல்வெட்டும் கூறுகின்றன. சூளவம்சம் இம்மன்னர்களது தமிழ், கேரளப் படைகள் வடஇலங்கையின் சில முக்கிய மையங்களில் நிலைகொண்டிருப்பதாகக் கூறுகிறது. இவற்றுள் புலச்சேரி, குருந்தி, காகாலா (காக்கையையன் குளம்) கோணமலை முதலான இடங்களிற் சில பூநகரியில் உள்ள சோழ இடப்பெயர்கள் ஆகவும், வேறு சில அதன் அருகில் உள்ள இடப்பெயர்களாகவும் உள்ளன. இதிலிருந்து சோழக் குடியேற்றத்தால் ஏற்பட்ட இடங்களின் வரலாற்று முக்கியத்துவத்தை உணரலாம்.

# அடிக்குறிப்புகள்


1. Nilakanta Sastri, K. A. The Colas, (Madras, 1958), *பக். 110-116*
2. மேற்படி., பக். 592-610
3. Paranavitana, S. (ed) History of Ceylon, Vol. 1, pt, 1. (Colombo, 1959), *ப. 345*
4. SII., 553 of I920
5. Paranavitana, S. மு. கூ. நூ., *ப. 347*
6. மேற்படி.,
7. மேற்படி.,
8. மேற்படி., *ப. 348*
9. மேற்படி., *ப. 349*
10. மேற்படி., *ப. 350*
11. Paranavitana, S. (ed) History of Ceylon, Vol. 1, pt. II, (Colombo, 1960), *ப. 427*
12. சதாசிவபண்டாரத்தார். தி. வை. பிற்காலச் சோழர் வரலாறு, *(அண்ணாமலை, 1974) ப. 297*
13. மேற்படி., *ப. 383*
14. மேற்படி., *ப. 402*
15. SII., Vol. IV., No. 1388
16. சதாசிவபண்டாரத்தார் தி. வை. மு. கூ. நூ., *ப. 472*
17. Pathmanathan, S. "Chola rule in Sri Lanka", Proceedings of the Fourth International Conference Seminar of Tamil Studies (Jaffna, *1980), பக். 1 - 9*
18. EZ., Vol. V, பக். 22-27
19. Paranavitana, S. மு. கூ. நூ., 1960, *பக். 536-537*
20. EZ., Vol. II, பக். 250 ff
21. சூளவங்ஸ., அத். 74, *செய். 44*
22. மேற்படி., *அத். 70, செய். 29*
23. மேற்படி., *அத். 13, செய். 34-36*
24. வேலுப்பிள்ளை, ஆ. சாசனமும் தமிழும், *(பேராதனை, 1971), ப. 224*
25. SII., Vol. IV. No. 1412

26. மேற்படி.,

27. Pathmanathan, S. மு. கூ. க, ப. 22

28. இந்திரபாலா கா. "யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுகள்" சிந்தனை 11, (பேராதனை, 1969) பக். 37-41

29. மேற்படி.,

30. Journal of Oriental Research., Vol. XIX, ப. 150

31. Epigraphia Tamillica., Vol. I, pt. I, பக். 52-56

32. இந்திரபாலா, கா, மு. கூ. க, 1969, பக். 37-41

33. சிவசாமி, வி, யாழ்ப்பாணத்துக் காசுகள், (மானிப்பாய், 1974) பக். 1-12

34. Ancient Ceylon., Vol. I, No. 7

35. Paranavitana, S. மு. நூ. நூ., 1959, ப. 347

36. இந்திரபாலா, கா. மு, கூ.க, 1969, ப. 44

37. EI. Vol. XXII, பக். 86-92

38. மேற்படி.,

39. சதாசிவபண்டாரத்தார், தி வை. மு. கூ. நூ, ப. 593

40. மேற்படி., ப. 594

41. மேற்படி., ப. 597

42. மேற்படி., ப. 593

43. மேற்படி.,

44. மேற்படி.,

45. Paranavitana, S. மு. கூ. நூ, ப. 475

46. மேற்படி.,

47. சதாசிவபண்டாரத்தார், தி. வை. மு.. நூ, கூ. ப. 382

48, EI., Vol. XXI, No- 31

49. மேற்படி.,

50. மேற்படி.,

51. சூளவம்ஸ, அத். 60, செய் 30-36

52. Nilakanta Sastri, K. A. மு. கூ. நூ, பக், 368-369
Paranavitana, S. மு. கூ. நூ, 1960. ப. 483

53. மேற்படி.

54. EI. Vol. XXI, No. 31

55. இந்திரபாலா, கா. ''யாழ்ப்பாண இராச்சியம் தோன்றிய காலமும் சூழ்நிலையும்'' இளங்கதிர் 2ஈவது ஆண்டுமலர், (பேராதனை), ப. 16
56. மேற்படி. ப. 43
57. மேற்படி.
58. Nilakanta Sastri, K. A. மு. கூ. நூ, பக். 368-369
59. Pathmanathan, S. மு. கூ. க, பக் 19-25
60. மேற்படி.
61. மேற்படி.
62. SII. Vol. IV, No. 1414
63. Lewis, J. P. Manual of Vanni Place Names of Vanni, (colambo: 1917) நவரத்தினம், சி. எஸ். 'வன்னியும் வன்னியரும்' திருக்கேதீஸ்வர சைவ மகாநாட்டு மலர், (1917), ப. 58
64. சதாசிவபண்டாரத்தார், தி. வை. மு. கூ. நூ, ப. 56
65. புலவர் அரசு. பெரியபுராண வசனம் அல்லது திருத்தொண்டர் வரலாறு, (சென்னை: 1949), ப. களகூ
66. சதாசிவபண்டாரத்தார், தி. வை. மு. கூ. நூ, ப. 56
67. புலவர் அரசு, மு. கூ. நூ. பக். கசாஅ - கள0
68. Temple Register of Kachcheri, Jaffna, (Jaffna: 1892).
69. Epigraphia Tamillica. Vol. I, Pt. I, பக், 52-56
70. EI, Vol. VI, No. 273 of 1907
71. சேதுப்பிள்ளை, ரா. பி. தமிழக ஊரும்பேரும், (சென்னை: 1972), ப. 123
72. EI, vol. xxll, பக். 86 - 92
73. Sll, Vol. IV, No. 1404
74. Sll, Vol. IV, Nos. 1403, 1404
75. பத்மநாதன், சி. ''இலங்கைத் தமிழ் வணிக கணங்களும் நகரங்களும் (கி. பி. 1000 - 1250)'', சிந்தனை, தொகுதி 11 ,இதழ் 11, (திருநெல்வேலி, 1984), ப. 8.
76. புஷ்பரட்ணம், ப. ''சோழர் மரபில் நாட்டார் நிர்வாகப் பிரிவு'', வீரகேசரி வாரவெளியீடு, (கொழும்பு: 15. 04. 90)
77. பாலசுந்தரம், இ. இலங்கை இடப்பெயர் ஆய்வு – 2,( யாழ்ப்பாணம்: 1989), பக். 52 - 53
78. Sll, Vol. IV, No. 1388
79. ARE,, for 1917/18, No. 454 of 1917

80. சதாசிவபண்டாரத்தார், தி. வை மு. கூ. நூ. ப.473

81. மேற்படி. ப. 23

82. Nilakanta Sastri, K. A. மு. கூ. நூ. பக். 513, 576

83. சதாசிவபண்டாரத்தார், தி. வை. மு. கூ. நூ. ப. 123

84. மேற்படி. ப. 472

85. Pathmanathan. S. மு. கூ, க. 1980,ப 22

86. பத்மநாதன், சி. ''தமிழ்ச் சாசனங்களும் ஈழ வரலாற்று ஆராய்ச்சியும்'' இளந்தென்றல் 1971 - 72, (கொழும்பு),ப. 27

87. Epigraphia Tamillica., Vol. I, Pt I, ப. 32

88. Nilakanta Sastri, K. A ''The Ceylon Expedition of Jatavarman Virupandya'' Proceedings and translation of the Eight All Indian Oriental Conference, (Bangalore: 1937), ப. 509

89. Friar Paulaoda Trinidade Chapter on the Introduction Christianity to Ceylon (Chilaw: 1937), ப. 240

60. Temple Register of Kachcheri, Jaffna, (Jaffna: 1892)

91. இந்திரபாலா, கா. ''யாழ்ப்பாண இராச்சியம் தோன்றிய காலமும் சூழ்நிலையும்'' இளங்கதிர் 21வது ஆண்டுமலர் (பேராதனை) ப. 55

92. Friar Pauloda, Trinida, மு. கூ. நூ. ச. 240

93. Rasanayagam, C. Ancient Jaffna, (Madras: 1926), ப. 113

94. தமிழ்நாடு சென்னை ஒலிபரப்பு கூட்டுத்தாபன வீடும் வயலும் நிகழ்ச்சியில் 18. 02. 91 இல் இக்கிராமம் பற்றி ஒலிபரப்பப்பட்டது

95. Epigraphia Tamillica, Vol. I, Pt. ப. 33

96. கோபாலகிருஷ்ணஐயர், ப. ''சிவாகமங்களும் சிற்பநூல்களும் சித்திரிக்கும் சிவவிக்கிரகவியல்'' கலாநிதிப் பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு (யாழ்ப்பாணம்: 1981). ப. 729


# 5. பூநகரியும் சோழர் காலப் பண்பாடும்

பூநகரிக்கும் தமிழ்நாட்டிற்குமிடையே பாரம் பரியமாக இருந்து வந்த அரசியல், வர்த்தக உறவுகள் காரணமாக, தமிழ்நாட்டிற் காலத் திற்குக் காலம் தோன்றி வளர்ந்த பண்பாடு இலங்கையின் ஏனைய பாகங்களைப் பாதித்தது போல் இப்பிராந்தியத்தையும் பாதித்தது. இச்செல் வாக்கு வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் (கி. மு. 3ஆம் நூற்றாண்டு) இருந்து பெருமள வுக்கு இடையீடின்றித்தொடர்ந்து இப்பிராந்தி யத்தில் ஏற்பட்டதென்பதைச் சமீப காலத்தில் இங்கு கிடைத்த பல தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இது இப்பிராந்தியத்திற் குரிய தனிச் சிறப்பெனக் கூறலாம். இந்நிலையில் தமிழ்நாட்டில் 10 ஆம் நூற்றாண்டிலிருந்து எழுச்சி பெற்ற சோழவம்சமானது முன்னைய தமிழ்நாட்டு அரசவம்சங்களைக் காட்டிலும் தமிழ் நாட்டின் இயற்கையெல்லையைத் தாண்டிக் கடல் சார்ந்த பேரரசை அமைத்துக் கொண்ட போது, சோழர்காலப் பண்பாடு முற்பட்ட காலங்களை விடக் கூடுதலாக இப்பிராந்தியத்தினுட் செல் வாக்குச் செலுத்தியிருக்குமென்பதிற் சந்தேக மில்லை.

சோழர்காலத்தின் பரந்த பேரரசுக் கோட் பாடும், கடல் கடந்த வர்த்தகத்தின் மூலம் பெறப்பட்ட பெருமளவு செல்வமும் தமிழ் நாட்டு ஆலயங்களை மையமாக வைத்து இந் துப் பண்பாடு வளரக் காரணமாகின. இது தமிழ் நாட்டைமட்டும் மன்றி, சோழரது வர்த்தக அர சியல் ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளையும் பாதித்தது. இலங்கையில் 77 ஆண்டுகால ஆட்சி யில்தான் இதுவரை அரசமதமாக இருந்த பௌத்தம் வீழ்ச்சியடைய, இந்துமதம் அரச ஆதரவுடன் வளர்ச்சியடைந்தது. இதனால் இலங்கையின் முக்கிய நகர, வர்த்தக மையங்க ளில் இந்து மதம் சார்ந்த கட்டிட, சிற்ப ஓவியக் கலைகள் திராவிடக் கலை மரபை அடிப்படை யாகக் கொண்டு வளர்ச்சியடைந்தன. இச்கலை மரபு இந்துக்கலைகளில் மட்டுமன்றி காலப்போக் கில் பௌத்தக் கலைகளிலும் செல்வாக்குச் செலுத்திற்று. 1070 இல் இலங்கையின் ஆட்சிய திகாரத்தை இழந்த போதிலும் சோழர் அரசி யலிலும், பண்பாட்டிலும் ஏற்படுத்தியிருந்த செல்வாக்கு, தொடர்ந்தும் நிலவியது. சோழரின் பின் ஆட்சிக்கு வந்த முதலாம் விஜயபாகு, பராக்கிரமபாகு, கஜபாகு போன்ற மன்னர்கள் தமது ஆட்சியைப் பாதுகாக்கத் தமிழர்கள் பலரை அமைச்சர்களாக, அதிகாரிகளாக, படைத் தளபதிகளாக வைத்திருந்தனர். இதனால் இம் மன்னர்கள் இந்துமதத்திற்கு ஆதரவாகவும் ஆட்சி செய்ய நேரிட்டது. இந்த ஆதரவைத் திரு கோணமலையில் இருந்த சோழர் கால ஆலயங் கள் சிலவும் பெற்றதாகத் தெரிகிறது. ஆயினும் காலப்போக்கில் ஏற்பட்ட ஆட்சிமாறுதல்களும், அன்னியரின் கலையழிவுக் கொள்கையும் சோழர் கால ஆலயங்கள் உட்பட பழமையான பல ஆல யங்கள் அழிந்துபோகக் காரணமாகின. இது பூந கரிக்கும் பொருந்துமென்பதை மண்ணித்தலை, பல்லவராயன் கட்டு, ஈழஊர் ஆகிய இடங்களில் உள்ள கட்டிட சிற்ப அழிபாடுகள் உறுதிப்ப டுத்துகின்றன.

## மண்ணித்தலைச் சிவாலயம்

இச்சிவாலயம் யாழ்ப்பாணப் பரவைக் கட லுக்கும், தமிழ்நாட்டுடன் தொடர்புகொள்ளக் கூடிய பெருங்கடலுக்கும் இடைப்பட்ட ஒடுங்கிய நிலப்பரப்பில் உள்ள மண்ணித்தலைக் கிராமத் தின் மத்தியில் அமைந்துள்ளது (படம் 49). சில நூற்றாண்டுகளாகக் கவனிப்பாரற்ற நிலையில் கைவிடப்பட்டுள்ள இச்சிறிய ஆலயத்தின் விமா னத்தின் பெரும்பகுதியும் அந்தராளத்தின் கூரை யும், முன்பக்கமும் இடிந்து விழுந்து மண்ணுள் புதையுண்டுள்ளன (படம் 50). அத்துடன் ஆல யத்தின் அத்திவாரப்பகுதியும் பெருமளவுக்கு மண் ணால் மூடுண்டுள்ளது. அதனால் முழுமையான தொல்லியல் அகழ்வாய்வு அற்ற நிலையில் இதன்




படம் - 49. சிவாலயத்தின் முன் பக்கத் தோற்றம்.

முழு விபரங்களையும் அறியமுடியவில்லை. எதிர் காலத்தில் தொல்லியல் அகழ்வாய்வுக்கு இவ்வாலயம் உட்படுத்தப்பெறுமானால், மேலும் சில உண்மைகள் வெளிவர வாய்ப்பேற்படலாம். எனவே இதுவரை இவ்வாலயம் தொடர்பாக எமக்குக் கிடைத்த ஆதாரங்களை மையமாக வைத்தே இவ்வியல் வரையப்பட்டுள்ளது.

## கர்பக்கிருகம்


ஏறத்தாழ 21' நீளத்தையும், 121/2 அகலத்தையும் கொண்ட இச்சிவாலயம் கர்ப்பக்கிரகத்தையும் இதற்குமுன்னால் சிறிய அந்தராளத்தையும் கொண்டுள்ளது (படம். 51). இதன் கர்ப்பக்கிருகம் வெளிப்புறமாக 101/2' நீளத்தையும், 121/2' அகலத்தையும், 8' 8" உயரத்தையும் கொண்டுள்ளது. உட்புறமாக இது 6' நீள அகலத்தையும் 10' உயரத்தையும் கொண்டிருக்கின்றது. கிழக்கு நோக்கிய இதன்வாசல் 4' 2" உயரத்தையும், 3' அகலத்தையும் உடையது. கர்ப்பக்கிருக நிலமட்டத்தில் இருந்து இதன் வாசல்படி 4' உயரத்திலும், கோமுகியின் உட்பக்க வாசல் 31/2 உயரத்திலும் அமைந்துள்ளன. 3' தடிப்புடைய இதன் சுவர்கள் பெருமளவுக்குச்செங்கட்டிகளையும், பொழிந்த சிறிய முருகைக் கற்களையும், கடலில் இருந்து எடுக்கப்பட்ட கற்



பவம் - 50. இடிந்த நிலையிலுள்ள சிவாலயத்தின் கட்டிட எச்சங்கள்,

களையும் கொண்டு சுதையினாற் கட்டப்பட்டுள்ளன. கர்ப்பக்கிருகவாசற்பகுதி மட்டும் ஒரே நீளமான பொழிந்த முருகைக்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

கர்ப்பக்கிருகம், மூன்று வெளிப்புறச் சுவர்கள், அவற்றில் அமைந்த புடைப்புத்தூண்கள், தேவகோஷ்டங்கள், மாடங்கள் என்பன இங்கே குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். இதன் பின்




படம் - 51. சிவாலயத்தின் தெற்குப் பக்கமாகவுள்ள கர்ப்பக்கிருகமும்,அந்தராளமும்

பக்கச் சுவரின் துணை மேடை, அடிமேடை, அடியில் அகன்று படிப்படியாக மேல்நோக்கி ஒடுங்கி 4' உயரத்தில் அதாவது பத்தாவது படிக்கல்லில் சமநிலை அடைகின்றது (படம் 52). இதிலிருந்து செங்கட்டி கொண்டு கட்டப்பட்ட நான்கு அரைத் தூண்கள் விமானத்தின் முதல் தளத்துக்குக் கீழ்ப் பகுதிவரை காணப்படுகின்றன. சதுர வடிவில் அமைந்த இத்தூண்கள் ஒவ்வொன்றும் 4' 5'' உயரத்தை உடையனவாகும் (படம். 53). தூணின் அடிப்பாகம் 6'' அகலத்தையும், நுணிப் பாகம் 1' அகலத்தையும் கொண்டுள்ளது. சதுர வடிவில் அமைந்த இதன் பலகைப்பகுதி அலங்காரமேதுமின்றித் தட்டைவடிவில் அமைந்துள்ளது. இதனையொத்த தன்மையே ஏனைய கர்ப்பக்கிருகச் சுவர்த் தூண்களிலும் காணப்படுகிறது.

இத்தூண்களுக்கிடையே மூன்று பக்கச் சுவர்களிலும் மூன்று தேவகோஷ்டங்கள் காணப்படுகின்றன. செங்கட்டி கொண்டு மிக அலங்காரமாகக் கட்டப்பட்ட இவற்றில் சிலைகள் ஏதும் தற்போது காணப்படவில்லை. சிலைகள் வைப்பதற்குரிய இதன் உட்பாகங்கள் (தேவகோஷ்டங்கள்) 8'' அகலத்தையும் 2' உயரத்தையும் உடையன. இதன்மேல் அமைந்த மாடப்பகுதி அலங்கார வேலைப்பாட்டுக்குரிய பகுதியாகும். தேவ கோஷ்டங்களைவிட அகலமான இதன் பாகங்கள் ஏறத்தாழ 1' 8'' உயரத்தை உடையன. மூன்று பாகங்களைக்கொண்டு இந்த மாடத்தின் முதலிரண்டு பகுப்புக்களும் வெளிநோக்கி புடைப்புச் சிற்ப வடிவில் ஆக்கப்பட்டுள்ளன. இதன்மேல் உள்ள மூன்றாவது பாகம் சதுரவடிவில் அமைந்துள்ளது (படம். 54). இதன்மேல் முக்கோண வடிவில் அலங்கரிக்கப்பட்ட செங்கட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. கர்ப்பக்கிருகப் புறச்சுவர்களை அலங்கரிக்கும் இத்தேவ கோஷ்டங்களின் அமைப்பும், தொழில் நுட்பமும் இவ்வாலயம் மிகப் பழைமைவாய்ந்ததென்பதை உறுதிப்படுத்தப் பெரிதும் உதவுகின்றன.

## கோமுகி

கர்ப்பக்கிருகத்தில் இருந்து வெளிவரும் கோமுகியின் அமைப்பு, இவ்வாலயத்தின் பழைமையையும்,அதன் கலைப்பாணியையும் மதிப்பிட உதவுகின்றது. அண்மையில் "டகி'' என்பவர் கோமுகிகளை அடிப்படையாகவைத்து தென்னாசிய சிவாலயங்களின் பழைமைபற்றி ஆராய்ந்தமை இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.1 மண்ணித்தலைச் சிவாலயம் பழைமையானதென்பதற்கு அதன் கோமுகியையும் ஓர் ஆதாரமாகக் காட்டலாம். கர்ப்பக்கிருகத்தின் வடக்குப்புறத் தேவகோஷ்டத்தின் கீழ்ப்பக்கச் சுவரின் மையத்திலிருந்து வெளிவரும் இக்கோமுகி, ஏறத்தாழ 2' 3'' நீளமுடையது. கூடுதலான தொழில் நுட்ப வேலைப்பாட்டைக்கொண்ட இக்கோமுகி வைரமான வெள்ளை முருகைக்கல்லில் அப்படியே லிங்க வடிவத்தைப் பிரதிபண்ணி அதன் நுனிப் பாகம் சற்றுக் கீழ்நோக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது (படம். 55).




<— துணை மேசை

<— அடி மேசை

படம் - 52. சிவாலயத்தின் பின்பக்கத் தோற்றம்.

தூணின் பலகைப் பகுதி —>




படம் - 53. சிவாலயத்தின் தூண் அமைப்பு



படம்-54. சிவாலயத்தின் தேவகோஷ்ட அமைப்பு.

## அந்தராளம்

கர்ப்பக்கிருகத்தின் முன்னால் அமைந்த அந்தராளத்தின் வெளிப்புறம் கர்ப்பக்கிருகத்தை விடச் சற்று அகலம் குறைந்து காணப்படுகின்றது. கர்ப்பக்கிருகத்தையும், அந்தராளத்தையும் பிரித்து நிற்கின்ற மத்தியில் உள்ள இரட்டைச் சுவர்கள் ஒன்றுடன்ஒன்று இணைந்து மேலும் கீழுமாக உள்ளன. இவ்வந்தராளம் வெளிப்புறமாக 10 1/2' நீளத்தையும், 11' அகலத்தையும் 8' உயரத்தையும், உட்புறமாக 7' 8'' நீளத்தையும் 6' 5'' அகலத்தையும், 10' உயரத்தையும் கொண்டுள்ளது. கர்ப்பக்கிருகத்தைவிட இதன் சுவர்களின் தடிப்பு (ஏறத்தாழ 2') குறைவாகும். அத்துடன் செங்கற்களைவிடக் கூடிய அளவிற்கு கடலிலிருந்து எடுக்கப்பட்டகற்களைக் கொண்டே இவை கட்டப்பட்டுள்ளன. அந்தராளத்தின் வெளிப்புறங்களில் அமைந்த இரு தேவகோஷ்டங்களும், நான்கு அரைத்தூண்களும் ஏறத்தாழ கர்ப்பக்கிருகத்தில் உள்ள வடிவங்களையும், அளவுகளையும் ஒத்துள்ளன. இவ்வந்தராளத்தை மூடி




படம் -55. கர்ப்பக்கிருகத்திலிருந்து வெளி வரும் கோமுகி.

யிருந்த கூரைஎன்னவடிவத்தில் இருந்ததென்பதை அடையாளம் காணமுடியவில்லை. ஆயினும் நிலத்திற் புதையுண்டிருக்கும் அழிபாடுகளைக்கொண்டு இது மூடுசாந்தினாற் கட்டப்பட்டதெனக் கூறலாம். இவ்வந்தராளத்தின் வாற்பகுதி அத்திவாரத்தையும், வாசற்படிக்கல்லையும் தவிர முன்பக்கப்பகுதி முழுவதும் இடிந்துவிட்டது. ஆயினும் இவ்விடிபாடுகள் இடையே 6' நீளமும் 1 3/4 அடி அகலமும் கொண்ட மூன்று பொழிந்த முருகைக்கற்கள் காணப்படுகின்றன. இவை வாசல் பகுதியின் இருபக்கங்களுக்கும் கூரையைத் தாங்கி நிற்கும் மேற்பகுதிக்கும் பயன்படுத்தப்பட்டவையாகும். இவற்றில் வாசற்படிக்கல்லொன்றில் செயற்கையான துவாரமொன்று காணப்படுகின்றது. இது கூரையைத் தாங்கிநின்ற கல்லாக இருக்கவேண்டும். இதன்மூலம் பொலநறுவை 2ஆம் சிவதேவாலயத்தைப் போல்[2] இக்கோயிலிலும் ஒற்றைக்கதவு பயன்படுத்தப் பெற்றிருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு.

## விமானம்

இவ்வாலயத்தின் பண்டைய கலைச்சிறப்பை யும், பெருமையையும் வெளிப்படுததி நிற்பதில், கர்ப்பக்கிருகத்தின் மேலமைந்த விமானம் முக்கிய பங்குவகிக்கின்றது. மூன்று தளங்களையுடைய இவ்விமானத்தின் மூன்றாவது தளத்தில் உள்ள ஸ்தூபி இடிந்து வீழ்ந்துவிட்டது (படம் 56.) தற் போதையநிலையில் இதன் உயரம் விமானத்தின்




படம் - 56. சிவாலயத்தின் பின்பக்க விமானம்.

உப பீடத்தில் இருந்து மூன்றாம் தளம்வரை 7' ஆகவும், கர்ப்பக்கிருக நிலமட்டத்திலிருந்து 17' ஆகவும் உள்ளது. இதைக்கட்டுவதற்குப் பின்பற் றப்பட்ட தொழில்நுட்பஅறிவு இங்கே சிறப்பாக நோக்கத்தக்கது. விமானத்தின் உட்பாகம் கர்ப் பக்கிருகத்தின் மேலுள்ள நான்கு மூலையிலும் குறுக்காக நீளமான பொழிந்த முருகைக் கற் களைவைத்து கர்ப்பக்கிருகத்தின் மேல் படிப்படி யாக வட்டவடிவிற் கற்கள் அடுக்கப்பட்டுச் சுதை யினாற் கட்டப்பட்டுள்ளது. இவ்வாறு கட்டு வதற்குப் பயன்படுத்தப்பெற்ற கற்கள் ஒவ் வொன்றும் 4' 8", 1' 10" என்ற நீள அளவு களைக் கொண்டுள்ளது. இவ்வாறு வட்ட வடி விற் கட்டப்பட்டுள்ள உட்பக்க விமானம் மேற் பாகத்தில் மட்டும் 1 1/2 உயரத்தில் சதுரமாகக் கட்டப்பட்டுள்ளது. இந்த அம்சம் வெளிப்புற விமானத்திலுள்ளதைவிட மாறுபட்டதாகக் ாணப்படுகின்றது. முழுக்க முழுக்கச் செங்கட்டி களையும், சுதையையும் கொண்டு கட்டப்பட்ட வெளிப்புற விமானத்தின் உட்புறம் (உச்சியி லுள்ள மூன்றாவது தளத்தைத் தவிர) வட்ட மாகவே அமைந்துள்ளது. வெளிப்புறமாக உள்ள இரு தளங்களும் சதுரமாகவே காணப்படுகின் றன. உட்புறம் சதுரமாகஅமைந்த மூன்றாவது தளத்தின் பகுதி வெளியே வட்டமாகக் கட்டப் பட்டுள்ளமை இங்கு சிறப்பாகக் கவனிக்கத் தக்கது.

மூன்று தளங்களையுடைய இவ்விமானத்தின் முதலாவது தளத்தின் உபபீடம் ஏறத்தாழ 11' 4" நீள அகலத்தைக் கொண்டது.வளைவான செங்கட்டிகளைக் கொண்டு கீழ் நோக்கிக் கட் டப்பட்டுள்ள இதன் பாகம் ஒவ்வொன்றிலும் வளர்ச்சியடையாத நிலையில் உள்ள ஐந்து கூடு கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய இரு விமா னத்தளங்களையும் விட இதிலேதான் கூடுதலான அலங்கார வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. இதிற் காணப்படும் குதம், சாலை, பஞ்சரம் ஆகிய மூன்று அலங்கார அம்சங்களைத் தமிழ் நாட்டுத் திராவிடக்கலை மரபிற் சிறப்பாகக் காணலாம்.[3] விமானத்தின் கரையோரங்களில் அமைந்துள்ள குதங்களின் கீழ்ப்பாகம் சதுர வடிவிலும், மேற்பாகம் ஸ்தூபி வடிவிலும், இதை அடுத்துக் காணப்படும் ஐந்து சுருள்களை யுடைய பஞ்சரங்கள் நட்சத்திர வடிவிலும், நடு வில் அமைந்த சாலை கீழ்ப்புறம் சதுர வடி விலும் மேற்புறம் முக்கோண வடிவிலும் உள் ளன. குதத்தில் சிறிய தேவகோஷ்டங்களும், சாலையில் பெரிய தேவகோஷ்டமும் உள்ளன. இதன் சிறிய தூண்கள் கபோத வடிவில் அமைந் துள்ளன.

இதன் இரண்டாவது தளம் 6' அகலத்தை யும், 3' உயரத்தையும் உடையது. முதலாவது தளத்திலிருந்து இரண்டாவது தளத்தைப் பிரிக் கும் யாளமட்டம் வளைவான செங்கட்டிகள் கொண்டு கீழ்நோக்கிக்கட்டப்பட்டுள்ளது. இவ் விரண்டாவது தளத்தில் அலங்கார வேலைப் பாடுகள் அதிகம் காணப்படவில்லை. ஆயினும் ஸ்தூபிக்குக் கீழே நான்கு பாகங்களிலும் சிறிய தேவகோஷ்டங்கள் காணப்படுகின்றன. இதன் மேல் அமைந்த மூன்றாவது தளம் முற்றாகச் சிதைவடைந்து விட்டது. ஆயினும் இரண்டாவது தளத்துக்கு மேலமைந்த மாடந்தாங்கிக் கற்கள்

(செங்கட்டிகள்) வட்ட வடிவிற் கட்டப்பட்டிருப் பதைக் கொண்டு இதன் ஸ்தூபி வட்ட வடிவில் அமைந்திருந்ததென்பதை நிச்சயப்படுத்தலாம். விமானத்தின் கிழக்கு நோக்கிய முன்பக்கம் மேலிருந்து கிழ்ப்பகுதி வரை பெருமளவு சிதை வடைந்திருந்தாலும் எஞ்சியுள்ள ஏனைய பாகங் களில் மேற்கூறப்பட்ட அம்சங்கள் தெளிவாகத் தெரிவதனால் முற்பக்கத்திலும் இவ்வாறான அம்சங்களே இருந்திருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு (படம் 57).



படம் - 57. சிவாலயத்தின் கிழக்குப்பகுதி யிலுள்ள விமானம்.

## ஆலயத்தின் தோற்றக் காலம்

இதுவரை வெளிவந்த எந்த நூலிலும் இவ் வாலயம் பற்றிக் குறிப்பிடப்பட்டதாகத் தெரியா வில்லை. ஆயினும் பொதுப்பட இவ்வாலயத்தின் அமைப்பினைக் கட்டுவதற்குப் பின்பற்றப்பட்ட தொழில்நுட்பம், கலைப்பாணி என்பவற்றை நோக்கும் போது இது மிகப்பழைமையான ஆல யம் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். 1892இல் ஆங்கிலேயர் ஆட்சியில், குறிப்பிடப்பட்ட ஆலயப்பதிவேட்டில் மண்ணித்தலைக்குத் தெற்கே கௌதாரிமுனையில் ஒரு புராதன பிள்ளையார் ஆலயம் 1882 இல் திருப்பிக் கட்டப்பட்டது பற்றியும், மண்ணித்தலைக்கு வடக்கே கல்முனை யில் பிறிதொரு பிள்ளையார் ஆலயம் 1890 இல் புதிதாகக் கட்டப்பட்டது பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளன.[4] ஆனால் இவ்விரு ஆலயங்களுக்கும் இடைப்பட்ட மண்ணித்தலைச் சிவாலயம் பற்றி இதிற் குறிப்பிடப்படவில்லை. இதன் மூலம் இக் காலத்திலும் இவ்வாலயம் மக்களால் வழிபடப் படாது இடிந்த நிலையில் இருந்ததெனக்கூற லாம். அவ்வூர் மக்கள் சிலரிடம் இருந்து பெற்ற தகவல்களின்படி இற்றைக்கு நான்கு தலை முறைக்கு முன்னரும் இவ்வாலயம் இடிந்து போன நிலையிற் இருந்ததாக அறிய முடிகின் றது.[5] இவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாலயம் போர்த்துக்கேயர் காலத்துக்கு முன் னர் கட்டப்பட்டதென்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.[6]

மணல் மேடுகள் நிறைந்த மண்ணித்தலைப் பிரதேசத்திற் கிடைக்கப் பெறாத முருகைக்கல் லையும், செங்கட்டியையும் கொண்டு இவ்வால யம் கட்டப்பட்டதை நோக்கும் போது இதற்கான மூலப்பொருட்களும், தொழிநுட்ப அறிவும் பிற இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டவை என்று தெரிகின்றது. பூநகரியுடனான வன்னிப் பிராந்தி யத் தொடர்பு இக்கிராமத்துக்கு இருந்தாலும் அங்குள்ள கருங்கற்கள் இவ்வாலயத்தைக் கட்டு வதற்குப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிய வில்லை. யாழ்ப்பாணத்துடனான கடல் வழித் தொடர்பால் அங்குள்ள கற்களை இங்கு கொண்டு வந்து 19 ஆம் நூற்றாண்டிற் சில ஆலயங்கள் கட்டப்பட்டதற்கு ஆதாரங்களுண்டு. இதனால் முன்பும் அவ்வாறு கொண்டு வரப்பட்டிருக்க

லாம் எனவும் கருத இடமுண்டு. ஆயினும் இவ்வாலயத்தின் கலைப்பாணி, தமிழ்நாட்டுத் திராவிடக் கலைமரபை அப்படியே பிரதிபலித்து நிற்பதனால் ஆலயம் கட்டுவதற்கான மூலப்பொருட்கள் யாழ்ப்பாணத்திலிருந்தோ அல்லது தமிழ் நாட்டிலிருந்தோ கொண்டு வரப்பட்டிருந்தாலும், இது தமிழ் நாட்டை அக்காலத்தில் ஆட்சி செய்த அரச வம்சத்தின் செல்வாக்கால் கட்டப்பட்ட ஆலயம் என்பது தெரிகின்றது. ஆயினும் இவ்வாலயம் தொடர்பான சாசனமோ அல்லது உறுதியான வேறு ஆதாரங்களோ இதுவரை முழுமையாகக் கிடைக்கப்பெறாத நிலையில் இதன் தோற்ற காலத்தினைத் திட்டவட்டமாகக் கூற முடியாதிருக்கின்றது. இதனால் இதன் கலைமரபைக் கொண்டும், அக்காலத்தில் இப்பிரதேசத்துடன் அதிகளவு தொடர்பு கொண்டிருந்த தமிழ் நாட்டு வம்சங்களுக்குரிய ஆதாரங்களைக் கொண்டும் பொதுவானதொரு முடிவுக்கு வர வேண்டியுள்ளது.

இலங்கையில் கி. பி. 6 ஆம் நூற்றாண்டின் பின்னரே அழியாப் பொருட்களைக் கொண்டு இந்து ஆலயங்களை அமைக்கும் மரபு வளர்ச்சி பெற்றது. இதற்குத் தமிழ்நாட்டுத் தொடர்பே முக்கிய காரணமாயிருந்தது. இந்நூற்றாண்டிலிருந்து பல்லவ, பாண்டியர் ஆட்சியில் அங்கு ஏற்பட்ட பக்தி இயக்கம் இந்துப்பண்பாட்டில் பல மாறுதல்களை ஏற்படுத்தியது. இதன் விளைவாக மலைகளைக் குடைந்தும், செதுக்கியும், கற்களை அறுத்தும் பல கோயில்கள் கட்டப்பட்டன. இக்கட்டத்தில் இரு பிராந்தியங்களுக்கும் இடையே நெருங்கிய அரசியல், வர்த்தகத் தொடர்புகள் இருந்ததினால் முற்பட்ட காலங்களைவிடத் தமிழர்களின் குடியேற்றங்கள் இங்கு அதிகரித்தன. இவ்வாறு குடியேறியோர் தமிழ் நாட்டுப் பக்தி இயக்கத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்கள் ஆதலால் இலங்கையில் பௌத்த சிங்கள கலாசாரத்துடன் இணையாது தனித்து வாழ முற்பட்டனர்.[8] இது காரணமாக, துறைமுகங்களிலும், முக்கிய நகரங்களிலும் அவர்களின் வழிபாட்டிற்காக சிறிய பல கோயில்கள் பல்லவர் பாணியில் அமைக்கப்பட்டன. அவற்றுள் அநுராதபுரம்[9], தெவிநுவர, நாலந்தா போன்ற இடங்களிற் கட்டப்பட்ட இந்து ஆலயங்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவற்றைத் தவிர மாந்தை, திருகோணமலை போன்ற இடங்களிலும் இவ்வாறான ஆலயங்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது.[10]

பல்லவர் ஆட்சியைத் தொடர்ந்து 10 ஆம் நூற்றாண்டில் சோழர், தமிழ் நாட்டில் எழுச்சியடைந்தபோது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு முன்னரிலும் பார்க்க அதிகரித்தது. இந்நூற்றாண்டில் இருந்து இலங்கை மன்னர்கள் பலரும் சோழருக்கு எதிராக நடந்து கொண்டதனால், தென்னிந்திய வம்சங்களை வெற்றி கொண்டதன் பின்னர் சோழர் இலங்கை மீது படையெடுத்தனர். இத்தகைய ஒரு பின்னணியிற்றான் முதலாம் பராந்தகன் (கி. பி. 907-955), சுந்தர சோழன் (கி. பி. 956-973), முதலாம் இராஜராஜன் (கி. பி. 985-1016), முதலாம் இராஜேந்திரன் (கி. பி. 1012 - 1044) ஆகியோரின் ஆட்சியில் படையெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இராஜராசன், இராஜேந்திரன் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் அநுராதபுர அரசு கைப்பற்றப்பட்டு தலைநகர் ஜனநாதமங்களம் என்ற பெயருடன் பொலநறுவைக்கு மாற்றப்பட்டு,[11] சோழ நிர்வாகத்தில் 77 ஆண்டுகள் மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயருடன் ஆளப்பட்டது[12] இதனால் பல்லவர் காலத்தை விட இவர்கள் ஆட்சியில் சோழ நிர்வாகிகள், படைவீரர்கள், வர்த்தகர்கள், கலைஞர்கள், பிராமணர்கள் போன்ற பல்வேறு பிரிவினர்கள் இலங்கையின் முக்கிய பகுதிகளில் குடியேறினர். அவ்வாறு குடியேறியோர் பல்லவர் காலத்தை விட தமது வழிபாட்டுக்குச் சிறிய பல ஆலயங்களை அரச ஆதரவுடன் அமைத்தனர். அவ்வாறு அமைக்கப்பட்ட ஆலயங்களுள் இன்றும் அடையாளம் காணக்கூடியனவாகப் பொலநறுவையிலுள்ள 2ஆம் 5ஆம் 6ஆம் சிவ தேவாலயங்களைக் குறிப்பிடலாம். இவற்றுள் 2 ஆம் சிவதேவாலயத்தைத் தவிர ஏனைய இரண்டும் பெருமளவுக்குச் செங்கட்டிகளையும், கருங்கற்களையும் கொண்டு கட்டப்பட்டவையாகும். இவ்வாலயங்களைத் தவிர பதவியா, திருகோணமலை, மாதோட்டம் ஆகிய இடங்களிலும் சோழர் கால ஆலயங்கள் இருந்தமையைச் சாசனங்கள் உறுதி செய்கின்றன.[14] எனினும் இதற்குரிய தொல்லியற் சான்றுகளை இன்னும் சரிவர இனங்காண முடியவில்லை. சமகாலத்தில்

யாழ்ப்பாண தீபகற்பத்திலும் சோழர் கால அரசியல், வர்த்தக, பண்பாட்டுச் செல்வாக்குகள் அதிகரித்திருந்தமைக்கான ஆதாரங்கள் உண்டு. நாரந்தனை,[15] கமால் வீதி[16] போன்ற இடங்களிற் கிடைத்த சோழர் காலச் சிற்பங்களும், யாழ்ப்பாணக் கோட்டையிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இராஜேந்திர சோழன் காலக் கல்வெட்டும்[17] இங்கும் சோழர் காலச் சமய நடவடிக்கைகள் ஏற்பட்டிருந்தமையை உறுதிப் படுத்துகின்றன. இதனால் யாழ்ப்பாண தீபகற்பத்திலும் சோழர் கால ஆலயங்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது இந்திரபாலாவின் கருத்தாகும்.[18] ஆயினும் அத்தகைய ஆலயங்கள் எவையும் இது வரை கண்டு பிடிக்கப்படவில்லை. இவை பிற்காலத்தில் உள்நாட்டு அரசியல் மாற்றங்களினால் கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்டன என்பதிலும் பார்க்க, ஐரோப்பியர் ஆட்சியில் அழிக்கப்பட்டனவெனக் கூறுவதே பெருமளவுக்குப் பொருத்தமாகும். இத்தகைய ஒரு நிலைக்கு மண்ணித்தலைச் சிவாலயமும் உட்பட்டிருந்தாலும் அழிந்த நிலையிலும் அதன் சில பாகங்கள் எஞ்சியிருப்பது யாழ்ப்பாணக் குடாநாட்டு இந்துக் கட்டிடக் கலைப் பாரம்பரியத்தை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றது.

## முற்பட்ட சோழர் கலைமரபும் மண்ணித்தலைச் சிவாலயமும்

தற்பொழுது இவ்வாலயம் பெருமளவுக்கு இடிந்த நிலையிற் காணப்பட்டாலும் அதில் எஞ்சியுள்ள பாகங்கள் ஆலயத்தின் கலைமரபை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றன. இதன் கலைமரபுகளுக்கும், பிற்பட்ட பல்லவ அல்லது முற்பட்ட சோழக்கலை மரபுகளுக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமைத் தன்மை காணப்படுகின்றது. தமிழ் நாட்டில் கர்ப்பக்கிருகத்தினையும், அந்தராளத்தையும் கொண்ட சிறிய ஆலயங்கள் அமைக்கும் மரபு பல்லவர் காலத்தில் இருந்து வளர்ச்சியடைந்துள்ளது.[19] இதற்கு இலங்கையில் பல்லவர் காலத்தில் தேவிநுவரையிற் கட்டப்பட்ட ஆலயம் சிறந்த உதாரணமாகும். இவ்வாலயத்திற்கும் மண்ணித்தலைச் சிவாலயத்துக்கும் இடையே சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இரண்டு ஆலயங்களும் சிறிய கர்ப்பக்கிருகத்தையும், முன்னால் அந்தராளத்தையு கொண்டுள்ளன. மேலும், கர்ப்பக்கிருகத்தின் பின்னால் உள்ள நான்கு சதுரத் தூண்களும், பக்கச் சுவர்களில் உள்ள ஏழு தூண்களும், நடுவில் கர்ப்பக்கிரகத்தையும், அந்தராளத்தையும் பிரித்து நிற்கின்ற இரட்டைத் தூண்கள் மேலும் கீழுமாக அமைந்திருப்பதும்[20] குறிப்பிடத்தக்க ஒற்றுமையாகும். அத்துடன் தூணின் தட்டையான பலகைப்பகுதியும், இதற்கு மேல் அமைந்த கூடுகள் வளர்ச்சியடையாத நிலையில் இருப்பதும் இவற்றிடையே இழைவிட்டோடும் பிறிதொரு ஒற்றுமையாகும். இத்தகைய ஒற்றுமை காணப்பட்டாலும் அடிப்படையான சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன. தேவிநுவரை ஆலயம் முழுக்க முழுக்கக் கருங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டதொன்றாகும். மண்ணித்தலை ஆலயம் கற்களுடன் செங்கட்டிகளையும் சேர்த்துக் கட்டப்பட்டுள்ளது. அத்துடன் தேவிநுவரையில் முழுத்தூண்களாக உள்ளவை மண்ணித்தலையில் அரைத்தூண்களாகவுள்ளன. மேலும் மண்ணித்தலைச் சிவாலயத்தின் மேலமைந்த விமானம் பல்லவக்கலை மரபிலிருந்து இச்சிவாலயத்தை முற்றாக வேறுபடுத்துகின்றது. இதனால் பல்லவக்கலை மரபை அடிப்படையாகக் கொண்டு இவ்வாலயம் கட்டப்பட்டதெனக் கூறமுடியாதிருகின்றது. ஆயினும் பிற்பட்ட பல்லவக் கலைமரபு முற்பட்ட சோழக்கலைமரபிற் சிறிய மாற்றங்களுடன் பின்பற்றப்பட்டிருப்பதனால்[21] மண்ணித்தலைச் சிவாலயத்திலும் இந்த அம்சம் பின்பற்றப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

பல்லவர் காலத்தைக் காட்டிலும் சோழர் காலத்தில்தான் மிகப்பெரிய ஆலயங்கள் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டன. இதற்கு இவர்களின் கடல்கடந்த வர்த்தகத்தின் மூலம் பெறப்பட்ட பெருமளவு செல்வம் பயன்படுத்தப்பெற்றது. இதனால் கட்டிடக்கலை மட்டுமன்றிப் பிறகலைகளும் ஆலயங்களை மையமாக வைத்து 12 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை வளர்ச்சி அடைந்திருந்தன. இவற்றுள் கட்டிடக்கலை மரபுகள் முற்பட்ட பல்லவக் கலைமரபில் இருந்து முற்றாக விலகாது அவற்றை அடிப்படையாகக் கொண்டு பல மாறு

தல்களுடன் வளர்ச்சியடைந்தன. இவற்றைப் பிற்பட்ட சோழக்கலை மரபிலும் பார்க்க விஜயாலயன் தொடக்கம் முதலாம் இராஜராஜன் காலம் வரையிலான முற்பட்ட சோழக்கலை மரபிற் சிறப்பாகக் காணலாம். இக்காலத்தில் மட்டும் ஏறத்தாழ 110 ஆலயங்கள் தமிழ் நாட்டிற் கட்டப்பட்டன. இவற்றுள் 47 கோயில்கள் முதலாம் ஆதித்தன் காலத்துக்கும் 30 கோவில்கள் முதலாம் பராந்தகன் காலத்திற்கும் உரியவையாகும்.[22] இவை பிற்பட்ட பல்லவக்கலை மரபின் இறுதிக்கட்டத்தையும் முற்பட்ட சோழக்கலை மரபின் தொடக்கத்தையும் கோடுகாட்டி நிற்கின்றன. இவ்வாலயங்களை மண்ணித்தலைச் சிவாலயத்துடன் ஒப்பிடுகின்ற போது இவற்றின் அமைப்பு, அளவு, தொழில் நுட்ப அறிவு, கலைமரபு என்பனவற்றில் நெருங்கிய ஒற்றுமைத் தன்மை இருப்பதனை அவதானிக்கலாம். இதற்கும் உதாரணமாக, முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன் கால ஆலயங்கள் சிலவற்றை எடுத்துக்காட்டலாம்.

முதலாம் ஆதித்தன் காலத்திற் கட்டப்பட்ட திருக்கட்டளை சுந்தரர் கோயில் மண்ணித்தலைச் சிவாலயத்தைப் போல் அதன் கருவறை வெளிப்புறமாக 12' நீள அகலத்தையும், உட்புறம் 6' நீள அகலத்தையும் கொண்டுள்ளது. அரைத் தூண்களைக் கொண்ட இதன் சுவர்கள் 3' தடிப்புடையன.[23] இவனது ஸ்ரீ நிவாச நல்லூர் குரங்குநாதர் கோயில் கர்ப்பக்கிருகம் உட்புறமாக 8' 8' நீள அகலத்தையும், அந்தராளம் 4' 4' நீள அகலத்தையும் கொண்டுள்ளன.[24] இதன் புறச்சுவர்களில் மண்ணித்தலையைப் போல் 5 தேவகோஷ்டங்கள் காணப்படுகின்றன. இவன் கால எறும்பூர் கடம்பவனேசுவரர் கோயில் கர்ப்பக்கிருகம் வெளிப்புறமாக 15' 2" நீள அகலத்தையும், உட்புறமாக 8' 4" நீள அகலத்தையும் கொண்டிருப்பதோடு புறச்சுவர்களில் மூன்று தேவகோஷ்டங்களும் காணப்படுகின்றன. [25] இவ்வொற்றுமைகளை ஏனைய முற்பட்டகால மன்னர்களது கலைமரபுகளிலும் காணலாம். குறிப்பாக கொடும்பாளூர் மூவர் கோவிலின் வெளித்தோற்ற அமைப்பு மண்ணித்தலைச் சிவாலயத்துடன் ஒத்திருப்பதுடன் இரண்டின் கோமுகிகளும் ஒரே வடிவ அமைப்பைக் கொண்டிருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.[26] இவ்வொற்றுமைகள் தூண்களிலும் காணப்படுகின்றன. பொதுவாக முற்பட்ட கால சோழர்காலத் தூண்கள் பல்லவர் காலத்தூண்களை விடச் சற்று மாறுதல்கள் அடைந்து அவற்றின் தூணின் பலகைப்பகுதி கபோதத் தன்மை கொண்டு காணப்படுகின்றன. ஆனால் திருமுக்கூடல் வெங்கடேஸ்வரப் பெருமாள் கோயில் தூண், பிற்பட்ட பல்லவர் காலத் தூண்களைப் போல் அதிகம் வளர்ச்சியடையாது சதுர வடிவில் அமைந்த பலகைப்பகுதியுடன் காணப்படுகின்றது.[27] இந்த அம்சத்தை மண்ணித்தலைச் சிவாலயத்திலும் காணலாம்.

கர்ப்பக்கிருக, அந்தராளக் கட்டிட அமைப்பில் மட்டுமன்றி விமானங்களின் கலைமரபுகளிலும் இந்த ஒற்றுமையைச் சிறப்பாகக் காணலாம். மண்ணித்தலைச் சிவாலய விமானத்தின் உபபீடப்பகுதியில் அமைந்த கூடுகள் தற்பொழுது சிதைவடைந்து காணப்பட்டாலும் அவை வளர்ச்சியடையாத ஆரம்ப நிலையையே எடுத்துக்காட்டுகின்றன. இவற்றில் எவ்வித உருவங்களும் வைக்கப்பட்டிருக்கவில்லை என்பதைக் கூடுகளின் அமைப்பைக் கொண்டு உணர முடிகின்றது. இவை பிற்பட்ட பல்லவ அல்லது முற்பட்ட சோழக்கலை மரபில் நன்கு வளர்ச்சியடைந்து கூடுகளின் நடுப்பாகங்களில் மனித, மிருக உருவங்கள் காணப்படுகின்றன. இதற்கு இராஜராசன், இராஜேந்திரன் கால ஆலயங்கள் சிறந்த உதாரணமாகும்.[28] இக்கூடுகள் அமைந்துள்ள பாகம் மண்ணித்தலைச் சிவாலயத்திற் கீழ் நோக்கி வளைந்து காணப்படுகின்றது. பிற்பட்ட சோழர் கால ஆலயங்களில் இவை நேராக நிமிர்ந்த வடிவத்திற் கட்டப்படுள்ளன. மூன்று தளங்களில் அமைந்த விமானத்தின் முதலிரு தளங்கள் சதுரமாகவும், சிகரப்பகுதி அமைந்த மூன்றாவது தளம் வட்ட வடிவிலும் உள்ளன. இப்பண்பை முற்பட்ட சோழக்கலை மரபிற் சிறப்பாகக் காணலாம். குறிப்பாகப் பராந்தகன் காலத் திருவாலந்துறை மாதவர் கோயில் [29] ஆதித்தேசுவரர் சிவாலயம்[30] என்பன இத்தகைய அமைப்பை உடையன. இவ்விமானங்களின் மூன்றாவது தளத்தில் உள்ள தேவகோஷ்டங்கள் மண்ணித்தலைச் சிவாலயத்தின் மூன்றாவது தளத் தேவகோஷ்டங்களை ஒத்துள்ளன. விமானத்தின் முதல் தளத்தில்

அமைந்த குதம், பஞ்சரம், சாலை போன்ற அம்சங்கள் சோழர்கால விமானங்களுடன் ஒப்பிட்டு ஆராயத்தக்கவை. இவை திராவிடக்கலை மரபுக்குரிய பொதுவான அம்சமாகக் காணப்பட்டாலும், காலத்திற்கு ஏற்ப வடிவத்திலும், அலங்காரத்திலும் பல வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன எனலாம். இவற்றுள் மண்ணித்தலைச் சிவாலயத்தில் உள்ள இந்த அம்சங்கள் முற்பட்ட சோழக்கலை மரபின் பண்புகளைப் பிரதிபலித்து நிறகின்றன.

இலங்கையில் 12 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை சோழரது பண்பாட்டுச் செல்வாக்கு நிலவினாலும் அவர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்கள் பெரும்பாலும் முற்பட்ட, மத்தியகால சோழக்கலை மரபை அடிப்படையாகக் கொண்டிருந்தன.[31] இவற்றுள் பொலநறுவையில் உள்ள 5 ஆம், 6 ஆம் சிவ தேவாலயங்கள் மண்ணித்தலைச் சிவாலயத்தைப் போன்று கற்களும், செங்கட்டிகளும் கொண்டு கட்டப்பட்டவையாகும். இவை காலப்போக்கில் ஆட்சி மாற்றத்தினாலும், மதப்பூசல்களினாலும் இடிக்கப்பட்டதால் தற்போது இவற்றின் அத்திவாரங்களைத் தவிர ஏனைய பாகங்களை அடையாளம் காண முடியவில்லை. தற்பொழுது பெருமளவுக்குப் பாதுகாக்கப்பட்ட நிலையில் உள்ள 2 ஆம் சிவதேவாலயம் முதலாம் இராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டாலும் அவன் காலத் தமிழ் நாட்டு ஆலயங்களை விட இது சிறியதாகும், இதனுடன் மண்ணித்தலைச் சிவாலயத்தை ஒப்பிடுகின்ற போது சில அம்சங்களில் வேறுபாடும் வேறு சில அம்சங்களில் அடிப்படையான ஒற்றுமையும்காண முடிகின்றது.

பொலநறுவைச் சிவதேவாலயம் மண்ணித்தலைச் சிவ தேவாலயத்தைப் போலல்லாது பெருமளவிறகுக் கருங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டதாகும். இந்த அடிப்படை வேறுபாட்டினால் இரண்டு ஆலயங்களினதும் கர்ப்பக்கிருக, விமான அலங்காரங்களிற் சில வேறுபட்ட அம்சங்கள் இடம் பெற்றிருக்க வாய்ப்பிருந்திருக்கும். அத்துடன் 11 ஆம் நூற்றாண்டிற் கைவிடப்பட்ட 2 ஆம் சிவ தேவாலயம் 20 ஆம் நூற்றாண்டு வரை மாற்றமடையாது அதே நிலையிற் காணப்படுகின்றது. ஆனால் மண்ணித்தலை சிலாலயம் அமைந்த பிரதேசத்தில் சைவர்கள் தொடர்ந்தும் வாழ்ந்து வருவதினால் சில நூற்றாண்டுகளாவது இவ்வாலயம் இங்கு வாழ்ந்தவர்களினாற் பராமரிக்கப்பட்டிருப்பதோடு புதிய சில அம்சங்கள்புகுத்தப்படவும் வாய்ப்பிருந்திருக்கும். இந்த வேறுபாட்டினால் மண்ணித்தலைச் சிவாலயத்தின் உண்மை இயல்பை முழுமையாகப் பொலநறுவை 2 ஆம் சிவாலயத்துடன் ஒப்பிட்டு அறிந்து கொள்வது சிரமமாகத் தோன்றுகின்றது.[32]

2 ஆம் சிவ தேவாலயம் கர்ப்பக்கிருகம் *(20' 6" சதுரம்)*; அந்தராளம் *(15, 6, சதுரம்)*. அர்த்த மண்டபம் *(15' 6" 16')*, மகாமண்டபம் *(30' 23')* முதலானவற்றோடு துணை ஆலயத்தையும் கொண்டுள்ளது.[33] இவைகளின் விஸ்தீரணம் மண்ணித்தலை ஆலயத்தை விடப் பெரியதாகும். சதுர வடிவில் அமைந்த இவற்றின் தூண்கள் பலகைப்பகுதியில் வளைவான போதிகைகளைக் கொண்டிருப்பதோடு கொடுங்கையில் அமைந்த இவற்றின்கர்ணக்கூடுகள் வளர்ச்சியடைந்த சோழக் கலைமரபைக் கொண்டும் காணப்படுகின்றன. இவ்வம்சம், கர்ப்பக்கிருகம், அந்தராளம், கோஷ்டங்கள் ஆகியவற்றிலும் காணப்படுகின்றது. இத்தகைய சில வேறுபாடுகள் இரு ஆலயங்களிடையேயும் காணப்பட்டாலும் அவற்றிடையே சில அடிப்படையான ஒருமைப்பாடுகள் இருப்பதினையும் அவதானிக்கலாம். இரு ஆலயங்களின் அதிஷ்டானப்பகுதி ஒரே அமைப்மைக் கொண்டிருப்பதோடு அவற்றின் துணை மேடை, கழுத்து, அடி மேடை, வேதிகை என்பன ஒரே வடிவத்தைக் கொண்டுள்ளன. இரு ஆலயங்களின் வடக்குப்புறக் கர்ப்பக்கிருகத்துணை மேடையில் இருந்து வெளிவரும் கோமுகிகள், ஒரே வடிவத்துடன் அமைந்துள்ளன. இந்த ஒற்றுமை இரு ஆலயங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட நந்தாவிளக்கின் அகல் பாகத்திலும் காணப்படுகின்றது.[34] தூணின் கழுத்திற்கும் யாளத்திற்கும் இடைப்பட்ட உத்தரம், எழுதகம், தளம், கொடுங்கை, யாளம் என்பன இரு ஆலயங்களிலும் ஒரே தன்மையுடையனவாக உள்ளன. இந்த ஒற்றுமை இரு விமானங்களில் மேலும் தெளிவாகத் தெரிகின்றது. ஏறத்தாழ ஒரே உயரத்தை உடைய இரு விமானங்களும் மூன்று தளங்களைக் கொண்டிருப்பதோடு


முதலிரு தளங்களும் சதுரமாகவும், மூன்றாவது தளம் (ஸ்தூபி) வட்டமாகவும் உள்ளன. மேலும் இவற்றைச் சுற்றிவர உள்ள தேவகோஷ்டங்களும், பொதிகையுடன் கூடிய அதன் சிறிய தூண்களும் ஒரே வடிவ அமைப்பை உடையன. இவ்விரு ஆலயங்களையும் நேரடியாகப் பார்வையிட்ட சிவசாமி மண்ணித்தலைச் சிவாலயம் முற்பட்ட காலச் சோழக் கலைமரபை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டாலும் இது சோழரின் ஆட்சி இலங்கையில் இருந்த போது கட்டப்பட்டிருக்க வேண்டும் என்கிறார்.35 பொதுவாக தாய் நாட்டில் தோன்றிய கலைமரபுகள் பிற நாடுகளிற் சற்றுக் காலம் தாழ்த்திப் பரவுவதினால் மண்ணித்தலையினும் அவ்வாறு நிகழ்ந்ததெனக் கூறலாம்.

## ஆலயம் தொடர்பாகக் கிடைத்த பிற தொல்பொருட்சின்னங்கள்

இப்பிரதேசத்தில் சைவமக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றபோதிலும், நீண்டகாலத்திற்கு முன்னரே இவ்வாலயம் கைவிடப்பட்டமைக்கு, ஆலயம் அழிக்கப்பட்டமையே காரணம் என்பதை இங்கு கிடைத்த தொல்பொருள் சின்னங்கள் உறுதி செய்கின்றன. இதற்கு, சிவாலயத்துக்கு வடக்குப் புறமாகக் கிணறு வெட்டியபோது கிடைத்த சிவலிங்கம் சிறந்த உதாரணமாகும். ஏறத்தாழ 14'' உயரமும் 9" சுற்றளவும் கொண்ட இச்சிவலிங்கம் தற்போது இவ்வாலயத்திற்குத் தெற்குப் புறச் சுவருடன் புதிதாக அமைக்கப்பட்ட விநாயகர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. இங்கு லிங்கத்தையும் சூலத்தையும் தவிர ஏனைய தெய்வச் சின்னங்கள் காணப்படாவிட்டாலும் இதை விநாயகர் ஆலயமாகவே இவ்வூர் மக்கள் வழிபட்டு வருகின்றனர். இதற்கு கடற்கரையை அண்டி வாழும் விவசாய, மீன்பிடிச் சமூகங்கள் மத்தியில் விநாயகர் முக்கிய காவல் தெய்வமாக விளங்கியதே காரணமாகும். பிரித்தானியர் ஆட்சியில் கூட விநாயகர் ஆலயங்களே முக்கியத்துவம் பெற்றதை அவர்களது 1892ஆம் ஆண்டு ஆலயப்பதிவேடு எடுத்துக் காட்டுகின்றது.36 இக்காலத்தில் மண்ணித்தலையில் மட்டுமன்றி பூநகரிப் பிராந்தியத்தில் கூட ஒரு சிவன் கோயிலானது இருந்ததாகக் குறிப்பில்லை. இன்று இப்பிராந்தியத்தில் 151 ஆலயங்கள் ஓரளவு செல்வாக்குப் பெற்ற நிலையிற் காணப்படுகின்றன. இவற்றுள் 42 பிள்ளையார் ஆலயங்களும், 30 வைரவர் ஆலயங்களும், 8 ஐயனார் ஆலயங்களும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவையாகும். இங்கே இரண்டு சிவனாலயங்கள் காணப்பட்டாலும் அவை 20 ஆம் நூற்றாண்டிற் கட்டப்பட்டவையேயாகும். எனவே, கிணறு வெட்டிய போது கிடைத்த சிவலிங்கம் புராதன மண்ணித்தலைச் சிவாலயத்துக்குரியதென்பதைப் பெருமளவுக்கு நிச்சயப்படுத்திக் கொள்ள முடிகின்றது.


இச் சிவலிங்கத்துடன் உடைந்தநிலையில் ஆவுடையாரொன்றும் கிடைத்ததாக அறிய முடிகின்றது. ஆனால் அது தற்போது விநாயகர் ஆலயத்தினுள் வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வூர் வயோதிபப் பெண்மணியொருவர் அது சதுர வடிவில் இருந்ததாகக் கூறினார். ஆவுடையாரைச் சதுர வடிவில் அமைக்கும் பண்பு சோழருக்குரியதாகும். இத்தகைய வடிவத்தைச் சோழர் காலத் தமிழ் நாட்டு ஆலயங்களிலும், இலங்கையில் 2ஆம் சிவ தேவாலயத்திலும் காணலாம்.37 இவர்கள் ஆட்சியில் பல தெய்வங்களுக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டாலும் அவற்றிற் பெரும்பாலானவை சிவ ஆலயங்களாகும். இதற்குப் பொலநறுவையில் உள்ள மூன்று சிவ தேவாலயங்கள் சிறந்த உதாரணமாகும். அதுபோன்ற ஒரு சிவதேவாலயத்தை மண்ணித்தலையிலும் அமைத்தனர் எனக் கூறலாம்.

ஆலயத்திற்குத் தெற்கே பள்ளமான நிலத்தில் (மழைகாலத்தில் குளிக்கும் இடம்) புதையுண்டிருந்த சிலைகளின் உடைந்த பாகங்கள் அடுத்து நமது கவனத்தை ஈர்க்கின்றன. இவ்விடத்தில் பழைமையான வேறு வரலாற்றுச் சான்றுகள் காணப்படாது இச்சிலைகள் மட்டும் காணப்பட்டதைக் கொண்டு இவை இங்குள்ள ஆலயத்துடன் தொடர்புடையவை எனக் கூறலாம். சுட்ட சுதையால் ஆக்கப்பட்ட இச்சிலைகளுள் மனிதச் சிலையின் தலைப்பாகம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதன் கவர்ச்சியான முகபாவம், தெளிவான திலகம் (ஊர்ணம்), நட்சத்திர வடிவில் அமைந்த காதணி என்பன இது தெய்வாம்சம் பொருந்திய சிலையென்பதை உறுதிப்படுத்துகின்றது (படம் 58). இச்சிலையின்



படம் - 58, சுடுமண்ணினால் செய்யப்பட்ட விமானம் தாங்கிப் பொம்மை,

அழகான மகுடம், காதணி, அலங்காரத்தன்மை என்பன பிற்பட்ட சிலைகளிற் காணப்படாத தால் இது புராதன சிலையென்பது சிவசாமியின் கருத்தாகும்.38 இச்சிலை காணப்பட்ட இடத் திலிருந்து மேலும் பல மனித, மிருகச் சிலை களின் உடைந்த பாகங்கள் கிடைத்துள்ளன. இவற்றுட் சில நந்தியின் பாகங்களாகக் கொள் ளத்தக்கவையாகும். சுதையால் ஆக்கப்பட்ட இவ் வாறான சிலைகள் சோழர், பாண்டியர் ஆட்சிக் கால ஆலயங்களில் விமானம் தாங்கிப் பொம்மை களாகக் காணப்படுவதனால் இவையும் இச்சிவா லயத்துக்குரியனவாக இருக்கலாம் என்பது கோபாலகிருஷ்ணலின் கருத்தாகும்.39 இவ்வால யச் சுற்றாடலிலுள்ள அழிபாடுகளிடையே யிருந்து இவ்வாலயத்திற்குரியதெனக் கருதக்கூடிய நந்தாவிளக்கின் அகல்பாகம், தெய்வச்சிலையின் மகுடம், கணையாளி என்பனவும் கிடைத்துள் ளன (படம். 59). இலங்கையில் போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சியில் இந்த ஆலயங்கள் இடிக்கப் பட்டபோது அவற்றில்இருந்து விக்கிரகங்களை யும், பிற சின்னங்களையும் பாதுகாப்பதற்காக அவற்றைக் கிணறுகளிலோ, மறைவான இடங் களிலோ புதைந்தமையும், பிற்காலத்தில் அவை தற்செயலாகக் கிடைத்தமையும் ஒரு பொது வான வரலாற்று நிகழ்வு.40 அவ்வாறு மண்ணித் தலைச் சிவாலயத்திற்கும் நடந்திருக்கலாம் என் பதற்கு இங்குள்ள போர்த்துக்கேய,41 ஒல் லாந்தா,42 காலத் தேவாலயங்கள் சிறந்த உதா ரணங்களாகும்.




படம் - 59. ஆலயச் சுற்றாடலில் கிடைத்த தொல்லியற் சின்னங்கள்.

## பல்லவராயன்கட்டு விஷ்ணு சிலை

பல வருடங்களுக்கு முன்னர் பல்லவராயன் கட்டுப் பிரதேசத்தில் உள்ள காட்டுப்பகுதி யொன்றில் பயிர்ச்செய்கைக்காக நிலம் திருத் தப்பட்ட போது மண்ணிற் புதையுண்டிருந்த கருங்கற் சிற்பம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. ஆரம்பத்தில் அங்குள்ள ஆலயம் ஒன்றில் வைத்து

வழிபட்ட இச்சிலை பின்னர் சம்புவெளியில் இதற்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் வைக்கப்பட்டு, தற்பொழுது சம்புவெளி ஐயனார் என்ற பெயரில் வழிபடப்பட்டு வருகிறது. இங்கு வாழும் மக்களிடையே ஐயனார் வழிபாடு செல்வாக்குப் பெற்றிருப்பதனாலும், இச்சிலையின் சில உறுப்புக்கள் தெளிவற்றிருப்பதினாலும் இதை ஐயனார் சிற்பமாகவே இங்குள்ள மக்கள் கருதுகின்றனர். ஆனால் இது ஒரு விஷ்ணு சிலை என்பதை இச் சிலையின் இடது கரத்தில் சங்கும், வலது கரத்தில் சக்கரமும் இருப்பதைக் கொண்டு இலகுவாக அடையாளம் காண முடிறகிது. *3 3/4* அடி உயரமும் **1** அடி அகலமும் (தோள்மூட்டுப் பகுதி) கொண்ட இச் சிற்பம் ஒரு வகை வெண்மையான கருங்கல்லில் புடைப்புச் சிற்பமாக (இரு பரிமாண நிலை) செதுக்கப்பட்டுள்ளது (படம் 60). தாமரைப் பீடத்தில் நிற்கும் நிலையில் அமைந்த இச்சிலையின் சில பாகங்கள் சிதைவடைந்து காணப்பட்டாலும் முக்கியமான அம்சங்களைத் தெளிவாக காணமுடிகிறது.[43] தலையின் பின்னால் அமைந்த ஒளிவட்டமும், தலையின் உயரமான திருமுடியும், காதில் உள்ள மகர குண்டலமும், ஸ்ரீ வற்சாவாலும் சிறப்பான அம்சங்களாக குறிப்பிடத்தக்கன. பொதுவாக விஷ்ணு சிற்பத்தில் காணப்படும் நான்கு கரங்களுக்குப் பதிலாக இதில் இரண்டு கரங்கள் காணப்படுவதைக் கொண்டு இச்சிற்பம் மிகப் பழமையானதென்பதை நிச்சயப்படுத்த முடிகின்றது. இரண்டு கரங்களுடன் கூடிய சிற்பங்களை ஆக்கும் மரபு பல்லவ, சோழக்கலை மரபிற் பின்பற்றப்பட்ட ஒரு அம்சமாகும். இதற்கு, கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள விஷ்ணு சிற்பம் சிறந்த ஒரு உதாரணமாகும்.[44] இச் சிற்பத்திற்கும் பல்லவராயன் கட்டுப் பகுதியில் கிடைத்த சிற்பத்திற்கும் இடையே அமைப்பு, கலைமரபு, தொழில் நுட்பம் என்பனவற்றில் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது. இச்சிற்பத்திற் காணப்படும் ஒளி வட்டம், நீண்ட முகபாவம், தடித்த உதடுகள், கமலகுண்டலம், மெலிந்த உடல் அமைப்பு, முழங்கால்வரை நீண்ட வட்டமான ஆடையமைப்பு என்பன சோழக்கலையிற் காணப்படும் சிறப்பம்சங்களாகும். இப் பல்லவராயன் கட்டுப் பிரதேசத்தைச் சோழருடன் தொடர்புபடுத்த வேறு சில ஆதாரங்களும் இருப்பதினால் இச் சிலை காணப்பட்ட இடத்தில், சோழர் கால ஆலயம் ஒன்று இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.[45]



படம் - 60. பல்லவராயன் காட்டுப் பகுதியில் கிடைத்த விஷ்ணு சிலை.

## ஈழஊர் கட்டிட அழிபாடுகள்


இவ்வூரில் உள்ள மணல்காடு என்ற இடத்தில் ஒரு புராதன கட்டிடத்தின் அழிபாடுகள் மண்ணில் புதையுண்டு காணப்படுகின்றன. தற்போது இவ்விடம் உயர்ந்த மணல் மேடாக இருப்பதுடன் சுற்றிவர உள்ள இடங்களில் பொழிந்த முருகைக்கற்களும், செங்கட்டிகளும், மட்பாண்ட ஓடுகளும் காணப்படுகின்றன. இதற்கு சற்று வடக்காக பாழடைந்த நிலையில் சிறுகுளம் உள்ளது. இவ்விடங்களில் காணப்படும் சில கற்களையும், வேறு தடையங்களையும் கொண்டு நோக்கும் போது இக்கட்டிடம் ஒரு ஆலயத்தின் சிதைவாக இருக்கலாம் என எண்ணத்தூண்டுகிறது. இக்கருத்தே இங்கு வாழும்

மக்களிடமும் நிலவுகிறது. 16 ஆம் நூற்றாண்டில், போர்த்துக்கேயர் இங்கு வாழ்ந்த மக்களை மதம் மாற்றியதுடன், கத்தோலிக்க தேவாலயம் ஒன்றை கட்டியதாகவும் போர்த்துக்கேய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.[46] பொதுவாக இவர்கள் ஆட்சியில் இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டதோடு அவற்றிற்கு அருகில்தான் புதிய தேவாலயங்களையும் கட்டினர். இதனால் இங்கிருந்த இந்து ஆலயம் போத்துக்கேயர் காலத்தில் அழிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

இங்கு ஆதிகாலம் தொட்டு மக்கள் வாழ்ந்து வருவதற்கான பல தடயங்கள் காணப்படுகின்றன. இதனால் இக்கட்டிட அழிபாடுகள் எக்கால கட்டத்திற்குரியதெனத் திட்ட வட்டமாக தற்போது கூறமுடியாதிருக்கிறது. ஆனால் இதன் சுற்றாடலில் உள்ள இடப்பெயர்களை நோக்கும் போது இக்கட்டிட அழிபாடுகளைப் பாண்டியர், சோழர் காலத்துடன் தொடர்பு படுத்திப் பாரக்கவும் இடமுண்டு. இக்கட்டிட அழிபாட்டிற்கு மேற்கே இரண்டாம் இராசாதிராச சோழனின் படைத்தளபதியான பல்லவராயன் வெற்றி கொண்ட புலைச்சேரியும் (புலையர்குடா), கிழக்கே இத்தளபதி பெயரை நினைவுபடுத்தும் பல்லவராயன் கட்டும், தெற்கே பாண்டியர் தொடர்பைக் காட்டும் வீர பாண்டியன் முனை என்ற பெயரிலுள்ள கிராமமும் அமைந்துள்ளன. இக்கட்டிட அழிபாட்டிற்கு முன்னால் வெள்ளைப் பள்ளம் என்ற இடம் உள்ளது. தற்போது அங்கிருக்கும் ஆலயம் ஈழர் வெளி வெள்ளைப் பள்ளத்து பிள்ளையார் என அழைக்கப்படுகிறது. சோழரின் தலைநகராக இருந்த தஞ்சாவூரின் முக்கிய இடங்களில் வெள்ளைப்பள்ளம் என்ற இடமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வொற்றுமைகளை நோக்கும் போது இங்குள்ள ஆலய அழிபாட்டை சோழர்காலத்துடன் தொடபுர் படுத்தலாம் போல் தெரிகிறது. எவ்வாறாயினும் இப்பகுதியில் முழுமையான ஆய்வு மேற் கொள்ளப்படுமாயின் ஈழ ஊர் தொடர்பாக பல வரலாற்று உண்மைகள் வெளிவர இடமுண்டு என்பதில் சந்தேகமில்லை.

## பாலியாற்றிற் கிடைத்த சிவலிங்கம்

வவுனியாப்பகுதியில் ஆரம்பமாகி பூநகரியின் தென்மேற்கு எல்லையிலுள்ள கடலுடன் சங்கமமாகும் ஆறு பாலியாறு எனப்படுகின்றது. இப் பாலியாற்றுடன் இணைந்துள்ள பல இடங்கள் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வரலாற்று அறிஞர்கள் சிலரின் கூடிய கவனத்தை ஈர்த்த பிரதேசமாக விளங்கிற்று. இதற்கு இவ்வாற்றிற்கு இருமருங்கிலுமுள்ள குருந்தன் குளம், பனங்காமம், துணுக்காய், வவுனிக்குளம் முதலான இடங்களிற் காணப்பட்ட புரதான வரலாற்றுச் சின்னங்கள் முக்கிய காரணமாகும். இப்பாலியாற்றிற்கு அணித்தாகப் பூநகரியின் தென் கிழக்கு எல்லையில் வரலாற்றுப் பழைமை



படம் - 61. கோயிற்காட்டில் கிடைத்த ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கம்


வாய்ந்த வவுனிக்குளம் அமைந்துள்ளது. இவ் வவுனிக்குளம் ஆதியிற் பாலிநகர்என அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.[47] 1954 ஆம் ஆண்டு இப்பாலி நகரின் தொடர்ச்சியாகவுள்ள கோயில்காடு (தற்போது சிவபுரம் என அழைக்கப்படும்) என்ற இடத்திலுள்ள காடுகள் புதிய குடியேற்றத்திற்காக அழிக்கப்பட்டபோது இக் காட்டு பகுதியில் மண்ணிற் புதையுண்டிருந்த புராதன கட்டிட அழிபாடுகளையும் அம்மன் விக்கிரகத்தையும், ஆவுடையாருடன் கூடிய லிங்கத்தையும் காணமுடிந்தது. தற்போது ஆவுடையுடன் கூடிய லிங்கத்தைத் தவிர ஏனைய சான்

றுகள்பற்றி எதுவும் அறியமுடியவில்லை. இங்கு கிடைத்த ஆவுடையாருடன் கூடிய லிங்கத்தைப் பாலியாற்றுப் பிரதேசத்திற் புதிதாகக் குடியேறிய மக்கள் வவுனிக்குளத்தில் இதற்கென அமைக்கப்பட்ட சிறிய ஆலயமொன்றில் வைத்துப் பாலியாற்றுச் - வலிங்கம், வவுனிக்குளச் சிவாலயம் என்ற பெயரில் வழிபட்டு வருகின்றனர் (படம். 61).

மகாவம்சத்தில் அநுராதபுரத்திற்கு வடக்கே ஐம்பது மைல் தொலைவில் கி. மு. 2ஆம் நூற்றாண்டில் பெலிவாவி அமைக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.48 இப்பெலிவாவியைப் பாலியாற்றுப் பகுதியென அடையாளம் கண்ட பாக்கர் தற்போதைய வவுனிக்குளத்தின் ஆரம்பத் தோற்றத்தை எல்லாள மன்னனின் சாதனைகளுள் ஒன்றாக இருக்கலாமெனக் குறிப்பிட்டுள்ளார்.49 இக்கூற்றை ஆதாரமாகக் கொண்டு கோயில் காட்டில் கிடைத்த சிவலிங்கத்தின் தோற்ற காலத்தை இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டதென அவ்வூர் மக்களும், அறிஞர்கள் சிலரும் கருதுகின்றனர்.50

தற்போது இச்சிவலிங்கம் ஆலயத்தில் வைத்து வழிபடபபடுவதனால் அதை முழுமையாகப் பார்க்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டபோது அது தொடர்பாக வெளியிடப்பட்ட முழுமையான விளக்கப்படங்களை ஆதாரமாகவைத்து நோக்கும்போது கருங்கல்லிற் செதுக்கப்பட்டுள்ள இச்சிவலிங்கம் மிகப் பெரிதாகவும் அதன் ஆவுடையார் சதுரவடிவில் அமைந்திருந்ததென்பதையும் அவதானிக்க முடிகின்றது. சிவலிங்கம் பெரிதாகவும், அதன் ஆவுடையார் சதுரவடிவில் அமைந்தும் இருப்பது பிற்கால வழக்கில் இல்லையாதலால் இவற்றைப் பழைமையானவையென நிச்சயப்படுத்திக் கூறலாம். அதனால் இவற்றை கி. மு. 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை.


இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் கி. பி. 6ஆம் நூற்றாண்டிற்கு முன் உலோகம், கல் முதலிய அழியாப் பொருட்களைக் கொண்டு இந்துச் சிலைகள் அமைக்கும் மரபு இருந்ததற்கான சான்றுகள் அதிகம் காணப்படவில்லை.51 மாறாக மண், மரம், சுதை முதலான அழியும் பொருட்களைக் கொண்டே இச்சிலைகள் ஆக்கப்பட்டதற்குத் தமிழ் நாட்டிலும், இலங்கையிலே திபுள்வேவ, மாமடுவ, அநுராதபுரம், உருத்திரபுரம், பூநகரி முதலான இடங்களில் பல சான்றுகள் கிடைத்துள்ளன. இதனால் கோயிற்காட்டிற் கிடைத்த சிவலிங்கத்தை கி. பி. 6ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதெனக் கூறலாம். தென்னாசியச் சிவ விக்கிரகவியலின் தோற்றம், வளர்ச்சி என்பன பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் சிவலிங்கத்துடன் இணைந்த ஆவுடையாரைச் சதுரவடிவில் அமைக்கும் மரபு சோழர்காலத்திற்கேயுரிய தனிச்சிறப்பெனப் பல சான்றுகளுடன் நிறுவியுள்ளனர்.52 சோழராட்சியிலே தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் (பொலநறுவை இரண்டாம் சிவ தேவாலயம்) கட்டப்பட்ட சிவாலயங்களில் இந்த மரபே காணப்படுகிறது (படம். 62). சோழராட்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட பாண்டியராட்சியில் இவை வட்டவடிவில் அமைக்கப்பட்டன.53 இதனாற் பாலியாற்றுச் சிவலிங்கத்தைச் சோழர் காலத்திற்குரியதெனக் கருதுவது பொருத்தமாகவே தெரிகிறது.



படம் - 62. சோழர் கால பொலநறுவை 2ஆம் சிவதேவாலயத்தில் உள்ள ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கம்.

கோயிற்காட்டிற் சிவலிங்கம் கண்டெடுக்கப் பட்ட இடத்திற் புராதன கட்டிட அழிபாடு களும், அம்பாள் விக்கிரகம் ஒன்றும் காணப்பட் டதாகத் தெரிகிறது. இச்சான்றுகள் இவ்விடத் திற் சோழர்கால ஆலயமொன்றிருந்திருக்கலாம் என எண்ணத் தூண்டுகின்றன. கோயிற் காட் டிற்குத் தெற்கே மாதோட்டத்திற் கிடைத்த சோழக் கல்வெட்டுக்கள் இப்பிராந்தியத்தில் 'இராஜராஜேஸ்வரம்' 'திருவிராமேஸ்வரம்' என்ற பெயரில் இரு ஆலயங்கள் சோழர் காலத் திற் கட்டப்பட்டதாகக் கூறுகின்றன.54 ஆனால் இவ்விரு ஆலயங்களும் எங்கே அமைக்கப்பட் டிருந்தன என்பது இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இதிலிருந்து இலங்கையிலும், ஏனைய பாகங்களிலும் சோழர் காலத்திற் கட் டப்பட்ட ஆலயங்களும், அவை தொடர்பான கல்வெட்டுக்களும் கண்டுபிடிக்கப்படாத நிலை யில் இருக்கலாம்என எண்ண இடமுண்டு. பாலி யாற்றின் தென்கரையிற் பூநகரியின் தென் எல்லையாகச் சோழ மண்டலம் என்ற இட முள்ளது. இவ்விடம் சோழர்கால அரசியல் இரா ணுவ வர்த்தக மையமாக இருந்திருக்கவேண்டும் (4ஆம் 5ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்). இவ்விடத்திற்கும் சிவலிங்கம் கிடைத்த கோயிற் காட்டிற்கும் இடையிலான தூரம் சில மைல் களாகும். மேலும் பாலியாற்றுடன் இணைந்த பல்லவராயன் கட்டு ஆற்றை அடுத்துள்ள நாக படுவானிற் சோழர்காலச் சாசனத்துடன் கூடிய நாகபட்டினக் கலைமரபுக்குரிய விக்கிரமும், இதற்கு வடக்காகப் பல்லவராயன் கட்டிற் சோழர்கால விஷ்ணு சிலையும் கிடைத்துள்ளன. இச்சான்றுகள் கோயிற் காட்டிற் சோழர்கால ஆலயமொன்றிருந்திருக்கலாம் என்ற எண்ணத்தை மேலும் வலுவடையச் செய்கின்றன.

கோயிற் காட்டிற் கிடைத்த சிவலிங்கத்திற் கும், உருத்திரபுரம் சிவன் கோயிலில் வைக்கப் பட்டுள்ள சதுரவடிவிலான ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கத்திற்கும் இடையே வடிவ அமைப்பில் அதிக ஒற்றுமை காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் தோற்றத்தைச் சோழர் காலத் துடன் தொடர்புபடுத்திய அறிஞர்கள் அதற்கு இவ்வாலயத்தில் உள்ள சதுர வடிவிலான ஆவுடையாரையே பிரதான சான்றாக எடுத்துக் காட்டினர் (படம். 63).55 உருத்திரபுர ஆலயச்




படம் - 63. உருத்திரபுரம் சிவதேவாலயத் தில் உள்ள ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கம்.

சுற்றாடல் தொன்மையான வரலாற்றுமையம் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. அதற்குச் சான்றாக அச்சிவாலயத்திற்குத் தெற்கிலும் (படம். 64), வடக்கிலும் (படம். 65) உள்ள பழைமையான கட்டிட அழிபாட்டுச் சின்னங் களை எடுத்துக்காட்டலாம். அவ்விடங்களிற் பழைய கட்டிட அழிபாட்டுச் சின்னங்கள் காணப் பட்டதால்தான் இவ்விடங்களை அண்டித் தற் போதைய உருத்திர புரச்சிவாலயம் கட்டப்பட்



படம் - 64. உருத்திரபுரம் சிவதேவாலயத் திற்கு தெற்காகவுள்ள புராதன கட்டிட எச்சங்கள்.



படம் - 65. உருத்திரபுரம் சிவதேவாலயத்திற்கு கிழக்காகவுள்ள தொல்லியல் மையமும். அதிலிருந்து கிடைத்த தொல்பொருட் சின்னங்களும்.

டது எனலாம். ஆனால் இவ் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள சிவலிங்கம் இத்தொல்லியல் மையங்களுள் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்டதற்கோ அல்லது அத் தொல்லியல் மையங்களில் ஒன்று முன்பு சிவாலயமிருந்த இடமாகக் கருதப்படுவதற்கோ எதுவித சான்றுகளும் காணப்படவில்லை. அவ்வாறு கருதக்கூடிய சான்றுகள் எதிர்காலத் தொல்லியல் அகழ்வாய்வினாற் கிடைக்கலாம் எனக் கூறக்கூடிய ஆரம்பச் சான்றுகள் கூட அங்கு தென்படவில்லை. அண்மையில் அங்கு மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வின்போது தற்போதைய உருத்திரபுரம் கோயிலுக்கும், அக்கோவிலில் வைக்கப்பட்டுள்ள சிவலிங்கத்திற்குமிடையே வரலாற்றுரீதியான தொடர்பு இல்லை என்ற உண்மையை அறிந்து கொள்ளமுடிந்தது. உருத்திரபுரச்சிவாலயத்துடன் தொடர்புடைய மதகுரு ஒருவரது தகவலின்படி இச்சிவலிங்கம் 1954ஆம் ஆண்டு பரந்தன் பூநகரி வீதிக்கு அணித்தாக உள்ள காட்டுப் பகுதியிற் கண்டெடுக்கப்பட்டுப் பின்னர் இவ்வாலயத்தில் வைத்து வழிபடப்பட்டதாகும். இவரின் கூற்றை உறுதிப்படுத்த மேலும் சில தகவல்கள் உள்ளன. எதிர்காலத்தில் இச்சிவாலயம் பற்றி மேற்கொள்ளப்படும் விரிவான ஆய்வுகள் இங்குள்ள சிவலிங்கம் பற்றி விரிவான தகவல்களைக் கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

## சோழர் கால அம்மன், கஜலக்ஷ்மி விக்கிரகங்கள்

பூநகரியிற் கிடைத்த இரு சிறிய தெய்வச் சிலைகள் உலோகத்தால் வார்க்கப்பட்ட பழமையான விக்கிரகங்கள் என்ற வகையில் முக்கியத்துவம் வாய்ந்தனவாகத் தெரிகின்றன. இவற்றுள் முதலாவது விக்கிரகம் 1988 ஆம் ஆண்டு மட்டுவில் நாட்டிலுள்ள நெற்புலவு என்ற இடத்திற் காடுகள் அழிக்கப்பட்டு மண்மேடுகள் அகற்றப்பட்டபோது மண்ணுட்புதையுண்டிருந்த நிலையில் துரைசிங்கம் என்பவராற் கண்டெடுக்கப்பட்டதாகும். பின்னர் இவ்விடத்திற் அகழ்வு (Excavation) மேற்கொண்ட போது 3 அடி ஆழத்தில் 11 ஆம் நூற்றாண்டிற்குரிய (முதலாம் பராக்கிரமபாகு காலத்தைச் சேர்ந்த) நான்கு நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன.[57] மண்ணுக்குள் இருந்து இவ்விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டபோது இது முழுமையானதாகவும், இதன் பீடத்தின் வலது பக்கத்தில் இன்னுமொரு சிறிய விக்கிரகம் இருந்ததாகவும், ஆனால் பீடத்திலும், கழுத்துப் பகுதியிலும் உடைவு இருந்ததனாற் பின்னர் அவ்விரு பாகங்களும் தொலைந்து விட்டதாகவும் இவ்விக்கிரகத்தை எம்மிடம் தந்த துரைசிங்கம் கூறினார்.[58] விக்கிரகத்தின் பீடம் வார்க்கப்பட்ட நிலையில் இடது பக்கப் பீடம் இடது பக்கக்காலிருந்து 2 சென்ரிமீற்றர் தூரத்தில் முடிவடையும்போது, வலது பக்கப் பீடம் உடைந்த நிலையிலும் அகலமாயும், 9 சென்ரிமீற்றர்வரை நீண்டிருப்பதையும் நோக்கும் போது வலது பீடத்தில் இன்னுமொரு விக்கிரகம் இருந்துள்ளதென்பதை நிச்சயப்படுத்த முடிகிறது. பீடத்தில் நிற்கும் நிலையிலுள்ள இவ்விக்கிரகம் வெள்ளியும், ஈயமும் கலந்த உலோகத்தினால் வார்க்கப்பட்டதொன்றாகும். இவ்விக்கிரகத்தின் முன்பக்க உடல் உறுப்புக்கள், ஆடை ஆபரணங்கள் அழகாகவும், தெளிவாகவும் தெரியும் அதேவேளை பின்பக்கம் வெறும் தட்டையாக முன்பக்க உறுப்புக்கள் சிலவற்றை மட்டும் கோடுகளாகக் கொண்டுள்ளன(படம்-66 அ.ஆ). இதனால் இவ்விக்கிரகத்தை முப்பரிமாண நிலையிலுள்ள புடைப்புச் சிற்பங்களுக்கு ஒப்பிட

(அ) (ஆ)




படம் - 66. மட்டுவில் நாட்டிற் கிடைத்த விக்கிரகம்.
(அ) முன் பக்கம். (ஆ) பின் பக்கம்.

லாம். பீடத்தின் அடிப்பகுதியிலிருந்து கழுத்துப் பகுதி வரை இதன் உயரம் நான்கு சென்ரி மீற்றர் ஆக இருப்பதனால் இதன் முழுமையான உயரம் ஏறத்தாழ ஐந்து சென்ரிமீற்றராக இருக்கலாம். இரு கரங்களை உடைய இவ்விக்கிரகத்தின் இடது கீழ்க்கரம் அதிக நெளிவின்றி நேராக இடுப்புக்குக் கீழேயுள்ள ஆடையுடன் இணைந்துள்ளது. வலதுகரம் தோள்மூட்டுப் பகுதியுடன் முறிவடைந்திருந்தாலும், அது மேல் நோக்கிய கரமாக இருக்கலாம் என்பதைக் கையின் அமைப்பிலிருந்து உணர முடிகின்றது. மேலாடையையும், கீழாடையையும் பிரித்துக் காட்டும் வகையில் இடுப்பிலுள்ள மேகலை (ஒட்டியாணம்) உருண்டை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வடிவம் முன்பக்கத்தைவிடப் பின்பக்கத்திலே தெளிவாகவுள்ளது. இவ்விக்கிரகத்தின் ஆடை அமைப்பும், அது அணியப்பட்டுள்ள முறையும் ஏனைய பெண் விக்கிரகங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகவுள்ளது. வழக்கமாகப் பெண்ணின் இடப்பக்கத் தோளின் மேலாகச் செல்லும் தாவணி, இவ்விக்கிரகத்தில் மார்புப் பகுதியை மூடிய நிலையில் வலப்பக்கத் தோளின் மேலாகச் செல்கிறது. அதைத் தெளிவாகக் காட்டும் வகையில் ஆடையின் கரைப் பகுதி புள்ளிகளாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்விக்கிரகத்தை முழுமையாகப் பார்த்த பூநகரியிலுள்ள மதகுரு ஒருவர் இதனை ஓர் அம்மன் விக்கிரகம் எனக் கூறினார். ஆனால், தற்போது இவ்விக்கிரகத்தின் தலைப்பாகம் எமக்கு கிடைக்கப் பெறாததினால் மதகுருவின் கூற்றை அப்படியே ஏற்றுக்கொள்வது கடினமாகத் தோன்றுகின்றது. ஆயினும் இதையொரு பெண் தெய்வ விக்கிரகம் எனக் கூறக்கூடிய வகையிலே தெளிவான கழுத்தாபரணங்கள், கைவளையல்கள், ஆடை அமைப்புக்கள் இவ்விக்கிரகத்தில் அமைந்துள்ளன. மேலும் தெய்வவிக்கிரகத்திற்கே யுரிய பீதாம்பரம் இடுப்பிலிருந்து பாதம் வரை நீண்டிருப்பது இக்கூற்றை மேலும் உறுதிப்படுத்துகின்றது. இரண்டாவது விக்கிரகம் தென்னியக்குளத்திலுள்ள புராதன கட்டிட சிதைவுகளுக்கு மத்தியிலுள்ள மரநிழலின் கீழ் வைக்கப்பட்டிருந்ததாகும். அவ்வூர் மக்களுட் சிலர் இவ்விக்கிரகம் இக்கட்டிடப் பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாகவும், வேறு சிலர் வேட்டையில் ஈடுபட்டோர் தென்னியக்குளக் காட்டுப் பகுதியிற் கண்டெடுத்து இங்கு கொண்டு வந்து வைத்ததாகவும் கூறுகின்றனர். எவ்வாறாயினும் இவ்விக்கிரகம் தென்னியக்குளத்திற்குரியதுதென்பதிற் சந்தேகமில்லை.

இவ்விக்கிரகமும் வெள்ளியும், ஈயமும் கலந்த உலோகத்தினாற் செய்யப்பட்ட ஒன்றாகும். ஆயினும் முதலாவது விக்கிரகத்தைவிடக்கூடிய பளபளப்புத் தன்மையும், அழகும் இவ் விக்கிரகத்திற் காணப்படுகிறது. முன் பக்கம் தெளிவான உடல் உறுப்புக்களைக் கொண்டும் பின் பக்கம் தட்டையாக ஆனால் முன்பக்க உறுப்புக்களைக் கோடுகளாகப் பிரதிபலித்தும் அமைந்துள்ளன (படம் 67 அ. ஆ). இவ்விக்கிரகத்தின் தலைப்பாகமும், முழங்காலுக்குக் கீழேயுள்ள பகுதியும் உடைந்துள்ளதனால் இதன் நீள அகல அளவுகளைக் கூறமுடியாதிருக்கிறது. ஆனால் இது முதலாவது விக்கிரகத்தைவிடச் சற்று உயரமாகவும், அகலமாகவும் இருந்திருக்கலாம் என்பதை எஞ்சியுள்ள பாகத்தைக் கொண்டு உணர முடிகின்றது. இவ்விக்கிரகத்தின் வாகனமான யானை இடுப்புக்கு கீழே பின்பக்கமாக இணைந்துள்ளது. நான்கு கரங்களைக் கொண்ட இவ் விக்கிரகத்தின் இடது கீழ்க்கரம் யானையின் வால் பகுதியையும், வலது கீழ்க்கரம் யானையின் தும்பிக்கையையும் பிடித்த நிலையில் உள்ளன.




படம் - 67. தென்னியன் குளத்திற் கிடைத்த விக்கிரகம்.

(அ) முன்பக்கம். (ஆ) பின்பக்கம்.

ஏனைய இடது, வலது மேற்கரங்கள் உடைந்த நிலையில் இடது, வலது கீழ்க்கரங்களின் முழங் கையுடன் இணைந்துள்ளன. அலங்காரத்தன்மை கொண்ட தாவணிப்பகுதி முதலாவது விக்கிர கத்தைப் போலல்லாது மார்புப்பகுதியை மூடிய நிலையில் இடதுபக்கத்தோளின் மேலாகச் செல் கிறது. மேலாடையையும், கீழாடையையும் பிரித் துக் காட்டும் வகையில் இடுப்பிலுள்ள மேகலை இருபக்கங்களிலும் தெளிவாகத் தெரிகிறது. இவ் விக்கிரகத்தின் ஒடுங்கிய இடையும், திரண்ட மார்பகங்களும், திரட்சியான பீதாம்பரம் இடுப் பிலிருந்து பாதம் வரை நீண்டுள்ள தன்மையும் இது ஒரு பெண்தெய்வச்சிலை என்பதை உறுதிப் படுத்துகின்றன. இத்தெய்வத்தின் வாகனமாக யானை இருப்பதனால் இதைக் கஜலஷ்மி விக்கி ரகம் எனக் கூறுவது பொருத்தமாகத் தெரி கிறது.

மேற்கூறப்பட்ட இரு விக்கிரகங்களையும் தெய்வச்சிலைகளாகக் கொண்டாலும், இவற் றின்தோற்ற காலத்தைத் திட்டவட்டமாகக் கூற முடியாதிருக்கிறது. ஆதிகாலம் தொட்டுத் தற் காலம் வரையான வழிபாட்டு முறையில் இவை போன்ற விக்கிரகங்களை ஆலயங்களிலும், வீடு களிலும் வைத்து வழிபடும் மரபு காணப்படுகி றது. இதனால் பிற்காலத்திற்குரிய விக்கிரகங்கள் என வாதிடவும் இடமுண்டு. ஆனால் இவ்விக்கி ரகங்கள், கனதியிலும், உலோகக்கலப்பிலும், கலை நுணுக்கத்திலும் பிற்கால விக்கிரகங்களில் இருந்து முற்றாக வேறுபடுகின்றன இவை பிற் கால வழிபாட்டுச் சிலைகளாக இருந்திருப்பின் மக்களாற் புனிதமாகப் போற்றப்பட்டு வழி படப்பட்ட இக்கலைச்சின்னங்கள் ஏனைய கலைப்பொருட்களைப் போல், குறுகிய காலத் திற் பழுதடைந்து பயனற்ற பொருள்களாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கும் எனக் கூற முடியாது. அத்துடன் தற்காலத்தில் மக்கள் நடமாட்ட மற்ற காட்டுப்பகுதியில் இச்சின்னங்கள் மண் ணிற் புதையுண்டிருக்கவும் நியாயமில்லை. இக் காரணங்களால் இவ்விக்கிரகங்களைப் பழைமை வாய்ந்தனவென நிச்சயப்படுத்திக் கூற முடியும்.

தமிழ் நாட்டில் இந்துத் தெய்வங்களை உலோகத்தில் விக்கிரகங்களாக வார்க்கும் மரபு பெரும்பாலும் கி. பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து குறிப்பாகப் பல்லவர் ஆட்சியுடன் வளர்ச்சி யடைந்தது. இலங்கையில் இம்மரபு சோழராட்சி யுடன் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. சோழர், பாண்டியர் ஆட்சிக் காலம் இந்து விக்கிரகங் களை ஆக்கும் மரபு பெருவளர்ச்சி கண்ட கால மாகும். ஆயினும், காலத்திற்குக் காலம் இவ்விக் கிரகங்கள் வடிவ அமைப்பிலும், கலைப் பாணி யிலும் பல மாறுதல்களைக் கொண்டு வளர்ச்சி யடைந்தன. இம்மாறுதல்களை அடிப்படையாக வைத்தே இவற்றின் காலம் கணிக்கப்படுவ துண்டு. மட்டுவில் நாடு, தென்னியங்குளம் ஆகிய இடங்களிற் கிடைத்த விக்கிரகங்களை ஒத்த கலைமரபு சோழர் காலத்திற் பின்பற்றப்பட்டி ருந்ததற்குத் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் சில ஆதாரங்கள் உண்டு. யாழ்ப்பாணத்தில் நாரத்தனை என்ற இடத்திற் சோழ, சேர நாண யங்களுடன் சிறிய அம்மன் விக்கிரகம் கண் டெடுக்கப்பட்டுள்ளது. இது சோழர் காலத்திற் குரியதெனக் கூறப்படுகிறது.[59] பொலநறுவையில் மதுறுகிரியா என்ற இடத்திற் சோழர் கால இந்து ஆலய அழிபாட்டிலிருந்து மிகச் சிறிய விக்கிரகம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு அநுராத புர நூதனசாலையிற் சோழர்கால விக்கிரகம் என்ற பெயருடன் வைக்கப்பட்டுள்ளது.[60] இவ் விரு விக்கிரகங்களும் வடிவ அமைப்பில், கலை நுணுக்கத்திற் பூநகரியிற் கிடைத்த விக்கிரகங் களைப் பெரிதும் ஒத்தவையாகவுள்ளன. இந்து விக்கிரகவியலில் நான்கு கரங்களைக் கொண்ட விக்கிரகத்தின் இடது, வலது கீழ்க் கரங்களின் முழங்கையுடன் இடது, வலது மேற்கரங்கள் இணைந்திருப்பது சோழக் கலைமரபிற்குரிய சிறப்பம்சமாகும். தென்னியங்குளத்திற் கிடைத்த விக்கிரகத்தில் இந்த அம்சம் இருப்பதனை அவ தானிக்கலாம் மேலும் இவ்விக்கிரகத்தில் உள்ள கழுத்தாபரணங்கள் உருண்டை வடிவில் இருப் பதும் சோழர் காலத்திற்குரிய தனிச் சிறப்புக் களில் ஒன்றாகும். இதனாலே தென்னியங்குளத் திற் கிடைத்த விக்கிரகத்தைச் சோழர் காலத் துடன் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு. மட்டுவில் நாட்டிற் கிடைத்த விக்கிரகத்தின் கழுத்தாபரணம் சோழர் காலத்துடன் தொடர் புடையதாக இருப்பினும் அதன் ஆடை அமைப் புக்கள் சோழக்கலைமரபில் இருந்து சற்றுவேறு பட்டனவாகத் தெரிகிறது. ஆயினும் இவ்விக்கிர கத்துடன் சேர்ந்ததாக 11 ஆம் நூற்றாண்டுக்கு

ரிய நாணயங்கள் கிடைத்திருப்பதால் இதன் காலத்தைப் 11 ஆம், 12 ஆம் நூற்றாண்டென எடுத்துக் கொள்ள இடமுண்டு.

## நாகபடுவானில் கிடைத்த விக்கிரகம்

பூநகரி நாகபடுவான் என்ற கிராமத்தில் தருமலிங்கம் என்பவருக்குச் சொந்தமான காட்டு நிலம் பயிர்ச்செய்கைக்காகத் திருத்தப்பட்ட போது உலோகத்தால் வார்க்கப்பட்ட விக்கிரகம் ஒன்று கிடைத்துள்ளது. இவ் விக்கிரகம் கண்டு பெடுக்கப்பட்ட இடத்திலும், இவ்விடத்தைச் சுற்றியுள்ள ஏனைய இடங்களிலும் புராதன கால வரலாற்று எச்சங்களான மட்பாண்ட ஓடுகள், செங்கட்டிகளால் அமைக்கப்பட்ட கட்டிட அழிபாடுகள் என்பன காணப்படுகின்றன. மேலும் இவ்விடங்களில் இருந்து மத்திய கால இலங்கை, தென் இந்திய நாணயங்கள் சிலவும், சோழர் கால விஷ்ணு சிலையொன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இச்சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு தற்போது பெரும்பகுதி காடாகவுள்ள நாகபடுவான் கிராமத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் செறிவான மக்கள் குடியேற்றம் இருந்ததெனக் கூறமுடியும். இக்கருத்தை இங்கு கிடைத்த விக்கிரகம் மேலும் உறுதிப்படுத்துகிறது எனலாம்.

பூநகரிப் பிராந்தியத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொன்மையான சமயச் சான்று என்ற வகையில் நாகபடுவானில் கிடைத்த விக்கிரகம் பல வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தெரிகின்றது. இவ்விக்கிரகம் ஒன்பது அங்குல உயரமும், ஒரு இறாத்தல் நிறையும் உடையது. தாமரை ஆசனத்தில் நிற்கும் நிலையில் உள்ள இவ்விக்கிரகம் உலோகக் கலப்பினால் வார்க்கப்பட்ட முழு விக்கிரகமாகும். இதன் இடதுகீழ்க்கரம் வரதஹஸ்தத்தையும், வலது மேல்கரம் அபயஹஸ்தத்தையும் குறித்து நின்றன. ஒடுங்கிய இடையையும், தடித்த கழுத்தாபரணங்களையும் கொண்ட இவ்விக்கிரகத்தினது காது நீண்டு தோள் பகுதியுடன் இணைந்து காணப்படுகின்றது. இடுப்புக்குக் கீழே இரு கால்களுக்கிடையே முன்பக்கமாகவுள்ள உடைந்த பாகம் வாகனத்தின் தலைப் பாகமாகவும், பின்பக்கமாக வெளியேறிப் பீடத்துடன் இணைந்துள்ள மெல்லிய நெளிந்த பாகம் வாகனத்தின் வால்பகுதியாகவும் இருக்கலாம் என எண்ணத்தூண்டுகிறது (படம். 68).



படம் - 68. பூநகரி நாகபடுவானிற் கிடைத்த விக்கிரகம்.

இவ்விக்கிரகத்தின் தாமரை ஆசனத்தின் முன்பக்கத்தில் சாசனமொன்று பொறிக்கப்பட்டுள்ளது. அச்சாசனத்தை வாசித்த அறிஞர் சிலர் அது தேவநாகிரி வரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ளது எனவும், இறுதியில் வாசகம் "ஸ்வரி" என முடிவதால் சாசனம் புவனேஸ்வரி என்ற பெயரைக் கொண்டிருக்கலாம் எனவும் கூறியுள்ளனர். இச்சாசனத்திலிருந்து அக்கால மக்கள் இவ் விக்கிரகத்தை இந்துக்கடவுளராக வழிபட்டிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. ஆனால் விக்கிரகத்தின் தோற்ற அமைப்பும், உச்சியிலுள்ள சிறிய மகுடமும், இடதுகையில் தொங்கி நிற்கும் ஆடை அமைப்பும் இவ்விக்கிரகம் சோழர்கால நாகபட்டின பௌத்த கலை மரபுக்குரியதென்பதை உறுதிப்படுத்துகின்றன.61 ஆனால் எல்லா அம்சங்களிலும் இவ் விக்கிரகம் நாகபட்டின கலைமரபை ஒத்திருப்பதற்காகக் கூறமுடியாது.



படம் - 69. தமிழ்நாடு நாகபட்டினத்திற் கிடைத்த விக்கிரகங்கள்.

நாகபட்டினத்திற்குரிய புத்தர் சிலைகளை எடுத்துக்கொண்டால் அவற்றின் தலையிலுள்ள சிறிய மகுடமும், இடதுகையின் மேல் தொங்கி நிற்கும் ஆடையமைப்பும் பூநகரி நாகபடுவான் விக்கிரகத்தை ஒத்துக் காணப்படுகின்றன (படம். 69). ஆனால் நெஞ்சுப்பகுதியிலுள்ள அலங்காரத் தன்மையும், தோளோடு காதுப்பகுதி இணைந்திருக்கின்ற முறைமையும், பாதங்களுக்கு மேலாகச் செல்லுகின்ற ஆடையின் அமைப்பும், வரதஹஸ்தத்தைக் குறித்துநிற்கும் இடது கீழ்க் கரம் இடுப்புக்கிழே நீண்டிருப்பதும், விக்கிரகத்துடன் வாகனம் இணைந்திருந்ததற்கான சான்றுகள் காணப்படுவதும் நாகபடுவான் விக்கிரகத்தின் கலைமரபு நாகபட்டினம் கலைமரபிலிருந்து வேறுபட்டு நிற்பதைக் காட்டுகிறது.[62] அத்துடன் நாகபட்டினப் புத்தர் சிலையில் காணப்படும் அழகும், தெளிவும், ஆடை அலங்கார அமைப்புக்களும் இவ்விக்கிரகத்தில் காணப்படவில்லை. இவ்வேறுபாடுகள் நாகபடுவான் விக்கிரகம் பொறுத்து இரண்டு வகையான எண்ணக் கருத்தை ஏற்படுத்துகின்றன.

1. இவ்விக்கிரகம் தமிழ்நாட்டிலுள்ள நாகபட்டினத்திலிருந்து கொண்டுவரப்படாது, நாகபட்டினக் கலைமரபைக் கற்ற கலைஞர்களால் இலங்கையிலேயே வடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

2. இவ்விக்கிரகத்திலுள்ள சாசனம் புத்தரைக் குறிக்காது இந்துத் தெய்வத்தை குறிப்பதாகக் கருதப்படுவதால் பௌத்தக்கலை மரபின் வழியாகவந்த சிற்பியொருவன் இந்துத் தெய்வமொன்றினை வடிவமைக்கும் பொழுது எழுந்த ஒரு தோற்றப்பாடாக இவ் விக்கிரகம் இருக்கலாம்.

இலங்கையில் பௌத்த கலைமரபைக் கொண்டு இந்துத் தெய்வங்கள் ஆக்கப்பட்டதற்கும் இந்துக்கலை மரபைக்கொண்டு பௌத்த தெய்வங்கள் ஆக்கப்பட்டதற்கும் போதிய சான்றுகள் உண்டு. இவை தொடர்பான சிற்ப நூல்கள் சிலவும் மத்தியகால இலங்கைக்குரியவையாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்குப் பொலநறுவையில் கிடைத்த விக்கிரகங்கள் சான்றாகும்.[63]

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வருகைதந்த சுவீடன் நாட்டு உப்சலா பல்கலைக்கழக சமய வரலாற்றுத்துறைத் தலைவர் பீற்றர்சால்க் தமிழ் பௌத்தம் தொடர்பான ஆய்வுக்குப் புதிய சான்றுகளைத்தேட முற்பட்டபோது நாகபடுவானில் கிடைத்த விக்கிரகத்தை அவரது ஆய்வுக்குக் கொடுத்திருந்தோம். அவ்விக்கிரகத்தை ஆராய்ந்த அவர் அது தொடர்பான கருத்துக்களை கருத்தரங்குகளிலும், பத்திரிகைகளிலும் தெரிவித்திருந்தார்.[64] அவர் கருத்துப்படி:

1. இவ்விக்கிரகம் சோழர்கால நாகபட்டினம் கலை மரபுக்குரியது.
2. அமராவதிக் கலைமரபைப் பின்பற்றிச் சோழர்காலத்தில் இவ்விக்கிரகம் வடிக்கப்பட்டுள்ளது.
3. விக்கிரகத்தின் முன்பக்கத்திலுள்ள உடைவு வாகனமாக இருக்கமுடியாது. மாறாக, விக்கிரகம் வடிக்கும்போது ஏற்பட்ட உலோகத் திரட்சியாக இருக்கவேண்டும்.
4. பின்பக்கத்திலுள்ள மெல்லிய நெளிந்த பாகம் வாகனத்தின் வால் பகுதியாக இருக்க முடியாது.
5. பீடத்திலுள்ள சாசனம் புவனேஸ்வரி என்ற பெயரைக் குறிக்கவில்லை. மாறாக புத்தரைக் குறித்திருக்கவேண்டும்.

இவ்விக்கிரகம் சோழர்கால நாகபட்டினக் கலை மரபுக்குரியதென பீற்றர் ஷால்க் கூறுவது முற்றிலும்பொருத்தமாகும். அவ்வாறான கருத்தையே நாமும் இவ்விக்கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது பற்றிய செய்தியை பத்திரிகையில் வெளியிட்ட போது கூறியிருந்தோம்.[65] ஆனால் இவ்விக்கிரகம் தொடர்பாக அவர் கூறிய ஏனைய கருத்துக்களை அப்படியே ஏற்றுக் கொள்வது கஷ்டமாகத் தோன்றுகின்றது.

இவ்விக்கிரகம் அமராவதிக் கலை மரபைப் பின்பற்றி சோழர் காலத்தில் வடிக்கப்பட்டதாகக் கூறியமை பொருந்துமாறில்லை. தமிழ்நாட்டில் உலோகத்தால் விக்கிரகங்களை ஆக்கும் மரபு கி. பி. 6ஆம் நூற்றாண்டின் பின்னர் சிறப்பாகப் பல்லவர் ஆட்சியுடன் தோன்றி

வளர்ந்ததற்கே அதிகசான்றுகள் கிடைத்துள்ளன. இக்கலை மரபு சங்ககாலத்தில் இருந்த கலை மரபும் கி. பி. 5 ஆம் நூற்றாண்டளவில் வீழ்ச்சியடைந்த அமராவதி பௌத்த கலை மரபு உட்பட தமிழ் நாட்டிற்கு வடக்கில் இருந்து வந்த கலை மரபும் ஒன்றுடன் ஒன்று கலந்ததன் விளைவால் தோன்றிய புதிய கலை மரபு ஆகும். இதனால் இப்புதிய கலை மரபு பல்லவர் காலத்தில் இருந்து திராவிடக் கலை மரபு என்ற பெயரைப் பெற்றது. இத் திராவிடக் கலை மரபு சங்ககாலத்தின் தொடச்சியென்றோ அல்லது தமிழ் நாட்டிற்கு வடக்கில் இருந்து புகுந்த கலை மரபின் தொடர்ச்சியென்றோ கூற முடியாத அளவிற்குப் புதிய அம்சங்களைப் பல்லவர் காலத்தில் கொண்டிருந்தது. பல்லவர் காலக் கலை மரபை அடிப்படையாகக் கொண்டே பல மாறுதல்களுடன் சோழர் காலத்தில் பல விக்கிரகங்கள் வடிக்கப்பட்டன. இந்நிலையில் சோழர்கால நாகபட்டினக் கலை மரபை 500 ஆண்டுகளுக்கு முன் வீழ்ச்சியடைந்த அமராவதிக் கலை மரபைப் பின்பற்றி வார்க்கப்பட்டதாகக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

நாகபடுவான் விக்கிரகத்தின் முன்பக்கத்தில் காணப்படும் பகுதி உலோகம் வார்க்கப்பட்ட போது ஏற்பட்ட திரட்சியெனக் கூறியமையும் பொருந்துமாறில்லை. தென்னாசிய கலை வரலாற்றை ஆராய்ந்தால் தெய்வ விக்கிரகங்கள் அமைக்கப்படும்போது அவ்விக்கிரகங்களில் உடைவு ஏற்பட்டால் அல்லது அவை சிற்ப விதிகட்கு மாறாக அமைந்தால் அவை ஆலயங்களில் வைத்து வழிபடப்படாது நீர் நிலைகளில் போடும் மரபு பின்பற்றப்பட்டதைக் காணலாம். இதற்கு பொலநறுவையில் கிடைத்த சோழர்கால விக்கிரகங்கள் சான்றாகும். அதே வேளை ஒரு விக்கிரகம் முழுமையாக அமைந்தால் அதில் சாசனம் பொறிக்கும் மரபு பெரும்பாலும் பின்பற்றப்படுவதுண்டு. பூநகரி நாகபடுவானில் கிடைத்த விக்கிரகத்தில் சாசனம் உண்டு என்பது பீற்றர்சால்க் உட்பட பலரும் ஏற்றுக் கொண்ட உண்மையாகும். இந்நிலையில் அவ்விக்கிரகத்தின் முன்பக்கத்திலுள்ள உடைவு வாகனத்தின் தலைப்பாகம் அல்ல, விக்கிரகம் முழுமையாக அமையாத நிலையில் ஏற்பட்ட உலோகத் திரட்சி எனக் கூறப்படுவது தென்னாசியக் கலை மரபைத் தெரிந்த ஒருவருக்கு முரண்பாடாகத் தெரிகிறது.

விக்கிரகத்தின் பின்பக்கத்திலுள்ள மெல்லிய நெழிந்த பாகம் வாகனத்தின் வால் பகுதியாக இருக்க முடியாதெனக் கூறுவதிலிருந்து அவ்விக்கிரகம் சம நிலையில் நிற்பதற்காக அமைக்கப்பட்ட பாகம் என்ற பொருள் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. இந்து, பௌத்த விக்கிரகங்கள் உயரம் கூடியதாக வார்க்கப்படும் போது அவை சமநிலையில் நிற்பதற்கு வால் போன்ற பகுதி விக்கிரகத்தின் பிற்பகுதியில் அமைக்கப்பட்டதற்கு இலங்கையில் கிடைத்த இந்து, பௌத்த விக்கிரகங்களில் ஆதாரங்கள் உள்ளன. ஆனால் நாகபடுவானில் கிடைத்த விக்கிரகம் 9 அங்குலத்திற்குக் குறைவான உயரத்தை மட்டுமே கொண்டுள்ளது அதனால் இச் சிறிய விக்கிரகம் சமநிலையில் இருப்பதற்கு வால் போன்ற பாகம் அமைக்கப்பட்டிருக்குமென கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டால் அது பொருத்தமற்றதாகவே இருக்கும்.

பீடத்தின் முன்பக்கத்திலுள்ள சாசனம் புத்தரைக் குறித்திருக்கலாம் எனக் கூறியதையும் ஏற்கத் தயங்க வேண்டியுள்ளது. நாகபட்டினத்தில் கிடைத்த அனைத்துப் புத்தர் விக்கிரங்களிலும் பீடத்திலுள்ள சாசனம் தமிழ் வரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ளது.66 ஆனால் நாகபடுவான் விக்கிரகத்தில் உள்ள சாசனத்தில் தமிழ் எழுத்துக்கள் இருப்பதாக பீற்றர்சால்க்கால் அடையாளம் காட்டப்படவில்லை. அதே வேளை அச்சாசனத்தின் தேவநாகரி எழுத்துக்கள் என்ற கருத்தையும் அவர் நிராகரிக்கவில்லை.

நாம் இங்கு எழுப்பிய கருத்துக்களின் அடிப்படையில் பீற்றர்சால்க் கூறியவற்றைச் சீர்தூக்கிப் பார்ப்பது தெளிவு பெற வழி செய்யும் என நம்புகின்றோம். மேலும் அறிஞர் இவ்விக்கிரகம் பற்றி ஆராய்தல் வேண்டும். இவ்விக்கிரகம் சோழர் காலத்திற்குரிய நாகபட்டினக் கலை மரபிற்குரியது என்பது மட்டும் அனைவருக்கும் உடன்பாடான கருத்தாக உள்ளது.

# அடிக்குறிப்புகள்


1. Dhaky, M. A. "The Pranala in Indian, South Asian and South East Asian Sacred Architecture" Rupa Parati Rupa Alice Boner Commemoration (ed) Betting Baurner, (New Delhi, 1983), பக். 130-166
2. Bell, H. C. P. "Archaeological Survey of Ceylon, Colombo. Annual Report, (Colombo, 1900)
3. Dubreuil, N. J. G. Dravidian Architecture, (Varanasi, 1972), ப. 13
4. Temple Register of Kachcheri Jaffna, (Jaffna, 1892)
5. மண்ணித்தலையில் வாழும் 76 வயதுடைய தங்கம்மா என்ற பெண்மணி கூறியது.
6. இக்கருத்தைக் கடிதத் தொடர்பாலும், நேரடி உரையாடலாலும் இந்திரபாலா, சிவசாமி, பத்மநாதன் போன்ற அறிஞர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இவர்களுள் சிவசாமி இவ் வாலயத்தை நேரடியாகப் பார்வையிட்டவர்.
7. இந்திரபாலா, கா. இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, (கொழும்பு, 1970), ப. 5
8. Pathmanathan, S. The Kingdom of Jaffna, (Colombo, 1978), ப. 5
9. Bell, H C. P. Annual Report of the Archaeological Survey of Ceylon for 1892, 1893 (Colombo)
10. இந்திரபாலா, கா, மு கூ. நூ, 1970, ப. 9
11. SII. Vol. IV, No. 1338
12. SII Vol. II, No. 92
13. இந்திரபாலா, கா. மு. கூ. நூ, 1970, பக். 9-31
14. Sitriampalam, S. K. "The Cola Temples of Sri Lanka-A Study" Tamil Civilization, Vol. 3, No. 2&3, பக். 123-132.
15. சிவசாமி, வி, "யாழ்ப்பாணக் குடாநாட்டில் இந்து சமயம் - சில வரலாற்றுக் குறிப்புக்கள்". வசந்தம், மலர். 1, இதழ் 4, (நெல்லியடி, 1975), பக் 32 - 37
16. இந்திரபாலா, கா. "யாழ் கமால் வீதியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சைவச் சிலைகள்" வீரகேசரி வாரவெளியீடு, (கொழும்பு, 11. 2. 79), ப. 5
17. Epigraphia Tamilica, Vol. 1, pt. 1. பக். 52-56
18. மேற்படி,
19. Brown, Norman N. A. Pillared Hall From a temple at Madurai, India, (oxford, 1940), ப.16
20. Paranavitana, S. The Shrine of Upulvan at Devundara, (Colombe, 1933), pl. VI-VII
21. Nilakanta Sastri, K. A. A History of South India, (London, 1958), ப. 451

22. பாலசுப்பிரமணியம், எஸ், ஆர், சோழர் கலைப்பணி, (சென்னை, 1966), பக். 48-49
23. மேற்படி, ப. 52
24. மேற்படி, பக். 60-62
25. மேற்படி, பக். 63-74
26. மேற்படி, படம் 57
27. Balasubramaniam, S. R. Middles Cola Temples, (Haryaha, 1975), ப. 165 படம். 168
28. Dubreuil, N. J. G. மு. கூ. நூ, ப. 183
29. பாலசுப்பிரமணியம், எஸ். ஆர். மு. கூ. நூ, 1966. ப. 71
30. மேற்படி, ப. 21
31. Sitrampalam, S. K. மு. கூ. க, ப. 123
32. இவ்வாலயம் தொடர்பான படங்களை வெளிநாட்டிலுள்ள எனது ஆசிரியர் இந்திரபாலா வுக்கு அனுப்பிய போது மேற்படி கருத்தைக் கடிதமூலம் தெரிவித்தார்.
33. Bell, H. C. P. மு. கூ. நூ. 1908
34. Coomaraswamy, A. K. Bronzes from Ceylon Chilfly in the Colombo Museum. Memories of the Colombo Museum No, 1, (Colombo, 1944)
35. உரையாடியபோது கூறப்பட்டது.
36. Temple Register of Kachcheri Jaffna, (Jaffna, 1892),
37. கோபாலகிருஷ்ண ஐயர், ப. சிவாகமங்களும் சிற்ப நூல்களும் சித்தரிக்கும் சிவவிக்கிராவியல், கலாநிதி பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு. (யாழ்ப்பாணம், 1981), ப. 71
38. உரையாடியபோது கூறியது.
39. உரையாடியபோது கூறியது.
40. உரையாடியபோது கூறியது,
41. Friar Pauloain Trinidade, O. F. M. Chapter on the Introduction of Christianity to Ceylon, (Chilaw, 1972), ப. 240
42. Temple Register of Kachcheri Jaffna, (Jaffna, 1892)
43. விக்கிரகத்தின் முழங்காற் பகுதியுடன் இன்னொருவிக்கிரகம் இணைந்திருந்ததற்கான அடையாளம் காணப்படுகிறது. இது விஷ்ணுவின் வாகனமாக இருக்கலாம் போல் தெரிகிறது.
44. Nilakanta Sastri, K. A. மு. கூ. நூ, படம் 59, ப. 760
45. பல்லவராயன் காட்டுப்பகுதியில் இவ்விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட இடத்தில் நாம் ஆய்வினை மேற்கொண்டபோது அப்பகுதியில் சிதைவடைந்த கட்டிடத்தின் எச்சங்களைப் பல இடங்களில் அவதானிக்க முடிந்தது. ஆயினும் சிலைகண்டெடுக்கப்பட்ட கட்டிட அழிபாடுகள் எது என்பதை நிச்சயப்படுத்தமுடியவில்லை. ஆயினும் இங்கு புராதன ஆலயங்கள் இருந்திருக்கக் கூடிய தடயங்கள் உள்ளன.
46. Friar Paula da Trinjdade, மு. கூ. நூ, ப. 240
47. ஸ்ரீவிநாயகர் கும்பாபிஷேக மலர், (வவுனியா 1970), பக். 6-7
48. மகாவங்ஸ; அத்; 28, செய், 39

49 Parkar. H. Ancient Ceylon, (London, *1909*), பக்: *365-366*

50. ஸ்ரீவிநாயகர் கும்பாபிஷேக மலர், ப. *6*

51, இந்திரபாலா, கா. மு. கூ. நூ ப. *5*

52. தென்னாசிய சிவவிக்கிரவியல் பற்றி கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வை மேற்கொண்ட கோபாலகிருஷ்ண சர்மா சிந்துவெளி தொடக்கம் தற்காலம் வரை சிவ விக்கிரவியலில் ஏற்பட்ட படிமுறை வளர்ச்சி பற்றி சான்றாதாரங்களுடன் விளக்கியுள்ளார். அவர் ஆவுடையாரைச் சதுரவடிவில் அமைக்கும் மரபு சோழர் காலத்திற்குரிய தனிச் சிறப்பென்பதற்கு பல சான்றாதாரங்கள் காட்டியுள்ளார்.

53. மேற்படி ஆய்வுக் கட்டுரையில் பாண்டியர் காலததிற்குரியவட்ட வடிவில் அமைக்கப் பட்ட ஆவுடையார் பற்றிப் பல சான்றாதாரங்களுடன் விளக்கங் கொடுக்கப்பட்டுள்ளது.

54. SII, Vol, IV, No. *1412*

55. Navaratnam, C, S. A short History of Hinduism in Ceylon, (Jaffna, *1964*), ப. *64*

56. இச் சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்ட காட்டுப் பகுதியில் ஒரு ஆலயம் இருந்ததற்கான கட்டிட அழிபாடுகள் காணப்படுவதோடு அவ்வழிபாடுகளிடையேயிருந்து எடுக்கப்பட்ட சில விக்கிரகங்கள் பரந்தனில் உள்ள சில ஆலயங்களில் வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

57. இவ்விக்கிரகம் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் ஆய்வு செய்த நாம் இந்நாணயங்களைக் கண்டெடுத்தோம்.

58. இவர் பூநகரி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் எழுது வினைஞராகக் கடமையாற்றுபவர்.

59. நாரந்தனையிற் கண்டுபிடிக்கப்பட்ட அம்மன் விக்கிரகம் பொன்னால் செய்யப்பட்டதாகும். நீண்ட காலம் யாழ்ப்பாண நூதன சாலையில் வைக்கப்பட்டிருந்த இவ்விக்கிரகம் தற்போது கொழும்பு நூதனசாலைக்கு இடம் மாற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

60. *1990* ஆம் ஆண்டு *(4. 6. 90)* நாம் அநுராதபுர நூதனசாலைக்குக்குச் சென்று பார்த்தபோது தென்னியங் குளத்தில் கண்டெடுக்கப்பட்டது போன்ற சிறிய கஜலட்சுமி விக்கிரகம் மதுறுகிரியாவில் கிடைத்த சோழர் காலச் சான்றுகளுடன் வைக்கப்பட்டு, அவ் விக்கிரகம் சோழர் காலத்திற்குரியதெனப் பெயரிடப்பட்டிருந்தது.

61. ஈழநாடு, உதயன், *(3. 7. 1992)*

62. Ramachandran, T. N, Nagapattinam and other Buddhist Bronzes in the Madras Museum, Vol. VII, No. *1*. (Madras, *1965*), Plate, II, IV, V

63. பொலநறுவையிற் கிடைத்த நடராசர் விக்கிரகம் சோழர் காலத்திற்குரியதென்பதற்கு உறுதியான ஆதாரங்கள் உண்டு. ஆனால் தமிழ் நாட்டில் சோழர் காலத்தில் வார்க்கப்பட்ட நடராசர் விக்கிரகத்திற்கும், பொலநறுவையிற்கிடைத்த நடராசர் விக்கிரகத்திற்கும் அமைப்பு ரீதியில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. தமிழ் நாட்டு நடராசர் விக்கிரகத்தில் காணப்படும் அழகும், தெளிவும் பொலநறுவை நடராசர் விக்கிரகத்தில் குறைவடைந்து காணப்படுவதோடு, இலங்கையிலுள்ள புத்த விக்கிரகங்களைப் போல் இதன் உதடும், கால்பகுதியும் தடித்துக் காணப்படுகின்றன.

64. ஈழநாதம் வெள்ளி மஞ்சரி, *(28. 8. 1992)*

65. ஈழநாடு, உதயன், *(3. 7. 1992)*

66. Ramachandran, T. N. மு. கூ. நூ, Plate, XXIV, XXV, XXVI, XXII

# 6. பூநகரியிலுள்ள புராதன கட்டிட அழிபாடுகளும், அவற்றின் வரலாற்று முக்கியத்துவமும்

பூநகரியுள்ளிட்ட வன்னிப் பிரதேசம் இலங்கையில் ஏனைய பிராந்தியங்களைப்போல் தொல்லியல் ஆய்வுசெய்யப்பட்ட பகுதியெனக் கூறமுடியாது. ஆயினும் ஒருசில ஆய்வாளர்கள் இப் பிராந்தியத்திலுள்ள சில இடங்களிற் சில தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர் என்பதையும் இங்கு மறுப்பதற்கில்லை. 19ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த ஆங்கிலேய நாட்டவரான பாக்கர் என்பவர் இப்பிராந்தியத் திற் கிடைத்த கல்வெட்டுக்களையும், பிற கட்டிட அழிபாடுகளையும் கொண்டு ஆதியில் இங்கு தமிழ் மக்கள் (திராவிட மக்கள்) வாழ்ந்துள்ள னர் எனக் கூறியுள்ளார். மேலும் இவர் மகா வம்சத்தில் வரும் பெலிவாவியை (கி. மு. 2ஆம் நூற்றாண்டுக்குரியது) பூநகரியின் தென்னெல்லை யில் உள்ள பாலியாறு என அடையாளம் கண்டு இங்குள்ள வவுனிக்குளத்தின் ஆரம்பத்தோற்றம் பாளி இலக்கியங்களில் மறைக்கப்பட்டுள்ள எல் லாளன் சாதனைகளில் ஒன்றாக இருக்கலாமென் றார். இவரின் சமகாலத்தவரான லூயிஸ் என் பவர் இங்கு கண்டுபிடித்த சில கட்டிட அழிபாடு களையும், பல இந்து விக்கிரகங்களையும் அடிப் படையாகக் கொண்டு இவை புராதன இராச தானியின் சிதைவுகளாக இருக்கலாம் என அபிப் பிராயம் தெரிவித்தார். தமிழ் மக்களது சுதந்திர அரசு 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேதான் தோன்றியது என ஆரம்பத்திற் கூறிய இந்திர பாலா பிற்காலத்தில் மல்லாவி, முத்தையன் கட்டு ஆகிய இடங்களிற் கண்டுபிடிக்கப்பட்ட கட்டிட அழிபாடுகளை ஆதாரமாக வைத்து இவை பழைய இராசதானியின் சிதைவுகளா அல்லது சோழர் காலத் தலைநகரின் எச்சங் களா என்ற கேள்வியை எழுப்பினர்.[1] இக் கருத் துக்கள் யாவும் வன்னிப் பிராந்தியத்தில், தொன் மையான தமிழர் நாகரிகமும், ஆதியிலே சுதந் திர தமிழரசும் இருந்திருக்கலாம் என்ற கருத் தைக் கோடிகாட்டுகின்றன. இந்நிலையில், பூந கரி தென்னியங்குளப் பகுதியில் எமது தொல்லி யல் ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட புரா தன நகரத்தின் அழிபாடுகள் இக்கருத்துக்களுக்கு மேலும் வலுவூட்டுகின்றன எனலாம்.

## தென்னியங்குளக் கட்டிட அழிபாடுகள்

தென்னியங்குளம் பூநகரி முழங்காவிலுக்குக் கிழக்கே 10 மைல் தொலைவில், பூநகரியின் தென்கிழக்கு எல்லையில் அமைந்துள்ளது. அண் மைக்காலப் புதிய நிர்வாகப் பிரிவு காரணமாக இவ்விடம் தற்பொழுது முல்லைத்தீவு மாவட்ட நிர்வாகப் பிரிவுக்கு உட்பட்ட ஒரு கிராமமாக உள்ளது ஆனால் நீண்டகாலமாக இக்கிராமம் பூநகரிப் பிராந்தியத்திற்குள் அடங்கிய ஒரு பகுதி யாக இருந்து வந்துள்ளதென்பதற்குப் போத் துக்கேயர் கால ஆவணங்கள் சான்றாகும். இது காரணமாக இங்குள்ள கட்டிட அழிபாடுகளைப் பூநகரிப் பிராந்தியத்திற்குரியதாகக் கொள்வது பொருத்தமாகும்.


இக் கிராமத்திலுள்ள செழியாவில், மூங்கு வில், நீராவி ஆகிய இடங்களில் இதுவரை பத் துக்கு மேற்பட்ட கட்டிடத் தொகுதிகளின் சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. தற் போது இம்மூன்று இடங்களும் அடர்ந்த காடு களாகவும், மக்கள் நடமாட்டமற்ற பகுதிகளாக வும், மண்ணில் புதையுண்டுள்ள கட்டிட அழி பாட்டு மையங்கள் உயர்ந்த மண்மேடுகளாகவும் காட்சியளிக்கின்றன. ஆயினும் இம்மையங்களுக்கு அருகிலே பாழடைந்த நிலையில் சிறுசிறு குளங்

கள் இருப்பதைக் கொண்டு முன்பு இவ்விடங் களில் செறிவான மக்கள் குடியிருப்புக்கள் இருந் தனவெனக் கூறமுடிகிறது.

செழியாவில் மூங்குவில் எல்லையின் மையத் தில மட்டும் $1\frac{1}{2}$ மைல் சுற்று வட்டத்திற்குள் ஐந்துக்கு மேற்பட்ட கட்டிடத் தொகுதிகள் இருப்பதற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. இவற்றுள் இரு கட்டிட அழிபாடுகள் மிகப்பெரியனவாக உள. வடக்குப் பக்கமாக உள்ள முதலாவது கட்டிடம் 30' நீளமும் 18' அகலமும் கொண்டது (படம் 70). இதில் 8 கருங் கல் தூண்கள் நிமிர்ந்த நிலையிலும், ஏனைய தூண்கள் உடைந்த நிலையில் மண்ணிற் புதை யுண் ம் காணப்படுகின்றன. இத்தூண்கள் ஒவ் வொன்றும் ஏறத்தாழ 6' முதல் 9' வரையி லான உயரத்தையும் 2' 1 1/2' தடிப்பையும் கொண்டுள்ளன. சில தூண்கள் மட்டும் நன்கு பொழியப்பட்டு அலங்காரத் தன்மை கொண்டு காணப்படுகின்றன.(படம் 71). சற்சதுர வடிவில் அமைந்த இக்கட்டிடத்தின் சுவர்கள் செங்கட்டி களைக் கொண்டு கட்டப்பட்டிருக்கலாம் என் பதை மண்ணிற் புதையுணடு காணப்படும் செங் கட்டிகள் உறுதிப்படுத்துகின்றன.




படம் - 70. செழியாவில் மூங்குவில் காட் டுப் பகுதி எல்லையில் வடக்குப் பக்கமாக உள்ள கட்டிட அழிபாட்டுத் தொகுதி.




படம் - 71. மேற்படி (படம் - 70) கட்டிட அழிபாட்டிலிருந்து எடுக்கப்பட்ட அலங் காரத் தன்மைகொண்ட தூண்.

இக்கட்டிடத்தின் மையப்பகுதியில் மண் ணில் மறையுண்டு காணப்பட்ட கருங்கற் சிற் பத்தொகுதியொன்று இக் கட்டிடத்தின் பழ மையையும் சிறப்பையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஓரளவு வட்டவடிவில் அமைந்த இக் கட்டிடப்பாகம் 3' உயரமும் 2 1/2' அகலமும் உடையது, இதன் நடுமையத்தில் 2 1/2' நீளமும் 9' அகலமும் 6' ஆழமும் கொண்ட பள்ளமான பகுதி ஒன்று செதுக்கப்பட்டுள்ளது (படம் 72). 3' உயரமான வெளிப்பக்கத்தின் ஒரு பகுதியில் அலங்காரத் தன்மை கொண்ட இருபக்கப் பரி மாணமுடைய புடைப்புச் சிற்பங்கள் செதுக் கப்பட்டு உள்ளன. இதில் சிங்கமும், மனித உருவமும் மாறிமாறி மூன்று நிரை களில் வருகின்றன. மனித உருவம் குந்திய நிலையில் முழங்கால் மடிக்கப்பட்டு அதன் மேல் கைகள் நீட்டப்பட்ட நிலையிற்




படம் - 72, மேற்படி (படம். 70) கட்டிடத் தொகுதியிலுள்ள கருங்கற் பீடம்.

காணப்படுகின்றது. இது ஓர் ஐயனார் சிற்பமாக இருக்கலாம் என்பதை இதன் அங்க அமைப்புக் களும், குந்தியிருக்கும் பாணியும் உறுதிப்படுத்து கின்றன (படம் 73). இச் சிற்பத்திற்கும் காஞ்சி கைலைநாதர் கோவிலிலுள்ள சிற்பத்திற்கு மிடையே வேறுபாடு காணமுடியாத அளவிற்கு அதிக ஒற்றுமைத் தன்மை காணப்படுகிறது 2 மேலும் இச்சிற்பங்கள் ஒவ்வொன்றையும் பிரித்து நிற்கும் புடைச் சிற்பத் தூண்களின் அமைப் புக்கள் தமிழ்நாட்டுத் திராவிடக் கலைமரபை உறுதிப்படுத்தி நிற்கின்றன.



படம் - 73. கருங்கற் பீடத்திலுள்ள புடைப்புச் சிற்பங்கள்.

இக் கருங்கற் சிற்பத் தொகுதி எதற்காகப் பயன்படுத்தப்பெற்றது என்பதைத் தற்போது திட்டவட்டமாகக் கூறமுடியாதிருக்கின்றது. இது ஒரு தூணின் மேற்பாகமாக அல்லது தெய்வச் சிலைகள் வைக்கப்பட்ட பீடமாக இருக்கலாம். சில வருடங்களுக்கு முன்னர் வேட்டையில் ஈடு பட்டோர் இக் கட்டிடத் தொகுதியில் இருந்து சில இந்து விக்கிரகங்களையும், தீபம் எரிப்பதற் கான மண் விளக்குகளையும் கண்டெடுத்து துணுக்காய் விநாயகர் ஆலயத்தில் வைத்ததாகக் கூறப்படுகிறது. அது உண்மையாக இருக்கலாம் என்பதைத் துணுக்காய் ஆலய நிர்வாகிகளுடன் தொடர்புகொண்டபோது உறுதிப்படுத்த முடிந் தது. ஆயினும் இவ்விக்கிரகங்களைப் பார்வையிட அனுமதி கிடைக்கவில்லை.




படம் - 74. அநுராதபுரத்திலுள்ள பல்லவர் காலக் (கி. பி. 10) காளிகோவிலின் அழி பாட்டுக் கட்டிடத் தொகுதி.

அநுராதபுரத்தில் இடிந்த நிலையில் உள்ள பத்தாம் நூற்றாண்டிற்கு உரிய பல்லவர்காலக் காளிகோவிலுக்கும் இக்கட்டிடத் தொகுதிக்கு மிடையே சில அம்சங்களில் ஒற்றுமை காணமுடி கின்றது. அக்கோயில் இதையொத்த கருங்கல் தூண்களையும், செங்கட்டிகளையும் கொண்டு கட்டப்பட்டுள்ளது (படம் 74). இங்குள்ள சிற்பத் தொகுதிக்குரிய அமைப்பில் அங்கு ஒரு கருங்கற் பாகம் காணப்படுகிறது. ஆனால் அதன் மேற்பாகத்தில் உள்ள பள்ளம் அகலமாக ஒரு நீர்த்தொட்டி

போல் உள்ளது. அதன் வெளிப்பாகங்களில் சிற்பங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.[3] இந்த அமைப்பில் பொலநறுவையில் உள்ள சோழர் கால 5ஆம் சிவ தேவாலயத்திலும் ஒரு கருங்கற்பாகம் உள்ளது. இப்பின்னணிகளை வைத்து நோக்கும்போது இங்கு கண்டு பிடிக்கப்பட்ட கட்டிடத் தொகுதி ஓர் ஆலயமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

இக் கட்டடத்திற்குக் கிழக்கே 30 யார் தொலைவில் இன்னுமொரு கட்டிடத் தொகுதி காணப்படுகிறது. இக்கட்டிடத்தில் 16 தூண்கள் நிமிர்ந்த நிலையிலும், பல தூண்கள் உடைந்த நிலையில் மண்ணிற் புதையுண்டும் காணப்படுகின்றன. இக்கட்டிடத்தின் தூண்கள் மேலே கூறப்பட்ட கட்டிடத் தூண்களின் உயரத்தை விடக் குறைவாக இருப்பதுடன் அலங்கார தன்மை குறைந்தும் காணப்படுகின்றன. பரந்த அளவில் கருங்கற் தூண்களும், சுவருக்குப் பயன்படுத்தப்பட்ட செங்கட்டிகளும் நிலத்திற்கு மேலேயும், நிலத்திற்குட் புதையுண்டும் காணப்படுவதால் இதையொரு பெரிய கட்டிடமாகக் கருத இடமுண்டு (படம்- 75). தூண்கள நாட்டப்பட்டுள்ள அமைப்பைக்கொண்டு இக்கட்டிடம் பல அறைகளைக் கொண்டிருந்ததென ஊகிக்க முடிகின்றது. எனினும் இக் கட்டிடத்தின் மையத்தில்



படம் - 75. மூங்குவில் செழியாவில் காட்டு எல்லைப்பகுதியில் கிழக்குப் பக்கமாக வுள்ள கட்டிட அழிபாட்டுத் தொகுதி

மரங்களும், பாம்புப் புற்றுக்களும் காணப்படுவதனால் மேலதிகமாக எதையும் அறியமுடியவில்லை.

இக் கட்டிடத்திற்குச் சில யார் தொலைவில் தென்மேற்காக இன்னுமொரு கட்டிடம் இருந்தற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இக் கட்டிடப்பாணி ஏனைய இரு கட்டிடங்களையும் விடச்சற்று வேறுபட்டதாக உள்ளது. இதன் கட்டிடத்தூண்களின் அடிப்பாகம் சற்சதுரமாக




படம் - 76. மேற்படி (படம் 75) கட்டிடத் தொகுதிக்கு தென்மேற்காகவுள்ள கடடிடத் தொகுதியின் வட்ட வடிவிலான தூண்.

வும், மேல்பாகம் உருண்டையாகவும் இருப்பதுடன் மிகுந்த அலங்கார வேலைப்பாடுகளையும் கொண்டுள்ளது (படம்-76). இந்த அம்சம் இக் கட்டிடம் மிகப்பழைமையானது என்பதற்குச்சான்றாகும். பெரும்பாலான தூண்கள் மண்ணிற்குள் மறைந்து காணப்படுவதால் அதிக விபரங்களைப் பெறமுடியவில்லை. இதுபோல் இதற்குமேற்காக


இருவேறு இடங்களிற் கட்டிடச் சிதைவுகள் மண்ணுக்குள் மறைந்து காணப்படுகின்றன(படம்-77). இந்த இடங்கள் முழுமையாகத் தொல்லியல் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்படுமானால் அரிய பல சான்றுகளைக் கண்டுபிடிக்க வாய்ப்புண்டு.

மூங்குவிலுக்குக் கிழக்கே இரு மைல் தொலைவில் உள்ள நீராவியில் நான்கு கட்டிடத் தொகுதிகளின் அழிபாடுகள் காணப்படுகின்றன. இவற்றுள் இரு கட்டிடத் தொகுதிகள் மிகப்பெரியன




படம் - 77. மேற்படி (படம் 76) கட்டிடத் தொகுதிக்கு மேற்காகவுள்ள இன்னொரு கட்டிட அழிபாட்டுத் தொகுதி.

வாக இருப்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. இவற்றுள் வடமேற்கிலமைந்த முதலாவது கட்டிடம் ஏறத்தாழ 22' நீளமும், 20' அகலமும் கொண்டது (படம்-78). இக்கட்டிடத்தின் பல தூண்களின் பெரும்பாகம் மண்ணிற் புதையுண்டிருக்க, சில அடி உயரம் மட்டும் வெளியே தெரிகின்றது. இது மூன்று அறைகளாகப் பிரிக்கப்பட்டு மேற்காக அமைந்த வாசற்பகுதி மட்டும் ஒடுக்கமாக அமைக்கப்பட்டிருந்தது என்பதைத் தூண்கள் நாட்டப்பட்டுள்ள அமைப்பைக் கொண்டு தெளிவாக அடையாளம் காணமுடிகிறது. தூண்களை ஆதாரமாகக்கொண்டு அமைக்கப்பட்ட செங்கட்டிச் சுவர்கள் முற்றாக இடிந்து விழுந்து மண்மேடுகளாகச் சுவர்ப்பகுதி அத்திவாரங்களிற் காணப்படுகின்றன. இவ்வழிபாடு




படம் - 78. நீராவியிலுள்ள கட்டிட அழிபாடுகள்.

களிடையே கைவிரல் அடையாளமிடப்பட்ட சதுரமான செங்கட்டி ஓடுகள் காணப்படுகின்றன. இவற்றின் அடிப்பாகத்தில் கட்டுவதற்கு இடப்பட்ட துளைகள் காணப்படுகின்றன (படம்-79). இத்தகைய ஓடுகள் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் புராதன வரலாற்று மையங்களிற் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



படம் - 79. மேற்படி (படம். 78) கட்டிடத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்ட புராதன ஓடுகள்.

இக்கட்டிடத்திற்குக் கிழக்கே 50 யார் தொலைவில் இன்னுமொரு கட்டிடத்தொகுதி காணப்படுகிறது. இது முழுக்கமுழுக்கச் செங்கட்டிகளைக்கொண்டு அமைக்கப்பட்ட கட்டிடமாகும். இக்கட்டிடப்பகுதிகளில் இருந்து செங்கட்டிகளிற் செதுக்கப்பட்டுள்ள விநாயகர் புடைப்புச் சிற்பமும் (படம்-80), சுதையினாற் செய்யப்பட்ட விமானம்தாங்கிப் பொம்மையும் எமது ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது (படம்-81). அத்துடன் இக்கட்டிட மரநிழலின்கீழ் இங்கிருந்து கிடைத்த கருங்கல்லினாலான விநாயகர் சிற்




படம் - 80. நீராவி கட்டிட அழிபாடுகளிடையேயிருந்து எடுக்கப்பட்ட விநாயகர் சிலை.

பத்தை வைத்து வேட்டையில் ஈடுபடுவோர் இன்றும் வழிபட்டு வருகின்றனர். இக் கட்டிடத்திற்கு வடக்கெல்லையில், சிறியகேணி ஒன்று இடிந்த நிலையிற் காணப்படுகின்றது. இவைகளை ஆதாரமாக வைத்து இதையொரு சிறிய விநாயகர் ஆலயமாகக் கருதுவதற்கு இடமுண்டு.

இக் கட்டிடங்களுக்குத் தெற்கே 1/2 மைல் தொலைவில் வேறு இரண்டு கட்டிட அழிபாடுகள் காணப்படுகின்றன. இவ்விரண்டு கட்டிடங்களின் சிதைவுகளும் அங்குள்ள ஒரு குளத்தின் இருமருங்கிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவை பழைமையான நிரந்தரக் கட்டிடங்கள் என்பதைப் பரவலாகக் குளமேட்டிற் புதைந்து காணப்படும் செங்கட்டிகள் உறுதிப்படுத்துகின்றன. தற்போது இப்பிராந்தியத்திற் புதிய குடியேற்றங்கள் ஏற்பட்டு விவசாயம் செய்யப்படுவதனால் பழைய கட்டிடங்களை அண்டிப் புதியகுளம் வெட்டப்பட்டிருக்கலாம் அல்லது நீராடும் தேவைக்காக ஆதியில் குளமேட்டில் இக்கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருக்கலாம்.

நீராவிக்கும், செழியாவிலுக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலுள்ள காடுகள் அழிக்கப்பட்டு பரந்த அளவில் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்விடமே தென்னியங்குளக் குடியேற்றத்திட்டம் எனப்படும். இங்குள்ள புதிய அரச கட்டிடம் ஒன்றிற்கு முன்னால், பழைய கட்டிடமொன்று இருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இதிலிருந்த தூண்கள் அனைத்தும் உடைக்கப்பட்டு வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பதனால் இதன் அடிப்பாகங்களை வைத்தே இங்கொரு கட்டிடம்



படம் - 81. நீராவி கட்டிட அழிபாடுகளிடையேயிருந்து எடுக்கப்பட்ட விமானந்தாங்கிப் பொம்மை.

இருந்ததெனக் கூறமுடிகின்றது. பத்துத் தூண்களைக் கொண்ட இக்கட்டிடம் கிழக்குப்பக்க வாசலை உடையதாக உள்ளது. இதன் சுவர்கள் செங்கட்டிகளைக் கொண்டு கட்டப்பட்டன எனத் தெரிகின்றது தற்போது இக்கட்டிடத்தின் மத்தியில் உயரமாக வளர்ந்துள்ள மரத்தின்கீழ் அம்மன் சிலையொன்றை வைத்து அவ்வூர் மக்கள் வணங்கிவருகின்றனர்.

மேற்கூறப்பட்ட கட்டிடத் தொகுதிகளைத் தவிர மூங்குவில், செழியாவில் காட்டுப் பகுதியின் தென்மேற்கு எல்லையில் உயர்ந்த கருங்கற் தூண்களும், அவற்றின்மீது கருங்கல்லால் ஆன வளைவும் கொண்ட (Arch) பிரதான வாசலைக் குறிக்கும் கட்டிடத் தொகுதியொன்றும் இருப்பதாகத் தெரியவருகின்றது. இது உண்மையென்பதை வேட்டையில் ஈடுபட்ட பலர் நம்மிடம் கூறியதிலிருந்து நிச்சயப்படுத்த முடிகின்றது.

## இராசதானியின் தலைநகரா?

மேற்கூறப்பட்ட கட்டிடத் தொகுதிகளை நோக்கும்போது இவை அனைத்தையும் ஆலயங்களாகவோ, ஆலயத்துடன் கூடிய மக்கள் இருப்பிடங்களாகவோ கருத முடியாதிருக்கின்றது. சில கட்டிடங்களை ஆலயமாகக்கொண்டாலும் ஏனையவற்றை மக்கள் இருப்பிடமாகக்கொள்ள முடியாது. அந்த நோக்கில் இலங்கையின் பிறபாகங்களில் ஆதியில் இவ்வாறான கட்டிடங்கள் அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் ஆலயங்களுடன் ஓர் அரசின் இராசதானி அல்லது இராசதானியின் தலைநகர் இருந்ததற்கு ஆதாரங்கள் உண்டு. யாழ்ப்பாண இராசதானியின் தலைநகரான நல்லூரிற்கூட இந்த அம்சமே காணப்பட்டது. இதனால் இங்குள்ள கட்டிட அழிபாடுகளை ஓர் இராசதானியாக அல்லது அரசின் தலைநகராகக் கொள்வதே பெருமளவுக்குப் பொருத்தமாகும்.

## கட்டிடங்கள் தோன்றிய காலம்

இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் கருங்கற்களையும், செங்கற்களையும் பயன்படுத்திக் கட்டிடம் அமைக்கும் மரபு கி. பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சி அடைந்து வந்ததைக் காணலாம். பூநகரியில் 15ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் போர்த்துக்கேயரோ அல்லது ஒல்லாந்தரோ இக் கட்டிடத்தைக் கட்டியிருப்பார் எனக் கூறுவதற்கு எதுவித சான்றுகளும் காணப்படவில்லை. அதேவேளை இத்தகைய கட்டிடமரபு அவர்களாட்சியில் பின்பற்றப்பட்டதற்கு இலங்கையின் பிறபாகங்களிலும் சான்றுகள் காணப்படவில்லை. இதனால் இங்குள்ள கட்டிடங்களை மேலெழுந்தவாரியாக கி. பி. 6க்கும் கி. பி. 15க்கும் இடைப்பட்ட காலத்தனவெனக் கொள்ளலாம். சோழரால் அநுராதபுரம் வெற்றி கொள்ளப்படுவதற்கு முன்னர் இதற்கு வடக்கிலமைந்த உத்தர தேசத்தில் தனியொரு சுதந்திர அரசு இருந்ததற்கோ அல்லது இவ்வுத்தரதேசத்தை அநுராதபுர மன்னர்கள் தொடர்ந்தும் தமது மேல்ஆதிக்கத்தில் வைத்திருந்ததற்கோ போதிய சான்றுகள் காணப்படவில்லை. இதனால் பூநகரியிலுள்ள கட்டிட அழிபாடுகளை கி. பி. 10ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டன எனக் கூறுவது தற்போது கடினமாகவே தோன்றுகிறது. ஆகவே பூநகரியிலுள்ள கட்டிடங்களின் தோற்றக்காலத்தை மேலும் 10ஆம் நூற்றாண்டுக்கும் 15ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாகச் சுருக்கிக்கொள்ளலாம். 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் அரசொன்று தோன்றி, 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை வடக்கிலும், கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதியிலும் அவ்வரசு மேலாதிக்கம் செலுத்துவதற்குப் போதிய சான்றுகளுண்டு. இதனாலே பூநகரியிலுள்ள கட்டிடங்கள் 13ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாண அரசுக்காலத்திற் கட்டப்பட்டிருக்குமெனக் கூறமுடியாது. அவ்வாறு கட்டப்பட்டிருக்குமாயின் அதுபற்றி யாழ்ப்பாண அரசு தொடர்பாகத்தோன்றிய தமிழிலக்கியங்கள் ஒன்றிலாவது குறிக்கப்பட்டிருக்கும். 10ஆம் நூற்றாண்டில் பொலநறுவையில் ஏற்பட்ட சோழராட்சிக்கும் 13ஆம் நூற்றாண்டிற் பொலநறுவையிலிருந்து தம்பதேனியாவிற்குச் சிங்கள இராசதானி மாற்றப்படுவதற்கும் இடைப்பட்ட காலத்திற் பொலநறுவையில் ஆட்சிசெய்த சிங்கள மன்னர்களது அரசியல் ஆதிக்கம் உத்தரதேசத்தில் ஏற்பட்டதற்கும் சான்றுகளில்லை. மாறாக உத்தரதேசத்திலிருந்த தமிழ்ப்படையினர் பொலநறுவையைக் கைப்பற்றியதற்குப் பாளி இலக்கியங்களிற் சான்றுகளுண்டு. இதனாலே பூநகரியிலுள்ள கட்டிடங்

களின் தோற்ற காலத்தின் கீழ் எல்லையாகப் பத்தாம் நூற்றாண்டையும், மேலெல்லையாகப் 13ஆம் நூற்றாண்டையும் எடுத்துக்கொள்வது பொருத்தமாகத் தெரிகிறது. அவ்வாறு கூறுவதற்குரிய சான்றுகள் சிலவற்றை இங்கு எடுத்து நோக்கலாம்.

## கலிங்கமாகன் அரசும், பூநகரிக் கட்டிட அழிபாடுகளும்

தமிழ்மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களில் ஒன்றான யாழ்ப்பாணத்தில் 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிற் சுதந்திர அரசை அமைத்துக் கொண்டார்கள் என்பதை இந்திரபாலா தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார்.[4] ஆனால் இவ்வரசு தோன்ற முன்னர் கலிங்கமாகன், சந்திரபானு (சாகவன்), இவன் மைந்தன், பாண்டியப் பிரதானிகள் ஆகியோரது அரசு ஒன்று வடஇலங்கையில் இருந்ததற்குச் சான்றுகள் உண்டு. இவ்வரசு எங்கு இருந்ததென்பதை வரலாற்று அறிஞர்கள் அடையாளம் கண்டதாகத் தெரியவில்லை. இவ்வரசும் இவ்வரசுக்கான கோட்டைகளும், இவ்வரசின் தமிழ், கேரளப் படைகளும் நிலைகொண்டிருந்த இடங்கள் பற்றிப் பாளி இலக்கியங்களும், பாண்டியரது கல்வெட்டுக்களும் கூறுகின்றன. இவ்விடப் பெயர்களை ஆதாரமாகக் கொண்டு இவ்வரசு பூநகரியிலிருந்திருக்கலாம் என அடையாளம் காணமுடிகிறது. அதற்கு முன்னோடியாக இம் மன்னர்களது ஆட்சிபற்றிச் சிறிது நோக்குவது அவசியமாகும்.

சிங்கள அரசவம்சங்களுக்கும் இந்திய அரசவம்சங்களுக்குமிடையே ஏற்பட்ட அரசியல், திருமணத் தொடர்பு காரணமாக, தமிழ்நாட்டு வம்சங்களைப் போலக் கலிங்கநாட்டு வம்சங்களைச் சேர்ந்த சிலர் பொலநறுவையில் அரசாட்சி செய்யும் உரிமையைப் பெற்றனர். இவர்கள் கலிங்கநாட்டவராக இருந்த போதிலும் இலங்கையிலே தம்மை ஒரு பௌத்த காவலராகவும், சிங்களமக்களது உறவினர்களாகவும் காட்டிக் கொண்டனர். இதனாற் பல எதிர்ப்பின் மத்தியிலும் நிசங்கமல்லன் போன்ற கலிங்க மன்னர்கள் சில காலமாவது பொலநறுவையில் ஆட்சி செய்ய முடிந்தது. கலிங்கமாகன் கலிங்கநாட்டைச் சேர்ந்த ஒருவனாக இருந்த போதிலும் ஏனைய கலிங்க மன்னர்கள் பெற்ற ஓரளவு ஆதரவைத்தானும் இவன் பௌத்த சிங்கள மக்களிடையே பெறவில்லை.

கி. பி. 1215 இலே தென்னிந்தியாவிலிருந்து $20000$ தமிழ், கேரளப்படைகளுடன் இலங்கை மீது படையெடுத்த கலிங்கமாகன் பொலநறுவையைக் கைப்பற்றி 21 வருடங்களுக்கு மேல் ஆட்சி செய்தான். பாளி இலக்கியங்கள் இவனது ஆட்சியை இலங்கை வரலாற்றில் இருள் சூழ்ந்த காலமாகவே வருணிக்கின்றன. இதற்குக் காரணம் இவன் பௌத்த சிங்கள மக்களுக்கு எதிரான ஆட்சியை நடத்தியதேயாகும். சூளவம்சம் இவன் சிங்களவருக்குச் சொந்தமான கிராமங்கள், வயல்கள், வீடுகள், தோட்டங்கள், அடிமைகள், மாடுகள், எருமைகள் ஆகியவற்றைப் பறித்துத் தன் படைவீரர்களுக்குக் கொடுத்தான் எனவும் விகாரைகள், வழிபாட்டிடங்கள் முதலியவற்றைத் தனது தமிழ், கேரளம் படைவீரர்களின் இருப்பிடங்களாக மாற்றினான் எனவும் கூறுகிறது [5] சில இடங்களில் இவனை ஒரு தமிழ் மன்னாகவும், பௌத்தத்திற்கு மாறான மதக் கோட்பாட்டைப் பின்பற்றினான் எனவும் இந்நூல் கூறுகிறது. கைகர் பௌத்தத்திற்கு மாறான மதம் என்பது இந்து மதத்தைக் குறித்ததாகக் கூறுகிறார். இவனை ஒரு வீரசைவனாகக் கூறும் வரலாற்று ஆசிரியர்கள் மட்டக்களப்பில் இம்மதம் வளர்ச்சியடைய இவனே காரணம் என்பர்.

கலிங்கமாகனது ஆட்சி தமிழருக்குச் சார்பாக இருந்ததனால் இவன் மீது வெறுப்படைந்த சிங்கள மக்கள் 250 ஆண்டுகள் தலைநகராக விளங்கிய பொலநறுவையைக் கைவிட்டுத் தெற்கு நோக்கி நகரத் தொடங்கினர். இதன் விளைவாகப் புதிய சிங்கள இராசதானியாகத் தம்பதேனியா தோற்றம் பெற்றது. இதன் மன்னனாகவிருந்த இரண்டாம் பராக்கிரமபாகு பாண்டியரின் உதவியைப் பெற்றுப் பொலநறுவையில் ஆட்சி செய்து கொண்டிருந்த கலிங்கமாகனை அகற்றியதாகக் கூறப்படுகிறது.[6] ஆயினும் முன்னரைப் போலச் சிங்கள மன்னர்கள் பொலநறுவையிலிருந்து ஆட்சி செய்ய முடியவில்லை. இதற்குக் காரணம் பதவி நீக்கப்பட்ட

கலிங்கமாகன் சிங்கள மன்னர்களுக்கு எதிரான அரசொன்றை வட இலங்கையில் அமைத்திருந்ததேயாகும்.

வரலாற்று ஆசிரியர்களினால் கலிங்கமாகனது அரசு எங்கிருந்ததென்பதை அடையாளம் கண்டு கொள்ளமுடியாவிட்டாலும், சூளவம்சம் இம் மன்னனுக்குச் சார்பான தமிழ் கேரளப் படைகள் நிலை கொண்டிருந்த இடங்களைக் கூறுகிறது. அவற்றுட் கோட்டசாறா, கண்கதாத, காகால, பதி, குருந்தி, மகாதீர்த்த, மன்னரப் பட்டினம், புலச்சேரி, வலிகாமம், கோணா, மடுபாத பதித்த, சூறதீர்த்த முதலிய இடங்கள் குறிப்பிடத்தக்கன.[7]

இதிற் கூறப்பட்டுள்ள மன்னாரப்பட்டினம் (மன்னார்), மகாதீர்த்த (மாதோட்டம்), புலச்சேரி, வலிகாமம், குருந்தி, மடுபாதபதித்த (இலுப்பைக்கடவை), சூறதீர்த்த (ஊர்காவற்றுறை) முதலான இடங்கள் பூநகரியுள்ளிட்ட வடமேற்கு இலங்கையில் அமைந்துள்ள இடங்கள் என்பதை இலகுவாக அடையாளம் காணமுடிகிறது. வலிகாமம் என்ற இடம் தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பகுதியைக் குறித்தாலும், சோழராட்சிக் காலத்தில் இது மன்னருக்கு ஐந்து மைல் தொலைவிலுள்ள ஓரிடமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ்விடங்களிற் சில பூநகரிக்கட்டிட அழிபாடுகளுக்கு மேலும் மிக அருகில் அமைந்திருப்பதை இங்கு எடுத்துக் காட்டலாம்.

பூநகரிக் கட்டிட அழிபாடுகளுக்குத் தெற்கே குருந்தன் குளம் என்ற பழைய கிராமம் ஒன்று உள்ளது. சூளவம்சத்தில் வரும் கலிங்கமாகன் படைகள் நிலைகொண்ட குருந்தியென்ற இடத்தை இக்குருந்தன் குளத்தோடு தொடர்பு படுத்திப்பார்க்க இடமுண்டு. காகால (பாளியில் சாகங்கள் தங்கும் வீடு அல்லது இடம் என்ற பொருள்படும்) என்ற இடத்தைச் சிலர் கொக்காவில் எனவும் வேறுசிலர் கட்டுக்குளம் எனவும் அடையாளம் கண்டுள்ளனர்.[8] ஆனால் பூநகரிக் கட்டிட அழிபாடுகளுக்கு மிக அருகே காக்கையன் குளம் என்ற கிராமம் இருப்பதனால் அவ்விடத்தையே இது குறித்ததெனக் கூறுவது பெருமளவு பொருத்தமாகும். கோண என்ற இடத்தைச் சிலர் திருக்கோணமலையென அடையாளம் கண்டுள்ளனர்.[9] இவ்விடம் சிலவேளை பூநகரியிலுள்ள கோணாமலை அல்லது கோணாவில் போன்ற இடங்களில் ஒன்றைக் குறித்திருக்கலாம். இதிற் கூறப்பட்டுள்ள மற்றுமோர் இடமான புலச்சேரி பூநகரியில் உள்ளதென்பதை நான்காம் இயலிற் கூறியுள்ளோம். மாகனின் அரசியல் நடவடிக்கை தொடர்பான இடங்களை நோக்கும்போது அவற்றுட் பெரும்பாலானவை பூநகரிக்கும், மன்னாருக்குமிடையில் சிறப்பாகப் பூநகரியில், இருந்தன வெனக் கூறலாம். இவற்றின் அமைவிடங்களிற் சில கலிங்கமாகனுக்குத் தேவையான படைவீரர் களைத் தமிழ் நாட்டிலிருந்து கடல்வழியாக இங்கு கொண்டுவர வாய்ப்பாக இருந்துள்ளது. அதனால்தான் அவனது முக்கிய கோட்டைகளில் ஒன்று ஊர்காவற்றுறையில் இருந்துள்ளது.

## சந்திரபானு மன்னன் ஆட்சி

கலிங்கமாகனது அரசு வடஇலங்கையிலிருந்த போது சந்திரபானு என்னும் சாவக இளவரசன் தம்பதேனிய அரசுமீது படையெடுத்து 2ஆம் பராக்கிரமபாகு மன்னனிடம் தோல்வியடைந்த தாகத் தெரிகிறது.[10] ஆயினும் இவன் கலிங்கமாகனிடம் அடைக்கலம் பெற்றோ அல்லது அவன் ஆதரவைப் பெற்றோ கலிங்கமாகனின் பின் வடஇலங்கையை ஆட்சி செய்ததாகத் தெரிகிறது.[11] இரண்டாவது தடவை இவன் தம்பதேனிய அரசுமீது படையெடுத்தபோது வட இலங்கையின் சுதந்திர மன்னனாக இருந்தே படையெடுப்பை மேற்கொண்டான் எனத் தெரிவிக்கிறது. சூளவம்சம் இவன் சிங்கள அரசுக்கு எதிராகப் படையெடுக்க முன்னர் தென்னிந்தியாவிலிருந்து பாண்டிய, சோழப்படைகளுடன் மாதோட்டத்தில் வந்திறங்கிப் பதி, குருந்தி மாவட்டங்களில் உள்ள மக்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டதாகக் கூறுகிறது[12] வரலாற்று ஆசிரியர்கள் சிலர் இதிற் கூறப்பட்டுள்ள குருந்தியென்ற இடத்தைப் பதவியாவுக்குக் கிழக்கே கடற்கரையாகவுள்ள குருந்தனூர்மலையென அடையாளம் கண்டுள்ளனர். இக்காலத்தில் இப்பிராந்தியத்திற்கும், தென்னிந்தியாவிற்குமிடையே நேரடிக் கடல் வழித் தொடர்புகள் இருந்திருக்கலாம் என்பதற்குச் சான்றுகளுண்டு. இதனால் சந்திரபானுவுக்

குச் சார்பான படைகள் மாதோட்டத்தில் வந்திறங்கித் தரைவழியாகப் பதவியாவுக்கு கிட்டவுள்ள குருந்தனூர் மலைக்குச் சென்றிருக்கும் எனக் கூறமுடியாது இதனால் இவ்விடத்தைப் பூநகரிக்கட்டிட அழிபாடுகளுக்குத் தெற்கே மாந்தைக்கு வடக்காகவுள்ள குருந்தன்குளம் என அடையாளம் காண்பது பொருத்தமாகும். இதிற் கூறப்பட்டுள்ள பதி என்ற மற்றொரு இடத்தைப் பதவியா என அடையாளம் கண்டுள்ளனர். ஆயினும் அது பதவியாவைத்தான் குறித்திருக்குமெனக் கூறமுடியாது. அதேவேளை இப்பெயர் கொண்ட இடம் பூநகரிக்கும் மாந்தைக்குமிடையே இருந்திருக்காது எனவும் தற்போது கூறமுடியாதிருக்கிறது.

சந்திரபானு காலத்தில் இலங்கையில் இரு அரசுகள் இருந்தது பற்றிப் பாளி இலக்கியங்களில் நேரடியான சான்றுகள் காணப்படாவிட்டாலும், சமகாலப் பாண்டியக் கல்வெட்டுக்களில் உறுதியான சான்றுகள் காணப்படுகின்றன இவற்றுள் 1263 இலும் 1264 இலும் பொறிக்கப்பட்ட இரு கல்வெட்டுக்கள் இலங்கையில் இரு மன்னர்கள் இருந்தார்கள் எனவும், அவர்களுள் ஒருவன் சாவகன் (சந்திரபானு) என்பதையும் அறிவிக்கின்றன. இதில் 1264 இற் பொறிக்கப்பட்ட குடும்மியமலைக் கல்வெட்டிலே வீரபாண்டியன் இலங்கைமீது படையெடுத்தது பற்றி விரிவான சான்றுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டிலிருந்து நாம் பெறக்கூடிய சான்றுகள் பற்றி நீலகண்ட சாஸ்திரி கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

> ''இலங்கையில் ஏதோ ஒரு தகராறு தோன்றியதென்றும் அமைச்சர்களுள் ஒருவன் பாண்டியர்களைக் கேட்டிருந்தான் என்றும், மன்னனின் நோக்கம் (வீரபாண்டியன்) பழைய அரசியல் முறையை முறைப்படி நிலைநாட்டுவதே என்றும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது. ஈழத்து மன்னர்களில் ஒருவன் போர்க்களத்திலே கொல்லடபட்டான் என்றும் அவனுடைய படைகள், செல்வம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன என்றும் அதன் பின் இரட்டைக்கயல் (பாண்டிய இலச்சினை) திரிகூடகிரியிலும், கோணமலையிலும் பறக்கின்ற கொடிகளிலே பொறிக்கப்பட்டதென்றும் (இலங்கையில்) இன்னொரு மன்னன் நன்யானையைத் திறையாகக் கொடுத்து, சரணடைய நேரிட்டதென்றும் மேலும் கூறப்பட்டது. இறுதியாக முன்னர் கட்டளையை மீறிப் பகைமைகாட்டி நின்ற சாவகன் மைந்தன் (வீரபாண்டியன் முன்னிலையில்) வந்து வீழ்ந்து வணங்கி உரிய வெகுமதியைப் பெற்றான் என்றும் கூறப்பட்டது. சாவகனுடைய மைந்தனுக்கு வீரக்கழல் வழங்கப்பட்டு அவன் யானையில் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டான் என்றும், முன்னர் தந்தையாண்ட பரந்த இலங்கையைத் தனயன் ஆள்வது முறையென எண்ணி அவனை உடனடியாக அனுரதபுரிக்கு செல்ல அனுமதித்தான் என்றும் இவ்வாசகத்தை வாசித்து என்னால் விளங்கக் கூடியதாக இருக்கின்றது".13

இதிலிருந்து இரு மன்னர்களிடையே ஏற்பட்ட தகராற்றைத் தீர்க்க ஓர் அமைச்சன் (சிங்கள அரசின்) பாண்டியர் உதவியை நாடினான் என்பதும், இதில் ஒரு மன்னன் (சந்திரபானு) போர்க்களத்திற் கொல்லப்பட மற்ற மன்னன் பாண்டியருக்குப் பணிந்து திறை கொடுத்தான் என்பதும், இவனைப்போல் சந்திரபானுவின் மைந்தனும் பாண்டியரின் மேலாண்மையை ஏற்று அரசமைத்தான் என்பதும் தெரியவருகின்றன.

இக்கல்வெட்டு, சாவகனைக் கொன்ற பாண்டியர் தமது இரட்டைக் கயல் பதித்த இலச்சினையை வடஇலங்கையிற் கோணாமலையிலும், திரிகூடகிரியிலும் பறக்கின்ற கொடிகளிற் பொறித்ததாகக் கூறுகிறது. பூநகரி தென்னியங்குளக் கட்டிட அழிபாடுகளுக்கு வடமேற்கு எல்லையில் கோணாமலை என்ற பழைய கிராமம் உள்ளது. இதற்கும் பாண்டியக் கல்வெட்டுக்களுக்குமிடையே பெயரடிப்படையில் எதுவித வேறுபாடும் காணப்படவில்லை. இதிற் கூறப்பட்டுள்ள திரிகூடகிரி என்ற இடம் எது என்பதை யாரும் அடையாளம் கண்டதாகத் தெரியவில்லை இக்கல்வெட்டில் சாவகன் ஆட்சி செய்த வடஇலங்கை ஈழம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஈழம் என்பது சில இடங்களில் முழு இலங்கைறைக் குறித்தாலும் பல இடங்களில் இலங்கை

யின் ஒரு பாகத்தையும் குறித்துள்ளது. உதயணன் பெருங்கதையில் இலங்கை என்ற நாடு ஈழம், சிங்களம் என வேறுபடுத்திக் கூறப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.[14] பூநகரியில் கலிங்கமாகனது படைகள் நிலைகொண்டிருந்த புலச்சேரிக்குக், கிழக்கே ஈழஊர் என்ற பழைய கிராமமும், இதன் தென்னெல்லையில் ஈழவன் குடா என்ற துறைமுகமும் அமைந்துள்ளன. இதற்குச் சற்றுக் கிழக்கே சாவகனைக் கொன்ற வீரபாண்டியனை நினைவுபடுத்தும் வீரபாண்டியன் முனை என்ற கிராமம் உள்ளது. இவ்வொற்றுமைகளை அடிப்படையாக வைத்து வீரபாண்டியன் படைகள் வெற்றி கொண்ட சாவகமன்னனது அரசு பூநகரியில் இருந்திருக்கலாமெனக் கூற இடமுண்டு.

## பாண்டிய மன்னர்களது ஆட்சி

சந்திரபானுவின் மைந்தனை ஆட்சியிலமர்த்திய பாண்டியர் சிறிது காலத்தில் அவனையும் நீக்கிவிட்டுத் தாங்களே வட இலங்கையை ஆட்சி செய்ததாகத் தெரிகிறது. இதைப் பாண்டிய மன்னர்கள் ஆண்டார்கள் என்பதைவிட அவர்களின் பிரதிநிதிகளில் ஒருவன் ஆண்டான் எனக் கூறலாம். இதனோடு கைலாய மாலையில் வரும் கூற்றைத் தொடர்புபடுத்திக் காட்டலாம். கைலாய மாலையின் கூற்றுப்படி யாழ்ப்பாண அரசின் முதல் மன்னனான சிங்கையாரியன் இங்கு வருவதற்கு முன்னால் அவன் பிரதிநிதியாகப் பொன்பற்றியூரைச் சேர்ந்த பாண்டியமழவன் இங்கு வந்ததாகத் தெரிகிறது.[15] கைலாயமாலையில் வரும் இக்கூற்றைப் புனைகதையென்றோ கற்பனையென்றோ கூறமுடியாது. பொன்பற்றியென்பது தென்பாண்டிமிழலைக் கூற்றத்தைச் சேர்ந்த பேரூரென்பதைப் பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டிய மன்னர்களின் ஆவணங்களில் இருந்து அறிய முடிகிறது.[16] மேலும் பாண்டிய மழவன் மட்டுமன்றி மழவச் சக்கரவர்த்தி, மழவராயர் என வழங்கிய பாண்டியப் பிரதானிகள் பலர் பொன்பற்றியூரில் இருந்ததாகத் தெரிகிறது. இதனால் பாண்டிய மழவனுக்கு முன்பே வேறு பாண்டியப் பிரதானிகள் சாவகமைந்தனின் ஆட்சியை நீக்கிவிட்டு அதிகாரத்தைத் தம் வசப்படுத்திக் கொண்டனர் எனக் கூறலாம். அவ்வாறு கூறுவதற்கு மேற்கூறப்பட்ட காரணங்களோடு பாண்டியர் ஆட்சியை நினைவுபடுத்தும் பல இடப்பெயர்கள் தென்னியங்குளப் பிரதேசத்தைச் சுற்றிவர இருப்பதும் இவ்வாறு கருதக் காரணமாகும்.

இன்று தென்னியன் குளம் என வழங்கும் இடப்பெயர் முன்பு தென்னவன்குளம் என்ற பெயரில் இருந்து மருவிய வடிவம் எனக் கூறலாம். தென்னவன் என்பது பாண்டியரைக் குறிப்பதாகும். வரலாற்றில் பாண்டியர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட இடங்கள் தென்னவன் குடி, தென்னவன் பட்டி, தென்னவன்நல்லூர், தென்னவ நாடு எனப்பெயர் பெற்றிருந்தமை இதற்குச் சான்றாகும்.[17] தென்னியன் குளத்தின் தொடர்ச்சியாகப் பாண்டியன் குளமும், பாண்டியன் கல்லு என்ற கிராமமும் அமைந்திருப்பது மேலும், தென்னியன் குளத்தைப் பாண்டியரோடு தொடர்புபடுத்தச் சான்றாக அமைகிறது. இங்கு கண்டு பிடிக்கப்பட்ட இராசதானிக்குரிய கட்டிட அழிபாடுகளில் ஒன்று செழியாவில் காட்டுப் பகுதியில் உள்ளது. செழியர், செழியன் போன்ற பெயர்கள் பாண்டியர்களைக் குறிக்கப்பயன்படுத்தப்பட்டதை கல்வெட்டுக்களிலும், இலக்கியங்களிலும் காணலாம். இராசாதிராசன் காலத்திருவாலங்காட்டுச் சாசனம் ஒன்று அவன் பாண்டியரை வெற்றி கொண்டதற்காக ''செழியரைத் தேசு கொள் கோவிராச கேசரி வர்மன்'' எனச் சிறப்பித்துக் கூறுவதை இங்கு உதாரணமாகக் காட்டலாம்.[18] கைலாயமாலை சிங்கையாரியனுக்கு முன் யாழ்ப்பாணத்தை ஆளவந்த பாண்டியமழவன் பொன்பற்றியூரைச் சேர்ந்தவன் எனக் கூறுகிறது. தென்னியங்குளத்திற்குத் தெற்கே மன்னாருக்குக் கிட்டவுள்ள ஓர் இடம் பொன்பரப்பி என அழைக்கப்படுகிறது. இப்பெயர் தென்பாண்டி நாட்டில் உள்ள பொன்பற்றியூருடன் கொண்ட தொடர்பால் இங்கு ஏற்பட்டு, பிற்காலத்தில் பொன்பரப்பி எனத் திரிபடைந்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது.

இதற்கு மேலும் சான்றாகப் பூநகரிப் பிராந்தியத்திற் கிடைத்த பாண்டிய நாணயங்களை எடுத்துக்காட்டலாம். இந் நாணயங்கள் பூநகரிக்கும் பாண்டி நாட்டிற்குமிடையே இருந்த வர்த்தக, கலாசாரத் தொடர்பு காரணமாக பூந

கரிக்கு வந்திருக்க வாய்ப்பிருந்தாலும், அதில் அரசியல் மேலாதிக்கமும் முக்கிய டங்கு வகித் ததை வட இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாறு தல்கள் எடுத்தியம்புகின்றன.

இரண்டாம் பாண்டியப் பேரரசுகால மன் னர் ஆட்சியில் பொன்னாலும், செம்பாலும் செய்யப்பெற்ற காசுகள் வழக்கிலிருந்ததைக் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. இம் மன் னர்கள் வெளியிட்ட நாணயங்களில் மன்னர் களின் சிறப்புப் பெயரே நாணயங்களின் பெயர் களாக இருந்துள்ளன. பாண்டிய மன்னர்களுள் முதலில் இலங்கையை வெற்றி கொண்ட ஸ்ரீ மாறஸ்ரீவல்லபன் காலத்தில் வழங்கிய நாணயம் ''அவனிப சேகரன் கோளகை'' என்ற பெயரு டையதாக இருந்தது. இவனுக்கு அவனிப சேக ரன் என்னும் சிறப்புப் பெயர் ஒன்று உண்டு என் பது புதுக்கோட்டை நாட்டில் சிற்றண்ணவாசல் என்ற ஊரிலுள்ள கல்வெட்டால் புலப்படுகின் றது. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் ''சோனாடு கொண்டான்'' என்ற நாணயமும், முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் ''எல்லாள் தலைய னவன்'' என்ற நாணயமும், வீரபாண்டியன் காலத்தில் ''வாளால் வழித்திறந்தான் குறிகை'' என்ற நாணயமும் வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. மேற்குறிப்பிட்ட மூன்று மன்னர் களது ஆட்சியிலுமே பாண்டியரின் மேலாதிக்கம் தமிழ் நாட்டில் மட்டுமன்றி இலங்கையிலும் ஏற் பட்டிருந்தது.

பூநகரியிற் பாண்டிய மன்னர்கள் வெளியிட்ட நான்கு வகையான நாணயங்கள் எமது ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதலாவது வகை நாணயம் தமிழில் பழனி என்ற பெயர் கொண்டு காணப்படுகிறது. இந் நாண யம் பத்தாம் நூற்றாண்டுக்கு முன்னர் அதாவது முதலாவது பாண்டிய அரசு காலத்தில் வெளி யிடப்பட்டதாகத் தெரிகிறது (56 ஆம் பக்கம் பார்க்கவும்). ஏனைய மூன்று நாணய வகைகளும் இரண்டாம் பாண்டியப் பேரரசு காலத்தில் (12 ஆம், 13 ஆம் நூற்றாண்டுகளில்) வெளியிட டப்பட்டவையாகும்.

இவற்றுள் முதலாவது நாணய வகையைச் சேர்ந்த இரு நாணயங்கள் பூநகரியிலுள்ள ஈழ ஊர், மட்டுவில் நாடு ஆகிய இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டவை. இவையிரண்டும் செப்பினால் செய்யப்பட்ட வட்டவடிவிலான சிறிய நாணயங் களாகும். இந் நாணயத்தின் முன் பக்கத்தில் மன்னன் நிற்கும் நிலையில் காணப்படுகிறான். மன்னனின் தோளுக்கு மேலாக உயர்த்தப்பட்ட இடது கையில் தாமரை மலர் போன்ற உருவ மும், அதற்கு இடப்பக்கமாகப் பிறையும், பிறைக்கு சற்றுக் கீழாக மூன்று தடித்த புள்ளி களும் காணப்படுகின்றன. மன்னனின் வலது கரம் தோளுக்குச் சமாந்தரமாக நீட்டப்பட்டி ருக்க அதற்குக் கீழே குத்துவிளக்குப் போன்ற உருவம் காணப்படுகின்றது. நாணயத்தின் மறு பக்கத்தில் மன்னன் இருக்கும் நிலையில் வலப் பக்கமாகச் சற்றுச் சரிந்து காணப்படுகின்றான். மன்னனுக்கு இடப்பக்கமாகப் பாண்டியரின் இலச் சினையான மீன் காணப்படுகிறது (படம் 82), இந்நாணயத்தை வெளியிட்ட பாண்டிய மன் னன் யார் என்பது சரியாகத் தெரியவில்லை. ஆனால் 12 ஆம் 13 ஆம் நூற்றாண்டுகளில் பாண்டிய மன்னர்கள் இவ்வகை நாணயங்கள் வெளியிட்டதற்குப் பல சான்றுகள் தமிழ் நாட்




படம் - 82. பூநகரியிற் கிடைத்த பாண்டிய மன்னர் கால நாணயங்கள்.

டில் காணப்படுகின்றன. இந் நாணயங்களின் அமைப்பும், அதில் இடம் பெற்றுள்ள மன்னன் உருவமும் சோழராலும், பொலநறுவைக்காலச் சிங்கள மன்னர்களாலும் வெளியிடப்பட்ட நாணயங்களைப் பெருமளவுக்கு ஒத்துள்ளன.


இரண்டாவது வகை நாணயம் முதலாவது நாணயத்தை விடச்சற்றுச் சிறியதாகும். இது செப்பு நாணயமாக இருந்தாலும் முதலாவது நாணயத்தைவிடக் கூடிய அளவு பளபளப்புத் தன்மை உடையது. இவ்வகை நாணயங்கள் பூநகரியில் மண்ணித்தலை, வீரபாண்டியன் முனை ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந் நாணயங்களின் முன்பக்கத்தில் விளிம்பைச் சுற்றி வட்டவடிவில்தெளிவான புள்ளிகளும், அவ் வட்டத்தின் நடுவில் மயில்போன்ற பறவையும் காணப்படுகின்றன. நாணயத்தின் பின்பக்கத்தில் விளிம்பைச் சுற்றிப் (நாணயத்தின் மேல்பாகத்தில் மட்டும்) புள்ளிகளும் அதற்குச் சற்றுக்கீழே அம்பு போன்ற உருவமும், இவ்வுருவத்திற்கு முன்னால் தமிழில் சுந்தரபாண்டியன் (சுந்தர) என்ற பெயரும் காணப்படுகின்றன. இப்பெயருக்குக் கீழே நாணயத்தின் மையப்பகுதியில் எழுத்தைப் போன்ற உருவம் காணப்படுகின்றது (படம் - 83).

மூன்றாவது வகை நாணயம் பூநகரியில் பரமன்கிராய் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்நாணயம் மேற்குறிப்பிட்ட இரு நாணயங்களையும்விட அளவில் மிகச்சிறியதாகும். அத்துடன் விளிம்பைச் சுற்றியபகுதி பெருமளவு தேய்ந்தும் காணப்படுகிறது. செப்பினால் செய்யப்பட்ட இந்நாணயத்தின் முன்பக்கத்தில் பாண்டியரின் இலச்சினையான இரட்டை மீனும், நடுவில் குடைப்பிடி போன்ற உருவமும் காணப்படுகின்றன. நாணயத்தின் மறுபக்கததில் தமிழில் சுந்தரபாண்டியன் எனச் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது (படம் - 84).

பாண்டிய மன்னர்களுள் சுந்தரபாண்டியன் என்ற பெயரைப் பல மன்னர்கள் பயன்படுத்தியுள்ளனர். இதனால் மேற்குறிப்பிட்ட இரு நாணயங்களிலும் வரும் பெயர் எந்த மன்னனைக் குறித்ததென்பது தெரியவில்லை. ஆனால் இப்பெயர்களை உடைய பாண்டிய மன்னர்களுள் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சியும் (கி.பி. 1216-1238), முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சியும் (கி.பி. 1251-1271) பாண்டிய வரலாற்றின் எழுச்சிக் காலமாகும். இவர்களுள் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் வட இலங்கையில் இருந்த அரசு பாண்டியரின் மேலாண்மையை ஏற்று ஆட்சி நடத்தியதாகத் தெரிகிறது. இம்மன்னன் காலக் கல்வெட்டு ஒன்று 1257க்கு முன்னர் இலங்கை மன்னனிடம் திறைபெற்றதாகக் கூறுகிறது. இக்காலத்தில் சிங்கள மன்னர்கள் (தம்பதேனியா அரசின்) பாண்டியரோடு நல்லுறவு கொண்டிருந்ததனால் இத் திறையை வடஇலங்



படம் - 83. பூநகரியிற் கிடைத்த சுந்தரபாண்டியன் நாணயங்கள்.



படம் - 84. பூநகரியிற் கிடைத்த சுந்தர பாண்டியன் நாணயங்கள்.

யில் ஆட்சிபுரிந்த மன்னன் கொடுத்திருக்கலாம் எனத்தெரிகிறது. இவனது 1264ஆம் ஆண்டுக் குரிய இன்னொரு கல்வெட்டு பாண்டியரின் மேலாண்மையை ஏற்கமறுத்த வட இலங்கை மன்னன் சாவகனைக்கொன்று அவன் மகனிடம் ஆட்சியுரிமையைக் கொடுத்ததாகக் கூறுகிறது. இப்பின்னணியில் வைத்து நோக்கும்போது பூந கரியில் கிடைத்த சுந்தரபாண்டியன் என்ற பெயர் கொண்ட நாணயங்கள் வட இலங்கை அரசில் மேலாதிக்கம் செலுத்திய மாறவர்மன் சுந்தர பாண்டியனுக்குரியதென்பது தெரியவரு கிறது. இதன் மூலம் பாண்டியர் வெற்றி கொண்ட சாவகன் அரசு பூநகரியில் இருந்த தென்ற கருத்து மேலும் வலுப்பெறுகிறது.

## சோழராட்சி

பூநகரியிலுள்ள கட்டிட அழிபாடுகளைக் கலிங்கமாகனுடனும், பிற்பட்ட மன்னர்களுட னும் தொடர்புபடுத்த இவர்கள் ஆட்சி தொடர்பான பல இடப்பெயர்கள் இங்கிருப்பதே காரணமாகும். ஆயினும் இக் கட்டிடங்கள் அனைத்தும் இம் மன்னர்களது ஆட்சியில்தான் முதன்முறையாகக் கட்டப்பட் டவையெனக் கூறமுடியாது. இக் கட்டிடங்களில் உள்ள சிற்பங்களின் கலைமரபை நோக்கும் போது அவை கலிங்கமாகன் காலத்திற்கு முற் பட்டனவாகத் தெரிகின்றன. இக்கட்டிடப் பகுதிகளைச் சுற்றிவர உள்ள இடப்பெயர்களை நோக்கும்போது, அவை கலிங்கமாகன், பிற் பட்ட மன்னர் ஆகியோரின் காலத்து இடப் பெயர்களைவிடச் சோழகால இடப்பெயர் களையே அதிகமாகக் கொண்டுள்ளன. இங் குள்ள கட்டிடங்களுக்குத் தென்மேற்கே சில மைல் தொலைவில்தான் சோழர்காலப் பிரதான நிர்வாகப் பிரிவைக் குறிக்கும் சோழ மண்டலம் அமைந்துள்ளது. அதுபோல இக்கட்டிடங்களுக்கு வடமேற்கேதான் சோழர்கால வரலாற்றிற் சிறப் புப் பெற்ற மண்ணியாறு அமைந்துள்ளது. இவ் விரு இடங்களை மையமாக வைத்தே சோழக் குடியேற்றம் நடந்ததை உறுதிப்படுத்தும் வெள் ளாங்குளம், சோழியகுளம், அம்பலப்பெருமாள், பல்லவராயன்கட்டு, புலச்சேரி முதலிய இடங் கள் உள்ளன. கலிங்கமாகன், பிற்பட்ட மன்னர் ஆகியோரின் ஆட்சியிற்கூட, இவ்விடங்கள் அல் லது இவ்விடங்களுக்கு அருகிலுள்ள இடங்களே முதன்மை பெற்றுக் காணப்பட்டன. இவ்வொற் றுமை இம்மன்னர்களது ஆட்சிக்கு முன்னரே இவ்விடங்கள் வரலாற்றுமுக்கியத்துவம் பெற்று விட்டன என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

1070இல் சோழராட்சி பொலநறுவையில் மறைந்ததன் பின்னர் அங்கு ஆட்சி செய்த சிங் கள மன்னர்களது அரசியல் ஆதிக்கம் வடஇலங் கையில் (உத்தரதேசம்) ஏற்பட்டதற்கு சான்று களில்லை. மாறாக வடமேற்கிலங்கையில் உள்ள மட்டிகாவட்ட தீர்த்தம் (மட்டுவில்நாடு), மகா தீர்த்தம் (மாதோட்டம்) ஆகிய இடங்களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பால் சிங்கள மன்னர்கள் பொலநறுவையை விட்டுத் தென்னிலங்கைக்கு ஓடியதற்கே சான்றுகள் உண்டு. தமிழ் நாட்டில் சோழவம்சம் வலிமை குன்றிய நிலையில் இங்கிருந்து படையெடுப்பு ஏற்பட்டதென்றால் இங்கு வாழ்ந்த தமிழ் மக் களுக்குச் சுதந்திர அரசமைப்பொன்று தோன்றி யிருந்ததே காரணம் எனலாம். இந்த இடத்தில் ஈழத்துத் தமிழிலக்கியங்கள் தமிழரசின் தோற் றத்தைச் சோழ வம்சத்துடன் தொடர்புபடுத்திக் கூறியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

## தமிழிலக்கியங்களும் பூநகரியும்

யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பாக எழுந்த தமிழிலக்கியங்களில் ஒன்றான யாழ்ப் பாண வைபவமாலை கி.பி.8ஆம் நூற்றாண்டள வில் (கி.பி.745) விஜயனின் உறவினனான உக் கிரசிங்கன் சோழ இளவரசியான மாருதப்புர வல்லியைத் திருமணம் செய்து சிறிதுகாலம் கதிர

மலையிலிருந்து ஆட்சி செய்ததன் பின்னர் தலை நகரைச் செங்கடநகரிக்கு மாற்றியதாகக் கூறுகிறது. வரலாற்று ஆசிரியர்கள் சிலர் இக்கதையில் வரும் சம்பவங்கள் மகாவம்சத்தில் வரும் விஜயன் குவேனி கதையின் மறுவடிவம் எனக்கூறி இதில் எதுவித வரலாற்று உண்மையும் இல்லையெனக் கூறுகின்றனர்.19 இக்கதையில் சில பழைய வரலாற்றுக் கதைகளும் இணைந்து உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் 18ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண வைபவ மாலை எழுந்தபோது சோழப் பேரரசின் ஆட்சி இலங்கையிலோ அல்லது தமிழ்நாட்டிலோ இருக்கவில்லை அதேவேளை, 600 ஆண்டுகளுக்கு முன்னர் மறைந்த அப்பேரரசின் சாதனைகளை அறிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு இக்காலத்தில் (18ம் நூற்றாண்டு) வரலாற்று ஆய்வுகள் வளர்ந்திருக்கவுமில்லை. அப்படி இருந்தும் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரசின் தோற்றத்தைச் சோழவம்சத்தோடு தொடர்புபடுத்தி யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றதென்றால் தமிழரது வரலாற்றில் சோழரைப் பற்றிய வரலாற்று நினைவுகள் (Historical memory) ஆழமாகப் பதிந்திருந்ததே காரணம் எனலாம். ஆயினும் இச்சோழ வம்சத்தின் தொடர்போடு கதிரமலையிலிருந்த (கந்தரோடை) ஆட்சி மையம் வேறோர் இடத்திற்கு மாறியதை ஏகோபித்த நிலையில் தமிழ் இலக்கியங்கள் சூசகமாகத் தெரிவிக்கத் தவறவில்லை. அந்த இடமாற்றம் பூநகரியில் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இக்கருத்தை ஏற்ற சிற்றம்பலம் இதற்கு யாழ்ப்பாண வைபவமாலையிலும் வையாபாடலிலும் வரும் குறிப்பை எடுத்துக் காட்டுகிறார்20

யாழ்ப்பாண வைபவமாலையில் கதிரமலையிலிருந்து ஆட்சி செய்த உக்கிரசிங்கராசன் சிறிது காலத்தின் பின்னர் தலைநகரைச் செங்கட நகரிக்கு மாற்றி அங்கிருந்து ஆட்சிசெய்தான் எனக்கூறுகிறது.21 இத் தலைநகர் மாற்றம் வன்னிப் பிராந்தியத்திற்கு இடம்பெயர்ந்ததை வையாபாடலில் வரும் குறிப்பு உறுதிப்படுத்துகின்றது.22 அக்கூற்று பின்வருமாறு:

பொன்னகர் நிகருங் கதிரையம் பதியிற்
போயரன் மகவினை வணங்கிப்
பின்னருக் கிரம சிங்கசே னன்றன்
பெண்ணென விருந்தன தைற்பின்
மன்னவ னடங்காப் பற்றினி லேகி
மாநகர் வாவெட்டி மலையிற்
றன்னிக ரற்ற மண்டப மியற்றித்
தன்னர சியற்றின னிருந்தான்.

இதில் வாவெட்டி பற்றிவரும் செய்தி பிற்கால வரலாற்றுச் சம்பவமாக இருப்பினும் அதில் பழைய வரலாற்றுக் கதைகளும் இணைந்துள்ளன எனக்கூறலாம். இவ்விரு இலக்கியங்களை அடிப்படையாக வைத்துக் கதிரமலையின் பின்னர் தலைநகர் வன்னிக்கு மாறியதென எடுத்துக்கொள்ளலாம். அந்த மாற்றம் பூநகரியில் இருந்த இராசதானியைக் குறித்ததென எடுத்துக்கொள்ளலாம். பூநகரியிலுள்ள கட்டிடங்களைக் கதிரமலையின் பின்னர் ஏற்பட்ட புதிய இராசதானியாகக் கொண்டால் அதற்கொரு பெயர் இருந்திருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. அது எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டதென்பதே அடுத்து எழும் கேள்வியாகும்.

## சிங்கையும் பூநகரியும்

ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்களது ஆட்சிக்கு உட்பட்ட யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆரம்பத் தலைநகர் சிங்கை, சிங்கைநகர், சிங்கநாடு எனச் செகராசசேகரம் போன்ற நூல்களும்23 யாபாபட்டுன (யாழ்ப்பாணம்) எனச் சிங்கள இலக்கியங்களும்,24 நல்லூர் எனக்கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவமாலை, தஷ்ண கைலாயமாலை போன்ற நூல்களும் கூறுகின்றன.25 இதில் சிங்கை ஆரம்பத் தலைநகராக இருந்ததை. காலத்தால் முந்திய இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. எனினும் தற்போது நல்லூரைத் தவிர ஒரு இராசதானிக்குரியதெனக் கருதக்கூடிய கட்டிட அழிபாடுகள் யாழ்ப்பாணத்தில் வேறு எந்த இடத்திலும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 16ஆம் நூற்றாண்டிற் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் வந்தபோது நல்லூர் நகரத்தையே கண்டனர் என அறிகின்றோம். இது சம்பந்தமாக, போர்த்துக்கேய மதகுருவான கேய்றோஸ் பாதிரியார் கூறியது கவனிக்கத்தக்கது:


'நல்லூரைவிட வேறு நகரம் ஒருபோதும் அவர்களுக்கு இருக்கவில்லை. இது போத்துக் கேயருடைய பட்டினமும், அங்காடியும் அமைந் துள்ள இடத்திலிருந்து அரை லீக் (ஏறக்குறைய 1 1/2 மைல்) தூரத்தில் இருக்கிறது.[26]

அவர் குறிப்பிடுகின்ற பட்டினமும், அங்காடி யும்தான் பிற்பட்ட காலத்தில் யாழ்ப்பாண நக ரமாக மாறியது இதனால் யாழ்ப்பாண அரசின் தலைநகரான நல்லூரையும், யாப்பாபட்டுணத் தையும் இருவேறு இடங்களில் இருந்த தலைநக ராகக் கொள்ளாது யாழ்ப்பாணத்தை நல்லூர் நகரின் ஒரு பாகமாகக் கொள்வது பொருத்த மாகும். அப்படியாயின் ஆரம்பகாலச் சிங்கை நகர் எது?

1450 இல் செண்பகப் பெருமாள் நல்லூ ரைத் தலைநகராகக் கொள்ளும்வரை சிங்கையே ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்களின் தலைநகர் எனவும், அது வல்லிபுரத்தில் இருந்ததெனவும் இராசநாயகம் கூறுகிறார்.[27] இவர் கருத்தை ஏற்ற ஞானப்பிரகாசர் அதற்குச் சார்பாக அப் பிராந்தியத்திற் கிடைத்த தொல்லியற் சின்னங் களை எடுத்துக்காட்டினார்.[28] ஆனால் இவற்றை அப்பிராந்தியத்தில் ஆதிக் குடியிருப்புக்கள் இருந் ததற்கான சான்றுகளாகக் கொள்ளலாமே தவிர ஓர் இராசதானிக்குரிய ஆதாரங்களாகக் கொள்ளமுடியாது. இவ்வாறான தொல்லியற் சின்னங்கள் வல்லிபுரத்தில் மட்டுமன்றி, கந்த ரோடை, ஆனைக்கோட்டை, களபூமி, பூநகரி போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன,

இந்திரபாலா, பத்மநாதன் போன்ற அறி ஞர்கள் யாழ்ப்பாணத்தைப்போல் சிங்கையை யும் நல்லூருக்குள் அடங்கியிருந்த தலைநகராகக் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமாகச் சில சான்று கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. 1435இற் பொறிக்கப்பட்ட விஜயநகர மன்னர்களது திரு மாணிக்குழிக்கல்வெட்டில் யாழ்ப்பாணாயன் பட்டி னமும், 1449க்கும் 1454க்கும் இடைப்பட்ட அரசகேசரி பராக்கிரம பாண்டியன் கல்வெட்டில் சிங்கையும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏறத்தாழ ஒரே காலகட்டத்திற்குரிய இரண்டு கல்வெட்டுக் களில் யாழ்ப்பாண மன்னர்களின் அரசிருக்கை யாக யாழ்ப்பாணமும், சிங்கையும் வருவதால் இரண்டையும்ஒன்றெனக் கருதுகின்றனர். இதற்கு மேலும் ஆதாரமாக கேய்றோஸ்பாதிரியாருடைய குறிப்புப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1590இல் போர்த்துக்கேயர் கொழும்புத்துறையில் இறங்கி நல்லூரைநோக்கி அணிவகுத்துச் சென்றபோது சுங்கைநயினார் என்னும் அரணை அவர்கள் தாண் டியதாகப் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். இதிற் கூறப்பட்டுள்ள சுங்கைநயினாரைச் சிங்கை நயி னாரின் திரிபு எனக்கூறி, சிங்கையும் நல்லூருக் குக் கிட்டவிருந்த யாழ்ப்பாண மன்னர்களின் அரசிருக்கை என அடையாளம் கண்டுள்ளனர்.[29]

மேலேகூறப்பட்ட இரண்டு காரணங்களை மட்டும் வைத்து, சிங்கையை யாழ்ப்பாண நக ரத்துடன் இணைத்துப்பார்ப்பது பொருத்தமாகத் தெரியவில்லை. முதலாவதாக ஒரே காலகட்டத் திற்குரிய இரண்டு கல்வெட்டுக்களில் சிங்கையும், யாழ்ப்பாணமும் வருவதைக் கொண்டு இரண்டை யும் ஒன்றென ஒற்றுமைப்படுத்திப்பார்க்க இட மிருப்பினும் வேறுபடுத்திப் பார்க்கவும் இட முண்டு. அரசகேசரி பாராக்கிரம பாண்டியன் கல்வெட்டில் சிங்கையுடன் அநுராதபுரம் (அநுரை) குறிப்பிடப்பட்டுள்ளது. கொட்கம கல்வெட்டில் ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்களால் தோற்கடிக்கப்பட்ட சிங்களமன்னர்களின் தலை நகர் அனுராதபுரம் எலக் குறிப்பிடப்பட் டுள்ளது (படம் 85). 30 அநுராதபுரம் கைவிடப் பட்டு 500 ஆண்டுகள் கழிந்த பின்னரும்கூட இக்கல்வெட்டுக்களில் சிங்கள மன்னர்களின் அரசிருக்கையாக அநுராதபுரம் குறிப்பிடப் பட்டுள்ளது. இதேபோல் அரசகேசரி பராக் கிரமபாண்டியன் கல்வெட்டில் வரும் சிங்கை கூட தமிழ் மன்னர்களின் ஆரம்ப அரசி ருக்கையைக் குறிக்கப் பயன்படுத்தப்பெற்றிருக் கலாம் எனக் கருதஇடமுண்டு. இரண்டாவதாக, கேய்றோஸ் பாதிரியார் கூறும் சுங்கை நயினார் அரணைச் சிங்கைநயினார் அரணின் திரிபு எனக் கூறுவது பொருத்தமாயினும் அதை இராசதானிக் குரிய அரண் எனக்கருதி அதுவே சிங்கைநகர் என அடையாளம் காண்பது ஏற்புடையதாக இல்லை. இவ்வரண் இருந்ததாகக் கூறப்படும் இடம் கடற்கரையை அண்டிய பகுதியாக இருப்ப தால் இது கடற் பிராந்தியத்தில் இருந்து ஏற்படும் அச்சுறுத்தலைக் கண்காணிக்க சிங்கை தலைநக ராக இருந்த காலத்தில் அமைக்கப்பட்ட காவல்



“ சேது
கங்கணம் வேற்கண்ணிணையாற் காட்டினார் காமர்வளைப்
பங்கையக் கைமேற்றிலதம் பாரித்தார் பொங்கொலிநீற்
சிங்கைநகர் ஆரியனைச் சேராவனுரேசர்
தங்கள் மடமாதர் தாம்”

படம்- 85. கொட்டகமக் கல்வெட்டு

அரண்களில் ஒன்றாக இருக்கலாம் அல்லது நல்லூரை தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த மன்னர்கள் தமக்கு முற்பட்ட இராசதானியின் தலைநகரை நினைவுபடுத்தும் வகையில் தமது ஆட்சியிற் கட்டப்பட்ட காவல் அரணுக்கோ, வேறு கட்டடத்திற்கோ சிங்கைநயினார் எனப் பெயரிட்டிருக்கலாம். எவ்வாறாயினும் இதையொரு இராசதானிக்குரிய மிகப்பெரிய கட்டிடமாக கருதஇயலாது. நல்லூர் தலைநகராக விளங்கியது என்பதை அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படாமலே அப்பிராந்தியத்திலே தற்செயலாகக் கிடைத்துவரும் தொல்பொருட் சான்றுகள் உறுதிசெய்கின்றன. ஆனால் சிங்கைநயினார் அரண் இருந்ததாகக் கூறப்படும் நல்லூருக்கும் கொழும்புத்துறைக்கும் இடைப்பட்ட பிராந்தியத்தில் தொன்மையான குடியிருப்புக்களுக்குரிய அரிய பல சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டும் கூட[31] தற்செயலாகத்தானும் ஒரு இராசதானிக்குரிய கட்டிட அழிபாட்டுச் சின்னங்கள் இதுவரை கிடைக்கவில்லை. இதனால் போர்த்துக்கேய பாதிரியார் கூறிய சிறிய அரணை மட்டும்வைத்து அதைத் தலைநகர் சிங்கை என அடையாளம் காண்பது பொருத்தமாக இல்லை. அப்படியாயின் சிங்கையைப் பூநகரியில் இருந்த இராசதானியின் தலைநகராகக் கொள்வதா? அவ்வாறு கருதுவதற்குச் சில காரணங்கள் உண்டு.

யாழ்ப்பாண வைபவமாலையில் கதிரமலைக்குப் பின்னர் இடம்மாறிய தலைநகரின் பெயர் செங்கடநகரி எனக் கூறப்பட்டுள்ளது. இந்நூலைப் பதிப்பித்த குலசபாநாதன் சிங்கைநகர் என்னும் பெயரையே மயில்வாகனப்புலவரோ, அவருக்குப் பின் ஏடெழுதிய எவரோ செங்கடநகர் என மாற்றிவிட்டனர் எனக்கூறியுள்ளார்.[32] இக்கருத்தை வரலாற்று ஆசிரியர்கள் பலரும் ஏற்றுள்ளதால் கதிரமலைக்குப் பின்னர் தோன்றிய தலைநகர் சிங்கைநகர் எனக்கூறலாம். இந்நகர் யாழ்ப்பாணத்திற்குத் தெற்கேயுள்ள ஒரு பிராந்தியத்தில் இருந்ததென்பதை வையாபாடல் மட்டுமன்றி யாழ்ப்பாண வைபவமாலையும் கூறுகின்றது. அக்கூற்றுப்பின்வருமாறு

"அக்காலத்தில் சோழநாட்டிலிருந்து இரண்டு கண்களுங் குருடனாகிய கவிவீரராகவன் என்னும் யாழ்பாணன் செங்கடநகரியிலிருந்து அரசாட்சி செலுத்தும் வாலசிங்க மகாராசன் பேரிற் பிரபந்தம் பாடிக்கொண்டு போய் யாழ்வாசித்துப் பாடினான். அரசன் அதைக்கேட்டு மிக்க சந்தோஷம் கொண்டு அவனுக்குப் பரிசிலாக இலங்கையின் வடதிசையிலுள்ள மணற்றிடர் என்னும் நாட்டைக் கொடுத்தான்."[33]

இக்கதை 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிவீரராகவனை மையமாக வைத்துக் கூறப்பட்டுள்ளது. ஆயினும் இதில் பிற்கால வரலாற்றுச்செய்திகளுடன் பழைய வரலாற்றுக்கதைகளும் இணைந்துள்ளன என்பதை மறுப்பதற்கு இல்லை. இதில் சிங்கநகருக்கு (செங்கடநகரி) வடக்காக அமைந்த நாடு மணற்றிடர் எனக்கூறப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் என்னும் பெயர் 15 ஆம் நூற்றாண்டில் ஏற்படும்வரை இப்பிராந்தியம் மணற்றி, மணவை, மணற்றிடர் என அழைக்கப்பட்டதற்கு ஆதாரங்களுண்டு. வடக்காகவுள்ள இப்பிரதேசத்தைச் சிங்கபுரத்து மன்னன் யாழ்ப்பாணனுக்கு வழங்கியதன் மூலம் யாழ்ப்பாணத்திற்குத் தெற்காகச் சிங்கநகர் இருந்ததென்பது புலனாகிறது. அவ்வாறாயின் இச் சிங்கநகர் பூநகரியிலிருந்ததென்பது பெருமளவு பொருத்தமாகும்.

இதற்குச் சார்பாக இன்னுமொன்றை எடுத்துக் காட்டலாம். பிற்பட்ட விஜயநகர மன்னர் காலக் கல்வெட்டு யாழ்ப்பாணத்தை ஈழம் எனவும்,[34] முற்பட்ட பாண்டியக் கல்வெட்டுக்கள் வடஇலங்கையை ஈழம் எனவும் கூறுகின்றன.[35] இந்த இரு கல்வெட்டுக்களிலும் ஈழம் பற்றிய வேறுபாடு மன்னனின் ஆள்புலத்தைக் குறிக்காது அரசனின் அரசிருக்கை அமைந்த தலைநகரைக் குறித்திருக்கலாம் எனக்கருதலாம். விஜயநகர மன்னர் காலத்தில் யாழ்ப்பாண மன்னர்களின் தலைநகர் யாழ்ப்பாணத்துக்குள் மட்டும் இருந்ததற்குச் சான்றுகள் உண்டு. ஆனால் பாண்டியர் காலத்தில் தமிழரசின் தலைநகர் யாழ்ப்பாணத்துக்குள் மட்டும் இருந்ததாகக் கொள்வதற்குச் சான்றுகளில்லை. இப்பாண்டியரது கல்வெட்டுக்களிலே வடஇலங்கை அரசின் தலைநகர் சிங்கையெனக் கூறப்படுள்ளது. இப்பாண்டியர்களே ஈழமான வடஇலங்கை மன்னன் சாவகனைக் கொன்று அவன் மகனை ஆட்சியில் அமர்த்தி

னர். இச்சாவகனின் அரசு பூநகரியில் இருந்ததற்குச் சான்றுகள் காட்டப்பட்டுள்ளதனால் பாண்டியக் கல்வெட்டிலும், யாழ்ப்பாண அரசு தொடர்பான தமிழிலக்கியங்களிலும் வரும் சிங்கையைத் பூநகரியில் இருந்த தலைநகராகக் கொள்வதே பெருமளவுக்குப் பொருத்தமாகும்.

## சோழரும் சிங்கைநகரும்

வட இலங்கையில் தோன்றிய அரசின் ஆரம்ப தலைநகர் சிங்கை அல்லது சிங்கை நகர் என்ற பெயரைப் பெற்றதற்கு இந்த அரசைத் தோற்றுவித்த தொடக்ககால மன்னர்கள் கலிங்க வம்சத்துடன் தொடர்புடையவர்களாக இருந்ததே காரணம் எனக் கூறப்படுகிறது. இதற்குச்சார்பாக சில சான்றாதாரங்கள் காட்டப்பட்டுள்ளன.[36]

1. கலிங்க நாட்டு வம்சங்கள் குறிப்பாகக் கீழைக் கங்க வம்சம் வெளியிட்ட நாணயங்களிலும், செப்புப் பட்டைய முத்திரைகளிலும் நந்தியும், அதன் மேல் பிறையும், நட்சத்திரமும்பொறித்துள்ளனர். இவை போன்ற சின்னங்களை வட இலங்கையில் ஆட்சி புரிந்த மன்னர்களும் தமது நாணயங்களிலும் பயன்படுத்தியுள்ளனர்.

2. கலிங்க நாட்டில் ஆட்சி புரிந்த அரச வம்சங்கள் தமது விருதுப் பெயர்களாக கங்கை ஆரியன், கங்கை நாடார் முதலான பெயர்களைப் பயன்படுத்தியுள்ளனர். இப் பெயர்களையே வடஇலங்கையில் ஆட்சிபுரிந்த மன்னர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

3. கலிங்க நாட்டு வம்சங்களில் ஒன்று கி. பி. 5ஆம் நூற்றாண்டு தொடக்கம் 12 ஆம் நூற்றாண்டு வரை ஸிங்ஹபுர (சிங்கைநகர் சமஸ்கிருதத்தில் ஸிங்கபுர) என்ற தலைநகரிலிருந்து ஆட்சி நடத்தியது. பொலநறுவையில் ஆட்சி நடத்திய நிஸ்ஸங்கமல்லனும் இச்சிங்கபுரத்திலிருந்து வந்தவனாவான். இவனுக்குப் பின் பொலநறுவையில் ஆட்சி நடத்தியவனும், வடஇலங்கையில் புதிய அரசைத் தோற்றுவித்தவனுமாகிய மாகனும், அவனது சகாக்களும் ஸிங்கபுரத்திலிருந்தே வந்தனர். அவ்வாறு வந்த கலிங்க வம்சத்தவர் வடக்கே புதிய அரசைத்தாபித்து ஆட்சி நடத்திய போது அந்த நகருக்கு தங்கள் தாய் நகரின் பெயரை ஒத்த பெயரை இட்டிருக்க வேண்டும்.[37]

இம் மூன்று காரணங்களையும் வைத்து வட இலங்கையில் தோன்றிய சிங்கை அல்லது சிங்கை நகரத்தைக் கலிங்க வம்சத் தொடர்புடையவை எனக்கருதுவது பொருத்தமாகத் தேன்றலாம். ஆனால் அதே காரணங்கள் சோழ வம்சத்தோடு தொடர்பு படுத்துவதற்கும் பொருத்தமாக உள்ளதை இங்கே சுட்டிக் காட்டுவது அவசியமாகும்.

1. யாழ்ப்பாண (வட இலங்கை) மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் நந்தியும், அதன் மேல் பிறையும், நட்சத்திரமும் இடம் பெற்றமைக்குக் கலிங்கத் தொடர்பை மட்டும் ஒரு காரணமாக எடுத்துக் கொள்வது பொருத்தமாகத் தோன்றவில்லை. ஏனெனில் ஆதி காலம் தொட்டு இந்திய அரச வம்சங்கள் பல நந்தியை ஒரு புனிதச் சின்னமாகக் கருதி தாம் வெளியிட்ட நாணயங்களிலும், அரச முத்திரைகளிலும், அரசகொடிகளிலும் அதைப் பொறிப்பித்துள்ளனர். அதிலும் இலங்கையுடன் நெருங்கிய அரசியல், வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்புகளைக் கொண்டிருந்த பல்லவ, பாண்டிய, சோழ, நாயக்க வம்சத்தினர் வெளியிட்ட நாணயங்களில் நந்தி ஒரு முக்கிய சின்னமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. வட இலங்கையில் கலிங்க மாகன் அரசொன்றை அமைக்க முன்னரே கலிங்க நாட்டில் இருந்து வந்த நிஸ்ஸங்கமல்லன் போன்ற மன்னர்கள் பொலநறுவையில் நீண்ட காலம் ஆட்சி புரிந்துள்ளனர். ஆனால் இம் மன்னர்கள் வெளியிட்ட எந்தவொரு நாணயத்திலும் கலிங்க நாட்டுச் செல்வாக்கு இடம் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. மாறாகச் சோழமன்னர்களால் வெளியிடப்பட்ட நாணய மரபைப் பின்பற்றி தாம் வெளியிட்ட நாணயத்தின் முன் பக்கத்தில் அரசனின் உருவத்தையும், நாணயத்தின் பின் பக்கத்தில் அரசனின் உருவத்தோடு தேவநாகிரி எழுத்தில் அரச

னுக்குரிய பெயரையும் பொறித்தனர். இதில் சிறப்பாக நோக்கத்தக்க அம்சம் வடஇலங்கையில் முதலில் அரசமைத்தவன் எனக் கருதப்படும் கலிங்கமாகன் பொலநறுவையிலோ அல்லது வட இலங்கையிலோ அவன் ஆட்சி புரிந்த காலத்தில் அவனால் வெளியிடப்பட்டதெனக் கூறக்கூடிய எந்தவொரு நாணயமும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்நிலையில் யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் உள்ள இலச்சினைகளை மட்டும் கலிங்க நாட்டுத் தொடர்புடையவை எனக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

1970 இல் பதவியாவில் கண்டுபிடிக்கப்பட்ட நந்தி இலச்சினை உடைய வெண்கல முத்திரை ஒன்றை வடஇலங்கையில் கலிங்க வம்சத் தொடர்பு இருந்ததற்கு ஒரு சான்றாகக் காட்டப்பட்டுள்ளது.[38] இதற்குக் கலிங்க மாகனது ஆரம்ப ஆட்சி பீடமாகப் பதவியா இருந்திருக்கலாம் எனக் கருதுவதும், முத்திரையில் உள்ள நந்தி இலச்சினை கலிங்க நாட்டு நாணயங்களிலும், யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்டுள்ள நாணயங்களிலும் இடம் பெற்றுள்ள நந்தியை ஒத்திருப்பதையும் சான்றாகக் காட்டியுள்ளனர்.[39] ஆனால் இம் முத்திரை கண்டெடுக்கப்பட்ட பதவியா என்ற இடத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினையும், முத்திரையில் இடம் பெற்றுள்ள இலச்சினைகளையும், வாசகத்தையும் நோக்கும் போது இம் முத்திரை கலிங்க வம்சத்தோடு தொடர்புடையது என்பதை விட சோழ வம்சத்தோடு தொடர்புடையதெனக் கூறுவது பெருமளவுக்குப் பொருத்தமாகத் தெரிகிறது.

சூளவம்சம் பொலநறுவையில் இருந்து கலிங்க மாகன் பதவி விலகியதன் பின்னர் அவனது படைகள் நிலைகொண்ட இடங்களில் ஒன்றாகப் பதி மாவட்டத்தைக் கூறுகிறது.[40] (வரலாற்று ஆசிரியர்கள் பதி என்ற இடத்தைப் பதவியா என அடையாளம் கண்டுள்ளனர்.[41]) ஆனால் அவன் படைகள் பதவியாவை (பதி) விட வடமேற்கிலங்கையில் உள்ள பல இடங்களில் நிலை கொண்டிருந்ததை குளவம்சத்தின் கூற்றிலிருந்து அறியமுடிகிறது. அதிலும் கலிங்க மாகனது கோட்டை அமைந்த இடமாக வடமேற்கிலங்கையில் உள்ள ஊர்காவற்றுறை என்ற இடம் குறிப்பிடப்பட்டுள்ளது[42] இதனால் சூளவம்சம் பதி என்ற இடத்தைக் கலிங்க மாகன் படை நிலைகொண்டிருந்த இடங்களில் ஒன்றாகக் கூறுவதை மட்டும் ஓர் முக்கிய சான்கக் கொண்டு, கலிங்க மன்னர் ஆட்சியில் பதவியா முக்கிய வரலாற்று மையமாகத் திகழ்ந்தது எனக்கருதி அங்குகிடைத்த முத்திரையைக் கலிங்க மன்னர்கள் வெளியிட்டதாகக் கருதுவது பொருத்தப்பாடாகத் தோன்றவில்லை. ஏனெனில் கலிங்க மாகனோடு பதவியா தொடர்புபடுத்தப்பட்டதைக் காட்டிலும் சோழராட்சியோடு இவ்விடம் அதிக தொடர்பு கொண்டிருந்ததற்கு உறுதியான பல ஆதாரங்கள் அங்கு கிடைத்துள்ளன. இங்கு கிடைத்த 11ஆம் 12ஆம் நூற்றாண்டுக்குரிய நான்கு கல்வெட்டுகள் சோழர்கால அரசியல், இராணுவ, வர்த்தகப்பண்பாட்டு நடவடிக்கைகளில் பதவியா முக்கிய கேந்திர மையமாக விளங்கியதை உறுதிப்படுத்துகின்றன.[43] இக் கல்வெட்டுக்களையும், இந்து ஆலயங்களுக்குரிய கட்டிட அழிபாடுகளையும் கொண்டு சோழர் காலத்துடன் தொடர்புடைய ஆறு சிவன் கோயில்களும், ஒரு காளி கோவிலும் பதவியாவில் இருந்துள்ளமை அறியப்பட்டுள்ளது.[44] இவ் ஆலயங்களைக் கட்டுவதிலும் நிர்வகிப்பதிலும் அவற்றிற்குத்தானம் அழிப்பதிலும் சோழ நிர்வாகிகள், படைவீரர்கள், வணிகர்கள் பெரும் பங்கு கொண்டனர் என்பதை பதவியாவில் கிடைத்த முதலாம் இராஜராஜ சோழன், முதலாம் ராஜேந்திர சோழன், இரண்டாம் இராஜாதிராஜ சோழன் ஆகியோரிற்குரிய கல்வெட்டுக்களும், சோழர்கால வணிக கணங்களிற்குரிய கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன. சோழர் காலத்தில் மிகுந்த செல்வாக்குப்பெற்ற வணிக கணங்களில் ஒன்றான திசையாயிரத்து ஐந்நூற்றுவர் பதவியாவிற்கு ஐம்பொழில் பட்டினம் எனப் பெயரிட்டு அதைச் சுயாட்சி கொண்ட பட்டினமாக நிர்வகித்தனர் என்பதை அங்கு கிடைத்த கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது.[45] இச் சான்றுகள் கலிங்க மன்னர் காலத்தைவிட சோழமன்னர் காலத்தில் பதவியா சிறப்புற்றிருந்ததை உறுதிப்படுத்துகின்றன. இதனால் பதவியாவில் கிடைத்த முத்திரையை கலிங்கரோடு தொடர்புபடுத்த பதவியாவின் வரலாற்றுப் பின்

ணியை ஒரு காரணமாகக் காட்டினால் அது கலிங்க வம்சத்தைவிட சோழ வம்சத்திற்கே பெருமளவு பொருத்தமாகும்.

பதவியா முத்திரையை கலிங்கவம்சத்துடன் தொடர்புபடுத்த அம் முத்திரையிலுள்ள நந்தி இலச்சினை கலிங்கப் பிரதேசத்தில் ஆட்சிபுரிந்த கங்க வம்சத்து மன்னர்களாகிய வஜிரஹஸ்த, தேவேந்திரவர்மன் ஆகியோர் வெளியிட்ட செப்புப்பட்டைய முத்திரையிலுள்ள நந்தியை ஒத்திருப்பதைச் சான்றாகக் காட்டியுள்ளனர். ஆனால் இவற்றிடையே ஒற்றுமை காணப்பட்டாலும் சில வேற்றுமைகள் இருப்பதையும் இங்கே சுட்டிக் காட்டுவது அவசியமாகிறது உதாரணமாக தேவந்ததேவ என்ற நந்தகுல மன்னனுடைய பரிபத நூதனசாலைச் சேப்பேட்டு (Baripada Museum Plate) முத்திரையிலே இடதுபுறம் பார்த்துக்கொண்டு படுத்திருக்கும் நந்தியும், அதன்மேல் பிறையும், நட்சத்திரமும் காணப்படுகின்றன. நந்தியின் கீழ் விரிந்த தாமரைமலர் காணப்படுகிறது (படம்-86).[46] ஆனால் பதவியா முத்திரையிலுள்ள நந்தி வலதுபுறம் பார்த்த வண்ணம் காணப்படுகிறது. இந் நந்திக்கு இரு பக்கங்களில் குத்துவிளக்குகளும், மேலே பிறைச்சந்திரனும், அதற்கு மேலே குடையும், சாமரையும் உள்ளன. நந்திக்குக்கீழே விரிந்த தாமரைமலர் காணப்படுகிறது (படம்-87). கலிங்க வம்சத்து முத்திரைகளில் இடதுபுறம் பார்த்தவண்ணம் உள்ள நந்தி பதவியா முத்திரையில் வலதுபுறம் பார்த்த வண்ணம் இருப்பது முக்கிய வேறுபாடாகும்.

பதவியா முத்திரையை சோழமன்னர்கள் வெளியிட்ட முத்திரைகளுடனும், நாணயங்களுடனும் ஒப்பிடுகின்றபோது அவற்றிடையே பல ஒற்றுமைகள் இருப்பதனை அவதானிக்க முடிகிறது. அவற்றுள் ஒன்று பதவியா முத்திரையில் உள்ள நந்தியைப்போல் சோழமன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் உள்ள நந்தி வலதுபுறம் பார்த்தவண்ணம் இருப்பதாகும் (படம் 88). இவ் வொற்றுமைகளை சோழ மன்னர்கள் வெளியிட்ட முத்திரைகளில் மேலும் தெளிவாகக் காண முடிகிறது. பதவியா முத்திரையில் விளிம்புக்குச் சற்றுக் கீழே வட்டமாகக் கிரந்த வரிவடிவத்திலமைந்த சாசனமும், அதற்குக் கீழே குடையும், குடைக்கு இருமருங்கிலும் சாமரையும் காணப்படுகின்றன. இதேபோல சோழ மன்னர்கள் வெளியிட்ட கரந்தை, லெய்டன் செப்புபட்டைய முத்திரைகளில் விளிம்புக்குச் சற்றுக்கீழே கிரந்த வடிவத்திலமைந்த சாசனமும், அதற்குக்கீழே குடையும், குடைக்கு இரு




படம் - 86. கலிங்க மன்னர்களது செப்புப்பட்டைய முத்திரை.



**படம் - 87. பதவியாவில் கிடைத்த முத்திரை.**

மருங்கிலும் சாமரையும் காணப்படுகின்றன (படம்-89). பதவியா முத்திரையின் நடுவிலமைந்த நந்திக்கு இருமருங்கிலும் குத்துவிளக்குகள் காணப் படுகின்றன. மேற்கூறப்பட்ட சோழர்கால முத் திரைகளின் நடுவில் புலியும் இருமருங்கிலும் குத்து விளக்குகளும், வாளும், அங்குசமும், வலதுபக் கத்தில் இரட்டை மீனும் காணப்படுகின்றன. இவற்றிற்குக்கீழே தாமரையும், சிம்மாசனமும், மேளமும், பன்றியும் காணப்படுகின்றன.47 பத வியா முத்திரையிலுள்ள நந்திக்குப் பதிலாக மேற் கூறப்பட்ட சோழர்கால முத்திரைகளில் புலி இருப்பது வேறுபாடாகக்கருத இடமுண்டு. ஆனால் சோழ நாணயங்களில் நந்தி பொறிக் கும் மரபு காணப்படுவதனால் சோழர்கால முத் திரையிலும் அவை இடம்பெற்றிருக்கும் எனக் கருத இடமுண்டு.

பதவ்யா முத்திரைச் சாசனத்தில் வரும் மஹேஸரை ஒரு மன்னனைக் குறிப்பதாகக் கொண்டால் நந்தி இலட்சினையைப் பயன்படுத் திய கலிங்கமன்னன் ஒருவன் ஆட்சிநடத்தியிருக் கலாம் என ஊகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.48 ஆனால் இந்த ஊகத்தை உறுதிப்படுத் தக்கூடிய எந்தவொரு சான்றும் இதுவரை பத வியாவில் கிடைக்கவில்லை. மாறாக இம் முத் திரை இங்குள்ள ஆலயமொன்றிற்குரியதெனக்



**படம் - 88. சோழர்கால நாணயம்.**



**படம் - 89. சோழர்கால கரந்தைச் செப்புப்பட்டைய முத்திரை.**

கருதுவதற்கே பல ஆதாரங்கள் உள்ளன. வட மொழியிலமைந்த இம் முத்திரைச் சாசனம் பின் வருமாறு படிக்கப்பட்டுள்ளது:

"ஸ்வஸ்தி ஸ்ரீமத் த்விஜா வாஸ
ஸ்ரீபதிக்ராம வாஸிநாஹ்
மஹேஸஸ்யை ததிந்த்ராதி
மௌலி ராஜித ஸாஸநம்."

இது தமிழில் பின்வருமாறு மொழி பெயர்க்கப் பட்டுள்ளது:49

''ஸ்வஸ்தி சீருடைய பிராமணர் வசிக்கின்ற
ஸ்ரீபதி கிராமத்தில் வதிகின்ற
இந்திராதி யோருடைய முடிகளினாலே
அலங்கரிக்கப்பட்ட மஹேஸருடைய சாசனம்,"


இச்சாசனத்தில் பதவியாவின் பெயர் ஸ்ரீபதிக் கிராமம் எனக் கூறப்பட்டுள்ளது. இதில் வரும் மஹேஸரை சிவன் என எடுத்துக்கொள்ள இடமுண்டு. ஏனெனில் மஹேஸ என்பது சிவனுக்குரிய இன்னொரு பெயராகும். அத்துடன் இம் முத்திரை புராதன சிவாலயமொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டமையும் இக்கருத்திற்கு மேலும் சார்பாக உள்ளது. பதவியாவிலுள்ள பெரும்பாலான ஆலயங்கள் சோழர்காலத்தில் கட்டப்பட்டவையாகும். ஆயினும் அவை 14ஆம் நூற்றாண்டுவரை தொடர்ந்து பராமரிக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு.50 பதவியா முத்திரை 13 ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் சோழர் ஆட்சி இலங்கையில் இல்லாதிருந்ததனால் பதவியா முத்திரையை எப்படிச் சோழரோடு தொடர்புபடுத்துவது என்ற கேள்வி எழலாம். ஆனால் சோழர் ஆட்சியின்போது தமிழ் நாட்டிலிருந்து இலங்கை வந்த தமிழர்கள் பலர் சோழர்ஆட்சி மறைந்ததன் பின்னரும் இலங்கையிலே நிரந்தரமாகக் குடியேறியதற்கு ஆதாரங்கள் உண்டு. அவ்வாறு குடியேறிய படைவீரர்களும், வர்த்தகர்களும், சோழ நிர்வாகிகளுமே பதவியாவிலுள்ள ஆலயங்களை நிர்வகிப்பதிலும் புதுப்பித்துக் கட்டுவதிலும் பங்கெடுத்தனர் என்பதை பதவியாவில் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. இதனால் பதவியா முத்திரையை சோழ வம்சத்தோடு தொடர்புடைய சிவாலய நிர்வாகிகள் வெளியிட்டிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.51 அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 10ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டில் வரும் குமாரகணத்துப் பேரூர் என்ற தொடர் முருகன் கோவிலை நிர்வகித்தோரைக் குறித்ததாகக் கூறப்படுகிறது. பதவியாவில் கிடைத்த 12ஆம் 13ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டில் வரும் ''காளி கணம்'' பற்றிய குறிப்பு காளிகோயிலை மேற்பார்வை செய்தோரைக் குறிக்கிறது. பதவியா முத்திரையில் வரும் மகேஸர் என்ற பெயர் சிவனைக் குறிப்பதால் பதவியா முத்திரையை இங்குள்ள சிவாலயம் ஒன்றை நிர்வகித்தோரைக் குறித்ததெனக் கூறுவது பொருத்தமாகும்.

எனவே பதவியா முத்திரையைப் பல நிலைகளிலும் சோழரோடு தொடர்புபடுத்துவதே பொருத்தமாகத் தெரிகிறது. பதவியா முத்திரையிலுள்ள சின்னங்களுக்கும், சோழர் வெளியிட்ட நாணயங்களிலும், முத்திரைகளிலும் உள்ள சின்னங்களுக்கும் நெருங்கிய ஒற்றுமையிருப்பது போல் யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் உள்ள சின்னங்களுக்கும் ஒற்றுமை காணப்படுகிறது. இதனால் யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களின் தோற்றத்தைச் சோழரோடு தொடர்புபடுத்தி ஆராய்வது அவசியமாகிறது.

வட இலங்கையின் ஆரம்பகால மன்னர்கள் கலிங்கநாட்டு சிங்கபுரத்திலிருந்து வந்தவர்கள் என்ற கருத்துடைய மகாதேவன் அதற்குச் சார்பாக யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்டதாக அவர் கருதும் மூன்று நாணயங்களைச் சான்றாதாரம் காட்டியுள்ளார். மாதோட்டத்தில் கிடைத்த இந்நாணயங்களை யாழ்ப்பாணத்தில் கிடைத்த அரிய நாணயங்கள் என்ற தலைப்பில் அவர் விரிவாக ஆராய்ந்துள்ளார்.52 இந்நாணயங்களை யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிடுவதற்கு கலிங்கநாட்டுத் தொடர்பும், பாண்டிய வம்சச் செல்வாக்கும் காரணம் என்பது இவரது கருத்தின் சாராம்சமாகும். இதன்மூலம் வட இலங்கையின் ஆரம்ப அரசின் தலைநகர் சிங்கை என்ற பெயர் பெற கலிங்கநாட்டு சிங்கபுரத் தொடர்பு காரணம் என்ற கருத்து மறைமுகமாக ஏற்கப்படுகிறது. ஆனால் மாதோட்டத்தில் கிடைத்த மூன்று நாணயங்களிலும் உள்ள சின்னங்களையும், அவற்றிலுள்ள வாசகங்களையும் ஆழமாக ஆராயும்போது இவற்றை யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் என்றோ அவற்றில் கலிங்க நாட்டுத்தொடர்பு இருப்பதாகவோ கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. மாறாக பதவியாவில் கிடைத்த முத்திரையை போல் இந் நாணயங்களும் சோழர் காலத்துடன் தொடர்புடையவையெனக் கூறுவது பொருத்தமாகத் தெரிகிறது.

மாதோட்டத்தில் கிடைத்த முதலாவது நாணயவகை 0.8 அங்குல விட்டத்தையும் 35 கிராம் நிறையையும் உடைய செப்பு நாணயமாகும். இந்நாணயத்தின் முன்பக்கத்தில் வலது புறம் பார்த்தவண்ணம் நந்தி காணப்படுகிறது. இதற்குமேலே இளம் பிறைச்சந்திரன் உள்ளது. நந்தியின் இடது, வலது பக்கத்தில் உள்ள கோடுகள் வாள், அங்குசம் ஆகிய சின்னங்களையும், நந்திக்குக் கீழேயுள்ள கோடு மத்தளத்தையும் குறித்து நிற்கின்றன.53 நாணயத்தின் பின்பக்கத்தில் விளிம்பைச்சுற்றிப் புள்ளிகளும் அப் புள்ளிகளால் அமைந்த வட்டத்திற்குள் தடித்த தேவநாகிரி எழுத்தில் இரு வரிகளில் "ஸ்ரீராஜசேகர" என்ற வாசகமும் உள்ளது (படம்-90).

அ ஆ




படம் - 90. மாதோட்டத்திற் கிடைத்த நாணயம்.
(அ) முன்பக்கம் (ஆ) பின்பக்கம்

இந்நாணயத்தைக் கலிங்கத் தொடர்புடைய யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் என்பதற்கு மகாதேவன் கலிங்க நாட்டு தேவந்ததேவ என்ற நந்தகுல மன்னனுடைய பரிபத நூதனசாலைச் செப்பேட்டில் வரும் நந்தியையும், கலிங்க நாட்டில் பயன்படுத்தப்பட்ட தேவநாகிரி எழுத்தையும் சான்றாதாரமாகக் காட்டியுள்ளார். ஆனால் நந்தியை ஒரு முக்கிய சான்றாகக்காட்டி அதன் மூலம் குறிப்பிட்ட ஒரு வம்சத் தொடர்புடைய நாணயம் இதுவென அடையாளம் காண்பது பொருத்தமாகத் தெரியவில்லை. ஏனெனில் இந்திய அரச வம்சங்கள் பலவும் ஆதிகாலம் முதல் நந்தியை ஒரு புனிதச் சின்னமாக நாணயங்களிலும், முத்திரைகளிலும், அரச கொடிகளிலும் பயன்படுத்தி வருவதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு. அதிலும் கலிங்க நாட்டு வம்சங்களைவிடத் தமிழ்நாட்டு வம்சங்கள் இதைக் கூடுதலாகப் பயன்படுத்தியதற்கு ஆதாரங்கள் உண்டு. மாதோட்ட நாணயத்தில் வரும் நந்தியை கலிங்க நாட்டில் பயன்படுத்தப்பட்ட நந்தியோடு தொடர்புபடுத்தினாலும் அவற்றிடையே அதிக ஒற்றுமையிருப்பதாகவும் தெரியவில்லை. கலிங்க நாட்டு நாணயங்களிலும், முத்திரைகளிலும் வரும் நந்தி இடது புறம் பார்த்த வண்ணம் உள்ளன. ஆனால் மாதோட்ட நாணயத்தில் வரும் நந்தி பதவியா முத்திரையில் வரும் நந்தியைப் போல் வலதுபுறம் பார்த்தவண்ணம் காணப்படுகிறது. நாணயங்களில் வலதுபுறம் பார்த்தவண்ணம் நந்தியைப் பொறிக்கும் மரபு சோழர், பாண்டியர் ஆட்சியில் பின்பற்றியதுண்டு. 54 ஆனால் மாதோட்ட நாணயத்தில் உள்ள பிற சின்னங்களும், நாணயத்திலுள்ள வாசகங்களும் அந்த நாணயம் பாண்டியத் தொடர்பை விடச் சோழத் தொடர்பை எடுத்துக்காட்டுகின்றன. மாதோட்ட நாணயத்திலுள்ள நந்திக்கு இருமருங்கிலும் வாள், அங்குசம் ஆகிய சின்னங்கள் காணப்படுகின்றன. இவை சோழ நாணயத்திற்குரிய செல்வாக்கைக்காட்டுகின்றன. ஆரம்பகாலங்களில் சாளுக்கிய மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் வாள், வில்லு, அங்குசம் ஆகியவை முக்கிய சின்னங்களாகப் பொறிக்கப்பட்டன. 55 ஆனால் முதலாம் இராஜராஜ சோழன் ஆட்சி வேங்கியில் ஏற்பட்டதைத் தொடர்ந்து இச்சின்னங்கள் சோழ நாணயங்களிலும் இடம்பெறத் தொடங்கின. 56 ஆனால் நாணயவியலாளர் சிலர் இராஜேந்திரசோழன் மகளுக்கும் சாளுக்கிய மன்னன் ராஜராஜ நரேந்திரனுக்கும் நடந்த திருமணத்தின் காரணமாக இச்சின்னங்கள் சோழ நாணயங்களில் இடம்பெற்றதாகக் கூறுகின்றனர். 57 காரணம் எதுவானாலும் மாதோட்ட நாணயங்களில் வரும் வாள், அங்குசம் ஆகிய சின்னங்களுக்கும் சோழ நாணயங்களில் வரும் சின்னங்களுக்குமிடையிலான ஒற்றுமை இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. மகாதேவன் மாதோட்ட நாணயத்தில் உள்ள மேளத்தைக் கலிங்க நாட்டு கிழைக்கங்க வம்சத்துடன் தொடர்புடையதெனக் கூறியுள்ளார். ஆனால் இச்சின்னம் சோழர் ஆட்சிக்கால முத்திரைகளிலும் பயன்படுத்தப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. உதாரணமாக கரந்தைச் செப்பேட்டு முத்திரையில் பயன்படுத்தப்பட்டுள்ள மேளத்தை இங்கு குறிப்பிடலாம். 58

மாதோட்ட நாணயத்தின் பிற்பக்கத்தில் வரும் தேவநாகிரி வரிவடித்தை கலிங்க நாட்டில் 11ஆம் 12ஆம் நூற்றாண்டில் பயன்படுத்திய தேவநாகிரி வரிவடிவம் என அடையாளம் காணப் பட்டுள்ளது. 59 ஆனால் நாணயங்களில் தேவநா கிரி எழுத்தைப் பயன்படுத்தும் முறை கலிங்க வம்சத்திற்கு மட்டும் உரியதல்ல. சோழராட்சி யில் கல்வெட்டுக்கள் பெரும்பாலானவை தமிழ் வரிவடிவத்தில் எழுதப்பட்டாலும் சர்வதேச வர்த்தக நோக்கத்திற்காக நாணயங்களில் தேவ நாகிரி வரிவடிவமே பயன்பட்டுள்ளன. சோழரைப் பின்பற்றியே இலங்கையில் சிங்கள மன்னர்கள் தமது பெயரை நாணயங்களில் தேவநாகிரி வரி வடிவத்தில் எழுதியுள்ளனர். இந்நிலையில் மாதோட்ட நாணயத்தில் வரும் தேவநாகிரி வரி வடிவத்தை வைத்து அவை கலிங்கத்துத் தொடர் புடையதென வாதிடுவது பொருத்தமாகத் தெரி யவில்லை. இவ்வெழுத்துக்களின் வடிவ அமைப் புக்கள் சில கலிங்க நாட்டு தேவநாகிரி எழுத் துக்களை ஒத்திருந்தாலும், இந்த ஒற்றுமை சோழர்கால கரந்தைச் செப்பேட்டு முத்திரையில் வரும் தேவநாகிரி எழுத்தையும் ஒத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. மாதோட்ட நாண யத்தில் வரும் "சிறிராஜசேகர" என்ற வாச கத்தை யாழ்ப்பாண மன்னர்கள் பயன்படுத்தும் செகராசசேகரன், பரராசசேகரன் என்ற விருதுப் பெயர்களின் மாற்று வடிவமாக இருக்கலாம் எனக் கூறுவதன் மூலம் இந்த நாணயத்தை யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்டனர் என்ற முடிவுக்கு வருவது கஷ்டமாகும். ஏனெனில் சோழ மன்னர்களில் முதலாம் இராஜராஜ சோழன், வீரராஜேந்திர சோழன் ஆகியோரும் சிவசேகரன், 60 ராஜசேகரன் 61 என்ற சிறப் புப் பெயர்களைப் பெற்றிருந்ததற்கு சோழக் கல்வெட்டுக்களின் ஆதாரங்கள் உண்டு. இப் பெயர்கள் யாழ்ப்பாண மன்னர்களின் விருதுப் பெயர்களான பரராசசேகரன், செகராசசேகரன் பெயர்களைவிட மாதோட்ட நாணயத்தில் வரும் பெயரை அப்படியே ஒத்துள்ளது.

மாதோட்டத்தில் கிடைத்த இரண்டாவது நாணயவகை முதலாவது நாணயத்தைவிட சற் றுச் சிறிதாகும். இந்த நாணயத்தின் முன்பக் கத்தில் உள்ள நந்தி முதலாவது நாணயத்தில் வரும் நந்தியைப்போல் வலதுபுறம் பார்த்தவண் ணம் கால்களைப் பூரணமாக மடக்கிக்கொண்டு காணப்படுகிறது. நந்தியின் இருபக்கங்களிலும் குத்துவிளக்குக் காணப்படுகின்றன. நாணயத் தின் பின்பக்கத்தில் இரட்டை மீன் சித்திரிக்கப் பட்டுள்ளது (படம்-91). நாணயத்திலுள்ள நந்தி யைக் கலிங்கத் தொடர்புடையதாகக் கருதும் மகாதேவன் நாணயத்தின் பின் பக்கத்திலுள்ள இரட்டை மீன் இந்த நாணயத்தை வெளியிட்ட யாழ்ப்பாண மன்னர்களான ஆரியச் சக்கரவர்த் திகள் தமது மேலாளராகப் பாண்டியரை அங்கீ கரித்துள்ளமையை எடுத்துக்காட்டுவதாகக் கூறி யுள்ளார். 62 ஆனால் இக்கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்வதில் சில குறைபாடுகள் உள்ளன.

அ ஆ



படம் - 91. மாதோட்டத்திற் கிடைத்த நாணயம்.
(அ) முன்பக்கம் (ஆ) பின்பக்கம்

யாழ்ப்பாண மன்னர்கள் தமது ஆட்சியின் போது வெளியிட்ட நாணயங்களிலும், அரச கொடிகளிலும் நந்தியை ஒரு புனிதப் பொருளாக, அரசனின்சின்னமாகப் பயன்படுத்தியுள்ளனர். இதை யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன் றிய தமிழ் இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின் றன. செகராசசேகரமாலையில் இடம் பெற் றுள்ள பின்வரும் குறிப்பு யாழ்ப்பாணத்து அர சர் நந்திக் கொடியை தங்கள் கொடியாகக் கொண்டிருந்தனர் என்று காட்டுகிறது.

''விடைக் கொடியுஞ் சேதுவுநீள் கண்டிக
ளொன்பதும் பொறித்து
மிகைத்த கோவும்"63


இதே செய்தி கைலாய மாலையிலும், கிள்ளை விடு தூதிலும் காணப்படுவது ஈண்டு குறிப் பிடத்தக்கது.

''கொண்ட விடை காட்டுங் கொடியினான்''64
''வெற்றி விடைக் கொடியார் மேலாரியர்''
குலத்தினுற்ற.65

யாழ்ப்பாண மன்னர்களது நாணயங்களில் நந்தி இலச்சினைக்குக் கீழே சேது (செது) என்ற மொழி குலச் சின்னமாக, மங்கள மொழியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இம் மொழி நாணயங்களில் மட்டுமன்றி கல்வெட்டுக்களிலும், அரச ஆவணங்களிலும் காணப்படுகிறது. இதை தஷ்ணகைலாச புராணத்தில் காணப்படும் பின்வரும் குறிப்பும் உறுதிப்படுத்துகிறது.

''இடபவான்கொடி யெழுதிய பெருமான்
சிங்கையாதிபன் சேதுகாவலன்''66

நாணயங்களிலும் அரச கொடிகளிலும் நந்தி இலச்சினை பொறிக்கப்பட்டமைக்கு எந்த அரச வம்சத்தின் செல்வாக்குக் காரணமாக இருந்த தென்பதற்கு யாழ்ப்பாண அரசு தொடர்பான இலக்கியங்களில் ஆதாரங்கள் காணப்பட வில்லை. ஆனால் சேது என்ற மொழி இடம் பெற்றமைக்கு பாண்டி நாட்டுச் செல்வாக்கு யாழ்ப்பாண அரசின் மீது இருந்ததே காரணம் என்பதற்கு இலக்கியங்களில் ஆதாரங்கள் காணப்படுகின்றன.67 ஆயினும் பாண்டியரைத் தமது மேலாளராக ஏற்ற யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்கள் பாண்டியரின் இலச்சினையாக நாணயங்களில் பயன்படுத்திய இரட்டை மீனையும் தமது நாணயங்களிலும் பயன்படுத்தினர் என்பதற்கு இலக்கியங்களில் ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. இந் நிலையில் மாதோட்டத்தில் கிடைத்த நாணயத்திலுள்ள இரட்டை மீனைப் பாண்டியரை மேலாளராக ஏற்ற ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்கள் வெளியிட்டதாகக் கூறுவது ஏற்கக் கூடியதாக இல்லை. அதே வேளை இந் நாணயத்திலுள்ள சின்னங்கள் யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் உள்ள சின்னங்களோடு எந்தவித ஒற்றுமைத் தன்மையும் கொண்டு காணப்படவில்லை குறிப்பாக யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் உள்ள நந்தி இடது புறம் பார்த்த வண்ணமே காணப்படுகிறது (படம்-92). ஆனால் மாதோட்டத்தில் கிடைத்த நாணயத்தில் நந்தி வலது புறம்



படம்- 92. பூநகரியிற் கிடைத்த சேது நாணயம்.

பார்த்த வண்ணம் காணப்படுகிறது. ஆனால் இந்த அம்சத்தை தென்னிந்திய வம்சங்கள் வெளியிட்ட நாணயங்களில் காணமுடிகிறது. குறிப்பாகப் பாண்டிய நாணயத்தில் முன்பக்கத்தில் இரட்டை மீனும், பின்பக்கத்தில் வலதுபுறம் பார்த்த வண்ணமுள்ள நந்தியும் காணப்படுகிறது. அதே போலச் சோழ நாணயத்திலும் இந்த அம்சத்தைக் காண முடிகிறது. பொதுவாக இரட்டை மீன் நாணயங்களில் பொறிப்பது பாண்டியருக்குரிய சிறப்பம்சமாகும். ஆனால் சோழர் பிற நாடுகளை வெற்றி கொண்ட போது அந்நாட்டு நாணயங்களுக்குரிய சின்னங்களையும் தமது நாணயங்களில் பொறித்துள்ளனர். உதாரணமாக சாளுக்கியரை வெற்றி கொண்ட போது அவர்கள் பயன்படுத்திய இரட்டை மீன், அங்குசம், இரட்டை வில் முதலிய சின்னங்களைச் சோழர் தமது நாணயங்களிலும் பயன்படுத்தியுள்ளனர்.68 இதே போல் பாண்டியரை வெற்றி கொண்டதன் நினைவாக அவர்களுக்குரிய இரட்டை மீன் இலச்சினையும் சோழர் தமது நாணயங்களில் பயன்படுத்தியுள்ளனர்.69 இதற்குக் கரந்தைச் செப்பேட்டு முத்திரையில் வரும் இரட்டைமீன் சிறந்த சான்றாகும் (படம்-93). இதனால் மாதோட்டத்தில் கிடைத்த மேற்குறிப்பிட்ட நாணயத்தைப் பாண்டியர் அல்லது சோழர் வெளியிட்டதாகக் கொள்வதே பொருத்தப்பாடாகத் தெரிகிறது.

மூன்றாவது நாணய வகை 0.4 அங்குல விட்டத்தை உடைய மிகச் சிறிய செப்பு நாணயமாகும். இந் நாணயத்தின் முன்பக்கத்தில் இருக்




படம் - 93 சோழர் காலக் கரந்தைச் செப்பேட்டு முத்திரை.

கும் மன்னன் உருவமும் அருகே தேவநாகிரி வரிவடிவத்தில் ராஜராஜ என்ற பெயரும் காணப்படுகின்றது (படம்-94).

இந் நாணயத்தின் பின்பக்கத்தில் தமிழ் வரிவடிவம் பயன்படுத்தப்பட்டதற்கு கலிங்க நாட்டுடன் யாழ்ப்பாண அரசிற்கிருந்த தொடர்பு படிப்படியாகக் குறைவடைந்து சென்றதையும், தமிழ் இலக்கியம் இக்காலத்தில் வளர்ச்சியடைந்தமையும் காரணம் எனக் கூறப்படுகிறது. அத்துடன் இந் நாணயத்தை யாழ்ப்பாண மன்னர்களே வெளியிட்டனர் என்பதற்கு இதில் வரும் செகரசெகர என்ற பெயர் யாழ்ப்பாண மன்னர்கள் பயன்படுத்திய செகராசசேகரன் என்ற பெயரின் மாற்று வடிவம் எனக் காரணம் காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் மன்னனின் பெயரை நாணயங்களில் எழுதும் மரபு யாழ்ப்பாண மன்னர்களிடையே வழக்கிலிருந்தது எனவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.70

ஆனால் இக் காரணங்கள் இந் நாணயத்தை யாழ்ப்பாண மன்னர்களே வெளியிட்டனர் எனக் கூறுவதற்கு உடன்பாடாக அமையவில்லை. ஏனெனில் யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் முன்பக்கத்தில் மன்னன் உருவமும், பின்பக்கத்தில் நந்தியுடன் ஸேது என்ற மொழியும் காணப்படுகின்றன. சில நாணயங்களில் மன்னன் உருவத்திற்கு அருகே சேது என்ற மொழியும். வேறு சில நாணயங்களில் மன்னன் உருவத்திற்குப் பதிலாக தாமரையும் இடம் பெற்றுள்ளன. ஆயினும் அவற்றில் நந்தியும், சேது என்ற மொழியும் இடம் பெற்றுள்ளன. ஆனால் முன்பக்கத்தில் மன்னன் உருவத்தையும் பின்பக்



படம் - 94 மாதோட்டத்திற் கிடைத்த நாணயம்.

கத்தில் அவனது பெயரையும் கொண்ட நாணயங்களை யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்டதற்கு ஆதாரங்கள் காணப்படவில்லை. அத்துடன் ஒரே நாணயத்தில் தேவநாகிரி எழுத்தையும், தமிழையும் யாழ்ப்பாண மன்னர்கள் பயன்படுத்தியதற்குச் சான்றுகள் காணப்படவில்லை. மேலும் யாழ்ப்பாண மன்னர்கள் தாம் வெளியிட்ட கல்வெட்டுகளிலோ, நாணயங்களிலோ விருதுப் பெயரைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. அவ்வாறு பயன்படுத்தியதற்குச் "செகரசெகர" என்ற பெயர் கொண்ட நாணயத்தை உதாரணமாகக் காட்டினால் அந்நாணயத்தின் முன்பக்கத்தில் தேவநாகிரியில் எழுதப்பட்ட ராஜராஜ என்ற பெயர் யாரைக் குறித்ததென்ற கேள்விக்கு விடை காண்பது கடினமாகத் தோன்றலாம்.


இந்த நாணயத்தைச் சோழமன்னர்கள் குறிப்பாக முதலாம் இராஜராஜ சோழன் வெளியிட்ட நாணயம் எனக் கூறுவதற்கு உடன்பாடான சில காரணங்கள் உள. சோழர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் பெரும்பாலானவற்றில் முன்பக்கத்தில் அரசனின் உருவமும் பின்பக்கத்தில் அரசன் உருவத்தோடு அருகே தேவ

நாகிரி வரிவடிவத்தில் மன்னன் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன.71 சில நாணயங்களின் முன் பக்கத்தில் தேவநாகிரி எழுத்திலும் பின்பக்கத்தில் தமிழிலும் மன்னனின் சிறப்புப் பெயர் எழுதப் பட்டுள்ளன.72

ஆயினும், மாதோட்டத்தில் கிடைத்த நாணயத்தை முதலாம் இராஜராஜ சோழன் வெளியிட்ட நாணயமாக இருக்கலாம் என்பதற்குச் சில காரணங்களை எடுத்துக் காட்டலாம். அருண்மொழிவர்மன் என்ற இயற்பெயர் பெற்ற முதலாம் இராஜராஜ சோழன் சோழ வரலாற்றில் ஈட்டிய சாதனைகளுக்காகப் பல சிறப்புப் பெயர்களைப் பெற்றான். இப்பெயர்களை அவன் வெளியிட்ட கல்வெட்டுகளாலும், நாணயங்களாலும் அறியமுடிகிறது. ஆனால் கல்வெட்டுக்களால் அறியப்பட்டுள்ள அனைத்துச் சிறப்புப் பெயர்களும் நாணயங்களில் அறிய பட்டதாகக் கூறமுடியாது அதே வேளை நாணயங்களால் அறியப்பட்ட சிறப்புப் பெயர்கள் கல்வெட்டுக்களில் அறியப்பட்டதாகவும் கூறமுடியாது. உதாரணமாக இவனால் வெளியிட்டதாக அடையாளம் காணப்பட்ட நாணயமொன்றின் முன்பக்கத்தில் நந்தியும் பின்பக்கத்தில் தமிழில் கோனேரிராயன் என்ற பெயரும் காணப்படுகிறது.73 இதேபோல் இவன் வெளியிட்ட வேறு இரு நாணயங்களில் ஸ்ரீலங்கேஸ்வர, ஸ்ரீலங்கவீர என்ற பெயர்கள் காணப்படுகின்றன.74 ஆனால் இம் மூன்று சிறப்புப் பெயர்களும் முதலாம் ராஜராஜ சோழன் வெளியிட்ட கல்வெட்டுகளால் இதுவரை அறியபட வில்லை. எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்படும் கல்வெட்டுக்களால் இப்பெயர்கள் அறியப் படவும் இடமுண்டு. ஆனால் கல்வெட்டுக்களில் அறியப்பட்டுள்ள ராஜராஜசோழன், சிவபாதசேகரன் என்ற சிறப்புப் பெயர்கள் நாணயங்களிலும் உண்டு என்பதற்கு மாதோட்டத்தில் கிடைத்த நாணயத்தை ஆதாரமாகக் கொள்ளலாம் போல் தெரிகிறது. சோழக் கல்வெட்டுக்களில் ராஜராஜ சோழன் எனவரும் சிறப்புப் பெயர் ராஜராஜ சோழன் வெளியிட்ட நாணயங்களில் மிகச் சுருக்கமாக தேவநாகிரி எழுத்தில் ஸ்ரீராஜராஜ என எழுதப்பட்டுள்ளது. இப் பெயரிற்கும் மாதோட்ட நாணயத்தில் தேவநாகிரி எழுத்திலமைந்த ராஜ ராஜ என்ற பெயரிற்கும் இடையே நெருங்கிய ஒற்றுமைத் தன்மை காணப்படுகிறது. இதனால் மாதோட்ட நாணயத்தில் வரும் பெயர் முதலாம் ராஜராஜ சோழனைக் குறித்தது எனக் கருத இடமுண்டு. இக்கருத்து ஏற்றுக் கொள்ளப் படுமானால் நாணயத்தின் பின்பக்கத்தில் வரும் செகரசெகர என்ற பெயரை ராஜராஜ சோழனின் இன்னொரு சிறப்புப் பெயராக எடுத்துக் கொள்ள இடமுண்டு. மகாதேவன் செகர என்ற இப்பெயரை சேகரன் என வாசித்துள்ளார்.75 சோழக் கல்வெட்டில் வரும் சிவபாதசேகரன் என்ற பெயரிற்கும் நாணயத்தில் வரும் சேகரன் என்ற பெயரிற்கும் இடையில் ஒற்றுமை இருப்பதாகத் தெரிகிறது. இதனால் சிவபாதசேகரம் என்ற பெயரின் மாற்று வடிவமாக நாணயத்தில் வரும் செகரசெகர (சேகரன் சேகரன்) என்ற பெயர் அமைந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

எனவே வட இலங்கை அரசின் ஆரம்பத் தலைநகர் சிங்கை அல்லது சிங்கை நகர் என்ற பெயர் பெற கலிங்க நாட்டுச் சிங்கபுரத் தொடர்பே காரணம் என்பதற்கு நாணயங்களைச் சான்றாதாரமாகக் காட்டப்பட்டுள்ளமை மறுபரிசீலனை செய்யப்படவேண்டும் போல் தெரிகிறது. இதற்குச் சார்பாக பதவியா முத்திரையையும், மாதோட்ட நாணயங்களையும் சான்றாதாரங் காட்டியுள்ளமை ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. அதிலும் யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் வரும் நந்தியைக் கலிங்க தொடர்புடையவையெனக் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. மாறாக இலங்கையுடன் குறிப்பாக வடஇலங்கையுடன் பாரம்பரிய உறவு கொண்டிருந்த தமிழ் நாட்டு வம்சங்கள் வெளியிட்ட நாணயங்களில் வரும் நந்தியுடன் தொடர்பு படுத்தி ஆராய்வது பொருத்தமாகத் தெரிகிறது. பல்லவ மன்னர்களின் அரச கொடியாக நந்திக் கொடியே பயன்படுத்தப் பட்டுள்ளது. 76 அவர்கள் வெளியிட்ட நாணயங்களிலும் நந்தி பொறிக்கப்பட்டுள்ளது. ஆயினும் பல்லவச் செல்வாக்கு யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் இருந்திருக்கும் எனக் கூறுவது கடினமாகும். யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் முன்பக்கத்தில் அரச உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த அம்சம் பல்லவர்கால நாணயங்களில் இருந்ததாகத் தெரி

யவில்லை. பாண்டிய நாணயங்களில் இந்த அம்சம் பின்பற்றப்பட்டாலும் யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட ஆரம்ப நாணயங்களின் வடிவ அமைப்பு அப்படியே சோழ நாணயங்களை ஒத்துள்ளன. 77 அத்துடன் யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களைப் போல் சோழ மன்னா வெளியிட்ட நாணயங்களில் உள்ள நந்தி இடது புறம் பார்த்த வண்ணமும் உள்ளது (படம் 95). தமிழர் பண்பாட்டில் நந்தி ஒரு



படம்- 95. சோழநாணயம்.

புனிதச் சின்னமாக மதிக்கும் மரபு நீண்ட காலமாக பின்பற்றப்பட்டு வருகிறது. அம்மரபு பௌத்த சிங்களப் பண்பாட்டிலும் பின்பற்றப்பட சோழர் ஆட்சிக் காலமே காரணமாகும். சோழராட்சிக்கு முன்னர் இலங்கையிலுள்ள பௌத்த விகாரைகளிலும், ஸ்தூபிகளிலும் வாசல்படியாக அமைந்த சந்திரவட்டக் கல்லில் எருது (நந்தி) முக்கிய கலைச்சின்னமாக அலங்கரிக்கப்பட்டன. ஆனால் சோழர் ஆட்சியோடு அம்மரபு நீக்கப்பட்டது. சோழர் ஆட்சிக்குப் பின்னரும் அம்மரபு பௌத்த சிங்கள மக்களால் மதிக்கப்பட்டது. வடஇலங்கையில் சுதந்திர தமிழரசு தோற்றம் பெற சோழர் ஆட்சிக்கால விளைவு முக்கிய காரணங்களில் ஒன்று என்பதை அறிஞர்கள் பலரும் ஏற்றுள்ளனர். அதன் காரணமாகவே வடஇலங்கை (யாழ்ப்பாண) மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களிலும் நந்தி ஒரு புனிதச்சின்னமாக பொறிக்கப்பட்டதெனக் கருத இடமுண்டு.

2. கலிங்க நாட்டுக் கங்கவம்சத்து மன்னர்கள் கங்கை நாடார், கங்கை ஆரியன் போன்ற விருதுப் பெயர்களைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. இப்பெயர்களை யாழ்ப்பாண மன்னர்களும் பயன்படுத்தியுள்ளனர் என்பதற்கு இலக்கியங்களில் ஆதாரங்கள் காணப்படுகின்றன. இப்பெயர் ஒற்றுமை வட இலங்கை அரசின் ஆரம்ப தலைநகர் சிங்கை அல்லது சிங்கைநகர் என்ற பெயர்பெறக் கலிங்கநாட்டுச் சிங்கபுர தொடர்பே காரணம் என்பதை உறுதிப்படுத்துவதாக கூறப்படுகிறது. 78

பெயர் அடிப்படையில் ஒற்றுமையுண்டு என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றாகும். அதனால் கலிங்க நாட்டுத் தொடர்பால்தான் யாழ்ப்பாண மன்னர்கள் இப்பெயரைப் பெற்றதாகக் கூறிவிடமுடியாது. ஏனெனில் கலிங்கத்தை வெற்றி கொண்ட சோழமன்னர்களும் இவ்வகைப் பெயர்களைப் பயன்படுத்தியதற்கு ஆதாரங்கள் உண்டு குறிப்பாக முதலாம் இராஜேந்திர சோழனின் சிறப்புப் பெயர்களில் ஒன்று கங்கை கொண்ட சோழன் என்பதாகும். 79 இதனால் சோழவம்சத் தொடர்பாலும் யாழ்ப்பாண மன்னர்கள் இப்பெயர்களைப் பெற்றிருக்கலாம் என வாதிட இடமுண்டு. இதற்கு யாழ்ப்பாண மன்னர்கள் பயன்படுத்திய சிங்கையாரியன், சேது காவலன், செகராசசேகரன், பரராசசேகரன் முதலான பெயர்கள் ஏற்பட்டதற்கான காரணங்களை நோக்குவது பொருத்தமாகும்.

நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு தோன்ற முன்னர் கலிங்கமாகன், சாவகன், அவன் மைந்தன் ஆகிய மன்னர்களது அரசு வடஇலங்கையில் இருந்ததை சூளவம்சத்தாலும், பாண்டியரின் குடுமியாமலைக் கல்வெட்டாலும் அறிய முடிகிறது. ஆனால் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட பாண்டியப் படையெடுப்புக்களின் விளைவாக வட இலங்கையில் அமைந்திருந்த அரசிலே பாண்டியரின் மேலாதிக்கம் ஏற்பட்டது. முடிவில் பாண்டி நாட்டு பிரதானி ஆரியச்சக்கரவர்த்தியின் ஆட்சி தோன்றியது. 80 இப்பெயரோடு தலைநகரின் பெயரும் இணைந்து கொண்டதையே சிங்கை ஆரியன் என்ற சிறப்புப் பெயர் யாழ்ப்பாண மன்னர்களுக்கு ஏற்படக் காரணமாகும்.

ஆரியச்சக்கரவர்த்தி வழிவந்த மன்னர்கள் பயன்படுத்திய இன்னொரு சிறப்பு பெயர் சேது காவலன் என்பதாகும். இதற்கு இம்மன்னர்கள் பாண்டிநாட்டு செவ்விருக்கை நாட்டு சேது தலங்களுடன் கொண்ட தொடர்பு ஒரு காரணமாகும். இது பற்றிப் பத்மநாதன்கூறிய கருத்து நோக்கத் தக்கது:-

''பதின்மூன்றாம் நூற்றாண்டிலே பாண்டி நாட்டிலே தளபதிகளாகஇருந்த செவ்விருக்கை நாட்டைச் சேர்ந்த ஆரியச் சக்கரவர்த்திகள் சேதுகாவலன் என்ற விருதினைத் தாங்கியிருத்தல் வேண்டும். அது காலப்போக்கிலே குலவிருதாகியதும் அவர்களின் மரபில் வந்த யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகளும் அவ்விருதினைத் தாங்கி வந்தனர் என்று கொள்ளுதல் சாலப் பொருந்தும். பதினேழாம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்து அரச குலம் அழிந்ததும் சேதுகாவலன் என்ற விருது இராமநாதபுரத்து சேதுபதிகளுக்கே உரிமையாகியது.''81

சோழ மன்னர்கள் மாறிமாறிச் சூடிக்கொண்ட இராசகேசரி, பரகேசரி என்ற பட்டப் பெயர்களைப் போல் யாழ்ப்பாண மன்னர்கள் செகராசசேகரன், பரராசசேகரன் என்ற சிம்மாசனப் பெயர்களைப் பயன்படுத்திக் கொண்டனர். இப் பெயர்கள் எந்த அரச வம்சத்து செல்வாக்கால் ஏற்பட்டதெனத் திட்டவட்டமாகக் கூற முடியாதிருக்கிறது. மகாதேவன் மாதோட்டத்தில் கிடைத்த நாணயத்தில் தமிழில் வரும் 'செகர செகர' என்ற பெயரை யாழ்ப்பாண மன்னர்கள் பயன்படுத்திய செகராசசேகரன் என அடையாளம் கண்டுள்ளார். அவர் இந் நாணயத்தை யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்டதாகக் கூறியிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் அதிலுள்ள பெயர் செகராச சேகரனைக் குறித்ததெனக் கூறுவது பொருத்தமாகத் தெரிகிறது (செகரா(ச)சேகர(ன்). இந் நாணயமும் அதிலுள்ள பெயரும் முதலாம் இராஜராஜ சோழனின் காலத்துடன் நெருங்கிய தொடர்புடையதென்பதற்குச் சில ஆதாரங்கள் காட்டப்பட்டுள்ளன (137ஆம் பக்கம் பார்க்க). இதனால் யாழ்ப்பாண மன்னர்கள் பயன்படுத்திய செகராசசேகரன் என்ற சிம்மாசனப் பெயர் சோழச்செல்வாக்கால் ஏற்பட்டிருக்கலாம் என எண்ணத் தூண்டுகிறது.

யாழ்ப்பாண மன்னர்கள் பயன்படுத்திய இன்னொரு சிம்மாசனப் பெயர் பரராஜசேகரன் என்பது ஆகும். இப்பெயரை யாழ்ப்பாண மன்னர்கள் எக்காலத்திலிருந்து பயன்படுத்தத் தொடங்கினர் என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் காணப்படவில்லை. தமிழ்நாட்டு மன்னர்களிடையே இப்பெயரைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்ததா என்பது தெரியவில்லை. ஆனால் 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் 2ஆம் பாண்டிய பேரரசு எழுச்சியடைந்த கட்டத்தில் சோழர் பக்கத்தில் இருந்த பரராச என்பவனை பாண்டியர் வெற்றி கொண்டதாக ஒரு செய்தி காணப்படுகிறது. அச்செய்தி 1ஆம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 2வது ஆட்சியாண்டுக்குரிய (1236) திருக்கோளூர் சாசனத்தில் காணப்படுகிறது. அச்சாசனத்தின் முக்கிய பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது:

''தஞ்சையுமுறந்தையுஞ் செந்தழல் கொளுத்திக்
காவியுநீலமுநின்றுகவினிழ(க்க)ற்ற
வாவியுமாறுமணிநீர்நலனழித்துக்
கூடமுமாமதிளுங் கோபுரமுமாடரங்கு
மாடமுமாளிகையுமண்டபமும் பலவிடித்து
தொழுதுவந்தடை(5)யாநிருபர்தநடு தாகையர்(?)
அழுதகண்ணும் நிராவபபநிக்(?)
கழுதைகொடுழுதுகவடிவிச்சக்
செம்பியனைச் சினமிரியப்பொருநுசுரம்புக வோட்டிப்
பைம்பொன்மணிமுடிதரித்துப்பாணன னுக்குக் கொடுத்தருளிப்
பாடருஞ்சிறப்பிற்பரு(வி)திவாநேரயு
மாடகப்புரிசையாயிரத்தளியிற்
சேராவளவனபிஷே கமண்டபத்து
வீராபிஷேகஞ்செய்து புகழ்விரித்து
நாடும் பரராச நாமத்தலைபிடுங்(6)கி
மூடுந்கறுகண்மத(சா)யானைமேல்கொண்டு
நீராழிவைய முழுதும் பொதுவொழித்த
கூராழியுஞ்செய்யதோளுமேகொண்டு
பொ-ஜெய்யப்படர்த(?) வருமறைசேரந்தணர் வாழ்
தெய்வப்புலியூர்த்திருவெல்லையிற்புக்கு''82

இச்சாசனத்திலிருந்து 3ஆம் இராஜராஜ சோழன் ஆட்சியில் பாண்டி நாட்டின்மீது படை எடுத்த சுந்தரபாண்டியன் படைவீரர்கள் சோழ நாட்டைக் கைப்பற்றி அதன் பழைய தலை நகரங்களான தஞ்சாவூரையும், உறையூரையும் தீயிட்டுக் கொழுத்தி பல மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், ஆடலரங்களும் இடிக்கப் பட்டு சோழர் சார்பாக இருந்த பரராச என்பவனை வெற்றி கொள்ளப்பட்ட (பரராச நாமத்தலை பிடுங்கி) செய்தியை அறிய முடிகிறது. பாண்டியரின் இந்த வெற்றியால் தோல்வியடைந்த சோழ மன்னன் தன் உரிமைச் சுற்றத்தாருடன் தலைநகரை விட்டு நீங்க, வெற்றி வாகை சூடிய பாண்டிய மன்னன் சோழரின் தலைநகராகிய முடிகொண்ட சோழபுரத்திலுள்ள ஆயிரத்தளி அரண்மனையில் இருந்த சோழ மன்னனது அபிடேக மண்டபத்தில் வீர அபிடேகம் செய்துகொண்டான் என்பதையும் அறிய முடிகிறது. ஆனால் இச்சாசனத்தில் பாண்டியர் வெற்றி கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் பரராச எனப்பட்டவன் யாரென்பதைச் சரியாக அறிந்துகொள்ள முடியவில்லை.

இராசநாயகம் முதலியார் சாசனத்தில் வரும் பெயர் யாழ்ப்பாண மன்னர்களான பரராஜசேகரன் அல்லது பரராஜசிங்கன் என்போரைக் குறித்ததெனவும், அவன் சோழர் சார்பாக பாண்டியருக்கு எதிராகப் படை எடுத்த யாழ்ப்பாண மன்னன் எனவும் கூறுகின்றார்.[83]

சாசனத்தில் இடம்பெற்றுள்ள பெயரிற்கும், யாழ்ப்பாண மன்னர்கள் பயன்படுத்திய பரராஜசேகரன் என்ற சிம்மாசனப் பெயரிற்கும் இடையே பெயரடிப்படையில் ஒருவித ஒற்றுமை இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் அந்த ஒற்றுமையைக் கொண்டு அவனை யாழ்ப்பாண மன்னன் என அடையாளம் காண்பதற்கு உறுதியான ஆதாரங்கள் காணப்படவில்லை. அதே வேளை இக்காலத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு ஒன்று தோன்றியிருக்கவும் இல்லை [84] ஆனால் பெயர் அடிப்படையில் உள்ள ஒற்றுமையைக்கொண்டு ஒருவித உண்மை இருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. அந்த உண்மை பரராஜசேகரன் என்ற பெயருடைய மன்னர்கள் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசினை ஆட்சி செய்ய முன்னதாக அப்பெயர் வட இலங்கையிலோ அல்லது தமிழ் நாட்டிலோ ஆட்சி புரிந்த மன்னர்களுக்கு அல்லது அரசவம்சத்தோடு தொடர்புடையவர்களுக்கு இருந்திருக்கலாம் என்பதாகும்.

யாழ்ப்பாண மன்னர்களது பெயர்களுக்கும் தமிழ்நாட்டு மன்னர்கள் பயன்படுத்திய பெயர்களுக்குமிடையே தொடர்பு இருப்பது போல் தமிழ்நாட்டு மன்னர்களது ஆட்சியில் பயன்படுத்தப்பட்ட நிர்வாக அதிகாரிகளுக்குரிய பெயர்களிலும் ஒருவித ஒற்றுமை காணமுடிகிறது. யாழ்ப்பாண அரசுகால நிர்வாகத்தில் அதிகாரி, முதலி, கங்காணி, உடையார், தலையாரி, அடம்பனார், பட்டாங்கட்டி என்ற பெயரில் பல நிர்வாகிகள் கடமையாற்றியதாகத் தெரிகிறது.[85] இப்பெயர்களுக்கும் கலிங்கவம்சத்து மன்னர்களது நிர்வாகிகளது பெயர்களுக்குமிடையே ஒற்றுமையிருப்பதாகத் தெரியவில்லை. சோழச் செல்வாக்கால் இப்பெயர்களை உடைய நிர்வாகிகள் சிலர் பொலநறுவைக்கால சிங்கள நிர்வாகத்தில் கடமையாற்றியதற்கு ஆதாரங்கள் உண்டு. உதாரணம் இலங்கையின் ஆட்சி ஆவணங்களில் அதிகாரி, தமிழதிகாரி என்ற சொற்கள் பத்தாம் நூற்றாண்டிலிருந்து இடம்பெறுகின்றன. 4ஆம் கஸபனது காலத்தில் உதுர் பாண்டிரதுன் என்ற ஓர் அதிகாரி இருந்தான். முதலாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் (கி. பி. 1153-1186) அதிகாரி என்னும் பட்டத்தைப்பெற்ற பல பிரதானிகள் இருந்தனர். நிஸங்மல்லன் கால (கி. 1187-1196) அமைச்சரவையில் மூன்றுக்கு மேற்பட்ட அதிகாரிகள் இருந்தனர். யாழ்ப்பாண நிர்வாகத்தில் மன்னனின் நேரடி ஆதிக்கத்துடன் இருந்த பிரதேசங்களுக்கு பொறுப்பாக அதிகாரி என்ற பட்டத்தை உடையவர்கள் இருந்தனர்.[86] ஆனால் சிங்கள நிர்வாகத்தில் அதிகாரி தனியொரு பிரதேசத்திற்குப் பொறுப்பாக இருந்ததற்கு சான்றில்லை. ஆயினும் இலங்கையில் இப்பெயர் முதலில் ஏற்பட சோழத் தொடர்பே காரணம் எனலாம். ஆனால் காலப்போக்கில் இவ்வதிகாரியின் கடமையும், பதவியும் மாற்றமடைந்திருக்க இடமுண்டு. இதேபோல் யாழ்ப்பாண நிர்வாகத்தில் இருந்த ஏனைய பெயர்கள் சோழ, பாண்டிய, நாயக்கர் கால நிர்வாகத்தில்

பயன்படுத்தப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. இவையனைத்தும் சோழத்தொடர்பால் ஏற்பட்டதெனக் கூறமுடியாவிட்டாலும் சோழ நிர்வாகத்தில் இவை பயன்படுத்தப்பட்டமை இங்கு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

3. சிங்கை அல்லது சிங்கைநகர் என்ற பெயர் ஏற்படக் கலிங்க நாட்டுச் சிங்கபுரத் தொடர்பே காரணம் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனாற் சிங்கபுரம் என்ற பெயர் கலிங்க நாட்டுத் தலை நகரங்களுக்கு மட்டும் இருக்கவில்லை. தமிழ் நாட்டிற் சோழத் தலை நகரங்களுக்கும் இப் பெயர் இருந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. குறிப்பாக முதலாம் பராந்தகன் காலத் தலைநகரங்களில் ஒன்று சோழ சிங்கபுரம், சிங்கபுர நாடு எனப் பெயர் பெற்றிருந்ததை இங்கு குறிப்பிடலாம்.81 இதனாற் சிங்கை அல்லது சிங்கை நகர் என்ற பெயர் ஏற்படச் சிங்கபுரத் தொடர்பே காரணம் என எடுத்துக் கொண்டால் அது கலிங்கத் தொடர்பால் ஏற்பட்டதெனக் கூறுவதை விட சோழத் தொடர்பால் ஏற்பட்டதெனக் கூறுவதே பெருமளவு பொருத்தமாகும். பொலநறுவையில் கலிங்க வம்சத்து மன்னர்கள் பலர் நீண்டகாலம் ஆட்சி செய்தும் கூட அவர்களின் தாய் நாட்டுப் பெயர்களை நினைவுபடுத்தும் பெயர்கள் இலங்கையில் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதிலும் கூட வட இலங்கையிற் கலிங்க மாகனைத் தவிர ஏனைய கலிங்க மன்னர்களின் ஆதிக்கமோ அல்லது கலிங்க நாட்டுச் செல்வாக்கோ ஏற்பட்டதெனக் கூறக் கூடிய சான்றுகள் இல்லையென்றே கூறலாம். ஆனாற் சோழர் ஆட்சியில் வட இலங்கை அவர்களது கூடிய செல்வாக்கிற்கு உட்பட்டிருந்ததுடன் அவர்களது ஆதிக்கத்திற்குட்பட்ட பல நகரங்கள் சோழர்காலப் பெயர்களைப் பெற்றிருந்தன. இதைப் பொலநறுவை, பதவியா, திருகோணமலை, மாதோட்டம் ஆகிய இடங்களிற் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. 88 இதே போல் சிங்கபுரம்என்ற பெயரும் சோழர் காலத்தில் இலங்கையிலிருந்த ஒரு நகரத்திற்கு இருந்திருக்கலாம் எனக்கருத இடமுண்டு.

ஆனால் தமிழ்நாட்டில், சோழராட்சிக்காலத்தில் கொங்கு மண்டலத்திலுள்ள நாடு ஒன்று சிங்கை என்ற பெயராற் குறிக்கப்பட்டதற்குச் சான்றுகளுண்டு. இப்பெயரை நோக்கும் போது தமிழரசின் ஆரம்பத் தலைநகரான சிங்கை அல்லது சிங்கைநாடு என்ற பெயர் சிங்கபுர என்ற பெயரிலிருந்து மருவிய வடிவமென்று கூறுவதை விட கொங்கு மண்டலத்திலுள்ள சிங்கையென்ற நாட்டுடன் கொண்ட தொடர்பால் ஏற்பட்டதெனக் கூறுவது பெருமளவு பொருத்தமாகத் தெரிகிறது.

சிலப்பதிகாரம் பண்டைய தமிழகத்திலுள்ள நாடுகளாக சேர, சோழ, பாண்டிய மண்டலங்களுடன் தொண்டை மண்டலத்தையும், கொங்கு மண்டலத்தையும் கூறுகிறது.89 சோழ மண்டலத்திற்கும் சேர மண்டலத்திற்கும் இடையில் அமைந்த இக் கொங்கு மண்டலம் சங்க காலத்தில் கொங்கு வேளிர் என்ற சிற்றரசர்களால் ஆளப்பட்டது. இந்நாட்டின் மீது சேர, சோழ, பாண்டியச் சிற்றரசர்கள் அடிக்கடி படையெடுத்த போதிலும் கி. பி. 6ஆம் நூற்றாண்டு வரை ஒரு மன்னன் ஆளுகைக்கு உட்பட்ட சுதந்திர நாடாகவே விளங்கிற்று. ஆனால் கி. பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து பல்லவ, பாண்டிய, சோழ வம்சங்கள் தென்னிந்தியாவில் பேரரசாக எழுச்சியடைந்த போது கொங்கு நாடு தனது தனித்துவத்தை இழந்து அப்பேரரசுகளின் நிர்வாக ஆதிக்கத்திற்கு உட்பட்டது. தமிழ்நாட்டில் சோழப் பேரரசின் ஆதிக்கத்தை ஆரம்பித்து வைத்த முதலாம் ஆதித்த சோழன் கி. பி. 894 இல் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து வெற்றி கொண்டான் எனக் கொங்குதேசராசாக்கள் வரலாறு என்ற நூலும், சேலம், திருச்செங்கோடு ஆகிய இடங்களிற் கிடைத்த சோழக்கல்வெட்டுக்களும் கூறுகின்றன.90 முதலாம் பராந்தக சோழன் ஆட்சியில் இக் கொங்கு நாடு முழுவதும் சோழர் ஆதிக்கத்திற்குள் வந்ததை இவனாட்சி தொடர்பாகக் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. முதலாம் இராஜராஜ சோழன் ஆட்சியில் இவன் ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகள் ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவற்றுள், கொங்கு நாடு முடிகொண்ட சோழ மண்டலம் என்ற பெயரைப் பெற்றது. இப் பெயர் வீரராஜேந்திர சோழன் காலத்தில் அதிராஜக மண்டலம் எனவும், விக்கிரமசோழன் காலத்தில் வீரசோழமண்டலம் எனவும், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில்

சோழகேரள மண்டலம் எனவும் பெயர் பெற்றது.[91] சோழரது ஆதிக்கம் கொங்கு நாட்டில் நீண்டகாலம் நிலவியதனால் சோழரது ஆட்சி அங்கு மறைந்த பின்னர் எழுச்சிபெற்ற சிற்றரசர்கள் தம்மைச் சோழ வம்சத்தவர் எனக் கூறிக் கொண்டதோடு சோழ மன்னர்களுக்குரிய விருதுப் பெயர்களையும், பட்டப்பெயர்களையும் சூடிக்கொண்டனர். இதனால் இவர்கள் கொங்குச் சோழர்கள் எனவும் கூறப்பட்டனர். கி. பி. 12ஆம் நூற்றாண்டில் சோழவம்சம் தென்னிந்தியாவில் வீழ்ச்சியடைந்தபோது அங்கு எழுச்சியடைந்த பிற வம்சங்கள் கொங்கு நாட்டின்மீது மாறிமாறி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின.

இக்கொங்கு நாட்டிற்கும் இலங்கைக்குமிடையே ஆதிகாலம் தொட்டு நிலவிய நெருங்கிய உறவு பற்றி வரலாற்று ஆசிரியர்கள் யாரும் ஆய்வு செய்ததாகத் தெரியவில்லை. அதிலும் தமிழரசின் தோற்றம் தொடர்பான ஆய்வில், கொங்கு நாடு கவனத்தில் எடுத்துக் கொள்ளப் பட்டதாகக் கூறுவதற்கில்லை. கொங்கு நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட உதயணன் பெருங்கதை ஆசிரியர் (இவர் 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனக் கருதப்படுகிறவர்) தமிழ் நாட்டைச் சுற்றிவர உள்ள நாடுகளாக ஈழத்தையும், சிங்களத்தையும் கூறுகிறார். இக்கூற்றை இலங்கைக்கும், கொங்கு நாட்டிற்குமிடையேயிருந்த உறவுக்கு ஒரு சான்றாக எடுத்துக் கொள்ளலாம். 10ஆம் நூற்றாண்டில் சோழராட்சி இலங்கையிலும், கொங்கு நாட்டிலும் நிலவியபோது இந்நாடுகளுக்குமிடையே நெருங்கிய வர்த்தகத் தொடர்புகள் இருந்ததாகத் தெரிகிறது. இதை உறுதிப்படுத்தும் கொங்கு நாட்டு நாணயங்கள் சில மன்னார் மாவட்டத்திற் கிடைத்துள்ளன.[92] 11ஆம், 12ஆம் நூற்றாண்டில் சோழர்கால வணிககணங்கள் இலங்கையிற் செயல்பட்டபோது கொங்கு நாட்டவர் அவ்வணிகக் கணங்களில் வணிகர்களாகவும், போர்வீரர்களாகவும், தொழில் வினைஞர்களாகவும் செயல்பட்டனர் என்பதை இலங்கையிற் கிடைத்த கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன.[93] 13ஆம் நூற்றாண்டில் வீரபாண்டியன் வட இலங்கைமீது படையெடுத்து அங்கு ஆட்சி செய்துகொண்டு இருந்த சாவகமன்னனை வெற்றி கொண்டதாகக் குடுமியாமலைக் கல்வெட்டுக் கூறுகிறது. இதே செய்தி கொங்கு நாட்டிலுள்ள வீரபாண்டியனது கல்வெட்டில், கொங்கு நாட்டு வெற்றியோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளது. அக்கூற்றுப் பின்வருமாறு அமைந்துள்ளது.[94]

'கொங்குகிழம் கொண்டு கொடுவடுகு
கோடழித்து
கங்கை இருகரையும் காவிரியும்
கைக்கொண்டு'

கி. பி. 1607 ஆம் நூற்றாண்டுக்குரிய சேதுபதிகள் பட்டயத்தில் கொங்கு நாட்டுடன் ஈழமும், யாழ்ப்பாணமும் தனித்தனியாகக் கூறப் பட்டுள்ளன[95]

'ஈளமுங் கொங்கும் யாழ்ப்பாணப்
பட்டணமும்
இம்மண்டமுமளித்து கெச வேடை
கொண்டருளிய'

இவ்வாறு கூறப்பட்டமைக்கு ஈழத்தில் யாழ்ப்பாணம் தனி இராச்சியமாக இருந்ததே காரணம் எனக் கூறப்படுகிறது.[96] இவ்வாறே 17ஆம், 18ஆம் நூற்றாண்டுக்குரிய மராட்டியச் செப்பேடுகளில் கொங்குநாட்டுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் கொங்கணேசுவரர் கோயிலில் உள்ள மூன்று செப்பேடுகள் தஞ்சைக் கோயிலுக்குக் கொங்கு நாடும், ஈழமும், யாழ்ப்பாணமும் செய்த திருப்பணிகள் பற்றிக் கூறுகின்றன.[97] 17ஆம், 18ஆம் நூற்றாண்டில் எழுந்த கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை முதலான தமிழ் நூல்கள் கொங்கு நாட்டிலிருந்து வந்து யாழ்ப்பாணத்திற் குடியேறியவர்கள் பற்றிக் கூறுகின்றன.[98] இந்நூல்களை அடிப்படை ஆதாரமாக வைத்து யாழ்ப்பாணக் குடியேற்றம்பற்றி ஆராய்ந்த சிலர் அதற்குச் சான்றாகக் கொங்கு நாட்டிலுள்ள காரமடை, கல்லார், கொங்கு நாடு, தொளசம்பட்டி, மானா முதலான இடப்பெயர்கள் யாழ்ப்பாணத்தில் நெடுந்தீவு (காராமட்டை), மல்லாகம் (கல்லாரை), ஆவரங்கால் (கொங்கவோடை), மயிலிட்டி (தொருசம்பத்தை) ஆகிய இடங்களில் இருப்பதைச் சுட்டிக் காட்டினர்.[99] கொங்கு நாட்டிற்குரிய இடப்பெயர்கள் யாழ்ப்பாணத்தில் இருப்பது மட்டுமன்றி அந்நாட்டிலுள்ள குதிர

மலை, கோகர்ணம், குருந்தமலை முதலான இடப் பெயர்கள் 100 வடஇலங்கையில் புத்தளம், மன்னார்ப் பிராந்தியம் (குதிரைமலை), முல் லைத்தீவு, பூநகரி (குருந்தனூர்மலை, குருந்தன் குளம்), திருக்கோணமலை (கோகர்ணம்) ஆகிய இடங்களில் இருப்பதைக் காணலாம். இவ்விடப் பெயர்கள் மூன்றும் 13ஆம் நூற்றாண்டிற்கு முன் பாக இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருந்ததைப் பாளி இலக்கியங்கள் வாயி லாக அறியமுடிகிறது. இதேபோல், கொங்கு மண்டலக் காங்கேயன் நாட்டிற்கும் காங்கேசன் துறைக்குமிடையிலான தொடர்பு ஆராயத்தக் கது. எனினும் இவ்விடப்பெயர்கள் அனைத்தை யும் கொங்கு நாட்டைத் தொடர்புபடுத்தும் உண்மைச் சான்றுகளாகவோ பழமையானவை யென்றோ அல்லது ஒரு பக்க உறவினால் மட் டும் ஏற்பட்டவையென்றோ திட்டவட்டமாகக் கூறமுடியாதிருக்கிறது. ஆனால் யாழ்ப்பாண வேளாள சமூகத்தின் ஒரு பிரிவினர் தம்மைக் கொங்குவேளாளர் எனவும் சிங்கமாப்பாணர் பரம் பரையெனவும் இன்றும் கூறுவதை நோக்கும் போது கொங்கு நாட்டுடனான தொடர்பை நிரா கரிக்கவும் முடியாதிருக்கிறது.

மேற்கூறப்பட்ட ஆதாரங்கள் கொங்கு நாட் டிற்கும் இலங்கைக்கும் சிறப்பாகத் தமிழ் மக்க ளிற்குமிடையிலான உறவை வெளிப்படுத்தி நின் றாலும், அந்த உறவில், சோழராட்சி கொங்கு நாட்டில் நிலவியபோது இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கன. சங்க காலத்தில், கொங்கு மண்டலத்தில் 24 நாடுகள் காணப்பட்டன. சோழர் காலத்திலும் அந்நாடுகள் பெரும்பாலும் அதே பெயர்களாற் குறிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது.101 அந்நாடுகளில் காங்கேயன் என்ற நாட்டிற்குச் சிங்கையென்ற மறுபெயர் இருந்தது.102 இப் பெயர் சோழராட்சிக்கு முன்னர் இருந்ததற்குச் சான்றுக்கள் காணப்படவில்லை. அப்படியிருந் தாலும் சோழராட்சியில் இச்சிங்கை நாடு சில சிறப்பியல்புகளைப் பெற்றிருந்தது. இச்சிங்கை நாட்டைச் சேர்ந்த கொங்கு வேளாளத் தலை வர்கள் பல்லவருக்கும், சோழருக்கும் இடையே நடந்த போராட்டத்தில், பல்லவருக்கு எதிராகப் போரிட்டுச் சோழருக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்ததால் சோழ மன்னர்கள் இவர்களுக் குப் பல்லவராயர் என்னும் சிறப்புப்பட்டத்தைக் கொடுத்தனர். இதனால் இவர்கள் சிங்கைப் பல் லவராயர் எனவும் குறிக்கப்பட்டனர்.103 இவர் கள் சிறந்த தமிழ் அறிவு உடையவர்கள் எனவும், தமிழ்ப் புலவர்களைப் போற்றும் பெருங் குணம் படைத்தவர்கள் எனவும் கொங்கு நாட்டு இலக் கியங்களிற் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இவர் கள் சிறந்த போர்வீரர்களாகவும் இருந்ததினால் இவர்களின் வீரத்தைப் பாராட்டி சோழர் கொடுத்த மறுபெயர் மும்முடிப் பல்லவராயர் என்பதாகும்.104

இக்கொங்கு நாடு சோழருடன் இணைந்து அரசியலிலும், வர்த்தகத்திலும் ஈடுபட்டதினால் சோழராட்சி இலங்கையில் இடம்பெற்றபோது இக்கொங்கு நாட்டின் செல்வாக்கு முற்பட்ட காலங்களைவிடக் கூடுதலாக இருந்திருக்குமெனக் கருத இடமுண்டு. முதலாம் பராந்தகன் ஆட்சி யில் நடைபெற்ற சோழ, சிங்களப் போராட் டத்தில் கொங்கு நாட்டுக் குறுநில மன்னனும் கீழைப்பழுவூரில் இருந்த சிற்றரசனாகிய பழு வேட்டரையன் கண்டன் அமுதன் வெள்ளூரில் சிங்களப் படைவீரர்களை எதிர்த்துப் போரிட் டுச் சிங்களப் படையைத் தோற்கடித்தான்.105 இரண்டாம் பராந்தகன் ஆட்சியில் அவன் சார் பாகக் கொங்கு நாட்டைச் சேர்ந்த பராந்தகன் சிறிய வேளன் இலங்கைமீது படையெடுத் தான். இவன் இலங்கையில் நடந்த போராட் டத்தில் சிங்களப்படையிடம் தோல்வியடைந்து இறந்தான் என்ற செய்தி ஈழத்துப்பட்ட கொடும் பாளூர் வேளான் என்ற கல்வெட்டின் மூலம் அறியக் கிடக்கிறது.106 முதலாம் பராக்கிரம பாகு காலத்தில் மதுரையில் நடந்த சிங்கள, சோழப் போராட்டத்தில் கொங்குநாட்டுப் படை வீரர்கள் சோழருடன் இணைந்து சிங்க ளப் படைவீரர்களைத் தோற்கடித்தனர்.107

சோழருடன் அரசியலில் இணைந்து செயற் பட்ட கொங்கு நாட்டவர் சோழர் காலத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த ஞானதேசி கர், திசையாயிரத்து ஐநூற்றுவர் முதலான வணிக கணங்களில் வர்த்தகர்களாகவும், படை வீரர்களாகவும் செயல்பட்டதை இலங்கையிற் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. இலங்கையில் வாகல்கட என்ற இடத்திற் கிடைத்த திசையாயிரத்து ஐநூற்றுவரின்மெய்க்

கீர்த்திச் சாசனத்தில் கொங்குநாட்டு வாட்படை வீரரை இவ்வணிக கணம் கொண்டிருந்ததாக கூறுகிறது. இவ்வணிக கணங்கள் இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் மட்டுமன்றிப் இராணுவப் படையமைப்புக்களை வைத்திருக்கவும், சுயாட்சி கொண்ட நகரங்களை உருவாக்கவும், கலாசார முயற்சியில் ஈடுபடவும் காரணமாக இருந்தன. இதில் அங்கத்துவம் வகித்த பல்வேறு சமூகப் பிரிவினரும், சோழராட்சியில் தென்னிந்தியாவின் பல்வேறு இடங்களில்இருந்து படைவீரர்களாக, நிர்வாகிகளாகக் கலைஞர்களாக இலங்கையில் வந்து குடியேறியோரும் 1070 இல் சோழராட்சி பொலநறுவையிலிருந்து அகன்றதன் பின்னர் மீண்டும் தென்னிந்தியாவுக்குச் சென்றதாகத் தெரியவில்லை, மாறாக அவர்களிற் பெரும்பாலானோர் இலங்கையிலே நிரந்தரமாகத் தங்கிக் கொண்டனர். அவ்வாறு குடியேறியோர் தாம் வாழ்ந்த இடங்களைத் தமது தாய்நாட்டிற்குரிய இடப் பெயர்களைக் கொண்டு குறித்தனர் என்பதை, பதவியா, வாகல்கட, தக்கணம், மாதோட்டம் ஆகிய இடங்களிற் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. அவ்வாறு நிரந்தரமாகக் குடியேறியவர்களில் கொங்கு நாட்டவரும் அடங்குவர் எனக் கருதுவதற்கு இடமிருப்பதால் அவர்களும் தாம் வாழ்ந்த இடங்களைத் தமது தாய் நாட்டு இடப் பெயர்களைக் கொண்டு குறித்திருக்கலாம் அல்லது கொங்கு நாட்டுக்குச் சோழரிட்ட புதிய பெயர்களை இலங்கையிலும் பயன்படுத்தியிருக்கலாம். அவ்வாறு கருதுவதற்குச் சில காரணங்கள் உண்டு.

கொங்கு மண்டலச் சிங்கைநாட்டு வேளாளத் தலைவர்களுக்குச் சோழரிட்ட மறுபெயர் மும்முடிப் பல்லவராயர் என்பதாகும். இப்பெயர் முதலாம் இராஜராஜ சோழனின் விருதுப் பெயர்களில் ஒன்றாகும். இவன் ஆட்சியில் இலங்கைக்கு இடப்பட்ட மறுபெயர் மும்முடிச் சோழ மண்டலம் என்பதாகும். கொங்கு நாட்டிற்கு வட எல்லையில் உள்ள நகரமொன்று சோழர் காலத்தில் இராஜராஜபுரம் என்ற பெயரால் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.109 இலங்கையில் மாதோட்டத்தில் சோழர் கால நகரமொன்று இராஜராஜபுரம் என்ற பெயர் பெற்றிருந்ததை அங்கு கிடைத்த கல்வெட்டுக் கூறுகிறது. கொங்கு நாட்டில் கோட்டூர் என்ற பெயரில் ஓர் இடம் இருந்ததாக அங்கு கிடைத்த கல்வெட்டுக் கூறுகிறது.110 இலங்கையிலும் சோழர் கால நிர்வாகத்தில் கோட்டூர் நாடு என்ற பெயரில் ஒரு கிராமம் இருந்ததாகத் தென்னிந்தியச் சாசனம் கூறுகிறது.111 கொங்கு நாட்டில் சோழராட்சியில் நல்லூர், சிங்கநல்லூர் (இப்பெயர் பாண்டி நாட்டிலும் உண்டு) என்ற பெயரிற் பல இடங்கள் இருந்துள்ளன. 112 இலங்கையிலும் நல்லூர்என்ற பெயர் சோழர் காலத்தில் இருந்துள்ளதென்பதை யாழ்ப்பாணக் கோட்டையிற் கிடைத்த முதலாம் இராஜேந்திர சோழன் கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. 113 இதனால், பூநகரியில் உள்ள நல்லூர் என்ற இடப் பெயரையும் சோழர் காலத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு. எனவே சோழராட்சியிற் கொங்கு நாட்டில் வழக்கத்தில் இருந்த சில இடப் பெயர்கள் சமகாலத்தில்இலங்கையிற்புழக்கத்தில் இருந்ததை நோக்கும் போது சோழ வரலாற்றோடு பெரிதும் ஈடுபாடு கொண்ட சிங்கை நாடு என்ற பெயரும் ஏதோ ஒரு காரணத்தால் சோழத் தொடர்பால் இலங்கையிலும் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. அவ்வாறு கருதுவதற்கு இன்னுமொரு சான்றை இங்கு எடுத்து ஆராயலாம்.

சோழராட்சியில், பல்லவராயன் என்ற பட்டப் பெயர் சிங்கை நாட்டு வேளாளத் தலைவர்களுக்கு சோழ மன்னர் இட்ட மறுபெயராகும். இப்பெயர் காலப்போக்கில் ஏனைய சோழப்படை வீரர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இடப்பட்டதாகத் தெரிகிறது. இவர்களுக்குச் சோழ மன்னர்களால் வழங்கப்பட்ட ஊர்களும் கிராமங்களும் தான் பெரும்பாலும் இன்று தமிழ் நாட்டில் பல்லவராயன் பேட்டை, பல்லவராயன் நெந்தில், பல்லவராயன் சாலை, பல்லவராயஎந்தம், பல்லவராயன் என்ற பெயர்களாற் குறிக்கப்படுகிறது.114 இலங்கையிலும் சோழராட்சியின் போது பல்லவராயன் என்ற பெயரில் அதிகாரிகள் இருந்ததற்குச் சான்றுகளுண்டு. பொலநறுவை 2 ஆம் சிவதேவாலயத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று சோழநிர்வாகத்தில் உயர் பதவி வகித்தவன் பல்லவராயன் எனக் கூறுகிறது. 115 இரண்டாம் இராசாதிராஜ சோழன் காலத்தில் வடமேற்கிலங்கை மீது படையெடுத்து மட்டிவாழ் (பூநகரி மட்டுவில் நாடு), புலச்சேரி (பூநகரி

புலையர் குடா) மாதோட்டம், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களை வெற்றி கொண்ட சோழப் படைத்தளபதி பல்லவராயன் எனப் பல்லவரா யன் பேட்டைக் கல்வெட்டுக் கூறுகிறது.116 இன்று பூநகரியிலுள்ள பல்லவராயன், பல்லவரா யன்கட்டு, பல்லவராயன் ஆறு முதலிய இடப் பெயர்கள் இப்படைத்தளபதியின் பெயரால் ஏற்பட்டனவெனக் கருத இடமுண்டு. இப்பெயர் ஆரம்பத்தில் சிங்கை நாட்டுப் பல்லவராயரைக் குறித்து நின்றாலும் அந்நாட்டவர் தான் இலங் கையிலும் இருந்தார்கள் எனக் கூற முடியாது. ஆனால் அந்நாட்டவரைக் குறித்த பெயரை, சோழராட்சியில் இலங்கையிலும் பயன்படுத்தி னர் என நிச்சயப்படுத்திக் கூறலாம். இதனால் பல்லவராயரின் தாய்நாட்டுப் பெயரான சிங்கை யும் சோழர் காலத்தில் இலங்கையில் ஏற்பட்டி ருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

நான்காம் மகிந்தன் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த காலத்தில் (கி. பி. 956 - 972) தென்னிந் திய மன்னன் வல்லபன் நாகதீபத்தின் மீது படை யெடுத்துத் தோல்வியடைந்தான் என சூளவம்சம் கூறுகிறது. இப்படையெடுப்பை நடத்திய தென் னிந்திய மன்னனைச் சிலர் ராஷ்ட்ரகூடர் எனவும் பலர் இரண்டாம் பராந்தக சோழன் எனவும் கூறுவர். இவன் யாராக இருந்தாலும் படை யெடுப்பு நடந்த இடம் யாழ்ப்பாணம் என்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. அப்படை ஊர்காவற்றுறை ஊடாக நடந்ததெனக் கூறப் படுகிறது. இதே காலப் பகுதியில் இரண்டாம் பராந்தக சோழன் சார்பாகக் கொங்கு நாட்டுப் பராந்தகன் சிறிய வேளாளன் வட இலங்கை மீது படையெடுத்து அந்நாட்டில் உயிர் துறந்தான் எனச் சோழக் கல்வெட்டிற் கூறப்பட்டுள்ளது.117 சூளவம்சம் கூறும் சம்பவமும், சோழக் கல் வெட்டில் இடம் பெற்றுள்ள சம்பவமும் ஏறத் தாழ ஒரே காலப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. இதேவேளை நாகதீபத்தில், குறிப்பாகப் பூநகரி யுள்ளிட்ட வடமேற்கிலங்கையில், சோழர் தொடர்பாகக் கிடைக்கும் சான்றுகள் சோழரின் ஆதிக்கம் அநுராதபுரத்தில் ஏற்படு முன்னர் வட மேற்கிலங்கையில் ஏற்பட்டு விட்டதைக் கோடி காட்டுகின்றன. சூளவம்சத்தில் முக்கியப்படுத்திக் கூறப்படாத முதலாம் பராந்தகனின் வட இலங்கை வெற்றி அவனது 38ஆவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டில் ''மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரசேகரி வர்மன்'' எனச் சிறப் பித்துக் கூறப்பட்டுள்ளமைக்கு வடமேற்கிலங்கை யில் அவனது ஆதிக்கம் நிலை கொண்டிருந்தமை காரணமாக இருக்கலாம். இச்சான்றுகள் நான் காம் மகிந்தன் ஆட்சியில் நாகதீபத்தின் மீது படையெடுத்த மன்னனை இரண்டாம் பராந்த கன் என எண்ணத் தூண்டுகிறது. இப்படையெ டுப்பைச் சோழர் சார்பாக நடத்தியவன் கொங்கு நாட்டைச் சேர்ந்த பராந்தகன் சிறிய வேளாளன் என அறிகிறோம். இவன் கொங்கு நாட்டவனாக இருப்பினும் அங்குள்ள சிங்கைநாட்டு வேளாளத் தலைவர்களும் சோழருக்குத்திறை செலுத்தும் சிற்றரசர்களுமே சோழப் படையெடுப்புக்களில் பெரும்பாலும் பங்குகொண்டனர். இதனாலேயே இவர்கள் சிங்கைப்பல்லவராயர் எனவும் மும்முடிப் பல்லவராயர் எனவும் சோழராற் குறிக்கப்பட் டனர். 118 இதனால் இலங்கைமீது படையெ டுத்த கொங்கு நாட்டுப் படைத்தளபதியும் சிங்கை நாட்டுக்குரியவனாக இருக்கலாம். சோழ வரலாற்றில் அவர்கள் படையெடுத்த நாடுகள் பெரும்பாலும் சோழ மன்னர்கள் பெயரால், அல்லது அப்படையெடுப்புகளுக்குத் தலைமை வகித்த படைத்தளபதிகள் பெயரால் அல்லது அவர்களின் தாய்நாட்டுப் பெயராற் குறிக்கப் பட்டதற்குச் சான்றுகளுண்டு. இங்கே கொங்கு நாட்டுப் படைத்தளபதியைச் சிங்கை நாட்டுக் குரியவன் எனக் கொண்டால் அவன் வட இலங்கையில் போரிட்டு மரணம் அடைந்ததை நினைவுபடுத்த அவன் தாய் நாடான சிங்கை என்ற பெயரானது அவன் இறந்த காலத்தில் அல்லது அவனுக்குப் பின் வட இலங்கையை வெற்றி கொண்டு சோழ நிர்வாகத்துடன் இணைத்த முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் ஏற்பட்டு இருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

## கதிரமலையின் வீழ்ச்சியும் சிங்கை நகரின் தோற்றமும்

இரண்டாம் பராந்தக சோழன் (சுந்தர சோழன்) ஆட்சியில் நாக தீபத்தின் மீது (யாழ்ப் பாணம்) மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பிற் கும், கதிரமலையிலிருந்த தலைநகர் சிங்கை நக ருக்கு மாற்றப்பட்டதற்கும் தொடர்பிருந்ததா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசொன்று அமைக்கப்பட முன்னர் கதிரமலையைத் தலைநகராகக் கொண்ட அரசொன்றிருந்த தகவலை யாழ்ப்பாண அரசு பற்றிய இலக்கியங்கள் தருகின்றன. இவ்வரசு கதிரமலையென்ற கந்தரோடையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்ததாக இராசநாயகம் முதலியார் கூறுகிறார்.[119] இக் கருத்தினைப் பலப்படுத்துவதாகவே அண்மைக் காலங்களில் அங்கு கிடைத்த தொல்லியல் சான்றுகள் அமைகின்றன

யாழ்ப்பாணத்தில் இதுவரை அறியப்பட்டுள்ள பெருங்கற்காலத் திராவிட மக்களுக்குரிய குடியிருப்புக்களுள் கந்தரோடை பரப்பளவில் கூடியதாகத் தெரிகிறது இக்குடியிருப்புகள், பல நூறு ஆண்டுகளாகதொடர்ந்தும் முக்கிய குடியிருப்பாக விளங்கின இதே காலத்தில் யாழ்ப்பாணத்தில் குடியிருப்புகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது ஏறத்தாழ பத்துக்கு மேற்இடங்கள் இக்காலப்பகுதியில் புதியகுடியிருப்புகளாகத் தோன்றியமை இரகுபதி மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வால் அறியப்பட்டுள்ளது.[120] இக் குடியிருப்புக்களை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தலைமைக் குடியிருப்பாகக் கந்தரோடை விளங்கியிருக்கலாம்.

கந்தரோடையின் நகரமயமாக்கம் கடல் சாந்த வர்த்தகத் தொடர்பாலும் உரோமரது வர்த்தக உந்துதலினாலும் ஏற்பட்டதெனக் கூறலாம் இதை உறுதிப்படுத்தும் செறிவானஉரோமமட்கலன்கள் பெருங்கற்காலச் சின்னங்களுடன் மங்கிய நிலையில் காணப்படுகின்றன. இவை கி. மு *100* அளவில் கந்தரோடை நகரமாக வளர்ச்சியடைந்து விட்டதைக் கோடிட்டுக்காட்டுகின்றன.[121] இது அநுராதபுரத்திலும், மகாகமையிலும் நகர மயமாக்கம் நிகழ்ந்ததற்கு ஒப்பானதாகும்.

ஆதிகால இலங்கையில் அநுராதபுரம் பலம் மிக்க ஆட்சிபீட மையமாக விளங்கிய போது தென்னிலங்கையில் மகாகமையைத் தலைநகராகக் கொண்ட அரசொன்றிருந்ததைப் போல் யாழ்ப்பாணத்தில் (நாகதீபம்) கதிரமலையைத் தலைநகராகக் கொண்ட அரசொன்றிருந்திருக்கலாம். இக்கருத்தையே அண்மைக்காலங்களில் யாழ்ப்பாணத்தில் கிடைத்த தொல்லியல் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன.[122] ஆயினும் அநுராதபுர நாகரிக வட்டத்துக்குள் யாழ்ப்பாணம் உள்ளடங்கியிருந்ததா என்பதற்குத் தெளிவான ஆதாரங்கள் காணப்படவில்லை. அநுராதபுரத்திற்கு வெகு தொலைவிலுள்ள மகாகமையுடன் அநுராதபுர அரசு கொண்டிருந்த அரசியல் உறவு பற்றிப் பாளி இலக்கியங்களில் பல தரவுகள் காணப்படுகின்றன. ஆனால் யாழ்ப்பாணத்துடன் கொண்ட உறவு பற்றிக் குறைந்தளவிலான விபரங்களைக் கூட இப்பாளி இலக்கியங்கள் தரவில்லை. தரப்பட்ட சில விபரங்கள் கூட அநுராதபுர அரசிற்கு எதிராக யாழ்ப்பாணம் உள்ளிட்ட உத்தரதேசத்திலிருந்து ஏற்பட்டபடையெடுப்புக்கள்பற்றியதாகவே உள்ளன. இப்படையெடுப்புக்களுக்கும் கதிரமலையைத் தலைநகராகக் கொண்ட அரசிற்கும் தொடர்பு இருந்ததா என்பது தெரியவில்லை ஆயினும் யாழ்ப்பாண நாகரிக வட்டத்தின் பலம் வாய்ந்த நகர மையமாகச் சோழர் வரும் வரையாவது (*10* ஆம் நூற்றாண்டுவரை) கதிரமலை விளங்கியிருக்கலாம் என்பதைத் தமிழ் இலக்கியங்களும், அங்கு கிடைத்துள்ள தொல்லியற் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன.

சோழர் வருகையோடு கதிரமலையைத்தலைநகராகக் கொண்ட அரசு தமிழ் இலக்கியங்களில் மறக்கப்பட்டு விடுகின்றது. இதற்கு கதிரமலையிலிருந்து அரசாண்ட உக்கிரசிங்கன் சோழ இளவரசி மாருதப்புரவல்லியைத் திருமணம் செய்து சில ஆண்டுகள் கதிரமலையிலிருந்து அரசாண்டான் பின்னர் தலைநகர் சிங்கை நகருக்கு மாற்றப்பட்டதே காரணமாகும்.[123] இச் சம்பவமும் இரண்டாம் பராந்தக சோழன் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்த சம்பவமும் ஏறத்தாழ ஒரே கால கட்டத்தில் நடந்ததாகக் கருத இடமுண்டு. இவை சோழர் வருகையோடு கதிரமலை வீழ்ச்சியடைந்ததையும், சிங்கை நகர் தோற்றம் பெற்றதையும் குறித்து நிற்பதாகக் கருத இடமளிக்கிறது.

இராசநாயகம் முதலியார் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்த இரண்டாம் பராந்தக சோழனின் படைத்தளபதி இறந்த இடம் வளவர் கோன்பள்ளம் என அடையாளம் கண்டுள்

ளார்.124 இவ்விடம் கந்தரோடைக்கு வட மேற்கே காங்கேசன் துறைக்கு கிட்டவுள்ள இடமாகும். இவ்விடம் சோழப் படைத்தளபதி இறந்த இடமாக அவர் கருதுவதற்கு ஒரேயொரு முக்கிய காரணம் சோழருக்கேயுரிய 'வளவன்' என்ற சிறப்புப் பெயர் இவ்விடப் பெயருடன் இணைந்துள்ளமைதான். சோழருக்குரிய இப் பெயர் தமிழ் நாட்டிலுள்ள இடங்களுக்கும் பெயரிடப்பட்டதற்கு சோழக் கல்வெட்டுக்களில் வரும் வளவனூர், வளவன் தாங்கல், வளவன் மாதேவி முதலான இடப்பெயர்கள் சான்றாகும்.125 இரண்டாம் பராந்தக சோழனின் சிறப்புப் பெயர்களில் ஒன்று மணமுடி வளவன் என்பதாகும்.126 ஆனால் யாழ்ப்பாணத்தின் மீது பராந்தகன் சார்பாகப் படையெடுத்தவன் கொங்கு நாட்டுச் சிறிய வேளாளன் எனச் சோழக் கல்வெட்டுக்கள் கூறுகிறது.127 ஆயினும் சோழ மன்னர்கள் பயன்படுத்திய பட்டப் பெயர்களை, சிறப்புப்பெயர்களை அம் மன்னர்களது படைத்தளபதிகளும் பயன்படுத்தியமை சோழ வரலாற்றில் பொது வழக்காகும். இதனால் பராந்தக சோழனின் படைத் தளபதியும் இப் பெயரைப் பயன்படுத்தியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. எனவே வளவர்கோன் பள்ளம் என்ற இடத்தைச் சோழருடன் தொடர்புபடுத்துவது பொருத்தமாகலாம். ஆயினும், இச் சான்றை மட்டும் வைத்து பராந்தக சோழன் படையெடுப்பால்தான் இப் பெயர் இங்கு ஏற்பட்டதாக நிச்சயப்படுத்திக் கூறமுடியாது. பிற்பட்ட சோழ மன்னர் காலத்துடன் கொண்ட தொடர்பாலும் இப்பெயர் இங்கு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் சோழர் ஆட்சிக்குட்பட்ட கொங்கு நாட்டோடு தொடர்புடையதெனக் கருதக்கூடிய பல இடப் பெயர்கள் வேறு பிராந்தியங்களைக் காட்டிலும் கந்தரோடைக்குக் கிட்டவாகவுள்ள இடங்களுக்குப் பெயரிடப்பட்டிருப்பதை நோக்கும்போது வளவர்கோன் பள்ளம் என்ற இடப்பெயர் பராந்தகன் காலத்தில் ஏற்பட்டிருக்கலாம்போல் தெரிகிறது.

கொங்கு மண்டலத்திலுள்ள இருபத்தி நான்கு நாடுகளுள் காங்கேய நாடு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. சோழப் படையெடுப்பில் பங்கெடுத்த படை வீரர்கள் பலர் இக் காங்கேய நாட்டைச் சேர்ந்தவர்களாவர். இதன் தலைநகர் காங்கேயம் எனவும், சிங்கை எனவும் அழைக்கப்பட்டன.128 இக் காங்கேய நாட்டிற்கும் வளவர் கோன் பள்ளம் என்ற இடத்திற்கு அருகிலுள்ள வரலாற்றுப்பழைமை வாய்ந்த காங்கேயன் துறைக்கும் தொடர்பிருக்கலாம் போல் தெரிகிறது. சோழக் கல்வெட்டுகளில் வரும் காங்கேயநல்லூர், காங்கேயனேரி முதலான இடப் பெயர்கள் காங்கேய நாட்டுடன் கொண்ட தொடர்பால் ஏற்பட்டிருக்கலாம் போல் தெரிகிறது. மேலும் சோழக் காங்கேயராயன், இராஜேந்திரசோழக் காங்கேயராயன் முதலான பட்டப் பெயர்கள் கொங்குச் சோழர்களுக்கும், சோழர் ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்களுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன 129 யாழ்ப்பாண அரசு காலத்தில் கூட ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்களைக் குறிக்க ''காங்கேயன்'' என்ற சிறப்புப் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது.130 இதற்கு சகவீரன் இயற்றிய கண்ணகி வழக்குரைகாவியம் என்ற நூலில் வரும் பின்வரும் செய்யுளைச் சான்றாதாரமாகக் காட்டலாம்.

''அவனி புகழ் (பயில்) முடி நயினாரர்ப்
பணிக்க ஏனனு மகன் மிகுந்தோன்
(பலமிகுந்த)
கவள மதக் களிற்றண்ணல் காங்கேயன்
தேவையர் கோன்
தவமென்ன விளங்கு புகட் சக வீரன்..''

இப் பெயர் ஒற்றுமை வட இலங்கையின் ஆரம்பகால அரசு சோழத் தொடர்பால் ஏற்பட்டதென்ற கருத்தைப் பலப்படுத்துவதாக உள்ளது. கொங்கு நாட்டில் கல்லாரையன், கண்ணாடி, சிங்க நல்லூர், கூபக நாடு முதலான இடப்பெயர்கள் உள்ளன. இப் பெயர்களுடன் தொடர்புடைய கல்லாரை, கண்ணாடித் தெரு, கொங்காவோடை, சிங்காவத்தை முதலான இடப் பெயர்கள் காங்கேசன் துறைக்கும், கந்தரோடைக்கும் அயலிலுள்ள கிராமங்களுக்குரிய இடப்பெயர்களாகவுள்ளன (படம்96).




படம் - 96- கொங்கு நாட்டிற்கும் வட இலங்கைக்கும் பொதுவான இடப்பெயர்கள்

இரண்டாம் பராந்தக சோழனைத் தொடர்ந்து இலங்கை மீது படையெடுத்த முதலாம் இராஜராஜ சோழன் வட இலங்கையைக் கைப் பற்றி தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்த போது கதிரமலை எனப்படும் கந்தரோடை அதன் பாரம்பரிய வரலாற்று முக்கியத்துவத்தைத்

தொடர்ந்தும் பேணிப் பாதுகாத்துக் கொண்ட தற்குப் போதிய ஆதாரங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இதுவரை கதிரமலை பெற்ற முக்கியத்துவத்தை இராஜராஜ சோழன் காலத்திலிருந்து வட இலங்கையிலுள்ள மாதோட்டம் பூநகரி, பதவியா, திருகோணமலை போன்ற இடங்கள் பெற்றதற்கு உறுதியான ஆதாரங்கள் உண்டு. அதில் சோழர் ஆட்சிக்குட்பட்டிருந்த கொங்கு நாட்டுச் செல்வாக்கும் ஏற்பட்டிருந்தன (144 ஆம் பக்கம் பார்க்கவும்). இதற்கு கொங்கு நாட்டிலுள்ள இடப் பெயர்களுடன் தொடர்புடைய குருந்தலூர் மலை, கோகர்ணம், கொங்குராசன்குளம், கோணமலை, குதிரமலை, நல்லூர் போன்ற இடங்கள் யாழ்ப்பாணத்திற்கு வெளியே வட இலங்கையில் இருப்பது மேலும் சான்றாகும். எனவே முதலாம் இராஜராஜசோழன் ஆட்சியோடு வட இலங்கையில் ஏற்பட்ட மாற்றத்திற்கும் தமிழ் இலக்கியங்களில் சோழர் வருகையோடு கதிரமலை மறைந்து போனதாகக் கூறும் வரலாற்றிற்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகக் கருத இடமுண்டு. அந்த மாற்றம் கதிரமலையின் வீழ்ச்சியும் சிங்கைநகரின் தோற்றமும் சோழர் வருகையுடன் ஏற்பட்டதைக் கோடிட்டுக் காட்டுவதாகக் கொள்ள இடமுண்டு.

மேற்கூறப்பட்ட கருத்துக்கள் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்கும் பொழுது பொதுப்பட்ட சில முடிவுகளுக்கு வரக்கூடியதாக இருக்கிறது.

1. தமிழரசின் ஆரம்பத் தலைநகரான சிங்கை அல்லது சிங்கை நகர் என்பது யாழ்ப்பாணத்திற்கு வெளியே வன்னிப் பிராந்தியத்தில் குறிப்பாக பூநகரியினை மையமாகக் கொண்டு இருந்ததெனக் கூறலாம். போர்த்துக்கேயர் வருகையோடு நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு தன் சுதந்திரத்தை இழந்து விடுகிறது. ஆனால் யாழ்ப்பாண அரசின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த வன்னிச் சிற்றரசுகள் ஆங்கிலேயர் காலம் வரைக்கும் தனது சுதந்திரத்திற்காக தொடர்ந்தும் போராடியது. இதற்கு வன்னிப் பிராந்தியத்தின்அமைவிடமும் ஒரு காரணமாகும். இத்தகைய ஒரு சிறப்பு இப் பிராந்தியத்திற்கு இருந்தமைதான் சோழர் ஆட்சியோடு சிங்கள மன்னர்களின் ஆட்சிக்கு எதிராக அரசொன்று இங்கு தோற்றம் பெறக் காரணமாகியது எனலாம். இக் கருத்தை மேலும் உறுதிப்படுத்த வன்னிப் பிராந்தியத்தின் பாரம்பரிய வரலாறு பற்றிய ஆய்வு விரிவுபடுத்தப்பட வேண்டும்.

2. தென்னியங்குளத்திலுள்ள புராதன நகரத்தின் அழிபாடுகள் சிங்கை நகராக அல்லது சிங்கை இராசதானி காலக் கட்டிடங்களாக இருக்கமுடியும்.

3. ஆரியச் சக்கரவத்திகளால் நல்லூரில் அரசொன்று தோற்றுவிக்கப்பட முன்னர் வடஇலங்கையில் ஆட்சி புரிந்த கலிங்கமாகன், சாவகன், சாவகனின் மைந்தன், பாண்டியப் பிரதானிகள் ஆகியோரதும் அரசாக சிங்கையே விளங்கியதெனக் கூறலாம்

4. கலிங்கமாகன் பொலநறுவையில் ஆட்சிசெய்த போது அவனுக்குச் சார்பான அரசொன்று, வட இலங்கையில் தோன்றியிருந்ததெனக் கூறலாம். அவ்வரசையே கலிங்கமாகன் பொலநறுவையில் இருந்து பதவி நீக்கப்பட்ட பின்னர் ஆட்சி செய்தான். இதனால் இவ்வரசின் தோற்ற காலத்தைச் சோழர் காலத்துடன் தொடர்புபடுத்துவது பல நிலைகளில் பொருத்தமாகத் தெரிகிறது.

5. சிங்கை அல்லது சிங்கை நாடு என்ற பெயர் ஏற்பட கலிங்கமாகன் காலக் கலிங்க நாட்டுக் சிங்கபுரத் தொடர்பே காரணம் எனக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை' மாறாகத் தமிழ் நாட்டில் கொங்கு மண்டலச் சிங்கை நாட்டுடன் சோழர் காலத்தில் கொண்ட தொடர்பே காரணம் எனக் கூறுவது பொருத்தமாக அமையலாம்.

6. எதிர்காலத்தில் சிங்கை இராசதானி பற்றி விரிவாக ஆய்வுகள் மேற்கொள்ளப் படுமானால் மேற்கூறப்பட்ட புதிய கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளஇடமுண்டு.

# அடிக்குறிப்புகள்

1. இந்திரபாலா, கா. ''வன்னிக் காட்டில் ஒரு அரண்மனை'', தினபதி, (கொழும்பு, 28-5-1973)
2. Nagaswamy, R. Eighth Century Kanchipuram, ப. 45
3. 1990 ஆம் ஆண்டு இவ்வாலயத்தை நேரில் சென்று பார்வையிட்டேன்.
4. இந்திரபாலா, கா. ''யாழ்ப்பாண இராச்சியம் தோன்றிய காலமும் சூழ்நிலையும்'', இளங் கதிர் 21ஆவது ஆண்டுமலர், (பேராதனை), ப. 40
5. சூளவங்ஸ, அத். 80, செய். 65-73
6. இந்திரபாலா, கா. மு. கூ. க, ப. 32
7. சூளவங்ஸ, அத். 83, செய். 15-18
8. Pathmanathan, S. The Kingdom of Jaffna, (Colombo, 1978), ப. 106
9. Ray, H. C. (ed) History of Ceylon Vol. I, Pt. II. (Colombo, 1960), ப. 619
10. இந்திரபாலா, கா. மு. கூ. க. ப. 22
11. மேற்படி, ப. 33
12. சூளவங்ஸ, அத். 88, செய். 63-64
13. Nilakanta Sastri, K. A. "The Ceylon Expedition of Jatavarman Virapandya" Proceedings and Transactions of the eight all Indian Oriental Conference, (Bangalore: 1937), ப. 509.
14. வேலுப்பிள்ளை, ஆ. தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும், (யாழ்ப்பாணம், 1986), ப. 10
15. ஜம்புலிங்கம்பிள்ளை. (பதிப்பு) கைலாயமாலை, (சென்னை, 1939), ப. 12
16. Pathmanathan, S. மு. கூ. நூ, பக். 185-190
17. சேதுப்பிள்ளை, ரா. பி. தமிழக ஊரும் பேரும், (சென்னை, 1956), ப. 93
18. SII. Vol. III, No. 205, Vers. 76-79
19. இந்திரபாலா, கா. மு. கூ. க., ப. 13
20. சிற்றம்பலம், சி. க. ''வரலாற்று நோக்கில் வட இலங்கையின் பிரதான நிர்வாக மையம்.' கருத்தரங்குக் கட்டுரை, (யாழ்ப்பாணம், 1991), ப. 9
21. யாழ்ப்பாண வைபவமாலை, ப. 22
22. வையாபாடல், பக். 56-57
23. செகராசசேகரமாலை, செய்யுள், 36
செகராசசேகரம், ப. 78
24. Gunawardena, W. E. (ed) Kohilasandesaya, (Colombo; 1924) Vers. 246
25. யாழ்ப்பாண வைபவமாலை, ப. 27, கைலாயமாலை, ப. 7

26. Queyroz, F. de. The Temporal and Spiritual Conquest of Ceylon Tr. by Perera, S. G. (Colombo, 1930), ப. 59
27. Rasanayagam, C. Ancient Jaffna, (Madras, 1936), பக். 310-311
28. ஞானப்பிரகாசர், சுவாமி. யாழ்ப்பாண வைபவ விமர்சனம், (அச்சுவேலி, 1928). பக். 67-68
29. இந்திரபாலா, கா. மு. சு. க. ப. 55
30. மேற்படி. ப. 50
31. Ragupathy, P. Early Settlements in Jaffna an Archaeological Survey, (Madras, 1987). பக். 32-38
32. யாழ்ப்பாண வைபவமாலை, ப. 22
33. மேற்படி, ப. 22, (அடிக்குறிப்பு)
34. ARE for 1894, No. 166 of 1894
35. மேற்படி.
36. இந்திரபாலா, கா. மு. சு. க. ப. 35
37. மேற்படி, ப. 55
38. மேற்படி, ப. 56
39. மேற்படி
40. சூளவங்ஸ அத். 83, செய். 16
41. Ray, H. C. மு. கூ. நூ, ப. 679
42. சூளவங்ஸ, அத். 83, செய். 17
43. Indrapala, K "Early Tamil Settlements in Ceylon" Journal of the Ceylon Branch of The Royal Asiatic Society. Vol. XIII, 1969. பக். 43 - 63
44. Veluppillai, A. Ceylon Tamil Inscriptions Pt. II, (Peradeniya), பக். 23-31
45. மேற்படி, ப. 20
46. EI. Vol. XXVI, ப. 74
47. Nilakanta Sastri, K. A. The Colas, (Madras, 1984), ப. 765
48. இந்திரபாலா, கா. மு. சு. க, ப. 56
49. மேற்படி.
50. Pathmanathan, S. மு. கூ. நூ., ப. 120
பதவியாவில் கிடைத்த 13ஆம் நூற்றாண்டுக்குரிய வடமொழிச் சாசனம் ஒன்று லோகநாதன் என்ற தண்டநாயக்கன் மணிகளாலும், முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்ட மிக ஒளி பொருந்திய முடிகொண்ட விகாரம் ஒன்றை அமைத்து அதற்கு வேளைக்காரவிகாரம் எனப் பெயரிட்டான் எனக் கூறுகிறது. இக்கல்வெட்டை வாசித்த பரணவிதானா இதன் தொடக்கத்தில் வரும் சேது குலத்தை மலேசியாவில் இருந்து வந்தவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார் (Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society, Vol III, Pt. 2. (N. S) ப. 262). பத்மநாதன் இக்கருத்தை நிராகரித்து கல்வெட்டில் வரும் சேது, சேதுவை இலச்சனையாகக் கொண்ட ஆரியச் சக்கரவர்த்திகளின் வம்சமான யாழ்ப்பாண மன்னர்களையே குறித்ததென்றார் (Pathmanathan, S. மு. கூ. நூ, பக். 206-211). இவர்கருத்தை ஏனைய பல வரலாற்றறிஞர்களும் ஏற்றுள்ளனர். இதிலிருந்து யாழ்ப்பாண அரசின் ஆதிக்கம் பதவியாவிலும் இருந்துள்ளதெனக் கூறலாம். இக்கல்வெட்டில் விகாரையை வேளைக்கார விகாரம் எனவும் அதைப் பாது

காக்கும் பொறுப்பை வேளைக்காரரிடம் விடப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து சோழர் ஆட்சியில் முதன்மை பெற்ற வேளைக்காரப் படைப்பிரிவினர் 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் பதவியாவில் செல்வாக்குப் பெற்றிருந்ததையும், அவர்கள் யாழ்ப்பாண அரசின் கீழ் கடமையாற்றினர் என்பதையும் அறியக்கூடியதாக உள்ளது.

51. மேற்படி, ப. *120*
52. Mahadevan, I. "Some rare coins of Jaffna" Damilica, Val. *1*, *(1970)*, பக். *111-120*
53. மேற்படி, ப. *115*
54. Elliot sir Walter. Coins of Southern India, *(Delhi, 1975)*, ப. *152*
55. Deskachari. T. South Indian Coins, *(New Delhi, 1984)*, ப. *69*
56. மேற்படி,
57. பரமேஸ்வரி லால் குப்தா. நாணயங்கள், (தமிழாக்கம்) குழந்தை, சு. (சென்னை, *1975*). பக். *120-123*
58 Nilakanta Sastri K. *A*. மு. கூ. நூ, ப. *765*
59 Mahadevan, I. மு. கூ. க, ப, *115*
60. *SII*, Vol. III, No, *222*
61. சதாசிவ பண்டாரத்தார், தி. வை. பிற்காலச் சோழர் வரலாறு. (அண்ணாமலை, *1974*), ப. *250*
62. Mahadevan, I. மு. கூ. க, ப. *117*
63. செகராசசேகரமாலை, சிறப்புப் பாயிரம், செய்யுள். *7*
64. கயிலாயமாலை. ப. *5*
65. கிள்ளைவிடுதூது. செய்யுள். *152*
66. தஷிணகைலாச புராணம், சிறப்புப்பாயிரம்
67. Pathmanathan, S. "Coins of medieval Sri Lanka The coins of the Kings of Jaffna, Spolia Zeylanica, Vol. 35, Pt. *1* and *11*, *(1980)*, ப. *411*
68. Desikachari, T. மு. கூ. நூ, ப. *125*
69. பரமேஸ்வரி லால் குப்தா. மு. கூ. நூ, ப. *125*
70 Mahadevan, I. மு கூ. க, ப. *119*
71. சதாசிவ பண்டாரத்தார், தி, வை. மு. கூ. நூ, ப. *593*
72. பரமேஸ்வரி லால் குப்தா. மு. கூ நூ, ப. *124*
73. Elliot Sir Walter. மு. கூ. நூ, Plat. IV, No. *173*, ப. *192*
74. Desikachari, T. மு. கூ. நூ. ப. *69*

இந்நூலில் இராஜராஜ சோழன் இலங்கையை வெற்றி கொண்டதற்காக ஸ்ரீலங்கேஸ்வர, ஸ்ரீலங்கவீரர் என்ற பெயரில் தனது நாணயங்களை வெளியிட்டிருக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. இலங்கையில் திருகோணமலை மாவட்டத்தில் கிடைத்த இரு சோழக் கல்வெட்டுக்கள் சோழ இலங்கேஸ்வரன் பற்றிக் கூறுகிறது. இப் பெயரை உடையவன் முதலாம் இராஜேந்திரன் அல்லது அவனுக்குப் பிற்பட்ட சோழ மன்னர்களால் இலங்கையை ஆள்வதற்கு அனுப்பப்பட்ட சோழப் பிரதிநிதியாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது (இந்திரபாலா, கா. பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழா மலர், தெல்லிப்பளை, *1972*). ஆனால் முதலாம் இராஜராஜ சோழனுக்கு லங்கேஸ்வரன் என்ற சிறப்புப் பெயர் இருப்பதை நோக்கும் போது கல்வெட்டுகளில் வரும் சோழ இலங்கேஸ்வரன் இராஜராஜ சோழனைக் குறித்ததா அல்லது அவன் காலத்திலேயே பிறநாடுகளை ஆள்வதற்கு சோழப் பிரதிநிதிகளை அனுப்பும் முறை தோன்றியதா அல்லது இப்பெயரைப் பிற்பட்ட சோழ மன்னர்களும், அதிகாரிகளும் பயன்படுத்திக் கொண்டார்களா போன்ற கேள்விக்கு விடைகாணவேண்டியுள்ளன.

75. Mahadevan, I. மு. கூ. க, பக். 119 - 120
சோழருக்கு முன்னோடியாக முதலாம் பாண்டிய வம்ச ஆட்சியில் மன்னனின் சிறப்புப் பெயர்கள் அவர்கள் வெளியிட்ட நாணயங்களின் பெயர்களாக அழைக்கப்பட்டதற்கு ஆதாரங்களுண்டு. உதாரணமாக ஒன்பதாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் காலத்தில் வழங்கிய நாணயம் ''அவனிப சேகரன் கோளகை" என்ற பெயருடையதாக இருந்தது. இவனுக்கு அவனிப சேகரன் என்னும் சிறப்புப் பெயர் ஒன்று உண்டு என்பது புதுக்கோட்டை நாட்டில் சிற்றண்ணவாசல் என்ற ஊரிலுள்ள கல்வெட்டால் புலப்படுகின்றது (சதாசிவ பண்டாரத்தார், தி. வை. பாண்டியர் வரலாறு, சென்னை, 1950, ப. 181).

76. Nagaswamy, R. Tamil Coins, (Madras, 1981), ப. 33

77. Pathmanathan, S. மு. கூ. க. 1980. பக். 409 - 428

78. இந்திரபாலா, கா. மு. கூ. க, ப. 35

79. ARE for 1894. No. 166 for 1894

80. பத்மநாதன், சி. ''ஈழத்து தமிழ் வரலாற்று நூல்கள்" இளங்கதிர் 21 ஆவது ஆண்டு மலர், (பேராதனை), ப. 127

81. ...... 'நாணயம்' யாழ்ப்பாண இராச்சியம், (திருநெல்வேலி, 1982), ப. 318

82. செந்தமிழ், பாகம், 12, பக் 346 - 350

83. Rasanayagam, C. மு. கூ. நூ. பக். 289 - 290

4. நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு தோற்றம் பெற மாறவர்மன் குலசேகரனின் காலத்தில் (கி. பி. 1268 -1310) பாண்டியரின் படைத்தளபதிகளான ஆரியச்சக்கரவர்த்திகள் இலங்கை மீது மேற்கொண்ட படையெடுப்பே காரணமாகும். இதனால் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் யாழ்ப்பாண அரசு இருந்ததாகக் கூறமுடியாது. ஆனால் இவன் ஆட்சியில் பொலநறுவையிலிருந்து விடுபட்ட கலிங்கமாகன் வட இலங்கையில் அரசொன்றிற்கு மன்னனாக இருந்திருக்கலாம் எனக் கருதுவதற்கு ஆதாரமுண்டு. சுந்தரபாண்டியனின் பின்னர் பாண்டிநாட்டில் ஆட்சி புரிந்த முதலாவது ஜடவர்மன் கல்வெட்டுக்களில் இருந்து 1258க்கு முன்னர் பாண்டியர் இலங்கை மீது படையெடுத்து இலங்கை மன்னனிடம் திறை பெற்றதாகத் தெரியவருகின்றன. இந்த இலங்கை மன்னன் யார் என்பதைச் சாசனம் கூறாவிட்டாலும், இக்காலத்தில் பாண்டியருக்கும் சிங்கள மன்னர்களுக்கும் நல்லுறவு இருந்ததனால் இம்மன்னன் வடஇலங்கையில் ஆட்சி புரிந்தவனாக இருக்கவேண்டும். பாண்டியரின் இப்படையெடுப்பிற்கான காரணம் பற்றிப் பரணவிதானா கூறும் விளக்கம் சிங்கள மன்னனுக்கு உதவியாக கலிங்கமாகனுக்கு எதிராக பாண்டியர் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பு என்பதாகும். இதற்கு கலிங்க மாகன் சோழருடன் நல்லுறவு கொண்டிருந்தான் எனவும் மேலும் விளக்கம் கொடுக்கிறார் (Paranavitana, S. History of Ceylon, vol. I, Pt. II, ப. 622). 1264 ஆம் ஆண்டுக்குரிய பாண்டியக் கல்வெட்டு கலிங்க மாகனுக்குப் பின் வட இலங்கையில் ஆட்சி புரிந்த சாவகமன்னன் பாண்டியரின் மேலாண்மையை ஏற்க மறுத்ததால் பாண்டியப் படை அவனைக் கொன்று அவன் மகனை ஆட்சியில் அமர்த்தியதாகக் கூறுகிறது. இவ்வரலாற்றுப் பின்னணி முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்து சோழ பாண்டியப் போராட்டத்தில் வட இலங்கை மன்னர்களுக்கும் தொடர்பிருந்திருக்கலாமா என ஆராயத் தூண்டுகிறது.

85. பத்மநாதன், சி ''ஆட்சிமுறை'' யாழ்ப்பாண இராச்சியம், (திருநெல்வேலி, 1982), ப. 112

86. மேற்படி, ப. 111

87. சதாசிவ பண்டாரத்தார். தி. வை. மு. கூ. நூ, ப. 56
இரண்டாம் இராஜராஜ சோழனின் சிறப்பு பெயர்களில் ஒன்று சோழேந்திரசிங்கன் என்பதாகும். இப்பெயரால் ஏற்பட்ட இடம் சிங்க நல்லூர் என்பதாகும் (மேற்படி. ப. 369).

88. Pathmanathan, S. மு. கூ. நூ. பக். 19 - 36

89. கோவையூர் கிழார். கொங்கு நாட்டு வரலாறு முதலிரண்டு பகுதிகள், (கோயம்புத்தூர், 1972), பக். 9
90. மேற்படி, ப.71
91. மேற்படி, ப. 25
92. Condrington, H. W. Ceylon Coins and Currency, (Colombo, 1924), ப. 89
93. பத்மநாதன், சி. "இலங்கைத் தமிழ்வணிக கணங்களும் நகரங்களும்" சிந்தனை தொகுதி. 11, இத. 11, (யாழ்ப்பாணம், 1984), ப. 50
94. கோவையூர் கிழார். மு. கூ. நூ. ப. 33
95. Rasanayagam, C. மு. கூ. நூ. ப. 248
96. இராசு, செ. தஞ்சைமராட்டியர் செப்பேடுகள், (தஞ்சாவூர், 1963), ப. 69
97. மேற்படி
98. கைலாயமாலை, பாடல். 185
99. சிவானந்தன் , யாழ்ப்பாணக் குடியேற்றம், (கோலாலம்பூர், 1932), ப. 20
100 சிவகளை சுப்பையா. கொங்கு நாட்டுக் கோயில்கள், (சென்னை, 1967), பக். 77-80
101 மேற்படி , ப. 237
102. புலவர் குழந்தை. கொங்கு நாடும் தமிழும், (திருச்சிராப்பள்ளி, 1953), ப. 39
103. மேற்படி
104. மேற்படி
105. SII. Vol. III, No. 99
106. மேற்படி, Vol. V. No. 980
107. Ray, H. C. மு. கூ. நூ, ப. 504
108. பத்மநாதன், சி. மு. கூ. நூ. 1984, ப. 63
109. கோவையூர் கிழார், மு. கூ. க. ப. 40
110. சிவகளை சுப்பையா, மு. கூ. நூ. ப. 104
111. SII, Vol. IV, No 1388
112. கோவையூர் கிழார். மு. கூ. நூ. ப. 40
113. E. T. Vol. I, pt. I, p 32
114. சேதுப்பிள்ளை, ரா. பி. மு. கூ. நூ. ப. 123
இரண்டாம் இராஜராஜ சோழனின் படைத்தளபதி பல்லவராயன் பெயரால் ஏற்பட்ட இடமே இன்று பல்லவராயன் பேட்டை என அழைக்கப்படுகிறது (சதாசிவ பண்டாரத்தார், தி. வை. மு. கூ. நூ ப. 372)
115. SII. Vol. IV. No. 1403, 1404
116. EI, Vol. XXL. No. 86 - 92
117. SII, Vol V. No. 980
118. புலவர் குழந்தை மு. கூ. நூ. ப. 40
119. Rasanayagam C மு. கூ. நூ. ப. 32
120. இரகுபதி, பொ. பெருங்கற்கால யாழ்ப்பாணம், (தெல்லிப்பளை, 1983), ப. 12
121. மேற்படி.

122. ஆதிகால இலங்கையில் தோன்றிய சிற்றரசுகளில் ஒன்று கந்தரோடையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்திருக்கலாம் என்பதை அங்கு கிடைத்துவரும் தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் அவ்வரசிற்கு உட்பட்ட ஆதிகால மக்கள் எந்த மொழியைப் பேசினர் என்பதை அறிவதற்குரிய சாசன ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனால் அண்மையில் அங்கு தொல்லியல் ஆய்வினை மேற்கொண்ட கிருஷ்ணராசா ஒரிரு வரிவடிவங்களைக் கொண்ட சில மட்பாண்டச் சாசனங்களைக் கண்டுபிடித்துள்ளார். அச்சாசன வரிவடிவங்கள் தமிழ் நாட்டிற் பயன்படுத்தப்பட்ட தமிழ் மொழிக்கேயுரிய பிராமி வடிவங்கள் என அபிப் பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது (வீரகேசரி வார வெளியீடு, 27-6-1998).

123. யாழ்ப்பாண வைபவமாலை , ப. 22

124. Rasanayagam, C. மு. கூ. நூ. ப. 261

125. சேதுப்பிள்ளை, ரா. பி. மு. கூ: நூ, பக். 98 - 113

126. இப்பெயர் திருக்கோவலூரிலுள்ள கல்வெட்டால் அறியப்பட்டுள்ளது (SII. Vol. II, No. 6 ,)

127. SII, Vol. V. No. 980

128. புலவர் குழந்தை. மு. கூ. நூ, ப. 39

129. சதாசிவ பண்டாரத்தார். மு. கூ. நூ, ப. 341 , கோவையூர் கிளார், மு. கூ. நூ, ப. 20

130. சிற்றம்பலம், சி, க. (பதிப்பாசிரியர்) யாழ்ப்பாண இராச்சியம். (திருநெல்வேலி, 1982), ப. 289

131. மேற்படி

# 7. சோழர் ஆட்சிக்குப் பிற்பட்ட காலத் தொல்லியல் சின்னங்கள்

பதினொராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழரது ஆட்சி இலங்கையில் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து மீண்டும் சிங்கள மன்னர்களது ஆட்சியேற்பட்டது. சிங்கள மன்னர்கள் சோழரால் உருவாக்கப்பட்ட பொலநறுவையையே தமது தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். இதனால் முதலாம் விஜயபாகு காலம் தொடக்கம் (1070), பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கலிங்கமாகன் இலங்கையை வெற்றி கொள்ளும்வரை (1215) பொலநறுவையே சிங்கள மன்னர்களின் இராசதானியாக விளங்கிற்று. இக்கால எல்லைக்குள் சோழர் ஆட்சியோடு வட இலங்கையில் சிங்கையைத் தலைநகராகக் கொண்ட அரசு ஒன்று உருவாகியிருக்க வேண்டும். அவ்வரசையே பொலநறுவையிலிருந்து பதவி விலகிய கலிங்கமாகனும், ஏனையோரும் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு தோன்றும்வரை ஆட்சி புரிந்திருக்க வேண்டும். அக்கால கட்டத்தில் வன்னிப்பிராந்தியம் சிறப்பாக பூநகரி வட இலங்கையின் முக்கிய அரசியல் கேந்திர மையமாக விளங்கியுள்ளது (ஆறாம் அத்தியாயத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது). இதன் பின்னர் பூநகரி பிராந்தியம் யாழ்ப்பாண அரசினதும், வன்னிச் சிற்றரசினதும், ஐரோப்பியரது ஆட்சியினதும் மேலாதிக்கத்திற்குள் உள்ளடங்கியிருந்ததாகத் தெரிகிறது. இக்கால வரலாற்று ஓட்டத்தில் இப்பிராந்தியம் பெற்றிருந்த வரலாற்று முக்கியத்துவத்தை அங்கு கிடைத்த தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

## சோழரும் உருகுணை அரசும்

பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழரின் நேரடி ஆட்சி இலங்கையில் ஏற்பட்டபோது, அவர்களின் ஆட்சிக்கு எதிரான இயக்கங்கள் தென்னிலங்கையில் உருகுணையை மையமாகக் கொண்டு தோன்றி வளர்ந்தன. இதனால் சோழர் பொலநறுவையில் இருந்தும் தமிழ் நாட்டிலிருந்தும் அடிக்கடி தென்னிலங்கை மீது படையெடுக்க நேரிட்டது. இப்படையெடுப்புக்களால் சோழர் தற்காலிகமான சில வெற்றிகளை அடைந்தாலும் நீண்ட காலத்திற்கு அவ்வெற்றிகள் நிலைத்திருக்கவில்லை. பதினொராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழப் பேரரசில் ஏற்பட்ட மாறுதல்கள் இலங்கையில் இருந்த சோழரைப் பலவீனமடையச் செய்தது. இதைச் சாதகமாகப் பயன்படுத்திய உருகுணை மன்னன் முதலாம் விஜயபாகு 1070இல் சோழரிடமிருந்து பொலநறுவையைக் கைப்பற்றிக் கொண்டான். இந்த அரசியல் அதிகார மாற்றம் இலங்கையில் சோழருக்கேற்பட்ட வீழ்ச்சியையும், சிங்கள அரசவம்சங்களுக்கு ஏற்பட்ட எழுச்சியையும் கோடு காட்டி நிற்கின்றன.

முதலாம் விஜயபாகு சோழரை வெற்றி கொண்டதன் மூலம் இலங்கை வரலாற்றில் வேறு எந்த மன்னர்களும் பெறாத முக்கியத்துவத்தை பெறுகிறான். எல்லாளன் என்ற தமிழ் மன்னனைத் துட்டகாமினி வெற்றி கொண்டதற்காக அவனைச் சிங்கள இனத்தின் விடுதலை வீரனாக மகாவம்சம் வர்ணிப்பதுபோல், தமிழராகிய சோழரை வெற்றி கொண்டதற்காக முதலாம் விஜயபாகு சிங்கள இனத்தின் விடுதலை வீரனாக சூளவம்சம் போற்றிப் புகழ்கிறது. இலங்கையை ஆண்ட மன்னர்களுள் முதலாம் விஜயபாகுவே தலைசிறந்தவன் எனக் கூறும் பரணவிதரனா விஜயபாகு இல்லாவிட்டால் இக்காலத்தில் இலங்கையில் சிங்களவர்கள் இருந்திருக்க மாட்டார்கள் எனக் கூறுகிறார்.[1] பரணவிதானாவின் இக்கூற்றை மிகைப்படுத்தப்பட்டதெனக் கருதும்

நீலகண்டசாஸ்திரி சிங்கள மக்களின் விடுதலைக்கு விஜயபாகுவே காரணகர்த்தா எனக் கூறுவது ஏற்றுக் கொள்ளத்தக்கதென்றார்.[2] இவ்வாறான புகழுரைகள் விஜயபாகுவிற்குக் கொடுக்கப்பட்டமைக்கு சோழரிடமிருந்து இலங்கையை மீட்டெடுத்தமையே காரணமாகும். ஆனால் விஜயபாகுவின் நீண்டகால வரலாற்றையும், அவன் அடைந்த சாதனைகளையும் ஆழமாக ஆராயும் போது அவனுக்கு கொடுக்கப்பட்ட புகழுரைகள் சற்று மிகைப்படுத்தப்பட்டதாகவே தெரிகிறது.

சோழரைச் சிங்கள இனத்தின் விரோதியாகக் கருதும் மனோபாவம் இலங்கையின் நீண்டகால வரலாற்றில் நிலைத்திருந்ததைப் பாளி இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. அந்நிலை சோழரின் நேரடியாட்சி இலங்கையில் ஏற்பட்ட போது மிகத் தீவிரமாகக் காணப்பட்டது. முதலாம் விஜயபாகு பிறப்பதற்கு முன்னரே சோழருக்கு எதிரான இயக்கங்கள் தென்னிலங்கையில் தோன்றி வளர்ந்தன. அந்த இயக்கங்களில் சிங்களத் தலைவர்கள் மட்டுமன்றி சோழரால் தோற்கடிக்கப்பட்ட சேர, பாண்டிய இளவரசர்களும், பிற இந்திய நாட்டு இளவரசர்கள் சிலரும் பங்கு கொண்டதாகச் சூளவம்சம் கூறுகிறது.[3] ஆயினும் இக்காலத்தில் சோழப்பேரரசு இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் வலிமை பெற்று இருந்ததனால் இவ்வெதிர்ப்பியக்கங்களால் சோழரை வெற்றி கொள்ள முடியவில்லை. இராசாதி இராச சோழனது 29-வது ஆட்சியாண்டு சாசனமொன்று தென்னிலங்கையில் சோழருக்கு எதிராகப் போரிட்ட மன்னர்களை வெற்றி கொண்டதாகக் கூறுகிறது.[4] அச்சாசனத்தின் முக்கிய பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது:

''ஒருதனித் தண்டால் பெருகடலிலங்கையர்
கோமகன் விக்கிரம பாகுவின் மகுடமும்
முன்றனக் குடைந்து தென்றமிழ் மண்புலம்
முழுவது மிழந்து எழுகடலீழம்
புக்கவிலங் கேச னாகிய விக்கிரம
பாண்டியன் பருமணி மகுடமும் காண்டகு
தன்ன தாகிய கன்னக் குச்சியிலும்
ஆர்கலி ஈழஞ் சிரிதென் றெண்ணி
உளங்கொள் நாடுதன் னுறவொடும் புகுந்து
விளங்குமுடி கவித்த வீரசலா மேகன்
போர்க்களத் தஞ்சித்தன் சார்க்களி றிழிந்து
கவ்வையுற் றோடக் காதலி யொடுந்தன்
தவ்வையைப் பிடித்துத் தாயை மூக்கரிய
ஆங்கவ மானம் நீங்குதற் காக
மீட்டும் வந்து வாட்டொழி லுழந்து
வெங்களத் துலந்தவச் சிங்களத் தரைசன்
பொன்னணி முடியுங் கன்னரன் வழிவந்
துரைகொ ளீழத் தரைச னாகியசீர்
வல்லவன் மதன ராசன் எல்லொளித்
தடமணி முடியுங் கொண்டு என்பதாம்''

இச் சாசனத்திலிருந்து தென்னிலங்கையில் ஆட்சிபுரிந்த விக்கிரமபாகு (இலங்கையர் கோமான்), விக்கிரமபாண்டியன் (இலங்கேஸ்சுரன்), வீரசாலமேகன் (கலிங்கர்மன்), மானாபரணன் (இலங்கையர்க்கிறைவன்), வீரசாலமேகன் (சிங்களத்தரைசன்), சீர்வல்லமதனராஜன் (ஈழத்தரைசன்) ஆகிய ஆறு சிற்றரசர்கள் சோழரால் தோற்கடிக்கப்பட்டமை தெரியவருகிறது.[5] இதிலிருந்து சோழரின் மேலாதிக்கத்திற்குள் தென்னிலங்கை தொடர்ந்தும் உட்பட்டிருக்கவில்லை என்பது புரிகிறது. இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் விஜயபாகு எனப் பின்னர் அழைக்கப்பட்ட கீர்த்தி என்பவன் பதினெட்டாவது வயதில் (கி.பி. 1055) தென்னிலங்கையில் சோழருக்கு எதிராக வலிமை பெற்றிருந்த இயக்கத்திற்கு தலைமை தாங்கத் தொடங்கினான். அவ்வியக்கம் விஜயபாகுவிற்கு முன்னரே தோன்றியிருந்தமை சோழருக்கு எதிரான விஜயபாகுவின் படையெடுப்பு வெற்றியளிக்க ஒரு காரணம் ஆகும். இதனால் விஜயபாகுவின் சாதனையை குறைவாகவும் மதிப்பிடுவதற்கில்லை.

விஜயபாகு உருகுணை மன்னனாகப் பதவியேற்று பொலநறுவையில் இருந்த சோழருக்கு எதிராகப் படையெடுக்க முற்பட்ட போதெல்லாம் தென்னிலங்கையில் அவனுக்கு எதிராகப் பல கலகங்கள் உருவாகின. இவற்றையடக்கித்தனது படையெடுப்பைத் தொடர்ந்து நடத்தியபோது அவன் நம்பியிருந்த படைவீரர்களே அவனுக்கு எதிராகச் செயற்பட்டனர். இது பற்றிப் பரணவித்தானா கூறிய கருத்து நோக்கத்தக்கது:

''தன் துணிவும் மனோதிடமுமின்றி வேறொரு
உதவியுமில்லாமல்
ஒரு பெரிய சாம்ராச்சியத்தின் இராணுவ
பலத்தை
விஜயபாகு எதிர்க்க வேண்டியிருந்த தோடல்
லாமல்

பல முறைகளில் அவனுக்கு வெற்றி கிட்டும் சந்தர்ப்பங்களில் அவனது ஆதரவாளர்களே அவனைக் கைவிட்டுப் போக பின் திரும்பவும் எல்லாவற்றையும் முதலிலிருந்து தொடங்க வேண்டியவனானான்''.[6]

இவ்வாறான தடைகள் ஏற்பட்டபோதிலும் விஜயபாகு சோழரை வெற்றிகொள்ள வேண்டும் என்ற இலட்சியத்தில் இருந்து சிறிதளவும் விலக வில்லை. அத்தடைகளையெல்லாம் தாண்டி தொடர்ந்தும் சோழருக்கெதிராகப் போரிட்டு இறுதியில் வெற்றியடைந்தமை விஜயபாகுவின் தனிப்பட்ட சாதனையெனக் கூறலாம் இருப்பி னும் சோழருக்கெதிரான அவனது ஆரம்பகாலப் படையெடுப்புக்கள் விஜயபாகுவிற்கு சாதகமாக முடியவில்லை. இதற்கு விஜயபாகு பக்கத்திலிருந்த பலவீனம் என்பதை விடச் சோழர் பக்கத்தில் இருந்த பலம் பெருமளவு காரணம் எனலாம்.

விஜயபாகு உருகுணையின் மன்னனாகப் பதவியேற்றதும் தனது முதலாவது படையெடுப் பைச் சோழருக்கெதிராக மேற்கொண்டான். இப் படையெடுப்பின் போது சோழமன்னனாக இருந் தவன் இரண்டாம் இராஜேந்திரனா (1052-64) அல்லது வீரராஜேந்திரனா (1063 - 69) என்பது தெரியவில்லை. 1067க்கு முற்பட்ட வீரராஜேந் திரன் காலக் கல்வெட்டு இலங்கையில் நிகழ்ந்த போர் பற்றி எதுவுமே கூறாததினால் இப்போர் 1066இல் நடந்திருக்க வேண்டும் எனக் கொட் றிங்டன் கூறுகிறார்.[7] போர்நடந்த காலம் எது வாக இருந்தாலும், விஜயபாகுவிற்கு இது தோல் வியில் முடிந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதற்குப் போதிய ஆயத்தமின்றிப் போரில் ஈடு பட்டதே காரணம் என சூளவம்சம் கூறு கிறது.[8]

விஜயபாகுவின் இரண்டாவது படையெடுப்பு திட்டமிடப்பட்டு மேற் கொள்ளப்பட்ட ஒன்றா கும். இதற்காக அவன் போர்த்தந்திரங்களை மாற்றியதோடு பொலநறுவையில் இருந்த சோழ அதிகாரிகளுக்குப் பல தொல்லைகளை ஏற்படுத்தி மக்களுக்கும், சோழ அதிகாரிகளுக்கும் இடையே பகை உணர்வையும் ஏற்படுத்தினான். இதன் மூலம் தனது போராட்டத்திற்கு மக்களின் ஆதரவைப் பெறமுற்பட்டான். இதனால் ஆத்தி ரமடைந்த சோழ அதிகாரிகள் சோழ மன்னர் களின் ஆணையைக் கவனியாது தமது மனம் போன போக்கில் நடந்து கொண்டனர். இதை அறிந்த சோழ மன்னன் சோழ நாட்டிலிருந்து படை அனுப்பி வைத்தான். இது பற்றிச் சூள வம்சம் கூறுவது நோக்கத்தக்கது:

''இதைக் கேள்வியுற்ற சோழ மன்னன் ஆத்திர மடைந்து
ஒரு பெரிய சேனையை அனுப்பி வைத்தான்.
அச்சேனை மகாதீர்த்த (மாதோட்டம்) என்னு மிடத்தில்
வந்திறங்கி அங்குமிங்குமாச் சனங்களைக்
கொன்று இராசரட்டை மக்களை அடக்கிற்று.
இச்சேனைத் தலைவன் கரைபுரண்டோடும் வெள்ளம்
போன்ற சேனையை நடத்திக் கொண்டு சென்று
உருகுணையை எதிர்த்தான். அங்கு ரவிதேவ, சல
என்ற வீரர்கள் விஜயபாகுவோடு பகைமை
கொண்டு தமிழ்ச் சேனையின் தலைவனைச் சென்றடைத்தனர்.
இவ்விருவரும் பெருந்தொகையான பரிவாரங் களுடன்
தன்னை வந்தடைந்ததை அறிந்த தமிழ்ச் சேனாதிபதி
உருகுணை விரைவில் தன்வசப்படும் என நம்பி னான்''.[9]

சூளவம்சம் சோழப்படையெடுப்பை இத்தோடு நிறுத்தி விடுவதனால் உருகுணைக்கு எதிரான சோழப்படையெடுப்பின் விளைவுகளை அந்நூலில் இருந்து அறிய முடியவில்லை. ஆனால் சோழப் படைத்தளபதி உருகுணை விரைவில் தம்மிடம் வீழ்ச்சியடையுமென நம்பியிருந்தான் எனச் சூள வம்சம் கூறுவதிலிருந்து உருகுணைக்கு என்ன நேரிட்டிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. அந்த ஊகத்தை வீரராஜேந்திரன் காலக் (1067) கல் வெட்டு ஒன்று உறுதிப்படுத்துகிறது. அக்கல் வெட்டின் முக்கிய பாகம் பின்வருமாறு அமைந் துள்ளது:

''சோழ மன்னன் பெரிய சேனையை அனுப்பினான்.
அச்சேனை பாலம் அமைக்காது பெருந்தொகையான
கப்பல்களில் கடலைக் கடந்து சிங்களச் சேனையைத்
தோற்கடித்து விஜயபாகுவைத் துரத்தி அவனது அரசியைக்
கைதியாகக் கொண்டு இலங்கை முழுவதையும் வீரராஜேந்திரனது
ஆணைக்குள் கொண்டு வந்தது''.10

இக்கல்வெட்டிலிருந்து சோழருக்கு எதிராக உருகுணையில் போரிட்ட விஜயபாகு தோற்கடிக்கப்பட்டான் என்பது தெரிய வருகிறது. ஆனால் விஜயபாகுவிற்கு இந்நோத்தில் ஒரு மனைவி இருந்தாள் என்றும் அப்படியிருந்தால் அவள் சோழரால் கைப்பற்றப்பட்டாளோ என்றும் தெரியாது. முந்திய போர்களில் சோழர்கள் உண்மையாக இலங்கை அரச குடும்பப் பெண்களைக் கைப்பற்றிய செய்தியை ஆதாரமாகக் கொண்டு மேற்படி கூறுதல் சோழரின் பெருமையைத் தம்பட்டமடிக்கும் ஒரு செயலாக இருக்கலாம் என நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார்.11 மேலும் இக்கல்வெட்டில் வீரராஜேந்திரன் முழு இலங்கையையும் ஆண்டான் எனக் கூறப்பட்டாலும், சிறிது காலத்தில் அவனது ஆணை இராஜரட்டைக்குள் மட்டும் அடங்கியிருந்ததாகக் கருதுவதே பொருத்தமாகும். ஆனால், இக்கல்வெட்டில் இருந்தும், சூளவம்சத்தின் கூற்றிலிருந்தும் ஒரு உண்மை புலனாகிறது. அந்த உண்மை சோழருக்கு எதிரான விஜயபாகுவின் இரண்டாவது படையெடுப்பும் தோல்வியில் முடிந்ததென்பதேயாகும்.

விஜயபாகு முதலிரு படையெடுப்புக்களையும் துணிவோடு தொடர்ந்து நடாத்திய போதிலும் பொலநறுவையிலிருந்த சோழரை வெற்றி கொள்ளமுடியவில்லை. மாறாக தனது அதிகாரத்தில் இருந்த உருகுணை அரசையும் தற்காலிகமாக சோழரிடம் இழக்க நேரிட்டது. இதற்கு காரணம் சோழர் பொலநறுவையிலும், தமிழ் நாட்டிலும் வலிமையோடு இருந்ததனால் விஜயபாகுவின் படையெடுப்புக்களை இலகுவாக முறியடிக்க முடிந்தமையாகும். ஆனால் விஜயபாகு மூன்றாவது முறையாகப் படையெடுத்த போது சோழரின் படைப்பலம் அவர்களுக்குச் சாதகமாக இருக்கவில்லை. விஜயபாகுவின் இப்படையெடுப்பு நடந்த காலத்தில் முதலாம் குலோத்துங்கன் (1070) சோழ மன்னனாகப் பதவியேற்றிருந்தான். இவன் ஆட்சியில் சோழப் பேரரசில் ஏற்பட்ட தளர்ச்சியும், முன்னைய சோழ மன்னர்கள் கைப்பற்றிய தென்னிந்திய அரசுகளின் எல்லைகளைப் பாதுகாக்க அவன் தொடர்ந்து மேற்கொண்ட படையெடுப்புக்களும், சாளுக்கியருடனான படையெடுப்பில் சோழப் படைவீரர்களுக்கு ஏற்பட்ட உயிர் இழப்புக்களும் சோழ மன்னனின் கவனத்தை இலங்கையிலிருந்து திசை திருப்பியது. இதனால் விஜயபாகுவின் முன்னைய படையெடுப்புக்களை முறியடிக்க தென்னிந்தியாவில் இருந்து படையனுப்பியது போல் விஜயபாகுவின் மூன்றாவது படையெடுப்பிற்கு எதிராக படையனுப்ப முடியவில்லை.12 இதைச் சாதகமாகப் பயன்படுத்திய விஜயபாகு 1070 இல் பொலநறுவையில் இருந்த சோழரின் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டான். இத்தகைய அரசியல் சூழ்நிலைகளை மனக் கருத்திற் கொண்ட நீலகண்ட சாஸ்திரி விஜயபாகு காற்றுள்ள போது தூற்றிக் கொள்ளும் வல்லமையுடையவனாக இருந்திருக்கலாம் என வர்ணித்துள்ளார்.13

எனவே விஜயபாகு சோழரை வெற்றிகொண்டதற்காக இலங்கை வரலாற்றில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை விஜயபாகுவின் தனிப்பட்ட திறமையின் பக்கத்திலிருந்து மட்டும் நோக்காது, சோழருக்குப் பாதகமாக இருந்த சூழ்நிலையின் பின்னணியில் இருந்தும் நோக்குவது விஜயபாகுவின் வெற்றியைச் சரியாக மதிப்பிட உதவும்.

## சிங்கள மன்னர்களின் ஆட்சியில் தமிழரும், தமிழர் பிராந்தியங்களும்

1070 இல் விஜயபாகுவிற்கு ஏற்பட்ட வெற்றி சோழரிடம் இருந்த ஆட்சியதிகாரம் சிங்களமன்னர்களின் கைக்கு மாறுவதற்கு வழிவகுத்தன. இதனால் சோழப்படைகள் அழிக்கப்பட்டன என்றோ அல்லது சோழர் ஆட்சியில் குடியேறிய தமிழர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர் என்றோ கூற முடியாது. மாறாக சோழர்

ஆட்சியின் பின்னரும் அவர்கள் இலங்கையிலேயே நிரந்தரமாக குடியேறினர். அக்குடியேற்றத்தால் இரண்டு வகை மாற்றங்கள் ஏற்பட்டன.

(1) சோழர் ஆட்சியில் படைவீரர்களாக, நிர்வாகிகளாக இருந்த தமிழர்கள்தொடர்ந்தும் சிங்கள மன்னர்களின் ஆட்சியிலும் பங்கு கொண்டனர். இதுபற்றி அரசரட்ணம் கூறிய கருத்துக்கள் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது:

'சோழர்கள் தோற்கடிக்கப்பட்டு சிங்கள அரசர்களின் அதிகாரம் மீண்டும் நிலைநாட்டப்பட்ட போதிலும் தமிழர்களின் சனத்தொகைப் பெருக்கமும், அவர்களது செல்வந்த நிலையும் படைத்துறையிலும், நிர்வாகத்துறையிலும் அவர்கள் வகித்த செல்வாக்கான பதவிகளும் இதனைச் சாத்திய மற்றதாக்கி விட்டது.''[14]

(2) சோழர் ஆட்சியில் படைவீரர்கள், நிர்வாகிகள், வர்த்தகர்கள், கலைஞர்கள், பிராமணர்கள் எனப் பல்வேறு சமூகத்தினர் இலங்கை வந்தனர். அவ்வாறாக வந்தவர்கள் சோழர் ஆட்சி முடிந்ததன் பின்னர் இலங்கையில் நிரந்தரமாகக் குடியேறினர். இதனால் வட இலங்கையில் தமிழர்களின் சனத்தொகை அதிகரித்தது.[15] சோழர் ஆட்சியேற்பட முன்னர் அநுராதபுர ஆதிக்கத்திற்கு கட்டுப்படாது அடிக்கடி படையெடுப்புக்களையும், கிளர்ச்சிகளையும் மேற்கொண்ட வட இலங்கை (உத்தர தேசம்) சோழர் ஆட்சியோடு ஓர் அரசொன்றின் ஆக்கத்திற்கு உட்பட்டது. அந்த ஆக்கம் சோழர் ஆட்சியின் மறைவோடு முழு அரசாக மலர்ச்சிபெற வட இலங்கையில் ஏற்பட்ட சனத்தொகைப் பெருக்கமும் ஒரு காரணமாக அமைந்தது. இவ்விரு மாற்றங்களையும் பொலநறுவை கால சிங்கள மன்னர்களின் ஆட்சியை ஆராய்வதன் மூலம் ஓரளவு கண்டு கொள்ளலாம்.

விஜயபாகு சோழருக்கு எதிராக மேற்கொண்ட படையெடுப்புச் சிங்கள இனத்தின் விடுதலைக்காக எனப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. இதன் மூலம் சோழ, சிங்களப் போராட்டம் தமிழ், சிங்கள இனப் போராட்டமாக அவ்விலக்கியங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளது. ஆனால் சோழரை வெற்றி கொண்ட விஜயபாகு பொலநறுவையிலிருந்து ஆட்சி புரிந்த காலத்தில் தனது அரசையும், பௌத்த மதத்தையும் பாதுகாப்பதில் சோழர் ஆட்சியில் செல்வாக்குப் பெற்றிருந்த படைவீரர்களையே நம்பியிருந்தான். அப்படைப் பிரிவுகளுள் வேளைக்காரப் படைப்பிரிவு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

சோழர் இலங்கையில் ஆட்சிபுரிந்த காலத்தில் தமிழ் நாட்டைப்போல் இங்கும் வேளைக்காரர் என்ற படைப்பிரிவினரை வைத்திருந்தனர். இப்படைப்பிரிவில் இடங்கை, வலங்கை, சிறுதனம், பிள்ளைத்தனம், வடுகர், மலையாளர் முதலான பல சிறு படைப்பிரிவுகளும் அங்கம் வகித்தன.[16] இவ்வேளைக்காரப் படை ஒரு வலிமை மிக்க சமூகத்தினர் என்றும்,[17] வல்லமைபடைத்த சமுதாயத்தில் உயர் நிலையில் வைக்கப்பட்ட கட்சியினர் என்றும்,[18] தனிப்பட்ட படைப்பிரிவு என்றும்,[19] வரலாற்றாசிரியர்களால் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் நீலகண்ட சாஸ்திரி வேளைக்காரப்படையென்பது உயிரை விடுகின்ற சமயத்திலும் அரசனுக்கு கீழ்ப்படிந்தவர்களாக சபதம் செய்து கொண்ட ஒருவகைப் படை உறுப்பினர்கள் என விளக்கம் கொடுத்துள்ளார்.[20] இலங்கையில் சோழர் ஆட்சியில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற இப்படையுறுப்பினர்கள் சோழர் ஆட்சியின் பின்னர் தமிழ் வர்த்தகக் குழுக்களின் கீழ் கடமையாற்றியிருக்க வேண்டும்.[21] இவ்வகைப் படைப்பிரிவினர்களே சிங்கள மன்னர்களின் ஆட்சியிலும் நீண்டகாலம் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

விஜயபாகு ஆட்சியில் அவனுக்குத் துணையாக வேளைக்காரப் படையினர் பணிபுரிந்ததை சூளவம்சமும், அவன் ஆட்சிக் காலக் கல்வெட்டுக்களும் கூறுகின்றன. இவனது ஐம்பத்தைந்தாவது ஆட்சியாண்டைச் சேர்ந்த பொலநறுவைக் கல்வெட்டு அந்த நகரிலுள்ள தலதாமாளிகையைப் பாதுகாக்கும் பொறுப்பை வேளைக்காரப் படையினர் ஏற்றியிருந்ததாகக் கூறுகிறது.[22] விஜயபாகுவைத் தொடர்ந்து பொலநறுவையில் ஆட்சி புரிந்த ஜெயபாகு, இரண்டாம் கஜபாகு, முதலாம் பராக்கிரமபாகு ஆகிய மன்னர்களின் ஆட்சியிலும் இவ்வேளைக்காரப் படையினர் முக்கிய பங்கு எடுத்தற்கு ஆதாரங்கள் உண்டு. இவர்கள் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதில் மட்டுமன்றி சிங்கள மன்னர்களின் உள்நாட்டு, வெளிநாட்டுப் படையெடுப்புகளிலும் முக்கிய பங்கெடுத்தனர்.

தமிழர்களின் ஆதரவோடு பொலநறுவை காலச் சிங்கள மன்னர்கள் ஆட்சி புரிய நேரிட்டமை அவர்களின் மத நடவடிக்கைகளைப் பாதிக்க நேர்ந்தது எனலாம். இலங்கையின் பாரம்பரிய அரசியல் வரலாற்றில் ஒரு மன்னனைத் தெரிவுசெய்வதிலும், ஒரு மன்னது ஆட்சி நீண்டகாலம் நிலைத்திருப்பதிலும் பௌத்தத்தி கு முக்கிய பங்கிருந்தது. இதனால் ஒரு மன்னன் எந்த இனத்தவனாக இருந்தாலும் அவன் பௌத்தமதத்திற்கு சார்பாக ஆட்சி செய்ய நேரிட்டது. எல்லாளன் என்ற தமிழ் மன்னன் பௌத்ததிற்கு மாறான மதத்தைப் பின் பற்றிய போதிலும் அவன் நாற்பத்திநாலு ஆண்டுகள் ஆட்சி புரிந்தமைக்கு அவன் பௌத்தத்திற்குச் சார்பாகவும் நடந்து கொண்டதே காரணமாகும். இந்நிலை பொதுவாக அநுராதபுர அரசியலில் காணபபட்டது. ஆனால் பொலநறுவையில் சோழரைத் தொடர்ந்து ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்களில் பெரும்பாலானோர் பௌத்தராக, பௌத்த மதத்தை ஆதரித்தவர்களாக இருந்தபோதிலும் இந்து மதத்தைப் புறக்கணிக்க முடியவில்லை. மாறாக சோழர் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த இந்து ஆலயங்களைப் புதிப்பித்துக் கட்டுவதையும், பிராமண குடியேற்றங்களுக்கு ஆதரவு வழங்குவதையும் தமது சமயக் கடமைகளாகக் கொண்டனர். உதாரணமாகச் சோழர் ஆட்சியில் நலிவுற்றுப் போன பௌத்தமதத்தையும், பௌத்த சங்கத்தையும் மீளக் கட்டியெழுப்புவதைத் தனது பணியாகக் கொண்ட விஜயபாகு சோழர் காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்த இந்து மதத்தை முற்றாகப் புறக்கணித்து ஆட்சி புரிய முடியவில்லை. இது பற்றிப் பரணவிதான கூறிய கருத்து இங்கு நோக்கத்தக்கது:

"விஜயபாகு அரசுகட்டிலேறிய பின்னர் இந்து மத வழிபாட்டு முறைகளைப் புறக்கணிக்க முடியவில்லை. இவன் சோழர் காலச் சமய ஸ்தாபனங்கள் தொடர்ந்து இயக்க அனுமதித்ததோடு தனது காலத்தில் அமைக்கப்பட்ட சைவக் கோயில்களுக்கும் தனதாரவை வழங்கினான்.23

இதற்கு உதாரணமாக கந்தளாயில் இவன் மேற்கொண்ட சமய நடவடிக்கைகளை எடுத்துக் காட்டலாம். சோழர் ஆட்சிக் காலத்தில் கந்தளாயில் அமைக்கப்பட்ட 'ராஜராஜேஸ்வரம்' என்ற ஆலயமும், அதை அண்டி அமைக்கப்பட்ட 'ராஜராஜசதுர்வேதி மங்கலம்' என்ற பிராமணர் குடியேற்றமும் விஜயபாகுவின் ஆதரவைப் பெற்றதோடு விஜயபாகு தன் பெயரையும் சேர்த்து முறையே அவற்றுக்கு 'விஜயராஜேஸ்வரம்', விஜயராஜசதுர்வேதி மங்கலம் எனவும் பெயரிட்டான். அத்துடன் இங்குள்ள ஆலயத்திற்கு இவன் அளித்த தானம்பற்றிப் பாலமோட்டைச் சாசனமும் கூறுகிறது.24 விஜயபாகுவைத் தொடர்ந்து விக்கிரமபாகு (கி. பி. 111 - 1132), இரண்டாம் கஜயபாகு (1132 - 1193), நிஸங்கமல்லன் (1187 - 1196) முதலான மன்னர் ஆட்சியிலும் இந்துமதமும், இந்து நிறுவனங்களும் அரசஆதரவு பெற்று வளர்ச்சியடைந்ததைப் பாளி இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன.

அநுராதபுர அரசுகால நிர்வாகத்தில் தமிழரின் செல்வாக்கு கணிசமான அளவு இருந்ததற்கு ஆதாரங்கள் உண்டு. ஆயினும் அவ்வரசின் ஆதிக்கத்திற்குட்பட்ட பிராந்தியங்களில் நிர்வாகம் தொடர்பான கல்வெட்டுக்கள் சிங்கள மொழியிலேயே எழுதப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் பொலநறுவை காலத்தில் சோழர் ஆட்சியைத் தொடர்ந்து ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் தமது ஆட்சி தொடர்பான கல்வெட்டுக்களை தமிழிலும் வெளியிட்டனர். இதன் மூலம் சிங்கள நிர்வாகத்தில் தமிழும் ஒரு ஆட்சி மொழியாக மாறியது. ஆட்சியதிகாரிகள் தமிழ்க் குடிகளோடு கொண்ட தொடர்புகளைக் குறிக்கும் ஆவணங்கள் பெரும்பாலும் தமிழிலேயே எழுதப்பெற்றன. விஜயபாகுவினுடைய பனாக்கடுவைச் செப்பேடுகளில் நிர்வாகத்தில் உள்ள தமிழ் எழுத்தாளர்களைப் பற்றிய குறிப்புண்டு.25 ஸ்ரீசங்க போதி விஜயபாகு என்ற மன்னனைக் குறிப்பிடும் நான்கு தமிழ்க் கல்வெட்டுக்கள் இதுவரை கிடைத்துள்ளன. இவற்றுள் பொலநறுவையிலும், பாலமோட்டையிலும் கண்டுபிடிக்கப்பட்டவை முதலாம் விஜயபாகு காலத்தைச் (1070 - 1110) சேர்ந்தவையாகும். விஜயபாகுவைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஏனைய சிங்கள மன்னர்களின் ஆட்சியிலும் தமிழ் ஒரு முக்கிய நிர்வாக மொழி

யர்க இருந்ததற்குச் சான்றுகள் உண்டு. இதற்கு முதலாம் பராக்கிரமபாகு காலத்திற்குரிய நயினா தீவு தமிழ்க் கல்வெட்டுச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.[26]

எனவே சோழருக்குப் பிற்பட்ட பொலநறுவை அரசு காலத்தில் தமிழ்மொழியும், தமிழருக்கு சார்பான மதமும் சிங்கள மன்னர்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்டதை நோக்கும்போது சோழர் ஆட்சிக்குப் பின்னரும் தமிழரின் செல்வாக்கு பொலநறுவை அரசுக்குள் மறையவில்லை என்பது தெரிகிறது. இந்நிலையில் பொலநறுவை அரசிற்கும் தமிழர் பிராந்தியங்களுக்கும் சிறப்பாக வட இலங்கைக்கும் இடையிலான உறவு எத்தகையது என்பது ஆராயப்பட வேண்டியது ஒன்றாகும்.

விஜயபாகுவின் 27 ஆம் ஆட்சியாண்டுக்குரிய பனாகடுவ சாசனம் விஜயபாகு தன் சுய வீரத்தால் தமிழ்ப் படைகளாகிய இருளை அறவே அகற்றி இலங்கை முழுவதையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்தான் எனக் கூறுகிறது.[27] சிங்கள இனத்தின் விடுதலைக்கு விஜயபாகுவே காரணகர்த்தா எனக் கருதும் நீலகண்ட சாஸ்திரி அவனின் நீண்டகால ஆட்சி இலங்கை வரலாற்றில் சாதனை நிறைந்த காலம் எனக் கூறுகிறார். அக்கூற்று பின்வருமாறு அமைந்துள்ளது:

'இலங்கை முழுவதும் ஒரு மன்னன் ஆளுகைக்கு உட்பட்டமைக்கும், போர்களினாலும் அன்னியர் கைப்பற்றுதலினாலும் ஏற்பட்ட சேதாரம் பரிகாரம் காணப்பட்டதற்கும், புத்தசமயம் முன்பிருந்த நிலையை அடைவதற்கும், இலங்கை மறுபடியும் இந்து சமுத்திரத்தின் எல்லையிலுள்ள நாடுகளுடன் தொடர்பு கொண்டு முக்கிய நாடாக விளங்குவதற்கும் விஜயபாகுவின் ஆட்சியே காரணம்.'[28]

மேற்கூறப்பட்ட இரு கூற்றுக்களும் விஜயபாகுவின் ஆட்சியில் முழு இலங்கையும் அவனது மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததென்பதைச் சுட்டி நிற்கின்றன. ஆனால் விஜயபாகுவின் ஆட்சி தொடர்பான சான்றுகளை ஆராய்ந்து பார்க்கும்போது இக்கூற்றுக்கள் சற்று மிகைப்படுத்தப்பட்டதாகவே தெரிகிறது. விஜயபாகு தென்னிலங்கையைத் தனது நேரடி நிர்வாகத்தின் கீழ் வைத்திருப்பதற்காக தன் தம்பியாகிய வீரபாகுவை யுவராஜனாக நியமித்து தக்கண தேச ஆட்சிப் பொறுப்பை அவனிடம் கொடுத்தான். இவனின் இளைய சகோதரனாகிய கயபாகுவை உருகுணையின் ஆதிபாதப் பதவிக்கு நியமித்தான்.[29] ஆனால் உத்தரதேசம் பிற்பட்ட அநுராதபுரகாலம் தொடக்கம் சிங்கள மன்னர்களுக்கு எதிராகச் செயல்பட்டும் கூட உத்தர தேசத்தை நிர்வகிக்க விஜபாகு ஒரு அதிகாரியை நியமித்ததற்கோ அல்லது விஜயபாகுவின் நேரடியான நிர்வாகத்திற்குள் இருந்ததற்கோ சான்றாதாரங்கள் காணப்படவில்லை. சூளவம்சம் நாகதீபத்தில் இருந்த பௌத்த விகாரையை விஜபாகு திருத்தியமைத்தியமைத்தாகக் கூறுகிறது.[30] இது விஜயபாகுவின் மேலாதிக்கம் உத்தரதேசத்தில் இருந்ததற்கு ஒரு சான்றென வரலாற்றாசிரியர்களில் ஒரு சாரார் கருதுகின்றனர். ஆனால் இதைப் பொலநறுவை அரசிற்கும் உத்தரதேசத்திற்கும் இடையிலான பண்பாட்டு உறவுக்கு ஒரு சான்றாக எடுத்துக் கொள்ளலாமே தவிர, பொலநறுவை அரசின் அரசியல் மேலாதிக்கம் உத்தரதேசத்தில் இருந்ததற்குச் சான்றாக எடுத்துக் கொள்வது பொருந்துமாறில்லை. பிற்பட்ட அநுராதபுரகால அரசு சிங்கள மன்னர்களின் ஆதிக்கத்திற்குள் உட்பட்டிருந்தபோதிலும் தென்னிலங்கையில் பெரும்பாலும் தமிழருக்குச் சார்பான இந்துக் கோவில்கள் தெவிநுவரா, நாளந்த ஆகிய இடங்களில் கட்டப்பட்டன. அநுராதபுரத்தில் மட்டும் 9 ஆம், 10ஆம் நூற்றாண்டுக்குரிய பத்து சைவக்கோவில்கள் கட்டப்பட்டிருந்ததற்கு சான்றுகள் கிடைத்துள்ளன. இதனால் தமிழர்களின் மேலாதிக்கத்திற்குள் அநுராதபுர அரசு இருந்ததாகக் கூறப்படுவதில்லை.

விஜயபாகுவின் பின்னர் பொலநறுவையை ஆண்ட மன்னர்களுள் முதலாம் பராக்கிரமபாகு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவன். இவன் ஆட்சித் தொடர்பான தமிழ்க் கல்வெட்டொன்று உத்தர தேசத்தில் நயினாதீவு என்ற இடத்தில் கிடைத்துள்ளது. அக்கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு படிக்கப்பட்டுள்ளது.[31]

1. .. நாங்கள்...
2. .. வந்து ஊரர்த்துறை
3. (யில்) பரதெசிகள் வந்து
4. இருக்க வேணுமென்றும்
5. அவர்கள் ராகைஷப்படெ
6. வணு மென்றும் பலதுனை
7. ற களில் பரதெசிகள் வந்து நந்து
8. றையிடெ(ல) கூடவெணு மென்று
9. (ம்) நாம் ஆனை குதிரை மெல் ஸ்நெஉற
10. (மு) ண்டாதலால் நமக்கு ஆனை குதிரை
11. கொடுவந்த மரக்கலங் கெட்டது
12. ண்டாகில் நாலத்தொன்று பண்டா
13. (ர)த்துக்குக் கொண்டு முன்று கூறும்
14. (உ)டையவனுக்கு விடக்கடவதாகவு
15. (ம) வாணிய மரக்கலங் கெட்டதுண்
16. டாகில் செம்பாகம் பண்டாரத்துக்
17. (கு)க் கொண்டு செம்பாகம் உடைய
18. (வ)னுக்கு விடக்கடவதாகவும் இவ்
19. வவஸ்தை ...(ரு) ள்ளதனையுங் க
20. ல்லிலுஞ் செம்பிலும் எழத்து வெ
21. ட்டி வித்து இவ்வவஸ்தை செய்
22. ... துங்கு

இக்கல்வெட்டு அக்காலத்தில் பிற நாட்டு வர்த்தகர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சில வசதிகளையும், சுங்க ஒழுங்குகளையும் எடுத்துக் கூறுகிறது. பிறநாட்டு வர்த்தகர்கள் இதிலே பரதேசிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். இவ்வர்த்தகர்கள் யானை, குதிரைபோன்ற மிருகங்களையும் வாணிபப் பொருட்களையும் ஏற்றி வந்தனர் என்பதை இக்கல்வெட்டாலே தெரிய வருகிறது. முதலாம் பராக்கிரமபாகு காலத்திலே பர்மாவிலிருந்து யானை இலங்கையில் இறக்குமதியாகியது என்று சூளவம்சத்தில் கூறப்பட்டுள்ளது.[32] இதனை இக்கல்வெட்டும் உறுதிப்படுத்துகிறது. அத்துடன் சோழர் காலத்திலிருந்து தென்னிந்திய, தென்கிழக்காசிய வர்த்தகத்திலே முக்கிய வர்த்தகத் துறைமுகமாக விளங்கிய ஊர்காவற்றுறை சிங்கள மன்னர் ஆட்சியிலும் முதன்மை பெற்றிருந்தமை தெரிய வருகிறது.

வரலாற்றாசிரியர்களில் ஒரு சாரார் இக்கல்வெட்டு பராக்கிரமபாகுவின் ஆட்சியில் உத்தரதேசம் பொலநறுவை அரசிற்கு உட்பட்டிருந்ததற்கு ஒரு சான்று எனக்கருதுகின்றனர். ஆனால் இதை வர்த்தகத் தொடர்புக்குரிய சான்றாகக் கொள்வதே பொருத்தமாகும். ஒரு அரசின் ஆதிக்கம் இன்னொரு நாட்டில் ஏற்படாமலே அவ்வரசின் வர்த்தகச் செல்வாக்கு ஏற்பட்டதற்கு வரலாற்றில் பல சான்றுகளுண்டு. இலங்கையில் கூட சோழர் ஆட்சி மறைந்ததன் பின்னரும் சிங்கள மன்னர்களின் ஆட்சிக்குட்பட்ட பிராந்தியங்களில் தமிழ் வணிக கணங்கள் சுயாட்சி கொண்ட பட்டினங்களை நிறுவி நிர்வகித்ததற்குப் பல ஆதாரங்கள் உண்டு. நிகாயசங்கிரக என்ற சிங்கள நூல் யாழ்ப்பாண மன்னர்கள் தென்னிலங்கையிலுள்ள ஒன்பது துறைமுகங்களில் இருந்து திறைபெற்றதாகக் கூறுகிறது. கொட்டகம என்ற இடத்தில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டொன்று யாழ்ப்பாண மன்னர்கள் சிங்கள அரசை வெற்றி கொண்டது பற்றிக் கூறுகிறது இதனால் யாழ்ப்பாண அரசின் ஆதிக்கத்திற்குள் தென்னிலங்கை உட்பட்டிருந்ததாகக் கூறுவதற்கில்லை. அது போன்றே நயினாதீவிற் கிடைத்த பராக்கிரமபாகுவின் கல்வெட்டையும் நோக்க வேண்டும்.

பொலநறுவையில் ஆட்சிபுரிந்த கலிங்கவம்சத்து மன்னர்களுள் நிஸங்கமல்லன் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவன். இவன் ஆட்சிக்காலம் குறுகியதாக இருந்தாலும் சாதனை நிறைந்ததாகக் கூறப்படுகிறது. பௌத்த சிங்கள மக்களின் ஆதரவைப் பெற தன்னை விஜயன் வழிவந்த வம்சத்தவன் எனவும், பௌத்தமதத்தின் காவலன் எனவும் அடிக்கடி கூறிக் கொண்டான். இலங்கையை ஆண்ட மன்னர்களுள் பெருமளவு கல்வெட்டுக்களை பொறிப்பித்த பெருமை இவனுக்குண்டு. ஆயினும் இவனது ஆட்சி தொடர்பான கல்வெட்டுக்கள் எவையும் இதுவரை உத்திர தேசத்தில் கிடைத்ததாகத் தெரியவில்லை. மாறாக இவன் வெளியிட்ட கல்வெட்டுக்களை நோக்கும்போது தமிழரால் தனது அரசு பறிபோய் விடும் என்ற அச்ச உணர்வைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இவனது வரலாற்றுப் புகழ்மிக்க கல்பொத்தக் கல்வெட்டு பௌத்த மதத்திற்கே சொந்தமான இந்நாட்டினைப் பரிபாலிக்க சோழ, கேரள மற்றும் ஏனைய பகுதிகளில் உள்ள பௌத்தர்களல்லாதவர்களைத் தெரியக்கூடாதெனவும், இவர்களோடு சேர்ந்து அழிவினை ஏற்படுத்துவோர் துரோகிகளே எனவும் கூறுகிறது.[33] கலிங்க மாகனால் 1215இல் பொலநறுவை வெற்றி கொள்ளப்படுவதற்கு முன்னரே தமிழரின் படையெடுப்பையிட்டு சிங்கள மன்னர்களிடையே


அச்ச உணர்வு இருந்ததாகத் தெரிகிறது. 1211ஆம் ஆண்டுக்குரிய மினிப்பே கல்வெட்டு தமிழர் படையெடுப்பால் பௌத்த சிங்கள மக்களுக்கும், நாட்டிற்கும் ஏற்படப்போகும் பேராபத்துப் பற்றிக் கூறுகிறது.34 இப்படையெடுப்புகளுக்கும் உத்தரதேசத்தில் வாழ்ந்த தமிழர்களுக்கும் தொடர்பு இருந்ததா என்பதற்கு இக்கல்வெட்டுக்களில் தெளிவான சான்றுகள் காணப்படவில்லை. ஆனால் உத்திரதேசத் தமிழர்களும் பங்கு கொண்டிருப்பினர் எனக் கருத இடமுண்டு. இதற்கு கலிங்கமாகன் படையெடுப்பு ஒரு சிறந்த சான்றாகும்.

## பொலநறுவை அரசும் பூநகரியும்

பொலநறுவை அரசிற்கும் பூநகரிப் பிராந்தியத்திற்கும் இடையேயிருந்த உறவு பற்றி அறிவதற்கு சமகால இலக்கியங்களில் நேரடியான சான்றுகள் அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் பூநகரிப்பிராந்தியத்தில் கிடைத்த தொல்பொருட் சான்றுகளைக் கொண்டு பொலநறுவை அரசுடனான உறவு பற்றி ஓரளவு அறிய முடிகிறது. பூநகரிப் பிராந்தியத்தில் பொலநறுவை காலச் சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நூற்றி எழுபதிற்கும் மேற்பட்ட நாணயங்கள் எமது ஆய்வின் போது கிடைத்துள்ளன. எமக்குகிடைத்த நாணயங்களை விட மேலும் பல நாணயங்களை அவ்வூர் மக்கள் பாதுகாத்து வைத்திருப்பதினை அவதானிக்க முடிந்தது இந்நாணயங்களில்பெரும்பாலானவை கல்முனைதொட்டுமாதோட்டத்தின் தென்னெல்லை வரை கடற்கரையை அண்டியுள்ள கல்முனை, மண்ணித்தலை, கௌதாரி முனை, வெட்டுக்காடு, பரமன்கிராய், மட்டுவில்நாடு, பள்ளிக்குடா, கோரித்திவு, பாலாவி, ஈழஊர், வீரபாண்டியன்முனை, நாச்சிக்குடா, பல்லவராயன்கட்டு ஆகிய இடங்களில் கிடைத்தவையாகும். பொலநறுவை அரசுகாலத்தில் இலங்கைக்கும் தென்னிந்தியா, தென்கிழக்காசியா ஆகியநாடுகளுக்கிடையிலான வர்த்தகத் தொடர்பு பூநகரி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்கள் ஊடாக நடந்ததற்கு ஆதாரங்கள் இருப்பதனால் பூநகரியில் பெருமளவு நாணயங்கள் கிடைத்தமைக்கு அப்பிராந்தியம் வெளிநாட்டு வர்த்தகத்தில் முக்கிய போக்குவரத்து மையமாக திகழ்ந்தது காரணம் எனலாம். மேற்குறிப்பிட்ட இடங்களைத் தவிர பூநரியிலுள்ள நல்லூர், செட்டிக்குறிச்சி, நெற்புலவு, பல்லவராயன், தென்னியங்குளம், நாகபடுவான் ஆகிய இடங்களிலும் பொலநறுவை கால நாணயங்கள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

முதலாம் விஜயபாகு காலத்தில் பொலநறுவைக்கும் பூநரிக்குமிடையே அரசியல் வர்த்தக உறவு இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இவன் தனது ஆட்சியில் சோழ மன்னர்கள் வெளியிட்ட நாணய மரபைப் பின்பற்றி நாணயத்தின் முன்பக்கத்தில் தனது உருவத்தையும், நாணயத்தின் பின்பக்கத்தில் தேவநாகிரி எழுத்தில் ஸ்ரீவிஜயபாகு என்ற பெயரையும் பொறிப்பித்தான் இம்மரபையேவிஜயபாகுவிற்கு பிற்பட்ட சிங்கள மன்னர்களும் தொடர்ந்து பின்பற்றினர். பூநகரிப்பிராந்தியத்தில் விஜயபாகு வெளியிட்ட அறுபத்திநான்கு நாணயங்கள் கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு, ஈழஊர், புலையர்குடா, நல்லூர், செட்டிக்குறிச்சி ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன (படம்-97). இவ்வகை நாணயங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும், தென்னிந்தியாவிலும் கிடைத்துள்ளன. பூநகரியில் இந்நாணயங்கள் புழக்கத்திலிருந்தமைக்குப் பொலநறுவை அரசுடனான வர்த்தக தொடர்பு முக்கிய காரணம் எனக் கூறலாம்.

விஜயபாகுவின் ஆட்சியில் பொலநறுவை அரசிற்கும் பூநகரியுள்ளிட்ட வடமேற்கிலங்கைக்குமிடையே அரசியல் தொடர்பு இருந்ததற்கான



படம்-97. பூநகரியிற் கிடைத்த முதலாம் விஜயபாகு நாணயங்கள்.


ஆதாரம் காணப்படுகிறது. அந்த உறவு பொல நறுவை அரசிற்கெதிராக வடமேற்கிலங்கையிலிருந்து ஏற்பட்ட படையெடுப்பு பற்றியதாக உள்ளது. அப்படையெடுப்புப் பற்றிச் சூளவம்சம் கூறுவது இவ்விடத்தில் நோக்கத்தக்கது:

'விஜயபாகு தன்நாட்டுச் சிங்களத் தூதுவர்கள் தமிழ்நாட்டிற் சோழரால் அவமதிக்கப்பட்டதற்காகத் தமிழ்நாட்டின் மீது படையெடுக்குமாறு மகாதீர்த்த, மட்டிகாவட்ட தீர்த்த ஆகிய இடங்களில் நிலைகொண்டிருந்த வேளைக்காரப் படைவீரர்களைத் தன் தூதுவர்கள் மூலம் வேண்டினான். இதை ஏற்கமறுத்த வேளைக்காரப்படையினர் அத் தூதுவர்களைக் கொன்று பொலநறுவை அரசிற்கு எதிராகப் படையெடுத்து தலைநகரைக் கைப்பற்றி அதைத் தீக்கிரையாக்கியதோடு விஜயபாகுவின் சகோதரியையும், புதல்வர்களையும் சிறைப்பிடித்தனர். இதனால் விஜயபாகு பொலநறுவையில் இருந்து உருகுணைக்குத் தப்பியோடி தமிழ்ப்படை வீரருக்கெதிராகப் படை திரட்டினான்.'35

இதிலே தமிழ்ப்படை வீரர்கள் தங்கியிருந்த இரு இடங்களும் வடமேற்கிலங்கையில் அமைந்துள்ளன என்பதைச் சூளவம்சத்தின் கூற்றிலிருந்து அறிய முடிகிறது. பாளியில் மாகாதீர்த்த என்ற இடம் மாதோட்டத்தைக் குறிப்பதாகும். மட்டிகாவட்ட தீர்த்த என்ற மற்றைய இடம் பூநகரி மட்டுவில் நாட்டைக் குறித்ததெனக் கருத இடமுண்டு. 36 இங்கிருந்த படைவீரர்கள் பொலநறுவையை கைப்பற்றியபோது சோழராட்சி இங்கிருந்திருக்கவில்லை. இதேவேளை தமிழ்நாட்டிற் கூட சோழ வம்சம் வலிமை குன்றி அதன் பேரரசின் எல்லைகளைப் பாதுகாப்பதிற் சோழ மன்னர்கள் பல கஸ்டங்களை எதிர்நோக்கினர். இதனால் இப்படையெடுப்புக்குச் சோழரின் ஆதரவு இருந்திருக்குமெனக் கருத முடியாது. அதேவேளை இங்கிருந்த சோழப் படை வீரர்கள் சோழ மன்னர்களின் கட்டுப்பாட்டில் இருந்திருப்பராயின் தமிழ்நாட்டிற் சோழர் எதிர்கொண்ட பல படையெடுப்புக்களில் இவர்களைப் பயன்படுத்தியிருப்பர். இதனால் இவர்களை உத்தர தேசத்தில் நிரந்தரமாக வாழ்ந்தபடைவீரர்கள் எனக் கூறலாம். அப் படை வீரர்களே சோழரைப் பொலநறுவையில் இருந்து அகற்றிய முதலாம் விஜயபாகுவைச் சில ஆண்டுகளுக்குள் அங்கிருந்து உருகுணைக்குத் தப்பியோடச் செய்தனர். இச்சம்பவம் பொலநறுவை அரசின் அரசியல் மேலாதிக்கம் உத்தர தேசத்தில் ஏற்படவில்லை என்பதற்குச் சான்றாகும்.

விஜயபாகுவைத் தொடர்ந்து ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர் காலத்தில் பொலநறுவை அரசிற்கும் பூநகரிப் பிராந்தியத்திற்குமிடையே தொடர்ந்தும் வர்த்தக உறவு நிலவியதாகத் தெரிகிறது. இதை உறுதிப்படுத்தும் முக்கிய சான்றாதாரமாக நாணயங்கள் விளங்குகின்றன. விஜயபாகுவிற்கும் பின்னர் பொலநறுவையை ஆண்ட மன்னர்களுள் முதலாம் பராக்கிரமபாகு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவன். இவனது நீண்ட கால ஆட்சியில் (கி. பி 1153-1186) பொலநறுவை அரசு தென்னிந்தியா (பாண்டியநாடு), தென்கிழக்காசியா (பர்மா) ஆகிய நாடுகளுடன் அரசியல், வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. இத் தொடர்புகள் பூநகரி, ஊர்காவற்றுறை ஊடாக நடந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. பராக்கிரமபாகுவின் ஆட்சியில் பர்மிய நாட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பிற்கு தமிழதிகாரி ஆதித்தன் தலைமை தாங்கியதாக சூளவம்சம் கூறுகிறது. இப்படைப்படையெடுப்பிற்கு வேண்டிய படைக்கப்பல்கள் வட இலங்கையிலுள்ள பல்லவங்கத் துறைமுகத்தில் இருந்து சென்றதாக சூளவம்சம் கூறுகிறது. இத்துறைமுகம் மாதோட்டத்திற்கு வடக்காக பூநகரியின் தென்னெல்லைக் கடற்கரைக் கிராமமாக உள்ள பல்லவராயன்கட்டாக இருக்கலாம்.


பராக்கிரமபாகுவின் ஆட்சியில் பொலநறுவைக்கும் பூநகரிக்குமிடையே இருந்த வர்த்தகத் தொடர்பை பூநகரியில் கிடைத்த ஐம்பதிற்கு மேற்பட்ட பராக்கிரமபாகு கால நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன (படம்- 98). இவற்றுள் முப்பது நாணயங்கள் ஈழஊரில் கிடைத்தவையாகும். ஏனையவை பல்லவராயன் கட்டு, பாலாவி, பள்ளிக்குடா, மட்டுவில்நாடு, பரமன்கிராய், மண்ணித்தலை, நல்லூர், செட்டிக்குறிச்சி ஆகிய இடங்களில் கிடைத்தவையாகும். பராக்கிரமபாகுவின் பின்னர் பொலநறுவையில் ஆட்சி புரிந்த




படம் - 98. பூநகரியிற் கிடைத்த முதலாம் பராக்கிரமபாகு நாணயங்கள்

நிஸங்கமல்லன் *(1187-1176)* (படம்-99), லீலாவதி *(1177 - 1200) (1209 - 1210)* (படம்-100), தர்ம அசோக *(1208)* (படம் - 101) போன்ற மன்னர்களின் ஆட்சியில் வெளியிடப்பட்ட நாணயங்களும் பூநகரியில் கிடைத்துள்ளன, இவர்களுள் சாகஸமல்லன் காலத்திற்குரிய *(1200) 1202)* இருபத்தியாறு நாணயங்கள் பூநகரியின் முக்கிய தொல்லியல் மையங்களில் இருந்து கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும் (படம் 102).


பொலநறுவையில் ஆட்சிபுரிந்த விஜயபாகு, பராக்கிரமபாகு என்ற பெயரையுடைய மன்னர்களின் பெயரில் பொலநறுவைக்கும் பிற்பட்ட தம்பதேனியா, கோட்டை அரசுகளில் ஆட்சிபுரிந்



படம் – 99. பூநகரியிற் கிடைத்த நிஸங்கமல்லன் நாணயங்கள்.



படம் - 100. பூநகரியிற் கிடைத்த லீலாவதி நாணயங்கள்,



படம் - 101. பூநகரியிற் கிடைத்த தாம அசோகன் நாணயங்கள்.



படம் - 102. பூநகரியிற் கிடைத்த சாகஸமல்லன் நாணயங்கள்.

துள்ளனர். இதனால் பெயரை அடிப்படையாக வைத்து அடையாளம் காணப்பட்டுள்ள தெளிவற்ற நாணயங்களில் சில தம்பதேனிய, கோட்டை அரசுகால மன்னர்கள் வெளியிட்டதாகவும் இருக்கலாம்.

## யாழ்ப்பாண அரசும் பூநகரியும்

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கைமீது படையெடுத்த பாண்டியப் படைத் தளபதிகளான ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற பிராமணர்கள் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசொன்றைத் தாபித்தனர். இவ்வரசு பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் போத்துக்கேயரால் தோற்கடிக்கப்படும் வரை வடஇலங்கையில் இறைமையுள்ள அரசாகக் காணப்பட்டது. இவ்வரசின் ஆட்சிக் காலத்தில் பூநகரி அதன் மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததாகத் தெரிகிறது. இதற்குச் சார்பாக பயனுள்ள தகவல் ஒன்று கேய் றோஸ் (Queyrez) பாதிரியார் எழுதிய நூலிலே காணப்படுகின்றது:32

'இந்த அடக்கமான இராச்சியம் சிறிய யாழ்ப்பாணப் பட்டின மாவட்டத்திற்குள் மட்டும் அடங்கியுள்ளதென்று கூற முடியாது. ஏனெனில் அதனுடன் இணைந்தவையாக அயலிலுள்ள நிலங்களும் வன்னியின் நிலங்களும் காணப்படுகின்றன. இவை (வன்னி நிலங்கள்) முந்தியவற்றிலிருந்து (யாழ்ப்பாணப் பட்டின மாவட்டத்திலிருந்து) ஓர் உப்புநீர் ஆற்றினாலே பிரிக்கப்பட்டு, ஒரு நுனிப்பாகத்திற்குள் வலிகாமம், தென்மராட்சி, பச்சிலைப்பளை ஆகிய நிலங்கள் இருக்கின்றன. வெளியே குறுக்காக அமைந்து வன்னி நிலங்கள் இருக்கின்றன. இவை மன்னார்ப் பக்கத்திலிருந்து திருகோணமலைவரை இருக்கின்றன, இவற்றையும் மன்னாரின் (போர்த்துக்கீசப்) படைத்தளபதியின் அதிகாரத்திற்கு உட்பட்ட மாதோட்ட நாட்டையும் 'பரகளி' ஆறு பிரித்து நிற்கின்றது. திருகோணமலை வரை பரந்துள்ள வன்னி நிலங்களுக்கும் பிற நிலங்களுக்கும் மத்தியில் ஓடும் 'சிலுவை ஆறு' இந்நாட்டின் (மாதோட்ட நாட்டின்) எல்லையாக அமையும். இந்நிலங்களைக் கொண்ட பிரதேசம் தேசப்படத்தின் படி பெரும் பிரதேசமாகத் தோன்றுகிறது. இந் நிலங்கள் பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதலாவது 'சிலுவை ஆற்றுக்கு' அருகே அமைந்துள்ள தென்னமரவடியாகும். அங்கிருந்து மன்னார்ப் பக்கம் வரை முள்ளியவளை மாகாணம் இருக்கின்றது. இதில் 'வர்கம', 'வலதடி', 'மேல்பத்து' ஆகிய மூன்று பற்றுக்கள் உள. வன்னி நிலங்களுக்கெல்லாம் இந்த மாகாணமே முக்கியமானது. அடுத்துக் கருநாவல்பத்தும் (அதன்பின்) பனங்காமம் என்ற மாகாணமும் உள. இங்கே, மாதோட்டத்து நிலங்களை அண்டியவையாக 'உருகரை' என்ற பற்றும் 'வலலி' என்ற பற்றும் இருக்கின்றன. இலங்கையின் குடாவின் அல்லது கடலின் ஓரத்திலே 'பரங்காலி', 'உரயில் பூநகரி' ஆகிய ஊர்களும், வேறு குறைந்த முக்கியத்துவமுடைய ஊர்களும் உள.

மேற்படி தகவலைப் பொதுவாக தமிழ், சிங்கள இலக்கியங்களில் வரும் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. யாழ்ப்பாணத்து மன்னர் யாழ்ப்பாணத்து தீபகற்பத்திற்கும் அதன் அருகிலுள்ள தீவுகளுக்கும், தீபகற்பத்திற்கு வெளியே அமைந்திருந்த ஏழு வன்னிப் பிரதேசங்களுக்கும் ஆட்சியாளராக விளங்கினர் என்பதை யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன. இவ்விலக்கியங்கள் பூநகரியும் பூநகரிப்பிராந்தியத்திற்குள் அடங்கிய பொன்னாவெளி, பல்லவராயன் கட்டு ஆகிய ஊர்களும் யாழ்ப்பாணத்திற்கு வெளியே உள்ள நாடுகளாகக் கூறுகின்றன.37 பதினைந்தாம் பதினாறாம் நூற்றாண்டுகளிலே எழுதப்பட்ட சிங்கள எல்லை நூல்களில் வட இலங்கை இராச்சியத்தின் பிரதேசப் பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பிரதேசங்களின் எல்லைகளிலே தமிழ் எழுத்துப் பொறித்த கற்றூண்கள் நாட்டப்பட்டதாகவும் இவை குறிப்பிடுகின்றன.40

யாழ்ப்பாண இராச்சியத்திற்குள் அடங்கியிருந்த இப்பிரதேசங்களில் மன்னனின் நிர்வாகக் கட்டுப்பாடு இரண்டு வகைப்பட்டதாக இருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள வலிகாமம், தென்மராட்சி, பச்சிலைப்பாளை, வடமராட்சி என்ற நான்கு மாகாணங்களும் குடா

நாட்டிற்கு வெளியேயுள்ள பூநகரி, பல்லவராயன் கட்டு, இலுப்பைக் கடவை, மாதோட்டம், மன்னார்த்தீவு என்பனவும் அரசின் நேரடியான நிர்வாகத்திலமைந்தன. இவற்றை ஆளுவதற்கென அதிகாரிகளை மன்னன் நியமித்தான். இதில் பூநகரியும் பூநகரிப் பிராந்தியத்திற்கு உட்பட்டிருந்த பல்லவராயன்கட்டும் இரு மாகாணங்களாகக் கணிக்கப்பட்டது. இம்மாகாணங்களை நிர்வகிக்கப் பொறுப்பாக இருந்த அதிகாரிகளுக்கு அரசன் சன்மானமளிக்காது அவர்கள் ஊதியமாக மக்களிடமிருந்து உணவு முதலியவற்றைப் பெற்றனர். காலப்போக்கில் இவ்வழக்கம் தவிர்க்கப் பெற்று மக்கள் ஒவ்வொருவரும் அதிகாரிகளுக்கெனக் காசு வழங்கவேண்டியிருந்தது 41 யாழ்ப்பாண மன்னனின் மேலாண்மைக்கு உட்பட்டிருந்த பனங்காமம், முள்ளியவளை, தென்னமரவாடி, கரிக்கட்டுமூலை, செட்டிக்குளம், மேல்பற்று, கொட்டியாரம், திருகோணமலை முதலிய வன்னிநாடுகளை வன்னியம் அல்லது வன்னியனார் என வழங்கிய குறுகிய மன்னர்களால் ஆழப்பட்டு வந்தன. இவர்கள் யாழ்ப்பாண மன்னர்களின் மேலாண்மையை ஏற்றிருந்தாலும் தம் நாடுகளைத் தாமாகவே ஆண்டு வந்தனர். மேலும் அவற்றை ஆளும் உரிமையும் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்தது. இவ்வன்னிச் சிற்றரசர்கள் ஆண்டுதோறும் யாழ்ப்பாணப் பட்டினத்துக்குச் சென்று வரிசைகள், யானை முதலியவற்றை திறையாகக் கொடுத்தனர் ஒல்லாந்தர் ஆட்சியில் 'பனங்காமம் என்ற வன்னி அரசு பல தடவை ஒல்லாந்தரின் கட்டளைக்குப் பணிய மறுத்ததுடன் ஏனைய வன்னிய அரசுகளுக்கு தலைமை அரசாகவும் காணப்பட்டது. அத்துடன் இவ்வரசின் மேலாதிக்கம் பனங்காமத்தின் தென்னெல்லையிலுள்ள பூநகரியிலும் ஏற்பட்டிருந்ததாகத் தெரிகிறது. இதனால் யாழ்ப்பாண மன்னர் காலத்திலும் பூநகரியின் கிழக்கு, தெற்கு எல்லைப் பகுதிகளானது வன்னி அரசின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருக்கும் எனக் கருத இடமுண்டு.


யாழ்ப்பாண அரசு காலத்தில் தென்னிலங்கையில் இருந்த சிங்கள இராசதானி அதன் பாதுகாப்புக் கருதி தலைநகரை யப்பகூவா, கம்பளை, கோட்டை ஆகிய இடங்களுக்கு மாற்றிக் கொண்டது. இவ்விராசதானிகளோடு யாழ்ப்பாண மன்னர் அரசியல்,வர்த்தகத்தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டதோடு கம்பளை அரசின் மீது மேலாதிக்கமும் செலுத்தினர். பதினான்காம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையில் நிலவிய அரசியல் நிலைமை குறித்து ராஜாவலிய என்னும் நூல் பின்வருமாறு வருணிக்கிறது: 42

> 'பராக்கிரமபாகுவின் மகன் கம்பளையில் இருந்தான். அளகக்கோனார் என்னும் மந்திரி நயிகாமத்திலிருந்தான். யாழ்ப்பாணப் பட்டினத்தில் ஆரியச்சக்கரவர்த்தியிருந்தான். இம் மூவருள்ளும் சேனா பலத்திலும், பொருள் பலத்திலும் ஆரியச் சக்கரவர்த்தி மேலோங்கியிருந்தான். அதனாலே அவன் மலைநாட்டிலிருந்தும், கீழ்நாட்டிலிருந்தும், ஒன்பது துறைமுகங்களிலிருந்தும் திறை பெற்றான்.'


இக்கூற்றை நிகாய சங்கிரகய என்ற சிங்கள நூலும், மடவலச் சாசனத்திலுள்ள குறிப்பும் கொட்டகம என்னுமிடத்தில் (கம்பளைக்கு அண்மையில்) கண்டெடுக்கப்பட்ட தமிழ்ச்சாசனமும் பெருமளவுக்கு உறுதிப்படுத்துகின்றன. இவற்றுள் வெண்பாவிலமைந்த கொட்டகம சாசனச் செய்யுள் சிங்கை நகரில் வாழும் ஆரியச் சக்கரவர்த்தி மன்னன் சிங்கள அரசனை வெற்றி கொண்டதாகக் கூறுகிறது. சாசனத்தில் சிலேடை நயம்பட அமைந்துள்ள 'காமர்வளைப் பங்கயக் கையினாற் திலோதம் பரித்தார்' என்ற வாக்கியமானது அநுரேசரின் குளம் பெண்கள் தமது நெற்றித் திலகங்களைத் தமது அழகிய கைகளினாலே நீக்கிப் பொலிவிழந்தார்கள் எனவும் அவர்கள் எள்ளும் நீருமிறைத்துப் பிதிர்க்கடன் செய்தார்கள் எனவும் இருவிதமான பொருளைக் குறிக்கும்.43 ஆயினும் சிங்கையாரியனுடைய சேனையானது கம்பளை வரை முன்னேறிச் சென்று அங்குள்ள அரசனை தோற்கடித்துப் பெரும் வெற்றியீட்டியதென்பது அச்சாசனத்தால் அறியப்படும் உறுதியான செய்தியாகும்.

யாழ்ப்பாண அரசிற்கும் தென்னிலங்கை அரசுகளுக்கும் இடையே ஏற்பட்டிருந்த நெருங்கிய தொடர்பால் பூநகரிப் பிராந்தியம் அக்கால வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருக்கும் எனக் கருத இடமுண்டு பூநகரியின் அமைவிடம் குடா


நாட்டையும், இலங்கையின் பெருநிலப் பகுதியையும் இணைக்கும் தொடக்க வாயிலாக அமைந்திருப்பதனால் ஒரு பிராந்தியத்தில் இருந்து இன்னொரு பிராந்தியத்திற்கு ஏற்பட்ட செல்வாக்கை, பாதிப்பை முதலில் உள்வாங்கிக் கொண்ட இடமாக பூநகரிப் பிராந்தியம் இருந்திருக்க இடமுண்டு. இதை உறுதிப்படுத்தும் வகையில் சமகால இலக்கியச் சான்றுகள் அமைவதோடு, கம்பளை, கோட்டை மன்னர்களாக இருந்த புவனேகபாகு (படம்-*103* அ, ஆ.), பராக்கிரமபாகு (படம் - *104*) போன்ற மன்னர்கள் வெளியிட்ட பல நாணயங்களும் பூநகரியில் கிடைத்துள்ளன.



படம் - 103. (அ) பூநகரியிற் கிடைத்த புவனேகபாகு என்ற பெயர் கொண்ட நாணயங்கள்.



படம் - 103. (ஆ) பூநகரியிற் கிடைத்த புவனேகபாகு என்ற பெயர் கொண்ட நாணயங்கள்.




படம் - 104. பூநகரியிற் கிடைத்த பராக்கிரமபாகு என்ற பெயர் கொண்ட நாணயங்கள்.


ஆறாம் பராக்கிரமபாகு கோட்டையில் கி.பி. *1413* இல் அரசனாகிய பொழுது பல நூற்றாண்டுகளாகப் பலவீனமுற்றிருந்த சிங்கள இராசதானி மீண்டும் வலுப்பெற்றது. இவன் இலங்கை முழுவதிலும் தன் மேலாதிக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டான். கண்டி இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம், வன்னிச் சிற்றரசுகள் ஆகியவற்றை கைப்பற்றியமை இவனுடைய சிறப்புமிக்க சாதனைகளாக ராஜாவலியாவிலும் சமகால சிங்கள நூல்களிலும் புகழ்துரைக்கப்படுகின்றன. புத்தளம் முதலான பதினெட்டு வன்னியரையும் பராக்கிரமபாகு கைப்பற்றியதாக பரக்கும்பா ஸிரித, கிராசந்தேஸய போன்ற நூல்கள் கூறுகின்றன.[44] யாழ்ப்பாண இராச்சியத்தில் கனகசூரியசிங்கையாரியன் ஆட்சி செய்த காலத்தில்தான் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்திற்கு எதிராக இரு படையெடுப்புக்களை மேற்கொண்டான். இப்படையெடுப்பு மலையாள தேசத்துப் (கேரளத்துப்) போர் வீரனான பணிக்கன் ஒருவனின் மகனும் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனுமாகிய செண்பகப் பெருமாள் என்னும் சப்புமல்குமாரய என்பவன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. முதலாவது தடவையாக படையெடுத்தபோது செண்பகப் பெருமாள் யாழ்ப்பாண அரசின் எல்லைக் கிராமங்கள் சிலவற்றைத் தாக்கி விட்டுத் திரும்பினான். பின்பு மீண்டும் ஒருமுறை அவன் வட இலங்கை நோக்கிப் படையெடுத்துச் சென்று *1450* அளவில் பெரு வெற்றியடைந்தான். இவ்

வெற்றிக்கு முன்னர் இவன் வன்னியைக் கைப் பற்றியிருக்க வேண்டும் என்பது பத்மநாதனின் கருத்தாகும்.45

செண்பகப் பெருமாளின் இரண்டாவது படையெடுப்பு பூநகரியூடாக நடந்ததாக கோகில சந்தேஸய என்ற சிங்கள இலக்கியம் கூறுகிறது. இதை ஆதாரமாகக் கொண்டு செண்பகப் பெருமாளின் படையெடுப்புக்களில் ஒன்று பூநகரியிலும் நடந்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது. அவ்வாறு கருதுவதற்கு பூநகரியிலுள்ள நாச்சிக்குடா என்ற இடத்திற்கும் பூநகரி ஈழ ஊர் என்ற இடத்திற்கும் இடையே அமைந்த பிரதேசம் ஒன்றில் செண்பகப் பெருமாள் வெளி என்ற குறிஞ்சிப் பெயர் சான்றாக உள்ளது. இப் பெயர் ஏற்பட்டதற்கு செண்பகப் பெருமாளின் படைகள் இங்கு தங்கியிருந்ததே காரணம் என்ற மரபுக் கதை அவ்வூர் மக்களிடையே நிலவுகிறது. அத்துடன் அங்குள்ள ஆலயமொன்று செண்பகப் பெருமாள் கட்டிய ஆலயம் என அழைக்கப்பட்டும் வருகிறது. கோகில ஸந்தேசய என்ற சிங்கள குயில்விடு தூதுப் பிரபந்தத்தில் கோட்டையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் படையெடுத்த செண்பகப் பெருமாளின் படைகள் வந்த பாதை வழியாகக் குயில் பறந்து சென்றதாகக் கூறப்பட்டுள்ளது. அக்குயில் யாழ்ப்பாண அரசைப் பாதுகாத்துக் கொண்டிருந்த விஷ்ணு (உப்புல்வன்) ஆலயத்தையும் தரிசித்துச் சென்றதாக மேலும் அந்நூலில் கூறப்பட்டுள்ளது.46 இந்நூலில் வல்லிபுரம் குறிப்பிடப்படாவிட்டாலும் குயில் தரிசித்த விஷ்ணு ஆலயம் வல்லிபுரத்தில் இருந்த ஆலயமாக இருக்கலாம் என்ற கருத்து வரலாற்றாசிரியர் சிலரிடையே நிலவுகிறது. ஆனால் இவ்வாலயம் மாதோட்டத்திற்கும் கல்முனைக்கும் இடைப்பட்ட பிராந்தியத்தில் இருந்துள்ளதென்பதை அந்நூலில் கூறப்பட்டுள்ள இடங்களை நன்கு ஆராய்வதன் மூலம் கண்டுகொள்ளலாம். குயில் மாதோட்டத்திற்கு வடக்காக நாயாற்றை அடுத்து இவ்வாலயத்தைத் தரிசித்ததாகக் கூறப்பட்டுள்ளது. பூநகரியில் செண்பகப் பெருமாள் வெளி என்ற இடத்திற்கு வடக்காக உள்ள ஆறு நாகமுனை ஆறு என அழைக்கப்படுகிறது. தமிழில் நாகமுனை ஆறு என்பது சிங்களத்தில் நாயாறு என மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம். இவ்வாற்றிக்கு சிறிது வடக்காக உள்ள பாலாவி என்ற கிராமத்தில் மிகப் பழைமை வாய்ந்த ஆலயமொன்று காணப்படுகிறது. தற்போது இது ஓலையால் வேயப்பட்ட சிறிய ஆலயமாக உள்ளது (படம்-105). ஆனால் ஆரம்பகாலத் தோற்றம் மிகப் பெரிதாகவும், பொழிந்த முருகக்கற்களைக் கொண்டும் கட்டப்பட்டிருந்தன என்பதை ஆலயச் சுற்றாடலில் உள்ள அத்திவாரங்களும், கட்டிட அழிபாட்டு எச்சங்களும் உறுதிப்படுத்துகின்றன (படம்- 106). தற்போது ஓலையால் வேயப்பட்டுள்ள ஆலயத்தில் தலையற்ற விக்கிரகம் ஒன்று வைத்து வழிபடப்பட்டு வருகிறது. விக்கிரகத்தின் இடுப்புக்கு கீழாக அமைந்த பாகம் மண்ணில் புதையுண்டிருப்பதனால் ஆலயத்தின் தோற்றத்தையிட்டு மக்களிடையே பலவித ஐதீகங்கள் நிலவுகின்றன. அக்கிராம மக்களில் பெரும்பாலானோர் இதை விஷ்ணு விக்கிரகமாகவும் சிலர் ஐயனார் விக்கிரகமாகவும் கருதுகின்றனர். ஆயினும் இவ்விக்கிரகம் எந்தத் தெய்வத்திற்குரிய உருவம் என்பதை தற்போது திடமாகக் கூறமுடியாதிருக்கிறது. ஆனால் இங்குள்ள ஆலயம்விஷ்ணுவுக்குரியதென்ற மரபு நீண்ட காலமாக நிலவி வருகிறது. இதை ஆலயத்திலுள்ள பிற சின்னங்களும், அப்பிராந்தியத்தில் உள்ள உப்புல்வன் என்ற இடப் பெயரும் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாலயம் அமைந்துள்ள பிரதேசத்திற்கும்




படம் - 105. பூநகரி பாலாவியிலுள்ள விஷ்ணு ஆலயம்.



படம் - 106. பாலாவியிலுள்ள புராதன விஷ்ணு ஆலயத்தின் கட்டிட அழிபாடுகள்


குயில் தரிசித்துச் சென்ற விஷ்ணு (உப்புலவன்) ஆலயத்திற்கும் இடையே நெருங்கிய ஒற்றுமைத் தன்மை காணப்படுகிறது இதனால் யாழ்ப்பாண அரசைப் பாதுகாத்த விஷ்ணு ஆலயம் பூநகரியில் இருக்கும் விஷ்ணு ஆலயம் எனக் கருதுவது பெருமளவு பொருத்தமாகும்.

யாழ்ப்பாண அரசு கால வெளிநாட்டு வர்த்தகத்தில் பூநகரிப் பிராந்தியத்திற்கு கணிசமான பங்கிருந்ததெனக் கூறலாம். வர்த்தகத்தில் யானை, முத்து, சங்கு முதலிய பொருட்கள் யாழ்ப்பாண மன்னர்களின் ஏகபோக உரிமையாக இருந்தது. இப்பொருட்கள் வடஇலங்கையின் முக்கிய துறைமுகங்களில் இருந்து தென்னிந்தியத் துறைமுகங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பல்வேறு நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இவற்றுள் வெளிநாட்டு வர்த்தகத்திற்குத் தேவையான யானைகள் பூநகரியில் இருந்தும் பிடிக்கப்பட்டன.47 அத்துடன் அவற்றைப் பூநகரியில் உள்ள மட்டுவில் நாடு, புலையர்குடா ஆகிய இடங்களில் உள்ள துறைமுகங்களில் இருந்தும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்க வேண்டும். மட்டுவில் நாட்டிலுள்ள துறைமுகப் பகுதியில் வீரராயர் பணம் என்ற வகையினைச் சேர்ந்த பொன் நாணயம் கிடைத்துள்ளது (படம்- 107). இந்நாணயம் யாழ்ப்பாண அரசு காலத்தில் தென்னிந்தியாவில் பயன்படுத்தப்பட்டதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. அதே போல் வட இலங்கையில் கந்தரோடை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலும் இவ்வகை நாணயம் கிடைத்துள்ளன. இவை தென்னிந்தியாவுடன் கொண்ட வர்த்தகத் தொடர்பால் இவ்விடங்களுக்கு வந்திருக்கலாம். பூநகரி நல்லூரிலுள்ள ஆலயமொன்றில் அரேபியக் கலைமரபுக்குரிய ஆலய விளக்கு ஒன்று காணப்படுகிறது (படம் - 108). பெரும்பாலும் மசூதிகளில் பயன்படுத்தப்படும் இவ்விளக்கு யாழ்ப்பாண அரசு காலத்தில் அரேபியருடன் கொண்ட வர்த்தகத் தொடர்பால் பூநகரிக்கு வந்திருக்கலாம் எனக் கருத முடிகிறது.



படம் - 107. மட்டுவில் நாட்டிற் கிடைத்த பொன் நாணயம்.


பூநகரியிற் கிடைத்த நாணயங்களில் யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட சேது நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவை யாழ்ப்பாண அரசுடன் பூநகரிக்கிருந்த அரசியல், வர்த்தகத் தொடர்புகளுக்கு முக்கிய சான்றாகும். இதுவரை யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நான்கு வகையான நாணயங்கள் வட இலங்கையில் கிடைத்துள்ளன. பூநகரியில் எமது ஆய்வின்போது மூன்று வகையான நாணயங்கள் மண்ணித்தலை, கௌதாரிமுனை, மட்டுவில்நாடு, ஈழஊர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இவற்றுள் முதலாவது வகை நாணயத்தின் முன் பக்கத்தில் நிற்கும் நிலையில் மெலிந்த அரசின் உருவம் காணப்படுகிறது. வலக்கரத்தின் கீழ் வச்சிராயுதம் போன்ற உருவம் காணப்படுகிறது.




படம் - 108. பூநகரி நல்லூரில் உள்ள ஆலயமொன்றில் காணப்படும் அரேபியக் கலைமரபுக்குரிய விளக்கு.

அவ்வுருவத்தின் இடப்பக்கத்திலே திரிசூலமும், செங்கோல் போன்ற ஒரு நேர்கோடும் வரையப் பட்டுள்ளன. இவ்வுருவங்கள் யாவும் ஒரு வட்டத்தினுள் வரையப் பெற்றுள்ளன. வட்டத்தின் வெளிப்புறமாகப் புள்ளிகளாலான வளையம் அமைந்துள்ளது. பின்புறத்தில் நாணயத்தின் மையத்தில் நந்தி உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. நந்தியின் தலையின் மேலே சிறிது பின்புறமாகப் பிறையின் வடிவம் வரையப்பெற்றுள்ளது. நந்தியின் முன்பும் பின்புமாக ஒவ்வொரு புறத்திலும் மும் மூன்று புள்ளிகளைக் கொண்ட தொகுதிகளுள் ளன. நந்தியின் கீழே சேது என்ற மொழி காணப்படுகிறது (படம் - *109*). இரண்டாவது நாணய வகையின் முன்பக்கம் ஏறத்தாழ முதலாவது நாணயவகையை ஒத்தது. ஆனால் பின் பக்கத்திலுள்ள நந்தியின் உருவம் மிகுந்த அழகும், கம்பீரமான தோற்றமும் கொண்டது. முதலாவது வகை நாணயத்தின் நந்திக்கு முன்பாகவும் பின்பாகவும் உள்ள மும்மூன்று புள்ளிகளைக் கொண்ட தொகுதி இதில் இடம் பெறவில்லை (படம்-*110*).


மூன்றாவது வகை நாணயம் முதலிரு நாணய வகைகளை விட வேறுபாடானது. இதன் முன் பக்கத்திலே மற்றைய நாணயங்களில் வரும் உரு



படம் - 109. பூநகரியிற் கிடைத்த சேது நாணயங்கள் (வகை - 1)



படம் - 110. பூநகரியிற் கிடைத்த சேது நாணயங்கள் (வகை - 2).



படம் - 111. பூநகரியிற் கிடைத்த சேது நாணயங்கள் (வகை - 3).

வங்கங்களுக்குப் பதிலாக ஓர் அழகிய எட்டு இதழ்களைக் கொண்ட தாமரை மலரின் வடிவம் காணப்படுகிறது. பின்புறத்தில் நந்தியின் உரு வமும் சேது என்ற மொழியும் பதிக்கப் பெற்றுள் ளன (படம் - 111).

## பூநகரியும் சாவகச்சேரி வாரிவானேஸ்வரர் ஆலயமும்

பூநகரிக்கு மேற்கே மிகக் கிட்டிய தூரத்தில் அமைந்த பிரதேசங்களுள் சாவகச்சேரியும் ஒன் றாகும். இரு பிராந்தியங்களையும் சிறிய கடல் நீரேரி பிரித்து நின்றாலும் வரலாற்றுக் காலம் தொட்டு இவற்றிடையே நெருங்கிய பண்பாட்டு உறவு இருந்ததாகத் தெரிகிறது. இவற்றை உறுதிப்படுத்தக் கூடிய தொல்லியற் சான்றுகள் எமது ஆய்வின்போது கிளாலி, கெற் பலி, கச்சாய், சாவகச்சேரி போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. இவற்றுள் யாழ்ப்பாண அரசு காலத்தில் இருந்த உறவு சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. அதன் காரணமாக சாவகச்சேரியில் இருந்த வரலாற்றுப் பழைமை வாய்ந்த வாரிவா னேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் பற்றி இவ்விடத் தில் ஆராயப்பட்டுள்ளது.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பதினே ழாம் நூற்றாண்டுவரை நல்லூரைத் தலைநகராக கொண்டு தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த காலத் தில் யாழ்ப்பாணத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் ஒன்றாக சாவகச்சேரி விளங்கியது. 15ஆம் நூற்றாண்டுக்குரிய கோகில சந்தேஸய என்ற சிங்கள இலக்கியத்தில் சாவக கோட்டை யெனவும்,48 15ஆம் 16ஆம் நூற்றாண்டுக்குரிய திரி ஸிங்ஹளே கடயிம் ஸஹ வித்தி என்ற நூலில் சாவகிரி எனவும்49 யாழ்ப்பாண அர சோடு தொடர்புபடுத்தி இப்பிராந்தியம் கூறப் பட்டுள்ளது. ஆனால் இச் சாவகச்சேரிக்கு யாழ்ப் பாண அரசு தோன்ற முன்னரே தொன்மையான பாரம்பரிய வரலாறு இருந்ததென்பதை அண் மையில் அப்பிராந்தியத்திலும், அதற்கு அருகி லுள்ள கச்சாய், கெற்பலி, கிளாலி ஆகிய இடங் களிலும் கண்டுபிடிக்கப்பட்ட ஆதிக்குடியிருப்பு களுக்குரிய மட்பாண்டங்கள், செங்கட்டிகளால் கட்டப்பட்டிருந்த கட்டிட அழிபாடுகள், ஆதி கால, மத்திய கால நாணயங்களும் ஊறுதிப் படுத்துகின்றன. இக்கருத்தை அண்மையில் கிடை த்த இந்து விக்கிரகங்கள் மேலும் உறுதிப்படுத்து கின்றன.

சாவகச்சேரியின் புராதன வரலாற்றுச் சின் னங்கள் கவனிப்பாரற்ற நிலையில் சீரழிந்து போவதை பல தடவைகள் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்திற்கு சுட்டிக்காட்டிய சுப்பிரமணிய சர்மா அண்மையில் அங்கு அத்திவாரம் வெட்டும் போது கண்டெடுக்கப்பட்ட விக்கிரகம் ஒன்றைப் பார்வையிடுமாறு இந்து நாகரிகத்துறை விரிவுரை யாளர் கணேசலிங்கம் மூலம் வேண்டினார். அவ் விக்கிரகத்தைப் பார்வையிடச் சென்றபோது அவ் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்ட சுற்றாடலிலிருந்து கிடைத்த மேலும் மூன்று விக்கிரகங்களை ஆரா யச் சந்தர்ப்பம் கிடைத்தது. இந் நான்கு விக்கி ரகங்களும் பிற தேவைகளுக்காக நிலம் வெட்டப் பட்ட போது எதிர்பாராமல் கிடைத்தவையா கும். முதலில் நிலத்தை வெட்டியவர்கள் இவ் விக்கிரகங்களைக் கண்ட போது வெறும் கற்கள் எனக்கருதி சாதாரண அகழ்வு மூலம் வெளியே எடுத்ததனால் அவ்விக்கிரகங்களில் பல உடைவு களும், வெடிப்புகளும் காணப்படுகின்றன. தற் போது இந்நான்கு விக்கிரகங்களும் பிற்காலத்தில் கட்டப்பட்ட வாரிவன நாதர் ஆலயத்தில் வைக் கப்பட்டிருந்தாலும் அவ்விக்கிரகங்களில் உள்ள



படம் - 112. சாவகச்சேரியில் உள்ள தற்போதைய வாரிவன நாதர் ஆலயம்.

உடைவு காரணமாக அவை கர்ப்பக்கிருகத்தில் வைத்து வழிபடப்படாது ஆலய முன் மண்டபத்திலும், இவற்றிற்கென புதிதாகக் கட்டப்பட்ட சிறிய மண்டபங்களிலும் வைக்கப்பட்டுள்ளன (படம் 112). இவ்விக்கிரகங்களில் சிலவற்றை யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை நூதன சாலையில் வைப்பதற்கு தற்போதைய ஆலய நிர்வாகசபை முன்வந்துள்ளது.

இந்நான்கு விக்கிரகங்களில் ஒன்று மனோன்மணி அம்மனுக்குரியதாகும். இவ்விக்கிரகம் சாவகச்சேரி சந்தைக்குத் தெற்கே பிரதான வீதிக்கு கிழக்காக உள்ள இராசமாளிகை என்ற பெயருடைய வளவில் மலசலகூடம் அமைப்பதற்கு நிலத்தை வெட்டியபோது ஆறு அடி ஆழத்தில் கண்டெடுக்கப்பட்டதாகும். கருங்கல்லில் நிற்கின்ற சமபங்க நிலையில் செதுக்கப்பட்டுள்ள இவ் விக்கிரமம் 23/4 அடி உயரத்தை உடையது. மிக ஒடுங்கிய இதன் இடை ஐந்து அங்குல அகலத்தையும், இடுப்புக்கு கீழே யுள்ள தொடைபபகுதி ஒரு அடி அகலத்தையும் கொண்டுள்ளது. இதன் நான்கு திருக்கரங்களில் முழங்கையுடன் இணைந்த இடது வலது மேல் கரங்கள் பாசமும், தாமரையும் தாங்கி நிற்க, வலது இடது கீழ்க்கரங்கள் முறையே அபயகஸ்தத்தையும், வரதகஸ்தத்தையும் குறித்து நிற்கின்றன. ஒன்பது அங்குல உயரமுடைய இதன் திருமுடியின் மேற்பாகத்தில் உச்சிக் கொண்டையும் நெற்றிப்பட்டத்திற்குமேல் இரத்தினாரமும், மகுடத்தின் முற்பக்கத்தில் குறுக்காகவும் நிலைக்குத்தாகவும் உள்ள மூன்று குறியீடுகளும் காணப்படுகின்றன. இதன் காதில் மும்மூன்று மகர குண்டலமும், கழுத்தில் திரண்ட தாலி அமைப்பும், அதன்மேல் அகன்ற பதக்கமும் அணியப்பட்டுள்ளன. கல்விக்கிரகங்களுக்கு பொதுவாக உள்ள முப்புரிநூல் இவ்விக்கிரகத்தில் மிகத் தெளிவாகச் செதுக்கப்பட்டுள்ளது (படம்-113). பொதுவாக இவ்விக்கிரகத்தின் ஒடுங்கிய இடையும், திரண்ட மார்பகமும், உயர்ந்த மகுடமும், கழுத்திலுள்ள அலங்காரத்தன்மை கொண்ட ஆபரணங்களும் பழைமையான தெய்வ விக்கிரகம் என்பதைச் சான்றுபகர்கின்றன. இவ்விக்கிரகத்தின் வலது இடது மேல் கரங்கள் நிலத்திற்குள் இருந்து வெளியே எடுத்தபோது உடைந்து விட்டதனால் தற்போது அவ்விக்கிரகம் வாரிவன



படம் - 118. சாவகச்சேரியிற் கிடைத்த மனோன்மணி அம்மன் விக்கிரகம்.


நாதர் ஆலயத்திற்கு மேற்காக இதற்கெனக் கட்டப்பட்ட மிகச் சிறிய மண்டபத்தினுள் வைக்கப்பட்டுள்ளது.

இவ்விக்கிரகம் கண்டெடுக்கப்பட்ட காணியில் நாம் மிக அண்மையில் தொல்லியல் மேலாய்வில் ஈடுபட்டிருந்த வேளையில் அக்காணியில் புதிதாகப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டோர் மண்ணுக்குள் மூடுண்டிருந்த செம்பினால் வார்க்கப்பட்ட நாகவிக்கிரகம் ஒன்றைக் கண்டெடுத்தனர். இவ்விக்கிரகம் தற்கால ஆலயங்களில் வைத்து வழிபட படும் விக்கிரகங்களில் இருந்து பல வகையில் வேறுபடுகிறது. பத்து அங்குல உயரத்தில் படமெடுத்த நிலையிலுள்ள இவ் விக்கிரத்தின் உடற்பகுதி ஆறு வளையங்களாக சுருண்ட நிலையில் வார்க்கப்பட்டுள்ளது. அகண்ட இதன் தலைப் பகுதியின் மேல் தாமரைத் தண்டொன்றும், அதன் மேல் ஆறு இதழ்கள்

கொண்ட தாமரையும், அதற்குமேல் தெய்வ உருவம் நிற்பதற்குரிய வட்டவடிவிலான பீடமும் அமைந்துள்ளது. மிகுந்த அழகும், பளபளப்புத் தன்மையும் கொண்ட இவ்விக்கிரகம் பிற்கால விக்கிரகங்களைப்போல் உடலில் உட்பக்கம் வெறும் கோதாக இல்லாது உடல் உறுப்புக்கள் முழுவதும் தனிச் செம்பினால் வார்க்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் முன்பு ஆலயம் ஒன்று இருந்திருக்கலாம் எனக் கருதக்கூடிய செங்கட்டிகளும், கட்டிட சிதைவுகளும் காணப்படுகின்றன. இவ்விடம் இராசமாளிகை வளவு எனவும், இதற்கு அருகிலுள்ள காணி இராச வளவு எனவும், அருகிலுள்ள வீதி இராசவீதி எனவும் அழைக்கப்படுவது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கன.

ஏனைய விக்கிரகங்களில் அம்மனும், சூரியனும் தற்போதைய சாவகச்சேரி நவீன சந்தைக்குக் கிழக்காகவுள்ள பழைய சந்தைப் பகுதியில் அத்திவாரம் வெட்டும்போது கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவற்றுள் அம்மன் விக்கிரகம் மிகுந்த கலையுணர்வும், தென்னிந்தியத் திராவிடக் கலைமரபுடன் கூடிய தொழில் நுட்பமும் கொண்டதாகும். தற்போது இலங்கையில் வழிபடப்பட்டு வரும் உயரம் கூடிய அம்மன் விக்கிரகங்களில் ஒன்றாக இதைக்கருத இடமுண்டு. கருங்கல்லில் முப்பரிமாண நிலையில் செதுக்கப்பட்டுள்ள இவ்விக்கிரகம் பீடமற்ற நிலையில் நான்கடி உயரத்தையும், பீடத்துடன் 51/4 அடி உயரத்தையும் கொண்டுள்ளது. ஒரு அடி உயரமுடைய கேச மகுடம் மூன்று பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது. மேல் பகுதியில் உச்சிக் கொண்டையும், நெற்றிப் பட்டத்திற்கு மேல் இரத்தினாரமும், மகுடத்தின் முற்பக்கத்தில் நிலைக்குத்தாகவும், குறுக்காகவும் மூன்று குறிகளும் உள்ளன. நான்கு கரங்களைக் கொண்ட இவ்விக்கிரகத்தின் வலது மேல் கரத்தில் வெண்டையமும், இடது மேல் கரத்தில் தாமரையும் காணப்படுகிறது. மற்றைய இரு கரங்களில் வலது கரம் அபயகஸ்தத்தையும், இடதுகரம் வரதகஸ்தத்தையும் குறித்து நிற்கின்றன. இதன் காதில் மகர குண்டலமும், கழுத்தில் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டுள்ள பதக்கமும் காணப்படுகின்றன. இதன் இடுப்பு ஆறு அங்குல அகலத்தையும், அதன்கீழ் உள்ள தொடைப்பகுதி ஒன்பது அங்குல அகலத்தையும் கொண்டுள்ளது. இடுப்பிலுள்ள சிங்கமுகப் புடைய மேகலை இடுப்பைச் சுற்றி தொங்கு சங்கிலியால் இணைக்கப்பட்டிருப்பதையும், இதனுடன் இணைந்த நிலையிலுள்ள பீதாம்பரம் இரு கால்களுக்கிடையே கணுக்காலிலுள்ள கால் சலங்கை வரை நீண்டிருப்பதையும் தெளிவாகக் காணமுடிகிறது. வலது கீழ்க்கரத்தின் முழங்கையுடன் வெளிப்படுத்தப்பட்ட முடிக்குஞ்சரமானது முற்பக்கத்தில் தெரியுமாறு இருப்பதும், இடது பக்க தோளின் மேலால் செல்லும் முப்புரிநூல் தெளிவாகச் செதுக்கப்பட்டிருப்பதும் இவ்விக்கிரகத்தில் காணக்கூடிய சிறப்பம்சங்களாகும் (படம்- 114).

இவ்விக்கிரகத்துடன் சந்தைப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மற்றைய விக்கிரகமான சூரியன் 21/2 அடி உயரமுடையது நிற்கின்ற சமபங்க நிலையில் செதுக்கப்பட்டுள்ள இவ்விக்கிரகத்தின் கரண்ட மகுடம் ஆறு அங்குல உயரமுடையது.



படம் - 114. சாவகச்சேரியிற் கிடைத்த அம்மன் விக்கிரகம்.



படம் - 115. சாவகச்சேரியிற் கிடைத்த சூரியன் விக்கிரகம்.

இர்மகுடத்தின் பின்னாலுள்ள ஒளிவட்டம் நீள் வட்ட வடிவில் அமைந்துள்ளது. ஒன்பது அங் குல உயரத்தில் உள்ள சதுரவடிவிலான பீடத் தில் ஒழுங்கற்ற பகுதி மீது மீண்டும் வட்ட வடி விலான தாமரை ஆசனத்தின் மீது இவ்விக்கிர கம் அமைந்துள்ளது. அதன் இரு கரங்களிலும் தாமரை மலர் காணப்படுகிறது (படம்- 115). ஏனைய உடல் உறுப்புக்களும், ஆடை ஆபரணங் களும் சிதைவடைந்திருப்பதனால் அவைபற்றி பூரணமாகக் கூறமுடியாது இருக்கின்றது.

இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள விக்கிரகங் களுள் ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம் சிறப் பாக நோக்கத்தக்கது. இவ்விக்கிரகம் சந்தைக்கும் இராசமாளிகை வளவிற்கும் இடையிலுள்ள தற் போதைய நீதிமன்ற வளவில் பழைய கிணறு மீண் டும் வெட்டப்பட்டபோது கண்டெடுக்கப்பட்ட தாகும். இச்சிவலிங்கம் மாதோட்டத்தில் கண் டெடுக்கப்பட்ட பல்லவர்காலச் சிவலிங்கத்தைப் போல் மிகப்பெரிதாகும். எட்டடி உயரமான இந்த லிங்கத்தின் 63/4 அடி உயரமான பாகம் மண்ணினுள் மறைக்கப்பட்டு 11/4 அடி உயர மான பாகம் மட்டும் வெளியே தெரியுமாறு வைக் கப்பட்டுள்ளது. கிணற்றிலிருந்து வெளியே எடுத்த போது ஏற்பட்ட உடைவு காரணமாக சிவலிங் கத்தின் மேற்பாகம் தற்போது ஒழுங்கற்றுக் காணப்படுகிறது. கருங்கல்லில் வட்டவடிவில் செய்யப்பட்டுள்ள இதன் ஆவுடை 13/4 அடி உயரத்தையும், பத்தடி சுற்றளவையும் கொண் டுள்ளது. இவ்வாவுடையின் அழகுத்தன்மையும், தோற்றமும் பிற்கால ஆவுடையின் அமைப்பிலி ருந்து வேறுபட்டதாகக் காணப்படுகிறது (படம்- 116).

மேற்குறிப்பிட்ட நான்கு விக்கிரகங்களும் குறிப்பிட்ட மிகச்சிறிய வட்டத்திற்குள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதை நோக்கும்போது இவ்விக்



படம். 116. சாவகச்சேரியிற் கிடைத்த சிவலிங்கம்.

கிரகங்கள் தொடர்பாகச் சில கேள்விகள் எம் முன் எழுகின்றன.

## போத்துக்கேயரின் கலையழிவுக் கொள்கை

யாழ்ப்பாண அரச காலத்தில் இந்துமதம் அரச ஆதரவு பெற்ற ஒரு மதமாக விளங்கியது. ஆயினும் இவ்வரசு காலத்திற்குரியதெனக் கருதக்கூடிய ஒரு ஆலயம் தானும் இதுவரை முழுமையாகப் பாதுகாக்கப்படவில்லை. இதற்குப் போத்துக்கேயரும் பின்வந்த ஒல்லாந்தரும் கடைப்பிடித்த இந்துமதத்திற்கு எதிரான கலையழிவுக் கொள்கை ஓர் முக்கிய காரணம் ஆகும். போத்துக்கேய ஆசிரியரான கேய்றோஸ் பாதிரியார் தமது மத நடவடிக்கையின் போது யாழ்ப்பாணத்தில் இருந்த சிறிதும் பெரிதுமான 500 இந்து ஆலயங்களை இடித்து அழித்ததாகத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களில் இருந்து பெறப்பட்ட கற்களைக் கொண்டே இந்து ஆலயங்கட்கு அருகே புதிய கிறிஸ்தவ ஆலயங்கள் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. பிற்காலத்தில் பிறதேவைகட்காக நிலங்கள் வெட்டப்பட்டபோது போத்துக்கேயரால் அழிக்கப்பட்ட ஆலயத்தின் சிதைவுகளும், விக்கிரகங்களும் கண்டுபிடிக்கப்பட்டமை பொதுவான வரலாற்று உண்மையாகும். இதற்கு போத்துக்கேயரது கலையழிவுக் கொள்கையில் இருந்து இந்து விக்கிரகங்களைப் பாதுகாக்க மதப்பற்றுடைய மக்கள் கிணறுகளிலோ, மறைவான இடங்களிலோ அவ்விக்கிரகங்களைப் புதைத்து வைத்திருந்தமை ஒரு பொதுக் காரணம் ஆகும். இவ்வாறான ஒரு கருத்து யாழ்ப்பாண அரசு தொடர்பாக எழுந்த யாழ்வைபவ மாலையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. சாவகச்சேரியில் கிடைத்த நான்கு விக்கிரகங்களையும் நோக்கும்போது அவை தற்செயலாகவோ அல்லது பிற இடங்களில் இருந்து கொண்டு வந்து புதைக்கப்பட்டனவென்றோ கூறமுடியாது. இந்த நான்கு விக்கிரகங்களும் ஏறத்தாழ 100 சதுரயார் பரப்பளவினுள் கண்டெடுக்கப்பட்டவையாகும். கண்டெடுக்கப்பட்ட இடங்களில் உள்ள கட்டிடத்தின் சிதைவுகளையும், பிறதொல்பொருட் சான்றுகளையும் நோக்கும்போது இவ்விடத்தில் முன்பு பெரியதோர் ஆலயம் இருந்ததென நிச்சயப்படுத்திக் கூறலாம். தற்போதைய சாவகச்சேரிச் சந்தைப் பகுதியில் அண்மையில் பிற தேவைகட்காக நிலம் வெட்டப்பட்டபோது ஓர் கட்டிடத்திற்குரிய அத்திவாரமும், கட்டிடத்தின் சிதைவுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்றுகூட செங்கட்டியால் கட்டப்பட்ட அவ்வத்திவாரங்களை மிகத் தெளிவாகப் பார்க்கமுடியும். இவ் அத்திவாரங்களுக்குத் தெற்கே தற்போதைய பஸ் தரிப்பு நிலையத்தில் ஒரு சிறிய கிணறு ஒன்று காணப்படுகிறது. இக்கிணறு முன்பிருந்த ஆலயத்தின் திருமஞ்சனக்கிணறு எனக் கூறப்படுகிறது. இக்கிணற்றுக்குத் தெற்காக நீதிமன்ற வளவில் 3 அடி அகலம் உள்ள செங்கட்டியால் அமைக்கப்பட்ட கட்டிடத்தின் சுவர்ப்பகுதி காணப்படுகிறது. இச்சுவருடன் இணைந்த கட்டிடத் தொகுதி ஒன்று பிரித்தானியர் ஆட்சியில் வரலாற்று நினைவுச் சின்னமாக சட்டரீதியாகப் பாதுகாக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. மேலும் தற்போதைய நீதிமன்ற வளவில் பழைய கட்டிடம் ஒன்று இருந்ததற்கான அத்திவாரங்களும், ஓர் ஆலயத்திற்குரியதென நிச்சயப்படுத்திக்கூறக்கூடிய மிக நீண்ட முருகைக் கற்களும் காணப்படுகின்றன. இவ்விடத்தில் நாம் ஆய்வினை மேற்கொண்டபோது நாகதம்பிரானுக்குரிய விக்கிரகம் ஒன்றும், ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த சந்தனக்கல் ஒன்றையும் அவதானிக்க முடிந்தது. 1942-ஆம் ஆண்டு (2ஆம் உலகமகாயுத்தகாலத்தில்) நீதிமன்றத்திற்கு அருகே பதுங்குகுழி வெட்டப்பட்டபோது ஆலயத்திற்குரிய மணியும், நந்தாவிளக்கும் கண்டெடுக்கப்பட்டதாக அவற்றை நேரில் பார்த்த மாத்தையா என்ற வயோதிபர் கூறினார்.50 தற்போதைய நீதிமன்றத்தின் நடுஅறையில் மூடப்பட்டிருக்கும் கிணற்றிற்குள் நீதிமன்றத்திற்கான அத்திவாரம் வெட்டும்போது கண்டெடுக்கப்பட்ட ஆலயத்திற்குரிய 4 கோமுகிகள் போடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இத்தகைய இடங்களில்

இருந்தே மேற்கூறப்பட்ட நான்கு விக்கிரகங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளதனால் அவ்விக்கிரகங்களை இங்கிருந்த ஆலயத்திற்குரியதென கருத இடமுண்டு.

## வாரிவானேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள்

தற்போது இவ்விக்கிரகங்கள் வைக்கப்பட்டுள்ள ஆலயம் வாரிவானேஸ்வரர்நாதர் என்று அழைக்கப்படுவதற்கு இவ் ஆலயத்திற்கு முன்னோடியாக வாரிவானேஸ்வரர் என்ற ஆலயம் இப்பிராந்தியத்தில் இருந்ததேகாரணம் ஆகும். இதனால் சாவகச்சேரி வாரிவானேஸ்வரர் எனவும் அழைக்கப்பட்டது. குமுதமுனி கூறிய ஐதீகத்தில் இவ்வாரிவானேஸ்வரர் ஆலயம் சோழநாட்டில் இருந்து வந்த விதுபாக்கர் என்பவரால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. தக்ஷிணகைலாய புராணத்தில் ''வாரிவனலிங்கமகிமை உரைத்த படலம்'' என்ற அத்தியாயத்தில் சிவபெருமான் சுயம்புலிங்கமாக விதுபாக்கர் என்ற வைஷ்ணிகருக்கு காட்சி கொடுத்த நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது.51 பின்னர் இதே இடத்தில் அமைக்கப்பட்டஆலயம்தான் வாரிவானேஸ்வரர் ஆலயம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இராஜநாயகம் முதலியார் போத்துககேயரின் மத நடவடிக்கையின் போது அவர்களால் அழிக்கப்பட்ட ஆலயங்களில் ஒன்றாக இதைக்குறிப்பிட்டுள்ளார்.52 அந்த ஆலயம் இருந்த இடத்தில் இருந்தே மேற்குறிப்பிட்ட விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதனால் அவற்றை வாரிவானேஸ்வர ஆலயத்திற்குரியதெனக் கூறுவது பொருத்தமானதாகும். இவ்விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கு மேற்கே கத்தோலிக்க தேவாலயம் ஒன்று கட்டப்பட்டதாக கேப்றோஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார் வாரிவானேஸ்வரர் ஆலயத்தை இடித்த கற்களைக் கொண்டே கத்தோலிக்க ஆலயம் கட்டப்பட்டதென்ற குற்றச்சாட்டு பிற்காலத்தில் எழுந்ததன் விளைவாக அக் கத்தோலிக்க ஆலயம் இடிக்கப்பட்டு புதிய கிறிஸ்தவ ஆலயம் கட்டப்பட்டதாக அவ்வூர் மக்கள் கூறுகின்றனர். மேற்கூறப்பட்ட ஆதாரங்களை வைத்து நோக்கும்போது தற்போதைய சாவகச்சேரி சந்தைப்பகுதியில் இருந்து நீதிமன்றம்வரை நீண்டிருந்த புராதன வாரிவானேஸ்வரர் ஆலயம் போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்டு அதன் கற்கள் பிறதேவைகட்காகப் பயன்படுத்தப்பட்டபோது அவ் ஆலயத்தில் இருந்த விக்கிரகங்கள் கவனிப்பாரற்ற சூழ்நிலையில் மண்ணுள் புதையுண்டன எனக் கூறலாம், அவ்வாறு புதையுண்டிருந்த விக்கிரகங்கள் பிற்காலத்தில் பிறதேவைகட்காக நிலம் வெட்டும் போது வெளிவந்தவையாகும்.

## தோற்ற காலம்

மேற்கூறப்பட்ட விக்கிரகங்களை வைத்து வாரிவானேஸ்வரர்ஆலயத்தின் தோற்றகாலத்தை நிட்சயப்படுத்துவது கஷ்டமாகவே தோற்றுகின்றது. ஆனால் விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்ட சுற்றாடலின் அமைவிடத்தை நோக்கும்போது இங்கிருந்த ஆலயத்திற்கு தொன்மையான வரலாறு உண்டு எனக்கருத இடமுண்டு. இவ் ஆலயத்திற்கு கிழக்கு எல்லையாக கடற்கரைப் பகுதி அமைந்துள்ளது. இக்கடற்கரைக்கு ஒரு மைல் தெற்கே வரலாற்றுப் பழமை வாய்ந்த கச்சாய்த்துறைமுகமும், தென்கிழக்கே நாகதேவன் துறை (பூநகரி), மட்டுவில்நாடு (பூநகரி) முதலான பழைய துறைமுகப் பகுதிகளும் அமைந்துள்ளன. இத்துறைமுகங்களோடு சாவகச்சேரிக்கு நெருங்கிய கடல்வழித் தொடர்பு இருந்ததென்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள் இவ் ஆலயத்தின் கிழக்கெல்லையில் கிடைத்துள்ளன. இவ்விடங்களில் ஆதிக் குடியிருப்பிற்குரிய சான்றுகள் மட்டுமன்றி 7ஆம் 8ஆம் நூற்றாண்டில் அரேபிய, சீனத் தொடர்புகளும், 10ஆம்11ஆம்நூற்றாண்டில்தென்னிந்திய நாட்டுடனான தொடர்புகளும் இருந்ததற்குச் சான்றுகளும் உள்ளன.53 இப்பிராந்தியத்திற்கு அயலில் உள்ள கச்சாய், கெற்பலி, கிளாலி, கேரதீவு, பூநகரி முதலான இடப்பெயர்கள் சேர, சோழத் தொடர்பு இங்கிருந்ததற்குச் சான்றாகும். 12ஆம் நூற்றாண்டுக்குரிய திருவாலங்காட்டுச் சாசனம் சோழர் வட இலங்கையில் வெற்றிகொண்ட இடங்களில் ஒன்றாக மட்டுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம் மட்டுவிலைச் சிலர் சாவகச்சேரி மட்டுவில் எனவும்,54 வேறுசிலர் பூநகரி மட்டுவில் நாடு எனவும் அடையாளம் கண்டுள்ளனர்.55 அவ்விடம் எதுவானாலும் அது சாவகச்சேரிக்கு மிக அருகில் உள்ள இடங்களென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சோழர் காலத் தஞ்சாவூர் இலக்கியங்கள் என்ற நூலில் ஈழநாட்டுப் பூநகரியில் இருந்து தமிழ்

நாட்டு ஆலயங்கட்கு பூக்கள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.56 அதே போல் சாவகச்சேரி வாரிவானேஸ்வரர் ஆலயத்திற்கும் பூநகரியில் இருந்து பூ கொண்டுவரப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இத்தகைய ஆதாரங்கள் சாவகச்சேரி வாரிவானேஸ்வரர் ஆலயம் அமைந்த பிரதேசத்திற்கு தொன்மையான வரலாறு உண்டு என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது. 11ஆம் 12ஆம் நூற்றாண்டுகாலப்பகுதி ஆலயங்கள் கடற்கரையை அண்டிய பகுதிகளில் கடல்சார்ந்த வர்த்தகத்தைப் பின்னணியாகக் கொண்டு கட்டப்பட்டதற்கு போதிய ஆதாரங்கள் உண்டு. வாரிவானேஸ்வரர் ஆலயம் அமைந்த கிழக்குப் பிராந்தியம் கடல்சார்ந்த வர்த்தகத்துடன் தொடர்புடையதென்பதை அங்கு பரவலாகக் கிடைத்த 11ஆம் 12ஆம் நூற்றாண்டிற்குரிய நாணயகங்களும், பிற தொல்பொருட் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாலயம் வாரிவானேஸ்வரம் என்ற பெயரால் அழைக்கப்படுவதை நோக்கும்போது சோழர் ஆட்சியில் இலங்கையில் கட்டப்பட்ட ராஜராஜஈஸ்வரம், திருவிராமீஸ்வரம் (மாதோட்டடம்), உத்தம சோழ ஈஸ்வரம் (அதகட), பண்டிதசோழ ஈஸ்வரம் (மண்டலகிரி), வானவன் மாதேஸ்வரம் (பொலநறுவை), ரவிகுலமாணிக்க ஈஸ்வரம் (பதவியா) பாடல் பெற்ற தருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய ஆலயங்களின் பெயர்கள் நினைவுக்கு வருகிறது. சோழராட்சியிலிருந்து கோயிலுக்கு சேவை செய்யும் அந்தணர், தேவர் அடியார் முதலியோருக்கு நிலங்கள் மானியமாக அளிக்கப்பட்டு அந்நிலங்கள் அவர்களின் பெயரால் அழைக்கப்படும் வழக்கம் தோன்றியதாகத் தெரிகிறது. இதைப் பொலநறுவைச் சிவாலயத்திலுள்ள அதிராஜேந்திர சோழனுடைய கல்வெட்டும்,57 பாலமோட்டைச் சாசனமும் உறுதிப்படுத்துகின்றன.58 இதேபோல் சாவகச்சேரி வாரிவானேஸ்வரர் ஆலயத்திற்குச் சேவைசெய்தோருக்கு ஆதியில் மானியமாக வழங்கப்பட்ட காணிகள் இன்று கோயில்குடியிருப்பு, தேவரடியார் வளவு என அழைக்கப்படுவது சிறப்பாக நோக்கத்தக்கன. இத்தகைய ஒரு காலப் பின்னணியோடு இவ்வாலயத்தின் தோற்றகாலத்தை ஆராய இடமுண்டு.

இவ்வாலயத்தைப்போல் இங்கு கிடைத்த விக்கிரகங்கள்மிகப் பழைமையானவையெனக் கூறுவது கடினமாகும். அம்மன், மனோன்மணி அம்மன் ஆகிய விக்கிரகங்களின் திருமுடியும், இடுப்பிலுள்ள சிங்கமுக கச்சாணமும், பாதம்வரை நீண்டுள்ள பீதாம்பரத்தில் ஆடையமைப்பும் 14ஆம் நூற்றாண்டுக்குரிய முற்பட்ட விஜய நாயக்கர் கலைமரபை அப்படியே பிரதிபலிக்கின்றன. ஆனால் ஒடுங்கிய இடையும், திரண்ட மார்பகங்களும், தடித்த கழுத்தாபரணங்களும், மகரகுண்டலமும், முழங்கையுடன் இணைந்த மேல்கரங்களும் சோழக்கலைமரபை நினைவுபடுத்துகின்றன. மிக உயர்ந்த சிவலிங்கமும் மிகுந்த கலைவேலைப்பாடுடைய வட்ட வடிவில் அமைந்த ஆவுடையும் பாண்டியக் கலைமரபுடன் தொடர்புடையன. இதனால் காலத்தை நிச்சயித்துக் கூறக்கூடிய கல்வெட்டுப்போன்ற ஆதாரங்கள் கிடைக்கப்பெறாத நிலையில் இவற்றின் காலத்தைத் திட்டவட்டமாகக் கூறுவது கடினமாகும். ஆனால் இங்கு கிடைத்த அனைத்து விக்கிரகங்களும் 15ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் யாழ்ப்பாண அரசு காலத்தில் வழிபடப்பட்டவை என்பதை நிச்சயப்படுத்திக் கூறமுடியும்.

## பிற்சேர்க்கை

இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்னர் சன்மார்க்க சபையில் நடந்த விவாதமொன்றில்சாவகச்சேரி வாரிவானேஸ்வரர் ஆலயம் பற்றி பயனுள்ள பல கருத்துக்கள் கூறப்பட்டன. அக்கருததுக்கள் அவ்வாலயத்தின் பழைமைபற்றி அறிவதற்கு ஓரளவு உதவுவதால் அவ்விவாதத்தின் பின்னர் காலஞ்சென்ற அருணாசலம் வெளியிட்ட அறிக்கையை இங்கு தருகிறோம்.

சன்மார்க்கசபை ஆனிமாதம் 25ஆம் திகதி கூடியபோது சபையிலிருந்த சிற்றம்பலம், ''எங்களுடைய சாவகச்சேரிப் பட்டினத்தில் இரண்டு சிவன்கோவில்கள் எங்ஙனம் ஒரே இடத்தில் ஏற்பட்டன'' என வினாவினார். சபையில் இருந்த முருகவேள், 'அது ஒரு பெரிய சரித்திரம், சொல்லுகிறேன் கேளும்'' என்று சொல்லி கதையைக் கூறத் தொடங்கினார்.

17-ம் நூற்றாண்டுக்கு முன்பு சாவகச்சேரிச் சந்தை இன்று இருக்கும் நிலையத்தில் ஓர் சிவன் கோவில் முன்னுள்ளவர்களால் கட்டப்பட்டிருந்தது. போத்துக்கேயர் இலங்கையின், கரையோரங்களைக் கைப்பற்றி வந்தபோது, வடபாகத்தையும் கைப்பற்றினார்கள். அவர்கள் கத்தோலிக்க சமயத்தவர்கள். ஆகவே அவர்கள் எங்கள் கோயில்களைச் சூறையாடி, அங்குள்ள பொன், வெள்ளி முதலாய உலோகங்களால் செய்யப்பட்டிருந்த சொருபங்களையும், மற்றும் உபகரணங்களையும் தங்கள் நாட்டிற்குக் கொண்டுசென்று விட்டார்கள். ஆனால் அவர்கள் கோவில்களை இடிக்கவில்லை. எங்கள் சிவன் கோவிலும் அவ்விதமே சூறையாடப்பட்டு இடிக்கப்படாத நிலையிலிருந்தது. தமிழ் மக்களாகிய எங்களனைவரையும் கட்டாயப்படுத்திக் கத்தோலிக்கர் ஆக்கினார்கள். அவர்களது ஆட்சி நூறு வருடங்களுக்கு மேல் இருந்தபடியால், பக்தியுள்ள சைவ மக்கள் தங்கள் தங்கள் இல்லங்களில் கடவுளை வணங்கி வந்தனர்.

சுந்தரம்: "இந்தக் கோவில்களைப் பராமரிக்காது விட்டு விட்டார்களா?"

முருகவேள்: அவர்கள் இந்து சமயத்தவர்களாகக் காட்சியளித்தால் அவர்களைக் கழுவில் ஏற்றி விடுவார்கள். ஆகவே கோவில்களை அவர்களால் பராமரிக்க முடியவில்லை. வீட்டில் கடவுளை வழிபடுவதையும் மறைவாகவே செய்து வந்தார்கள். இவர்கள் சைவசமயத்தை அனுஷ்டிக்கிறார்களா?, என அறிய உத்தியோகத்தரை நியமித்திருந்தார்கள். அவர்கள்தான் விதானைமாரும், உடையார்மாரும் ஆகும்.

விரதம் அனுஷ்டிப்பதை தலைமைக்காரர்கள் அறியாவண்ணம் தாங்கள் சாப்பிட்ட வாழை இலையை கூரையில் சொருகினார்கள். அவ்வளவு கட்டுப்பாடாக எங்களது முன்னோரைக் கத்தோலிக்க சமயத்தில் சேர்த்தார்கள். இவர்களுடைய ஆட்சி நீடிக்கவில்லை. 18-ஆம் நூற்றாண்டில் போத்துக்கேயரால் பிடிக்கப்பட்ட இடங்களை ஒல்லாந்தர் கைப்பற்றினார்கள். இலங்கையின் வடபாகம் இவ்விதமாக ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டது.

சிற்றம்பலம்: இவர்கள் என்ன சமயத்தவர்கள்?

முருகவேள்: ஒல்லாந்தர் புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள். இவர்கள் எங்கள் எல்லோரையும் புரொட்டஸ்தாந்து வேதக்காரர்கள் ஆக்கினார்கள். இவர்களும் போத்துக்கேயரைப்போல் தங்கள் மதத்தைத் தழுவாதவர்களை கொலை செய்து வந்தார்கள். அத்துடன் எல்லாக் கோவில்களையும் தரைமட்டமாக்கினர். எங்கள் சிவன் கோவிலும் தரைமட்டமாக்கப்பட்டது. அப்போது இருந்த பக்தியுள்ள சைவமக்கள் சிவன் கோவிலிருந்த இலிங்கத்தை இரவிரவாகக் காவிச் சென்று பற்றைகள் உள்ள இடத்தில் ஒரு தனிப் பனைக்கு அருகாமையில் அடையாளமாக வைத்து விட்டனர் ஒல்லாந்தருடைய ஆட்சி நூறு வருடங்களுக்கு மேல் நீடித்தது. அதன் நிமித்தம் இந்த இலிங்கத்தை எல்லோரும் மறந்து விட்டார்கள். அந்தத் தனிப்பனையில் ஓர் இத்தி முளைத்து அருகிலுள்ள இலிங்கத்தையும் பற்றிக்கொண்டது. நாளடைவில் பனை பட்டுப்போனது. ஆனால், இலிங்கத்தை இத்தி காத்துக்கொண்டது.

19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றினார்கள். அவர்களுடைய ஆட்சியில் சமய சுதந்திரம் இருந்தது.

சிற்றம்பலம்: (குறுக்கிட்டு), அப்போ இந்த இலிங்கத்தை வைத்துக் கோவில் கட்டினார்களா?

முருகவேள்: இந்த இலிங்கம் இருந்தது ஒருவருக்கும் தெரியாது. 19-ஆம் நூற்றாண்டில் சமய சுதந்திரம் இருந்த படியால் கற்குளியில் வசித்த தம்பையா உடையாரின் மூதாதையர் திருக்கோயில் இல்லாத ஊர் பாழடையும் என்றஞ்சி, ஒரு சிவன்கோவிலை செங்கற்களாலும், சுண்ணாம்பாலும், இப்போ வாரியப்பர் சிவன்கோவில் இருக்கும் நிலையத்தில் கட்டி வணங்கினார்கள். நாளடைவில் புற்றெழும்பிக் கோவிலைக் கெடுத்தபடியால் சண்முகம் என்பவர் பொழிந்த வெள்ளைக்கற்களால் அத்திவாரத்திலிருந்து மேற்கோவில் வரைக்கும், 30 வருடமாகப் பலவிதமாகவும் பணம் சேர்த்துக் கட்டிமுடித்தார். இவருடைய பிரயாசையைக் கண்ட தெல்லிப்பளை வாசியாகிய சட்டத்தரணி தம்பையா மிகுதி வேலைகளைச் செய்து முடித்து முன் மண்டபத்

தையும் கட்டுவித்தார். இவரைப்போல இன்னும் பலர் தங்கள் உபயமாக, மற்றும் பாகங்களை யும் கட்டிமுடித்தனர்.

சுந்தரம்: எக்காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது?

முருகவேள்: 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பூரணமாகக் கட்டிமுடிக்கப்பட்டது. அப்போது சிவன் கோவிலின் வடமேற்கு மூலையிலும், தெற்குப் பக்கத்திலும் இருவாசல்கள் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் பிரதானமான வாசல் சிவன் வாசலாகும்.

சிற்றம்பலம்: இரண்டாவது சிவன் கோவில் எப்போது ஏற்பட்டது?

முருகவேள்: 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இத்திக்குள் ஒரு இலிங்கம் இருக்கக்கண்டனர். அப்படிக்கண்டு பிடித்தபின்சிவன்கோவிலில் பூசை செய்யும் ஐயர் வடமேற்கு மூலையில் இருந்த வாசலால் சென்று இந்த இலிங்கத்திற்கும் தூப தீபம் காட்டி பூசை செய்து வந்தார். பக்தர்களும் இதை இத்தியடியான் என்று சொல்லி வணங்கி வந்தார்கள். அருளம்பலம் என்பவரது மூதாதையரின் காணியாக அவ்விடம் இருந்த படியால் அவர் இதைக் கிளப்பி ஒரு கோவிலுக்குள் வைத்து சிவன்கோவில் ஆக்கவேண்டும் எனத் தீர்மானித்துக்கொண்டார். பண்டைக்காலத்து சிவன்கோவிலின் இலிங்கமென எல்லோரும் யூகித்தனர். அக்காலத்தில் கிறிஸ்தவ கோவிலுக்குப் போதகராயிருந்த சின்னத்தம்பி என்பவர் கிறிஸ்தவர்களது மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த பழைய சிவன் கோவிலின் கோமுகையை அருளம்பலத்துக்குக் கொடுத்துதவினார். ஆகவே, பண்டைக்காலத்து இலிங்கமும், கோமுகையும் அருளம்பலம் வசம் இருந்தபடியால் அவற்றை வைத்துக் கோவிலைக் கட்டத்தொடங்கினார்.

சுந்தரம்: சந்தை இன்றைக்கு இருக்கும் நிலையத்தில் முற்காலத்தில் சிவன்கோவில் இருந்ததென அறிய வேறும் அத்தாட்சி உண்டா?

முருகவேள்: சந்தை இருக்கும் நிலையத்தில் கட்டிடங்களுக்கு அத்திவாரம் வெட்டும் பொழுது பல சான்றுகள் கண்டெடுத்தனர். வேலுப்பிள்ளை உபாத்தியயார், ஒரு பிள்ளையாரின் சொரூபத்தைக் கண்டெடுத்து, இன்றைக்கும் தன் பூசையறையில் வைத்திருக்கின்றார். பஸ்வண்டிகள் நிற்கும் நிலையத்தில் இன்றைக்குக் காணப்படும் பழையகாலத்துக் கிணறு பண்டைக்காலத்துச் சிவன் கோவிலின் திருமஞ்சனக்கிணறு என யூகிக்கின்றனர். இன்னும் ஆராய்ந்தால் சான்றுகள் எடுக்கலாம் இலிங்கமும், கோமுகையும், இந்தத் திருமஞ்சனக்கிணறும் எல்லோராலும் கண்ணாரக் காணக்கூடிய சான்றுகள். அருளம்பலத்தால் அதைக்கட்டி முடிக்க இயலாது இருந்தபடியால் முத்துக்குமாரு என்பவர் பணத்தைச் சேர்த்துக் கட்டிமுடித்தார். மிகுதியாக இருந்த குறைவேலைகளை மேலும் பலர் தங்கள் உபயமாகக் கோவிலுக்குச் செய்து அழகாக ஒப்பேற்றி விட்டனர். இவ்விதம் இரண்டு சிவன் கோவில்கள் ஒரே இடத்தில் ஏற்பட்டன.

சிற்றம்பலம்: இரண்டு சிவன்கோவில்கள் கீரைக்கடைக்கும் எதிர்க்கடைபோல் அக்கம் பக்கமாக இருப்பதால் ஊர் இரண்டுபடுகிறது. இரண்டுசிவன் கோவிலையும் ஒப்ப நோக்குபவர்களுக்கு, அவர்கள் வணங்கப்போகும் போது, தங்கள் உபயத்தை எதற்கு கொடுப்பதென திகைக்கின்றனர். இரண்டு சிவன்கோவில்களுக்கும் இருக்கும் வருமானம் அவற்றை செவ்வனே பரிபாலிக்க போதாததாயிருக்கிறது. திருவிழாக்காலங்களில் போட்டி மனப்பான்மையும், பகைமையும் ஏற்படுகிறது. பூசைக்கு மணியடிக்கும்போது இரண்டு கோவில் மணிகளும் ஒரே நேரத்தில் அடிக்கப்படுகின்றன. எவ்விதம் இவற்றையெல்லாம் சீராக்க முடியும்?

முருகவேள்: இரண்டு சிவன்கோவில்களையும் ஒரு சபையின் பரிபாலனத்தின் கீழ் கொண்டு வர வேண்டும். சிவன் கோவிலின் மணியோசை கேட்கும் எல்லைக்குள் வசிக்கும் இந்துக்கள் அனைவரும் மாதந்தோறும் குறித்தவொரு பண உதவி செய்வதாய் இருக்கவேண்டும். அரசாங்க அதிபருக்கு, இதைச் செய்துமுடிக்க அரசாங்கம் அதிகாரம் வழங்கவேண்டும். உதவி அரசாங்க அதிபரின் கீழ் இப்பரிபாலனசபை ஆட்சி புரியவேண்டும். இரண்டு சிவன் கோவில்களையும் ஒன்று போல் இயக்க அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சுந்தரம்: இவ்விதம் இரண்டு சிவன் கோவில்களும் ஒன்றாய் இயங்க இப்போ இருக்கும் கர்த்தாக்கள் உடன்படமாட்டார்கள். அவர்களைத் தங்கள் ஆதிக்கத்தை இழக்கச்செய்ய பொதுமக்களால் முடியாது.

முருகவேள்: அரசாங்கம் இதற்கு ஆவன செய்ய வேண்டும். பொதுமக்களின் உபயத்தினால் இரண்டு சிவன் கோவில்களும் உருவாக்கப்பட்ட படியினாலும், பண்டைக்காலத்து சிவன் கோவிலை பொதுமக்கள் திரும்பவும் ஒரு புது இடத்தில் அமைந்திருப்பதாலும், அரசாங்கம் இதில் தலையிடப் போதிய உரித்துண்டு. தென்னிலங்கையில் அழிந்துபோன கோவில்களை அரசாங்கம் தனது செலவில் திருத்தியமைக்கிறது. ஆனால் இந்த விடயத்தில் அரசாங்கத்தின் பணம் தேவைப்படவில்லை. இவற்றையெல்லாம் ஒழுங்கு முறைக்குக் கொண்டுவர, உதவி அரசாங்க அதிபருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டுமெனப் பொதுமக்கள் அபிப்பிராயப்படுகின்றனர். நாட்டின் முன்னேற்றத்துக்கு அறிகுறியாக இருப்பது அங்குள்ள கோவிலின் சீரும், சிறப்பும் இவ்விடத்தில் இரண்டு கோவில்கள்எதிர்கடைபோல் இருப்பதால் சிறப்பைக் கெடுக்கின்றன. ஆகவே இந்த இரண்டுகோவில்களும் ஒரு கோவில் போல இயங்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டும்.

இன்று இங்கு நிகழ்ந்த கலந்துரையாடல் நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாய் இருப்பதால், அதைச்சபை ஒப்புக்கொள்ளுகிறது.

## ஐரோப்பியர் ஆட்சியில் பூநகரி

ஏறத்தாழ முன்னூற்றி ஐம்பது ஆண்டுகள் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னன் சங்கிலியன் போத்துக்கேயத் தளபதி ஒலிவேராவால் வெற்றி கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாண அரசு ஐரோப்பியரிடம் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சியைத் தொடர்ந்து போர்த்துக்கேயரும் (கி.பி. 1619—1658), ஒல்லாந்தரும் (கி.பி. 1658-1679), பிரித்தானியரும் (கி.பி.1796-1948) மாறி மாறி யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்தனர். இவர்களுள் போத்துக்கேயரும், ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்த காலத்தில் பூநகரி இரு வகைப்பட்ட ஆட்சி முறைக்கு உட்பட்டிருந்ததாகத் தெரிகிறது. பெயரளவில் பூநகரியின் நிர்வாகம் யாழ்ப்பாணத்திற்குப் பொறுப்பாக இருந்த திசாவையின் கீழ் கடமையாற்றிய அதிகாரியால் நிர்வகிக்கப்பட்டாலும் நடைமுறையில் பூநகரியின் எல்லைக் கிராமங்கள் வன்னிச் சிற்றரசர்களின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தன. இவ்வன்னிச் சிற்றரசுகள் போத்துக்கேயருக்கும், ஒல்லாந்தருக்கும் திறை செலுத்தும் அரசுகளாக இருந்த போதிலும் அவை ஆங்கிலேயர் காலம் வரை தமது சுதந்திரத்திற்காக தொடர்ந்து போராடின. இவ் வன்னிச் சிற்றரசுகளில் தலைமையரசாக செயற்பட்ட பனங்காமத்து வன்னிச் சிற்றரசனாகிய கயிலவன்னியன் பூநகரியில் மேலாதிக்கம் செலுத்தியதோடு போத்துக்கேய, ஒல்லாந்த மேலாதிக்கத்தை அலட்சியம் செய்து ஒரு சுதந்திர மன்னனாக செயற்பட்டான். இதுபற்றி ஒல்லாந்தக் குறிப்பொன்றை ஆதாரம் காட்டி அரசரட்ணம் கூறிய கருத்து இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது.59

''1658ஆம் ஆண்டு ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் படையெடுத்த போது கயில வன்னி என்பவனே மிகக்கூடிய அதிகாரமுடையவனாக இருந்தான். வன்னி மாகாணங்களுள் செல்வ வளமுடையதும், மிகப் பெரியதுமான பனங்காமம் என்ற மாகாணத்துக்கு இவன் பொறுப்பாக இருந்தான். சமகாலத்தைச் சேர்ந்த ஐரோப்பியர் சிலர் கயில வன்னியனைப் பற்றிக் குறிப்பிட்ட போது அவனை ஒரு இளவரசன் எனக் கூறியுள்ளனர். மத்திய அதிகாரத்தைப் பொறுத்து இவன் அதனுடன் கொண்ட தொடர்பும், அவன் மத்திய அதிகாரம் பற்றிக் கொண்டிருந்த கருத்தும் இவன் தான் ஒரு இளவரசன் என்ற நிலைக்கு எந்த விதத்திலும் குறைந்தவன் என நினைக்கவில்லை என்பதனைக் காட்டுகின்றன. இவன் போத்துக்கீசரின் கீழும், ஒல்லாந்தரின் கீழும் இருந்தபோது இவனை யாழ்ப்பாணக் கோட்டைக்கு வரவழைக்கும் அவர்களது கட்டளைகளைப் புறக்கணித்தான். ஒல்லாந்தர் போத்துக்கேயரிலும் பார்க்க தங்களின் சட்டபூர்வமான அதிகாரங்களை நிலைநாட்டுவதில் ஒழுங்காகவும் அக்கறையுடையோராகவும் இருந்த காரணத்தினால் ஆரம்பத்திலிருந்தே இவர்கள் கயிலவன்னியனின் அதிகாரத்தை அவன் தங்களில் தங்கியிருக்குமளவிற்குக் குறைக்க வேண்டுமென்ற நோக்கம் கொண்டிருந்தார்கள். குறிப்பாக ஒல்லாந்தர், வன்

னியர் தங்களுக்குக் கொடுக்க வேண்டிய கடன் களை, நிலவரிகளை ஒழுங்காகவும் தாமத மின்றியும் பெற்றுக் கொள்வதில் அக்கறை யுடையோராக இருந்தனர். தங்களின் அதி காரத்தை விரிவாக்குவதற்கு ஒல்லாந்தர் மேற்கொண்ட இந்த ஆரம்ப நடவடிக்கை கள், கயிலவன்னியனுடன் அவர்களை முரண் படச் செய்தன. மத்திய அரசாங்கத்திற்கு எதி ரான எதிர்ப்பில், கயிலவன்னியன் வன்னிய ர்களுக்குத் தலைமை தாங்கினான். ஏனைய வன்னியர்கள் ஒல்லாந்தரின் கட்டளைகளுக்கு அடிபணிந்து யாழ் பாணத்திற்குச் சென்றா லும், கயிலவன்னியன் ஒருவனே அவ்வாறு கீழ்படிந்து செல்லாதுவிட்டான். அவ்வா றின்றி அவன் பலகாலமாக வருமாறுவற்புறுத் தப்படும்போதெல்லாம் தான் செல்லாது தனக்குப் பதிலாகத் தனது மாமனை அனுப்பு வான். கயில வன்னியனைக் கைப்பற்றுவத ற்கு ஒல்லாந்தர் பெரிதும் விரும்பியிருக்க வேண்டும். ஆனால் அந்த நேரத்தில் அவர் கள் யாழ்ப்பாணத்துக்குப் படையனுப்ப முடியாது என உணர்ந்தார்கள். இதனால் ஒல்லாந்தர் சில காலத்திற்குக் கயிலவன்னி யனைத் தங்களிலிருந்து நீக்கிவைப்பதற்கு இராசதந்திர நட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்தார்கள்.''

அரசரட்ணத்தின் கூற்றை உறுதிப்படுத்துவ தாக 1661ஆம் ஆண்டு ஜூலை மாதம் இரு பத்தாறாம் திகதி றைக்லொவ்வான் கூன்ஸ் தேசாதிபதி எழுதிய அறிக்கை அமைகிறது.60

''வன்னியர்களைப் பொறுத்தமட்டில் அவர்களைத் தங்களுக்குக் கீழ்ப்படியச் செய் வதில் போத்துக்கீசர் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கினார்கள். போத்துக்கீசர், வன் னியர்களை ஒருபோதும் தங்களின் அதிகாரத் தின் கீழ் கொண்டுவர முடியவில்லை. அதுவு மல்லாமல் போத்துக்கீசர் வன்னியர்களைத் தங்களின் முன் அழைப்பதற்குக் கட்டளை களை அனுப்பினாலும் வன்னியர் அவற் றைப் பொருட்படுத்தவில்லை. இவ்வண்ணம் கயிலவன்னியன் பன்னிரண்டு அல்லது பதி நான்கு வருடங்களுக்கு யாழ்ப்பாணத்துக்கு வரவில்லை.''


மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் போத்துக் கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்குள் வன்னிப் பிராந் தியம் முழுமையாக உட்பட்டிருக்கவில்லை என் பதை உறுதிப்படுத்துகின்றன. இதன் மூலம் பூந கரியின் எல்லைக்கிராமங்கள் வன்னிச் சிற்றரசு களின் மேலாதிக்கத்திற்குள் உட்பட்டிருக்குமெனக் கருத இடமுண்டு. இதற்கு ஒல்லாந்தரது ஆவ ணங்களில் வரும் குறிப்புக்களைச் சான்றாக எடுத்துக் காட்டலாம். ஐரோப்பியர் ஆட்சியில் அதிக வருமானம் கொடுக்கும் பிராந்தியங்களில் பூநகரியிலுள்ள தியாகம் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இப்பிராந்தியத்தின் வருமானம் பனங் காமத்து வன்னியரசனுக்குச் சென்றடைந்ததாக ஒல்லாந்தக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.61 மேலும் நெல்லுற்பத்தியில் அதிக விளைவைக் கொடுக்கும் பூநகரியிலுள்ள பல்லவராயன் கட் டுப்பிரதேசத்தை ஒல்லாந்தரிடம் கொடுக்கவிரும் பாத வன்னியரசன் ஒல்லாந்தருடன் உடன் படிக்கை செய்து அதற்குப் பதிலாக யானையைக் கொடுத்ததாகத் தெரிகிறது.62 இதிலிருந்து பொருளாதாரச் செழிப்புள்ள பூநகரிப் பிராந்தி யத்தின் பெரும்பகுதி வன்னியரசனின் ஆதிக்கத் திற்குள் இருந்ததெனக் கூறலாம்.

பூநகரியில் போத்துக்கேயர் ஆட்சி தொடர் பாகக் கிடைத்த தொல்லியற் சான்றுகளை நோக் கும்போது, அவர்களது செல்வாக்கு கல்முனை தொட்டு மாதோட்டத்தின் வட எல்லை வரை யிலான கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் பெருமளவு ஏற்பட்டிருந்ததாகத் தெரிகிறது. இப் பிரதேசங்கள் மன்னாருக்கும் யாழ்ப்பாணத்திற் கும் இடையிலான கடல், தரை போக்குவரத் திற்கு வாய்ப்பாக இருந்தமை போத்துக்கேயரின் செல்வாக்குக் கூடுதலாக ஏற்பட்டமைக்குக் கார ணம் எனலாம். யாழ்ப்பாணத்திற்கு எதிராகப் போத்துக்கேயர் மேற்கொண்ட படையெடுப்பில் அப்படை கடல் வழியாகவும், பூநகரியூடான தரைவழியாகவும் சென்றடைந்தன. இதில் பூந கரியுடனான கடலேரியைப் போத்துக்கேயர் கடப்பதற்குச் சங்கிலி மன்னனே உதவிபுரிந் தான் எனக் கூறப்படுகிறது.63

போத்துக்கேயரின் மதமாற்றத்திற்கு உட் பட்ட பிராந்தியங்களில் பூநகரியும் ஒன்றாகும். போர்த்துக்கேயர் பூநகரி ஈழஊரில் வாழ்ந்த மக் கள் சிலரை மதம் மாற்றி அங்கு ஓர் கத்தோலிக்க

தேவாலயமொன்றைக் கட்டினர்.64 தற்போது ஈழஊரின் தென்னெல்லையிலுள்ள வலைப்பாடு கிராமத்தில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று உளது. இவ் ஆலயத்தின் தோற்றத்திற்கும் போத்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்ட ஆலயத்திற்கும் தொடர்பு உண்டா என்பது தெரியவில்லை. ஆனால் வலைப்பாடு கிராமத்திலும், இரணைதீவிலும் வாழுகின்ற கத்தோலிக்கரில் ஒரு பிரிவினர் ஈழஊரில் இருந்து குடியேறியதாகத் தெரிகிறது.65

ஈழஊருக்கு மேற்கே கடற்கரை ஓரமாக கோரித்தீவு என்ற இடமுள்ளது, இங்கு போத்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட வெளிச்ச வீட்டின் கட்டிடப் பாகம் காட்டுப்பகுதியில் சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது (படம்.117). இதன் காரணமாகத்தான் இவ்விடம் கோரித்தீவு என்ற பெயரைப்பெற்றது. இதையொத்த வெளிச்சவீடு




படம் - 117. கோரித்தீவிலுள்ள வெளிச்ச வீட்டின் கட்டிடப் பாகம்.

இரணதீவிலும், கறுக்காய்த்தீவிலும் காணப்படுகின்றன. கோரித்தீவுக்கு தெற்கே சில யார் தூரத்தில் வரலாற்றுப் பழைமை வாய்ந்த புளியந்துறைமுகம் உள்ளது. இவ்விரு இடங்களுக்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியில் கடற்பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட காவலரண்களின் கட்டிட அழிபாடுகள் காணப்படுகின்றன. தற்போது இவ்விடம் மக்கள் நடமாட்டமற்ற காட்டுப்பகுதியாக இருந்தாலும், போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் செறிவான மக்கள் குடியிருப்புகள் இருந்ததாகத் தெரிகிறது. போத்துக்கேயர் ஈழஊரில் மேற்கொண்ட மத மாற்றத்தில் கோரித்தீவில் வாழ்ந்த மக்கள் பலர் கத்தோலிக்க மதத்திற்குமாறியதாகத்தெரிகிறது. இன்று வலைப்பாடு கிராமத்தில் வாழும் கத்தோலிக்கரில் பலர் தமது மூதாதையர் கோரித்தீவுப்பகுதியில் இருந்து வந்து குடியேறியதாகக் கூறுவது இதற்கொரு சான்றாகும்.


கோரித்தீவில் போத்துக்கேயர் ஆட்சிதொடர்பாகக் கிடைத்த தொல்லியற் சான்றுகளுள் போத்துக்கேயர் வெளியிட்ட நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவர்கள் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்ட இருவகையான நாணயங்கள் கோரித்தீவிலும், பரமன்கிராய், கல்முனை போன்ற இடங்களிலும் எமது ஆய்வின் போது கிடைத்துள்ளன. இவற்றுள் முதலாவது வகை செப்பினால் செய்யப்பட்ட சிறிய நாணயமாகும். இதன் முன் பக்கத்தில் போத்துக்கேயரின் மரபுவழிச் சின்னமும் (Coat of arms) சுற்றிவரப் புள்ளிகளாலான வட்டமும், கோடால் அமைந்த வட்டங்களும் உள்ளன. பின்பக்கத்தில் முன்பக்கத்தில் உள்ளது போன்ற மரபுவழிச் சின்னமும், கோடுகளால் அமைந்த இரு சிறிய சதுரங்களுக்கு வெளியே வெளியிடப்பட்ட ஆண்டும் உள்ளன (படம்118). இரண்டாவது நாணய வகை முதலாவது நாணயத்தை விட மிகச் சிறிய செப்பு நாணயமாகும். இதன் முன்பக்கத்திலுள்ள சில சின்னங்கள் போத்துக்கேயரால் வெளியிடப்பட்ட நாணயம் என்பதை உறுதிப்படுத்தினாலும் அதன் பெரும்பாலான சின்னங்கள் தேய்வடைந்திருப்பதனால் அவை பற்றி விரிவாகக் கூறமுடியாதிருக்கிறது.

கோரித்தீவுக்கு வடக்கே வெட்டுக்காட்டிலுள்ள மணல் மேட்டிலிருந்து போத்துக்கல் நாட்டுக்குரிய மதுச்சாடியொன்று கிடைத்துள்ளது. இரண்டடி உயரமுடைய இச்சாடியின் வாய்ப்பகுதி ஒடுங்கியதாகவும், வயிற்றுப் பகுதி அகன்றதாகவும் உள்ளது. இதன் அடிப்பாகம் முட்டை வடிவில் அமைந்திருப்பதால்




படம் - 118. பூநகரியிற் கிடைத்த போத்துக்கேயர் கால நாணயங்கள்.

நிலத்தி நேராக நிற்பதற்கு இன்னொரு தடைய மும் இதனுடன் இணைந்திருக்க வேண்டும் போல் தெரிகிறது (படம்.119). இதேமண் மேட்டிலிருந்து போர்த்துக்கேயர் புகைப்பதற்கு பயன்படுத்திய சுங்கான் கண்டு பிடிக்கப்பட்டுள் ளது. ஒரு வகை வெண்கல்லினால் செய்யப் பட்ட இச்சுங்கான் மிகுந்த அழகும், பளபளப்புத் தன்மையும் கொண்டது (படம்-120). போர்த்துக் கேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட சுங்கான் பற்றி யாழ்ப்பாணத்து மக்களிடை நிலவுகின்ற நாட்டுப் பாடல் பூநகரி மக்களிடையேயும் நிலவுவது இங்கே குறிப்பிடத்தக்க அம்சமாகும்.




படம் - 119. வெட்டுக்காட்டிற் கிடைத்த போத்துக்கல் நாட்டுக்குரிய மதுச்சாடி.



படம் - 120. வெட்டுக்காட்டிற் கிடைத்த போத்துக்கேயர் காலச் சுங்கான்.

ஒல்லாந்தர் ஆட்சி தொடர்பான தொல் பொருட் சான்றுகளுள் பூநகரி மட்டுவில் நாட் டிற்கு கிழக்கெல்லையில் அமைந்த கோட்டை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. தற்போதைய அதன் கட்டிட அமைப்பும், கலை மரபும் ஒல்லாந்தருக்குரியதாயினும் அவ்விடத்தில் கோட்டை கட்டப்பட்டமைக்கு அதன் அமை விடமும், நீண்ட வரலாற்று பின்னணியும் முக்கிய காரணம் எனலாம். கோட்டை அமைந் துள்ள மட்டுவில் நாடு கடற்கரையை அண்டிய துறைமுகப் பகுதியாகும். இங்கிருந்து அயல் நாடுகளுடன் கடல் சார்ந்த வர்த்தகம் மேற் கொள்ளப்பட்டதைத் இத்துறைமுகப் பகுதியில் கிடைத்த பலதரப்பட்ட நாணயங்கள் உறுதிப் படுத்துகின்றன. இவ்விடம் கப்பல்துறை எனவும், கோட்டையில் இருந்து கடலுடன் கலக்கும் கால்வாய் கப்பல் கால்வாய் எனவும் அழைக்கப்படுவது இங்கு சிறப்பாக குறிப்பிடத் தக்கது. முதலாவது விஜயபாகு ஆட்சியில் பொலநறுவை அரசுக்கு எதிராகப் படை யெடுத்த வேளைக்காரப் படையினர் தங்கி யிருந்த மட்டிகாவட்ட தீர்த்த என்ற இடமும்,


இராசாதிராஜ சோழன் வடமேற்கிலங்கையில் வெற்றி கொண்ட மட்டிவாழ் என்ற இடமும் இப்பூநகரி மட்டுவில் நாட்டையே குறிப்பதாகும் இத்தகைய வரலாற்றுப் பின்னணி மட்டுவில் நாட்டிற்கு இருந்தமை போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியிலும் இவ்விடம் முக்கியத்துவம் பெற்றதற்கு ஒரு காரணமெனலாம். இதனால் ஒல்லாந்தருக்கு முன்பாகவே போத்துக்கேயரால் இவ் இடத்தில் ஒரு கோட்டை கட்டப்பட்டிருக்கலாம். அதையே ஒல்லாந்தரும் தமது கலை மரபுடன் புதுப்பித்துக்கட்டியிருக்க வேண்டும். நீண்ட காலம் அன்னியரின் ஆதிக்கச்சின்னமாக இருந்த இக்கோட்டை தற்போது அதன் தனித்துவத்தையும், கலைச்சிறப்பையும் இழந்த நிலையில் வெறும் நினைவுச் சின்னமாக காட்சியளிக்கிறது (படம்- 121).



**படம் - 121. பூநகரியிலுள்ள ஒல்லாந்தர் காலக் கோட்டை.**

பூநகரியிலுள்ள சிவபுரம் என்ற இடத்தில் ஒல்லாந்தர் காலத் தொழிற்சாலையொன்று இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன அவ் ஊரில் வசிக்கும் செல்வரத்தினம் எமக்குக் கொடுத்த தகவலின் அடிப்படையில் அவரது காணியில் ஆய்வினை மேற்கொண்டபோது நிலத்திலிருந்து நாலடி ஆழத்தில் ஒரு கட்டிடம் இருந்ததற்கான அத்திவாரங்களையும், கட்டிடத்தின் கூரைக்குப் பயன்படுத்திய ஓடுகளையும், ஒரு கட்டிடத்தில் இருந்து இன்னொரு கட்டிடத்திற்கு நீர்பாய்ச்சுவதற்காக அமைக்கப்பட்ட கால்வாயையும் அவதானிக்க முடிந்தது. இங்கு கிடைத்த ஓடுகளும், நீர்ப்பாசனக் குழாய்களும் ஒல்லாந்தக் கலைமரபைக்கொண்டு அமைக்கப்பட்டதோடு ஒல்லாந்தரால் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளையும் கொண்டுள்ளன. இவற்றிலிருந்து இங்கிருந்த கட்டிடம் ஒல்லாந்தருக்குரியதெனநிச்சயப்படுத்த முடிகிறது. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் நெசவாளரைக் கொண்டுவந்து பூநகரியிற் குடியேற்றியதாகக் கூறப்படுகிறது. இதனால் இங்குள்ள கட்டிடம் நெசவுத் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. அவ்வாறு கருதுவதற்கு இன்னொரு காரணம் இக்கட்டிட அழிபாட்டிற்கு வடக்காகவுள்ள காட்டுப் பகுதியில் உள்ள இடங்கள் பருத்திக் காடு, பருத்தி வளவு என்ற இடப் பெயரைப் பெற்றிருப்பதாகும்.


கல்முனை என்ற இடத்திலுள்ள காட்டுப் பகுதியில் அழிந்த நிலையில் ஒரு கிறிஸ்தவ தேவாலயம் காணப்படுகிறது. ஏறத்தாழ நூறடி நீளமும், நாற்பதடி அகலமும் கொண்ட இவ்வாலயத்தின் பெரும்பகுதி இடியுண்டு அதன் கட்டிடச் சுவர்கள் மண்ணுக்குள் புதையுண்டு காணப்படுகின்றன. தற்போது இவ்வாலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் சிறிய பற்றைக் காடுகள் வளர்ந்து காணப்படுவதோடு இதன் சுற்றாடல் பகுதியும் மக்கள் நடமாட்டமின்றி ஒருகாட்டுப் பகுதியாக உள்ளது. இவ்வாலயம் தெற்கு நோக்கிய வாசலை உடையதென்பதை முன்பக்கத்தில் எஞ்சி நிற்கும் வளைவு (Arch) உறுதிப்படுத்துகிறது. இவ்வளைவின் கலைமரபு ஒல்லாந்தக் கலைமரபைப் பிரதிபலித்து நிற்கின்றது. இவ்வாலயத்தின் வடக்குப் பக்கமாக உள்ள கட்டிடப் பகுதி பிற்காலத்தில் சீமெந்தினால் புதுப்பித்துக் கட்டப்பட்டு பிற தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (படம்- 122). இவ்விடத்தில் கிறிஸ்தவ ஆலயம் கட்டப்பட்டமைக்கு இலங்கையின் பெருநிலப் பகுதிக்கும், குடாநாட்டிற்கும் இடையிலான போக்குவரத்திற்கு கல்முனை ஒரு முக்கிய கேந்திர மையமாக இருந்ததே காரணம் எனலாம். பதினைந்தாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்திற்கு எதிரான கோட்டை மன்னனின் படைகள் கல்முனையூடாக யாழ்ப்பாணம் சென்




படம் - 122. கல்முனைக் காட்டுப் பகுதியில் இடிந்த நிலையிலுள்ள கிறிஸ்தவ ஆலயம்.

றடைந்தன.66 ஐரோப்பியர் ஆட்சியில் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான போக்குவரத்து கல்முனை கொழும்புத்துறையூடாக நடந்தன. இதன் காரணமாகவே கொழும்புத்துறை என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்வாறான முக்கியத்துவம் போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியிலும் கல்முனைக்கு இருந்தமை அங்கு கிறிஸ்தவதேவாலயம் தோன்றக் காரணம் எனலாம். ஆனால் அவ்வாலயம் ஏன் பிற்காலத்தில் கவனிப்பாரற்ற நிலையில் கைவிடப்பட்டதென்பது தெரியவில்லை. இவ்வாலயத்திற்கு அருகிலுள்ள ஒரு சில சைவக் கோயில்கள் அழிக்கப்பட்ட நிலையில் கைவிடப்பட்டுள்ளன. இவை போத்துக்கேயர் அல்லது ஒல்லாந்தரது மத நடவடிக்கைகளால் ஏற்பட்டிருக்க இடமுண்டு. ஆனால் ஒரு சைவ ஆலயம் இடிக்கப்பட்ட அத்திவாரத்தில் புதிதாகக் கட்டப்பட்டு பிற்காலத்தில் அதுவும் கைவிடப்பட்டுக் காணப்படுகிறது (படம்- 123). இவற்றை நோக்கும் பொழுது ஒரு காலத்தில் போக்குவரத்துத் துறையால் பொருளாதாரரீதியில் முதன்மை பெற்ற கல்முனைப் பிரதேசம், ஆங்கிலேயர் ஆட்சியோடு அப்பிராந்தியத்தின் போக்குவரத்து முக்கியத்துவம் குறைந்து பொருளாதார வளம் குன்றியதனால் அங்கு வாழ்ந்த மக்கள் வேறு இடங்களுக்குப் புலம் பெயர்ந்திருக்க வேண்டும். அதன் காரணமாகவே தற்காலத்தில் ஒரு சில வறிய குடும்பங்கள் மட்டும் வாழும் அப்பிராந்தியத்திலுள்ள சைவ ஆலயங்களும், கிறித்தவ ஆலயமும் கவனிப்பாரற்றுக் கைவிடக் காரணம் எனலாம்.

பூநகரியில் ஒல்லாந்தர் ஆட்சி தொடர்பாகக் கிடைத்த தொல்பொருட் சான்றுகளில் நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இந்நாணயங்




படம் - 123. கைவிடப்பட்ட நிலையில் புராதன ஆலய அத்திவாரத்தின் மேல் கட்டப்பட்ட இந்து ஆலயம்.



படம் - 124. பூநகரியிற் கிடைத்த ஒல்லாந்தர் கால நாணயங்கள்.


களில் பெரும்பாலானவை கல்முனை, மண்ணித் தலை, நல்லூர், மட்டுவில் நாடு ஈழஊர் ஆகிய இடங்களில் கிடைத்தவையாகும் (படம்-124). இந்நாணயங்கள் ஒல்லாந்தரால் யாழ்ப்பாணம், கொழும்பு, மதுரை, நாகபட்டினம் ஆகிய இடங்களில் இருந்து வெளியிடப்பட்டவை என்பதை நாணயங்களில் உள்ள ஆண்டு பெயர், இலச்சினை என்பனவற்றைக் கொண்டு தீர்மானிக்க முடிகிறது. இவற்றுள் ஒல்லாந்த கிழக்கிந்திய கம்பனியைக் குறிக்கும் V. O. C. என்ற எழுத்துப் பொறித்த நாணயங்கள் எமது ஆய்வின்போது கூடுதலாக கிடைத்துள்ளன. பொதுவாக ஒல்லாந்தரால் வெளியிடப்பட்ட நாணயங்கள் பூநகரியில் மட்டுமன்றி யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் கிடைத்துள்ளன.



**படம் 125. (அ) பூநகரியிற் கிடைத்த பிரித்தானியர் கால நாணயங்கள்.**

பூநகரியில் இவை கூடுதலாகக் கிடைத்தமைக்கு ஒல்லாந்தர் ஆட்சி இங்கு நிலவியதோடு தென்னிந்தியாவுடனான வர்த்தகஉறவு இப்பிராந்தியத்திலிருந்து நடைபெற்றமை காரணம் எனலாம்.

ஒல்லாந்தர் ஆட்சியைத் தொடர்ந்து 1796 இல் பிரித்தானியர் ஆட்சி யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டது. ஆயினும் வன்னிமீது அவர்களின் முழுமையான ஆதிக்கம் 1803 இன் பின்னரே ஏற்பட்டதெனக் கூறலாம். இதன் மூலம் பூநகரியிலிருந்த இருவகைப்பட்ட ஆட்சி முறை



**படம் - 125. (ஆ) பூநகரியிற் கிடைத்த பிரித்தானியர் கால நாணயங்கள்.**

முற்றாக மறைந்து பிரித்தானியர் ஆட்சியில் அதன் நிர்வாகம் முழுமையாக யாழ்ப்பாண நிர்வாகத்திற்கு உட்பட்டது. இக்காலத்தில் ஏற்பட்ட நிர்வாக மாற்றங்கள்தான் பூநகரியுடன் வரலாற்றுரீதியாக இணைந்திருந்த துணுக்காய் போன்ற பிரதேசங்கள் பிற நிர்வாகப் பிராந்தியங்களுடன் இணைந்து கொள்ளக்காரணமாயின. பிரித்தானியர் ஆட்சிக்கால பூநகரியை பொறுத்தவரை அப்பிராந்தியத்தின் சமூக, பொருளாதார பண்பாட்டு வரலாற்றை அறிவதற்கு தொல்பொருட் சான்றுகளை விட பிரித்தானியர் ஆட்சி தொடர்பான ஆவணங்கள் பெரிதும் உதவுகின்றன. அவற்றை உறுதிப்படுத்துவதாகவே பூநகரியிலுள்ள புராதன நிர்வாக கட்டிடங்களும், அப்பிராந்தியத்தில் எமது ஆய்வின் போது கிடைத்த பலதரப்பட்ட நாணயங்களும் அமைகின்றன (படம் - 125 அ. ஆ.). ஆயினும் பிரித்தானியர் ஆட்சியில் ஏற்பட்ட மதச் சுதந்திரம் போத்துக்கேயர் ஒல்லாந்தர் (முற்பகுதி) ஆட்சியால் ஏற்பட்ட விளைவுகளை மாற்றி அமைக்க உதவின. இதன் மூலம் பூநகரியின் பண்பாட்டுப் பாரம்பரியம் அதன் தனித்துவத்தை இழக்காது இன்றும் தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வருகிறது. இதை அப்பிரதேச மக்களிடையே நிலவும் சமூக பழக்கவழக்கங்கள், மரபுகள், வழிபாட்டு முறைகள், நாட்டார் வழக்கியல் போன்ற அம்சங்கள் உறுதிப்படுத்துகின்றன.

# அடிக்குறிப்புகள்


1. Paranavitana, S. "On the *Panakadu* Inscription" Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society. *(1949), ப. 158*

2. Nilakanta Sastri, K. A. "Vijayabahu. I, The Liberator of Lanka" Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society. Vol. IV *(1955 - 56)*, ப. 66

3. சூளவங்கஸ, அத். 56, செய். *3-10 (சதாசிவபண்டாரத்தர் சூளவம்சத்தில் கூறப்பட்ட தென்னிலங்கை மன்னர்கள் பாண்டிய சேர வம்சத்தோடு தொடர்புடையவர்கள் எனக் கூறுகிறார் பிற்கால சோழர் சரித்திரம்.* I. பக் 201 - 206)

4. SII, Vol. V. No. 978

5. SII, Vol, III, பக். 54 61

6. Paranavitana, S. மு. கூ. க, ப. 31

7. Codrington, H. W. A short histosy of Ceylon, (London, 1947), ப. 86

8. சூளவங்ஸ, அத். 58.

9. மேற்படி செய். 13 - 17

10. Nilakanta sastrt, *K.* A. மு. கூ. க, ப. 50

11. மேற்படி

12. மேற்படி ப. 53

13. மேற்படி,

14. Arasaratnam, S. Ceylon, *(New Jersey, 1964)*, ப. 103

15. Nilakanta sastri, K. *A.* மு. கூ. க, ப. 60

16. பத்மநாதன், சி. வன்னியர், (பேராதனை, 1970), ப. 37

17. EZ, Vol. XVIII, ப. 33

18. EZ, Vol. II, ப. 250

19. Nilakanta sastri, K. A. மு. கூ. க, பக். 58 - 59

20. மேற்படி. ப. 58

21. மேற்படி

22. SII, Vol. IV, No. 1396

23. Ray, H. C, (ed) History of Ceylon, Vol. *1*, pt. *11*, (Colombo 1960), ப. 563

24. EZ, Vol. IV, பக். 192 - 195
25. Ray, H. C. மு. கூ. நூ. ப. 543
26. ''இந்திரபாலா, கா. யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுக்கள்'' சிந்தனை. தொ, 4, இதழ். II (பேராதனை, 1964), பக். 41 - 44
27. EZ, Vol. II, பக். 41 - 44
28. Nilakanta sastri, K. A. மு. கூ. க. ப. 45
29. மேற்படி, பக் 53 - 54
30. சூளவங்ஸ, அத் 60. செய், 56 - 63
31. இந்திரபாலா, கா. மு. கூ. க. ப. 41
32. Ray, H. C. மு. கூ. நூ. பக். 552 - 553
33. EZ, Vol, II, பக். 157 - 164
34. EZ. Vol. V, No. 12, பக். 146 - 161
35. சூளவங்ஸ, அத். 60, செய். 34 - 36
36. புஷ்பரட்ணம், ப. ''சோழர்காலக் குடியேற்றங்களால் தோன்றிய பூநகரி இடப்பெயர்கள்'' யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட கல்விசார் ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை, (திருநெல்வேலி, 25-3-1992), பக். 1-15
37. சூளவங்ஸ
38. Queyroz Fernao De. The Temporal and spiritual conquest of the Island of Ceylon (Tr) Perera, S. G. (Colombo, 1930) ப. 51.
39. முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ. யாழ்ப்பாணச் சரித்திரம், (யாழ்ப்பாணம், 1912), ப. 20
40. இந்திரபாலா, கா. ''யாழ்ப்பாண இராச்சியம் தோன்றிய காலமும் சூழ்நிலையும், இளங்கதிர் 21வது ஆண்டு மலர், (பேராதனை), ப. 46
41. பத்மநாதன், சி. ''ஆட்சிமுறை'' யாழ்ப்பாண இராச்சியம், (திருநெல்வேலி, 1992), ப. 111
42. Pemananda Bhikhu (ed) Rajavaliya, (Colombo, 1959) பக். 73 - 74
43. பத்மநாதன், சி. ''ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்'' யாழ்ப்பாண இராச்சியம், (திருநெல்வேலி, 1992) ப. 51
44. மேற்படி, ப. 56
45. பத்மநாதன், சி. மு. கூ. நூ ப. 59
46. Gunawardhena, W. A. (ed) Kokilasandesaya, (Colombo, 1924), செய். 205
47. பத்மநாதன் சி. மு. கூ. க, ப. 122
48. Gunawardhena, W. A. மு. கூ. நூ, செய். 239
49. Paranavitana, S. ''The Arya Kingdom in North Ceylon,'' Journal of the Ceylon Branch of the Royal Asiatic, Society, Vol. VII. pt.2, (1961), ப. 195

50. சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் இவர் பழைய வாரிவானேஸ்வரர் ஆலயம் பற்றிப் பயனுள்ள பல தகவல்களைத் தந்துள்ளார்.

51. தக்ஷிண கைலாசபுராணம், பக். 127-129

52. இராசநாயகம், செ. யாழ்ப்பாணச்சரித்திரம், (வண்ணார்பண்ணை, 1933), ப. 141

53. அண்மையில் நாம் மேற்கொண்ட ஆய்வின்போது இச் சான்றுகள் கிடைத்துள்ளன.

54. புஷ்பரட்ணம், ப. மு. கூ. க, ப.8

55. Ray .H ,C மு. கூ. நூ, ப. 483

56. இந்நூலை வாசிக்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் இந்நூலை வாசித்த எமது வரலாற்றுத்துறை விரிவுரையாளர் கிருஷ்ணராசா இத்தகவலைத் தெரிவித்தார்.

57. SII, Vol. IV, No. 1383

58. பத்மநாதன், சி. ''தமிழ்ச்சாசனங்களும் ஈழ வரலாற்று ஆராச்சியும்'' இளந்தென்றல், (கொழும்பு, 1971-1972), ப. 35

59. Arasaratnam, S. ''The vanniar of North Ceylon A study of Feudal Power and Central authority'', The Ceylon Journal of historical and Social studies, Vol. 9, No. 2 (July - December, 1966), ப. 107

60. குணசிங்கம், செ. கயிலாய வன்னியனார் சிதம்பரர் தருமசாதனப்பட்டயம்" சிந்தனை, மலர். 1, இதழ். 1&2, (ஜனவரி - ஜூலை, 1971), ப. 50

61. Arasaratnam, S. மு. கூ. க. ப. 110

62. Memoir of Hendrick zwardekoom (1679), ப., 99

63. 'கிருஸ்ணகுமார், சோ. யாழ்ப்பாண மன்னர்களும் போத்துக்கேயரும், ''யாழ்ப்பாண இராச்சியம், (திருநெல்வேலி, 1992), ப. 77

64. Friar Paulo da Trinidade, O. F. M.Chapters on the Introduction of christianity to Ceylon, (chilaw, 1972), ப. 240

65. இக்கிராமங்களில் வாழும் மக்களிடையே நேரில் உரையாடியபோது இக்கருத்தை அறிய முடிந்தது.

## உசாத்துணை:


இந்திரபாலா, கா. 'யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுகள்' சிந்தனை, தொகுதி 2, இதழ் 4, (பேராதனை, 1969), பக். 41 - 48.

———————— இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, (கொழும்பு, 1970)

———————— 'யாழ்ப்பாண இராச்சியம் தோன்றிய காலமும் சூழ்நிலையும்' இளங்கதிர் 21ஆவது ஆண்டு மலர், (பேராதனை), பக். 13 - 64.

இரகுநாதையர், இ. சி. (பதிப்பு) செகராசசேகரம், (அச்சுவேலி, 1932)

———————— (பதிப்பு) செகராசசேகரமாலை, (யாழ்ப்பாணம். 1942)

———————— (பதிப்பு) ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம், (யாழ்ப்பாணம், 1942)

இரகுபதி, பொ. பெருங்கற்கால யாழ்ப்பாணம், (தெல்லிப்பழை, 1983)

ஏகாம்பரநாதன், ஏ. தொல்லியல் அகழ்வாய்வு நெறிமுறைகள், (சென்னை, 1983)

பொன்னுச்சாமி அரங்க.

குருமூர்த்தி, சா. தொல்பொருளியலாய்வும் தமிழர் பண்பாடும், (சென்னை, 1974)

கோபாலகிருஷ்ண ஐயர், ப. 'சிவாகமங்களும் சிற்ப நூல்களும் சித்தரிக்கும் சிவவிக்கிரவியல், கலா நிதிப்பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு, (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1980)

சதாசிவ பண்டாரத்தார், தி. வை. பாண்டியர் வரல று, (சென்னை, 1950)

———————— பிற்காலச் சோழர் வரலாறு, (அண்ணாமலைப் பல்கலைக்கழகம், (1974).

சபாநாதன், குல. (பதிப்பு) யாழ்ப்பாண வைபவமாலை, (கொழும்பு, 1953)

சாமிநாதையர், உ. வே. (பதிப்பு) சிலப்பதிகாரம், (சென்னை, 1920)

———————— பத்துப்பாட்டு, (சென்னை, 1950)

———————— புறநானூறு, (சென்னை, 1950)

———————— மணிமேகலை, (சென்னை, 1956)

சிவகளை சுப்பையா, கொங்கு நாட்டுக் கோயில்கள், (சென்னை, 1967)

சிவசாமி, வி. 'நல்லூரும் தொல்பொருளும்' ஒளி, (யாழ்ப்பாணம், 1972)

————————திராவிடர் ஆதி வரலாறும் பண்பாடும், (யாழ்ப்பாணம், 1973)

————————யாழ்ப்பாணக் காசுகள், (மானிப்பாய், 1974)

சிற்றம்பலம், சி. க. 'யாழ். மாவட்டத்தின் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளும் ஆதிக்குடியிருப்புக்களும்', செந்தழல், (திருநெல்வேலி, 1982), பக். 44-72.

——————— 'பிராமிக் கல்வெட்டுக்களும் தமிழும்' சிந்தனை, தொகுதி. 1, இதழ். 1, (யாழ்ப்பாணம், 1983), பக். 57 -86.

——————— 'தமிழர் பாரம்பரிய பிரதேசம்' முத்தமிழ் விழாமலர், (யாழ்ப்பாணம், 1991,) பக். 160 - 88.

——————— பண்டைய தமிழகம், (திருநெல்வேலி, 1991)

——————— (பதிப்பாசிரியர்) யாழ்ப்பாண இராச்சியம், (திருநெல்வேலி, 1992)

சேதுப்பிள்ளை, ரா. பி. தமிழக ஊரும் பேரும், (சென்னை, 1956)

ஞானப்பிரகாசர், சுவாமி, யாழ்ப்பாண வைபவ விமர்சனம், (அச்சுவேலி, 1928)

துரையரங்கசாமி, ஆ. சங்ககாலச் சிறப்புப் பெயர்கள், (சென்னை,1960)

நடராசா, கா. (பதிப்பு) வையாபாடல், (கொழும்பு, 1980)

பத்மநாதன், சி. வன்னியர், (பேராதனை, 1970)

——————— 'தமிழ்ச் சாசனங்களும் ஈழ வரலாற்று ஆராய்ச்சியும்' இளந்தென்றல், (கொழும்பு, 1971-72) பக். 13-36.

பரமேஸ்வரி லால் குப்தா. நாணயங்கள், (தமிழாக்கம்), குழந்தை, க. (சென்னை, 1975)

பாலசுப்பிரமணியம், எஸ். ஆர். சோழர் கலைப்பாணி, (சென்னை, 1966)

புலவர் குழந்தை. கொங்கு நாடும் தமிழும், (திருச்சிராப்பளளி, 1953)

புஷ்பரட்ணம், ப. "பூநகரிப் பிராந்தியத் தொல்லியல் மேலாய்வில் கிடைத்த தொல்பொருட் சின்னங்கள் - ஒரு வரலாற்று ஆய்வு". யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசார் அரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை, (திருநெல்வேலி, 1-3-90), பக். 1-21

——————— ,யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகர் - புதிய நோக்கு' முத்தமிழ் விழா மலர் (யாழ்ப்பாணம், 1991), பக். 36–55

——————— 'சோழர் கால மண்ணித்தலைச் சிவாலயம்' இவ்லின் இரத்தினம் பல்லின பண்பாட்டு நிறுவனத்தில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை, (திருநெல்வேலி, 1991), பக். 1-14

——————— 'சோழர் காலக் குடியேற்றங்களால் தோன்றிய பூநகரி இடப்பெயர்கள்' யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலைப்பீட ஆய்வரங்கில் வாசிக்கப் பட்ட கட்டுரை. (திருநெல்வேலி, 1992) பக் 1-15

——————— வட இலங்கையில் சிங்கைநகர், (சுன்னாகம், 1993)

முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ. யாழ்ப்பாணச் சரித்திரம், (யாழ்ப்பாணம், 1912.)

வித்தியானந்தன், சு. தமிழர் சால்பு, (சென்னை, 1985)

வேலுப்பிள்ளை, ஆ. சாசனமும் தமிழும், (பேராதனை, 1971)

ஜம்புலிங்கபிள்ளை, சா. வே. (பதிப்பு) கைலாயமாலை, (சென்னை, 1939)

Annual Report of Epigraphy, Sothern circle, Madras Government, (ARE)

Arasaratnam, S. Ceylon, (New Jersey, 1964)

——————— 'The Vanniar of North, Ceylon, A study of Feudal power and central Authority' The Ceylon Journal of Historical and social studies, Vol. 9, No. 2, (July - December, 1966) pp. 101 - 112

Balasubramaniam, S. R, Medivel cola temples, (Haryana, 1975)

Begley, Vimala. ''Proto - historical material from Sri Lanka (Ceylon) and Indian contacts', Ecological backgrounds of South Asia Pre - history (ed) K. A. R. Kennedy and G. L. Possehl, (Cornell University, 1973), pp. 191 - 196.

Bell, H. C. P. Annual Report of the Archaeological survey of Ceylon for 1892, 1893, (Colombo)

Codrington, H W. Ceylon coins and currency, (Colombo, 1924)

——————— A short history of Ceylon, (London, 1947)

Desikachari. T. South Indian coins, (New Delhi, 1984)

Dubreuil, N. J. G. Dravidian Architecture, (Varanasi, 1972)

Ellawala, H. Social History of Ceylon, (Colombo, 1969)

Elliot Sir walter. Coins of Southern India, (Delhi, 1975)

Epigrabhia Indica, (EI)

Epigrabhia Zeylanica, (EZ)

Friar Paulo da Trinidade. O. F. M. Chapers on the Introduction of Christianity to Ceylon, (Chilaw, 1972)

Geiger, W. (ed) Culavamsa, (Colombo, 1953)

——————— Mahavamsa, (Colombo, 1960)

Gnanaprakasar, S 'Beginnings of Tamil Rule in Ceylon' Tamil Culture, Vol. 3 Nos. 3 & 4 (Sept, 1953), pp. 213 - 225.

'Sources for the study of history of Jaffna' Tamil Culture, Vol. 2, Nos 3 4 & (Sept, 1953), pp. 303 - 316.

Goonetilleke, S. ''Sinhalisation - The orgins' Lanka Guardian, Vol. 3, No. 1, (1980), pp. 22-29

Grahame Clark. J. G. D. Archaeology and society, (London, 1947)

Gunasekara, B. (ed) Rajavaliya, (Colombo, 1911)

Gunasingam, S. 'Two Tamil Inscriptions of Cola Lankeswara Deva' Trincomalee Inscriptions Series, No. 1, (peradiniya, 1978), pp. 1 - 10.

Gunawardana, R. A. L. H. 'Pre - Lude to the state - An early phase in the evolution of political Institutions in ancient Sri Lanka' The Sri Lanka Journal of the Humanities, Vol. VIII, Nos. 1 & 2, pp. 1 - 39

Gunawardhena, W. A. (ed) Kokilasandesaaya, (Colombo: 1924)

Gurumoorthy, S. Ceramic traditions in south India, (Madras, 1981)

Gururaja rao, B. K. Megalithic Culture of South India, (Mysore, 1972)

Indrapala, K. (ed) Epigraphia Tamilica, (Jaffna Archaeolagical Society, 1971)

—— ———, 'An Inscription of the tenth year of Cola Lankeswara deva from Kantalai Sri Lanka', Senarat Paranavitana Commemration Volume, (Peradeniya, 1978)

———— 'Early Tamil settlements in Ceylon' Journal of the Royal Asistic Society of Ceylon Branch, Vol. XIII (1969), pp. 43 - 63.

Lewis, J. P., A Manual of the vanni districts, (Colombo, 1895)

Liyanagamage, A., The decline of Polonnaruwa and the rise of Dampadeniya, (Colombo, 1968)

Mahadevan, I. Corpus of the Tamil Brahmi Inscriptions, (Madras, 1966)

———— 'Some rare coins of Jaffna' Damilica, Vol. 1, (1970), pp. 111 - 120.

Mahalingam, T. V. Early South Indian palaeography, (Madras, 1967)

Nagaswamy, R. Tamil coins, (Madras 1981)

Navaratnam, C. S. Vanni and the Vanniyars, (Jaffna, 1960)

Nilakanta Sastri, K. A. The Ceylon expedition of Jatavarman virapandya' 'Proceedings and transaction of the eight all Indian oriental conference (Bangalore, 1937)

———— 'Vijayabahu I The Liberator of Lanka' Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society Vol. IV, (1955 - 56), pp. 45 – 71.

———— The Colas, (Madras, 1984)

Paranavitana, S. 'On the Panakadu Inscription' Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society, (1949), pp. 28 - 32.

———— 'The Arya Kingdom in North Ceylon' Journal of the Ceylon Branch of the Royal Asiatic society, Vol. VII, pt 2, (1961) pp. 174 - 224.

———— Brahmi Inscriptions of Ceylon, (Colombo, 1970)

Parker, H., Ancient Ceylon, (London 1909)

Pathmanathan, S., The Kingdom of Jaffna, (Colombo, 1978)

———— 'Chola rule on Sri Lanka' Proceeding of the Fourth International conference seminar of Tamil studies, (Jaffna, 1980)' pp. 19 - 36.

Pemananda Bhikhu. (ed) Rajavaliya, (Colombo, 1959)

Pieris, P. E, 'Nagadipa and Buddhist remains in Jaffna, Part I' Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society. Vol. XXVIII, No. 72, (1917) pp. 40 – 67.

Queyroz Fernao de., The Temporal and spritual conquest of Ceylon (tra) Perera, S. G. (Colombo, 1930)

Ragupathy, P., Early settlements in Jaffna. An Archaeological survey, (Madras. 1987)
Rasanayagam, C. Ancient Jaffna. (Madras, 1926)
Ray, H. C. (ed) University of Ceylon History of Ceylon, Vol, I, pt II (Colombo, 1960)
Senaratne, S. P. F Pre-historic Archaeology of Ceylon, (Colombo, 1969)
Shanmuganathan, S 'Excavations of thirukkethiswaram' Vaithianathan. K (ed) Thirukkethiswaram Papers, (Colombo, 1960), pp. 83 - 84.
Silva, K. M. de. A History of Sri Lanka, (Colombo, 1981)
Sitrampalam, S. K. The Megalithic culture of Sri Lanka. Unpublished thesis Deccan College. (University of Poona, 1980)
——————— 'Cola Temples of Sri Lanka' Tamil civilization, Vol. 3, No. 2 & 3, pp. 123 - 132.
Sivasamy. V. Some aspects of early south Asian Epigraphy, (Thirunelvely, 1985)
South Indian Inscriptions. (SII)
Subramanian, T. N. South Indian temple Inscriptions, Vols I - III (Madras, 1953, 1954, 1955, 1957)
Suravira, A. V. (ed) Pujavaliya, (Colombo, 1961)
Temple Register of Kachcheri Jaffna, (Jaffna, 1892)
Veluppillai, A. Ceylon Tamil Inscriptons, pt. II, (Peradeniya, 1972)
Wheeler, R. E. M. 'Arikamedu An Indo-Roman Trading station on the East Cost of Indian" Ancient India, No. 2, (1946), pp. 17 - 124
Zeunner, F. E. & Alchin, R. R. "The Microlithic sites of Tinnavely District" Ancient India, No. 12. pp. 4 - 20

# விளக்கப்படங்களின் அட்டவணை I


| பட இலக்கம் | படவிளக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | அமைவிடம் | 11 |
| 2. | வடமேற்கிலங்கையின் முக்கிய தொல்லியல் மையங்கள் | 13 |
| 3. | பெருங்கற்காலத் தாழிகளின் உடைந்த பாகங்கள் | 17 |
| 4. | சுடுமண் உருவங்கள் | 17 |
| 5. | சுடுமண் சிலை | 18 |
| 6. | ஈழஊரில் கிணறு வெட்டும்போது நான்கு அடி ஆழத்தில் வெளிவந்த பெருங்கற்காலத் தடயங்கள் | 18 |
| 7. | கறுப்பு சிவப்புநிற மட்பாண்ட ஓடுகள் | 19 |
| 8. | வெட்டுக்காட்டிற் கிடைத்த சிவப்புநிற மண்பானை | 19 |
| 9. | பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய இரும்பாயுதங்கள் | 19 |
| 10. | பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய மீன்பிடி ஊசிகள், ஆணிவகைகள் | 20 |
| 11. | பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய மணி வகைகள் | 20 |
| 12. | பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய கைவளையல்கள் | 21 |
| 13. | பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய காற்சலங்கைகள், கல் மோதிரங்கள் | 21 |
| 14. | பல வடிவங்களில் அமைந்த மட்பாண்ட விளிம்புகள் | 22 |
| 15. | பல வடிவங்களிலுள்ள மட்பாண்டச் சித்திரங்கள் | 23 |
| 16. | பள்ளிக்குடாவில் கிடைத்த சட்டி, வட்டில்கள் | 24 |
| 17. | மண்ணின் மேற்படையிற் காணப்படும் தொல்லியற் சின்னங்கள் | 25 |
| 18. | மண்விளக்குகள், கெண்டிகள் | 24 |
| 19. | கௌதாரி முனையிற் கிடைத்த மண்பானை | 25 |
| 20. | வெட்டுக்காட்டிற் கிடைத்த கெண்டியுடன் கூடிய பானை | 25 |
| 21. | பரமன்கிராயிற் கிடைத்த வர்ணம் தீட்டப்பட்ட மட்பாண்ட ஓடுகள் | 26 |
| 22. | மண்ணித்தலையிற் கிடைத்த மட்பாண்டங்களில் காணப்படும் அச்சினால் பதிக்கப்பட்ட சித்திரங்கள் | 27 |
| 23. | ஈழஊரிற் காணப்படும் புராதன மண்வளையற் கிணறு | 28 |
| 24. | மண்ணித்தலையிற் கிடைத்த இரும்பினாலான வேல்ச் சின்னம் | 28 |
| 25. | மண்ணினாற் செய்யப்பட்ட அகல் விளக்குகள் | 28 |
| 26. | பூநகரிப் பிராந்திய பெருங்கற்கால மண்பாண்டங்களிற் காணப்படும் குறியீடுகள் | 29 |
| 26.1 | சலவைத் தொழிலாளர் பயன்படுத்தும் குறியீடுகள் | 30 |
| 26.2 | மாடுகளுக்கு இடப்படும் பிரதேச வேறுபாட்டைக் காட்டும் குறியீடுகள் | 31 |
| 26.3 | மாடுகளுக்கு இடப்படும் சமூக வேறுபாட்டைக் காட்டும் குறியீடுகள் | 31 |

27. மட்பாண்ட உள்விளிம்பில் காணப்படும் 2000ம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமி எழுத்துக்கள் 33
28. மட்பாண்ட வெளிவிளிம்பில் காணப்படும் சித்திரங்கள் 34
29. தற்காலம், மட்குடம் ஒன்றில் காணப்படும் சித்திரங்கள் 35
30. உடைந்த மட்பண்ட ஓடுகளில் காணப்படும் பிராமி எழுத்துக்கள் 36
31. மட்பாண்டத்தில் காணப்படும் ''ழ'' என்ற தமிழ்ப் பிராமி எழுத்து 37
32. லோமா என்ற வாசகம் கொண்ட மட்பாண்ட பிராமிச் சாசனம் 38
33. ஈலா என்ற வாசகம் கொண்ட மட்பாண்ட பிராமிச் சாசனம் 39
34. வேள் என்ற வாசகம் கொண்ட மட்பாண்ட பிராமிச் சாசனம் 40
35. புராணாஸ் நாணயங்கள் 47
36. இலக்குமி நாணயங்கள் 48
37. உரோம மட்கலன்கள் 49
38. பள்ளிக்குடாவில் கிடைத்த உரோம மதுச்சாடி 50
39. உரோமர் கால நாணயங்கள் 51
40. அரேபிய மட்பாண்டங்கள் 52
41. சீன மட்பாண்டங்கள் 52
42. பல்லவர்கால நாணயம் 54
43. வெட்டுக் காட்டிற் கிடைத்த சிலையின் உடைந்த பாகங்கள் 55
44. அரசபுரத்தில் கிடைத்த விநாயகர் சிலை 56
45. பாண்டியர்கால நாணயங்கள் 56
46. பூநகரியிற் கிடைத்த முதலாம் இராஜராஜ சோழன் நாணயங்கள் (பட இலக்கம் தவறுதலாக 47 என அடையாளமிடப்பட்டுள்ளது)
47. பூநகரிப் புலையர்குடாக் காட்டுப் பகுதியிலுள்ள புராதன கட்டிட அழிபாடுகள் 68
48. பூநகரிப் பிராந்தியத்தில் உள்ள சோழர்காலத்துடன் தொடர்புடைய இடப் பெயர்கள் 70
49. சிவாலயத்தின் முன்பக்கத் தோற்றம் 84
50. இடிந்த நிலையிலுள்ள சிவாலயத்தின் கட்டிட எச்சங்கள் 84
51. சிவாலயத்தின் தெற்குப் பக்கமாகவுள்ள கர்ப்பக்கிருகமும், அந்தராளமும் 85
52. சிவாலயத்தின் பின்பக்கத்தோற்றம் 86
53. சிவாலயத்தின் தூண் அமைப்பு 86
54. சிவாலயத்தின் தேவகோஷ்ட அமைப்பு 87
55. கர்ப்பக்கிருகத்திலிருந்து வெளிவரும் கோமுகி 87
56. சிவாலயத்தின் பின்பக்க விமானம் 88
57. சிவாலயத்தின் கிழக்குப்பகுதியிலுள்ள விமானம் 89
58. சுடுமண்ணினால் செய்யப்பட்ட விமானம் தாங்கிப்பொம்மை 95
59. ஆலயச்சுற்றாடலில் கிடைத்த தொல்லியற் சின்னங்கள் 95
60. பல்லவராயன் காட்டுப்பகுதியில் கிடைத்த விஷ்ணு சிலை 96
61. கோயிற்காட்டில் கிடைத்த ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கம் 97
62. சோழர்கால பொலநறுவை 2ஆம் சிவதேவாலயத்தில் உள்ள ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கம் 98

63. உருத்திரபுரம் சிவதேவாலயத்தில் உள்ள ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கம் 99
64. உருத்திரபுரம் சிவதேவாலயத்திற்கு தெற்காகவுள்ள கட்டிட எச்சங்கள் 99
65. உருத்திரபுரம் சிவதேவாலயத்திற்கு கிழக்காகவுள்ள தொல்லியல் மையமும், அதிலிருந்து கிடைத்த தொல்பொருட் சின்னங்களும் 100
66. மட்டுவில் நாட்டிற் கிடைத்த விக்கிரகம் 101
67. தென்னியன் குளத்தில் கிடைத்த விக்கிரகம் 102
68. பூநகரி நாகபடுவானிற் கிடைத்த விக்கிரகம் 104
70. செழியாவில் மூங்குவில் காட்டுப்பகுதி எல்லையில் வடக்குப் பக்கமாக உள்ள கட்டிட அழிபாட்டுத்தொகுதி 112
71. மேற்படி (படம்- 70) கட்டிட அழிபாட்டிலிருந்து எடுக்கப்பட்ட அலங் காரத் தன்மைகொண்ட தூண் 112
72. மேற்படி (படம்- 70) கட்டிடத் தொகுதியிலுள்ள கருங்கற்பீடம்
73. கருங்கற் பீடத்திலுள்ள புடைப்புச்சிற்பங்கள் 112
74. அநுராதபுரத்திலுள்ள பல்லவர் காலக் (கி. பி. 10) காளி கோயிலின் அழிபாட்டுக் கட்டிடத்தொகுதி 113
75. மூங்குவில் செலியாவில் காட்டு எல்லைப்பகுதியில் கிழக்குப்பக்கமாகவுள்ள கட்டிட அழிபாட்டுத்தொகுதி 114
76. மேற்படி (படம்-75) கட்டிடத் தொகுதிக்கு தென்மேற்காகவுள்ள கட்டிடத் தொகுதியின் வட்ட வடிவிலான தூண் 114
77. மேற்படி (படம். 76) கட்டிடத் தொகுதிக்கு மேற்காகவுள்ள இன்னொரு கட்டிட அழிபாட்டுத் தொகுதி 115
78. நீராவியிலுள்ள கட்டிட அழிபாடுகள் 115
79. மேற்படி (படம் 78) கட்டிடத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்ட புராதன ஓடுகள் 115
80. நீராவி கட்டிட அழிபாடுகளிடையேயிருந்து எடுக்கப்பட்ட விநாயகர் சிலை 116
81. நீராவி கட்டிட அழிபாடுகளிடையிருந்து எடுக்கப்பட்ட விமானந்தாங்கிப் பொம்மை 116
82. பூநகரியிற் கிடைத்த பாண்டிய மன்னர் கால நாணயங்கள் 122
83. பூநகரியிற் கிடைத்த சுந்தரபாண்டியன் நாணயங்கள் 123
84. பூநகரியிற் கிடைத்த சுந்தரபாண்டியன் நாணயங்கள் 124
92. பூநகரியிற் கிடைத்த சேது நாணயம் 136
96. கொங்கு நாட்டிற்கும் வட இலங்கைக்கும் பொதுவான இடப்பெயர்கள் 149
97. பூநகரியிற் கிடைத்த முதலாம் விஜயபாகுவின் நாணயங்கள் 165
98. பூநகரியிற் கிடைத்த முதலாம் பராக்கிரமபாகு நாணயங்கள் 167
99. பூநகரியிற் கிடைத்த நிஸங்க மல்லன் நாணயங்கள் 167
100. பூநகரியிற் கிடைத்த லீலாவதி நாணயங்கள் 167
101. பூநகரியிற் கிடைத்த தர்ம அசோகன் நாணயங்கள் 176
102. பூநகரியிற் கிடைத்த சாகஸமல்லன் நாணயங்கள் 167
103. (அ) பூநகரியிற் கிடைத்த புவனேகபாகு என்ற பெயர் கொண்ட நாணயங்கள் 170
103. (ஆ) பூநகரியிற் கிடைத்த புவனேகபாகு என்ற பெயர் கொண்ட நாணயங்கள் 170
104. பூநகரியிற் கிடைத்த பராக்கிரமபாகு என்ற பெயர் கொண்ட நாணயங்கள் 170
105. பூநகரி பாலாவியிலுள்ள விஸ்ணு ஆலயம் 171
106. பாலாவியிலுள்ள புராதன விஸ்ணு ஆலயத்தின் கட்டிட அழிபாடுகள் 172
107. மட்டுவில் நாட்டிற் கிடைத்த பொன் நாணயம் 172
108. பூநகரி நல்லூரில் உள்ள ஆலயமொன்றில் காணப்படும் அரேபியக் கலைமரபுக்குரிய விளக்கு 173
109. பூநகரியிற் கிடைத்த சேது நாணயங்கள் (வகை-1) 173
110. பூநகரியிற் கிடைத்த சேது நாணயங்கள் (வகை-2) 174

111. பூநகரியிற் கிடைத்த சேது நாணயங்கள் (வகை-3) 174
112. சாவகச்சேரியில் உள்ள தற்போதைய வாரிவனநாதர் ஆலயம் 175
113. சாவகச்சேரியிற் கிடைத்த மனோன்மணி அம்மன் விக்கிரகம் 176
114. சாவகச்சேரியிற் கிடைத்த அம்மன் விக்கிரகம் 177
115. சாவகச்சேரியிற் கிடைத்த சூரியன் விக்கிரகம் 178
115. சாவகச்சேரியிற் கிடைத்த சிவலிங்கம் 178
117. கோரித்தீவிலுள்ள வெளிச்ச வீட்டின் கட்டிடப்பாகம் 186
118. பூநகரியிற் கிடைத்த போத்துக்கேயர் கால நாணயங்கள் 187
119. வெட்டுக்காட்டிற் கிடைத்த போத்துக்கல் நாட்டிற்குரிய மதுச்சாடி 187
120. வெட்டுக்காட்டிற் கிடைத்த போத்துக்கேயர் காலச் சுங்கான் 187
121. பூநகரியிலுள்ள ஒல்லாந்தர் காலக் கோட்டை 188
122. கல்முனைக் காட்டுப்பகுதியில் இடிந்த நிலையிலுள்ள கிறிஸ்தவ ஆலயம் 189
123. கைவிடப்பட்ட நிலையில் புராதன ஆலய அத்திவாரத்தின்மேல் கட்டப் பட்ட இந்து ஆலயம் 189
124. பூநகரியிற் கிடைத்த ஒல்லாந்தர் கால நாணயங்கள் 189
125. (அ) பூநகரியிற் கிடைத்த பிரித்தானியர் கால நாணயங்கள் 190
125. (ஆ) பூநகரியிற் கிடைத்த பிரித்தானியர் கால நாணயங்கள் 190


## விளக்கப்படங்களின் அட்டவணை II

### (பிறரது நூல்களில் இருந்து எடுக்கப்பட்டவை)


69. தமிழ்நாடு நாகபட்டினத்திற் கிடைத்த விக்கிரகங்கள் 105
(Ramachandran, T N. 1965)
85. கொட்டகமக் கல்வெட்டு 127
(Pathmanathan, S. 1978)
86. கலிங்க மன்னர்களது செப்புப்பட்டய முத்திரை 131
(EI, Vol. XXVI)
87. பதவியாவில் கிடைத்த முத்திரை 132
(இந்திரபாலா கா. இளங்கதிர் 21 வது ஆண்டுமலர்)
88. சோழர் கால நாணயம் 132
(Elliot Sir walter, 1975)
89. சோழர் கால கரந்தைச் செப்புப்பட்டய முத்திரை 132
(Nilakanta sastri, K A.1984)
90. மாதோட்டத்திற் கிடைத்த நாணயம் 134
(Mahadevan, I 1970)
91. மாதோட்டத்திற் கிடைத்த நாணயம் 135
(Mahadevan, I 1970)
93. சோழர் கால கரந்தைச் செப்பேட்டு முத்திரை 137
(Nilakanta Sastri, K. 1984)
94. மாதோட்டத்திற் கிடைத்த நாணயம் 137
(Mahadevan, I. 1970)
95. சோழ நாணயம் 139
(Desikachari, T. 1984)

# அகர வரிசை

## அ


அக்கம் 64
அகல்விளக்கு 28
அகழ்வாய்வு 17
அங்காடி 126
அங்குசம் 132
அசோகபிராமி 36, 31, 41
அசோகன் 36
அடிமேடை 83, 93
அதிராஜேந்திரன் 73, 181
அநுராதபுரம் 1, 4, 13, 16, 26, 37, 41, 42, 48, 49, 53, 54, 57, 61, 63, 64, 72, 74, 90, 98, 113, 116, 146, 161, 162
அபயஹஸ்தம் 104, 176, 177
அபயாஸ்ரய வளநாடு 69
அம்பலப்பெருமாள் 73, 74, 76, 124
அம்பலம் 76
அம்பர் நாடு 73
அமராவதிக் கலைமரபு 109
அய 41
அரசபுரம் 4, 55, 56
அரசரட்ணம் 161, 184, 185
அரிக்கமேடு 19, 37, 49, 50, 51 52
அரிட்டைன் 50
அரிதன் 40
அருண்மொழித்தேவ வளநாடு 62, 74
அரேபிய மட்கலன்கள் 52
அரேபியர் 59, 62, 172
அல்ஜின் 14
அவனிபசேகரன் கோளகை 122


## ஆ


ஆங்கிலேயர் 89, 150, 184, 189, 190
ஆதி ஒஸ்ரலோயிட் 14
ஆதிச்சநல்லூர் 16, 17, 23, 28, 33
ஆதித்தேசுவரர் சிவாலயம் 92
ஆதிப்பிராமிக் கல்வெட்டு 48
ஆந்திரா 24, 49
ஆம்போராச் சாடி 50, 51
ஆய் 41
ஆரியச் சக்கரவர்த்தி 125, 126, 136, 139, 140, 150
ஆரியர் 1, 2, 15
ஆலங்கானம் 72
ஆலங்குடி 72
ஆலங்கேணி 72, 76
ஆலடி 22
ஆலடிச்சோலை 55, 56
ஆலயப் பதிவேடு 94
ஆவுடையார் 74, 97, 98, 99, 178
ஆறாம் பராக்கிரமபாகு 170
ஆனைக்கோட்டை 2, 16, 28, 31, 33, 36, 42, 126


## இ


இடங்கை 61, 161
இடைக்கற்காலப் பண்பாடு 21
இத்தாலி 50
இந்தியா 21, 36 47, 50, 62
இந்திரபாலா 6, 91, 111, 126
இந்து ஆலயம் 26, 97
இந்துசமுத்திரம் 11
இந்து விக்கிரகங்கள் 4, 74, 107, 111 175
இரகுபதி 4, 147
இரண்டாம் இராஜராஜசோழன் 61, 65, 69, 72, 76, 97, 130
இரண்டாம் இராஜேந்திரன் 159
இரண்டாம் பராக்கிரமபாகு 118
இரண்டாம் பராந்தகசோழன் 146, 147, 148, 149
இரண்டாம் பாண்டியப் பேரரசு 4

இரண்டாம் மகிந்தன் 57
இரணைதீவு 67, 186
இரணைமடு 26
இரத்தினாகரம் 177
இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் 76
இராசகேசரி 140
இராசசிம்மன் 60
இராசநாயகம் முதலியார் 3, 4, 55, 75, 141, 147, 180
இராச இராசேச்வரம் 62
இராசேந்திர சோழன் 63, 65
இரும்பாணிகள் 18
இரும்புக்காலம் 15
இலக்குமி நாணயங்கள் 48
இலங்காபுரி தண்டநாயகன் 65
இலங்கை 1, 2, 3, 4, 5, 6, 11, 12, 13, 14, 15, 16, 21, 34, 36, 37, 38, 39, 41, 42, 47, 49, 50, 51, 52, 60, 61, 62, 64, 65, 66, 69, 73, 74, 83, 90, 93, 94, 98, 106, 111, 115, 117, 118, 119, 120, 121, 129, 134, 139, 143, 144, 149, 150, 157, 158, 159, 160, 161, 163, 164, 168, 182

## ஈ

ஈமச்சின்னங்கள் 15, 24, 34
ஈழக்காசு 64
ஈழத்தமிழர் 5, 39
ஈழத்துப்பூதந்தேவனார் 40
ஈழம் 39, 40, 49, 64, 74, 75, 120, 121, 128, 148
ஈழமண்டலம் 74
ஈழவர்வெளி 97
ஈழவன்குடா 40, 61, 74, 121
ஈழூர் (ஈழஊர்) 16, 17, 18, 21, 26, 30, 40, 56, 64, 67, 74, 75, 83, 97, 121, 122, 165, 172

## உ

உக்கிரசிங்கன் 124, 147
உடையார் 141
உத்தமசோழன் 64
உத்தரப்பிரதேசம் 57
உத்தரதேசம் 117, 163, 164
உதயணன் 39, 121
உதுர்பாண்டிரதுன் 141
உப்சலா பல்கலைக்கழகம் 106
உப்புல்வன் 3
உபபீடம் 88, 92
உருகுணை 57, 60, 157, 158, 159, 163
உருத்திரபுரச்சிவன்கோயில் 26, 98, 99
உரோமர் 4, 47, 49, 52
உரோமர் கால நாணயம் 51
உரோமமட்கலன்கள் 49
உலோகச் சிலைகள் 26
உறையூர் 49, 50, 141

## ஊ

ஊசிகள் 20
ஊர்காவற்துறை 3, 62, 69, 119, 146, 166
ஊர்காவற்துறை கடற்கோட்டை 63
ஊராத்துறை 66
ஊறாத்தொட்ட 69

## எ

எல்லாளன் 4, 41, 111, 157
எலும்புகள் 33, 34
எருக்கலம் பிட்டி 32
எறும்பூர் 92

## ஏ

ஏழையூர் 40

## ஐ

ஐந்நூற்றுவர் 144
ஐந்தாம் கஸபன் 60
ஐந்தாம் மகிந்தன் 60
ஐம்பொழில் 130
ஐயனார் சிற்பம் 96, 113
ஐராவதம் மகாதேவன் 35, 41, 133
ஐரோப்பியர் 5, 6, 91, 184

## ஒ

ஒட்டிசுட்டான் 72
ஒட்டியாணம் 103
ஒலலாந்தர் 72, 77, 95, 117, 169, 185, 187, 190
ஒல்லாந்தர் கோட்டை 62, 73
ஒலிவேரா 184
ஒளிவட்டம் 96, 178

## ஓ

ஓகஸ்தஸ்சீசர் 51
ஓவியக்கலை 83
ஓவியங்கள் 12, 33

## க

கங்காணி 141
கங்கை ஆரியர் 6, 120, 139
கங்கை நாடார் 6, 129, 139
கச்சாய் 175, 180
கச்சாய்த்துறைமுகம் 67, 180
கச்சாணம் 64, 181
கண்டகசேத்தியம் 55
கண்டி இராச்சியம் 170
கண்ணாடி 148
கணபதிப்பிள்ளை 4
கணேசலிங்கம் 175
கணையாளி 95
கதிரமலை 125, 128, 147, 149, 150
கதிரவெளி 16
கந்தரோடை 2, 5, 6, 16, 19, 28, 36, 49, 51, 52, 54, 126, 147, 149, 172
கந்தளாய் 69, 75, 77
கம்பளை 169, 170
கமலதுண்டலம் 96
கயிலவன்னி 184, 185
காமால் வீதி 91
கர்ப்பக்கிரகம் 84, 85, 88, 91, 92, 93
கரந்தைச் செப்பேடு 62, 131, 134, 136
கரிக்கட்டுமூலை 169, 170
கருங்காலக்குடி 40
கரூர் 49, 50, 51
கருணாரத்தினா 37, 38
கல்முனை 3, 12, 14, 16, 21, 22, 52, 56, 165, 171, 186, 188, 190
கல்லாயுதங்கள் 12, 14
கல்லார் 143, 148
கல்லாரயன் 148
கல்வளையல்கள் 20
கலாசாரமுக்கோணத்திட்டம் 12
கலிங்கநாடு 129, 134, 139, 142
கலிங்க மன்னன் 118
கலிங்க மாகன் 74, 77, 118, 119, 139, 150, 157, 165
கவிவீரராகவன் 128
களபூமி 2, 126
களுத்துறை 71
கற்காலம் 3
கற்கிடைகள் 15
கறுக்காய்த்தீவு 55, 186
கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்கள் 15, 16, 18
கனககூரிய சிங்கையாரியன் 170
கஜபாகு 83, 163

## கா

காக்கையன் குளம் 119
காகாலா 77
காங்கேசன்துறை 144
காங்கேயம் 148
காங்கேய நல்லூர் 148
காங்கேயராயன் 148
காங்கேயன் 148
காங்கேயனேரி 148
காஞ்சி 56, 57
காஞ்சிக்கைலைநாதர் 113
காஞ்சிபுரம் 49, 50, 51
காஞ்சிப்புலவு 56
காஞ்சி மீனாட்சிவளவு 56
காதணி 94, 95
காரமடை 143
காரைநகர் 16, 28, 62
காவேரிப்பூம்பட்டினம் 49, 75
காற்சலங்கை 20, 177

## கி

கித்துள்கொட 13
கிராசந்தேசய 170
கிராஞ்சி 26
கிராபிடிக்குறியீடுகள் 35
கிரேக்கம் 5, 47
கிருஸ்ணமூர்த்தி 4, 54
கிழக்கிழங்கை 62, 76
கிள்ளைவிடு தூது 135
கிளாலி 175, 180

## கீ

கீழாடை 103
கீழைக்கலிங்க வம்சம் 129, 134
கீழைப்பழுவூர் 144

## கு

குச்சவெளி 53
குஞ்சநாக 48
குஞ்சரமல்ல 71
குடமுருட்டியாறு 71, 72, 73
குடாநாடு 1
குடைப்பிடி 123
குடுமியாமலை 77, 139, 143
குதிரைகட்டினதீவு 16
குதிரைமலை 143, 150
குமாரகணம் 54, 131
குயில்விடுதூதுப் பிரபந்தம் 171
குருந்தலூர்மலை 119, 120, 150
குருந்தி 77, 119
குருந்தமலை 144
குருந்தன்குளம் 97, 119
குருநாகல் 71
குருமூர்த்தி 24
குலச்சின்னங்கள் 30
குல. சபாநாதன் 28
குலசேகரபாண்டியன் 65
குவாட்ஸ்கல்லாயுதம் 16
குவேனி 125
குறுணிக்கற்காலம் 13, 16
குறுநிலமன்னர் 41, 42
குறுவிற்றாவ 13, 14

## கூ

கூபகநாடு 148

## கெ

கெற்பலி 175, 180

## கே

கேகாலை 16
கேய்றோஸ் 125, 126
கேரளப்படை 74, 118
கேரளம் 60, 118

## கை

கைகர் 118
கைவளையல்கள் 17, 18, 20, 22, 102

## கொ

கொங்கணேஸ்வரர் 143
கொங்காவேடை 148
கொங்குநாடு 143, 144, 145, 148
கொங்குமண்டலம் 148
கொங்குராசன்குளம் 150
கொங்குவேளீர் 142
கொட்டகம 126, 164 169
கொட்டியாரம் 69, 169
கொட்றிங்ரன் 4, 54
கொழும்பு 20, 189 190
கொழும்புத்துறை 126, 189, 190
கொற்கை 23, 50

## கோ


கோகர்ணம் 144, 150
கோகிலசந்தேசய 3, 171, 175
கோட்டூர் 145,
கோட்டை 167, 168, 169, 170, 171
186, 188
கோணா 119
கோணாமலை 73, 119, 120, 150
கோணாவில் 76, 119
கோணேசிராயன் 138
கோப்பாய் 34
கோப்பரகேசரிவர்மன் 146
கோபாலகிருஷ்ணன் 95
கோமுகி 84, 85, 93
கோயிற்காடு 98, 99
கோயிற்குடியிருப்பு 181
கோரித்தீவு 186
கோவேந்தன் 42
கோஷ்டங்கள் 93


## ச


சக்கரம் 96
சக்க சேனாதிபதி 60
சங்கஇலக்கியம் 16, 26, 39, 42
சங்ககாலம் 33, 38, 41, 48, 49, 50, 107
சங்ககாலப்புலவர்கள் 40
சங்கு 18, 96, 172
சங்கிலி மன்னன் 184
சட்டிகள் 20
சந்தனக்கல் 179
சந்திரபானு 77, 118, 119, 120, 121
சம்புவெளி 96
சமணசமயம் 37
சமயச்சின்னங்கள் 30
சமூகவியல் 1


## சா


சாகஸமல்லன் 167
சாசனங்கள் 5
சாமத்தியமேடு 74
சாமரை 131, 132
சாலை 88, 93
சாவகச்சேரி 66, 67, 175, 176, 177, 179
181, 182
சாவககோட்டை 175
சாவக கிரி 175
சாவகன் 120, 121, 124, 139, 150
சாளுக்கியர் 136


## சி


சிங்கநல்லூர்.
சிங்கநாடு 125, 150
சிங்கபுரம் 142, 150
சிங்காவத்தை 148
சிங்கை 6, 125, 126 129, 138 139 142,
148, 150, 157
சிங்கைநகர் 125, 126, 129, 138, 139 142,
150, 169
சிங்கை நயினார்
சிங்கையாரியன் 121, 139
சிங்கைப்பல்லவராயன் 146
சிந்துவெளி 26, 30, 35
சிம்மாசனம் 132
சில்வா 53
சிலுவையாறு 168
சிவசாமி 94
சிவதேவாலயம் 94
சிவலிங்கம் 94, 99, 101
சிற்றம்பலம் 4, 15, 125
சிறுதனம் 61
சின்னத்துரை 34


## சீ


சீர்வல்லபதனராஜன் 158
சீனா 5, 47, 52


## சு


சுங்கநயினார் 126
சுடுமண் உருவங்கள் 17
சுடுமண் சிற்பங்கள் 26
சுந்தரசோழன் 60, 90

சுந்தர பாண்டியன் 123, 141
சுவஸ்திகா 32, 33
சுவாமி ஞானப்பிரகாசர் 57
சுவீடன் 106

## சூ

சூலம் 26
சூளவம்சம் 3, 53, 60, 66, 73, 74, 77, 119, 130, 137, 146 157, 158, 159 160, 163, 164, 166
சூறதிர்த்த 19

## செ

செங்கடநகரி 128
செங்கோல் 173
செகராசசேகரன் 125, 135, 137, 140
செட்டிக்குறிச்சி 85, 88, 90 91, 93, 96, 103 113, 116, 117
செட்டி வணிகர் 72
செண்பகப் பெருமாள் 126, 170, 171
செண்பகப் பெருமாள் வெளி 171
செம்புக்காலம் 23
செழியாவில் 73, 111, 112-116, 117

## சே

சேக்கிளான் சங்கன் 72
சேக்கினான் சென்னி 72
சேகரன் 138
சேட்கற்கள் 14
சேது 136 137, 173
சேதுகாவலன் 140
சேதுநாணயம் 172
சேதுபதி 140
சேரமன்னர் 60

## சோ

சோழ இலங்கேஸ்வரன் 138
சோழக்கல்வெட்டுகள் 64, 69
சோழகேரள மண்டலம் 143, 161, 164
சோழமண்டலம் 69, 73, 74, 99, 124
சோழமண்டலக்குளம் 74,
சோழர்கால இலக்கியம் 71
சோழியகுளம் 73, 74, 124
சோழிய மாளிகை 73

## ட

டகி 85

## த

தக்கணம் 145
தஞ்சாவூர் 71, 97, 141, 180
தஞ்சை 57
தட்டுகள் 20
தம்பதேனியா 117, 118, 119, 167, 168
தம்பபண்ணி 3
தலையாரி 141
தமிழ்சாசனம் 38
தமிழ்ப்பிராமி 36
தமிழ்ப் பௌத்தம் 106
தமிழ் மன்னர்கள் 42, 175

## தா

தாலி 176
தாவணி 102, 108
தாழிகள் 18

## தி

திசமாறகம 16
திசையாயிரத்து ஐநூற்றுவர் 59
திபுள்வேவ, 98
தியாகஏரி 72
தியாகுளம் 71, 72,
தியாகசமுத்திரம் 72
தியாகம் 16, 71, 72
திராவிடமொழி 37. 42
திராவிடப்பெருங்கற்காலப்பண்பாடு 14, 36, 38
திராவிடி 36

திரிசூலக்குறியீடுகள் 28
திரியாய் 53
திரி ஸிங்கள கயிடம் ஸஹவித்தி 175
திருக்கேதீஸ்வரம் 53, 54, 56, 76, 181
திருக்கோணேஸ்வரம் 53 76, 181.
திருநெல்வேலி 1, 13, 14.
திருமஞ்சனக்கிணறு 183
திருமுக்கூடல் 92
திருவாலங்காட்டுச் சாசனம் 63, 64, 66
திருவாலந்துறை 92
திருவிடை மருதூர்க் கோயில் 71

## தீ

தீபகற்பம் 168
தீபவங்ஸ 1
தீவு 168

## து

துட்டகாமினி 41, 48, 157
துணுக்காய் 97, 113
துணைமேடை 85, 93
துரைசிங்கம் 101

## தெ

தெய்வச்சிலை 95
தெலுங்கு 2. 15
தெவிநுவர 53, 90, 91, 163
தென்கிழக்காசியா 54, 63, 164, 165 166
தென்தமிழ்நாடு 15
தென்மராட்சி 168
தென்முடிவேளீர் 41
தென்மரவாடி 168, 169
தென்னவன்குடி 121
தென்னவன் நல்லூர் 121
தென்னவன்பட்டி 121
தென்னிந்திய பெருங்கற்காலப்பண்பாடு 15
தென்னிந்தியா 1. 2, 5, 11, 12, 14, 15, 23, 24. 26, 30.34. 35. 42, 47, 48, 49, 52, 59, 60. 63, 73, 115, 117, 118 119, 142. 145, 146, 158, 164, 165, 166, 172
தென்னியன் குளம் 72, 102, 103, 111, 116, 121, 150, 165,
தென்னிலங்கை 5. 42, 157, 158. 163 164, 169

## தே

தேவகோஷ்டங்கள் 84, 85, 87, 88, 92, 94
தேவநாகிரி 64, 104, 107, 129, 135, 137
தேவேந்த தேவ 131. 134,
தேவேந்திரவர்மன் 131
தேரிக்கலாசாரம் 14

## தொ

தொல்பொருட்சின்னங்கள் 4, 5, 6, 49. 94
தொல்லியல் 1, 2, 12
தொல்லியல் அகழ்வாய்வு 14, 83
தொல்லியல் மேலாய்வு 5, 14
தொல்லியலாளர் 14
தொளசம்பட்டி 143

## ந

நடுவில்நாடு 73
நந்தகுலமன்னர் 131
நந்தாவிளக்கு 93, 95
நந்தி 6, 129, 130, 136 137, 138, 173.
நந்திமேடு 50
நயினாதீவு 63, 163
நல்லூர் 2, 6. 72. 76. 117. 126, 128, 141, 145, 147, 150, 157, 165, 166, 168, 175

## நா

நாகதீபம் 3, 63, 146, 163
நாகதேவன்துறை 3
நாகநாடு 3
நாகமுனை 3
நாகமுனைஆறு 3, 171

நாகபட்டினம் 117, 190
நாகபடுவான் 3, 99, 104, 106, 107
நாகவிக்கிரகம் 176
நாச்சிக்குடா 165
நாட்டார் வழக்கியல் 35, 190
நாடு 69, 73
நாநாட்டான் 32, 54
நாயாறு 171
நாரந்தனை 63, 91
நாலாந்தா 53, 90, 163
நானாதேசிகர் 59, 144

## நி

நிகரிலிச் சோழவள நாடு
நிலக்குழு 42
நிஸங்கமல்லன் 129, 162, 164, 167

## நீ

நீலகண்டசாஸ்திரி 66, 69, 120, 158, 160, 161, 163
நீலகிரி 26
நீராவி 73, 74, 111, 115, 116

## நெ

நெடுந்தீவு 33, 143
நெற்புலவு 101, 165

## ப

பச்சிலைப்பளை 168
பட்டாங்கட்டி 141
பட்டினப்பாலை 48, 49
பண்டுவஸ்நுவரை 40
பத்மநாதன் 126, 140, 171
பர்மா 63
பரக்கும்பாஸிரித 170
பரசேகரி 140
பரணவிதானா 1, 2, 37, 66
பரமன்கிராய் 24, 187
பராக்கிரமபாண்டியன் 65
பராந்தகன் 92
பரராசசிங்கன் 141
பரராசசேகரன் 135, 140, 141
பல்லாய்குளம் 56
பல்லவராயநெந்தில் 72
பல்லவராயளந்தம் 72, 145
பல்லவராயன்ஆறு 74, 146
பல்லவராயன்சாலை 75, 145
பல்லவராயன்பேட்டைச் சாசனம் 66, 72
பறையகாடு 67
பறையமோட்டை 67
பனங்காமம் 97

## பா

பாக்கர் 41, 98, 111
பாண்டிநாடு 37, 66, 141
பாண்டியமழவன் 121
பாண்டியன்கல்லு 73, 121
பாண்டியன்குளம் 73, 121
பாலமோட்டை 162
பாலாவி 2, 1, 36, 65, 66, 171
பாலிநகர் 97
பாலியாற்றுச் சிவலிங்கம் 98
பாலியாறு 4, 97, 98, 99, 111

## பி

பிராமணர் 90, 161, 162, 168
பிராமிஎழுத்துக்கள் 34, 35, 38
பிராமிச்சாசனம் 41
பிறைச்சந்திரன் 131, 134
பிள்ளைத்தனம் 61
பிள்ளையார் ஆலயம் 94
பிளினி 48, 49

## பீ

பீதாம்பரம் 102, 103
பீரிஸ் 1
பீற்றர்சால்க் 106, 107

## பு

புத்தர்சிலை 106
புத்தளம் 170
புத்தூர் 31
புதியகற்காலம் 23
புதுச்சேரி 51
புநெறிம் 12. 75
புராணஸ் 47
புராதனநாணயம் 34
புலச்சேரி 63, 64, 66. 67, 68, 72. 74, 77, 97, 119, 224. 245
புலையர் 6
புலையர்குடா 64, 67, 68, 74, 17 2
புவனேஸ்வரி 04, 106

## பூ

பூநகர் 75
பூநகரி 21, 22. 23. 24, 26. 28. 30, 33, 35, 36, 38. 40. 41, 47, 48, 49, 50, 51, 52, 53. 53. 54, 55, 63, 64, 65. 68. 69, 71. 72, 73. 75, 76. 77, 83, 89, 94, 97. 98, 99. 101, 102, 103, 1104, 106, 107, 111, 117, 118, 120, 121. 122, 123, 124, 125, 126. 128, 129. 144. 150, 154, 165. 166, 167, 168, 169, 170, 171, 175, 190
பூம்புகார் 75
பூர்வகலா 4

## பெ

பெரிபுல்ஸ் 49
பெரியபுளியங்குளம் 38
பெருங்கற்காலப்பண்பாடு 2, 5, 15 16, 18, 20, 21, 22, 23, 24, 26, 30, 41, 42, 47
பெருங்கற்கால மக்கள் 31, 33
பெருங்கற்காலமட்பாண்டங்கள் 31, 50
பெலிவாலி 4, 98, 111
பெர்னாண்டோ 34
பென்சில் வேனியப்பல்கலைக்கழகம் 16

## பொ

பொம்பரிப்பு 16, 18, 20. 49
பொலநறுவை 49. 60, 61, 62, 64, 65, 69, 70, 72, 73 76, 87, 90, 93, 94, 98, 103, 106, 117, 118, 123, 124, 123, 129, 142, 145, 150, 159, 160, 161, 162, 163, 165, 166 167
பொற்காசு 64
பொன்பற்றியூர் 121
பொன்னாவெளி 3, 168
பொன்னேரி 75

## போ

போத்துக்கேயர் 3, 12, 40, 72, 75, 97, 111, 117, 125, 126, 128, 168, 179, 180, 182, 178, 190
போலோரினிடாரோ 40

## பௌ

பௌத்த கலை 83
பௌத்தகாவலர் 118
பௌத்தகுகை 37
பௌத்தமதம் 37, 61
பௌத்தவிக்கிரகம் 107

## ம

மகாவம்சம் 1, 3, 4, 12, 15, 41, 42, 48, 98, 111
மட்டிகாவட்டதீர்த்த 187

மட்டிவாழ் 63, 64, 66. 72, 73, 145
மட்டுவில் 66, 67, 73
மட்டுவில்நாடு 64, 66, 69, 72, 73, 74, 101
103, 122. 165, 166, 272, 187,
188, 190
மட்பாண்ட ஓவியம் 5
மட்பாண்டச் சாசனம் 38
மண்ணித்தலை 14, 16, 18, 21. 24, 26
30. 34. 35, 37, 38, 39, 48,
50, 64, 66, 71, 73, 83, 123,
165, 172, 190
மண்ணியாறு 71, 74, 124,
மண் இவு 69
மணல் காடு 69 96
மணலூர் 68
மணவூர் 68
மருகல்நாடு 73
மன்னார் 13, 26, 55. 69. 168,
மஹேஸ 133

## மா

மாதோட்டம் (மாந்தை) 3, 12, 14, 16, 33,
47. 47, 49, 52, 57. 66, 69
68, 72, 120, 134, 135, 142,
169
மாருதப்புரவல்லி 124, 147.
மாறவர்மன் சுந்தரபாண்டியன் 124
மானா 57
மானிடவியல் 1

## மி

மிகிந்தலை 37
மினிப்பே 065

## மு

முதலாம் ஆதித்தன் 59, 92
முதலாம் இராஜராஜசோழன் 61, 64, 90, 93,
130. 137 138 149
149, 160
முதலாம் குலேத்துங்கன் 60, 160
முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் 123
முதலாம்சேனன் 56, 57
முதலாம் பராக்கிரமபாகு 61, 63, 66, 101,
141, 144, 161,
163, 164,
முதலாம் பராந்தகன் 90. 92, 144
முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் 122,
123 140
முதலாம் ராஜேந்திரன் 90, 93
முதலாம்விஜயபாகு 61, 157, 162. 165, 166
முதலி 141
முதுகுடிவேளிர் 41
முதுமக்கள்தாழி 15
முருங்கன் 32
முழங்காவில் 111

## மூ

மூங்குவில் 111, 112, 115, 117
மூன்றாம்இராஜராஜசோழன் 141
மூன்றாம் குலோத்துங்கன் 60, 61, 65, 142

## மே

மேகலை 102, 103
மேல்பத்து 168, 169
மேற்காசியா 52
மேற்குநாடு 49

## மோ

மோட்டிமர் வீலர் 50

## ய

யம்புககோள 3, 47
யஸ்தானி 35

## யா


யாப்பகூவா 69
யாப்பாபடுன 126
யாழ்ப்பாண இராச்சியம் 6, 124, 125, 168, 170
யாழ்ப்பாணக் கோட்டை 63, 71, 145
யாழ்ப்பாணத் தொல்லியற்கழகம் 16
யாழ்ப்பாணம் 2, 3, 4, 5, 6. 31, 32, 36, 41, 55 57. 62, 64, 66, 69. 70, 72 89, 91, 126. 128, 140. 143. 646, 147, 157, 171
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 16. 106, 176
யாழ்ப்பாண வைபவமாலை 125, 143
யானைப்பூட்டு 64


## ரெள


ரெளலட்டட் மட்பாண்டம் 50


## ல


லங்கா 40


## லா


லால் 30, 35


## லீ


லீலாவதி 167


## லூ


லூயிஸ் 4, 70, 111


## லெ


லெய்டன் செப்பேடு 131


## லோ


லோமா


## வ


வசவ சமுத்திரம் 50, 51
வடஇந்தியா 12, 15, 37
வடஇலங்கை 13, 39, 40, 42, 52, 57, 60, 61, 71, 75, 76, 119 121, 122 124, 128, 130, 133, 144. 146, 148, 149, 150, 161, 166, 168, 170, 172
வட்டில்கள் 20, 22
வடமராட்சி 168
வடமேற்கிலங்கை 13. 14 53, 63, 64, 69, 74, 124, 146, 165, 166
வணிக கணங்கள் 54
வல்லிபுரம 3, 26, 36, 171
வலங்கை 61, 161
வலிகாமம் 68, 69
வலைப்பாடு 67
வவுனியா 13, 16, 41, 97
வரலாற்றிற்கு முற்பட்டகாலம் 5, 12, 14
வரலாற்றுதய காலம் 12, 15, 36
வளவர்கோன்பள்ளம் 148
வளவன் தாங்கல் 148
வளவன் மாதேவி 148
வளவனுர் 481
வன்னிச்சிற்றரசுகள் 2, 170


## வா


வாகல்கட 77, 144, 145
வாரிவானேஸ்வரர் 175
வாவெட்டி 125

## வி


விக்கிரமசோழன் 71
விக்கிரமபாகு 158
விக்கிரமபாண்டியன் 158
விஜயாலயன் 92
விஜபாகு 158, 160, 161, 162, 163, 166
விஜயன் 1, 2, 12. 15, 124, 125 164


## வீ


வீரசாலமேகன் 158
வீரசோழமண்டலம் 142
வீரபரகேசரி வளநாடு 69
வீரவாகு 163
வீரபாண்டியன் 65, 75, 122, 143
வீரபாண்டியன்முனை 4, 21, 40, 97, 121, 123


## வெ


வெசகிரி 37
வெட்டுக்காடு 4, 14, 16, 18, 21, 22, 23, 26, 28, 30, 35 37. 48, 50, 52, 55, 56, 60, 165
வெள்ளாங்குளம் 3, 14, 76, 124
வெள்ளைப்பள்ளம் 75, 97
வெளிநாட்டு இலக்கியம் 39


## வே


வேந்தரும்வேளீர் 41
வேல்சின்னம் 28
வேல 41
வேலணை 16
வேலு 41
வேராவில் 40
வேள் 41
வேள்நாடு 41
வேளான் 41
வேளீர் 41, 42
வேளைக்காரப்படை 66


## வை


வையாபாடல் 125, 128,
வைரவர் ஆலயம் 94


## ஹ


ஹட்டதாத்தன் 57
ஹமென்ஹில் கோட்டை 62


## ஸி


ஸிங்கபுர 129


## ஸ்ரீ


ஸ்ரீசங்கரபோதி 48
ஸ்ரீநாக 57
ஸ்ரீபதி 133
ஸ்ரீலங்கவீர 138
ஸ்ரீலங்கேஸ்வரன் 138
ஸ்ரீராஜசேகரன் 134, 135

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு 1993

